தொடக்கம் : (41) *காதலருழைய......அகன்ற ஞான்றே என்பது பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. —அணிலாடு முன்றிலார்.*

உரை : *தோழி! காதலர் என்னை விட்டுப் பிரியாது அருகிருப் பாராகிற் பெரிதும் மகிழ்ந்து விழாக்கோளுடைய நம்மூரிடத்து யான் விருப்ப முடையேனா யிருப்பன்.*

முடிவு : 99.

உள்ளினே னல்லனே யானே யுள்ளி
நினைத்தனெ னல்லனோ பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லனோ வுலகத்துப் பண்பே
நீடிய மாஅத்துக் கோடுதோய் மலிர் நிறை
யிறைத்துணைச் சென்றற் றாஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளவே.

Kuruntogai (Text with notes-Part I)

Size 21×17. Pages: 59. Lines 25 on a page. Condition. injured.

Note: The Ms contains text with notes for poems 41—99.

97. குறுந்தொகை மூலமும் உரையும்—பகுதி II

(நூல் எண் 186)

அளவு : 21 × 17. *வரிகள் :* 30.
பக்கங்கள் : 100 *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : *குறுந்தொகை நூலின் மூலமும் உரையும் இரண்டாம் பகுதி. 101ஆம் பாடலிலிருந்து 200 வரை உளது. 153 ஆம் பாடல் வரை உரை உளது.*

தொடக்கம் :

உ
கடவுள் துணை

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தே ளுநா
டிரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மா றுபடூஉம் வைகலொ டெமக்கே.

எ-து: 1. தலைமகளுக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது. 2. வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதூஉமாம்.
—பரூஉ மோவாய்ப் பதுமன்.

முடிவு : 200. ஔவையார் பாடியது.

பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்
நிலமிசைத் தாதுய் வீசமந்
திகழ்தரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவா நாமே
கால்மாரி மாலை மாமறை
யின்னிசை யுருமின் குரலு
முன்வர வேமஞ் செய்தகன் றோரே.

Kuruntogai (Text with notes-Part II)

Size: 21×17: Pages 100. Lines 30 on a page. Condition: good.

Note: This contains poems 100--200 and notes upto poem 153.

98. கைந்நிலை (நூல் எண் 190)

அளவு : 20 × 30.	வரிகள் : 32.
பக்கங்கள் : 9.	நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்று.

உரையோடு கூடியது. இடையிடையே சில செய்யுட்கள் காணப்படவில்லை.

புல்லாங்காடர் என்பார் இந்நூலாசிரியர். அபூர்த்தியாக உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

.... — றுணரென்றவாறு (ரு)

சூ. ஆமாசிலைக்கு மணிவரையாரிடை
யேமாண் சிலையார்க் கினமா விரிந்தோடுந்
தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றூர் வரக்கண்டும்
வாய்மாண்ட பல்லி படும்.

எ-து: பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற் புறுத்தியது.

ஆமாவினம் தம்முண் மாறுபடும் அணிவரையையுடைய அரியவிடத்தே, மாட்சிமைப்பட்ட சிலையையுடைய வேடர்க்கு அஞ்சி, இனமா இரிந்தோடுந் தாம் மாட்சியில்லாத வெஞ் சுரத்தின்கட் சென்றூர் வருவரென்பதனை அறிந்திட, மாண்ட பல்லி சொல்லாநின்றதென்றவாறு.

முடிவு :

பொன்னம் பசலையுந் தீர்ந்தது பூங்கொடியே
தென்னவன் கொற்கைக் குருகிரிய—மன்னரை
யோடு புறங்கண்ட வொண்டேரான் றேரிதோ
கூட லனைய வரவு. (லன் பா று)

இது தோழி தலைவிக்குத் தலைவன் வரைவொடு புகுந்தமை சொல்லியது. வினை முற்றி மீண்ட தலைமகன் வரவறியச் சொல்லியதூஉமாம். பூங்கொடியே! நினது மேனியிற் பொன் போன்ற பசலையுந் தீர்ந்தது. மன்னரை யோடுபுறங் கண்ட வொண்டேரானாகிய நங்காதலன் தேர் தென்னவன் கொற்கை யின்கட் குருகுகளெல்லாமிரிய வந்த வரவு இது என்றவாறு.

நெய்தல் முற்றும்.
ஆகச் செய்யுள் 60.

மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடர் கைந்நிலை முற்றும்.

ஞானசம்பந்தர் பாதமே துணை.

Kainnilai.

Size 20×30. Pages: 9. Lines 32 on a page. Condition: good.

Note: This is one of the works belonging to Patinenkizhkkanakku by Pullangadar. The Ms contains a few verses with notes. Incomplete.

99. சிறுபஞ்சமூலம் உரையுடன் (நூல் எண் 51a)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 68. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. உரையுடன் கூடியது. 99ஆம் பாடல் இல்லை. 100ஆம் பாட்டு உரை இல்லை. அச்சானது.

தொடக்கம் :

உ
ஸ்ரீ
சிறுபஞ்சமூலம் (உரையுடன்)

முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து—முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா வுரைப்பன் சில.

எ-து: கடவுள் வாழ்த்து.

காமாதி மூன்றையும் ஒழித்து முற்றுணர்ந்து மூப்பில்லாதான் பாதம், மனக்குற்ற நீக்கி மிகவும் வணங்கிப் பல குணங்களைப் புகழ்ந்து மண் பரந்த வுலகின் மக்கட்கெல்லாம் உறுதியாகிய பொருண் மேற்கொடுத்து வெண்பாவாகிய சில செய்யுட்களை உரைப்பேன் என்றவாறு.

முடிவு : 100 மல்லிவர்தோண் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப், பல்லவர் நோய்நீக்கும் பாங்கிறல்-கல்லா,மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான், சிறுபஞ்ச மூலம்செய் தான்.

சிறுபஞ்சமூலம் முற்றிற்று.

Sirupancha Mulam (with notes).

Size 21×33. Pages: 68. Lines 20 on a page. Condition: good.

Note: This is one of the works under Patinen-kizhkkanakku. Poem No. 99 has not been copied as also notes for poem No. 100.

100. சிறுபஞ்சமூலம் உரையுடன் (நூல் எண் 247)

அளவு : 28×24. வரிகள் : 24.
பக்கங்கள் : 48. நிலை : பழமை.

குறிப்பு : எண் 51a குறிப்பின்படியே உள்ளது.

Sirupancha Mulam with notes.

Size 28×24. Pages: 48. Lines 21 on a page. Condition: old.

Note: This is similar to item No. 36.

101. திணைமாலை நூற்றைம்பது (நூல் எண் 553e)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 47 (65-111). நிலை : சிறிது சிதிலம்.

குறிப்பு : இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. உரையுடன் கூடியது. இதில் 158 செய்யுட்கள் உள்ளன. 127 பாடல்கள்வரை உரை உள்ளது. அச்சானது.

தொடக்கம் : திணைமாலை நூற்றைம்பது.

குறிஞ்சி

நறைபடர் சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு

எ-து. இது தலைமகளுந் தோழியும் ஒருங்கிருந்தவழிச் சென்ற தலைமகன் தோழியை மதியுடம்படுத்தது. நறைக்கொடி படர்ந்துயர்ந்த சந்தனங்களை யற வெட்டி நல்ல நாளான் மழை பெய்யுங் காலத்தை யேற்றுக்கொண்டு வித்திய முதிர்ந்த வேனலின்கட் பிறையை யேற்றுக்கொண்டதொரு தாமரை மலரைப் போலும் வாண்முகத்தையுந் தாழ்ந்த குழலையு முடையீர் கண்டிலீரோ ஏவுண்ட மரை போந்தன வவற்றை யிவ்விடத் தென்றவாறு. (க)

முடிவு :

முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்
கனிந்தார் களவியல் கொள்கைக் கனிந்தா
ரிணைமாலை யீடிலா வின்றமிழாய் யாத்த
திணைமாலை கைவரத் தேர்ந்து.

மருத முற்றும்.

மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணி மேதாவியார் செய்த திணைமாலை நூற்றைம்பது முடிந்தது.

பின்னுள்ள பிரதிகளோடு ஒப்பிடப்பெற்றது.

சென்னை ஓரியண்டல் லைப்ரரி பிரதி 19 பாடல் வரையில்-1.
ஷ உரைப் பிரதி-1.

Tinaimalai Nutraimbatu.

Size 21×33. Pages: 47. Lines 32 on a page. Condition: slightly injured.

Note: This is one of the works under Patinenkizhkkanakku. The Ms. contains 158 poems and notes upto poem No. 127.

102. திணைமாலை நூற்றைம்பது (நூல் எண் 556c)

அளவு: 21×33. *வரிகள்:* 16.
பக்கங்கள்: 154. *நிலை:* நல்ல நிலை.

குறிப்பு: *இந்நூல் மேலே குறிப்பிட்ட 553eன் பிரதி.*

Tinaimalai Nutraimbatu

Size 21×33. Pages: 154. Lines 16 on a page. Condition: good.

Note: This is a copy of item No. 37.

103. திணைமொழி ஐம்பது (நூல் எண் 553g)

அளவு: 21×33. *வரிகள்:* 31.
பக்கங்கள்: 20 (145–164). *நிலை:* சிறிது சிதிலம்.

குறிப்பு: 557*ஆம் எண்ணுள்ள பிரதியின் மூலம் இது.*

Tinaimozhi Iymbatu.

Size 21×33. Pages: 20. Lines 31 on a page. Condition: slightly injured.

Note: This is the original for No. 42.

104. திணைமொழி ஐம்பது (நூல் எண் 557)

அளவு: 21×33. *வரிகள்:* 12.
பக்கங்கள்: 49. *நிலை:* நல்ல நிலை.

குறிப்பு: *பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. முதல் பாடல் எழுதப்பெறவில்லை.*

தொடக்கம்: *பாட்டு* 2
வானுயர் வெற்ப விரவின் வரல்வேண்டா
யானை யுடைய சுரம்.
—*தொல்-செய்-சூ. (கூச-ந)*

ஏனலைக் காக்கின்ற குறவருடைய பரணினுண்டாதுகள் பொழிகின்ற வானளவு முயர்ந்த வெற்பனே, இரவின்கண் வருகின்ற சுரங்களாதலானென்றவாறு.

முடிவு: நெய்தல் முற்றும். சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் செய்த திணைமொழி ஐம்பதும் முற்றும். பின்னுள்ள பிரதியோடு ஒப்பிடப்பட்டது. சென்னை லைப்ரரிப் பிரதி ஒன்று. சி. வை. பிரதி ஒன்று. 20-7-901.

Tinaimozhi Iymbatu

Size 21×33. Pages: 49. Lines 12 on a page. Condition: good.

105. திரிகடுகம் மூலமும் உரையும் (நூல் எண் 302)

அளவு : 21×33. வரிகள் : 10.
பக்கங்கள்: 103. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. ஆசிரியர்: நல்லாதனார். 11 பாடல்களுக்கு உரை உளது. அச்சானது.

தொடக்கம் :

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணரும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்—நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.

முடிவு :

பொருளில் ஒருவற் கிளமையும் போற்றும்
அருளில் ஒருவற் கறனும்—தெருளான்
திரிந்தாளு நெஞ்சினான் கல்வியும் மூன்றும்
பரிந்தாளும் செய்யா பயன்.

Tirikadukam (Text and notes).

Size 21×33. Pages: 103. Lines 10 on a page. Condition: good.

Note: This is one of the works belonging to Patinenkizhkkanakku by Nallathanar. There are notes for eleven poems.

106. திரிகடுகவுரை (நூல் எண் 303)

அளவு: 21×33. வரிகள் : 25
பக்கங்கள் : 43. நிலை : நல்ல நிலை

குறிப்பு : 'திரிகடுகம்' என்னும் நூலுக்கு உரிய உரையும் உளது.

தொடக்கம் :

கண்ணகன் ஞால மளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ—நண்ணிய
மாயச் சகட முதைத்ததூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி (வாழ்த்து)

எ-து: இடமகன்ற ஞாலத்தை யளந்ததூஉம், காதலைச் செய்யா நின்ற புகழை உடைய தண்ணறும் பூங்குருந்தத்தைச் சாய்த்த தூஉம், கஞ்சனால் விடப்பட்ட வஞ்சனைச் சகடத்தை உதைத்த தூஉமென விம்மூன்று செய்கையும் காயாம் பூவின் நிறம் போன்ற நிறத்தை யுடையானுடைய வடிகளின் செய்கைக ளென்றவாறு. (க)

முடிவு :

செல்வச் சிறுகிழார் செம்மல் செருவடுதோள்
நல்லாத னென்னும் பெயரானே—பல்லார்
பரிவொடு நோய்நீக்கிப் பன்னியா ராய்ந்து
திரிகடுகஞ் செய்த மகன்.

ஹரி ஓம். நன்றாக.

விரோதிஞு பங்குனி மீ 24ஆம் தேதி திரிகடுகம் உரை யுடனே எழுதி முடிந்தது.

முற்றும்.

Tirikadukam (with notes)

Size 21×33. Pages: 43. Lines 25 on a page. Condition: good.

Note: This also contains notes for the work.

107. திருக்குறள் (நூல் எண் 328)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 464. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருக்குறள் மூலமும் உரையும் உளது. இப்பிரதியில் 10ஆவது அதிகாரமாகிய இனியவை கூறல் என்னும்

அதிகாரத்தில் 7ஆம் செய்யுள்முதல் அதிகாரம் 130-6ஆம் செய்யுள்வரை உளது.

தொடக்கம் :

நயனீன்று நன்மை பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

எ-து : இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி, மறுமைக்குத் தருமத்தையும் உண்டாக்கும், ஒருவற்குப் பொருளால் உதவி செய்து நல்ல வசனத்தையுஞ் சொன்னால் (எ-று).

முடிவு : அதிகாரம் 130.
நெஞ்சொடு புலத்தல்

தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததெ னெஞ்சு.

எ-து: என் நெஞ்சு தனியே யிருந்து காதலர் பிரிந்து போன கொடுமையை நினைத்தா லதுவறிந்து என்னெஞ்சு என்னைத் தின்பது போலத் துன்பஞ் செய்யாநின்றது என்னுடை நெஞ்சே (எ-று).

Tirukkural

Size 21×33. Pages: 464. Lines 30 on a page. Condition: good.

Note: The Ms. begins with the 7th couplet of the 10th chapter and ends with the 6th couplet of the 130th chapter.

108. திருக்குறள் - மூலம் (நூல் எண் 327)

அளவு : 17×21. வரிகள் : 22.
பக்கம் : 75. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் திருக்குறள் மூலம் முற்றும் எழுதப் பெற்றிருக்கிறது. முதல் பக்கத்தில் அதிகார வகராதி உள்ளது.

தொடக்கம் : கடவுள் வாழ்த்து.
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

முடிவு : ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங் கூடி முயங்கப் பெறின் உத்தமம்.
காமத்துப்பால் முற்றும்.
1330
கிருஷ்ண சகாயம்

பிரமாதி ஞு கார்த்திகை மீ 16வ சனி வாரம் பஞ்சமி மிருகசீர்ஷ நக்ஷத்திரம் இந்திரகாம யோகம் கௌரவர் கரணம் இந்தச் சுபதினத்தில் திருவள்ளுவர் குறள் அப்பாவு எழுதி நிறைவேறினது.

Tirukkural (Text)

Size : 17×21. Pages: 75. Lines 22 on a page: Condition : old.

Note : This Ms. contains the full text of Tirukkural. Index for the chapters is given in the first page.

109. திருக்குறள் (நூல் எண் 330)

அளவு : 21×33. வரிகள் : 38.
பக்கங்கள் : 269. நிலை: நலமாக உளது.

குறிப்பு : குறளுக்கு உரை வகுத்தோர் பலர். அவர்களுள் பரிமேலழகர் உரையைத் தழுவிக் கொண்டப்ப வாத்தியார் என்பவர் எளிதில் விளங்க உரை வகுத்துள்ளதே இப்பிரதி. நூல் நிலைய வெளியீடு. அச்சானது.

தொடக்கம் :

உ
கடவுள் துணை
திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய
திருக்குறள்—மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்பது கடவுள் வாழ்த்து; அஃதாவது வழிபடு கடவுள் என்றும் பொதுக் கடவுள் என்றும் இரண்டு வகை. இஃது எல்லாவுலகுக்கு மெல்லாச் சமயத்துக்கும் பொதுக் கடவுளைக் கூறியது. வாழ்த்து என்பது கடவுள் மகிமை கூறி வணக்கஞ் செய்தல்.

முடிவு :

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

எ-து. இதுவுமது. காமமனுபவித்தற்கின்பமாவது: நாயகனும் நாயகியுமூடுதல். அவ்வூடுதற்கின்பமாவது: ஊடல் நீங்கிக் கூடி முயங்கப் பெறுவாராயின் என்றவாறு. 'ஊடிய இன்பமுங் கூடிய இன்பமும் உளதா மூடலுவகையிடத்' தென்றவாறு. கூடி முயங்கப் பெறின் என்பது கூடி அனுபவிக்கப் பெறின் எனக் கொள்க.

ஊடலுவகை முற்றும்.

காமத்துப் பால் முற்றும்.

Tirukkural.

Size 21×33. Pages: 269. Lines 38 on a page. Condition: injured.

Note: Published by the Library under serial No. 24.

110. திருக்குறள்-மணக்குடவருரை (நூல் எண் 332)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 430. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : திருக்குறளுக்கு உரை வகுத்த பதின்மருள் மணக்குடவர் என்பாருடைய உரையே இப்பிரதி. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுர் அருளிச் செய்த திருக்குறள் மூலமும் தேவருரை அல்லது மணக்குடவர் உரையும்.

கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய வெழுத்தைத் தமக்கு முதலாகியுடையவாக, அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாகவுடைத் தென்றவாறு.

முடிவு : ஊடலுவகை.
புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைத் தன்னா ரகத்து.

உரை: நிலனும் நீரும் பொருந்திறற் போலப் பொன்பட்ட நெஞ்சுடையார்மாட்டுப் புலத்தல்போல இன்பந்தருவதோர் உலகம் உண்டோ என்றவாறு. நிலத்தொடு நீரியைதலால் அவை வெப்பமும் திட்பமும் கூடி அனுபவிக்குமாறுபோல இன்பமுந் துன்பமுங்கூட அனுபவிப்பார்மாட் டென்றவாருயிற்று.

திருக்குறள் மூலமும் உரையும் முற்றும்.

உரையாசிரியர்:

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பரிதி—திருமலையர்
மல்லர் கவிப்பொருள் காளிங்கர் வள்ளுவனூற்
கெல்லை யுரைஎழுதி னோர்.

சீர்த்திமிகு ஸ்ரீநிவா சையன் திருக்குறளை
நேர்த்தியாய்த் தேவர் உரையோடு—பூர்த்திபெற
முற்ற வெழுதினன் முன்னும் பிரமாதி
யுற்றதிங்கள் மாசியுடு வோர்ந்து.

முருகவேடுணே

Tirukkural-Manakkudavar Urai.

Size 21×33. Pages: 430. Lines 28 on a page. Condition: injured.

Note: The Ms. contains commentary of Mañakkudavar, one of the ten famous commentators of Tirukkural.

111. நற்றிணை-மூலம் (நூல் எண் 509)

அளவு: 21×33. வரிகள்: 12.
பக்கங்கள்: 103. நிலை: சிதிலமாக உளது.

குறிப்பு: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய நற்றிணை என்னும் நூலின் மூலம். கடவுள் வாழ்த்தும் முதல் 102 செய்யுட்களுமே உள்ளது. அச்சானது.

தொடக்கம்:

உ
கணபதி துணை
நற்றிணை
வாழ்த்து

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பெளவ முடுக்கை யாக

விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
வியன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

முடிவு :

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
யஞ்ச லோம்பி யார்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை யென்குறை
செய்தல் வேண்டுமால் கைதொழு திரப்பல்
பல்கோட் பலவின் சார லவர்நாட்டு
நின்கிளை மருங்கிற் சேறி யாயி
னம்மலை கிழவோர்க் குரைமதி யிம்மலை
கானக் குறவர் மடமக
ளேனல் காவ லாயின ளெனவே.

Nattrinai (Text)

Size 21×33. Pages: 103. Lines 12 on a page. Condition: much injured.

Note: The Ms. contains the text for Kadavul Vazhthu (Invocation) and upto poem 102 of Nattrinai. This is one of the eight anthologies.

112. நாலடியார் - பதுமனர் உரையைத் தழுவியது (நூல் எண் 519)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 109. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பதினெண் கீழ்க்கணக்குள் ஒன்றாகிய நாலடியாரும் அந்நூலுக்குப் பதுமனர் என்பார் எழுதிய உரையைத் தழுவிய உரையும் கூடியது (61ஆம் பக்கத்திற்குப் பிறகு 92ஆம் பக்கம் ஆரம்பித்து 109வரை உள்ளது, இதன் பிறகு பக்கம் 63 முதல் 91 வரை உள்ளது)

தொடக்கம் :

உ
நாலடியார் உரை
கடவுள் வாழ்த்து

வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை—யானிலஞ்

சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

எ-து: கடவுள் வாழ்த்து. வானிடு வில்லினது வரவு போன்றிருந்த வரவினையறிந்து கானிலந் தோயாக் கடவுளை நிலத்தைச் சென்னியுற வாய்மையான் வணங்கி யாம் சேர்துமெம் மனத்து நினைத்தனவெல்லா முடிவனவாக வென்றவாறு.

முடிவு :

கண்மூன் றுடையானுங் காக்கையும் பையராஅ
மென்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் $\frac{\text{சென்ற}}{\text{போன}}$ நெறி.

எ—து: ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகன் அவன் பொறையெதிரழிந்தது. காமனை யுருவழித்துப் பின்னையு மவனையுருவனுக்கிய கண் மூன்றுடையானும், குயிலை வளர்த்த காக்கையும், மதியை விழுங்கிப் பின்னுமுளதாக விட்ட பாம்பும் இத்துன்பமுறுதற் கென்னை யீன்ற யாயும், எனக்குப் பிழைத்த தென்னை. நம்முடைய நண்பனார் நம்மைப் பிரிந்து பொருள் வயிற்போன நெறியன்றே பிழைத்தது. பொன்னீன்ற கோங் கரும்பன்ன முலையாய் என்றவாறு.

கடையின்பவியல் முற்றும்.
நாலடி நானூறு முற்றும்.
ஆக வெண்பா ௪00.

Naladiar.

Size : 21×33. Pages : 109. Lines 30 on a page. Condition: good.

Note: This contains a portion of Naladiar with notes by Padumanar,

113. **நாலடியார் உரை** (நூல் எண் 520)

அளவு : 17×21. வரிகள் : 15.
பக்கங்கள் : 255. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய நாலடியா ருக்கு உரிய பதவுரையைக் கொண்டதே இப்பிரதி.

தொடக்கம் : வான் - மேகத்திலே; இடு - தோன்றிய; வில்லின்-வில்லினது தோற்றமும் அழிவும் போல; வரவு-பிறப் பிறப்பை; அறியா—அறிந்து; வாய்மையால்—உண்மையாக; கால்-பாதமானது; நிலம்-பூமியிலே; தோயா—கலவாத; கடவுளை-தேவனை; யாம்—நாம்; நிலம்-பூமியின்கண்ணே; சென்னி-சிரசு; உற—பொருந்த; வணங்கி-பணிந்து; சேர்தும்-அடைவோம்; எம்-எம்முடைய; உள்ளத்து—மனதினிடத்து; உன்னியவை-நினைந்தவை; முடிகவென்று—முடியும் பொருட்டென்றவாறு.

முடிவு: செல்வ நிலையாமை

உடாதேயும் உண்ணுதேயும் தம்முடம்பு சற்றுங் கெடாம லிருக்கிற நல்ல தர்மத்தையுஞ் செய்யாமலும் ஒருவர்க்குக் கொடாதேயும், பொருளை வைத்துக்கொண்டு இருந்த பேர் முழுது மிழந்து போவார்கள், பெரிய மலையையுடைய நாடனே! இப்படி வைத்திழந்து போகிறவர்களுக்குத் தேனீ கரி யென்றவாறு.

செல்வ நிலையாமை முற்றும்.

Naladiar

Size 17×21. Pages: 255. Lines 15 on a page. Condition: good.

Note: The Ms. contains detailed notes for Naladiyar which is one of the works under Patinenkizhkkanakku.

114. **நாலடியார் விருத்தி** (நூல் எண் 522)

அளவு : 21×33, வரிகள் : 30.
பக்கங்கள் : 186. நிலை : பழமை.

குறிப்பு : பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்ருகிய நாலடியாருக்கு உரிய விருத்தி உரை. தஞ்சை, சரசுவதி மகால் நூல் நிலையம் வெளியிட்டுள்ளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
நாலடி விருத்தி
பாயிரம்

அறவிய லிருவகைத் தாமவை தம்முட்
டுறவே யில்லற மிருமூன் றென்ப

பொருளியல் வகையேழ் புலப்படக் கிளப்பி
னரசிய லேழதி கார மாகு
நட்பிய ஹுன்கதி கார மின்ப
மூன்றே துன்ப வியலதி கார
நான்கே யொன்றே பொதுவியல் பகையியல்
கூறதி கார நான்கே பன்னெறி
கூறதி கார மொன்றே யின்ப
வகைதா னிருவகை யவற்று ளின்ப
துன்பத் ததிகார மொன்றே யேனை
யின்பங் கூறதி கார மிரண்டே

என்பது சூத்திரம்.

முடிவு :

ஆலி னரசி னசோகி னணியிருளின்
மேலை மறையின் விரிந்தபொருள்—நாலடியாம்
வெள்ளாஅன வேதத்தி னின்னுரையைக் கண்டக்காற்
கொள்ளாரோ நல்லோர் குறித்து.

நாலடி விருத்தி முடிந்தது.

கண்ணங்குடி முத்தப்பிள்ளை நாலடியார் முடிந்தது. அழகியநாத சுவாமி துணை: அபிராமியம்மை கிருபையுண்டு, திருச்சிற்றம்பலம்.

Naladiar Virutti.

Size 21×33. Pages: 186. Lines 30 on a page. Condition: good.

Note: This Ms. contains Virutti Urai for Naladiar published by the Saraswathi Mahal Library, Thanjavur.

115. நாலடியார் விருத்தி (நூல் எண் 523)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 185. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நாலடியார் விருத்தியுரை, குறிப்பு முதலியன 522-ஆம் எண்ணின்படியே உள்ளன.

Naladiar Virutti

Size 21×33. Pages: 185. Lines 30 on a page. Condition: good.

Note: Same as the previous one (No. 522)

116. **நாலடியார் விருத்தி** (நூல் எண் 524)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 182. நிலை : மிகக் கிலமாக உளது.

குறிப்பு : நாலடியாரின் பழைய விருத்தி உரையைக் கொண்டதே இப்பிரதி. 522ஆம் எண்ணின்படியே அமைந்தது.

Naladiar Virutti

Size 21×33. Pages: 182. Lines 30 on a page. Condition: much injured.

Note: Same as 522.

117. **நாலடியார் விருத்தி** (நூல் எண் 525a)

அளவு : 25×36. வரிகள் : 18.
பக்கங்கள் : 220. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நாலடியார் முதல் 200 பாடலுக்கு உரையுடன் கூடியது. முற்கூறிய 522 எண்ணின் பிரதியே இது.

Naladiar Virutti

Size 25×36. Pages : 224. Lines 18 on a page. Condition: good.

Note: Similar to 522 but contains notes only up to the first 200 poems.

118. **நாலடியார் விருத்தி** (நூல் எண் 526)

அளவு : 25×36. வரிகள் : 20.
பக்கங்கள் : 220. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 522இல் உள்ள குறிப்புக்கள்; ஆனால் 525இன் தொடர்ச்சியே. 201ஆம் பாடல் முதல் இறுதிவரை உள்ளது. அச்சானது.

Naladiar Virutti

Size 25×36. Pages: 220. Lines 20 on a page. Condition: good.

Note: This is a continuation of the previous one viz. 525 containing notes from the 201st poem.

119. நான்மணிக்கடிகை (நூல் எண் 527)

அளவு : 21×33. வரிகள் : 10.
பக்கங்கள் : 106. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று. 101 செய்யுட்கள் உரையுடனும் பின்னர் உரையில்லாமல் அதிகப் பாடல்கள் 5ம் உள்ளன. ஆசிரியர்: விளம்பி நாகனார். அச்சானது.

தொடக்கம் :

மதிமன்னும் மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரேய்க்கு நிறம்.

எ-து: மதியை மாயன தொளிமுகமொக்கு மொளி சிறந்த ஞாயிற்றை யவனது சக்கர மொக்கு முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்கட் செவ்விய மலரை மற்றவன் கண் ணொக்கு நிறங்காயாவின் புது மலரை யொக்கு மென்றவாறு.

முடிவு:

முனியார் அரிய முயல்வார் அவரின்
முனியார் அறம்கா முறுவார்–இனிய
இரங்கார் இசைவேண்டும் ஆடவர் அன்பிற்கு
உயங்கார் அறிவுடை யார்.

Nanmanikkadikai

Size 21×33. Pages: 106. Lines 10 on page. Condition : good.

Note: This is one of the works under Patenenkizhkkanakku. This contains notes for 101 poems and five extra stanzas. The author is Vilambinaganar. Printed.

120. நான்மணிக்கடிகை (நூல் எண் 553f)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 29 (113-141). நிலை : சிலமாக உளது.

குறிப்பு : 527இல் உள்ளபடியே அமைந்தது. 101 பாடல்கள் உரையுடன் உள்ளன. இதினின்றும் எண் 527 பிரதி செய்யப் பெற்றது. இறுதியில் "13-7-01. பின்னுள்ள ஏடுகளோடு

ஒப்பிடப்பட்டது. சி. வை. பிள்ளை பிரதி 1. இதில் 86ஆம் பாட்டுத் தொடங்கி உரை சிறிது சிறிது வேறுபட்டிருந்தது" என்று குறிக்கப்பெற்றுள்ளது.

Nanmanikadikai

Size 21×33. Pages : 29. Lines 30 on a page. Condition: good.

Note: Same as 527 which has been copied from this. There is a note at the end that on comparison with the copy of C.V. Pillai on 13—7—01 some variations in the commentary from the 86th verse are observed.

121. பதிற்றுப்பத்து (நூல் எண் 439)

அளவு : 16×21. வரிகள் : 16.
பக்கங்கள் : 114. நிலை : மிகச் சிலமாக உளது.

குறிப்பு : எட்டுத் தொகை நூல்களுள் பதிற்றுப்பத்து ஒன்று. சங்க காலத்துப் பத்துப் பத்துப் பாக்களாகச் சேர வேந்தர் வீரச் செயல்கள், வரலாறுகள்பற்றிக் கூறுவது இந்நூல். இதில் இரண்டாம் பத்திலிருந்து ஆறும் பத்து 3ஆம் பாடல் வரை உளது. உரையுடன் கூடியது. (இப் பிரதியில் தில்லை, அருணை, மயிலை, திருவெண்காட்டந்தாதிகளும் உள.) அச்சானது.

தொடக்கம் :

பதிற்றுப்பத்து-இரண்டாம் பத்து

வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூ
னளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுதற் றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
....
தென்னங் குமரியோ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு.
வண்ணம் : ஒழுகு வண்ணம்.
தூக்கு : செந்தூக்கு.
பெயர் : புண்ணுமிழ் குருதி.

முடிவு :

நின்முன்னோ ரோம்பிய எயின்முகத்துப் படுத்தல் யாவதெனா மாறிக் கூட்டி வினை முடிவு செய்க.

'செல்குவையாயின்' என்பதன் பின் 'பிறிதாறு சென்மதி' என்பதனையுந் 'தாங்கலாகார் வாங்குநின் களிறு' என்பதன்பின் 'எயின்முகப்படுத்தல் யாவது' என்பதனையும் கூட்ட வேண்டு மாதலின் மாறுயிற்று. இதனாற் சொல்லியதடைந்தவர்க் கருளலொடு படுத்தவன் வென்றிச் சிறப்புக் கூறியவா றுயிற்று. (ரு)

Patitruppathu

Size 16×21. Pages: 114. Lines 16 on a page. Condition: much injured.

Note : This is one of the eight anthologies dealing with the history, valour, and expeditions of the Chera Kings. This contains commentary from the second decade up to the 3rd poem in the sixth decade.

122. பதிற்றுப்பத்து (நூல் எண் 559)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 183. நிலை : மிகச் சிதலம்.

குறிப்பு : 439, 560 எண்களில் உள்ள பதிற்றுப்பத்து இரண்டாம் பத்துமுதல் ஒன்பதாம் பத்துவரை உரையுடன் கூடிய தனித் தாள்கள். மிகச் சிதிலம். பிரதி செய்ய இயல வில்லை.

Patitruppathu

Size 21×33. Pages: 183. Lines 22 on page. Condition: much injured.

Note: The Ms. contains loose sheets wh ch are not in good condition. Contains portions copied from item 439 and 560.

123. பதிற்றுப்பத்து (நூல் எண் 560)

அளவு : 17×21. வரிகள் : 18.
பக்கங்கள் : 101. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : முன் குறித்துள்ள 439 எண்ணில் கண்ட பகுதிக்கு மேல் 6ஆம் பத்துப் பாடல் 54 முதல், 7, 8, 9 ஆகிய பத்துக்கள் உள்ளன.

தொடக்கம்:

''வள்ளியை யென்றலிற் காண்குவந் திசினே
யுள்ளியது முடித்தி வாழ்கநின் கண்ணி
....
றிருநில மருங்கின் னெடிதுமன் னியரோ.''

முடிவு : வையூர்க் கிழானைப் புரோசு மயக்கி என்றது தன் மந்திரியாகிய வையூர்க் கிழானைப் புரோசு மயக்கி யென்றவாறு. (புரோகிதனு மறநெறி அறிவானுகவே.)

பசுவுமெருமையும் மாடுமென்று சொல்லுவார்கள்.
ஒன்பதாம் பத்து முடிந்தது-90.
கண்ணபிரான் திருவடிகளே சரணம்.

Patitruppathu

Size 17×21. Pages: 101. Lines 18 on a page. Condition: good.

Note: This contains a portion of Patitruppathu.

124. பழமொழி நானூறு (உரையுடன்) (நூல் எண் 576)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 124. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பழமொழி நானூறு. பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்று. ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் ஒரு பழமொழியினை அமைத்துப் பாடிய நூல். இந் நூலாசிரியர் முன்றுறையரையர். அச்சானது.

தொடக்கம்: முன்றுறையரையர் செய்த பழமொழி நானூறு.

அரிறவிர்த் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
தரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது.

முடிவு :

நாணின்றி யாகாது பெண்மை நயமிகு
மூணின்றி யாகா துயிர்வாழ்க்கை - பேணுங்காற்
கைத்தின்றி யாகாக் கருமங்கள் காரிகையாய்
வித்தின்றிச் சம்பிரதமில்

எ - து: நாணின்றிப் பெண்மைக் குணமுளதாகா தினிய ஊணின்றி யுயிர் வாழ்க்கையு முளதாகா தாராயுங்காற் கைப் பொருளின்றிக் காரியங்களுளவாகா, வித்தின்றி விளையும் விளைவு மில்லை யென்றவாறு. 400.

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறுங்—கொண்டினிதா
முன்றுறைய மன்னவ னுங்கடியுஞ் செய்தமைத்தான்
இன்றுறை வெண்பா விவை.

முன்றுறையரையர் செய்த பழமொழி நானூறு முற்றும்.

Pazhamozhi Nanuru (with notes)

Size 21×33. Pages: 124. Lines 35 on a page. Condition: good.

Note: This is one of the works under Patinenkizhkkanakku by Munruraiarayar. Each venba contains a proverb at the end.

125. பழமொழி யுரை (நூல் எண் 577)

அளவு : 21×33.	வரிகள் : 38.
பக்கங்கள் : 70.	நிலை : நல்ல நிலை.

குறிப்பு: முன்றுறையரையர் இயற்றிய பழமொழி நானூறுக்கு மூலமின்றிப் பதப்பொருள் உரைகளைமட்டும் கொண்டது.

தொடக்கம் :

உ

பழமொழி யுரை

நூல்

உலகத்தின்கட் கெடுத்தற்குரிய குற்றத்தைக் கெடுத்துச் சிறிது மொழியாமன், முழுதுணர்ந்தவன் பாதத்தைத் தமக்கு உரிமைப்பட ஆராய்ந்துணர்ந்தவர்க் கொக்கவே உளதாவது, பேருடம்பினை யுடையனுதலிப் பெரியது போன் றென்றவாறு (க)

உரை : கல்லா - கற்று வல்லாதா ருராய்ந்து கண்ட மிக்க நுண்மை கற்றார் முன்பு தான் சொல்லுங்காற் சோர்வு படுதலா னல்லாய் விறைமுற் படாத செப்புமில்லைக் கறு முந்துறுத வினையுமில்லை ஆதலால் அவை போலக் கல்வி முந்துறுத நுண்மை யுணர்வு மில்லை. (எ - று.) (உ)

முடிவு : உரை

(400) நாணினறியா-(எ-து) நாணின்றிப் பெண்மைக்குண முளதாகா தினிய ஆணின்றி யுயிர்வாழ்க்கை யுளதாகா தாரா யுங்காற் கைப்பொருள் இன்றிக் காரியங்களுளவாகா, வித்தின்றி விளையும் விளைவும் இல்லை. (எ - று)

பிண்டியி னிழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறுங்-கொண்டினிதா
முன்றுறை மன்னவ னன்கடியுஞ் செய்தமைத்த
வின்றுறை வெண்பா விவை.

முன்றுறையரையர் செய்த பழமொழி நானூறும் முடிந்தது.
முற்றும்

Pazhamozhi Urai.

Size 21×33. Pages : 70. Lines 38 on a page. Condition: good.

Note: This contains notes only for Pazhamozhi-Nanuru without text. This is one of the works under Patinenkizhkkanakku.

126. பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை (நூல் எண் 461)

அளவு : 17×21. வரிகள் : 18.
பக்கங்கள் : 83. நிலை : பழமை.

குறிப்பு : இதில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படையில் 144 வரிகள் வரைக்கும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை உள்ளது.

தொடக்கம் :

உ

இஃது பொருநராற்றுப்படை.

அறுஅ யூரண ரகன்றலைப் பேரூர் இடையறுத செல்வ வருவாயினை உடைய அகன்ற இடத்தை யுடையது.

முடிவு : பெரும்பாணாற்றுப்படை.

தோலை மடித்துப் போர்த்த வாயையுடைய மத்தளங் தங்களுக்கு நடுவே முழங்காநிற்ப, சிலைநவி லெறுழ்த் தோளோச்சி வலன் வளையூஉப் பகன் மகிழ்தூங்குந் தூங்கா விருக்கை முரண்டலை கழிந்த பின்றை...

Porunarattruppadai, Sirupanatruppadai, Perumpanatruppadai.

Size 17×21. Pages : 83. Lines 18 on a page. Condition: old.

Note: The Ms. contains commentary of Nachinarkkiniar on Porunaratruppadai, Sirupanatruppadai and 144 lines only of Perumpanatruppadai.

85474

127. முதுமொழிக்காஞ்சி (நூல் எண் 660)

அளவு : 21 × 33. வரிகள் : 20.
பக்கங்கள் : 14. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் கூடலூர்கிழார். இப்பிரதியில் 94 வரி வரை மூலமும் உரையும் உள்ளன. கடைசி 6 வரிகளுக்கு உரை இல்லை.

தொடக்கம் :

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை

(எ-து) கடல் சூழ்ந்த உலகத்து மக்கட்கெல்லாம் ஓதுதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை என்றவாறு.

முடிவு :

96. மிகுதிபொருள் வேண்டுவோன் வருத்தந் தண்டான்
97. இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்.
98 துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.
99. ஏமம் வேண்டுவோன் முறைசெய்தல் தண்டான்.
100. காமப் வேண்டுவோன் குறிப்புச் செய்தல் தண்டான்.

மதுரைக் கூடலூர்கிழார் செய்த முதுமொழிக் காஞ்சி முற்றும்.

27-6-01. சென்னை ஓரியண்டல் லைப்ரரி முதுமொழிக்காஞ்சி மூலத்தோடு ஒப்பிடப்பட்டது.

Mudumozhikkanchi

Size 21×33. Pages: 14. Lines 20 on a page. Condition: good.

Note: This is one of the works under Patinenkizhkkanakku by Kudalur Kizhar. It contains text and notes for 94 lines only.

காவியம்

128. கம்பராமாயணம்-அயோத்தியா காண்டம்

(நூல் எண் 36)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 406. நிலை : இலமாக உளது.

குறிப்பு : கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய இராமாயணம், அயோர்த்தியா காண்டம் முற்றும் உள்ள பிரதி. அச்சானது.

தொடக்கம் :

திரு அயோத்தியா காண்டம்
1. மந்திரப் படலம்
ஸ்ரீ இராமர் துதி

வானின் றிழிந்து, வரம்புஇகந்த மாபூ தத்தின் வை. பெங்கும்
ஊனும் உணர்வும் உயிரும்போல் உள்ளும் புறத்தும்
உளன் என்ப
கூனுஞ் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக்
குடைதுறந்து
கானும் கடலும் கடந்துஇமையோர் இடுக்கண் டீர்த்த
கழல்வேந்தே

முடிவு :

குன்றினி விருந்தன னென்னுங் கொள்கையா
னின்றவர் நலிவரால் நேசத் தாரெனத்
தன்று ணைத் தம்பியுந் தானுந் தையலுந்
தென்றிசை யிராமனுஞ் சேறன் மேயினான். (141)

திருவடிசூட்டுப் படல முற்றும்.
ஆகப் படலம் 13க்கு கவி 1216.
திருவயோத்தியா காண்ட முற்றும்.
ஆகக் காண்டம் 2க்குப் படலம் 44க்கு கவி 2614.

Kavyas

Kamba Ramayanam-Ayodhya Kandam.

Size 21×33. Pages: 406. Lines 30 on a page. Condition: injured.

Note: The Ms. contains a complete text of Ayodhya Kandam; printed.

129. அரிச்சந்திரன் கதை (நூல் எண் 41)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 146. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் அறத்தின் செல்வனாய் விளங்கிச் சத்தியத்தை இறுதி வரையில் இன்னலுற்றுப் பின் நிலை நாட்டிப் புகழ் பெற்ற அரிச்சந்திரனுடைய வரலாறு கூறப்படுகிறது. இஃது அரிச்சந்திர புராணத்தினின்றும் வேறானது. இதன் ஆசிரியர் "பெருகு கங்கா குலதீபன் பெத்த பெருமாளருளால் வரும் பெரியானுரைத்த கதை" என்ற வரியால் **பெரியான்** என ஊகிக்கப்படுகின்றது. 515 செய்யுட்கள் காணப்படுகின்றன. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

கணபதி துணை
அரிச்சந்திரன் சரிதை

மருச்செந்தி தோடணியு மாதுமையாள் திருமகனே
திருச்செந்தூர் நகர்வாழும் செவ்வேளின் முன்னோனே
கருச்செந்தி வாராமல் கயிலாயம் சேர்ந்திருக்கும்
அரிச்சந்த்ரன் கதைபாட ஐங்கரனே அருள்புரிவாய்.

முடிவு :

அல்லிமலர்த் திண்டோளா னரிச்சந்த்ரன் திருக்கதையைச்
சொல்லுமென்று கேட்டோரும் சொல்வோருஞ் சுகத்திருந்து
நல்லபதந் தனை அணுகி நாரிபங்கர் உள்ளளவும்
முல்லலுற வாழ்ந்திருந்து அரனடியே சேர்வோம்,

Arichandiran Kathai.

Size 21×33. Pages: 146. Lines 22 on a page. Condition: good.

Note: The Ms. is a different work from the Arichandira Puranam and contains 515 verses.

130. ஆதிபருவத்தாதிபருவம் மூலம் (நூல் எண் 54)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 109. நிலை : கிலம்.

குறிப்பு : இப்பிரதி மகாபாரதத்தின் முதல் பகுதியாகிய ஆதிபருவத்தின் முற்பகுதியில் உள்ள செய்திகளை அமைத்து இயற்றப்பட்டுள்ளது. 569 செய்யுட்கள் உள்ளன.

ஆசிரியர் அம்பலத்தாடுமையர் என்பது பாயிரம் 12ஆம் பாடலால் தெரிய வருகிறது. அச்சானது. அச்சுப் புத்தகத்தில் பாயிரமில்லை.

தொடக்கம் :

உ
கடவுடுணை
பாரதம்
ஆதிபருவத்தாதிபருவம்

நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராச (னினிதாக) மாபார
தம்சொன் னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ
பைந்தமிழெல் லாம்வல்ல வில்லிபுத்தூ ரன்பகர்ந்த பார
தத்திற்
சந்தமுறு மாதிபரு வத்தின்முதற் சந்தனுவின் சரிதங் காறும்
புந்திமிகும் புலவோர்முன் னென்றுமறி யாதேனும் புகலு
கின்றேன்
எந்தைபெரு மான்பரமன் றிருமுடியி னெருக்கலரு மிருக்கு
மாபோல். ௪

முடிவு : இறுதிச் செய்யுள் எழுத இயலாதவாறு கிலமாக உள்ளது.

சந்தனுச் சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 569.
ஆதிபருவத்தாதிபருவ முற்றிற்று.
ஸ்ரீ அரவணைச் செல்வன் றிருவடி வாழ்க.
ஸ்ரீ எதிராசன் றிருவடி வாழ்க.
ஸ்ரீ கருணையானந்தன் றிருவடி வாழ்க.

Adiparuvathadi Paruvam. (Text)

Size 21×33. Pages: 109. Lines 25 on a page. Condition: injured.

Note: The Ms. contains 569 verses. This is based on the former part of the Adi Parvam of Mahabharatam.

131. இராமாயண வசனம் (நூல் எண் 66)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 178. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இராமாயணத்தை உரைநடையில் எழுதிய நூல். இரு பகுதிகள் கொண்டது. முதல் பகுதியில் பாயிரம், ஆற்றுப் படலம், நாட்டுப் படலம் என்பன வசனமாகவுள்ளன. முதற் பகுதியில் 32 பக்கங்கள் பலவகை யளவுள்ள ஏடுகளில் எழுதப் பெற்றுள்ளன. பின் நகரப் படலம்முதல் பாலகாண்டத்தில் கைக்கிளைப் படலம்வரை உரைநடையாக உள்ளன. இது அபூர்த்தி.

தொடக்கம் : பஞ்ச பூதத்திலே நாலாம் பூதமாகிய வாயு புத்திரனானவன் பஞ்ச பூதத்திலே இரண்டாம் பூதமாகிய அப்பு என்று சொல்லப்பட்ட சமுத்திரத்தைத் தாண்டி, பஞ்ச பூதத்திலே ஐந்தாம் பூதமாகிய ஆகாய மார்க்கமாக, ஸ்ரீ ராமருடைய பணிவிடையினாலே அசோக வனத்திலே பாய்ந்து .... சரஸ்வதி யம்மனையும் நமஸ்காரம் பண்ணுவோம்.

முடிவு : ஸ்ரீ ராமருடைய சரீரகாந்தி மாத்திரமல்ல, நானும் புருஷரைப் பிரிந்த ஸ்திரீகளைக் கொல்லுவேனென்று அறிவிக்கும் படி வந்தது போலுமிருந்தது; அப்படிப்பட்ட மாலைக் காலத்தைப் பார்த்துச் சீதை சொல்கிறாள்: இருட்டாகிய கறுப்பு நிறத்தையும்

மின்னல் பிரகாசமாகிய கோரப் பல்லையும் தென்றலாகிய பெருமூச்சையும் செம்மானமாகிய ...... த்தையுமுடைய மாலை....

Ramayanam Vachanam

Size: 21×33. Pages: 178. Lines 27 on a page. Condition: good.

Note: The Ms. contains a prose version of the Ramayanam in two parts. Incomplete-the first part upto Nattuppadalam and the second upto Kaikkilaippadalam in Bala Kandam.

132. இராமாயண வசனம் (நூல் எண் 67)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 21. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி இராமாயணத்தை உரைநடையில் எழுதியது. தட்டெழுத்துப் பிரதி. இதில் அனுமன் கடல் தாவு படலமாகிய கடலைக் கடக்கத் துவங்குவதுமுதல் இராமன் சுக்கிரீவனுடைய அவையில் வீற்றிருந்தபோது யாவரும் சீதையைத் தேடிச் சென்ற திசையைப்பற்றியும் அனுமன் விரைவில் வரக்கூடுமென்பதுபற்றியும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுதல் வரை உளது.

தொடக்கம் :

உ
ஸ்ரீ ராம ஜெயம்

மயேந்திர கிரியுச்சியிலே யேறி விசுவரூபங் கொண்டு வாலை வடக்கே நீட்டித் தெற்கு முகமாக இரண்டு கையும் நிலத்திலே யூன்றி(பது) ஆகாசத்திலே யெழும்புகிறதுக்கு ஆரவாரம் பண்ணுகிறபோது வாலடிபட்டு வடபாரிசத்து மலைகள் நொறுங்கித் தவிடு பொடியாய்ப் போய்விட்டது.

முடிவு : அதிலே காரியக்கார ரின்னாரென்று தெரியவுமில்லை யென்றார்கள். அதுக்கு முன்னதாக வடக்கு மேற்குக் கிழக்கு முகத்திலே அம்மனைத் தேடப் போனவர்கள், அம்மனைத் தேடிக் காணோமென்று வந்து சொன்னார்கள். சுக்கிரீவனு மிந்தச் சேதி சுவாமிக்குச் சொன்னோமானால் மிகுதியும் விசாரப்படுவார், தெற்கு முகத்திலே போன பேரும் நாற்பத்தஞ்சு நாள் மட்டும் வரவில்லையே என்றிருக்கையில்...

Ramayana Vachanam.

Size 21×33. Pages : 21. Lines 30 on a page. Condition: good.

Note: This is a typed copy of Ramayana in prose form.

133. உதயணகுமார காவியம்-மூலம் (நூல் எண் 89)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 49. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : விருத்த யாப்பில் உதயண குமாரனுடைய வரலாறு கூறும் நூல். அச்சானது. டாக்டர் ஐயரவர்கள் 1935இல் வெளியிட்டுள்ளனர்.

தொடக்கம் :

சிவமயம்
உதயணகுமார காவியம்
முதலாவது
உஞ்சைக் காண்டம்

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

மணியுடன் கனக முத்த மலிந்தமுக் குடையி லங்க
வணிமலர்ப் பிண்டி யின்கீ ழமர்ந்தநே மீசர் பாதம்
பணியவே வாணி பாதம் பண்ணவர் தமக்கு மெந்தம்
இணைகரஞ் சிரத்திற் கூப்பி யியல்புறத் தொழுது
மன்றே. க.

முடிவு :

பொற்பு டைநன் மாதரைப் புணர்ந்து மேனி தீண்டலு
மற்பு தமாய்க் காண்டலு மான வின்சொற் கேட்டலுங்
கற்பு டைமனத்தி லெண்ணிக் காண்கைகரி தாகவே
விற்ப னநன் மாதவர் வேண்டுஞ் சுகந் துய்த்தனர்.

துறவுக் காண்டம் முற்றிற்று.

காண்டங்களின் செய்யுட் டொகை :

உஞ்சைநற் காண்டந் தன்னி லுயர்கவி நூற்றீ ரெட்டு
மிஞ்சவே யிலாவா ணத்தின் வீறுயர் முப்ப தாகு
மெஞ்சலில் மகத காண்ட மெழிலுடை முப்பத் தஞ்சும்
அஞ்சுட னைம்பத் தாகு மரியவத் தவத்தி லன்றே.

Udayana Kumara Kavyam

Size 21×33. Pages: 49. Lines 28 on a page. Condition: good.

Note: This is the Ms. realating to the Udayana Kumara Kavyam edited and published by Dr. Iyer in 1935.

134. உதயணன் சரிதம் (கிரந்தம்) (நூல் எண் 90)

அளவு : 17×21. வரிகள் : 12.
பக்கங்கள் : 145. நிலை : பழமை.

குறிப்பு : உதயணன் சரிதத்தைக் கூறும் இவ் வடமொழி நூல் கிரந்த லிபியில் அமைந்துள்ளது.

Udayanan Charitam (Grantham).

Size 17×21. Pages: 145. Lines 12 on a page. Condition: good.

Note: This is in grantha script.

135. கம்பராமாயணம் (நூல் எண் 114)

அளவு : 27×40. வரிகள் : 65.
பக்கங்கள் : 466. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய இப்பிரதியில் இராமாயணம் முழுமையும் உள்ளது. உத்தர காண்டமும் உள்ளது. முதல் இரண்டு பக்கங்களில் 7 காண்டங்களின் படல அட்டவணையும், படலச் செய்யுட்களும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

தொடக்கம் : க.

ஸ்ரீமதே ராமானுசாயனம.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.
ஸ்ரீமத் கம்பராமாயணம்
வாலகாண்டம் - சிறப்புப்பாயிரம்

கடவுள் வாழ்த்து
நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தியுமே
சென்மமும் மரணமு மின்றித் தீருமே
இம்மையி லிராமவென் றெழுத்தி ரண்டினால்.

முடிவு :

பராபர மான சோதி பாற்கடற் பள்ளி நீங்கி
இராமாவ தார மாக இமையவர் வாழ்க என்று
தராதர முய்ய வெய்ய தசமுகன் தன்னைச் செற்ற
இராமனைப் போற்றி செய்வார்க் கிந்திர பதவி பேறும்.

வைகுந்தப் படல முற்றும்.

ஆகப் படலம் 19க்குத் திருத்தம் 1537. ஆகக் காண்டம் 7க்குப் படலம் 154க்குத் திருவிருத்தம் 12016. ஸ்ரீமதிராமாயண முற்றிற்று. ஸ்ரீமதே ராமானுஜாயனம. விய ௵ பங்குனி ௴ 21௳ ஆதிவாரம் பஞ்சமி அசுவினி நட்சத்திரமும் கடகலக்கினமும் கூடிய சுபதினத்தில் உதையாதி நாழிகை 16க்கும் புதுப்பாளையங் காலிங்கராயர் கோத்திரம் வீரராகவ முதலியார் குமாரர் திருவேங்கட முதலியார் குமாரனாகிய சடகோபம் ஸ்ரீமதிராமாயணம் ஷியான் கையினாலே சுவஸ்த லிகிதமா யெழுதி முகிந்தது. ஸ்ரீராம ஜெயம். ஸ்ரீவாணி தேவி சகாயம் உண்டாகவேணும். ஆழ்வாராதி திருவடிகளிலே சரணம்.

Kamba Ramayanam.

Size 27×40. Pages: 466. Lines 65 on a page. Condition: good.

Note: This contains Kamba Ramayaṇam and Uttara Kandam.

136. கம்பராமாயணம் (நூல் எண் 116)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 189. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஸ்ரீமான் பெ.நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்களிடம் இருந்த சுவடியைப் பெற்றுப் பிரதி செய்யப்பெற்றது. கம்பராமாயணப் பாடல்கள் இடையிடை விரவி வர, ராமாயண நாடகமாக எழுதப்பெற்ற நூல். இந்நூலில் ராமன் சித்திரகூடம் சென்றதுமுதல் இந்திரசித்தன் போருக்குப் புறப்படும் பகுதி வரை உள்ளது.

தொடக்கம் : ஹரி: ஓம். நன்ருக 20-1-61

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

முடிவு :

தும்பி யென்றல(தில்) குள்ள யாவையும்
தொகுக்க வந்தொருது ளருதாள்
வெம்பு வெஞ்சின மடங்க லொன்றின்
வலிதன்னை நின்றுலகில் வெல்லுமோ
தம்பி நம்பியென் தம்பி ரான்வரு
துணைத்த ரிக்கிலை சலித்திடயே
அம்பில் முந்தியென தாவி யுண்ணுமிது
காவ டாசிலைவல் லாண்மையால் 465

Kamba Ramayanam.

Size 21×33. Pages: 189. Lines 30 on a page. Condition: good.

Note: This is copied from the Ms. owned by Sri P.N.Appuswami Aiyar. This is in the form of a drama and contains only a portion.

137. கம்பராமாயணம் (நூல் எண் 117)

அளவு : 21×33. வரிகள் : 33.
பக்கங்கள் : 101. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயரவர்கள் கொடுத்த சுவடியின் இரண்டாம் பாகத்தின் பிரதியே இந்நூலாகும். இப்பிரதியில் ஸ்ரீ இராமன் பட்டாபிஷேகம் வரை உள்ளது. இறுதியில் 14ஆவது செய்யுள் 3ஆம் அடியுடன் அபூர்த்தியாக உள்ளது. இறுதியில் வாலி-ராவண யுத்தப் பகுதி உள்ளது.

தொடக்கம் : உரை.

இப்படிச் சொல்லி மலையாலெறிந்தான் அனுமன். அந்த மலையைத் தூளாக்கினான் இராவணன்.

முடிவு :

பொன்னரி வருடம் பொருந்தியோ சனைகள் ஒன்பதி
னுயிரம் போக்கி
தன்னிலை யிரண்டா யிரமுடை நிடதம்
தாவிமே லைக்கடல் சார்ந்து
பின்னீரன் பூசை விதிமுறை முடித்துப்
பெருகுசீர் ரம்மிய வருடம்
....

Kamba Ramayanam.

Size 21×33. Pages: 101. Lines 33 on a page. Condition: good.

Note : This is the second part of the previous item.

138. கம்பராமாயணம்-பாலகாண்டம் (நூல் எண் 118)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 221. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பால காண்டம்மட்டும் இப்பிரதியில் எழுதப் பெற்றுள்ளது. இப்பிரதியில் முதல் 6 பக்கங்களில் ஏழு காண்டங்கட்கும் அட்டவணை உள்ளது.

தொடக்கம் :

உ

ஹரி : ஓம் நன்றாக.

இராமாயணம்-பால காண்டம்—கடவுள் வாழ்த்து

பலச்சுருதி

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியர் வழியு மாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

முடிவு :

ஆனவன் போனபின் னரசர் கோமகன்
ஊனமில் பேரர சுவக்கு நாளிடை
வானவர் செய்தமா தவம்உண் டாதலான்
மேனனி நிகழ்ந்தது விளம்பு வாமரோ.

பரசிராமப் படல முற்றும்.
ஆகப் படலம் 31க்குக் கவி : 1398.

பால காண்ட முற்றும்.

Kamba Ramayanam

Size 21×33. Pages: 221. Lines 30 on a page. Condition : good.

Note: The Ms. contains only Bala kandam with table of contents relating to the seven kandams in the first six pages.

139. கம்பராமாயணம் (நூல் எண் 119)

அளவு : 21 × 33. வரிகள் : 34.
பக்கங்கள் : 522. நிலை : இலமாக உளது.

குறிப்பு : இப்பிரதியில் கம்பராமாயணம் கடல்காண் படலம் முதல் திருவபிடேகப் படலம் வரை யுத்தகாண்டம் முழுவதும் உள்ளது. இறுதியில் 2 பக்கங்களில் படல அட்டவணை உள்ளது. இதில் 46 படலங்களும் 4336 பாடல்களும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ
இராமஜயம்
கம்பராமாயணம்
யுத்த காண்டம்
கடல்காண் படலம்

ஒன்றே என்னி லொன்றேஆம்;
பலஎன் றுரைக்கின் பலவேஆம்;
அன்றே என்னின் அன்றேஆம்;
ஆம்என் றுரைக்கின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேஆம்
உளதென் றுரைக்கின் உளதேஆம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்குஇங் கென்னே பிழைப்புஅம்மா (க)

முடிவு :

உம்பரோ டிம்பர் காறும் உலகம்ஓர் ஏழும் ஏழும்
எம்பெரு மான்என் றேத்தி இறைஞ்சினின் றேவல் செய்ய
தம்பிய ருடனே தானும் தாரணி முழுதுங் காத்தான்
அம்பரத் தனந்தர் நீங்கி, அயோத்தியில் வந்த வள்ளல் 24

திருவபிடேகப் படல முற்றும்.
ஆகப் படலம் சகூ-க்குக் கவி சஙநகூ.
யுத்தகாண்ட முற்றும்.
ஸ்ரீ ராமன் திருவடிகளே சரணம்.

Kamba Ramayanam.

Size 21×33. Pages: 522. Lines 34 on a page. Condition: injured.

Note: The Ms. contains Yuddha Kandam 46 padalams and 4336 stanzas.

140. குண்டலகேசி, வளையாபதி, தனிச்செய்யுட்கள்

நூல் எண் (687)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 16. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இதுவரை கிடைக்கப்பெறாத தமிழ்க் காப்பியங்களான குண்டலகேசி, வளையாபதி நூல்களின் தனிச் செய்யுட்கள் இப்பிரதியில் உள்ளன. அங்கங்கே உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டிய பாடல்களையும் புறத்திரட்டிலுள்ள பாடல்களையும் தொகுத்து எழுதியதென்று தோன்றுகிறது. மொத்தம் 80 பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

இது வளையாபதி குண்டலகேசி தனிப்பாடல்கள்.

உ

சிவமயம்

காப்பு

தன்றேறு ணென்கினு மொன்றுகை மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

முடிவு : பென்சிலினால் எழுதப் பெற்றிருப்பதால் விளக்கமாக இல்லை.

Kundalakesi & Valayapathi

Size 21×17. Pages: 16. Lines 20 on a page. Condition: injured.

Note: The Ms. contains 80 verses from Kundalakesi and Valayapathi.

141. சிலப்பதிகாரம் (நூல் எண் 224)

அளவு : 21 × 17. வரிகள் : 23.
பக்கங்கள் : 70. நிலை : பழமை.

குறிப்பு : ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருன சிலப்பதிகாரம் மூலம் கனுத்திறமுரைத்த காதைமுதல் வரந்தருகாதை 55 வரிவரை அபூர்த்தியாக உள்ளது. இப்பிரதியின் இறுதியில் கூத்துப்பற்றிய செய்திகள் எட்டுப் பக்கங்களில் காணப்படுகின்றன. மேலும் இரண்டு பக்கங்களில் கூத்துப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இப்பிரதி மிகக் கிலமாக உளது. நூல் ஐயரவர்களால் வெளியிடப் பெற்றது.

தொடக்கம் :

உ

கனுத்திறமுரைத்த காதை

அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாங்கொள்ள மேலோர்நாண்
மாலதி மாற்ருண் மகவுக்குப் பாலளிக்கப்...

Silappadikaram.

Size 21×17. Pages: 70. Lines 23 on a page. Condition: old.

Note: The Ms. contains Silappadikaram, certain portions only.

142. சிலப்பதிகாரம் (நூல் எண் 225)

அளவு : 21 × 17. வரிகள் : 27.
பக்கங்கள் : 195. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : இளங்கோவடிகள் இயற்றியதும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றுமாகிய சிலப்பதிகாரத்தின் முதற்பகுதியே இப்பிரதியாகும். இப்பிரதியில் பாயிரம்முதல் நாடுகாண் காதைவரை அடியார்க்கு நல்லார் உரையுடன் உள்ளது. இப்பிரதி மிகக் கிலமாக உள்ளது. முதலில் பதிக அட்டவணை உள்ளது.

தொடக்கம் : சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லாரிட்ட உரைப்பாயிரம்: குணவாயில்..............வாழ்வீரீங்கென.

இவ்வியலிசை நாடகப் பொருட் டொடர்நிலைச் செய்யு ளடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ் நூல் தொல்காப்பிய மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா விலக்கண மாதலானு மிந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க.

முடிவு :

விரட்டையும் பெண்க ளிருவரு மன்றியு
மாடக மாடத் தரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமக ளிங்குளண்
மங்கல மடந்தை கோட்டத் தாங்கட்
செங்கோட் டுயர்வரைச் சேணுயர் சிலம்பிற்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய.

வாரணம்-கோழியூர். ஆவது உறையூர். முற்காலத்து ஒரு கோழி, யானையைப் போர்தொலைத்தலா னந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி யென்று பெயராயிற்று. அந்நகர் காண்கின்றபொழுதே சிறையுங் கழுத்துமாகிய வதனைப் புறம்பே சிறையையுடைய கோழி என்றூர் என்பாருமுளர். புறஞ்சிறை வாரணமென்பது சிலேடை. புறத்தே சிறையை யுடைய வாரணம் கோழி. புறஞ்சேரி- "புறஞ்சிறைப் பொழி லும்" என்ப மேலுமாகலின். புறஞ்சிறைவாரணங் கோழியூ ரெனக் கொள்க. பணிந்தனர் போந்தெய்தி இருந்துழிச் சென்றோர் வினவப் பரி புலம்பினரெனக் கடவது முண்டோ கற்றறிந்தீரெனச் செவியகம் புதைத்து நடுங்க முதுநரியாகெனக் கட்டி யாதலின் உரையீரோவெனப் பெறுக. ஈங்கிவரெனச் சாப விடைசெய்து கவுந்தியையும் தேவியையுங் கணவனும் புரிந்து புக்காரென்க.

இஃது எல்லாவடியுந் தம்முள் ஒத்து முடிதலின் நிலை மண்டில ஆசிரியப்பா.

நாடுகாண்காதை விரித்துரை யொரு வகையான் முடிந்தது.

Silappadikaram.

Size 21×17. Pages: 195. Lines 27 on a page. Condition: injured.

Note: The Ms. contains the first part of Silappadikaram up to Nadu Kan Kathai with Adiyarkku Nallar's commentary.

143. சிலப்பதிகாரம் உரை (நூல் எண் 226)

அளவு : 21×17. வரிகள் : 12.
பக்கங்கள் : 165. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் சிலப்பதிகாரம் 8 வேனிற் காதை முதல் 10 நாடு காண் காதைவரை அடியார்க்கு நல்லார் உரை மட்டும் உள்ளது.

தொடக்கம் : நெடியோன் குன்றமுந் தொடியோள் பெளவ முந் தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு :—குன்றம் வேங்கடமலை. தொடியோளெனவே பெண்பாற் பெயராற் குமரியென்பதாயிற்று.

முடிவு : பணிந்தனர் போந்தெய்தி யிருந்துழிச் சென்றோர் வினவப் பரி புலம்பினரெனக் கடவதுண்டோ..........

Silappadikaram.

Size 21×17. Pages: 165. Lines 12 on a page. Condition: good.

Note: This contains only Adiyarkku Nallar's commentary from Venir Kathai up to Nadukan Kathai.

144. சிலப்பதிகாரம் மூலம் (நூல் எண் 227)

அளவு : 21×33. வரிகள் : 60.
பக்கங்கள் : 185. நிலை : பழமை.

குறிப்பு : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதி காரத்தின் மூலம்மட்டும் புகார்க் காண்டம்முதல் முழுவதும் உள்ளது. மேலும் பாயிரம்முதல் ஊர்சூழ் வரிவரை அடியார்க்கு நல்லார் உரை உளது. ஆனால் வேட்டுவ வரி இறுதிப்பகுதி உள்ளது. இப்பிரதியின் இறுதியில் இரண்டு பக்கங்களுக்கு வேறு சில குறிப்புக்களும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

சிலப்பதிகாரம்
புகார்க் காண்டம்
பதிகம்

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்

குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழ
(5) லொருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்
....

கூ0. இது, பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபெண்.

முடிவு : குறுமுனி பொருந்திய சந்தன மகில் முதலிய மரங்களாற் சுமைமிக்குயர்ந்த பொருப்பனுகிய வெற்றியை விரும்பும் பாண்டியன் பகைவருடைய முனையிடமுமவர் மீட்குந் தொழிலும் பாழ்படும்படி வெட்சியைச் சூடுவானுக வென்ருரென்க. வம்பலர் முதலிய தாழிசை மூன்றுஞ் சுரிதகமுந் துறையென முற்கூறியவதனுற் கொற்றவைக்குப் பரவுக்கடனும் பூண்டலுங் கொள்ளப்படும். என்னை?

வந்த நிரை........

Silappadikaram (Text).

Size 21×33. Pages: 185. Lines 60 on a page. Condition: old.

Note: This contains the text beginning from Pugar Kandam up to the end and also Adiyarkku Nallar's commentary for certain verses.

145. சீவலமாறன் கதை (பகுதி 1 முதல் 4 வரை)
(நூல் எண் 250)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 179. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பாண்டிய மன்னர்களில் ஒருவன் சீவலமாறன் என்பான். ஸ்ரீவல்லபன் என்பதே சீவலன் எனத் திரிந்தது. இவன் கி.பி. 16-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவன் எனக் கருதப் படுகிருன். இவனுடைய வீரம், பெருமைகள் முதலிய சிறப்புக் களை அமைத்துப் பாடிய வரலாறு. இந்நூலாசிரியர், சிதம்பர நாதக் கவிராயர். இடையில் சில பகுதிகள் இல்லை. இதில் 15 படலங்களும் 1394 விருத்தங்களும் காணப்படுகின்றன.

அச்சாகவில்லை.

தொடக்கம் :

உ

ஆறுமுகம் துணை

சீவலமாறன் கதை

சிறப்புப் பாயிரம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மன்னவர்மன் னவர்வேந்தன் வழுதிபராந் தகநாதன்
வரக்கு மாரன்
தென்னவர்தங் குலதீபன் சீவலமா றன்கதையைத் திருந்தச்
செய்தான்
மன்னவர்தம் பெருவாழ்வு பெறவிளங்கு மயிலேறும்
பெருமாள் பாலன்
கன்னவிலுந் தடம்புயவேள் சிதம்பரநா தன்கவிதைக் கருணை
மாலே. (க)

காப்பு

வைய முய்ய மழைமுறை பெய்திடச்
செய்ய தாமரைச் செல்வி திகழ்ந்திடத்
துய்ய கோட்டுத் துதிக்கைக் கரிமுகத்
தைய னம்பொன் னடியிணை யேத்துவாம்.

நகரப்படலம்

ஓதநீ ருலக மொருகுடை நீழலிற் பொதுக்கடிந் துலவறப்
புரந்து
சீதமா மதியின் குலமெலாம் விளக்குஞ் சீவல மாற
னென்றுரைக்குங்
காதல்கூ ரரசர்க் கரசனுண் டளிக்குங் கன்னிநாட்
டுயிரெனக் கவினு
நீதியு நிறையு மறிவெனப் பொறையு நிகழ்திரு நெல்லைமா
நகரம்

முடிவு :

செய்ய வார்புகழ்ச் சீவல மாறனற் சரிதை
வைய மீதினிற் கற்பவர் கேட்பவர் மகிழ்வோர்
துய்ய போகங்கள் யாவையு முறைமுறை துய்த்துத்
தையல் பாகன்றன் றுமரைத் தாளிணைச் சார்வார்.

15. திருக்கையிலாயப் படல முற்றும்

ஆக விருத்தம் 1394

சீவலமாறன் கதை முற்றும்.

918 ஸு துந்துபி ஸு சித்திரை மீ 28ஆம் உ எழுதி முடிந்தது.

இந்தக் கதையில் ஆற்றுப்படலம், நாட்டுப் படலம், திருவவதாரப் படல முதலானதும் இதல்லாமற் சிறிது படலத்திலே நடுநடுவே சிறிது ஏடும் மேற்பாடத்திலே விழுந்திருந் ததினாலே எழுதப்படவில்லை. இதற்கு வெள்ளேடும் ஏட்டளவிலே போட்டிருக்குது. மேற்பாடம் விசாரித்து வாங்கியிவ்வளவும் எழுதிச் சேர்த்தவர்கள் புண்ணியமும் புகழும் அடைவார்கள்.

இந்தப் பொத்தகத்தில் இந்தத் தொண்ணூற்றுநாலா மேட்டிற் பிற்புறத்தில் முதல் வரி முதலெழுத்தும் இரண்டாம் வரியில் மூன்றெழுத்தும் மூன்றும் வரி முதல் அஞ்சாம் வரிவரை முதலெழுத்தொவ்வொன்றும் கூட்டிப் பார்த்தால் இந்த ஏடெழுதினவன் பேர் துலங்கும்.

Seevala Maran Kathai (Parts I to IV)

Size 21×33. Pages: 179. Lines 28 on a page. Condition: good.

Note : This relates to the history of a Pandyan king named Seevala Maran who lived in the 16th century. Author : Chidambaranatha Kavirayar.

146. சீவலமாறன் கதை (நூல் எண் 251)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 191. நிலை : பழமை.

குறிப்பு : மேற் குறிப்பிட்ட நூல் எண் 250 இதன் பிரதியாகும்.

Seevala Maran Kathai.

Size 21×33. Pages: 191. Lines 30 on a page. Condition: old.

Note : The previous one is a copy of this Ms.

147. கம்பராமாயணம்-சுந்தர காண்டம்

(நூல் எண் 254)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 273. நிலை : இலமாக உளது.

குறிப்பு : கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணத்தில் சுந்தர காண்டம் முழுமையும் கொண்டது இப்பிரதி. இதில் 15 படலங்களும் 1244 பாடல்களும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ
சிவமயம்
சுந்தர காண்டம்
கடறுவு படலம்

அலங்கலில் தோன்றும் பொய்மை யாமெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கங்
கலங்குவ தெவரைக் கண்டால்? அவர், என்பர் கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே, மறைகளுக் கிறுதி ஆவார்.

முடிவு :

அன்னெறி யிரண்டு நாளி லங்கதன் முதலி னோர்கள்
பொன்னடி வணங்கி னுரைப் புகழ்ந்துடன் பொருந்திப்
போவார்
இன்னெடும் பழுவக் குன்றி லின்னுழி யிறுத்துப் பின்னர்ப்
பன்னிரு பகலிற் சென்று தென்றிசைப் பரவை கண்டார் 52

திருவடி தொழுத படல முற்றும்.

920ஆம் ஞூ பங்குனிமீ 27உ மக நட்சத்திரமும் மங்கள வாரமும் பெற்ற சுபதினத்தில் எழுதி முகிந்தது. வைகுண்ட நாதன் பரிபூரண கடாட்சம்.

Kamba Ramayanam-Sundara Kandam.

Size 21×33. Pages: 273. Lines 28 on a page. Condition: injured.

Note : This contains complete Sundara Kandam with 15 padalams and 1244 verses.

148. சுந்தர காண்டம் (நூல் எண் 255)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 50. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி கம்பராமாயணத்தின் கருப்பொருள் என்பர். செய்யுளும் உரைநடையும் அமைந்து காலட்சேபம் போல் எழுதப் பெற்றுள்ளது. கம்பராமாயணப் பாடல்களுடன் வேறு சில பாடல்களும் கதையை ஒட்டி விரவிவந்துள்ளன.

தொடக்கம் :

ஸ்ரீ
ஸ்ரீ ராமஜெயம்
ஸ்ரீமத் இராமாயணம்
சுந்தர காண்டம்

இலங்கையைப் பார்த்துத் தாவினான் அனுமன். அப்பொழுது மைநாக மலை இடையில் வந்து என்மேலிருந்து இளைப்பாறிப் போவென்றான். அப்பொழு தந்த மலையைக் கீழ் மேல்வைத்துந்தினான் அனுமன். விழுந்த மைநாக மெழுந்து ஒரு மாணி ரூபமாக வந்து வானிடைத் தோன்றிச் செல்லல்.

முடிவு: அப்போது ராமனு மப்படித்தானே யென்று எழுந்து எழுவது வெள்ளம் படையுடனே சுக்ரீவன் முதலான இருபத்தொன்று ராசாக்களும் அறுபத்திரண்டு மந்திரிமாரும் வாத்தியம் முழங்க, பன்னிரண்டு நாளிடையில் தென்கடல் கரையில் வந்தார்.

சரந்தாக்கம் முற்றும்
குரு வாழ்க.

Sundara Kandam.

Size 21×33. Pages: 50. Lines 32 on a page. Condition: good.

Note : The Ms. contains prose and poetry suitable for discourse (Kalakshepam).

149. சுந்தர பாண்டியம் (நூல் எண் 256)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 332. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இந்நூல் சுந்தரேசப் பெருமானின் திருவிளையாடல் களைப்பற்றிக் கூறுவது. சொற்சுவை பொருட்சுவை மலிந்த

பெருங்காப்பியமாகத் திகழ்கிறது. இந்நூல் உற்பத்தி காண்டம், திக்குவிசய காண்டம், உக்கிர காண்டம், லீலா காண்டம் என்று நான்கு பிரிவுகளைக் கொண்டது. நான்காவது காண்டத்தில் சிவராத்திரிச் சருக்கம் 99 வரை உள்ளது. இதில் 2016 பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் அனதாரியப்பன். இவர் தொண்டை நாட்டில் வாயற்பதி என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தவர். இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ

கணபதி துணை

சுந்தர பாண்டியம்

பூமலி நாவலம் பொலன்க னிப்படு
தேமலி வரைக்கதை தீட்டுங் கற்பகம்
பாமலி சுந்தர பாண்டி யன்கதை
நாமலி தமிழ்ப்பல மெனக்கு நல்குமே. க.

முடிவு :

விணைத ணந்திருள் விடிய வோர்வட நிழன்மேல்
முனிவர் நாரதன் கோதம னன்னிமுன் முன்னிப்
புனையும் வில்லத்திற் புலைச்சியீ சன்பதி புகுவ
னிணைய காதைநீ கேளென யாழ்முனி யறைவான். 99

ஏப்ரல் 6, பாடல் 124. ஆக விருத்தம் 2016.

Sundara Pandiyam.

Size 21×33. Pages: 332. Lines 28 on a page. Condition: injured.

Note: The Ms. contains 2016 verses and describes about the Leelas (Thiruvilayadal) of Sundaresa Peruman. Author: Anathari Appan. Printed.

150. தெய்வயானை புராணம் (நூல் எண் 443)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 561. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் நாட்டுப் படலம்முதல் தொடங்கிச், சூரன் வதைப் படலம், ஏழா நாள் சூரன்வதைப்படலம், சயந்தன் சிறை

நீங்கு படலம், வரைக் காட்சிப் படலம், தெய்வயானை திருப்பரங் குன்றடைந்த படலம், மாலைப் படலம், உலாவியற் படலம், கடிமணப் படலம், சைவநெறி யுரைத்த படலம் வரை 73 படலங்களில் முருகப் பெருமான் வரலாறுகளையும், தெய்வ யானையை மணம் புரிந்ததையும் கூறுகிறது. இப்புராணம் மூன்று காண்டங்களாக எழுதப்பட்டுள்ளது. ஆக, திருவிருத்தம் 3242 என்று இறுதியில் எழுதப்பட்டுள்ளது. இடையே சில பக்கங்கள் எழுதாமல் விடப்பட்டுள்ளன.

தொடக்கம் :

உ

வெற்றி வேலுற்ற துணை
தெய்வயானை புராணம்
கடவுள் வாழ்த்து

மலர்தலைமா நிலமாகி மறையாகி மறைப்பொருளின் வளனு மாகி
யிலகுகதி ரொளியாகிச் சராசரமாய் விரிந்தவுயி ரெல்லா மாகிப்
பலசமயந் தனிலுரைக்கும் பரிசாகி யணுவிடத்தும் பரந்து நின்று
கலைகொள்மலா திகளொழித்துக் கதிகாட்டு மொருவனடி கருத்துட் கொள்வாம்.

உ

நாட்டுப் படலம்

பொருந்து மருத நிலமாக்கள் புகுந்து மேவும் பெரும்புனலை
வருந்தி யணைகள் பலகோடி மடுத்தே வாய்க்கால் வழிகொடு போய்
முருந்து நகையார் விழிச்சாயை முளரிச் செறுவிற் கயலாமென்
றருந்தக் குரண்ட மல்கக்கைக்கும் கனிர்ப்பழனத் திடையுய்த்தார்.

முடிவு :

கையிடைத் திகழ்ந்த செவ்வேற் கருணையோ டிசைந்து வாழ்க
மையறு மயிலி னோடும் வாரணம் நாளும் வாழ்க
செய்யவாய் வீர வாகு ஆதியாந் தீர வீரர்
ஐயனு ரருள்போல் வாழ்க வாழ்கவிவ் வகில மெல்லாம். ௬௦௦

சைவ நெறி யுரைத்த படல முற்றும்
ஆக, உத்தர காண்டம் ௧௩க்குப் படலம்

உக்குத் திருவிருத்தம் உநஉ.
ஆக, காண்டம் ந- க்குப்
படலம் எந - க்குத்
திருவிருத்தம் நஉசஉ.

சண்முக சகாயம்.

Deivayanai Puranam.

Size 21×33. Pages: 561. Lines 30 on a page. Condition: good.

Note: This is a Puranam on Deivayanai and contains Puranic stories on Deivayanai, Lord Muruga etc; incomplete.

151. நீலகேசி-மூலமும் உரையும் (பகுதி 1)

(நூல் எண் 531)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 136. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நீலகேசி என்னும் சமண சமயப் பெண் துறவி வேறு பல சமயத்தாரோடு வாதிட்டதாகக் கூறும் நூல். நீலகேசி வாதம் என்றும் பெயர் பெறும். நீலகேசியின் மூலமும் விருத்தி உரையும் கொண்டது இப்பிரதி. இதை இயற்றியவர் சமய திவாகர வாமன முனிவர். இப்பிரதியில் 1 முதல் 136 பக்கம் வரை உள்ளது. இதில் ஐந்து சருக்கங்களும் 407 பாடல்களும் உள்ளன. ஐந்தாவது சருக்கமாகிய மொக்கலவாதச் சருக்கம் 141ஆம் பாடல் வரை உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
சிவமயம்
நீலகேசி வாதம் மூலமும்
சமய திவாகர வாமன முனிவரியற்றிய விருத்தியுரையும்.
முதலாவது
பதிகவுரைச் சருக்கம்.

காப்பு
நேரிசை வெண்பா

பூமாது நம்மகலம் புல்லுவதும் பொங்கொளிசேர்
நாமாது நம்மை நயப்பதூஉங்—காமாதி
வென்முன் விரைமலரின் மேனடந்தான் மென்மயிலை
நின்முன்பொற் பாதநினைந் தால்.

முடிவு :

இக்கை வகையா லதுதானுள னக்காற்
றெுக்க விரண்டும் முடனுதலிற் றாய்தொருபாற்
பக்கம் மதுவும் பாடுபாழினிக் காலுமற்றுய்ச்
செக்கின் கணைபோன் றினிச்சென்றிருள் சேம மென்றுள்.

இ—ள் : இடக்கையன்று வலக்கை யென்புழி வலக்கை யிலிடக்கை யில்லாமையி விடக்கையன்று வலக்கை யென்றல் முடியாதாம்................வலக்கையின துண்மை வலக்கையிற் கிடப்பதன்றி யிடக்கையினுங் கிடப்பதாயினும் இடக்கை வலக்கை...

Neelakesi (with notes) Part I.

Size 21 ×33. Pages: 136. Lines 30 on a page. Condition: good.

Note : The Ms. contains the Jaina Kavya Neelakesi, five sargams and 407 verses. This 5th sargam is incomplete, ending with the 141st verse. Printed.

152. நீலகேசி - மூலமும் விருத்தி உரையும் (பகுதி 2) (நூல் எண் 532)

அளவு : 21×33. வரிகள் : 37.
பக்கங்கள் : 137. நிலை : பழமை.

குறிப்பு : நூல் எண் 531இன் தொடர்ச்சி. 138ஆம் பக்க முதல் 275ஆம் பக்கம்வரை மொக்கலவாதச் சருக்கம் 145ஆம் பாடல்முதல் இறுதி வேதவாதச் சருக்கம் 5ஆம் பாடல் வரை மொத்தம் 418 பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

அல்லென் றுரைத்த வுரைதானுமெம் மாக மத்து
ளில்லென்ற வாறென் றிவையிங்ஙனம் வேண்டு கின்றாய்
சொல்லென்று நாயை நரிதானெனச் சொல்லு கின்று
றில்லென்ற வாறோ நரிதன்னையு மென்றனனே.

முடிவு : *தடுமாறு பொருண்மைத் தாதலாவது :*

அக்னியில் *ஹூதஞ் செய்வான் ஸ்வர்க்கம் வேண்டினவ னென்றும், நாய் மாம்ஸங் தின்பான் ஸ்வர்க்கம் வேண்டினவ னென்றும் இவ்வாறு பொருள் படுதல். "அக்னிஹா" என்பது நாய்; "உத்ரம்" என்பது மாம்ஸம்; 'ஜூஹூயாத்' என்பது பக்ஷிப்பான் என்றவாறு.*

இவ்வாறு பொருண்மைத்தாதல் பரசாஸநத்துக்கு மொக் குமோவெனில் அவை புருஷ பிரணீதங்களாதலிற் புருஷோபதேச சம்பிரதாயத்தால் அர்த்த நிர்ணீதி கூடுதலிற் றடுமாறு வென்பது ....

Neelakesi (with notes) Part II

Size 21×33. Pages: 137. Lines 37 on a page. Condition: old.

Note: This is the continuation of the previous one and contains 418 verses ending with Vedavada charukkam fifth verse.

153. நீலகேசி-மூலமும் உரையும் (பகுதி 3)

(நூல் எண் 533)

அளவு : 21 × 33. *வரிகள் :* 35
பக்கங்கள் : 31. *நிலை :* *பழமை.*

குறிப்பு : *நீலகேசி மூலமும் விருத்தியுரையும். பெரும்பாலும் மணிப்பிரவாளமாக உள்ளது. இப்பிரதி நூல் எண் 532இன் தொடர்ச்சி. வேதவாதச் சருக்கம் 277 முதல் 308 பக்கங்கள் வரை உள்ளது. இறுதியில் இந்நூலுக்குரிய குறிப்புக்கள் மூன்று பக்கங்களில் காணப்படுகின்றன. இப்பிரதியில் மொத்தம் 67 பாடல்கள் காணப்படுகின்றன.*

தொடக்கம் : *வேதவாதச் சருக்கம்.*

வேதவாதச் சுருக்கம் 5ஆம் பாடலுக்குரிய உரை மணிப் பிரவாள நடையில் முதல் இரண்டு பக்கங்களில் காணப் படுகின்றது.

வேதவாதச் சருக்கம்

யாரது செய்தவ ரறியிலிங் குரையெனி லங்கொருவ
னாரது நடுவனெ ருறையுளில் மலம்பெய்திட் டொளித்
தொழியிற்
பேரினு முருவினும் பெறலில னுதலின் ருக்குறித்துத்
தேரினு மினியது செய்தவ ரில்லெனச் செப்புவே. 6

முடிவு:

ஓரா தெழுதினே னயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையார்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்ந்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர்க் கடன்.

நாராயணசாமி ஐயர் கைஎழுத்து

ஏலம்ப ஞு
மாசி மீ 23உ
பின்னை

திருவெவ்வூளுர் தருமையரால் எழுதப்பட்டதும் ஆரணி செண்டலங்கார நயினார் கம்பனியாருக்குச் சொந்தமானதுமான நீலகேசித் திரட்டுப் பிரதியுடன் பின்பு ஒப்பிடப் பெற்றது. 13-8-18.

Neelakesi (with notes) Part III

Size 21×33. Pages: 31. Lines 35 on a page. Condition: old.

Note : This is a continuation of the previous one containing 67 verses. The commentary is not in pure Tamil being mixed with Sanskrit words (Manipravalam).

154. மகாபாரதச் சுருக்கம் (நூல் எண் 593)

அளவு : 21×33. வரிகள் : 32
பக்கங்கள் : 154. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் மகாபாரதத்தைச் சுருக்கிப் பாடப் பெற்றது. இதில் கன்ன பருவம்மட்டும் உளது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை, அச்சான விவரம் தெரியவில்லை. இது நூல் எண் 617இன் தொடர்ச்சி.

தொடக்கம் :

உ
ஸ்ரீ ராம ஜெயம்
பாரதச் சுருக்கம்
(முன் தொடர்ச்சி)
எட்டாவது கன்னப் பருவம்
பதினாறும் போர்ச் சருக்கம்

கந்திர மேமைழயு மிந்திரனேவிக் கனமழை பெய்வித்திடுமன்று
ணந்தன ஞேடாய் கணமைத் தரளப்பி னற்பசு
வற்கமு முயிர் வாழ
விந்தவொ வாதநீ ளங்கையி லங்கொடு வெற்பது
குடையாக் கொண்டேந்துந்
தந்திர மாயனை வந்தனே செய்குநர் தாமொரு கருவிற்
றரியாரே. (க)

முடிவு:

அன்பர்செலப் பிரிவாற்று மாதா வியாத
னடி பணிந்தியா முடன்போத வருட்செய் யென்ன
துன்புடன்மந் தாசித்தோய்ந் தகற்றிச் செல்வான்
றாயனரு ளிடவந்நீர் துளைந்து மெய்விட்
டின்பருறு யகருடன்வான் புகுந்தார் மாதரி:
துதவத்தீ தவரிலெவ ரியற்ற வல்லர்
பொன்பயின்மார் பரியிவ னென்று ரைக்கும் பான்மை
புரையுமெனச் சுரர்முனியைப் புகழ்ந்தா ரம்மா. (17)

Mahabharatha churukkam.

Size 21×33. Pages: 154. Lines 32 on a page. Condition: good.

Note:: The Ms. contains Karna Parvam of Mahabharatham: condensed version. No information is available about the author. This is a continuation of the next item.

155. பாரதம் அசுவமேதம் (நூல் எண் 594)

அளவு : 21 × 33. வரிகள் : 31.
பக்கங்கள் : 188. நிலை : பழமை.

குறிப்பு : மகாபாரதத்தில் வரும் அசுவமேதத்தைப்பற்றிய வரலாற்றுச் செய்திகள் இதனுள் கூறப்பட்டுள்ளன. ஆசிரியர்

அதிராமப்பட்டணம் சேய்கு மீராயிலெப்பை புத்திரர், மகா வித்துவான் செய்யிது முகமது அண்ணாவியார் என்பார் ஆவர். அச்சிடப் பெறவில்லை. இதிலுள்ள பாடல்கள் 1394.

தொடக்கம் :

உ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம.

இஃது அதிவீரராமன்பட்டணம் ஷேய்கு மீராயிலெப்பை புத்திர சிகாமணியாகிய மகாவித்துவான் இயற்றமிழாசிரியராகிய செய்யிது முகம்மது அண்ணாவியாரென்னும் அமுத மதுரகவி ராஜராஜனியற்றியது.

காப்பு

பூமாது $\frac{\text{மு}}{\text{வு}}$ரம்பொருந்துங் கலைமாது நாவிலுறும்
பொற்பு வீர
மாமாது நயமுறையும் சினைத்ததெல்லாங் கைகூடும்
மகிமை ஓங்கும்
சீமானீ ளுடையநிதி யதிபதியுந் திறையளக்கச்
செகத்தை யாண்ட
கோமானேர் முரசுயர்த்தோ னசுவமகந் தனைவிரும்பிக்
கூறு வோர்க்கே.

முடிவு :

வாயினிற் குருதி சிந்துவ ரயர்ந்திடுவர் வாடி யெய்த்தவர்
தெளிந்தினி தெழுந்திடுவர்
காய்சி னத்தொடிரு கண்கடமுல் சிந்திடுவர் காது
கைத்தசையு றுஞ்சுவ ருமிழ்ந்திடுவர்
ஓய்வ றக்கணைசொ ரிந்திடுவர் வெந்தழிய
வூறு விற்கணைபொழிந்தவை பிளந்திடுவர்
மாய்கை யொத்தமின லென்றிரத முங்கடவுவார்
அடிக்கடி பகர்ந்திடுவர் வன்சபதம்.

Bharatham-Aswamedham.

Size 21×33. Pages: 188. Lines 31 on a page. Condition: old.

Note : The Ms. contains 1394 verses composed by Syed Mohammed Annaviyar of Adirampattanam.

156. மகாபாரதச் சுருக்கம் (மூலம்) (நூல் எண் 616)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 324. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மகாபாரதத்தைச் சுருங்கிய முறையில் அமைத்துப் பாடிய நூல். இந்நூலில் பாயிரமும், ஆதி பருவம், சபா பருவம், ஆரணிய பருவமாகிய மூன்று பருவங்களும் காணப் படுகின்றன. இந்நூலில் ஆரணிய பருவம்-சித்திரசேனச் சருக்கம் 230 பாடல்கள் வரை காணப்படுகின்றன. இந்நூலின் தொடர்ச்சி நூல் எண் 617இல் முழுவதுமாகக் காணப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பாரதச் சுருக்கம் வில்லிபுத்தூரார் பாரதத்தினின்றும் வேறானது. இந்நூலில் 52 சருக்கங்களும், 1278 பாடல்களும் காணப்படுகின்றன. இந்நூல் அச்சாகவில்லை.

தொடக்கம் :

உ
பாரதச் சுருக்கம்
பாயிரம்
கணபதி காப்பு

இருக்கு நான்கொடைந் தாயிசை பாரதச்
சுருக்க முற்றத் துணைசெயு மேருவிற்
செருக்கி ளேடுமந் நூலைமுன் றீட்டுமூ
வுருக்கொ ளியானை யுபயபொற் பாதமே.

முடிவு :

முற்றி வேள்வியை யாவரும் புகழ்தர முன்னீர்
சுற்று மாநில மோம்பினன் சுயோதன னிப்பாற்
கொற்ற பாண்டவ ரவ்வன மொருவிமுன் குறுகி
யுற்ற காமிய வனத்தினின் மீட்டும்வந் துற்றார். 230.

சித்திரசேனச் சருக்க முற்றிற்று. ஆகச் சருக்கம் 12க்குச் செய்யுள் 492.

Mahabharatha Churukkam.

Size 21×33. Pages: 324. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contains 52 sargams and 1278 verses.

157. மகாபாரதச் சுருக்கம் (நூல் எண் 617)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 276. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பாரதத்தைச் சுருக்கி அமைத்துப் பாடிய நூல்கள். இந்நூல், நூல் எண் 616இன் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. இந்நூலில் ஆரண்ய பருவத்தின் தொடர்ச்சியாக 8 சருக்கமும், விராட பருவம், உத்தியோக பருவம், பீஷ்ம பருவம், துரோண பருவமாகிய நான்கு பருவங்களும் காணப் படுகின்றன. இந்நூல் 33 சருக்கங்களும், 1074 பாடல்களும் கொண்டு முற்றுப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
மகாபாரத சுருக்கம்
ஆரணிய பருவம்
13. மவுர்க்கலர் கதையுரைத்த சருக்கம்
வேறு

பதினொரு வருட நீத்துப்
 பாண்டவர் பகரா ரண்யம்
வதியுநாள் அவர்க டுன்ப
 மாற்றுவான் வியாத னெய்தி
விதிமுறை யவர்செய் பூசை
 வியந்திடு மிருக்கை மேவி
துதிபெறு மாசி கூறித்
 துயருறு தோன் றற் கோதும்.

முடிவு :

நென்னலின்வை கறைபுகுந்தின் றந்தி காறு
 நெடும்போர்செய் திடும்யாவர் நிருதர் தன்னை
யின்னமகன் நிலனென நேர்ந் தொறுப்ப ரென்று
 வேகுவன்போ லத்தகிரி யினன் போய்ச் சார்ந்தா
னன்னபொழு திருவருக்கத் தவரும் பாடி
 யனிகமொடுஞ் சென்றடைந்தா ரைந்து நாட்போர்
பன்னுமிந்தத் துரோணப்பர் வத்தின் செய்யுட்
 பகரிருநூற் றெழுபத்தெட் டாய தன்றே. 212.

ஆக, பர்வம் 7க்கு ஆகச் சருக்கம் 66க்கு ஆகச் செய்யுள் 2263. பதினைந்தாம் போர்ச் சருக்கம் முற்றிற்று.
சருக்கம் 5க்குச் செய்யுள் 278.

Mahabharatha churukkam.

Size 21×33. Pages: 276. Lines 28 on a page. Condition: good.

Note: This is a continuation of the previous one containing 33 sargams and 1074 verses ending with Dr on a Parvam.

158. மணிமேகலை (நூல் எண் 621)

அளவு : 21 × 17. வரிகள் : 23.
பக்கங்கள் : 138. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை என்ற பௌத்த சமய நூலின் பதிகமும், மூலமுங் கொண்டது இப்பிரதி. இந்நூல் ஸ்ரீமத் ஐயரவர்களால் குறிப்புரையுடன் பதிப்பிக்கப்பெற்றது. நூலாசிரியர் சீத்தலைச் சாத்தனார். இப்பிரதியில் மூலமும் பதிகமும் உள்ளன.

தொடக்கம் :

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
மணிமேகலை பதிகம்

இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி
பொன்றிக ழெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீபத் தெய்வதஞ்
சாகைச் சம்பு தன்கீ ணின்று....

முடிவு :

(உசுo)

வின்றால் வகையான் மனத்திரு ளீங்கென்ற
றீன் மலையா மங்கல மொழியின்
தீப நன்கனங் காட்டத்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற் றனளென்....

மணிமேகலை முற்றிற்று.

Manimekalai.

Size 21×17. Pages: 138. Lines: 23 on a page. Condition: good.

Note : The Ms. contains the Manimekalai Text, one of the five major kavyas. The book has been edited and published by Dr, Iyer.

159. மணிமேகலை மூலம் **(நூல் எண் 622)**

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 127. நிலை : பழமை.

நூல் எண் 621இல் உள்ள குறிப்பின்படியே உள்ளது. ஆனால் நூலின் கடைசிப் பக்கத்திலிருந்து எண்ணிடப் பெற்றுள்ளது.

Manimekalai (Text).

Size 21×33. Pages: 127. Lines: 30 on a page. Condition: good.

Note: Same as per the previous one but copied in a reverse fashion beginning from the last page.

160. இராமாயணம் **(நூல் எண் 712)**

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 345. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இராம காதையின் இறுதிக் காண்டமாகிய உத்தர காண்டமாகும் இப்பிரதி. இராமன் நாடேற்று, பட்டாபிஷேகம் செய்துகொண்ட செய்திகளைக் கூறுவது. 30 படலங்களும், 1582 பாடல்களும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

ஹரி: ஓம். நன்றாக
உத்திர காண்டம்
கோத்திரப் படலம்

ஒன்றாய்ப் பலவா யுளனா யிலனா யுரைப்போர்க்
கன்றா கியாமா யருவா யுருவாகி மெய்மை
குன்றாத ஞானக் கொழுந்தாய்க் குணமூன் றிறந்து
நின்றா னியாவ னவனீள்கழ னெஞ்சில் வைப்பாம்,

முடிவு :

ஆழியான் மகிழ்ந்து பூவி லயன்மறை கொண்டு போற்றச்
சூழியா னையின்மீ தேறி யிந்திரன் றுதிசெய் தேத்தப்

பூழிவாழ் மேனி யானும் பொன்னடி தொழுது போற்ற
வாழிவா னவர்கள் கூற மருவிவை குண்டஞ் சேர்ந்தான். 79

வைகுண்டப் படல முற்றும்.

Ramayanam.

Size 21×33. Pages: 345. Lines: 25 on a page. Condition: good.

Note: This contains Uttara Kandam of Ramayanam 30 padalams and 1582 verses.

161. வசு சரித்திரம் (நூல் எண் 677)

அளவு : 21 × 17. வரிகள் : 16.
பக்கங்கள் : 485. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வசு என்ற வேந்தனுடைய பழைய வரலாறு கூறும் நூல். 32 படலங்களும் 1001 விருத்தங்களும் கொண்டது ஆசிரியர் : அம்பலத்தாடுமையன். பூர்த்தி. அச்சானது இறுதியில் படல அட்டவணை உள்ளது. தெலுங்கில் உள்ள வசு சரித்திரத்தின் மொழிபெயர்ப்பு.

தொடக்கம் :

கணபதி துணை
வசு சரித்திரம்

வான னத்தன் வயவயி ராவதக்
கோன னத்தன் குலமறை காணொணுத்
தான னத்தன் றணியுத வுங்கரி
யான னத்த னடியிணை போற்றுவாம்.
வேல்வாழி, மயில்வாழி, சண்முகந் துணை
சிவன்செயல் வயிரவன் றுணை.

முகவுரைப் படலம் :

நீர்கொண்ட முகில்வண்ணன் முதலமர ருயிருய்ய
நிறைந்த வாழிக்
கார்கொண்ட விடமுண்டு கறுத்தமிட றுடையானைக்
கமலை மேவுஞ்
சீர்கொண்ட திருவாலி கண்டபுரத் தருட்கடலைச்
சிந்தித் தேத்தி
வேர்கொண்ட பவக்காடு கடந்துபர மானந்த
வீடு சேர்வாம்.

முடிவு: இந்நூலை முதலில் தெலுங்கில் செய்தவர் ராமராஜ பூஷண கவி. இவர் விஜயநகரம் கிருஷ்ணதேவராயர் ஸபை வித்துவான்களில் ஒருவர்.

திருமலை தேவராயர்க்கு அர்ப்பிதம் செய்யப்பட்டது. இதை இவருக்குப் பின் வடமொழியிற் செய்தவர் அப்பய்ய தீக்ஷிதர் மாணவர்களுள் ஒருவராகிய காளஹஸ்தி கவி என்பவர். இஃது இன்னும் பதிக்கப்படவில்லை.

Vasu Charitram.

Size 21×17. Pages: 485. Lines 16 on a page. Condition: good.

Note: The Ms. contains 32 padalams and 1001 verses.

Author: Ambalathadumaiyyan. Relates to details about a king named Vasu. Seems to be a translation from a Telugu work bearing the same name.

162. வசு சரித்திரம் (நூல் எண் 678)

அளவு: 21 × 33. வரிகள்: 30.
பக்கங்கள்: 98. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: 677இல் கண்டது போன்றது. ஆனால் மாலைப் படலம் வரை உள்ளது. அபூர்த்தி.

Vasu Charitram.

Size 21×33. Pages: 98. Lines 30 on a page. Condition: good.

Note: Same as the previous one, but incomplete; contains only up to Malaippadalam.

163. வசு சரித்திரம் (நூல் எண் 679)

அளவு: 21 × 33. வரிகள்: 32.
பக்கங்கள்: 175. நிலை: மிகக் கிலமாக உளது.
677 எண்ணின் படியே.

Vasu Charitram.

Size 21×33. Pages: 175. Lines 32 on a page. Condition: much injured.

Note: Same as the previous item but in an injured condition.

புராணங்கள்

164. வள்ளியம்மை புராணம் (நூல் எண் 686)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 207. நிலை : பழமை.

குறிப்பு : இது திருச்செந்தூரின் சிறப்பையும், கந்தபுராணக் கருத்தையும் விளக்கி வள்ளியம்மை திருமணத்துடன் முடிவுறுகிறது. நூலாசிரியர் **சரதையூர்க் கணக்கராகிய** புலிப்பாகை மூர்த்தியென இந்நூற் செய்யுளால் அறியக் கிடக்கிறது. 60 சருக்கங்களையும் 1345 செய்யுட்களையும் கொண்டது. இந்தப் பிரதியில் இந்நூல் முழுதும் இருக்கிறது.

தொடக்கம் :

உ
சிவமயம்
வள்ளியம்மை புராணம்

கொண்ட லைத்திகழ் வாரிற் குறுலமேல்
மொண்ட லைத்தெறி முத்தை யளத்தியார்
தண்ட லைப்புகழ் நேர்சர தைப்பதி
மண்ட லப்பிள்ளை யாரை வணங்குவாம். க

முடிவு:

மருவலர் குழலாள் கோல வள்ளியார் புராணஞ் செய்தான்
அருள்புரி சருக்கங் காதை யறுபதாம் விருத்தந் தானும்
முருகுசே ராயி ரத்து முந்நூற்று நாற்பத் தைந்தாய்த்
தருபுலிப் பாகை மூர்த்தி சரதையூர்க் கணக்கன் ருனே.
கருஉ

மாரியும் பெய்யப் பாரில் மணிதரும் வீறி வாழச்
சீரிய செங்கோல் மன்னன் செகதலஞ் செழிக்க வாளப்
பாரிய செந்தில் வாழும் பரமனுர் குமார தேவி
பூரிய தனத்தாள் வள்ளி புராணமே செப்பினேனே. கருச

வள்ளியம்மை திருக்கல்யாணச் சருக்கம் முற்றும்.

ஆக விருத்தம் 1416
சுப்பிரமணியர் துணை
வள்ளியம்மை துணை
திருச்சிற்றம்பலம்

Valliammai Puranam.

Size 21×33. Pages: 207. Lines 28 on a page. Condition: old.

The Ms. contains 60 sargams and 1345 verses written by one Pulipagai Murthi.

165. திருஅம்பர்ப் புராணம் (நூல் எண் 305)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 144. நிலை : இலமாக உளது.

குறிப்பு : அம்பர் என்பது சோழநாட்டில் பேரளத்திற்கு அண்மையில் உள்ள பாடல் பெற்ற தலம். இந்நூல் ஆசிரியர் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். 15 படலங்களையும் 1007 செய்யுட்களையும் கொண்டுள்ளது. இறுதியில் நைமிசப் படலம் 269 பாடல்முதல் 308 பாடல்களுக்கு உரை உள்ளது. நூல் நிலைய வெளியீடாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இறுதியில் திருஅம்பர் இராமலிங்கம் பிள்ளை சாதகமும் 58 பாடல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
ஹரி : ஓம்
திருச்சிற்றம்பலம்
திருஅம்பர்ப் புராணம்
பாயிரம்

சீர்பூத்த மனங்கவரும் பொறிதனைச்சார்ந் தொன்றியமர்
திறமு நாளும்
ஏர்பூத்த விடுதல்பிறி தொன்றனுக்கின் மையுமிதயத்
தெண்ணி யந்த
நீர்பூத்த பொறியுவப்ப வுரிவிடய மிடமணுங்கூர்
நிலந்து மூாவும்
வார்பூத்த புழைத்தடக்கை யொருகோட்டு வாரணத்தை
வணங்கி வாழ்வாம்.

முடிவு :

சீர்பூத்த வம்பர்நகர் வாழ்கவருட் சைவர்குழாஞ்
 செழித்து வாழ்க
வார்பூத்த பொம்மன்முலை வம்புவனப் பூங்குழலாள்
 வாழ்க கொன்றைத்
தார்பூத்த தடநெடுந்தோட் பிரமபுரீ சுரர்வாழ்க
 தாவா வன்னூர்
ஏர்பூத்த மன்றுணடஞ் செயவெடுத்த குஞ்சிதத்தா
 ளென்றும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

கந்தன் வழிபடு படலம் முற்றிற்று.

ஆகப் பாயிரமுள்படப் படலம் 15க்குக் கூடிய திருவிருத்தம் 1007.

அம்பர்ப் புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

Thiru Ambar Puranam.

Size 21×33. Pages: 144. Lines 28 on a page. Condition: injured.

Note: The Ms. contains 15 padalams and 1007 stanzas written by Mahavidwan Meenakshisundaram Pillai. Ambar is a Siva sthalam near Peralam Thanjavur district.

There are notes for 40 verses (269 to 308). The book has been published by the Library in 1965 under S. No. 38.

166. திருஅம்பர்ப் புராணச் சிறப்புப் பாயிரங்கள்

(நூல் எண் 35)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 6. நிலை ; இலமாக உளது.

குறிப்பு: ஆறு தாள்களைக் கொண்டது. சவேரிநாதப் பிள்ளை, கூறைநாட்டுக் கனகசபாபதி ஐயர் ஆகியோர் அளித்த சிறப்புப் பாயிரங்கள் அடங்கியது இப்பிரதி. அம்பர் என்னும் தலத்திற்கு

மகாவித்துவான் பிள்ளையவர்கள் இயற்றிய புராணத்திற்குரிய சிறப்புப் பாயிரங்கள் இவை. அச்சாகவில்லை. அம்பர்ப் புராணம் நூல் நிலைய வெளியீடாக வந்துள்ளது.

கனகசபாபதி ஐயர் விருத்தம்—9

சவேரிநாதப் பிள்ளை விருத்தம்—6

தொடக்கம் : திருவம்பர்ப்புராணச் சிறப்புப்பாயிரங்கள். கூறைநாட்டுச் சாமிநாதையர் குமாரர் கனகசபை ஐயர் இயற்றியது.

விருத்தம்

ஏர்மேவு மதியமும்விண் மணியுமெவ னருளால்வி ண்ணியங்கா நின்று
பார்மேவும் புறவிருளைப் பாற்றியொளி பாலிக்கும் பண்பு வாய்ந்த
தார்மேவும் ஐம்பூத நிலையுமெவ னருளதனுற் றவாது மேவும்
வார்மேவு மியமான னெவனருளாற் கேவலமா தியினின் வாழும்.

முடிவு : இந்நூலாசிரியர் மாணுக்கருளொருவராகிய காரைக் கால் ம-ா-ா-ஸ்ரீ சவேரிநாதம் பிள்ளையவர்கள் இயற்றியவை.

சீர்பூத்த நாவலருங் காவலருஞ் செழுமறைதேர் திறலு ளாரு
நார்பூத்த ஞானநிறை மாதவரும் போதவரு நாளும் போற்ற
பார்பூத்த நம்பெருமான் பன்றலமான் மியந்தமிழாற் பாட வல்லான்
வார்பூத்த சிரகிரிவாழ் மீனுட்சி சுந்தரநா வலவ ரேறே. 6.

திருவம்பர்ப் புராணத்துச் சாற்றுக்கவிகள் முற்றிற்று.

பிரமலிங்கப் பெருமாள் துணை

வம்புவனப் பூங்குழலம்மை துணை.

Thiru Ambar Puranam (Sirappu Payirangal)

Size 21×33. Pages: 6. Lines 20 on a page. Condition: injured.

Note: This Ms. contains the verses of Sirappu Payiram composed by Saverinatha Pillai and

Kanakasabhapathi Iyer in praise of Ambar-Puranam written by Mahavidwan Meenakshi-sundaram Pillai. Ambar Puranam has been published by the Library.

167. ஆப்பனூர்ப் புராணம்-உரை நடை

(நூல் எண் 88a)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள் : 6. நிலை : இலமாக உளது.

குறிப்பு : பாண்டி நாட்டில் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகிய ஆப்பனூர்ப் புராண உரைநடை இந்த நூல். சந்திர சேனச் சருக்கம், பாற்கரச் சருக்கம், ஆப்பனூர்ச் சருக்கம், இடவபுரச் சருக்கம், அன்ன விநோதச் சருக்கம், குபேரச் சருக்கம், சுதரிசனச் சருக்கம், அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் ஆக 8 சருக்கங்கள் சுருக்கமாக உரைநடையில் கூறப் பெற்றுள்ளன.

தொடக்கம் :

ஆப்பனூர்
சந்திரசேனச் சருக்கம்

அவந்தி நகர்ச் சந்திரசேன மகாராஜன் ஒரு பார்ப்பனியைச் சேர விரும்பி அவள் கணவனைக் கொன்றுவது அவனைக் கொணர்க வென்று தன் மந்திரி சுகுணன்பாற் சொல்ல, அமைச்சனவனைக் கொன்று அவளை அரசன்பாற் புகுத்தலும் அப்பிரமகத்தி அரசனையு மந்திரியையுமலைப்ப வருந்தி, அகத்தியோபதேசத்தா லிடபதீர்த்தம் வயிரவக் கடவுளுக்குப் பிரமஹத்தி நீக்கியதை உணர்ந்து அமைச்சனோடு அரசனு மத்தீர்த்தத் தாடிச் சிவ தரிசனஞ் செய்து கயிலை புக்குய்ந்தார்கள்.

முடிவு : 1008 நூதன கிருகங்களைக் கட்டி அந்தணர்க் களித்துத் துன்ப நீங்கித் துந்துமாரனென்னும் பெயருடை யனும் மெய்பேசி வாழ்ந்தான்.

Appanur Puranam.

Size 21×17. Pages: 6. Lines 22 on a page. Condition: injured.

Note: The Ms. contains 8 sargams written in prose and relates to the sthalam Appanur.

168. திருவாலவாயுடை நாயனார் திருவிளையாடற் புராணம் (நூல் எண் 412)

அளவு : 21 × 33. வரிகள் : 36.
பக்கங்கள் : 280. நிலை : மிகச் சிதிலம்.

குறிப்பு : திருவாலவாயுடை நாயனார் திருவிளையாடற் புராணம் என்னும் நூல் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. ஆலவாய் இறைவன் ஆடிய திருவிளையாடல் களைப்பற்றிக் கூறுவது இந்நூல். 1906ஆம் ஆண்டில் டாக்டர் ஐயர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பிரதி மிகச் சிதிலமாக விருப்பதால் தொடக்கம் முடிவு எழுத இயலாமல் இருக்கிறது.

Thiruvalavayudai Nayanar Thiruvilaiyadal Purnam.

Size 21×33. Pages: 280. Lines: 36 on a page. Condition: much injured.

Note: The Ms. is in an injured condition; written by one Perumpatrappuliyur Nambi. The book has been edited and published by Dr. Iyer.

169. ஆற்றூர்ப் புராணம் மூலம் (நூல் எண் 59)

அளவு : 21 × 33. வரிகள் : 40.
பக்கங்கள் : 40. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : மாயூரத்திற்கு வடக்கேயுள்ள ஆற்றூர் என்னும் சிவஸ்தலத்தைப்பற்றி மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் 1960ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட புராணத் தின் பிரதி. ஆற்றூர் என்பது ஒரு வைப்புத்தலம். இந்நூல் ஐயரவர்களால் 1835ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றது.

தொடக்கம் :

சிவமயம்

இப்புராணம் செய்வித்து அச்சுப் பதிப்பித்தவர் சிறப்பு. இச்செய்யுட்கள் கும்பகோணம் புரோவின்சியல் கர்லேஜுத் தமிழ்ப் பண்டிதர் தியாகராசச் செட்டியாரவர்களால் இயற்றப் பட்டன.

சீர்பூத்த மணிகொழிக்கும் பொன்னிநா டெனப் பொலியுஞ்
சென்னி நாட்டி
லேர்பூத்த வளஞ்செறியும் கலியாண சோழபுர
மெனும்பே ரூரிற்
பார்பூத்த தமிழருமை யறிபவனு முகில்விளர்க்கும்
படிச வானு
வார்பூத்த கார்காத்தார் குலம்விளங்க வவதரித்து
வாழும் வள்ளல்

முடிவு :

நிறைபுகழ்ச் சொன்ன யான நிரோதனப் பெருமான் வாழ்க
அறைபல புவன மீன்ற வஞ்சனக் கண்ணி வாழ்க
மறைபல முழங்க வானோர் மற்றையர் வாழ்த்த வெங்கள்
குறையற மன்று ளாடுங் குஞ்சிதப் பொற்றாள் வாழ்க !

முனிவர் முதலியோர் பூசித்த படலம் முற்றியது.
ஆகப் படலம் 15க்குத் திருவிருத்தம் 525
ஆற்றூர்ப் புராணம் முற்றியது.
சிவன் செயல். சிவமயம்.

Atrur Puranam (Text)

Size 21×33. Pages: 50. Lines 40 on a page. Condition: injured.

Note: The Ms. contains the text of Atrur Puranam relating to Atrur (a Siva sthala) in Thanjavur District. The Puranam was written by Meenakshisundaram Pillai in 1860 and was edited and published by Dr. Iyer in 1935.

170. திருவானைக்காத் தலபுராணம் (நூல் எண் 417)

அளவு : 21 × 17. வரிகள் : 26.
பக்கங்கள் : 118. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவானைக்கா என்பது திருச்சிக்கு அண்மையி லுள்ள பாடல் பெற்ற சிறந்த தலம். இத்தலத்தின் மகிமைகளைப் பற்றிக் கூறுவதே இப்புராணம். இந்நூல் கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றது. முதல் பக்கத்தில் திருவானைக்காத் தலபுராணம் வரகனேரி சவரிமுத்தா பிள்ளை என எழுதி யிருக்கின்றது. அச்சாகியுள்ளது. பூர்த்தி.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

திருவானைக்காத் தலபுராணம்

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த
நாயகனுர் நிருதர் வாழுஞ்
சலம்போற்றும் மதில்பொடித்த ஞான்றினிய
பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென்
றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமமு
விளங்களிற்றை வணக்கம் செய்வாம்.

முடிவு :

அருள்வளர் சம்பு மூலத் தமுதலிங் கேசர் வாழ்க
வருமகி லாண்ட வல்லி வாழ்கவே தாக மத்தின்
பொருணிலை வழாது வாழ்க புகழ்திரு வானைக் காவாந்
திருநகர் வாழ்க வாழ்க தேயங்க ளனைத்து மாதோ. உ0
அமிர்தலிங்கேசர் அருண்முறை செய்த படலமுற்றும்.
படல அட்டவணை காணப்படுகிறது.

ஆகப் படலம் 23க்குப் பாயிரமுள்படத் திருவிருத்தம் 1455. 1867ஆம் ௵ சனவரி ௴ 23 உக்குத் தமிழ் அட்செய ௵ தைமீ 12உ புந்தி வாரத்தில் திருவானைக்காத் தலபுராணம் எழுதி முடிந்தது.

Thiruvanaikka Sthala Puranam

Size 21×17. Pages: 118. Lines 26 on a page. Condition: good.

Note : This Ms. contains a complete text of Thiruvanaikka Puranam written by Kachiappa Munivar. Printed.

171. திருவிடைக்கழித் தலபுராணம் (நூல் எண் 418)

அளவு : 21 × 33. வரிகள். : 25.
பக்கங்கள் : 536. நிலை : பழமை.

குறிப்பு : திருவிடைக்கழி என்ற தலம் சோழ நாட்டில் உள்ளது. 'மாயூரத்திலிருந்து 16 மைலில் உள்ளது.

இங்கே முருகப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறார். கர்ப்பக்கிருகத்தில் முருகப் பெருமானுக்குப் பின் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இங்கே உள்ள அம்பிகையைத் தெய்வயானை என்று சொல்கிறார்கள். தலவிருட்சம் குரா மரம். சேந்தனார் திருவிசைப்பா இத்தலத்து முருகனைப் பற்றியது. திருப்புகழ்ப் பாடல்கள் பெற்ற தலம் இது. இந்நூல் அவ்வூர் மகிமைகளையும், ஆங்குக் குடிகொண்டுள்ள முருகன் சிறப்புக்களையும் கூறுவது. இத்தலத்தைப் பாபநாசத் தலம் என்பர். இப்புராணம் **குரவை லிங்கர்** என்பவரால் இயற்றப் பெற்றது என்பது செய்யுள் 31ஆல் அறியப் பெறுகின்றது. 2878 செய்யுட்கள் கொண்டது. இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது.

தொடக்கம் :

உ

திருச்சிற்றம்பலம்

திருவிடைக்கழி ஸ்தல புராணம்

கடவுள் வணக்கம்

திருவருள் பரவும் ஞானச் சித்திவெண் முத்தி யாவும்
வருமருள் பாவுக் கான மகிழ்விடைக் கழியில் வாழும்
பொருவருள் பாவ தானப் போதக னுதி மீதார்
பெருவருள் தருமைஞ் ஞாற்றுப் பிள்ளைதாள் உள்ளம்
வைப்பாம்.

செய்யுள் : 31

காண்டமொரு மூன்றதனுட் டொகுதி யாகிக்
கனச்சருக்கம் பதினெட்டாய்க் கதித்த பேதம்
பூண்டவிசை விருத்தமூவா யிரத்து நாறுய்ப்
புனிதனயன் மால்வணங்கப் புவனம் யாவும்
தாண்டுபுகழ் விடைக்கழியிற் புராணந் தன்னைச்
சாற்றினன்முத் தமிழ்ப்பெரியோர் சரணப் போதை
யீண்டுசிரந் தனிற்றரிக்கு மறிவின் சைவத்
தெழிற்குரவை லிங்கனெனு மியல்பி னோனே.

முடிவு :

செவிப்புலன்கள் நிறைந்தடியோந் தீவி னைதீர்ந்
திடரழிந்தோஞ் செவ்வே லண்ணல்
புவிப்புலனூர் மகிழ்வனத்தில் பொருந்தியபின்
னிவன்றுளைப் பூசித் தேத்தித்
தவிப்பகற்று மவர்களெவர் சாற்றெனலு மாதவர்க்குத்
தயவாற் சூதன்

அவிப்பலனூர் பராசரன்றன் சுதரைவர்
அருச்சித்த தறைய லூற்றுன்
பாவந்தீர்த்த சருக்கம் முற்றும்.

ஆகச் சருக்கம் 27க்கு விருத்தம்–2878
திருவிடைக்கழித் தலபுராணம் முற்றும்.
சண்முகன் றுணை.

Thiruvidaikkazhithala Puranam.

Size 21×33. Pages: 536. Lines: 25 on a page. Condition: old.

Note: The Ms. contains 2878 verses composed by one Kuravai Lingar. This is a sacred place where a temple for Lord Muruga is situated. This is near Mayuram in Thanjavur district.

172. இரத்தினகிரிப் புராணம் (நூல் எண் 62)

அளவு 21 × 17. வரிகள் : 12.
பக்கங்கள் : 124. நிலை : பழமை.

குறிப்பு : திருச்சி மாவட்டத்தில் உள்ள வாட்போக்கி என்னும் பாடல் பெற்ற தலமே இரத்தினகிரி. இதனை வாட்போக்கிப் புராணம் என்றும் கூறுவர். "காலைக் கடம்பர் மத்தியானச் சொக்கர் அந்தித்திரு ஈங்கோய் நாதர்" என்ற பழமொழி காவேரிக்கு இரு கரையிலும் உள்ள மூன்று தலங்களை ஒரே நாளில் தரிசிக்கும் வழக்கத்தைப் புலப் படுத்துகிறது. மத்தியான்ன காலத்தில் தரிசிக்கும் சொக்கர் என்பது இத்தலத்துச் சிவபெருமானை. இத்தலத்தின் மகிமையை எடுத்துக் கூறுவது இப் புராணம். மூன்று ஆசிரியர்களால் பாடப் பெற்றது. இப்பிரதியில் தென்கமலை வைத்தியநாத தேசிகர் இயற்றிய பகுதியில் 9ஆவது உரோமசர் பூசித்த சருக்கம் 21ஆம் பாடலுடன் அபூர்த்தியாகவுளது. பிற இருவர் பாடிய பகுதிகள் பிரதி செய்யப்பெறவில்லை. அபூர்த்தி. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
வாட்போக்கியெனும் இரத்தினகிரிப் புராணம்

கடவுள் வாழ்த்து
விநாயகக் கடவுள்

பெரும்புவன மெவற்றினையும் பெற்றதொரு சிற்றுதரக்
கரும்பினொடு மொருமுக்கட் கனியும்வீற் றிருந்தருளத்
திருந்துமொளி மாணிக்கத் திருமலையிற் சிறந்தென்று
மிருந்தருளும் வேழமுக னிணையடித்தா மரைபணிவாம்.

முடிவு :

கூறுதற் கரிதாய் நீசெய் கொடியவெம் பாவத் தாலே
வேறொரு வழியு மின்றால் விளைத்தவத் தீமை தீர
வாறெதிர்ப் படுத லாலே யண்ண றன் கருணை தன்னாற்
பேறுதந் திடுது மென்னாய் பெருந்தவ னுடன்கொண்
டேற்றான் 19

Ratnagiri Puranam.

Size: 21×17. Pages: 124. Lines: 12 on page. Condition : old.

Note : The Ms. relates to the Puranam of the sthalam Ratnagiri in Tiruchi, mentioned as Vatpokki in Thevaram. Three authors have written this Puranam but only a portion written by one of the authors viz. Vaidyanatha Desikar has been copied.

173. இறைவாசநல்லூர்ப் புராணம் (நூல் எண் 84)

அளவு : 21 × 17. வரிகள் : 20.
பக்கங்கள் : 262. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருமுனைப்பாடி நாட்டைச் சார்ந்த இறைவாச நல்லூர் என்னும் தலத்தின் புராணம். புராணத் திருமலைநாதர் இயற்றியது. எலவானசூர் என்று இப்போது வழங்கும் ஊரே இறைவாசநல்லூர். திருமுதுகுன்றம் வீரசைவ சுப்பராய தேசிகர் இயற்றிய உரையுடன் கூடியது. 'திருக்கோவலூர் போர்டு ஹைஸ்கூல் முன்னைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரான திருவெண்ணெய்நல்லூர் திரு வடிவேல் முதலியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்றது. 1945' என்று இதன் முகப்புப் பக்கத்தில் காணப்பெறுகின்றது. முதல் 22 பக்கங்களில் காப்பு, கடவுள் வணக்கம், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, அருச்சனைச் சருக்கம் 11 பாடல் வரை உரையுடன் எழுதப்பெற்றுள்ளது. 29-ஆம்

பக்கத்துக்குமேல் மீட்டும் காப்புமுதல் இறுதிவரை உள்ளது. 9 சருக்கமும் 376 செய்யுட்களும் கொண்டது.

தொடக்கம் :

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

எலவானுசூர் என வழங்கும் இறைவாசநல்லூர்த் தலபுராணம்.

காப்பு

விநாயகர் வணக்கம்

கலிவிருத்தம்

வேக மாநெறி சேரும் வினைகளுந்
தாக போகம் விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியி னுல்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

இதன் பொருள் : அதிதீவிரமாகத் துன்ப மார்க்கங்களினுலே வரும் கொடுமைகளும், ஆசை மிகுந்த போகத்திலே நீங்காத வருத்தமும் அதனுலே விருத்தியாகிய துயரத்தைத் தராநின்ற சம்சாரமாகிய சமுத்திரத்தினுலே வரும் துக்கங்களும் நீக்கத், தக்கதாகக் கஜமுகத்தினையுடைய மகாகணபதியைத் தோத்திரம் செய்வாம் என்றவாறு.

முடிவு :

இறைவாசநல்லூர்த் தல புராணம். விழுப்புரம் இராம சாமிப் பிள்ளை அவர்கள் 16-10-1935 எழுதிய பிரதி ஒன்று. ஷியார்குமாரர் பழனியாண்டிப்பிள்ளையவர்களால் 3-12-1945இல் பெற்று வந்தது. அது தெளிவுபெற இல்லாமையால் இறைவாச நல்லூர்க் கணக்கு, தேங்கப் பெருமாள் பிள்ளை அவர்கள் ஓலைச் சுவடியை ஷியார் குமாரர் சிவசண்முகம் பிள்ளை அவர்களிடம் போஸ்டு மாஸ்டர் நாராயணசாமி பிள்ளை அவர்கள்மூலம் பெற்றுவந்து பிரதி செய்யப் பெற்றது. எழுதியது திரு வடிவேல் முதலியார், தமிழ்ப் பண்டிதர். திருக்கோவலூர். 21-2-46.

Iraivasanallur Puranam.

Size : 21×17. Pages: 262. Lines 20 on a page. Condition : good.

Note : The Puranam was written by Purana Thirumalai Nathar for the sthalam Iraivasanallur known as Elavanasur. Veerasaiva Subbaraya Desikar has written a commentary on this.

174. உத்தரகோசமங்கைப் புராணம் (உரை நடை)
(நூல் எண் 88)

அளவு : 21 × 17. வரிகள் : 22.
பக்கங்கள் : 10. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : உத்தரகோசமங்கை பாண்டி நாட்டுத்தலம். மாணிக்கவாசக சுவாமிகள் அருள் பெற்ற இத்தலத்தின் வரலாற்றை உரைநடையில் கூறுவதே இப்பிரதியாகும். இந்தப் புராணத்தில் ஒன்பது அத்தியாயங்கள் காணப்படுகின்றன. வேதமித்திரன் சுவர்க்கமடைந்த அத்தியாயம்முதல் வலைவீசு மத்தியாயம் வரை உளது. இதனுடன் 88a ஆப்பனூர்ப் புராணம், 88b திருப்பரங்கிரிப் புராணம் ஆகியவையும் உள்ளன. அபூர்த்தி.

தொடக்கம் :

உ

உத்தரகோச மங்கைப் புராணம்
வேதமித்திரன் சுவர்க்க மடைந்த அத்தியாயம்

கேரள தேசத்தில் பிருகு குலத்தில் உதித்த வேதமித்திரன், தகுதி அல்லாதவனுக்கு வேள்வி செய்து வைத்ததனால், பிரமராக்கதனாய் விந்தமலைச் சுரத்துத் திரிந்தான். அவன் காசிக் காவடி கொண்டுவரும் இரு வேதியரை உண்ண வந்தபொழுது அவர் சொன்ன மங்களநாதர் சரிதம் செவிப் புக்கவுடன் தேவவுருப் பெற்று அவர்களை வணங்கினான்.

முடிவு : வலைவீசு மத்தியாயம்

நீ சொன்ன மொழியை நிறைவேற்றென்று பெருமான் சொல்லச் சிறந்த மகளைக் கொடுத்தான். அவளைப் பெருமான் கைப்பற்றியவுடன் பிழைத்தாள். பின் மாமன் துதிப்ப, மாமியைப் பிழைப்பித்தான். அவ்வூரந்தணர் மிகச் சிறந்தோர்கள்.

Uttarakosamangai Puranam

Size : 21×17. Pages : 10. Lines 22 on a page. Condition: injured.

Note : The Ms. contains nine chapters beginning from Vedamitran svargam adainda adhyayam.

175. திருவுத்தரகோசமங்கை ஸ்தலபுராணம்

(நூல் எண் 306)

அளவு : 21 × 33. வரிகள் : 20.
பக்கங்கள் : 80. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பாண்டி நாட்டில் வைகை ஆற்றங்கரையில் உள்ள பாடல் பெற்ற தலம் திருவுத்தரகோசமங்கை. இந்த நூல் உரைநடையில் இருக்கிறது. இத்தலத்தை வியாக்ரபுரம் என்பர். இப்புராணம் பவிஷ்ய புராணத்தில் நந்திகேசுவரர் சனத்குமாரருக்கும் சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்க்கும் சொன்னதாக உள்ளது. இப்பிரதியில் இரண்டு பக்கங்கள் பூர்த்தியாகவில்லை. அபூர்த்தி.

தொடக்கம் : நைமிசாரண்ணிய மெனப்பட்ட வனத்தில் பிரம்ம தேவனுடைய பிறப்புக்கள் கோடி, இறப்புக்கள் கோடி கண்டவர்களாய், தேவாமிர்தங்களைப் பொசித்துக்கொண்டு காமக்குரோதம் லோப மோக மதமாச்சிரியங்கள் யெவளவு மில்லாதவர்களாய், பிரம்மசாரி வானப்பிரத்தன் சன்னியாசியான பெரியோர்கள் சடாமகுடங்களும் சிரமுண்டிதங்களாகவும், மரவுரி கிஷ்ஷுசனம், புலியாசனம் தெற்பாசனங்களை யுடையவர்களாய். பிரமா விஷ்ட்டுணு, ருத்திரன், சதாசிவன், மயேசுரன், பரஞ்சோதி முதலான தேவதைகளையும் உபாசனம் செய்த பெரியோர்களாய்......

முடிவு : இந்த விக்கிரமபுரத்துக்கு வடக்கு, காதவழியில் போய்க் கலியாணம் செய்யவேணுமென்று சொல்லக் கேட்டு அந்தப்பாவன தன் இனத்தாருடனே வந்து கலியாண மண்டபம் சோடிச்சு வருகிற செனங்களுக்கெல்லாம் விடுதியள் போட்டு விட்சு மகர சங்காரமாக அலங்கிறுதஞ் செய்து சூரியனைப்போல தீவெட்டி பிரகாசிக்கச் சந்திரனைப் போல பகவத்தி ...... நிற்க சாம்பிருணி வத்தியள் அங்குகங்கு நிறுத்தி வைத்......உரைமுரை யார் புழை சூழ. நதிரைசேர் மடந்தைக்கி.

Thiru Uttarakosamangai Sthala Puranam

Size 21×33. Pages: 80. Lines 20 on a page. Condition: good.

Note : This is in prose from and relates to Thiru Uttarakosamangai which is near Ramnad Incomplete.

176. திருவேடகப் புராணம் (நூல் எண் 433)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 108. நிலை : பழமை.

குறிப்பு : திருவேடகம் என்பது பாண்டி நாட்டில் மதுரைக்கு அண்மையில் 8 கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தை வில்வாரண்யத் தலமென்பர். திருஞானசம்பந்தர் வையையாற்றில் இட்ட ஏடு எதிரேறிச் சென்றடைந்த தலம் இது. இத்தலத்திற்குச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் இயற்றிய புராணமும் உளது. இந்நூல் 17 ஆம் அத்தியாயமாகிய ஏடகப் பெயர் வரலாறுரைத்த அத்தியாயத்தில் 52ஆம் பாடலுடன் குறையாகவுளது. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருவேடகப் புராணம்

காதுவென்ற கருந்தடங்கண் மலைமாது பெருங்கருணை
கசிந்துள் ளூறுஞ்
சூது வென்ற முலைக்கலசத் தமுதுவள்ளந் தனில் வாங்கித்
துய்த்த பிள்ளை
யேதுவென் றில்லாத வீசனிசை எழுதி வையை
யிட்ட ஏட்டின்
வாதுவென்ற வாரணத்தின் போதுவென்ற வன்கழற்கால்
வணக்கஞ் செய்வோம் க.

முடிவு :

இனைய வாறிசைப் பதிக்கதை ஞானசம் பந்தர்
புனைய செஞ்சடை யண்ணலு மிலிங்கத்திற் போத
நினையு மன்னனும் தேவியார் நின்றமந் திரியார்
அனைவ ரும்மகிழ் வெய்தியே யரகர வென்றார். 52
நித்தனாரு டன்னிறு லேடக நீங்கிக்
குத்தி ரம்மிகு மமணரைக் கூவியே கூறுஞ்
சுத்த ....

Thiruvedagapuranam

Size 21×33. Pages: 108. Lines 28 on a page. Condition: old.

Note : This contains only 52 verses in the 17th chapter; printed.

177. திருவேரகப் புராணம் (நூல் எண் 434)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 82. நிலை : பழமை.

குறிப்பு : திருவேரகம் என்பது சுவாமிமலை. நூலாசிரியர் சாமிநாததாசன். அச்சானது. இறுதியில் படல அட்டவணை உள்ளது. பாயிரச் சருக்கமுதல் தீர்த்தச் சருக்கம் வரை 11 சருக்கங்களும், 499 செய்யுட்களும் உள்ளன,

தொடக்கம் :

உ
திரு ஏரகப் புராணம்
காப்பு

எண்கொ டுத்தம நெஞ்சக மெண்ணிய
வண்கொ டுத்த வரம்பெறு வாய்மையாற்
கண்கொ டுத்த கணபதி தாண்மலர்ப்
பண்கொ டுத்த மொழியிற் பரவுவாம்.

முடிவு :

தீர்த்தச் சருக்கம்

ஆதி யார்திரு வஞ்செழுத் தன்புடன் வாழி
பூதி சாதன முருத்திரம் புனைபவர் வாழி
நீதி யாகிய வேந்தனு மறங்களும் வாழி
மாது சேர்திரு வேரகம் வாழிவா ழியவே.

தீர்த்தச் சருக்க முற்றிற்று.
ஆகச் சருக்கம் 11-க்குத் திருவிருத்தம் 499.

Thiruveraga Puranam

Size: 21×33. Pages: 82 Lines 26 on a page. Condition: old.

Note : The Ms. contains 11 sargams and 499 verses. Author: Swaminatha Desikar. This sthalam is the same as Swamimalai in Thanjavur district.

178. திருவொற்றியூர்த் தலபுராணம் (நூல் எண் 427)

அளவு : 21×33. வரிகள் : 31.
பக்கங்கள் : 163. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவொற்றியூர் சென்னையின் வட எல்லையில் உள்ளது. பாடல் பெற்ற தலம். இது பழைய நூலில் இறுதியில்

சருக்க அட்டவணை உள்ளது. இதில் கடவுள் வாழ்த்திலிருந்து சண்டகோபச் சருக்கம் முடிய 34 சருக்கமும், 1090 பாக்களும் உள. ஆசிரியர் பெயர் விளங்கவில்லை. அச்சில் வந்துள்ள புராணத்தினின்றும் வேறுபட்டது.

உ

சிவமயம்

திருவொற்றியூர்த் தலபுராணம்

பாயிரம்

கடவுள் வாழ்த்து

மணிகொண்ட செழுந்திருப்பாற் கடற்றுயிலும் பசுந்துளவ
மார்பத் தோனும்
கணிகொண்ட நெட்டிதழ்த்தா மரைப்பொகுட்டி லுறையயனுங்
கடவு ளோரும்
பணிகொண்ட குவலயமும் பணிந்தேத்தத் திருநோக்கம்
பாலித் தோங்கு
மணிகொண்ட பெருங்கருணை யாதிபுரி நாதனையா
மகத்துள் வைப்பாம். க

முடிவு :

திங்கள்சேர் அண்ணல் மேவுந் திருவொற்றி யூர்ப்புராணம்
மங்கள மகிமை யம்மா படிப்பவர் மகிழ்ந்து கேட்போர்
அங்கண்மா நிலம்பு ரந்தே யளகையா திபன்தன் செல்வம்
பொங்கவே வாழ்வார் வெள்ளிப் பொருப்புமேற் காணி
கொள்வார். 46

சண்டகோபச் சருக்கம்

ஆகச் சருக்கம் 34க்கு விருத்தம் 1090

திருவொற்றியூர்த் தலபுராண முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

Thiruvottriyur Thala Puranam

Size: 21×33. Pages: 163. Lines 31 on a page. Condition: good.

Note : The Ms. contains 34 sargas and 1091 verses and is different from the printed work under the same title. This sthalam is six miles north of Madras.

179. திருவொற்றியூர்ப் புராணம் (நூல் எண் 428)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 205. நிலை : சிதிலம்.

குறிப்பு : நூல் எண் 427இன் படியே.

Thiruvottriyur Puranam.

Size 21×33. Pages: 205. Lines 30 on a page. Condition: injured.

Note : Same as the previous one.

180. கஞ்சனூர் ஆழ்வார் புராணம் (நூல் எண் 106)

அளவு : 21 × 33. வரிகள் : 22.
பக்கங்கள் : 129. நிலை : மிகக் கிலமானது.

குறிப்பு : கஞ்சனூர் என்பது சோழ நாட்டிலுள்ள காவிரி நதி வடக்கு நோக்கிப் பாயும் தலம். இது சப்தஸ்தலங்களுள் ஒன்று. அரதத்த சிவாசாரியாருடைய வரலாற்றைச் சொல்லும் புராணம். அரதத்தசிவாசாரியார் பிறப்பால் வைணவராக இருந்தவர் பிறகு சைவராகிப் பல வடமொழி நூல்களை இயற்றியுள்ளார். இவருக்குக் கஞ்சனூர் ஆழ்வார் என்ற பெயருண்டு என்பது இதனால் தெரிகின்றது. பவிஷ்ய புராணத்தின் எட்டாம் அத்தியாயத்தின் கருத்தினையொட்டி எழுதப்பட்டதென்று இந்த நூல் கூறும். 12 சருக்கங்களும் 590 செய்யுட்களும் கொண்டது. இந்நூலின் இறுதியில் சருக்க அட்டவணையும் இருக்கின்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
சிவமயம்
கஞ்சனூர் ஆழ்வார் புராணம்
பாயிரச் சருக்கம்

பொன்னின் மாநதி பெருகப் பூரணம்
பன்னு மாகமம் விளங்கப் பாங்குடன்
கன்ன லார்பணை சிறந்த கஞ்சனூர்
மன்னு மாமத களிற்றை வாழ்த்துவாம்.

முடிவு :

வானெடும் புவியும் வாழ்க மறையவர் சைவர் வாழ்க
தேனுவோ டரசர் செங்கோற் சிறந்தநற் குடிகள் வாழ்க

பூணலம் பொருந்தத் திங்கட் பொழிந்துழும் மாரி பெய்க
வானினே றுடையான் பூதி யக்கழும் வாழி வாழி.

ஆழ்வார் கயிலாயம் அடைந்த சருக்கம் முற்றும்.
சருக்கம் 12க்கு விருத்தம் 590.

உ

ஆழ்வார் சப்தஸ்தான தரிசனம் செய்த தல விபரம்.
வெண்பா

மன்னுதிருக் கஞ்சனூர் மாவாலங் காடுடன்
பன்னுதிருக் கோடிகா பாங்குறவே-மன்னும்
திருவா வடுதுறையும் செய்யதிரு மாந்துறையும்
மருமா மங்கலக்குடி யாடுதுறை.

இத்தலந் தனிலேகி யியற் கஞ்ச னூராழ்வா
ரத்தனையே யன்பா வடிபணிந்து—நித்தந்
தொழுதெழுந்து நாயேன்றன் றீவினை யின்றறுத்தாயென்
றழுதழுதே யடிபணிவராயன்.

Kanjanur Azhwar Puranam.

Size : 21×33. Pages: 129. Lines 22 on a page. Condition: much injured.

Note : This Ms. contains the biography of Haradatta Sivacharyar who is known as Kanjanur Azhwar. This contains 12 sargams with 500 verses. No information is available regarding its author or its publication.

181. கஞ்சனூர் ஆழ்வார் புராணம் (நூல் எண் 107)

அளவு : 21 × 17. வரிகள் : 16.
பக்கங்கள் : 191. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 106 இல் உள்ளவையே.

Kanjanur Azhwar Puranam

Size: 21×17. Pages: 391. Lines 16 on a page. Condition: good.

Note : Same as the previous one.

182. திருக்கடந்தைப் புராணம் (நூல் எண் 307)

அளவு : 21 × 17. *வரிகள் :* 20.
பக்கங்கள் : 9. *நிலை :* *நல்ல நிலை.*

குறிப்பு : *திருக்கடந்தையென்பது பெண்ணாகடம் எனவும் வழங்கும். இது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பாடல் பெற்ற தலம். இங்குள்ள திருக்கோயிலைத் தூங்கானை மாடம் என்பர். கஜப்ருஷ்ட விமானம் அமைந்த கோயில். அப்பர் சுவாமிகள் தோளில் சூலம், இடபம் இலச்சினைகள் பொறித் தருளிய தலம். அச்சான புராணப் பிரதியில் கிழிந்துபோன பாகங்களைப் பிரதி செய்தது. 18 பாடல்களே உள. கலிக்கம்ப நாயனார் வாழ்ந்த தலம். ஆசிரியர் சிவஞானபரன்; வேளாளர். அச்சாகியுள்ளது.*

தொடக்கம் :

உ
கணபதி துணை
பாயிரம்
காப்பு

பராபரம் பரையிற் கூடிப் படிவிசும் பெங்கு மோங்கி
நிராமய வடிவ மான நிமலனார் கடந்தை வாழும்
பிரானவர் விபுதர் வேண்டப் பிரளயங் காத்த வீசர்
தராதலத் திந்நா லோங்கத் தந்தியை வணக்கஞ் செய்வாம்.

முடிவு :

தவஞானத் தவர்க்கருளுந் தற்பரனா ருமைக்குரைத்த
நவஞானந் தருகடந்தை நற்றலமான் மியந்தனைத்தத்
துவஞானம் பயில்வேளாண் டொன்மரபிற் றோன்றியசீர்ச்
சிவஞானப் பரன்றமிழாற் செய்துலகோர்க்
களித்தனனால். 18

இவை அச்சுப் புத்தகத்தில் கிழிந்துபோன பாடல்கள்.

Thirukkadandai Puranam.

Size 21×17. Pages: 9. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. is a copy of some pages of the printed book; contains only 18 verses. Thirukkadandai is known as Pennagadam and is in the South Arcot District.

183. கடம்பவனப் புராணம் (பிற்பகுதி) (நூல் எண் 109)

அளவு : 21 × 33. வரிகள் : 37.
பக்கங்கள் : 37. நிலை : மிகச் சிலமாக உளது.

குறிப்பு : இப்பிரதி மிகச் சிலமாக இருப்பதால் எழுத முடியவில்லை.

Kadambavana Puranam

Size: 21×33. Pages: 37. Lines 37 on a page. Condition: much injured.

Note : The Ms. is in a very injured condition: not capable of being copied.

184. திருக்கடுவாய்க்கரைப் புத்தூர்ப் புராணம் (நூல் எண் 308)

அளவு : 21 × 33. வரிகள்: 32.
பக்கங்கள் : 32. நிலை : சிதிலம்.

குறிப்பு : கடுவாய்க்கரைப்புத்தூர் என்னும் இத்தலத்தை ஆண்டான்கோயில் என்றும் வழங்குவர். இத்தலம் நீடாமங்கலம் ரெயில் நிலையத்திலிருந்து 11 கல் தொலைவில் உள்ளது. காசிப முனிவர் பூசித்த தலம். ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. முதல் 18 பாடல்கள் இல்லை. ஒன்பதாம் அத்தியாயத்திற்கு மேல் இல்லை. அபூர்த்தி.

தொடக்கம் :

உ
சிவமயம்

ஸ்ரீ ஆண்டாங் கோயிலென்னும் திருக்கடுவாய்க்கரைப் புத்தூர்ப் புராணம்.

கணபதி ஸகாயம்

இன்ன வளங்கள் பலவும் இலகும் புனல்நாட் டதனின்
மன்னும் வளங்கூ ரிம்மால் வரையில் வந்த பசிய
வன்னம் கனிவோ டரனை அருச்சித் தேத்தும் புத்தூர்
தன்னை நீவிர் வினவிற் றகைமை சான்ற தவத்திர். 19.

முடிவு :

இந்த மான்மியங் கேட்பவர் இறைவர்வாழ் பதத்தை
நந்த லின்றியே யடைவரீ துண்மைநான் மறைதே

ரந்த ஞேத்தம ரேயின்னு மயிமையுண் டறையீர்
சிந்தை யின்புறு மென்றுயர் சூதன்செப் பினனுல். 22.

ஒன்பதாவது காருணியேசர் மகிமையுரைத்த வத்தியாயம் முற்றும்.

Thirukkaduvaikkaraipputtur Puranam

Size: 21×33. Pages: 32. Lines 32 on a page. Condition: injured.

Note : This is an incomplete Ms. containing the Puranam of Kaduvaikkaraipputtur. This place is also called Andan Koil.

185. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்ப் புராணம் (நூல் எண் 353b)

அளவு: 21×33. வரிகள் : 42.
பக்கங்கள் : 18. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : எண் 308இன் தட்டச்சுப் பிரதி. இந்தப் பிரதியில் திருத்தணிகை மும்மணிமாலை, கைந்நிலை ஆகிய நூல்களும் உள.

Thirukkaduvaikkaraiputhur Puranam

Size: 21×33. Pages: 18. Lines 42 on a page, Condition: good.

Note : This is a typewrittern copy of no. 308. Two other works Tiruthanigai Mummani Malai and Kainnilai are also in this Ms.

186. திருக்கருகாவூர்த் தலபுராணம் (நூல் எண் 310)

அளவு : 21×33. வரிகள் : 42.
பக்கங்கள் : 39. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : திருக்கருகாவூர் என்னும் தலம் சோழ நாட்டில் ஐயம்பேட்டை ரெயில்வே நிலையத்திற்குத் தென்கிழக்காக 4 கல் தொலைவில் உள்ளது. வெட்டாற்றின் தென்கரையில் இருக்கின்றது. ஆதரவற்ற ஒருத்திக்கு அம்பிகை மருத்துவம் செய்ததால் கருகாவூர் என்ற பெயர் பெற்றது என்பர். அம்மனுக்கு கர்ப்பரக்ஷகி, கருக்காத்த நாயகி என்ற திருநாமங்கள் வழங்கும். இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது. 9 சருக்கங்களும் 337 விருத்தங்களும் உள்ளன. இவ்வூருக்கு முல்லை வனம் என்ற

பெயர் உண்டு. இதன் ஆசிரியர் அம்பலவாண பண்டாரம். இப்பிரதியின் கடைசிப் பக்கத்தில் ஒவ்வொரு சருக்கத்தைப் பற்றியும் சிறு விளக்கங்கள் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருக்கருகாவூர்த் தலபுராணம்

முன்ன வன்றிரு முல்லைவனப்புகழ்
பன்னு காதையைப் பைந்தமி ழாற்சொல
மன்னு கற்பக வாரண மாமுகன்
பொன்னஞ் சேவடி போற்றி வணங்குவாம்

முடிவு :

வாழி மேக மழைபுவி யந்தணர்
வாழி யானினம் மாமறை யாகமம்
வாழி வேந்தன் வருசிவ பத்தர்கள்
வாழி முல்லை வனத்தரன் காதையே.

புராண மகிமை முற்றும்

ஆக விருத்தம் 337

திருக்கருகாவூர் ஸ்தல புராணம் முற்றுப் பெற்றது. நமச்சிவாய குரு சிவலப்ப குரு பாதந்துணை. அருணிறைந்ததேவர் அம்பலவாண பண்டாரம் குமாரன் செஞ்சடை வேதிப் பண்டாரம் ஸ்தல புராணம் பாடினது.

திருச்சிற்றம்பலம்

Thirukkarugavur Thala Puranam.

Size: 21×33. Pages: 39. Lines 42 on a page. Condition: injured.

Note : The Ms. contains 9 sargams and 337 stanzas with a table of contents at the end. Author: Ambalavana Pandaram. Thirukarugavur is a Sivasthalam near Papanasam in Thanjavur district.

187. திருக்கருகாவூர்ப் புராணம் (நூல் எண் 154b)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 61. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்புராணச் செய்திக் குறிப்புக்கள் எண் 310இன் படியே கொள்க. இதனுடன் காழிக் கலம்பகம் 154a, பாப்பையா பிள்ளை உலாமடல் 154c ஆகிய நூல்கள் உள.

Thirukkarugavur Puranam

Size: 21×33. Pages: 61. Lines 36 on a page. Condition: good.

Note: This is the same as the previous one, In this Ms. are also included Kazhikkalambakam and Pappia Pillai Ula Madal.

188. கருப்பறியலூர்த் தல புராணம் (நூல் எண் 122)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 60. நிலை : சிலமாக உளது.

குறிப்பு ; கருப்பறியலூர்ப் புராணம், திருவிடைமருதூர் அம்பலவாண தேசிகர் திருவாய் மலர்ந்தருளியது என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. இத்தலத்தை மேலைக்காழி, தலை ஞாயிறு என்றும் வழங்குவர். வைத்தீசுவரன் கோவிலுக்கு 5 கல் தொலைவிலுள்ளது. இறைவனுக்குக் குற்றம் பொறுத்த நாதர் என்னும் பெயருண்டு. பாயிரமும் 8 சருக்கங்களும் ஆக 292 செய்யுட்கள் உள. அச்சானது.

தொடக்கம் :

உ
கணபதி துணை

திருவிடைமருதூர் அம்பலவாண தேசிகர் திருவாய் மலர்ந் தருளிய கருப்பறியலூர்த் தல புராணம்.

காப்பு

சித்தி புத்தி திருவரு ளாற்பெறு
முத்தி சொற்பொருண் முற்றும் பலன்பெற
பத்தி யாளர் பரவருள் கற்பக
வத்தி செய்ய வடிமிமல் சேருவாம்.

பாயிரம்

ஆதித்த புரேசர் வணக்கம்

பூமேவு விதிமுதலோர் தினந்தேடும் பரஞ்சோதி புனிதா கார
மாமேவு சிவானந்த மகண்டபரி பூரணமா மத்து ஞானம்
பாமேவு வேதாந்த மலர்திறந்து பார்க்கவரும் பசுந்தேன்
செந்தேன்
காமேவு மாதித்த புரேசனிரு தாட்கமலங் கருதி வாழ்வாம்.

முடிவு :

சீல நிறையுந் தானிகருஞ் சிவவிப் பிரருந் தினம்வாழி
கோல வளமா துமைவாழி குற்றம் பொறுத்த சிவன்வாழி
ஞால மகிழு மாதித்த நகரம் வாழி யந்நகர்ச்சீர்
சால விளங்கும் புராணமெனும் தமிழும் வாழி நிலைபெறவே.

விசித்திராங்கங்கதச் சருக்க முற்றும்.

ஆக விருத்தம் 291

கருப்பறியலூர்த் தலபுராண முற்றிற்று.

Karuppariyalur Thala Puranam

Size: 21×33. Pages: 60. Lines 30 on a page. Condition: injured.

Note : This Ms. contains 292 stanzas (8 sargams) and payiram of Karuppariyalur. Author: Tiruvidaimarudur Ambalavana Desikar.

189. கருப்பறியலூர்த் தல புராணம் (நூல் எண் 123)

அளவு : 21×17. வரிகள் : 40.
பக்கங்கள் : 33. நிலை : இலமாக உளது.

குறிப்பு : 122இல் உள்ளது போன்றது.

Karuppariyalur Thala Puranam.

Size: 21×17. Pages: 33. Lines 40 on a page. Condition: injured.

Note : Same as the previous one.

190. கருப்பறியலூர்த் தல புராணம் (நூல் எண் 586a)

அளவு : 21×33. வரிகள் : 41.
பக்கங்கள் : 56. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : எண் 122இல் உள்ளது போன்றது. பாண்டி மண்டல சதகம் என்னும் நூலும் (586) இதனுடன் உளது.

Karuppariyalur Thala Puranam

Size: 21×33. Pages: 56. Lines 41 on a page. Condition: good.

Note: Same as the previous one. The Ms. also contains Pandimandala satakam.

191. திருக்கருவைத் தல புராணம் (நூல் எண் 311)

அளவு ; 21×33. வரிகள் : 38.
பக்கங்கள் : 9. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : எண் 124இன் தொடர்ச்சி இந்நூலில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக 311a திருப்புடைமருதூர்ப் புராணம் உள்ளது. முதற் பக்கத்தில் இரு புராணங்களுக்கும் படல அட்டவணை உள்ளது.

தொடக்கம் : வேதியனுக்கு நாரதருபதேசம் பண்ணியது.
அருமறை முனிவ னீயு மடியனென் னிடத்திற் போந்த
கருமமே தென்று வேந்தன் கழறலு முனிவன் கூறும்
பொருவிலா விறலோ யுன்றன் புதல்வியர் தம்மி லின்னே
யொருமட மானை நம்பா லுதவிட வேண்டு மென்றான்.

முடிவு :

திருச்சிற்றம்பலம்

14ஆவது-வேதியனுக்கு நாரதருபதேசஞ் செய்து பேறு பெற்ற அத்தியாய முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 911.
கருவைநல்லூர்த் தலபுராணம் எழுதி முற்றிற்று.
பால்வண்ண மகாலிங்கந் துணை.
முகலிங்க மூர்த்தியே துணை.
ஒப்பனை யப்பிகையே
தேவிசகாயம். ஆறுமுகந் துணை.

Thirukkaruvai Thala Puranam

Size: 21×33. Pages: 9. Lines 38 on a page. Condition: good.

Note : This is in continuation of the previous one. Thiruppudai Marudur Puranam is also included in the Ms.

192. கருவைத் தல புராணம் (நூல் எண் 124)

அளவு : 21 × 33. வரிகள் : 39.
பக்கங்கள் : 94. நிலை : நிலமாக உளது.

குறிப்பு : இந்நூல் கருவை என்னும் கரிவலம்வந்தநல்லூர்ப் புராணம். இதன் நூலாசிரியர் தொண்டை மண்டல வேளாள குலத்தைச் சார்ந்த சோ. வீரப்ப முதலியார் அவர்களாவர். சிவகிரி சம்ஸ்தான வித்துவான் திருமலை வேற்கவிராயர் அவர்களும் சேர்ந்து இயற்றியது என்பர்.

"புனிதமிகுந் திருமலைவேற் கவிஞர்பிரான் உரைத்த இந்தப் புராணத்திற்கு" என்பது அகச்சான்று. நாரதர், தேவேந்திரன் பூசித்துப் பேறு பெற்ற தலம். பால்வண்ணநாதர் என்பது இறைவன் திருநாமம். திருக்களாவீசர் என்ற பெயரும் உண்டு. இந்தப் புராணத்தின் தொடர்ச்சி 311ஆம் எண்ணுள்ள பிரதியில் உள்ளது. பாயிரம்முதல் வேதியனுக்கு நாரதனுபதேசம் பண்ணின அத்தியாயம் ஈறாக 18 அத்தியாயங்களையும் 915 விருத்தங்களையும் கொண்டுள்ளது. கடைசி அத்தியாயத்தில் 43 செய்யுட்கள் உள்ளன. இதன் தொடர்ச்சி எண் 311இல் உள்ளது.

தொடக்கம் :

அரி ஓம்
தேவி சகாயம்
ஆறுமுகர் துணை
ஹரி ஓம்
திருச்சிற்றம்பலம்
கரிவலம்வந்தநல்லூர்த் தலபுராணம்
பாயிரம்

சீரியலைச் சஞ்சிதமாம் பொருப்பைத் தேயச்
செய்தவனைக் கைதவமா மிருளை நீக்குஞ்

சூரியனை யாவருக்குந் தோற்று தானைச்
சுருதிமறை யாகமங்கள் தொடர்ந்து காணு
நேரியனை யாரியநா டுடையான் றன்னை
நினைத்தவர்கள் நினைத்தபடி முன்னே நல்கும்
காரியனைக் கரிவலநல் லூரின் மேவு
களவினிமுற் கற்பகத்தைக் கருத்துள் வைப்பாம்.

முடிவு :

மன்னவன் மனுவுக் கேநன் மகவுமாந் தாதா வீன்ற
கன்னியர் ஐம்பா னுக்கு மென்பது கருத்தி னோர்ந்தே
என்னவன் இடத்தி லேதான் சௌபரி யடைந்த போழ்தி
னன்னெறி யுடைய வேந்த னயந்தடி பணிந்து நின்றே. 43

Karuvai Thala Puranam.

Size: 21×33. Pages: 94. Lines 39 on a page. Condition: injured.

Note: The Ms. contains the Puranam of Karuvai which is known as Karivalamvandanallur. Author: Veerappa Mudaliar. This contains 18 chapters and 915 verses.

193. கன்றுப்பூர்ப் புராணம் (சில பாடல்கள்)

(நூல் எண் 139)

அளவு : 21 × 33. வரிகள் : 33.
பக்கங்கள் : 5. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கன்றுப்பூர் என்பது சோழ நாட்டில் திருவாரூர்க் கண்மையில் உள்ள தலம். இறைவனுக்கு நடுதறியப்பர் என்று பெயர். "கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே" என்பது தேவாரம். இந்தப் பிரதியில் 24 பாடல்கள் உள்ளன. சீகாழி யுலா, இனியது நாற்பது, கமலை ஞானசம்பந்தர் குரு தோத்திரம் ஆகிய நூல்களும் இதனுடன் உள.

தொடக்கம் :

உ

கணபதி துணை

கன்றுப்பூர்ப் புராணம்

நடத்தாளை வியக்குமிரு நயனத் தாளை
நம்பர்கன்றுப் பூரில்நடு குறியா ரோர்பங்

கிடத்தானை யன்பர்மனத் திருக்கின் றானை
    எனதுயா னென்பர் மனத்தில்லா தானை
மடற்சலச வனத்தானைந் தொழிலி னானை
    மலையரையன் தவத்தானை வைய மெல்லாம்
படைத்தானை யறமெண்ணான் கியற்று வானைப்
    பராபரைமா துமையானைப் பணிதல் செய்வாம். 1

முடிவு:

வண்டார் குழலணி பெண்பால் மருவிய
    மந்தா கினியிடை நந்தா மெனவொளிர்
தூண்டா மதியினை யண்டா திபர்தொழு
    துங்காவின்மயவர் மங்கா விடமதை
யுண்டா ரிருள்பெறு கண்டா லெனையிட
    ருந்தா வருள்புரி சிந்தா மணிநிகர்
தண்டா மரையடி யொன்று வருணெறி
    தந்தால் நடுதறி யெந்தாய் சரணம். 24

Kanrappur Puranam

Size: 21×33. Pages: 5. Lines 33 on a page. Condition: good.

Note: The Ms. contains only 24 poems of Kanrappur Puranam. Kanrappur is a Siva sthala near Tiruvarur in Thanjavur District.

194. ஸ்ரீகாசியாரணிய மகாத்மியம் (கிரந்தம்)
(நூல் எண் 142)

அளவு : 21 × 17. வரிகள் : 20.
பக்கங்கள் : 155. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது கிரந்த எழுத்தில் உள்ளது.

Sri Kasi Aranya Mahatmyam (Grantham)

Size: 21×17. Pages: 155. Lines 20 on a page. Condition: good.

Note: This a sthala purana in Samskrit and is written in Grantha script.

195. காஞ்சிப் புராணம் (நூல் எண் 143)

அளவு : 21 × 33. வரிகள் : 31.
பக்கங்கள் : 193. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காஞ்சிபுரத்தின் பழைய புராணம் இது. சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் இயற்றிய புராணத்தினின்றும் வேறுபட்டது. கம்பர் புராணமென்றும் குறிக்கப் பெறுகின்றது. நூலின் இறுதியில் "தென் கச்சிக் கச்சாலை என்னும் பாவலன் **கம்பர்** புராணத்தை ஓதிய பண்பினனே" என்றும், "கச்சாலை என்னும் அகளங்கனே" என்றும், "பூரண லெட்சணக் கச்சாலை என்னுநற் போதத்தனே" என்றும் வரும் கட்டளைக் கலித் துறைகளால் இந்நூல் கம்பர் புராணம் என்பதும், ஆசிரியர் கச்சாலை என்பதும் தெரிய வருகின்றன. 12 சருக்கங்களையும் 1275 பாடல்களையும் கொண்டது. இறுதியில் சருக்க விவரம் உள்ளது.

அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

உ

சிவப்பிரகாசனிணையடி துணை
காஞ்சிப் புராணம்
பாயிரச் சருக்கம்

பொன்மதிற் காஞ்சிப் புராணம் செப்புவான்
தொன்மையில் செந்தமிழ்த் தொடையில் யாப்புற
மின்மணிப் பணிபுனை விகட சக்கரச்
சின்மயக் களிற்றினைச் சிந்தை செய்குவாம்.

முடிவு :

முந்து பாயிரம் சிவாலய மரிதிரு முற்றம்
எந்தை தீர்த்தமே யபிதானங் கயிலையெம் பிராட்டி
வந்து மேவுநன் மாநகர்ப் புரம்புகன் மாது
தந்த பூசனை திருவிழாத் தருமமீ தரத்தால்.

சிவசண்முக மெய்ஞ் ஞான தேசிகன் றிருவடி வாழ்க.

எழுதி நிறைவேறியது காமக்கநல்லூர்க் கணக்கு. சோலையப்பப் பிள்ளை குமாரன் கந்தப்பன் எழுதின காஞ்சிப் புராணம். இந்தத் திருமறை சுபயோக சுப கரணத்தில் சுக்கிற வாரத்தில் எழுதி நிறைவேறினது.

Kanchi Puranam

Size: 21×33. Pages: 193. Lines: 31 on a page. Condition: good.

Note: This is an old Puranam relating to Kanchipuram but is different from the one written by Sivagnana Munivar and Kachiapa Munivar. This is also called Kambar Puranam and the author is known as Kachalai. This contains 12 sargas and 1275 verses.

196. காவேட்டி அரங்கநாதன் (நூல் எண் 152)

அளவு : 21 × 33. வரிகள் : 27.
பக்கங்கள் 152. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : காவேட்டி என்பது நாகமலை. கொங்கு நாட்டில் உள்ள இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவராகிய ரங்கநாதர் பேரில் எழுதிய உரைநடையும் இடையே பாடல்களுமாக ஆக்கப்பட்ட நூல் ஆகும் இப்பிரதி.

இதன் ஆசிரியர் வித்துவான் K. வீரராகவன், M. A., B.O.L.

தொடக்கம் :

நாகருல கன்றுய்ய நடுவாய் நின்று
நளிர்கடலைக் கடைந்தமுதம் நல்கிப் பொய்கை
நாகமிடர் கெடுக்கவரை குலைய நண்ணி
நலத்தகுவாழ் வதற்களித்து நல்லாக் காக்க
நாகமது குடையாக்கி நலிந்து வண்டர்
நடுக்ககற்றி நாவலந்தண் பொழிலோர் வாழ
நாகமலை வருமரங்கன் நற்றாள் போற்றி
நமதுவினை விடைகாண நாடு வோமே.

முடிவு : பெருமாள் உற்சவாதி காலங்களில் அததற்குரிய வாகனத்தில் எழுந்தருளி வீதி உலாக் காட்சி அளிக்கும்பொழுது சௌகரியமாகவும் நிதானமாகவும் சிரமமில்லாமல் இருப்பதற்குப்

போத்தனூர், கொட்டாயூர், குள்ளம்பூசாரியூர் முதலிய ஊர்த் தனவான்களாலும், திரு சேஷாத்ரி சர்மா அவர்களைத் தலைமை யாகக் கொண்ட கமிட்டிகளாலும் ரூ. 1000 ரூபாய் ஒரு ஆயிரம் கொண்ட ஸ்டேரிங் சாதனத்துடன் ஒரு வண்டி வழங்கப் பட்டிருக்கிறது.

சென்னையில் உள்ள பிரசித்தி பெற்ற புத்தக ஸ்தாபன மான லிப்கோ கம்பனியாரால் 8-11-67இல் ஸ்ரீ சடாரி காவெட்டி அரங்கநாதருக்கு உபயமாக அனுப்பப்பட்டிருக்கிறது. அரங்கன்மீது அன்பில் ஊறிய அநுபவ வாக்குகளை அள்ளிப் பொழிகிறார்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Kavetti Aranganathan

Size: 21×33. Pages: 152. Lines 27 on a page. Condition: good.

The Ms. is a poem sung on Lord Aranganathar, presiding deity of Nagamalai (Salem District) by Vidwan K. Viraraghavan.

197. காளையார்கோயிற் புராணம் (நூல் எண் 156)

அளவு : 21 × 33. வரிகள் : 28
பக்கங்கள் : 106. நிலை : நல்ல நிலை

குறிப்பு : பாண்டி நாட்டில் சிவகங்கைக்கு அண்மையில் உள்ளது காளையார் கோவில். தேவாரத்தில் **கானப்பேர்** எனப் பாடப்பெற்ற பழம்பதி. சரித்திரப் புகழ்பெற்ற தலம். இவ்வூர்க் கோயில் வருணனை இறைவனுடைய அருஞ்செயல்கள் முதலிய வற்றை அமைத்துப் பாடிய புராணம் இது. 17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அகோர முனிவர் இதன் ஆசிரியர் எனத் தெரிய வருகின்றது. இறுதியில் படல அட்டவணை உள்ளது.

சருக்கம் 15; செய்யுட்கள் 661.

தொடக்கம் :

உ

திருச்சிற்றம்பலம்

காளையார் கோயில் புராணம்

குழவியிளம் பிறையுமரன் மார்பி லேனக்
கோடுமெதிர் பொருத்தமதி குலாய தென்றே

மழவரவங் காப்பவொன்று வாங்க நீங்க
வரப்புணர்த்துப் பலகாலிவ் வகையி னுற்றி
யுழலுமர வுடனுடி நகைத்துத் தாக
முறப்பாகீ ரதிபருகி யுயர்கோ டீர
மழலெனவா னதியிறைக்குங் கானப் பேரு
ரானைமுகச் செல்வனடி யகத்துச் சேர்ப்பாம்.

முடிவு:

மல்லல்வளந் தருகாளை மகிழ்ந்திருக்கும் புகல்வேந்தன்
வாழிவாழி
சொல்லமருந் தொழுகுலத்தோர் மறைதருமந் தொண்டர்குழாஞ்
சுருதி வாழி
எல்லணியும் பதிகாளை யீசனியற் சோமேச
னினிது வாழி
முல்லைநகைச் சூதனமென் முலைமாதும் பதிமேய
முற்றும் வாழி.

காம்பிலி வேந்தனிதாகன் முத்தி யடைந்த சருக்கம் முற்றிற்று.
ஆகச் சருக்கம் 15, திருவிருத்தம் 661.
திருச்சிற்றம்பலம்.

அமுத கவிராயர் குமாரன் வடுகநாதன் எழுதியது.
காளையார் புராண முற்றிற்று.

Kalaiyar Koil Puranam

Size: 21×33. Pages: 106. Lines 28 on a page. Condition: good.

Note: The Ms. contains the Sthala Puranam relating to Kalaiyar Koil known as Kanapper in Thevaram. Kalaiyar Koil is in Ramanathapuram district near Karaikudi. Author: Agora Munivar of the 17th century; contains 15 sargams and 661 stanzas.

198. கும்பகோணப் புராணம் (நூல் எண் 162)

அளவு: 21×33. வரிகள்: 23.
பக்கங்கள்: 223. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருக்குடந்தைப் புராணத்துக்கு முந்திய புராணம்

இது. ஆசிரியர் அகோர முனிவர். கும்பகோணம் என்பது சோழநாட்டில் உள்ள தலம். குடமூக்கு என்று தேவாரத்தில் குறிக்கப் பெறுவது. திருக்குடந்தை என்றும் வழங்கும். 13 சருக்கங்களும், 1106 விருத்தங்களும் உள்ளன. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
சிவமயம்
கும்பகோணப் புராணம்
தலச் சிறப்புச் சருக்கம்

சொல்விரவு தாரகத்தின் தோற்றமே தனதுருவாய்த்
துளைக்கை நால்வாய்
மல்குமணி இசைபாட மதந்துளிக்குங் கடமிவற்றால்
வயக்கை யாவோ
வெல்லுமிழுங் குசபாச மேந்தலால் தன்பாகோ
வெனவோ ரையஞ்
செல்லவயங் கொளியீழுந் திறைகொண்ட குஞ்சரத்தாள்
சென்னி சேர்ப்பாம். (க)

முடிவு :

கேடில் செல்வமும் கல்வியும் புதல்வரும் கிளையும்
பாடல் வண்டறை பழனமு மாயுளும் படைத்தே
ஈடி லாதுயர்ந் தோங்கிய வீசன் மலர்த்தாள்
சூடி யின்பமே துன்னுவீர் பன்னுமிச் சொல்லே.

ஆராவமுதச் சருக்க முற்றும்.

ஆதிகும்பேசுரர் துணை. திருச்சிற்றம்பலம்.

செய்யுள் 1106.

Kumbakona Puranam

Size: 21×33. Pages: 223. Lines: 23 on a page. Condition: good.

Note : The Ms. contains 13 sargams and 1100 verses. This Puranam is older than the one written by Mahavidwan Meenakshisundaram Pillai.

199. குரங்கணில்முட்டப் புராணம் (நூல் எண் 166)

அளவு : 21×33. வரிகள் : 37.
பக்கம் : 108. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : குரங்கணில்முட்டம் என்பது தொண்டை நாட்டில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற தலம். ஸ்ரீ காஞ்சிபுரம் ஏகாம்பரர் கோயிலுக்கு 6 கல்லிற்குத் தெற்கில் உள்ளது. (குரங்கு+அணில்+முட்டம்) வாலியும், அணிலும், காக்கையும் பூசித்த தலம். ஆசிரியர் சதாசிவ முனிவர் என்பது பாயிரம் 19ஆம் பாடலால் தெரிய வருகின்றது. இத்தலத்தின் பெருமை, இறைவன் மகிமை முதலிய சிறப்புக்களுடன் அமைந்தது இப் புராணம். பாயிரமுள்பட 16 சருக்கங்களும் 777 செய்யுட்களும் கொண்டது.

தொடக்கம் :

குரங்கணில்முட்டப் புராணம்
சித்தி விநாயகர் காப்பு

மாதங் கத்தின் குரங்கணின் மாநகர்
மாதங் கத்தின் காதை வழங்கிட
மாதங் கத்தின் வடிவுடை யான்சித்தி
மாதங் கத்தின் மலரடி போற்றுவாம்.

முகிலை யொத்த குரங்கணில் முட்டத்தில்
அகில நாயகன் காதை யறைந்திடச்
செகமெ லாம்புகழ் செல்வக் கணபதிபன்
புகலும் பொன்னடிப் போதுட் டுணையரோ.

முடிவு :

தென்னாட்டில் ஒருவணிகன் பிரதோடந் தனையாற்றித்
தரிசித் தேற்றி
முன்னுளிற் றனையணிலாக் கலிதீர்ந்தா னெனச்சூத
முனிவர் கோமான்
பொன்னுருஞ் சடைமௌலி நேமிவனத் தருந்தவர்க்குப்
புகன்ற காதை
என்னுவில் உரைமாது விளக்கியவா றுரைத்தேன்இத்
தரையின் மீதே.

சந்தான வணிகன் சருக்க முற்றிற்று.

ஆக விருத்தம் 777.

திருச்சிற்றம்பலம்

Kuranganilmutta Puranam

Size: 21×33. Pages : 108. Lines 37 on a page. Condition: good.

Note : The Ms. contains 16 sargams and 777 stanzas, composed by Sadasiva Munivar. Kuranganilmuttam is a sthalam near Kanchipuram.

200. குருகை மான்மியம் (நூல் எண் 167)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 483. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : குருகையென்பது சிறந்த வைணவத் தலமாகிய ஆழ்வார்திருநகரி. 108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. இத்திருப்பதியைப்பற்றிய வரலாறு முதலியவற்றை அமைத்துப் பாடியது இது. இது பாண்டி நாட்டிலுள்ளது. நம்மாழ்வார் அவதாரம் செய்து மங்களாசாசனம் செய்த தலம். இந்நூல் ஆக்கிய காலம் 10 ஆம் பாடலால் கொல்லம் 723 என்றும் அறியப் படுகிறது (கி. பி. 1548). 27 சருக்கங்கள், 2618 பாடல்கள் கொண்டது. பதிகம் 9ஆம் பாடலால் இதன் ஆசிரியர் 'கருக் குலவும் பொழிற் குருகாபுரி வணிகன் சடையன்' என்றும் அறியப்படுகிறது. இறுதியில் அட்டவணை உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
கடவுள் துணை
குருகை மான்மியம்
கடவுள் வாழ்த்து

காப்பு

9 இருக்குமுதற் பனுவலினுல் இயற்றமிழ்தேர் நாவீர
னென்னும் மேன்மை
யருட்புயலைப் புகழ்புலமைத் திருக்குருகைப் பெருமாள்பே
ரன்பு கூருங்
கருக்குலவும் பொழிற்குருகா புரிவணிகன் சடையனிதைத்
தமிழாற் சாற்றித்
திருக்குருகைப் பெருமாள்வண் கவிராச னெனப்புனைபேர்
சிறந்த தொன்றே.

10 அறந்திகழாண் டவையெழுநூற் றிருபான் மூன்றி
லணிகிளர்கார்த் திகைமாத மெட்டில் வாழ்வு
சிறந்திடுதிங் களினுளுத் திரத்தி லேகா
தெசியின்மகா முகுத்தமிவை திருத்த முற்றத்
துறந்தவரெண் மகிழ்மாறர் திருமுன் னுதிச்
சுருதியுடன் மிருதியும்சொற் றமிழின் வாய்மை
பிறந்தபெருங் காப்பியமுந் தெரிந்தோர் கேட்கும்
பெற்றியுடன் அரங்கேற்றப் பெற்ற தன்றே.

வாழி வாழிநா னிலமும்மும் மாரியின் வானும்
வாழி வாழியில் லறநல் லறப்பெரு வனப்பும்
வாழி வாழிநா லாயிரப் பனுவனுன் மறைநூல்
வாழி வாழிசீ ராங்குச வானவை கலுமே.

பதிகம் :

பூவாகிநன் மணமாய்ப் பொன்னாகியு மொளியாய்ப்
பாவாகியு மிசையாய்ப் பாலாகியுஞ் சுவையாய்
மேவாருயிர்க் குயிராய் வேறுவேறாகி நின்ற
மூவாமுழு முதலின் மூதாரறி வாரே.

முடிவு :

அன்ற வாதிப்பிதாமக னென்று பாதிக் கலாமதியன்றி
வேணிக் கனுறணி பவனோடே
பொன்ற வாதிக் குநீருல கொன்றவேமுற்று போழ்துயிர்
பொன்று டாநித்த னாகியு மதன்மீதே
நின்ற வாதிப் பிரானென நின்ற காலத்தி யாவையு
நின்றயா வுய்த்த காவலி னருளேகூர்
நன்றி நாடப் பெறுதது கொன்ற மூடத் துரோகிக
ணன்றி நாடப் பெறுதறி வழிவாரே.
நீதிபு ராணமறை போதித்த போதமறை
நேசித்த கேள்வியவை வழியாயே
சோதிச்சொ ரூபசுக ரூபத்த ராகியொளி
சோபை......

Kurugai Manmiyam

Size: 21×33. Pages: 483. Lines 30 on a page. Condition: good.

Note : The Ms. contains 27 sargams and 2618 verses by one Sadayan. Kurugai, also known as Azhvartirunagari is one of the 9 Vaishnava Tirupatis in Tirunelveli district.

201. குளத்தூர்ப் புராணம் (நூல் எண் 178)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 166. நிலை : பழமை.

குறிப்பு : குளத்தூர் என்பது தொண்டை நாட்டில் உள்ள சிறந்த தலம். இவ்வூரைக் குளந்தை என்றும் கூறுவர். சோமநாதர் என்பது இறைவன் திருநாமம். அமுதாம்பிகை என்பது அம்பிகையின் திருநாமம். சோமேசர் முதுமொழி வெண்பா. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களை இத்தல மூர்த்திகளின் மேல் சிவஞானமுனிவர் இயற்றியுள்ளார். இப்புராணத்தின் தலைப்பில் திருத்தணிகைக் கந்தப்பையர் என ஐயரவர்கள் குறிப்புக் காணப்படுகிறது. 16 சருக்கங்களும் 1092 செய்யுட்களும் கொண்டு, அபூர்த்தியாகவுளது. சுவடிகளின் விளக்கம் 2ஆம் பகுதி 525ஆம் எண்ணிற் குறித்துள்ள சுவடியின் பிரதியாகும் இது.

தொடக்கம் :

உ
கணபதி துணை

திருத்தணிகைக் கந்தப்பைய ரியற்றிய திருக்குளத்தூர்ப் புராணம்.

பாயிரம்

பொன்னு மாதிப் புரந்தரன் வாழ்க்கையும்
பன்னு மாதிடத் தோன்பத முந்தரு
முன்னு மாதிர மாமுக முற்றிசை
மன்னு மாதி விநாயக வள்ளலே. (க)

சீர்கொண்ட தாம்விழுங்கத் தகுசோ மன்வாய்ச்
சென்றிடல்போல் வெண்டளையி னடி(வழி)யூ டேகி
நார்கொண்ட வடியருடற் பாசந் தீர்க்கு
நலத்தின்மறை தோலுரியைக் கழற்றி நெஞ்சி
னேர்கொண்ட மகிழ்கூரு மணிவாய் செஞ்சுட்
டிலகரவ வணிபரிக்கு மெம்பி ரானைப்
பேர்கொண்ட குளந்தையில்வாழ் சோம நாதப்
பெருமானைமதித் திறைஞ்சித் துதித்து வாழ்வாம். (ங)

முடிவு :

சிறந்த சீரமு தாம்பிகை பூசைசெய் திறத்தால்
அறைந்த நாரணன் அமுதகே சவப்பெயர் கொண்டான்
நிறங்கொள் தாமரைப் பூசையி னின்றுநல் கிடலான்
மறங்கொள் வேற்கண்மா பதுமவல் லிப்பெயர் வாய்த்தாள்.

அமுதகேசவ னுழி பெற்ற படல முற்றும்.

ஆக விருத்தம் 1092.

திருச்சிற்றம்பலம்

Kulathur Puranam

Size 21×33. Pages: 166. Lines 32 on a page. Condition: old.

Note : The Ms. contains 16 sargams and 1092 stanzas; incomplete work. This is a copy of the cadjan leaf Ms. available in the Library (No. 525.)

202. திருக்குறுக்கைப் புராணம் (நூல் எண் 333)

அளவு : 21 × 33 வரிகள் : 25.

பக்கங்கள் : 144 நிலை : மிகக் கிலமாக உளது.

குறிப்பு : குறுக்கை என்னும் தலம் சோழநாட்டில் மாயூரத்திற்கு அண்மையில் உள்ளது. அட்ட வீரட்டங்களில் ஒன்று. இறைவன் காமனை எரித்த வீரச்செயலை நினைவுறுத்தும் தலம். இந்நூலாசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். பூர்த்தி. அச்சானது.

உ

கணபதி துணை

திருக்குறுக்கைப் புராணம்

பாயிரம்

நீர்கொண்ட மழைதவழ் மால்வரைச்சாரற் றினைப்புனத்து
நீபத் தொண்பூந்
தார்கொண்ட பன்னிருதோட் டம்பியார் பெருங்காத
றணிப்பா னன்பர்க்
கேர்கொண்ட தன்னுருப்பொன் றிரண்டிரண்டு மூன்றுமூன்
றிரண்டி ரண்டு
பார்கொண்ட நான்கைந் தொன் றுகவரு குஞ்சரத்தைப்
பரவி வாழ்வாம்.

முடிவு :

நிறைதருசை வம்பொலிக வைதிகமோங் குகமுகிலு
நீடு வாழ்க
நறைமலியுங் குழற்றிருஞா னம்பிகைதன் பிறங்குமரு
ணலந்த ழைக்க

நிறையரிய குறுக்கைநகர் செழிக்கயோ கேசரெனும்
வீரட் டேசர்
மறைபரவு மணிமன்று ணடநவிலுங் குஞ்சிதத்தாள்
வாழ்க மாதோ.

தல விசேடப் படலம் முற்றியது.
ஆகப் படலம் 21க்கு விருத்தம் 735.
குறுக்கைப் புராண முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்

Thirukkurukkai Puranam

Size: 21×33. Pages: 144. Lines 25 on a page. Condition: injured.

Note: The Ms. is in an injured condition. The author is Mahavidwan Meenakshisundaram Pillai; printed.

203. திருக்கொள்ளம்பூதூர்ப் புராணம்

(நூல் எண் 336)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 43. நிலை : நல்ல நிலை

குறிப்பு : சோழநாட்டைச் சார்ந்த மாயூரத்திற்கு அண்மையில் உள்ள தலம். தேவாரப் பாடல் பெற்றது. இவ்வூர் இறைவன் பெருமையைப் பாடிய நூல் இது. "திண்ணமிகும் பொன்மாறை வயித்திய நாதன் புவியிற் சீர்பெற்றுனே" என்பதால் ஆக்குவித்தோர் வயித்தியநாதர் என்று தெரிய வருகிறது. இப்புராணச் சருக்க அட்டவணை இறுதியில் குறிக்கப் பெற்றுள்ளது. பாயிரமும், ஏழு சருக்கங்களும் கொண்டது. 355 செய்யுட்கள் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திருக்கொள்ளம்பூதூர்ப் புராணம்
பாயிரம்

காப்பு

நலம்புரி யியற்றமிழ் நாவின் மல்கவும்
பொலம்புரி யிறைக்கரும் பொருளை யெய்தவும்
சிலம்புரி யடியரை யாளுந் தேவருள்
வலம்புரிப் பிள்ளையை வணங்கி வாழ்த்துவாம்.

முடிவு :

சீர்கொள் சைவஞ் செழித்திடத் திங்கள்மும்
மாரி பெய்ய மனுநெறி மல்கிட
வீர வெண்மதி சூடு மிறைவர்தாள்
சாரு நேய வடியர் தழைக்கவே.

திருச்சிற்றம்பலம்.

Thirukkollampudur Puranam

Size: 21×33. Pages: 43. Lines 27 on a page. Condition: injured.

Note : This Ms. contains seven sargams and 355 stanzas.

204. திருக்கொள்ளம்பூதூர்ப் புராணம்

(நூல் எண் 337)

அளவு : 21×33. வரிகள் : 37.
பக்கங்கள் : 44. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருக்கொள்ளம்பூதூர்ப் புராணத்தின் மூலப் பிரதியே இது. எண்–336இல் உள்ளபடியே.

Thirukkollampudur Puranam.

Size: 21×33. Pages: 44. Lines 37 on a page. Condition: good.

Note : Same as the previous one.

205. திருக்கொள்ளம்பூதூர்ப் புராணம்

(நூல் எண் 349)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 90. நிலை : நல்ல நிலை.

336இல் உள்ளபடியே உள்ள நூல்.

இதன் இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது. பாயிரமும் 7 சருக்கங்களும் ஆக 355 விருத்தங்களும் உள்ளன.

Thirukkollampudur Puranam

Size : 21×33. Pages: 90. Lines 22 on a page. Condition: good.

Note : Same as the previous one.

206. திருக்கோளக்குடித் தல புராணம் (நூல் எண் 341)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 116. நிலை : இலமாக உளது.

குறிப்பு ; திருக்கோளக்குடி என்பது தென்பாண்டி நாட்டைச் சார்ந்த தலம். ஆதிவேலாயுத பண்டார சந்நிதி என்பார் இந்நூலாசிரியர். வேலாயுத ஞானசம்பந்தமூர்த்தி என்றும் கூறுவர். பூர்த்தி. அச்சானது. 23 சருக்கங்களும் 768 செய்யுட்களும் கொண்டது. இறுதியில் இந்தப் புராணச் சருக்க அட்டவணை காணப்படுகின்றது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருக்கோளக்குடித் தல புராணம்
துதி கவிகள்

கங்கைதிங்க டரித்தலிறு லங்குசபா சங்கை
காணுதலாற் கோடொன்று கைதாங்கு தலினற்
செங்குமுத நால்வாய்முன் றேன்றலிறைற் சுரும்பார்
செங்கரும்பைங் கணைதரிக்குஞ் செய்கையத னுனஞ்
சங்கரன்சங் கரிமுகுந்தன் சயம்புமத னிவரோர்
தனுவாகி வையமதிற் சார்ந்தனர்கொல் எனப்பூ
வெங்கணுமியா வருந்துதிக்கத் திருக்கோளக் குடிவா
ழேகதந்தச் சிந்துரத்தி னிருசரண்போற் றுதுமே. (க)

முடிவு :

திங்கள்மும் மாரி பெய்க செழுமறை முனிவர் வாழ்க
எங்கணுஞ் சைவம் பல்க ஈசன்வெண் டிருநீ றோங்க
அங்கண்மா ஞாலங் காக்கு மரசர்செங் கோலு நீடப்
பொங்குபே ரறங்கள் மல்கிப் பூதலம் பொலிக மாதோ.

திலீபன் சேய்பெறு சருக்க முற்றும்.
ஆகச் சருக்கம் 23க்கு விருத்தம் 768.
திருக்கோளக்குடித் தலபுராணம் முற்றும்.
மிதிலைப்பட்டி இராமசாமிக் கவிராயர் செய்தது.

திருச்சிற்றம்பலம்

சிந்தனையாற் கதிதருங்தென் னருணைமடா லயத்தினுக்கோர்
தீபம் போல
வந்தசபா பதிமுனிவன் றிருக்கோளத் தலமகிமை
வகுப்பா யென்னச்
சுந்தரஞ்சேர் தென்கூடற் றிருஞான சம்பந்த
சுவாமி யாகி
வந்தருள்வே லாயுதசற் குருராய னியற்றமிழால்
வழுத்தி னனே.

செல்லூர்ச் சிற்றம்பலக் கவிராயர் செய்தது.

Thirukkolakudi Thala Puranam

Size: 21×33. Pages: 116. Lines 28 on a page. Condition: injured.

Note: The Ms. contains 23 sargams and 768 verses. Author: Adi Velayuda Pandarasannidhi known as Velayudhar.

207. சரப புராணம் (நூல் எண் 210)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 77. நிலை : பழமை.

குறிப்பு : இரணிய சம்ஹாரம் செய்ய நரசிங்கமாகத் தோன்றிய திருமாலின் உக்கிரத்தை அடக்குமாறு தேவர்கள் முறையிடச் சிவபெருமான் சரப வடிவெடுத்து நரசிங்கத்தின் உக்கிரத்தை அடக்கிய வரலாறு கூறும் புராணம். 7 சருக்கம் 456 பாடல்களைக் கொண்டது. சுவடிகளின் விளக்கம் பகுதி 2. 472ஆம் எண்ணில் குறிப்பிட்டுள்ள சுவடியின் பிரதியே இது. இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது.

இந்நூலுடன் தனியாக ஐந்து தாள்களில் சரப புராணம் கடவுள் வாழ்த்தும் பதிகமும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ
சிவமயம்
சரப புராணம்

தற்ப ரத்தொளி தற்சிவ சிற்பரத்
தற்பு தத்தை யறிந்தடைந் தின்புற

முற்ப வக்கடல் சாடிய மும்மதக்
கற்ப கத்தைக் கருத்தி லிருத் துவாம்.

முடிவு :

நிறைவுதிகழ் பரமனருள் ஆகமமு மெழுத்தஞ்சும்
நீறும் வாழ்க
மறைநெறியு மகச்சடங்கு மறையவரு மழைமுகிலும்
வளர்க நீதி
பொறை மருவு காவலனுஞ் செங்கோலும் பொங்கோலும்
புவிமே லோங்கப்
பிறைமருவு மலரடியார் கணமு மருந்தவமும்
பெருக வென்றே.

நரசிங்கவதைச் சருக்க முற்றும்.
ஆகச் சருக்கம் 7க்கு விருத்தம் 456.

சருக்க அட்டவணை:

(1) நரகேசரி உற்பத்திச் சருக்கம்
(2) கடவுளர் முறையிட்ட சருக்கம்
(3) வீரபத்திர நாயனார் திருவெழுச்சிச் சருக்கம்
(4) அறிவுறுத்திய சருக்கம்
(5) சலந்தரவதைச் சருக்கம்
(6) சக்கரம் பெற்ற படலம்
(7) நரசிங்க வதைச் சருக்கம்.

சரப புராண முற்றும்
திருச்சிற்றம்பலம்.

இறுதியில் : அறிவுறுத்திய சருக்கத்தில் 2 மிகைப் பாடல்களும் நரசிங்க வதைச் சருக்கத்தில் 24-25 பாடலுக் கிடையே ஒரு பாடலும் எழுதப்பெற்றுள்ளன.

ஒத்திட்ட பிரதி 2:

(1) மாவண்டூர் விசுவநாத முதலியார் பிரதி
(2) சி. வை. தாமோதரம் பிள்ளை பிரதி.

Sarabha Puranam

Size: 21 × 33. Pages: 77. Lines 26 on a page. Condition: old.

Note : The Ms. contains 7 sargams and 456 verses, sung in praise of Lord Sarabha. The

corresponding cadjan leaf Ms. is available under No. 472.

208. சாயாவனப் புராணம் (நூல் எண் 215)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 66. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : சாய்க்காடு என்னும் பாடல் பெற்ற தலத்தையே சாயாவனம் என்று கூறுவர். இது சீகாழிக்கு தென்கிழக்கில்9 கல் தொலைவில் காவிரிப்பூம்பட்டினத்துக்கருகில் உள்ளது. காரூரன் கவிராயர் என்பவரால் பாடப்பெற்றதாகத் தெரிய வருகின்றது. 337 செய்யுட்களை உடையது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
சிவமயம்
சாயாவனப் புராணம்

இலகு செஞ்சடை ஆதரியம்பிய
கலைநி றைந்தசா யாவனக் காதையை
யுலகில் யாமுரை செய்திட வைங்கரன்
மலர டித்துணை வாழ்த்தி வணங்குவாம்.

உ
பாயிரம்
கடவுள் வாழ்த்து

சீர்பூத்த வெண்ணிலவைப் புனல்பூத்த வரநதியைச்
செந்தே னூற்றும்
ஆர்பூத்த மலரதனைக் கடுக்கையினைச் செஞ்சடிலத்
தணியும் கோவை
கார்பூத்த மேனியனும் பைம்பூத்த நாவினனுங்
காணு தோங்கும்
ஏர்பூத்த சின்மயச்சா யாவனத்த ரிருபதத்தை (க)
யிறைஞ்சல் செய்வாம்.

சிறப்புப் பாயிரம்

புண்ணியமோர் வடிவானோன் தொண்டீர வளநாடன்
புகழுங் கீர்த்தி
நண்ணுமொழிற் பாகையினு லுலகாளு மிராமலிங்க
ரர்யன் மிக்க
வண்ணல்சா யாவனத்தர் தலமகிமை தமிழ்ப்படுத்தென்
றன்பாய்க் கூற
எண்ணருஞ்சீர்க் காரூரன் கவிராச நாயகமு மியம்பி னனால்.

முடிவு :

காசினி முழுதும் வாழி கருதிந்த்ர புரியும் வாழி
வாசவன் வாழி யன்பர் மாமுனிக் கணங்கள் வாழி
தேசுயர் புராணம் வாழி திங்கள்மும் மாரி பெய்க
பேசுநான் மறையும் வாழி பெருகுநூ லனைத்தும் வாழி.

சங்கமுக தீர்த்தச் சருக்கம் முற்றும்.
ஆக விருத்தம் 336
சாயாவனப் புராண முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

Chayavana Puranam

Size: 21×33. Pages: 66. Lines 26 on a page. Condition: injured.

Note : The Ms. contains 337 verses written by one Karuran Kavirayar and relates to Saikkadu (known as Chayavanam) which is near Kavirippoom-pattinam.

209. சித்தாய்மூர்ப் புராணம் (நூல் எண் 218)

அளவு : 21 × 33. வரிகள் : 29.
பக்கம் : 53. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : சித்தாய்மூர் என்பது சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் திருநெல்லிக்கா என்னும் ரெயில் நிலையத்திற்கு அண்மையில் காவிரியின் தென்கரையில் உள்ளது. இதனைத் திருச்சிருமம் என்றும் வழங்குவர். இப்பிரதியில் இத்தலம் பற்றிய சில தனிப் பாடல்களும் உள. 9 சருக்கங்களையும் 327 பாடல்களையும் கொண்டது. ஆசிரியர் நந்திகேசுர கோத்திரம் ஆத்துமநாதன் என்று காணப்படுகின்றது, இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
சித்தாய்மூர் ஸ்தலபுராணம்
பாயிரம்

மன்னியநான் முகன்மொழியும் மால்மொழியும் சிவன்
மொழியும் வரந்தா வென்று
சொன்னமுறை யருள்வானைத் தொண்டர்மொழி பலிக்க
வந்து தோன்று வானைக்

கன்னல்மொழி யுமையீன்ற கற்பகத்தை வேதமொழிக்
கலைகள் யாவு
முன்னமொழி தருமீளா மொழிக்களிற்றை மனத்துள்
வைத்து மொழிந்து வாழ்வாம்'

முடிவு :

மாதவச் சூத மாமுனி மகிழ்ந்து
வரமருள் சித்தைமான் மியத்தை
வடமொழி யதனல் வழுத்திய வாறே
மனதினில் ஓர்ந்துசெந் தமிழாற்
கோதறு நந்தி கேசுர கோத்ரக்
குரிசிலாம் ஆத்தும நாதன்
குணமிகு புராண மாகவே செய்யக்
கூறெட்டா மத்தியா யத்தை
தீதக னித்த மங்கைவாழ் தியாக ராசனுஞ்
சீர்பெறும் படியே
செப்பிய நாட கத்தையுந் தெளிந்த
தேசிகன் முத்துசாமியுமே
பேதமி னெண்டித் தருவ னேகத்திற்
பேசிய வர்ணமெட் டிரண்டாய்ப்
பிரபல மாகப் பொன்வைத்த சரிதம்
புகன்றனன் பேரருள் கொண்டே.

Sittaimur Puranam

Size: 21×33. Pages: 53. Lines 29 on a page. Condition: good

Note : The Ms. contains 9 sargams and 327 stanzas. Author: Atmanathan of Nandikesvara Gotram.

210. சிம்மபுரத்துக் கோலாசலத் தல புராணம் (நூல் எண் 219)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 404. நிலை : இலமாக உளது.

குறிப்பு : சிம்மபுரமென்பது சிங்கப்பெருமாள் கோயில். தொண்டை நாட்டில் உள்ளது. இந்நூலாசிரியர் கவி வீரராகவர் என்பர். இதற்கு உரை உளது. இந்த நூலில் 23ஆவது அத்தியாயம்வரை 549 செய்யுட்கள் மூலமும் உரையும் உள்ளன. இதற்கு மேல் 34ஆவது அத்தியாயம்வரை வசனமாக உள்ளது. 35–36 அத்தியாயங்களில் உள்ள 66 பாடல்களும் மூலமும் உரையுமாக உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

உ

ஸ்ரீராம ஜெயம்
ஹரி: ஓம். நன்றாக
குரு வாழ்க. குருவே துணை.

சஞ்சீவி புரமாகிய சிம்மபுரக் கோலாசல ஸ்தல புராணம்-மூலமும் உரையும்.

காப்பு

ஆனைமுத லானவனை யழைக்கவரு பரம்பொருளுக்
கடிமை யான
வானவர்கோ னயனரனும் வந்துநெருக் குறும்வேலை
மகுட கோடி
தானுறைந்து மேருவெனத் தனிப்பொடிக ளுதிரவொளிர்
தங்க வேத்ர
சேனைமுத லியர்கமலத் திருவடியே தஞ்சமெனத்
சிந்தை செய்வாம்.

முடிவு: குபேரனுக்காக ஸ்ரீ பரமபதநாதர் மிருகசீரிட நக்ஷத்திரங்கூடிய கார்த்திகை மாசத்தில் இலக்ஷ்மியார் தீர்த்தக் கரையில் வந்தமைந்தவர். சகாதேவனுக்காக ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் அசுவினி நக்ஷத்திரங்கூடிய மாசி மாதத்தில் ஸ்ரீயரங்கநாயகர் சந்நிதிக்கெதிரி லமைந்தவர். "வந்தவாசி தாலுக்கா மருதநாடு கிராமம் ஷை போஸ்டு கோனை சீம திராவிட ஸ்மார்த்த மத ஸ்ரீவத்ஸ கோத்ர ஆபஸ்தம்ப சூத்திர பஞ்சாருஷீய சின்ன சுப்பையர் பவுத்திரர் வெங்கிட சுப்பையர் வசம் 21 அத்தியாயங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது."

Simmapurathukkolachala Thala Puranam

Size: 21×33. Pages: 404. Lines 35 on a page. Condition: much injured.

Note : This relates to Simmapuram which is Singaperumal Koil (near Chingleput). The Ms. contains 549 stanzas up to the 23rd chapter with text and notes; the next portion is in prose up to the 34th chapter; chapters 35-36 contain 66 stanzas with text and notes.

211. சிவசைலப் புராணம் (நூல் எண் 235)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 123. நிலை : மிகவும் சிலமானது.

குறிப்பு : இந்நூல் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த சிவசைலம் என்னும் தலத்தின் புராணம். இப்பிரதி மிகவும் சிலமாக உள்ளது. இந்நூலாசிரியர் வீரப்பன் என்பது, "நெற்குன்றச் சொக்கநாதன் ஈன்றெடுத்த தண்டமிழ் சொரியும் மேகம் வீரப்பன்" என்று கூறுவதால் புலனாகிறது. 11 சருக்கங்களையும் 635 செய்யுட்களையும் கொண்டுள்ளது. பூர்த்தி. இறுதியில் சிவசைலத் தலபுராணச் சருக்க அட்டவணை உள்ளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
சிவசைலப் புராணம்

(நல்ல) சொற்பொரு ளுள நடாத்தவு
(மெ)ல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தனை மேவிவாழ்
(வ)ல்ல பைக்குரி யானை வணங்குவாம்.

தமிழ்மணங் கமழும் கமலையம் பதிவாழ்
ஞானசம் பந்தனை வணங்கி
னீனசம் பந்த மிலைவீ டெளிதே.

பாயிரம்

ஒருகோடு மிருபதமும் மும்மதமும் நால்வாயும் கரைந்து
முருகோடு கடம்பனறு முகனேடும் பிறந்ததந்தி
முகவன்றன்னைக்
கருகோடும்போது.........த்தமிடவளப்ப நிருத்தமிடு
மண்ணலெழில்வரு
ஒருகோடி பிறப்பகற்றுஞ் சயிலகண பதிமலர்த்தாள்
வணக்கம் செய்வாம். (க)

முடிவு :

சிவசைலப் பதியருமைத் திருமேனித் தலைத்தீண்டும்
தவமறையோர் வாழிபரி சனர்வாழி தமிழ்வாழி
பவமகல இறைவர்திருப் பணிசெயடி யவர்வாழி
அவனிதனில் சிறந்திருக்கும் அன்புருவம் வாழியவே.
அகத்தியர் பூசித்த சருக்கம் முற்றும்,
ஆக விருத்தம் 635.
சிவசைலத் தல புராணம் முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

Sivasaila Puranam

Size: 21×33. Pages: 123. Lines 25 on a page. Condition: much injured.

Note: The Ms. contains 11 sargams and 635 stanzas of the Puranam relating to Sivasailam. Sivasailam is in the Tirunelveli District. Author: Veerappan.

212. சிவசைலப் புராணம் (நூல் எண் 241)

அளவு: 21×33, வரிகள்: 30.
பக்கங்கள்: 94. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இந்நூல் எண் 235இன் பிரதியாகும்.
24a ஸ்ரீசிவபராக்கிரம மாலை என்னும் நூலும் இதனுடன் உள்ளது.

Sivasaila Puranam

Size: 21×33. Pages: 94. Lines 30 on a page. Condition: good.

Note: Same as the previous one. The Ms. also contains Sivaparakrama Malai.

213. சிவபுரப் புராணம் (நூல் எண் 242)

அளவு: 21×33. வரிகள்: 25.
பக்கங்கள்: 50. நிலை: சிலமாக உள்ளது.

குறிப்பு: சிவபுரம் என்பது சோழநாட்டில் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது. பாடல் பெற்ற தலம். "செண்பகமலர் பொழில் சிவபுரமே" என்பது தேவாரம். ஆசிரியர் விவரம், அச்சான விவரம் தெரியவில்லை. அபூர்த்தி.

தொடக்கம்:

உ
சிவமயம்
சிவபுரப் புராணம்
புராண வரலாறுரைத்த சருக்கம்

... தாய்ச் சொன்ன வாறும்
போதமிகு நான்முகத்தோன் சிவபூஜை செய்ததுவும்
புகழ்ந்தன் ஞேன்பின்

ஞதனைத்தோத் திரஞ்செய்து லகசிருட் டியையடைந்த
நலமும் மாயோன்
தீதகன்ற சுவேதவரா கப்படிவ மாய்ப்பூசை செய்த வாறும்.
(கக)

முடிவு :

திருக்கோயில் தனிற்பிரதிட் டாபிடே கம்பூசை
சிறப்பாய்ச் செய்து
விருப்பாகச் சூழ்ந்துவலஞ் செய்துசிவ புரநாதன்
விரைத்தாள் போற்றிக்
கருக்கோலப் பவநீங்கி அழியாச்சா யுச்யபத
கதியிற் சேரென்
றுரைத்தோகை யொடுபின்னுந் தவமுனிக்கு நாரதர்மேன்
றுரைப்பர் மாதோ.

கண்டெரிந்தபோது சுலோரெனும் பெருமக் குண்டரங்
கருத்திற் சந்திர குண்டமுறும் பெருமையுமப்பி....

Sivapura Puranam

Size: 21×33. Pages: 50. Lines 25 on a page. Condition: injured.

Note: This relates to Sivapuram near Kumbakonam; incomplete work.

214. தந்திவனப் புராணம் (நூல் எண் 274)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 141. நிலை : பழமையானது.

குறிப்பு : தந்திவனமென்பது திருவானைக்கா என்னும் தலமாகும். இதனை ஜம்புகேசுரமென்பர். திருச்சிக்கண்மையி லுள்ளது. இந்நூலை 16ஆம் நூற்றுண்டைச் சார்ந்த ஞானப் பிரகாசர் என்பார் இயற்றியுள்ளார். கச்சியப்ப முனிவர் இயற்றிய திருவானைக்காப் புராணத்துக்கு முற்பட்டது. 14 சருக்கங்களை யும் 571 செய்யுட்களையும் கொண்டது. அச்சாகவில்லை.

தொடக்கம் :

செ. க.
தந்திவனப் புராணம்
திருச்சிற்றம்பலம்

நைமிசாரணியச் சருக்கம்

புந்திவனப் புறுமுனிவர் போற்றிசெயச் சந்தமுனி
புகழ்ந்த மேன்மைத்
தந்திவனப் புராணத்தின் றக்கவட மொழிதிருத்தித்
தமிழாற் கூற
வந்திவனப் புறுசடைமே லாறமைத்து வெண்ணுவ
லமர்ந்தோன் றந்த
தொந்திவனப் புறுமாதிப் பெருஞ்செல்வக் கணபதியைத்
தொழுதல் செய்வாம்.

முடிவு :

அறந்தருங் காவை வாழி யகிலாண்ட வம்மை வாழி
நிறைந்திடு மனைத்துக் கொற்று நிலமிசை வாழி பாசந்
துறந்திடு முலக நாதன் றுலையின்மெய்ப் புகழே வாழி
சிறந்திடு செம்பு நாதன் றிருவடி வாழி வாழி.

ஆகச் சருக்கம் 14க்குத் திருவிருத்தம் 571.

சூளஞுக்கு கரஞு கார்த்திகை மீ வெள்ளிக்கிழமை அனுட நட்சத்திரம் திதி சதுர்த்தி கூடிய சுபதினத்திலெழுதி முடிந்தது.

முற்றும்.

Thanthivana Puranam

Size: 21×33. Pages: 141. Lines 25 on a page. Condition: old.

Note: The Ms. which contains 14 sargams and 571 stanzas has been written by one Gnana Prakasar. Thanthivanam is another name for Tiruvanaikka which is between Tiruchirappalli and Srirangam. This work is different from Tiruvanaikka Puranam written by Kachiappa munivar.

215. தணிகைப் புராணம் (நூல் எண் 236)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 46. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் கவிராக்ஷசர் கச்சியப்ப முனிவர் அருளிய தணிகைப் புராணத்தில் காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நாட்டுப்படலம் 3ஆம் செய்யுள்வரை உரை மட்டும் உள்ளது.

தொடக்கம் :

உ

சிவமயம் 22-12-1911.

விநாயகர் காப்பு

இவை பொது.

மும்மதத்த னென்றொரு பெயர் தனக்கு. முந்து கஃறு என்னும் கானகத்துப் புக்கு-முந்தைய நாளிற் கஃறென்னும் ஒலியினையுடைய காட்டகத்து முழுயானை வடிவாகச் சென்று, தனக்கு மும்மதத்தன் என்ற ஒரு பெயர் உறுத்தவனும்-தனக்கு மும்மதத்தனென்ற ஒப்பற்ற பெயரை அடைந்தவனும், இலை வேல் கைமலர் தனி இளவற்கு-இலைபோலும் வேற்படையினை, கையாகிய மலரினிடத்துத் தாங்கிய இளையோனாகிய முருகற்கு, மொய்கூந்தல்-மொய்த்த கூந்தலையும், கொம்மை வெம்முலை கோல்தொடி கொடிச்சியை உறுத்தவனும்-இளமை பொருந்திய விரும்பத்தக்க தனங்களையும், அழகிய வளையலையும் கொண்ட குறமகளாகிய வள்ளி நாயகியை அடைவித்தவனுமாகிய விநாயகனது. அடிமலர் பணிவாம்-(பாடப் புகுந்த இந்நூல் இடையூறன்றி இனிது முடியும் பொருட்டு) பாதமாகிய தாமரை மலர்களை (யாம்) வணங்குவாம் (என்றவாறு).

முடிவு : தொண்டை நாடானது கோண்முறை பிறழ்ந்து பெயல் வறக்குமேனும் தப்பாவண்ணம் அகழுந்தோறும் புனல் வந்தோடும் நதிக்குலத்தால் ஏனை நாட்டையெல்லாம் வீழ்த்தது என முடிக்க. ஊண் முறை புனல் என்றது கழிக்கரை முதலிய இடங்களிற் றோண்டினும், புனல் பெருக்கெடுத்தோடி வருவதை எனவுமாம், துப்பார்க்குத் துப்பாய என்பதனானுணர்க.

Thanikai Puranam

Size: 21×33. Pages: 46. Lines 25 on a page. Condition: good.

Note : The Ms. contains notes for the first few poems up to the third poem in Nattuppadalam. The author of Thanikai Puranam is Kachiappa Munivar.

216. திருத்தவத்துறைப் புராணம் (நூல் எண் 355)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 157. நிலை : பழமை.

அளவு ; திருத்தவத்துறை என்பது திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த லால்குடி என்னும் தலம். இத்தலத்தின் மாகாத்மியத்தைக் கூறுவதே இப்புராணம். ஏழு முனிவர்கள் பூசித்துப் பேறு பெற்றது. இறைவன் திருநாமம் சப்தரிஷீசுவரர். அம்பிகை ஸ்ரீமதி அல்லது பெருந்திருப்பிராட்டி. பழூர்க் குமாரசாமியார் என்பவர் இந்நூலாசிரியர். அச்சானது. இப்பிரதியிலுள்ள இறுதிப் பாடல் அச்சுப் பிரதியிலில்லை. சருக்கங்கள் 19, விருத்தங்கள் 767.

தொடக்கம் :

காப்பு

திருவாழ்ச்சி மோலிதிரு வடிக்கன்பு பெறுமுண்மை
சிறக்க வேழத்
துருவான வொருமுகமு மிருசெவியு முக்கண்ணு
முயர்நாற் றேளுந்
தருவாரு மைங்கரமு மறுகொம்பு மெழுகொம்புந்
தாங்குஞ் சைவ
மருவாருந் தவத்துறைவாழ் திருவாள விநாயகனை
வணக்கஞ் செய்வாம்.

உ

சிவமயம்

பாயிரச் சருக்கம்

திருவளர்பூஞ் சிவகங்கைத் தீர்த்தத்தோர் பாகத்துத்
தேவி காண
முருகுளருஞ் சுகந்தமலர் முகுந்தன்முத லோரிறைப்ப
முரச மார்ப்பத்
தருவளரு நான்மறையுஞ் சயசயவென் றேத்தவெழு
தவத்தோர் வாழ்த்த
மருவளருந் திருத்தெய்வ மன்றினடம் புரிசிவன்றுள்
மலர்கள் போற்றி. (க)

முடிவு :

பஞ்சபுண் ணியமு மெழுமுனி வோரும்
பாற்கடற் றிருமழ வேசன்
பயிரவி யுமையாள் திருக்கலி யாணம்
பதுமநா யகன்தவ வசிட்டர்

மிஞ்சுவே தியர்கோன் முரண்டகன் சாப
 மீண்டவன் சாபந்தீர்ந் திடுதல்
 விளங்கிய வணிகர் குலகுஞ கரனும்
 வீறிடுஞ் சிவதரு மத்தோடு
அஞ்செழுத் துடையான் தோழனுங் குபேர
 னுடிய தீர்த்தயாத் திரையும்
 அவனுடைப் பேறும் அமுதக டேச
 னுைதும் பராசரன் பூசை
வஞ்சதண் டகர்மாண் டருமசன் மாவும்
 வதிந்திடுஞ் சருக்கமீ ரொன்பான்
 வரமருள் தெய்வத் தவத்துறைப் புராணம்
 வளம்பெறு கதைவர லாறே. 62

(தருமசன்மா முதலோர்க்குச் சாபந் தீர்ந்த சருக்க முற்றும்)
ஆகச் சருக்கம் 19க்கு விருத்தம் 767.
திருத்தவத்துறைப் புராணம் முற்றும்.

சாதாரண ஞு ஐப்பசிமீ 3உ குரு வாரம், துவாதசி திதியும் சதய நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் சப்தரிஷிச் செட்டியால் எழுதி முடிக்கப்பட்ட சுவடியைச் பார்த்து என்னுல் கர ஞு கார்த்திகை மீ 1உ எழுதத் தொடங்கி ஷை மாசம் 25உ புதவாரம் அஷ்டமி திதியும் உத்திரட்டாதி நக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் எழுதி முடிந்தது.

சப்தரிஷிநாதன் துணை
பெருந்திருவே துணை
சற்குருவாகிய அமுத குருவே துணை
கமல சாரதா துணை
திருச்சிற்றம்பலம்
சிவமயம்
கணபதி கடாக்ஷம்

பரிபூரணம். அரியலூர் சாமிநாதையர் பிரதியோடு ஒப்பிடப் பட்டது. 21—7—03.

Thiru Thavathurai Puranam.

Size : 21×33. Pages: 157. Lines 27 on a page Condition: old.

Note : This Ms. contains 19 sargams and 767 verses. Author : Pazhuvur Kumaraswamiar. The

last verse in the Ms. is not found in the printed book. Thiruthavathurai is in the Tiruchi district and is now known as Lalgudi.

217. திருத்துருத்திப் புராணம் (நூல் எண் 365)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 321. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : துருத்தி என்பது ஆற்றிடைக்குறை. திருத்துருத்தி சோழ நாட்டில் மாயூரத்திற்கண்மையில் உள்ள குத்தாலம் என்னும் தலமாகும். இந்நூலாசிரியர் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆவர். அச்சானது. 1933ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றது. 40 படலங்களும் 1617 செய்யுட்களும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருத்துருத்திப் புராணம்
பாயிரம்
வேலுமயிலும் விநாயகர் துதி

பூமேவு பல்பசுக்கட் கொருதாமே துணையாகிப்
பொலிதந்தேற்ற
மாமேவு கயிலாய வரைநின்றும் பதியாகி
வருமா தேவன்
றேமேவு துணைபுணர வரும்போது துணைவந்த
திறத்தா லான்றோர்
பாமேவு துணைவந்தா ரெனப்பொலிவார் துணையடிகள்
பழிச்சி வாழ்வாம்.

முடிவு :

துருத்திநகர் வாழ்கவுத்தா லகம்வாழ்க மணக்குல
சுந்த ரேச
னருத்திகொளம் பிகைவாழ்க வரும்பன்ன வனமுலைப்பே
ரம்மை வாழ்க
விருத்தியருட் சொன்னவா றறிபரமர் வாழ்கவவர்
மேன்மே லன்பு
பொருத்தியெமை யாளமணி மன்றெடுத்த குஞ்சிதச்செம்
பொருள் வாழ்க.

நைமிச முனிவர் பூசைப்படல முற்றியது.

ஆகப் படலம் 40க்கு விருத்தம் 1617.
திருத்துருத்திப் புராண முற்றியது.
திருச்சிற்றம்பலம்.

Thiruthuruthi Puranam

Size: 21×33. Pages: 321. Lines 26 on a page. Condition: injured.

Note : The Ms. contains 40 padalams and 1617 verses, written by Mahavidwan Meenakshi-sundaram Pillai. Thiruthuruthi is now known as Kuttalam in Thanjavur district.

218. தென்குமரித் தல வரலாறு (நூல் எண் 444)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 96. நிலை : இலமாக உளது.

குறிப்பு : தென்குமரி என்னும் கன்னியா குமரியின் தல மகிமையைக் கூறுவது இந்நூல். அச்சானது. பிரதி இலமாக உளது. ஆசிரியர் சங்கர நாவலர் என்பார். மு.ரா. அருணாசலக் கவிராயர் இயற்றிய வசனங்களும் உள. 18 சருக்கங்களும், 858 செய்யுட்களும் உள்ளன.

தொடக்கம் ;

தென்குமரித் தல புராணம்
சிவமயம்

மந்திர வுருவ மாக வந்தருள் பெருமான் வால
சந்திரன் போலு மொற்றைத் தடமருப் புடையோன் முன்னு
இந்திரன் பூசித் தேத்து மிந்திர காந்த நாமச்
சிந்துர வதனத் தான்பொற் சேவடி சிந்தை செய்வாம். (க)

முடிவு :

சுருளுலவு குழல்போற்றி நிலவுலவு மதிவதனச்
சோதி போற்றி
யருளுலவு மிருநயன வயில்போற்றி யறம்வளர்க்கு
மங்கை போற்றி
மருளுலவு மனத்தேனைப் பவக்கடல்வீழ்ந் தலையாமன்
மலர்த்தா ளேத்துந்
தெருளுலவ வருள்புரிந்த கன்னிநா யகிகமலத்
திருத்தாள் போற்றி. 114

தென்குமரித் தல புராணம் முற்றும்.
சிவமயம். தேவி சகாயம்.

Thenkumari Thala Varalaru

Size: 21×33. Pages: 96. Lines: 36 on a page. Condition: injured.

Note : The Ms. contains 18 sargas and 858 verses, written by one Sankara Navalar.

219. திருத்தேங்கூர்த் தல புராணம் (நூல் எண் 357)

அளவு : 21×33. *வரிகள்* : 30.
பக்கங்கள் : 27. *நிலை* : *நல்ல நிலை.*

குறிப்பு : *திருத்தேங்கூர் என்னும் தலம் சோழ நாட்டில் திருவாரூருக்குத் தெற்கே 10 கல்லிலும், திருநெல்லிக்காவலுக்குத் தென்மேற்கே ½ கல் தொலைவிலும் உள்ளது. திருத்தெங்கூர் என்றும் கூறுவர். இஃது இலக்குமியும், நவக்கிரகங்களும் பூசித்த தலம். இந்தப் பிரதியில் 357a தர்மசம்வர்த்தனி மாலை என்னும் நூலும் உளது. 6 சருக்கங்களும், 193 செய்யுட்களும் உள அச்சானது. பூர்த்தி.*

தொடக்கம் :

திருத்தேங்கூர்த் தலபுராணம்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
காப்பு

பெரிய நாயகி பெண்ணமு தின்புறப்
புரியு மம்மை புராதனை பாகனை
வரனை வெள்ளி மலையுறை வள்ளலைக்
கருணை வாழ்வைக் கருத்து ளிருத்துவாம்.

முடிவு :

வரந்தருந் தகுமா வெள்ளி மலைநாதர் திருப்பு ராணம்
பரிந்தரங் கேற்றி வைத்தோர் பலர்களும்... வாழ்க
விருந்திவை நன்று நன்றென் றிருச்செவி குளிரக் கேட்போர்
பொருந்தவே செல்வம் பெற்றுப் புவிமீது வாழ்க வாழ்க.
ஆறுவது சிவகங்கைச் சருக்கம் முற்றிற்று.
ஆகச் சருக்கம் 6க்குச் செய்யுள் 193.
திருத்தேங்கூர்த் தல புராணம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

இஃது எழுதியது பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். விகாரி ஸு கார்த்திகை மீ 17உ மு. நாராயணசாமி. 9—8—63.

Thiruthengur Thala Puranam.

Size: 21×33. Pages: 27. Lines: 30 on a page. Condition: good.

Note : The Ms. contains six sargams and 193 verses. This sthalam in near Tiruvarur.

220. திருத்தேங்கூர்ப் புராணம் (நூல் எண் 358)

அளவு : 21 × 33. வரிகள் : 32
பக்கங்கள் : 271 நிலை : மிகக் கிலமாக உளது.

எண் 357இல் உள்ளபடியே அமைந்தது.

Thiruthengur Puranam

Size: 21×33. Pages: 271 Lines: 32 on a page. Condition: much injured.

Note : Same as the previous one.

221. நம்பி பழைய திருவிளையாடல் வசனம் (நூல் எண் 100a)

அளவு : 21 × 33. வரிகள் : 33
பக்கங்கள்: 41 (105-146). நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஐயரவர்கள் தாம் பதிப்பித்த வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தின் சுருக்கத்தை உரைநடையில் எழுதத் துவங்கினார்கள். 18 திருவிளையாடல்களுக்கே அவர் எழுதிய உரைநடைச் சுருக்கம் இப் பிரதியில் பிரதி செய்யப் பெற்றுள்ளது. இப்பிரதியின் தலைப்புப் பக்கத்தில் 'நம்பி திருவிளையாடல் வசனம், பழைய திருவிளையாடலை ஐயரவர்கள் அச்சிட்டார்கள்; அதன் கதைச் சுருக்கத்தை எழுதத் தொடங்கினார்கள். அவர்கள் கைப்படவே சில பக்கங்கள் எழுதியிருக்கிறார்கள். நூல் முற்றுப் பெறவில்லை' என்று எழுதப் பெற்றிருக்கிறது.

உ
சிவமயம்
வே. திருவிளையாடற் கதைச் சுருக்கம்

ஒழுக்கம் வாய்மை கல்வி புகழ் நிறை அருள் இவற்றால் உயர்ந்த முனிவரர்கள் கேட்டு இன்புறும்வண்ணம் அகத்திய முனிவர் சொல்வாராயினர்.

முடிவு: விரும்பியவற்றையெல்லாம் கொடுக்கவல்ல இறைவன் ஒரு பிரயோசனத்தைத் தரக்கூடிய காரியத்தைச் சொல்லக் கேட்டு மனமொப்பியும் கேளாதது போலிருப்ப, நாயகியார் மனம் வருத்தமுற்று வாடியிருந்தார். இறைவன் தடாதகையின் மனம் வாடியிருப்பதைக் கண்டு சிறிது முறுவல் கண்டு, "உன்னுடைய.........

Nambi Pazhaya Thiruvilaiyadal Vachanam

Size: 21×33. Pages: 41. Lines: 33 on a page. Condition: good.

Note : This is a prose version of Thiruvilaiyadal Puranam; by Dr. Iyer incomplete.

222. நல்லூர்த் தல புராணம் (நூல் எண் 500)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 158. நிலை : பழமை.

குறிப்பு : நல்லூர் என்பது சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையில் அமைந்துள்ள தலம். இலக்கண விளக்கம் இயற்றிய **வைத்தியநாத தேசிகர்** என்பவர் இந்நூலாசிரியர். இறுதியில் சருக்க அட்டவணை இருக்கிறது. 1009 செய்யுட்கள் உள்ளன. அச்சானது. 24 சருக்கங்களைக் கொண்டது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருவாரூர் வைத்யநாத நாவலரியற்றிய
நல்லூர் ஸ்தல புராணம்

காப்பு

இருவினைத்தெண் டிரைமாயக் கருங்கடலை(தனி)த் தேற்றி
யெண்ணி லாற்றற்
பொருவருமா ணவச்சேறு கருணைநீ ராற்கழுவிப்
போக்கிப் போகா
நிரதிசயா னந்தநெடு நிலவெறிப்ப வுயிர்முத்த
நெடிய தாம
மருவு தன தணியாக மகிழ்காசி வாரணத்தை
வணங்கி வாழ்வாம்.

முடிவு :

திருப்பணி செய்வோர் வாழி திருமலைச் சொக்கி பாகர்
மருப்பொலி பாதத் தன்பு வைத்துளோர் வாழி யென்றும்
விருப்பமீ தூரப் பூசை விழாவினிப் புரிவோர் வாழி
தரைத்தலம் புரக்கும் வேந்தர் சந்ததம் வாழி வாழி. (26)

அமர்நீதி நாயனுர் விசருக்க முற்றும்.
ஆக விருத்தம் 1009.
நல்லூர் ஸ்தல புராண முற்றுப் பெற்றது.
திருச்சிற்றம்பலம்.

Nallur Thala Puranam

Size: 21×33. Pages: 158. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. contains 1009 verses and 24 sargams. Author: Vaidyanatha Desikar. This sthalam is near Papanasam. in Thanjavur district.

223. நாகப்பட்டினத் தல புராணம் (நூல் எண் 516)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 206. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் திருநாகைக் காரோணம் என்னும் நாகப் பட்டினத் தலத்தைப்பற்றிய சிறப்பு, மகிமை ஆகியவற்றை அமைத்துப் பாடப்பெற்றது. நாகை சோழ நாட்டில் உள்ள தலம். இந்நூலாசிரியர் **நிரஞ்சன நாதர்** எனத் தெரிகின்றது. 1057 விருத்தங்களைக் கொண்டது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
சிவமயம்
நாகப்பட்டினத் தல புராணம்
ஆதிபுராண லிங்கோற்பவச் சருக்கம்

மீகா மனைமீ தளநாவாய் விரைவாய் வரைவாய் விரிநீரிற்
போகா தலபோய் வருமாதி புராணன் புராணப்
பொருட்புதிதாய்
மாகா ரோணத் தருட்கெவுரி மனங்கண் குளிர வருமதலை
நாகா பரணக் கணபதிதா ணவில வுலகி னடைபெறுமே.

முடிவு :

நாகைவணி கேசர் நகரிசன மற்றுமுள்ளோர்
ஓகைபெற ஓதுகென ஓதினன்—மாகருணை
நீரோண நாதன் நிரஞ்சனநா தன்றமிழாற்
காரோண நாதன் கதை. 84

பஞ்சக்குரோசங் கடம்பேசுரச் சருக்கமுற்றும்.
ஆக விருத்தம் 1057.
நாகப்பட்டினத் தலபுராண முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

கர வருடம் ஆனி மாதம் 24உ நாகப்பட்டினத்திலிருந்து திருவாரூர்த் தவணை முதலியார் ஒப்பிலாமணிப் பண்டாரத்தின் குமாரன் ஆரூர்ப் பெருமான் எழுதி நிறைந்தது.

நீடூழி வாழ்க. குமரன் றுணை.

Nagappattina Thala Puranam

Size: 21×33. Pages: 206. Lines: 24 on a page. Condition: good.

Note : The Ms. contains 1057 stanzas written by one Niranjana Nathar. This is different from the Puranam by Mahavidwan Meenakshisundaram Pillai.

224. நாகப்பட்டினப் புராணம் (நூல் எண் 517)

அளவு : 21 × 33. வரிகள் : 27.
பக்கங்கள் : 158. நிலை : சிறிது கிலமாகவுளது.

குறிப்பு : பாயிரம் முதல் 24 சருக்கங்களையும் 1101 செய்யுட்களையும் கொண்டது. அச்சான விவரம் தெரியவில்லை. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய புராணத்தினின்றும் இது வேறுபட்டது. நூல் எண் 516னின்றும் வேறுபட்டது.

தொடக்கம் :

உ
ஹரி : ஓம்
நாகப்பட்டினப் புராணம்

மலைவரு பசும்பிடி மணந்து வான்வரு
கலைவளர் கோட்டெழில் காட்டி மேவுமோ

ரலைவறு சிவக்களி றளித்த போதகத்
தலைவனை நினைந்தவன் சரணம் போற்றுவாம்.

முடிவு :

கருமுகில் பொழிந்து வாழி காசினிக் கணியர் நாகைத்
திருநகர் சிறந்து வாழி செழிக்குமந் நகரிற் பெம்மான்
பரவருள் பெருகி வாழி பரிசனத் தவர்கள் வாழி
வெருவரா தியற்றுஞ் செங்கோல் வெந்திறல் வேந்தன் வாழி44

21ஆவது பிரமதீர்த்த மான்மிய முற்றும்.
நாகப்பட்டினப் புராண முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

Nagappattina Puranam

Size: 21×33. Pages: 158. Lines: 27 on a page. Condition: slightly injured.

Note: This contains 24 sargams and 1011 verses and is different from the one written by Mahavidwan Meenakshisundaram Pillai.

225. நீடூர்ப் புராணம் (நூல் எண் 528)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 69. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : நீடூர் என்பது மாயூரத்திற்குச் சுமார் 3 கல் தொலைவில் உள்ள பாடல் பெற்ற தலம். அத்தல மகிமையைப்பற்றிப் பாடிய புராணம் நீடூர்ப் புராணம். இதை இயற்றியவர் வடமலையப்பன் என்று தெரிகிறது. பிரதி மிகவும் சிலமாக, எழுத முடியாத நிலையில் உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
நீடூர்த் தல புராணம்
காப்பு

வான நாடரு மாதவ நாடரு
மோன ஞான முழுது முணர்ந்திடத்
தான மேவு தட விக டாசலத்
தானை மாமுகத் தண்ணலைப் போற்றுவாம். (க)

முடிவு :

துலங்குமிக் கதையைக் கற்றோர் சொற்றவர் கேட்கப் பெற்றோ
ரிலங்கிய புத்த கத்தி லெழுதியே பூசித் தோர்கள்
நலங்கெழு புவியில் வாழ்ந்து நான்குதிக் கொருகோ லோச்சி
யலங்கல்சேர் கற்ப கத்தின ரசுவீற் றிருப்பர் மாதோ.

தீர்த்தச் சருக்கம்......
ஆகச் சருக்கம்......
நீடூர் ......

Nidur Puranam

Size: 21×33. Pages: 69. Lines: 26 on a page. Condition: injured.

Note : The Ms. is not in a good condition and hence without full details. This relates to the Siva sthalam Nidur near Mayuram in Thanjavur district. The author is Vadamalayappan.

226. பஞ்சத்தியாய மாக மாச புராணம் (நூல் எண் 541)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 73. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மாசி மாதமாகிய மாகமாசத்தின் சிறப்புக்கள் மகிமைகள், பேறு பெற்றோர்கள் சிறப்புக்கள் முதலியவற்றை விளக்குவது மாகபுராணமாகும். ஆசிரியர் பெயர் விளங்கவில்லை. ஐந்து அத்தியாயங்களைக் கொண்டது. 520 பாக்களைக் கொண்ட நூல்.

தொடக்கம் :

உ
கணபதி துணை
பஞ்சத்தியாயம்

ஆக்கையெனும் புழுக்குடப்பை யணைந்தணையாப் பொருளை
யருளொளியாம் பராபரைக்கு மப்புறமா மறிவை
நீக்கமொரு மயிர்நுனைக்கு மிடமறவெவ் வுலகு
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவினெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் பழுத்தனந்தந் தவக்குறைகண் முடித்த
பழவடியார்க் கருளுதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்கின்மன விகற்பத்தி னளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம். (க)

முடிவு :

வாழிநான் மறைநெறி வாழி யந்தணர்
வாழிநீ ணிலத்தினில் மாக மாடினோர்
வாழியிக் கதையினை வல்ல மேலவர்
வாழிமா லடியவர் வாழி வையமே. ருO

5ஆவது அத்தியாய முற்றிற்று.
ஆக விருத்தம் 520.

Panchadhyaya Magha Masa Puranam

Size: 21×33. Pages: 73. Lines: 32 on a page. Condition: good.

Note: The Ms. contains 5 chapters and 520 verses. This describes the importance of the Tamil month Masi.

227. பஞ்ச நதிப் புராணம் (நூல் எண் 542)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 51. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பஞ்சநதித் தலமென்பது திருவையாற்றைக் குறிக்கும். பாடல் பெற்ற தலம். இந்நூலாசிரியர் **நிரம்பியவழகர் மாணாக்கர் ஞானக் கூத்தர்** என்பவராவார். இந்நூல் திருவையாற்றின் மான்மியத்தைக் கூறுவது. வாகீசச் சருக்கம் முடிய உள்ளது. 363 செய்யுட்களுடன் அபூர்த்தி. அச்சானது.

தொடக்கம் :

பஞ்ச நதிப் புராணம்
காப்பு

ஞால மெல்லா நயந்து திறையிடுங்
கால னஞ்சுங் கடும்பிணி நீங்கிடுங்
கோல நல்குங் குறையா நிதிதரு
மோல மென்ற களிற்றினை யுள்குவாம்.

முடிவு :

பொய்யிலியைப் பூந்துருத்தி புகழ்ந்து போற்ற
மெய்யிலுற வீழ்ந்து விளங்கப்பதி.........டிக்
கையிலுழ வாரங்கொண்டு கைவளர்...........செய்தே
செய்யில் மணிக் கண்ணல் தரு திண்ணதி யிருந்தார்.

வாகீசச் சருக்கம் முற்றும்.

ஆகச் சருக்கம் ஒன்பதுக்குத் திருவிருத்தம் 363.
சம்பந்தச் சருக்கம்
வெம்பந்த நீக்க வல்ல மெல்லியல் முலைப்பா லுண்டு
வெம்பந்த கலை முன் சரமும் விமலனார் நோக்கம் பெற்று.

Panchanadi Puranam

Size: 21×33. Pages: 51. Lines: 30 on a page. Condition: good.

Note: The Ms. contains 363 verses; incomplete; written by Gnanakoothar, a student of Nirambia Azhagar.

228. பஞ்ச நதிப் புராணம் (நூல் எண் 543)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 5. நிலை : இலமாக உளது.

குறிப்பு : நூல் எண் 542இன்படியே.

Panchanadi Puranam

Size: 21×33. Pages: 5 Lines: 25 on a page. Condition: injured.

Note: Same as the previous one.

229. பட்டீச்சுர மாகாத்மியம் (நூல் எண் 545)

அளவு : 21 × 33. வரிகள் : 22.
பக்கங்கள் : நிலை : மிகக் இலமாக உளது.

குறிப்பு : இப்பிரதி எழுத முடியாத நிலையில் ஒடிந்து காணப்படுகிறது.

Patteechura Mahatmiyam

Size: 21×33. Pages: Lines: 22 on a page. Condition: much injured.

Note: Not capable of being copied.

230. பழைய திருப்பெருந்துறைப் புராணம்

(நூல் எண் 580)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 223. நிலை : பழமை.

குறிப்பு : திருப்பெருந்துறை யென்பது அறந்தாங்கிப் புகை வண்டி நிலையத்திற்கு 7 கல் தொலைவில் உள்ளது. இவ்வூரில் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகர் இறைவருக்குக் கோயிலமைத்துள்ளார். இறைவன் வாதவூரைத் தடுத்தாட்கொண்டது இத்தலத்திலே. இத்தலத்தை ஆவுடையார் கோவில் என்றும் கூறுவர். ஆசிரியர் சுந்தரலிங்க முனிவர். 2719 செய்யுட்களைக் கொண்டது. அச்சான விவரம் தெரியவில்லை. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்பு இத்தலத்துக்கு ஒரு புராணம் இயற்றியுள்ளார்கள்.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருப்பெருந்துறைப் புராணம்
கடவுள் வாழ்த்து
வெயிலுவந்த விநாயகர்

பொன்வரைமேற் றூழருவி போலமத தாரைதிகழ்
 பொருவி னீமுன்
மன்னுமிளந் திங்களெனக் கிம்புரிதாங் கொருகோட்டு
 வள்ளன் முன்னாட்
கன்னியிமா சலையருச்சித் தேத்திவரங் கொள்ளவரு
 கடவு ளியார்க்கு
முன்னவனும் வெயிலுவந்த கணபதிமுண் டகமலர்த்தாள்
 முடிமேற் கொள்வாம்.

முடிவு :

அலகிலருட் குருந்திறையொ டெண்ணலறு
 மூந்நூற்றந் தணர்கள் வாழ்க
உலகமெலாம் வாழ்கபொன்னித் திருநாடா
 ளரசுசெங்கோ லோங்கி வாழ்க
நலமுதவும் பெருந்துறையீ சர்க்குரிய
 தொழிலிறைமை நாளுந் தாங்கி
மலிவுறவப் பணிசெயரு ளாசலமா
 முனியருளின் வாழ்க மாதோ.

பலசுருதிச் சருக்க முற்றிற்று.
திருப்பெருந்துறைப் புராண முற்றிற்று.

Pazhaya Thirupperundurai Puranam

Size : 21×33. Pages: 223. Lines 30 on a page. Condition: old.

Note : The Ms. contains 2719 verses written by one Sundaralinga Munivar. Mahavidwan Meenakshisundaram Pillai has also written a puranam about this sthalam where Manickavachagar erected a shrine for Lord Siva.

231. திருப்பரங்கிரிப் புராணம் (நூல் எண் 88b)

அளவு : 21 × 17. *வரிகள் :* 20.
பக்கங்கள்: 5. *நிலை : சிலமாக உளது.*

குறிப்பு : *திருப்பரங்கிரிப் புராணம் உரைநடையில் உளது. இந்நூல் ஐந்து பக்கங்களே கொண்டு அபூர்த்தியாக உளது.*

தொடக்கம் : *கந்தமாதன பருவத் தெண்சிகரங்களில் ஆருவ தாகிய சத்தியசிருங்கம் சேடனோடு இகலிய வாயுவினுற் பேர்த்து வந்து போகடப் பெற்றமையாற் றிருப்பரங்கிரிக்குச் சத்திய கிரியென்று மொரு பெயர்.*

முடிவு : *குமாரக்கடவுள் நக்கீரர் தம்மைப் பாடாமையா லவர்மீதொரு குற்றமேற்றிக் குகையி லடைப்பித்தார். (குற்றம் மீனும் பறவையுமான அரசிலையைத் துண்டிக்க அவைகள் இறத்தல்) நக்கீரர்......... திருமுருகாற்றுப்படை பாடிக் கிழவோனே என முடிக்க.*

Thirupparangiri Puranam

Size: 21×17. Pages: 5. Lines: 20. Condition: injured.

Note : This is in prose and contains only 5 pages: incomplete.

232. திருப்பனந்தாள் தல புராணம் (நூல் எண் 368)

அளவு : 21 × 33. *வரிகள் :* 17.
பக்கங்கள் : 282. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : *திருப்பனந்தாள் சோழ நாட்டில் ஆடுதுறைப் புகைவண்டி நிலையத்திலிருந்து ஏறத் தாழ 7 கல் தொலைவில்*

உள்ள தலம். இது பாடல் பெற்ற தலம். இத்தலத்தில் தாடகை என்னும் பெண்ணுக்காகச் சிவலிங்கப் பெருமான் சாய்ந்து கொடுத்தார். சாய்ந்திருந்த லிங்கத்தைக் குங்குலியக் கலய நாயனர் மணிக்கயிறு பூட்டி நேர்படுத்தியதாகப் பெரிய புராணங் கூறும். இந்நூல் ஆசிரியர் செஞ்சடை வேதிய தேசிகர் என்பார். இந்நூல் தருமையாதீன வெளியீடாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சருக்கம் 18, செய்புள் 890. அச்சுப் பிரதியில் 625 செய்யுட்களே உள்ளன.

தொடக்கம் :

உ

சிறப்புப் பாயிரம்
ஆண்ட விநாயகர் துணை
திருப்பனந்தாள் ஸ்தல புராணம்
விநாயகர் காப்பு

விருப்பனந்தா தியற்றமிழ்த்தென் மொழிக்கவிதைத்
திறமுடிப்பான் விளங்கும் செம்பொற்
பொருப்பனந்தா னருளவிபங் கடவுள்கிருத் திமவடிவிற்
பொலிந்து ளானைக்
கருப்பனந்தா ரஞ்சொரியுங் கழனிபுடை சூழ்ந்திலகுங்
கவிஞர் செல்வத்
திருப்பனந்தா ளிருப்பமைந்த வாண்டவிநா யகனையன்பிற்
சிந்தை சேர்ப்பாம்.

முடிவு :

சுடர்க டங்கிலை பெற்றுத் துலங்குக
யடைவின் மாரி யமைந்துறத் தூங்குக
படியி லஞ்செழுத் தோங்குக பல்லறம்
வடுவில் லாமலிவ் வையக மல்கவே. 62

குங்கிலியக் கலயனர் சருக்க முற்றிற்று.
ஆகச் சருக்கம் 18க்குத் திருவிருத்தம் 890.
திருப்பனசைப் புராணம் முற்றிற்று.
சடையப்பார் துணை.

இது எழுதினது பிலவ ௵ ஆவணி ௴ முதலில் சோமவாரத்தன்று ஆரம்பித்து ஷை ௵ புரட்டாசி ௴ 8ம் உ சோமவாரத்தன்று எழுதி முடிந்தது.

இங்ஙனம் சடையப்ப ஓதுவான் கையெழுத்து.
சடையப்பர் துணை.
திருப்பனந்தாள்.

Thiruppanandal Thala Puranam

Size: 21×33. Pages: 282. Lines: 17 on a page. Condition: good.

Note : The Ms. contains 18 sargams and 890 verses; published by Dharmapura Adheenam, as Thiruppanandal temple is under their control. In the printed book there are only 625 stanzas.

233. பாச்சிலாச்சிராமப் புராணம் (நூல் எண் 583)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 111. நிலை : பழமை ; இலமாக உளது.

குறிப்பு : பாச்சிலாச்சிராமம் என்பது திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள சிறந்த தலம். திருவாசி என்று வழங்கும். இந்நூல் மயிலாடுதுறை மெய்ஞ்ஞான முனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. இதில் எட்டுச் சருக்கங்களும், 500 பாக்களும் உள. காப்புமுதல் ஐந்து பாக்கள் பிரதியில் இல்லை. கொல்லி மழவன் புதல்வியின் முயலக நோயைத் திருஞானசம்பந்தர் தீர்த்தருளிய தலம். அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
சுப்பிரமணிய சுவாமி துதி
(காப்பு 1 முதல் 5 வரை காணப்படவில்லை)

போந்தனைவ ரும்புவியோர் வரங்கள்பெற வருளும்
புகழ்ப்பாச் சிலாச்சிரா மப்புனிதா வென்றே
சேந்தனையோ ராறுமுகத் தண்ணலைமுன் ஞன்கு
திண்புயனைப் பொன்னக ருலகுக் கெல்லாம்
வேந்தனைச் சூர்ப் பகைவனைக்கோ ழிக்கொடியுள் ளானை
விசாகனைவிண் ணகர்க்கிறைவ னருள்தெய்வ யானை
காந்தனை நல் வள்ளிமண வாளனைவேற் குகனைக்
கந்தனையங் குசமுடைய கர்த்தனைப்போற் றிடுவாம் 6

முடிவு :

சிருறுதன் மூகியென் னும் வருஷந் தன்னில்
சிறப்புமிக மேவுமா வணிமா தத்தில்

பேருறுமல் வாவணிமூ லத்தில் விண்ணோர்
பெருமாள்மாற் றறிவாள ரகில மீன்ற
காருறுபூங் குழலாளங் கிளமங்கை யுடனே
களித்தென்றும் வாழ்பாச்சி லாச்சிராம புராணம்
ஏருறவே படித்திந்த வவனியின் மிக்கோர்க
ளெல்லாரும் வினவிமகிழ்ந் திடவரங்கே றியதே. 101

திருவிழாச் சருக்க முற்றும்.
திருச்சிற்றம்பலம்.
ஆகத் திருவிருத்தம் 505.

பாயிரச்	சருக்கம்	30	அகத்தியன் றவசிலைச்	சருக்கம்	38
தலவிசேடச்	,,	75	கமலன் பதமுத்திச்	,,	79
பிரமவருச்சனைச்	,,	30	பிரமதீர்த்தச்	,,	42
வாலசுந்தரியருச்சனை	,,	110	திருவிழாச்	,,	101

இது திருச்சிராப்பள்ளி நாஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஆறுமுக நயினார் கொடுத்த பிரதியைப் பார்த்து எழுதி இரண்டு முறை ஒத்திடப்பட்டது.

3-3-1900.

Pachilachirama Puranam

Size: 21×33. Pages: 111. Lines: 25 on a page. Condition: old and much injured.

Note : The Ms. contains 8 sargams and 500 verses composed by one Mayiladuthurai Meignana Munivar. This sthalam Pachilachiramam is near Tiruchirappalli.

234 பார்க்கவ புராணம் (நூல் எண் 590)

அளவு : 21×33. வரிகள் : 48.
பக்கங்கள் ; சுமார் 600. நிலை : நிலமாக உளது.

குறிப்பு : பார்க்கவ புராணம் என்பது விநாயகரைப்பற்றிய புராணம். விநாயக புராணம் என்றும் கூறுவர். அச்சானது. முற்றும் உளது. ஆசிரியர் கச்சியப்ப முனிவர். இந்தப் புராணத்தில் நகரப் படலத்தில் சென்னை மாநகரத்தை வருணித்துள்ளார். உபாசனை காண்டம், லீலா காண்டம் இரண்டும் சேர்ந்த பிரதி. இறுதியில் விநாயகப் பெருமானைப்பற்றி ஒரு பாடல் காணப்படுகிறது.

தொடக்கம் :

உ
கணபதியே நம
பார்க்கவ புராணம்-பாயிரம்

திங்களணி சடைப்பெருமான் பூசை யாற்றித்
திரிமதிலுங் கடந்திடமுன் னின்முன் யாவன்
தங்குகடற் புவிவரைப்பி னெடியோ னுதிச்
சகலருக்கு மூறுதவிர்க் கின்முன் யாவன்
அங்கவன்மெய்ச் சரிதமொழி பெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணுக வடுத்து ளேற்கு
மங்கலசின் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடைத்து வளரு மன்றே.

முடிவு :

அருள்பொழி கணேசன் செய்ய வடிமலர் வாழ்க வன்னுன்
பொருவிலிப்புராணமோங்இப் பொலிகவீ துணர்ந்தெல் லோரு
மருவுக பயன்க ளுன்கு மன்னுக வுலக மெல்லாந்
திருவொடுஞ் சிறக்க வெங்குஞ் செயிரிலாச்
சைவ மென்றும். 62

சோமகாந்தன் முத்திப் படலம் முற்றிற்று.

Bhargava Puranam

Size: 21×33. Pages: about 600. Lines: 48 on a page. Condition: old and much injured.

Note : This Puranam written by Kachiappa Munivar is also called Vinayaka Puranam. There are two kandams.

235. பார்க்கவ புராணம் (நூல் எண் 591)

அளவு : 21 × 17. வரிகள் : 21.
பக்கங்கள் : 311. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பார்க்கவ புராணம் இரு காண்டங்களை யுடையது முதலாவதாகிய உபாசனு காண்டத்தில் பாயிரம்முதல் சகஸ்திர நாமப் படலம் வரை இதில் உளது. அச்சானது.

தொடக்கம் :

திங்களணி சடைப் பெருமான்
......வாரிமட மடையுடைத்து வளருமன்றே.

முடிவு :

சகஸ்திரநாமப் படலம்

கழலணிந்த விறற்சோம காந்தனே யவரவர்கள்
விழைவினொடு மனுட்டித்த வியத்தகுகா தைகள்புகன்றும்
பழைய திரு விளையாடற் பண்பினையுங் கேளென்று
பிழைதபுமா தவத்துயர்ந்த பிருகுமுனி வரனவில்வான். 73

சகஸ்திர நாமப் படலமும் உபாசனா காண்டமும் முற்றும்.
ஆகப் படலம் 75க்கு விருத்தம் 3046

Bhargava Puranam

Size 21×17. Pages: 311. Lines: 21 on a page. Condition: good.

Note : The Ms. contains verses only up to Sahasranama Padalam in Upasana Kandam.

236. **பார்க்கவ புராணம்** (நூல் எண் 592)

அளவு : 21 × 17. வரிகள் : 20.
பக்கங்கள் : 329. நிலை : பழமை.

குறிப்பு : இதில் இரண்டாவதாகிய லீலா காண்டம் உளது. வக்ரதுண்டனவதாரப் படலம்முதல் சோமகாந்தன் முத்திப் படலம் வரை உளது. வரகனேரி, சவரிமுத்தா பிள்ளை அவர்களால் எழுதப்பெற்றது. அச்சானது.

தொடக்கம் :

உ
லீலா காண்டம்
முதலாவது வக்ரதுண்டாவதாரப் படலம்

திங்களும் பனிநீர்க் கங்கையு மணிந்த
செஞ்சடை விநாயகப் பெருமான்
பொங்கருள் வழங்கு காதைக ளின்று
புகலென வியாதனங் கிரப்பக்
கொங்குமி ழலர்ந்த முள்ளரைக் கமலங்
குடிபுகுங் குண்டிகைக் கரத்தோன்
றங்கிய விறைவன் றிருவிளை யாட
றனைமுறை சாற்றுதல் வலித்தான்.

முடிவு :

வரசன்ன வீரமுரத் திடைவிளங்க முடிமுடியின்
வயங்க விண்ணோர்

பரசன்ன நினதுதிருச் சேவடிநா யேன்சிரத்தும்
பதித்தல் செய்யாய்
விரசன்ன மலர்த்தடஞ்சூழ் சென்னைநகர்
வீற்றிருந்த விமல வாழ்வே
பிரசன்ன விநாயகனே யடியருளம் பிரியாத பெருமையானே.

விநாயகமூர்த்தி திருவுளம் உண்டாகவும். சிவமயம் 1868 ௵ செப்டம்பர் ௴ 24 ௳ குருவாரம் பார்க்கவ புராணமெழுதி முடிந்தது.

Bhargava Puranam

Size: 21×17. Pages: 329. Lines: 20 on a page. Condition: old.

Note: This contains Leela Kandam from Vakrathundan Avatarap padalam to Somakantan Muthip padalam. The Ms. was copied by Varaganeri Savarimutha Pillai.

237. திருப்புடை மருதூர்ப் புராணம் (நூல் எண் 370 a)

அளவு : 21 × 33. வரிகள் : 38.
பக்கங்கள் : 1—92. நிலை : பழமை.

குறிப்பு : திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது திருப்புடைமருதூர். இதைப் புடார்ச்சுனம் என்று வடமொழியில் வழங்குவர். தலைமருது, இடைமருது, கடைமருது என்று மூன்று தலங்கள் மருத மரத்தைத் தல விருட்சமாக உடையவை. மல்லிகார்ஜுனம் என்னும் ஸ்ரீசைலம் தலைமருது. மத்தியார்ஜுனம் என்னும் திருவிடைமருதூர் இடைமருது. திருப்புடைமருதூர் கடைமருது. இந்நூலின் முதற் பகுதியே இப்பிரதியாகும். இப்பிரதியில் ஆலயங் கண்ட படலத்தில் 75ஆவது பாடலிலிருந்து உளது. இந்த நூலின் முற்பகுதி நூல் எண் 311ஆம் பிரதியில் உள்ளது. இப்பிரதியில் 13ஆவது படலம் 75ஆவது பாடலிலிருந்து 24ஆவது படலமாகிய தாம்பிரவன்னிப் படலத்தில் 21ஆவது பாடல் வரை உள்ளது.

தொடக்கம் :

ஆலயங் கண்ட படலம்

துதித்தடி பணிந்து போற்றிச் சோதியான் றனைப்பூசிக்க
விதிப்படி வேண்டுமெல்லா மமைத்துமெய் விமலற் கன்பால்
ததிப்படி அபிடே கத்தாற் சந்தனக் குழம்பா லாட்டி
நதிப்புன லாட்டி நன்பட் டாடையு நகைத்தண் போதும். 75

முடிவு :

காஞ்சி கழுக்குன் றம்கன்னம் திருக்கா ளத்தி வீரட்டம்
வாஞ்சி திருவம் பலமாரூர் மன்னு சைய வரையெய்தி
புஞ்சோ லைக்கிந் திரன்வேண்டப் பொன்னி நதியு
முண்டாக்கி
மாஞ்சோ லைகள்சூழ் பள்ளிமலை மதுரை பரங்குன் றினை
வணங்கி 21

Thiruppudaimarudur Puranam

Size: 21×33. Pages: 92. Lines: 38 on a page. Condition: old.

Note : The Ms. contains only a portion of the complete work.

238. திருப்புடைமருதூர்ப் புராணம் (நூல் எண் 370 b)

அளவு : 21 × 33. வரிகள் : 29.
பக்கங்கள் : 93—163. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் தாம்பிரவன்னிப் படலத்தில் 22 ஆவது பாடலிலிருந்து உள்ளது. இப்பிரதி 370a இன் தொடர்ச்சியாகும். இறுதியில் சருக்க அட்டவணை காணப்படுகிறது.

தொடக்கம் :

தாம்பிர வன்னிப் படலம்

கருவை திரிகூ டம்பணிந்து கலைக்கோட் டுவன்பூ சித்ததல
மருவுஞ் சயிலம் பணிந்தேத்தி மலையார் சாரல் முக்காவைப்
பரவிப் புருடன் பூசித்த பரனைப் பணிந்து பாங்கான
வருவி கொழிக்கு முத்தலைசூ ழார மலையை யடைந்
தனனால். 22

முடிவு :

வாழ்க தெட்சண காசி வளம்பதி
தாழ்வி லாத புடார்ச்சுனஞ் சார்ந்தருள்
சூழி லேபன சுந்தரன் றொல்கதை
யேழ்பெ ரும்புவி யெங்கும் விளங்கவே. 65
முன்றீசுவரப் படலம் முற்றும்.
ஆக விருத்தம் 1834
திருப்புடைமருதூர்ப் புராண முற்றும்
புடார்ச்சுன மான்மிய முற்றியது.

புடார்ச்சுனபதி துணை. நெட்டெழுத்து சிதம்பரம் குழந்தை வேலாயுத பிள்ளை.

திருச்சிற்றம்பலம்

Thiruppudaimarudur Puranam

Size : 21×33. Pages: 71. Lines: 29 on a page. Condition: old.

Note : Same as the previous one.

239. திருப்புடைமருதூர்ப் புராணம் (நூல் எண் 311a)

அளவு : 21×33. *வரிகள்* : 36.
பக்கங்கள் : 84. *நிலை* : *பழமை.*

குறிப்பு : *இது நெல்லை மாவட்டத்தில் உள்ள திருப்புடைமருதூர் என்னும் தலத்தின் புராணமாகும். இந்நூலில் தொடக்கத்திலிருந்து 13ஆம் படலம் 74ஆம் செய்யுள் வரை உள்ளன. இதன் தொடர்ச்சி நூல் எண் 370a, 370b என்ற பிரதிகளில் உள்ளது.*

இப்பிரதியின் முற்பகுதியில் 9 பக்கங்களில் திருக்கருவைத் தலபுராணம் காணப்படுகிறது. நாரதருபதேசித்த வத்தியாயம் 44ஆம் பாடல் முதல் உள்ளது.

தொடக்கம் :

சிவமயம்
திருப்புடைமருதூர் என்னும் புடார்ச்சுன மான்மியம்
புடார்ச்சுன மான்மியம்
கடவுள் வாழ்த்து

பூமேவு புடார்ச்சுனபுண் ணியற்கேற வவர்புகழாம்
பாமேவு நால்வகைய சொன்மலராற் பத்திபெற
நாமேவக் கரநாரே நாராகத் தொடையியற்றக்
காமேவு மருதடியைங் கரனடியைக் கைதொழுவாம்.

முடிவு ;

இப்பதி போன்மற் றெங்கு மிலையென வியம்பி எந்தை
செப்புதற் கரிய சீர்த்தி செப்பியே யளவ ளாய்மீ
விப்பிர முனிவன் மன்ன னுடனெழீஇ விமலற் போற்றத்
துப்புறழ் வேணி யண்ண லாலயஞ் சூழ்ந்து போந்து. 74

Thiruppudaimarudur Puranam

Size : 21×33. Pages: 84. Lines: 36 on a page. Condition: old.

Note : Same as previous ones; contains also certain portions of Thirukkaruvai Thaia Puranam.

240. திருப்புத்தூர் ஸ்தல புராணம் (நூல் எண் 374)

அளவு : 21 × 33. வரிகள் : 16.
பக்கங்கள் : 138. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருப்புத்தூர் பாண்டி நாட்டைச் சார்ந்த சிறந்த பாடல் பெற்ற தலம். இத்தலத்தைச் சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடியுள்ளார்கள். இப்புராணம் சங்கரநாராயணன் என்ற சான்றோரால் பாடப்பெற்றது. அச்சான விவரம் தெரியவில்லை. இது 14 சருக்கம், 502 செய்யுட்களுடன் அபூர்த்தியாக வுள்ளது. வன்றொண்டச் செட்டியார் மாணாக்கர் ராம. சொக்க லிங்கஞ் செட்டியார் இயற்றிய புராணத்தினின்றும் இது வேறு பட்டது.

தொடக்கம் :

உ

திருப்புத்தூர் ஸ்தல புராணம்

நிருத்த மேவிய சிற்சபை நின்றருள்
ஒருத்தன் மாக்கதை யுற்றுரை செய்யவே
கருத்த லர்த்திக் கவிப்பொரு டந்திடுந்
திருத்த லக்களிற் றின்றிருப் பாதமே.

முடிவு :

அச்சுதன் முடிமே லஞ்சலி செயலா
லதிகமச் சிவகதை யிதனை
யிச்சையாய்ப் படித்தோர் கேட்பவர் கேட்போர்க்
கிசைப்பவ ரெழுதினர் யாரு
முற்செயும் வினைபோ யான்பெறு வரத்தான்
முறைசெயு மரசராய்ச் செல்வ
நிச்சயம் பெற்றுச் சிவபத மடைவா ரென்றனள்
நிகரிலாக் கமலை,
திருமகள் காண நடஞ் செய்த சருக்க முற்றும்.

Thirupputtur Sthala Puranam

Size 21×33. Pages: 138. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 14 sargams and 502 stanzas (incomplete) written by one Sankara-

narayanan and relates to Tirupputtur in Ramnathapuram district. This is different from the one written by Chockalingam Chettiar.

241. திருப்புத்தூர்ப் புராணம் (நூல் எண் 375)

அளவு : 21×33. *வரிகள் : 27.*
பக்கங்கள் : 95. *நிலை : சிதிலம்.*

குறிப்பு : *எண் 374இன்படியே அமைந்தது. இந்தப் பிரதியில் எண் 374இல் கண்ட திருமகள் காண நடஞ்செய்த சருக்கத்துக்கு மேலும் வயிரவ சரிதைச் சருக்கம், சிதளி தீர்த்தச் சருக்கம், ஆதி சந்திர சருக்கம் 55ஆம் பாடல்வரை குறையாக வுள்ளது.*

தொடக்கம்: 374இன்படியே.

முடிவு :

இற்றைநா ளளவுங் கங்கையந் தீரத் திருந்தன
(மீ)சனின் னருளான்
மற்றையிக் கொன்றை வனந்தனி லடைந்தோம்
வைகறை யணைந்தன கரும
முற்றிடப் புனலுங் கண்டிசை நீயு
முதிர்தவங் குன்றிட லாலா......

Thirupputhur Puranam

Size: 21×33. Pages: 95. Lines: 27 on a page. Condition: injured.

Note : This is the continuation of the previous one and incomplete.

242. திருப்புறம்பயத் தல புராணம் (நூல் எண் 376)

அளவு : 21×33. *வரிகள் : 24.*
பக்கங்கள் : 75. *நிலை : பழமை.*

குறிப்பு : *திருப்புறம்பயம் என்பது சோழ நாட்டில் கும்பகோணத்திற்கண்மையில் உள்ளது. தேவாரம் பெற்ற தலம். திருப்பாம்புரம் என்று இப்போது வழங்கப்பெறும். இந்நூல் 12 சருக்கங்களும், 381 பாடல்களும் கொண்டது. இதன் ஆசிரியர் சங்கரமூர்த்தி என்பர். அபூர்த்தி.*

தொடக்கம் :

உ
சிவமயம்
திருப்புறம்பயத்தலப் புராணம்
திருச்சிற்றம்பலம்
ஹரி ஓம்

பூத்த ஞானம் பொலிந்திட மும்மலம்
பேர்த்த வின்பப் பிரளய மேலிட
வாய்த்த புன்னை வனத்திற் பிரளயங்
காத்த யானை கழலிணை போற்றுவாம்.

முடிவு :

பஞ்ச கவ்விய மாட்டிநெய் யாட்டிப்
பசுங்க னித்திரள் பால்தயி ராட்டி
விஞ்சு சந்தனம் கரும்புநீ ராட்டி
விரைகொள் மஞ்சன மாட்டிய பின்னர்
மஞ்ச ளிற்பொலி பொற்றுகில் சாற்றி
வயங்க வேகவ மணிபல கலனுங்
கஞ்ச னத்தொடை கூவிளை சாற்றிக்
கடுக்கை மாலிகை கரந்தையுஞ் சாற்றி. 23

விந்தாசலச் சருக்கம் முற்றும்.
சருக்கம் 12க்குத் திருவித்தம் 381.

Thiruppurambaya Thala Puranam

Size 21×33. Pages: 75. Lines: 24 on a page. Condition : old.

The Ms. contains 12 sargams and 381 stanzas written by one Sankaramurthi; incomplete. This sthalam is near Kumbakonam.

243. திருப்பெருந்துறைப் புராணம் (நூல் எண் 378)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 236. நிலை : பழமை.

குறிப்பு : திருப்பெருந்துறை பாண்டி நாட்டில் மாணிக்க வாசகருக்கு இறைவன் குருவாக எழுந்தருளித் திருவருள் பாலித்த தலம். இப்போது ஆவுடையார் கோவில் என்று வழங்கும். அறந்தாங்கிக்குக் கிழக்கே உள்ளது. அதன் வரலாற்றைச்

சொல்லும் இந்தப் புராணம், திரிசிரிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருப்பெருந்துறைப் புராணத்தினின்றும் வேறுபட்டது. துறைசை ஆதீன அடியார் ஒருவரால் இயற்றப்பெற்றது.

33 சருக்கம் 1269 செய்யுட்கள் கொண்டது. ஐயரவர்கள் பதிப்பித்த ஸ்ரீ பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைப் புராண முகவுரையிலிருந்து இந்நூலாசிரியர் ஸ்ரீ சாஸ்திரம் சாமிநாத முனிவர் என அறிய வருகின்றது. வேறு விவரம் தெரியவில்லை. அச்சிடப் பெற்றதாகவும் அறியக் கூடவில்லை.

தொடக்கம் :

உ

கணபதி துணை

திருப்பெருந்துறைத் தல புராணம்

பொதுப் பாயிரம்

காப்பு

திருந்துபுகழ் மிகுந்ததிருப் பெருந்துறைப்பு ராணம்வளர்
சிறப்பொ டின்பம்
பொருந்துதமி ழைப்பகர்தற் கெமதகத்திற் பிரியாமற்
புணர்ந்து முன்னின்
றருந்தமிழ்தத் தின்சுவைபோ லுணர்வுதர வெயிலுவந்த
அழகு முக்கட்
பெருந்துதிக்கைத் தொந்திவயிற் றும்பன்முகப்
பிள்ளைபதம் பேணல் செய்வாம்.

முடிவு :

அருட்பெறு மினிய முந்நூற் றருமறை முனிவர் வாழ்க
உருக்கமோ டபிடே கக்கட் டளைமடத் துரவோர் வாழ்க
குருப்பணி வளர்க்குந் தஞ்சைக் கொற்றவன் வாழ்க என்றுந்
திருப்பெருந்துறைப்புராணஞ்சிறப்பொடும்வாழ்கமாதோ.

33 ஆவது ஆன்மநாதர் புரூரவச் சக்கரவர்த்திக்கு முத்தி கொடுத்த சருக்கம் முற்றும். ஆகச் சருக்கம் 33க்குத் திருவிருத்தம் 1269.

திருப்பெருந்துறைத் தல புராணம் எழுதி வளர்ந்தது. நீடூழி காலம் வாழ்க. திருச்சிற்றம்பலம். ஆன்மநாத சுவாமி துணை. நமச்சிவாயர் துணை. நடராசர் துணை. சிவமயம். விசுவாசு ௵ தைமீ 25உ குருவார நாள் பல்லவராயப்பட்டி லிருக்கும் சாத்துக்குட ராமலிங்கம் பிள்ளை அவர்கள் குமாரர் சொக்கலிங்கம் கையினால் மேற்படியார் குமாரர் தில்லைநாயகம்

பிள்ளைக்குத் திருப்பெருந்துறைத் தலப்புராணம் எழுதி நிறை வேறினது. திருச்சிற்றம்பலம். மா. 11. பா. 48.

விசுவாசு ௵ மாசிமீ 28 ஆம் தேதி ஆதிவாரத்தன்று கும்பகோணம் ஆ. கிருஷ்ணசாமி நாயக்கனுல் திருப்பெருந் துறைத் தல புராணம் எழுதி நிறைவேறினது.

Thirupperundurai Puranam

Size: 21×33. Pages: 236. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. contains 33 sargams and 1269 verses written by one Sastram Swaminatha Munivar as referred to by Dr. Iyer in the introduction in the Thirupperundurai Puranam by Meenakshi-sundaram Pillai.

244. திருப்பெருந்துறைப் புராணம் (நூல் எண் 379)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 284. நிலை : பழமை.

குறிப்பு : திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியது. 1656 பாடல்களைக் கொண்டது. டாக்டர் ஐயரவர்களால் 1892ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

திருப்பெருந்துறைப் புராணம்
குருந்தமூல குருநாதன் றுணை
திருச்சிற்றம்பலம்
காப்பு - விநாயகர் துதி

மாமேவு புயனிறத்து மோட்டாமை முதுகொருகை
வாங்கித் தற்குப்
பாமேவு வயிறிரண்டென் றருச்சிப்பார் கொள்ளாத
படியென் பாதி
தாமேவு தந்தையகன் மார்பணிந்து புகமொன்றே
தான்கைக் கொண்டு
நாமேவு கருணையின்வாழ் களிற்றுமுகப் பெருமானை
நயந்து வாழ்வாம்.

முடிவு :

தூய திரு வெண்ணீறு ....
.... வாழ்க.

நைமிச முனிவர் பெருந்துறை யடைந்து பூசித்த படல முற்றுப் பெற்றது. பாயிரமுள்படப் படலம் 33க்குக் கூடிய திருவிருத்தம் 1731.

திருச்சிற்றம்பலம்.
திருப்பெருந்துறைப் புராணம் முற்றுப் பெற்றது.
குருந்த குருநாதன் றிருவடிகளே சரணம்.

Thirupperundurai Puranam

Size: 21×33. Pages: 284. Lines: 26 on a page. Condition: old.

Note : The Ms. contains 1656 verses. Author: Mahavidwan Meenakshisundaram Pillai. Edited and Published by Dr. Iyer in 1892.

245. திருப்பைஞ்ஞீலிப் புராணம் (நூல் எண் 833)

அளவு : 21×33. வரிகள் : 23.
பக்கங்கள் : 27. நிலை : சிதிலம்.

குறிப்பு : சோழ நாட்டில் தேவாரம் பெற்ற தலங்களில் ஒன்று திருப்பைஞ்ஞீலி. திருப்பைஞ்ஞீலித் தலபுராணத்தில் பாயிரமுதல் 3ஆம் அத்தியாயம் 25 பாடல் வரை உள்ளது. இதற்கு மேற்பட்ட பகுதி 388a என்ற பிரதியில் உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருப்பைஞ்ஞீலிப் புராணம்
காப்பு

கமல பதிதிகிரி கரதல முரகரி
அமரர்கள் மகபதி யமல முனிவரர்கள்
தமது நினைவின்வழி தருபதி னொருகரன்
எமது தரளகிரி யிபமுகர் க்ருபை துணை (க).

முடிவு :

திரிபுரி நகைக்கனலி லெரிபுர நிலைத்துவெளி
திரிபுர மெனப்புகலு வார், அரிபுரமு ருளரிபுரம்

வலாரி புரமுளரிபுர மலரிபுர மாசாரி மகன்,
புரிபுரமுகற் சிகரனகரி புரம்வைகரி புரந்திடு
திரைப்புணரியாம், பரிபுரமும் விண்ணிடை
யுமற்றின சுமற்றிவிடு பரிபுர மெனக்கதறியே. 25

Thiruppaignnili Puranam

Size: 21×33. Pages: 27. Lines: 23 on a page. Condition: injured.

Note: The Ms. contains only a portion of the Puranam.

246. திருப்பைஞ்ஞீலிப் புராணம் (நூல் எண் 383a)

அளவு : 21×33. வரிகள் : 42.
பக்கம் : 92. நிலை : பழமை.

குறிப்பு : திருச்சிராப்பள்ளிக்குச் சுமார் 12 கல் தொலைவில் உள்ள தலம் திருப்பைஞ்ஞீலி. அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் கட்டமுது அளித்த தலம். அதற்குரிய தடாகமும், தோட்டமும் இத்தலத்திற்குச் சுமார் ½ கல் தொலைவில் உள்ளன. 383இல் உள்ளவற்றுக்குமேல் இப்பிரதியில் மூன்றும் அத்தியாயத்தில் 26ஆம் பாடல்முதல், இறுதியில் அங்கமித்திரன் அத்தியாயத்தில் 40 பாடல் வரை உள்ளது. எஞ்சிய பகுதிகள் இல்லை. அபூர்த்தி.

தொடக்கம் :

விஞ்சியெழு நெஞ்சுசுடு சஞ்சலநெ டுஞ்சனன்
வெஞ்சினமொ டுஞ்சுழலவே
அஞ்சுவித மஞ்சுட னிரண்டுவித மஞ்சுமன
மஞ்சின தினஞ்சிதறியே
பிஞ்செருக் கங்கனியில் விண்ட பஞ்செசன நஞ்சு
பிஞ்செசன குலைஞ்ச சிலவே
கொஞ்சுசிறு கிஞ்சுகக் குஞ்சிளஞ் சிறகெனக்
கொஞ்ச கிஞ்சித மானதே. (உசு.)

முடிவு :

இப்பான்மைத் தென்னவெழுத் தைந்தினு மகிமைபல
வெடுத்துக் கூறி
யப்பான்மைந் தனுக்குமுனி யுபதேசித் தனன்மகத்தி
லடாது செய்த
தப்பான்மைக் கடல்விடம்போல் வருந்துயர்தீர்த் தொடுங்கு
ணிபங்கூழ் தழைக்குங்கால
மொப்பான்மை சொரியவளர்ந் திடல்வரவுறுதி
போலங் கவற்குவர வுறுதி தானே. 40

Thiruppaignnili Puranam.

Size: 21×33. Pages: 92. Lines 42 on a page. Condition: old.

Note: This is the continuation of the previous one and some portions are wanting. This sthalam is near Tiruchirappalli.

247. மதுரைத் தல வரலாறு (நூல் எண் 625)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள்: 53. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பாண்டி நாட்டின் நடுநாயகமாகவும், தலை நகரமாகவும் விளங்கும் ஒப்பற்ற தலம் மதுரை. இறைவன் மீனாட்சியம்மையைத் திருமணங் கொண்ட தலம். இறைவன் 64 திருவிளையாடல்கள் செய்தருளிய தலம். மதுரைக்குக் கடம்பவனம், ஆலவாய், கூடல் என்ற பெயர் உண்டு. பொற்றாமரை வாவி யமைந்தது. மூவர் பாடல் பெற்ற தலம். பாண்டி மன்னர்கள் ஆண்டு சங்கத்தமிழ் வளர்த்த தலம். இத்தகு பெருமையுடைய மதுரையம்பதியின் வரலாற்றை உரை நடையில் உரைப்பது இந்த நூல்.

தொடக்கம் :

உ
சிவமயம்
மதுரைத் தல வரலாறு (வசனம்)

ஸ்ரீமத் சகலலோக சிருஷ்ட்டி திதி சங்கார காரண காரியா யிருக்கிற ஸ்ரீ பரமேசுவரனுடைய கருணையினாலே சகல சீவாத்து மாக்களையும், பிறப்புவிக்கிற நிமித்தியம் பிரம்மதேவரை உண்டு பண்ணினார். அந்தப் பிரம்மதேவருக்கு வயசு எவ்வளவு என்றால், மனுஷர்கள் கண் சிமிட்டுகிற நேரம் ஒரு நிமிடம் என்று பேர்; அந்த நிமிடம் பதினைந்து கொண்டது ஒரு காட்டையென்று பேர்; காட்டை முப்பது கொண்டது ஒரு கலை என்று பேர்; கலை முப்பது கொண்டது முகூர்த்தம் என்று பேர்; இந்த முகூர்த்தம் 30 கொண்டது ஒரு நாள்; நாள் 15 கொண்டது பட்சம்; இந்தப் பட்சம் 2க்கு மாதம் ஒன்று. இந்த மாதம் 2க்கு ஒரு இருது. இந்த இருது 3க்கு அயனம். இந்த அயனம் இரண்டுக்கு, வருஷம் 1.

முடிவு : சகாப்தம் ளுல 722க்குமேல் செல்லாநின்ற ரவுத்திரி ளுல ஆனி மீ 2 வரைக்கும், நவாபு சாயபு அவர்கள்

ராச்சியம் ஆண்டார்கள். துன்முகி ௵ முதல் மகாராசா மான்னியாச ஸ்ரீ கும்பனியாரவர்கள் சீமை ஆச்சிது.

சுபம்

Madurai Thala Varalaru

Size: 21×33. Pages: 53. Lines 20 on a page. Condition: good.

Note : This is in prose.

248. மதுரைத் தல வரலாறு (நூல் எண் 626)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 47. நிலை : நல்ல நிலை.

எண் 625இல் உள்ளபடியே.

Madurai Thala Varalaru

Size: 21×33. Pages: 47. Lines: 20 on a page. Condition: good.

Note : Same as the previous one.

249. மதுரைத் தல வரலாறு (நூல் எண் 627)

அளவு: 21×33. வரிகள் : 37.
பக்கங்கள் : 23. நிலை : நல்ல நிலை.

இந்த நூலிலும், எண் 625இல் கண்ட குறிப்புக்களே யுள்ளன.

Madurai Thala Varalaru

Size: 21×33. Pages: 23. Lines 37 on a page. Condition: good.

Note : Same as the previous one.

250. திருமருதூர்ப் புராணம் (நூல் எண் 390)

அளவு : 21×33. வரிகள் : 29.
பக்கங்கள் : 202. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் மருதூர் என்னும் தலத்தின் மகிமைகளையும் பெருமைகளையும்பற்றிக் கூறுவதாகும். மருதூர் என்பது பாண்டிய நாட்டில் உள்ள சிறந்த தலமாகும். இதனை மருதவனம் என்றுங் கூறுவர். அச்சான விவரம் தெரியவில்லை.

இப்புராணம் முழுவதும் உள்ளது. இந்நூல் **சிற்றம்பலவன்** என்பவரால் இயற்றப்பட்டதென்பது அவையடக்கப் பாடலால் அறிய வருகின்றது. 34 சருக்கங்களும் 1143 செய்யுட்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருமருதூர்ப் புராணம்
பாயிரம்

நீர்கொண்ட கடலாடைப் படிமிசையேழ் வருக்கவுயிர்
நிறைசெஞ் சாலிக்
கேர்கொண்ட பருவத்திற் கருணைமழை
யிடைவிடா திறைக்கும் பைம்பொன்
வார்கொண்ட வல்லபைப்பெண் முலைக்குவடு திளைக்கு
மொற்றை மருப்பு நால்வாய்ச்
சீர்கொண்ட வேழமுகப் பெருங்கடவுட் புயலிருதாள்
சென்னி சேர்ப்பாம். (க)

முடிவு :

சூத மாமுனி தொன்மைகூர் முனிவரர் தமக்கு
வேதம் போற்பதி னெண்புரா ணப்பொருள் விரித்தான்
போத வக்கதை புகன்மரு தூர்ப்புரா ணத்தை
நாதர்...நாயகர்சொல் நடப்பதிப் பார்மேல். (கக)

தலைமலை கண்ட மருதத்தேவர் வரம் பெற்ற சருக்கம் முற்றும்

ஆக விருத்தம் 1143. திருமருதூர்ப் புராணம்.

சிற்றம்பல ஐயா அவர்கள் தமிழ்ப்படுத்தியருளிச் செய்த திருமருதூர்ப் புராணம் முற்றும். திருச்சிற்றம்பலம். சிவகடாட்சம்.

இறுதியில் இப்புராணச் சருக்க அட்டவணை உள்ளது.

Thirumarudur Puranam.

Size: 21×33. Pages: 202. Lines: 29 on a page. Condition: good.

Note : The Ms. contains 34 sargams and 1143 verses composed by one Chitrambalavan.

251. மழுவைப் புராணம் (நூல் எண் 638)

அளவு : 21×33. *வரிகள் :* 31.
பக்கங்கள் : 74. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : மழவை என்பதே மழுவை என்று பெயர் பெறும். இது திருமழபாடி என்னும் தலம். இத்தலத்தின் மகிமைபற்றிக் கூறுவதால் மழுவைப் புராணம் என்று பெயர் பெற்றது. நூல் பூர்த்தியாக உளது. இந்நூலாசிரியர் தந்திவனப் புராண மியற்றிய கமலை ஞானப்பிரகாசர் என்பாராவர். 7 சருக்கங்களும் 573பாடல்களும் உள்ளன. 1908இல் அச்சாகியுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
மழுவைப் புராணம்

வான நாடர்கள் மாதவ நாடரு
மோன ஞான முழுது முணர்ந்திடத்
தான மேவு தடவி கடாசல
வானை மாமுகத் தண்ணலை யேத்துவாம்.

பாயிரம் :
மாசிலா வயிரத் தூணர் மழுவையம் புராணந் தன்னை
யாசில்செந் தமிழி னாலே யணிபெற வகுத்த மைத்தான்
பேசரும் புகழ்சேர் ஞானப் பிரகாசன் கமலை வாழும்
தேசிகன் அறிஞர் போற்றும் செங்கம லப்பொற் பாதன். 36

முடிவு :
பொன்னிமார்க் கண்டன் வீமன் புருடமா மிருகம் போற்று
மன்னிய புகழே பெற்ற வச்சிரத் தூணர் வாழுந்
தன்னிகர் மழுவை யான தலத்துயர் பெருமை தன்னை
முன்னருந் தவங்கள் பெற்றோர் முப்பொழு தினுங்கேட்
போரே.

மழுவைப் புராணம் முற்றும்
ஆக விருத்தம் ருஎ௦

வைத்தியலிங்கந் துணை. அழகிய நாயகி துணை. திருச்சிற்றம்பலம்.

விரோதிகிருது வருஷம் மாசி மாதம் 28-ஆம் தேதி சதுர்த்தசியில் மகம் பூருவ பக்கம் புந்திவார நாள் இந்தச் சுபதினத்தில் எழுதி நிறைந்தது முற்றும்.

சிவமயம். சுபம்ஸ்து

Mazhuvai Puranam

Size: 21×33. Pages: 74. Lines: 31 on a page. Condition: good.

Note : The Ms. contains seven sargams and 573 verses written by Kamalai Gnanaprakasar who is also the author of Thanthivanapuranam. Mazhuvai is the same as the sthalam Thirumazhapadi in Thanjavur district.

252. மாகத்தானப் புராணம் (நூல் எண் 640)

அளவு : 21×33. வரிகள் : 34.
பக்கங்கள் : 130. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மாக மாதம் என்பது மாசி மாதமாகும். மாசி மாதத்தில் ஸ்நானம் செய்து பேறு பெற்றவர்களின் பெருமைகளையும் சிறப்புக்களையும் கூறுவது இப்புராணம். ஆசிரியர் அதிவீரராம பாண்டியர் என்பர். 23 அத்தியாயங்கள் 884 விருத்தங்கள் கொண்டது. இறுதியில் அத்தியாய அட்டவணை உள்ளது. மணவை வீரபத்திரனுர் பாடிய மாக புராண அம்மானை என்ற நூல் ஓரியண்டல் நூல் நிலையத்தில் வெளியிடப் பெற்றுள்ளது. அதில் இந்தப் புராணத்தின் சில பாடல்கள் இடையே வருகின்றன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
மாகத்தான புராணம்
க-வது அத்தியாயம்
முனிவர் சூதனை வினவிய காதை

மஞ்சரி செருகிய கோதை மாமதன்
வெஞ்சர மெனமிளிர் விழிகள் வேதநூற்
பஞ்சர முறைகிளி பயந்த மும்மதக்
குஞ்சர முகனடி கும்பிட் டேத்துவாம்.

முடிவு :

ஏது வேண்டு மினித்தவ மாந்தரே
யோது நூலி லொருகவி யாயினுங்
காத லோடு பிழையறக் கற்றிடிற்
போதி னன்முகன் பொன்னுல கெய்தலாம். (உரு.)

உ௯ வது அத்தியாயம் முற்றும்.
ஆக விருத்தம் அ௮௪
மாகத்தானப் புராணம் முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்.

Mahathana Puranam

Size: 21×33. Pages: 130. Lines: 34 on a page. Condition: injured.

253. திருமாணிகுழித் தல புராணம் (நூல் எண் 391)

அளவு : 21 × 33. வரிகள் : 20.
பக்கங்கள் : 89. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : திருமாணிகுழி என்பது நடுநாட்டில் திருப்பாதிரிப் புலியூருக்கு அருகே உள்ள தலம். வாமனவூர் என்றும் கூறப்படும். மாணி-பிரம்மசாரி. திருமால் வாமனவதாரத்தில் பிரம்மசாரியாக வந்தார். இந்நூல் சிவஞான முனிவரின் மாணவர்களில் ஒருவரால் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. நூல் பூர்த்தியாக உள்ளது. அச்சிடப் பெற்றுள்ளது. 16 சருக்கங்களும், 417 செய்யுட்களும் கொண்டது.

தொடக்கம் :

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் றிருவடி வாழ்க
திருமாணிகுழிப் புராணம்
காப்பு

மணிகொண்ட கிம்புரிக்கோட் டைங்கரநால் வாய்மும்மை
மதம்வாய்ந் தோங்குங்
கணிகொண்ட கூவிளமு நறையிதழிப் பூந்தொடையுங்
கலந்து சூடிப்
பணிகொண்டெவ் வுயிர்களையு மிகபரம்வீ
டிவையுதவிப் பாரின் மீதே
யணிகொண்ட வாமனவூர்ச் செல்வவிநா
யகன்றிருத்தா ளகத்துள் வைப்பாம்.

முடிவு :

வாழ்க கோவின மந்தணர் மாதவர்
வாழ்க மேகமு மன்னவர் மன்பதை
வாழ்க வைதிக சைவம்வ ரன்முறை
வாழ்க வாழ்க வனைவரும் வாழ்கவே.

Thirumanikuzhi Thala Puranam

Size: 21×33. Pages: 89. Lines: 20 on a page. Condition: injured.

Note: The Ms. contains 16 sargams and 417 Stanzas composed by a student of Sivagnana Munivar.

254. திருமாணிகுழித் தல புராணம் (நூல் எண் 392)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 35. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : எண் 391 போன்றது. ஆனால் இதில் சத்துரு சித்து பூசித்த சருக்கமாகிய 13-ஆம் சருக்கம் வரை உள்ளது. அபூர்த்தி.

தொடக்கம் :
391இன்படியே.

முடிவு :
கெடிலமா நதிவடபா லசுவ
மேதஞ் சோடசமா தானங்கள் கிளரச் செய்து
படிபுகழ்நூற் றெட்டுவா னுரிஞ்சு மாடம்
பரனடியார் மறையவர்க்குப் பரிவா னீந்து
வடியர்புக ழாலயமும் புதிதாய்ச் செய்தாங்
கரும்புதல்வர் மூவரைப்பெற் றன்பி னோடு
கடிமதில்சூழ் தன்னகர்சென் றிருந்தான் மன்னன்
காலமகன் றன்பதத்திற் கலந்தான் மாதோ.

Thirumanikuzhi Thala Puranam

Size: 21×33. Pages: 35. Lines: 32 on a page. Condition: good.

Note: same as the previous one but incomplete.

255. திருமாணிகுழித் தல புராணம் (நூல் எண் 393)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 92. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல், நூல் எண் 391 போன்றது. தொடக்கம் முதல் முடிவுவரை உள்ளது.

Thirumanikuzhi Thala Puranam

Size: 21×33. Pages: 92. Lines: 22 on a page. Condition: good.

Note: Same as the previous ones but complete.

256. திருவருட்டுறைத் தல புராணம் (நூல் எண் 396)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 155. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவெண்ணெய்நல்லூரில் உள்ள ஆலயத்தின் பெயர் திருவருட்டுறை என்பது. இத்தலத்தின் மகிமைகளைக் கூறும் நூலே திருவருட்டுறைத் தல புராணமாகும். இந் நூலாசிரியர் வெண்ணெய்நல்லூர் வடிவேல் முதலியார் அவர்களாவர்.

16 படலங்களும் 709 விருத்தங்களும் கொண்டது. 1940இல் இயற்றப்பெற்றதாக அறிய வருகின்றது. பூர்த்தி.

தொடக்கம் :

ஓம்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திருவெண்ணெய்நல்லூர்த் தல புராணம்
என்னும்
திருவருட்டுறைப் புராணம்
பாயிரம்
காப்பு
கலி விருத்தம்

திங்கள் சூடிய தேவன் திருப்பதம்
துங்க மாமலர் கொண்டு துதிக்கவும்
தங்கு ஞானமும் வாழ்வுந் தழைக்கவும்
ஐங்க ரத்த னடியிணை யேத்துவாம்.

முடிவு :

ஆட்கொண்ட நாதன் மேன்மை யறிந்துகற் றோர்கள் வாழி
வேட்கையோ டவர்கட் குப்பொன்விரும்பியே யீந்தோர் வாழி
தாட்பணிந் தன்பு செய்யும் அன்பர்கள் தழைத்து வாழி
கேட்பவர் பலருஞ் செல்வங் கிளர்ந்தெழ வாழி மாதோ. (25)

முற்றுப் பெற்றது.
திருச்சிற்றம்பலம்.
சுபம்! சுபம்!! சுபம்!!!

Thiruvarutturai Puranam

Size: 21×33. Pages: 155. Lines 30 on a page. Condition: good.

Note : The Ms. contains 16 padalams and 709 stanzas written by one Vadivelu Mudaliar in 1940. Thiruvarutturai is the name of the Siva temple at Thiruvennainallur in South Arcot District.

257. மாயூரத் தல புராணம் (நூல் எண் 646)

அளவு : 21×33. *வரிகள் :* 27.
பக்கங்கள் : 1121. *நிலை :* *பழமை; சிலம்.*

குறிப்பு : *மாயூரம் என்பது சோழ நாட்டில் உள்ள பாடல் பெற்ற தலம். இறைவி மயிலாகப் பூசித்த தலமாதலின் கௌரி மாயூரம் என்றும் வழங்கும். ஆசிரியர் ஆதியப்பப் புலவர். இது மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் புராணத்தினின்றும் வேறானது.* 6000 *பாடல்களுக்குமதிகம் கொண்டது. மிகச் சிலமாக உளது. முதல்* 10 *பக்கங்கள் எழுத முடியாத நிலையில் உள்ளன.*

முடிவு :
பரமனஞ் செழுத்தும் வாழி பரவிய நீறு வாழி
யுரைபெறு மறையோர் வாழி யுயர்முடி யமரர் வாழி
நிரையின மிகவும் வாழி நிறையுடை யரசர் வாழி
கருமுகில் பொழிய மல்குங் காசினி வாழி வாழி.
சிவமயம்.
மயூரவள்ளலார் துணை. அபையாம்பாள் துணை.

Mayura Thala Puranam.

Size: 21×33. Pages: 1121. Lines: 27 on a page. Condition: injured.

Note : The Ms. contains 6000 verses written by one Adiappa Pulavar and deals with the famous temple at Mayuram in Thanjavur district. This is different from the one written by Mahavidwan Meenakshisundaram Pillai.

258. மானூர்த் தல புராணம் (நூல் எண் 650)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 103. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : மானூர் என்பது திருவையாற்றுக்கு வடக்கே கொள்ளிடக்கரையில் உள்ள தலம். அத்தலத்தின் மகிமைகளைப்பற்றிப் பாடியது இந்த மானூர்த் தல புராணமாகும். ஆசிரியர் பெயர் விளங்கவில்லை. 587 விருத்தங்கள் கொண்டது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
மானூர்த் தல புராணம்

திருமணி தொழிக்கு மானைச் சீர்மிகு தலப்பு ராணம்
இருமணி பொருட்சொ லாதி யெங்கணும் விளங்கி யோங்கக்
கருமணி மிடற்றெம் மான்கைக் கனிகொண்டு கருணை பூத்த
பருமணி வண்ண வேழப் பதமலர் போற்றி வாழ்வாம்.

முடிவு :

தற்பரம் பொருளே ஞான தவிடதே சிகனுய்த் தோன்றி
பொற்பியை யாடற் செய்த புண்ணிய குலத்தின் மேவு
மற்புத மன்றே விந்த வருட்பெரும் புன்னை மான்மிய
மிப்பிறப் பதனிற் சொற்ற வெனக்கருள் புரிந்த தம்மா.

பலதுதி முற்றும்.
ஆக விருத்தம் ருஅஎ.
மானூர்த் தல புராண முற்றும்.

Manur Thala Puranam

Size : 21×33. Pages: 103. Lines: 30 on a page. Condition: good.

Note : This Ms. contains 587 verses and relates to the Siva sthalam Manur which is on the banks of the river Kollidam, north of Thiruvaiyaru.

259. மேருமந்திர புராணம் மூலம் (ஐயரவர்கள் குறிப்புக்களுடன்) (நூல் எண் 665)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 147. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : சமண சமயத்தைச் சார்ந்த நூல். ஆசிரியர் வாமன முனிவர். அச்சானது. 13 சருக்கங்களையும், 1406 பாக்களையும் கொண்டது. இந்தப் பிரதியில் 6ஆவது சருக்கம் முதல் உள்ளது.

தொடக்கம் :

வெற்றிவேல்வேந்தனும் வேந்தன் றேவியுங்
கொற்றவக் குமரரும் கோலை யெய்தினர்
மற்றிந்த நிலத்திடை வந்து நால்வரு
முற்றன வுரைப்பன்கே ளுரக ராசனே.

முடிவு

அறமல துறுதிசெய் வார்க டாமிலை
மறமலா திடர்செய வருவ தும்மிலை
நெறியிவை யிரண்டையும் நினைந்து நித்தமுங்
குறுகுமி னறநெறி குற்ற நீங்கவே.

Merumandira Puranam with notes of Dr. Iyer.

Size: 21×33. Pages: 147. Lines: 30 on a page. Condition: injured.

Note : This is a Jaina work. Author: Vamana Munivar. Contains 6 to 13 sargas.

260. திருவாஞ்சியத் தல புராணம் (நூல் எண் 401)

அளவு : 21×33. *வரிகள் :* 23.
பக்கங்கள் : 154. *நிலை : கிலமாக உளது.*

குறிப்பு : *ஸ்ரீவாஞ்சியமென்று இக் காலத்து வழங்கும் தலம் திருவாஞ்சியம். இத்தலம் புத்தாறு என்னும் நதியின் வடகரையிலுள்ளது. சோழ நாட்டில் நன்னிலத்திற்கு 6½ கல் தொலைவில் உள்ளது. கார்த்திகை ஞாயிறில் இங்கு நீராடுவது விசேடம். வாஞ்சிலிங்கேசன் என்பது இறைவன் நாமம். மங்களநாயகி யென்பது இறைவியின் பெயர். இப்புராணம் களந்தைக் குமரன் என்பவரால் இயற்றப்பட்டது. அச்சானது. 14 சருக்கங்களைக் கொண்டது.*

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்
திருவாஞ்சியத் தல புராணம்

போத மெய்தவும் போகந் தழைக்கவும்
தீத கன்றுமேற் சிந்தனை முற்றவும்
காத லாற்கலங் காதகை மாமுகன்
பாத நூபுரப் பங்கயம் போற்றுவாம்.

முடிவு :

சீதரன் பரவும் வாஞ்சைத்
திருநகர்ச் சிவபு ராண
நாதநான் மறையொலிக்கும்
நைமிச வனத்தி ருந்து
மாதவ ரவையி ற்சூத
மாமுனி யுரைத்த தெல்லாங்
காதலாற் றமிழிற் செய்தான்
களந்தைவாழ் குமர னென்பான்.

திருவிழாச் சருக்கம் முற்றும்.
ஆகச் சருக்கம் 14க்குத் திருவிருத்தம் 826.
திருச்சிற்றம்பலம்.

Thiruvanchia Thala Puranam.

Size: 21×33. Pages: 154. Lines: 23 on a page. Condition: injured.

Note : The Ms. contains 14 sargams composed by Kalandai Kumaran. This sthalam is Srivanchiam near Nannilam in Thanjavur district.

261. திருவாள்கொளிபுற்றூர்த் தல புராணம்

(நூல் எண் 414)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 114. நிலை : மிகக் கிலமாக உள்ளது.

குறிப்பு : வாள்கொளிபுற்றூர் (வாளொளிப்புற்றூர்) என்னும் தலம் வைத்தீசுவரன் கோயிலிலிருந்து திருப்புன்கூர் போகும் வழியில் 5 கல் தொலைவில் உள்ளது. விஷ்ணுமூர்த்தி மாணிக்கத்தை வைத்துப் பூசித்த தலம்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய புராணத்தினும் வேறுபட்டது இது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நூல் அச்சான விவரம் தெரியவில்லை. 16 சருக்கங்களும் 567 செய்யுட்களும் கொண்டது. இப்பிரதியின் இறுதியில் 21 கண்ணிகள் கொண்ட வாகைவனத் தாலாட்டுக் காணப்படுகிறது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருவாள்கொளிபுற்றூர்த் தல புராணம்

பாயிரம்

திருவும் கல்வியும் செல்வமும் சேர்ந்திட
விரிவு செய்மலத் தீவினை மீட்டிடப்
பரிவு சே(ச)ர்ந்தடி யாரின்பம் பற்றிட
மருவு மானை முகத்தனை வாழ்த்துவாம்.

முடிவு :

திங்கள்மும் மாரி பெய்யச் செழுமறை யோர்கள் வாழ்க
தங்கவெண் குடையின் மன்னன் ஞன்மையின் செங்கோல் செல்ல
வெங்கும்வே ளாளர் செல்வம் எழிலுடன் வளர்க நாளுஞ்
சங்கர னடியார் வாழ்க தருமமுந் தவமு மோங்க. (௩௩)

சிவதரும முரைத்த சருக்கம் முற்றும்.

ஆகச் சருக்கம் 16க்கு விருத்தம் 567. திருவாள்கொளி புற்றூர்ப் புராணம் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

Thiruvalkoliputrur Thala Puranam

Size: 21×33. Pages: 144. Lines: 22 on a page. Condition: much injured.

Note : This is different from the sthala puranam written by Sri Meenakshisundaram Pillai. The Ms. contains 16 sargams and 567 verses. At the end is copied 'Vagaivana Thalattu' containing 42 lines or 21 kannis.

262. திருவாள்கொளிபுற்றூர்ப் புராணம்

(நூல் எண் 415)

அளவு : 21 × 33. நிலை : மிகவும் இலமானது.

குறிப்பு : இது மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் இயற்றிய புராணத்தின் பிரதி. வேறு விவரங்கள் எழுத இயலாதபடி இலமாக உள்ளது.

Thiruvalkoliputrur Puranam

Size: 21 × 33. Condition: much injured.

263. விசுவ புராண சாரம் (நூல் எண் 691)

அளவு : 21×33. வரிகள் : 31.
பக்கங்கள்: 51. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : சிலையுருவாக்கும் கலைஞராகிய விசுவகர்மாவின் சரித்திரத்தைக் கூறுவது. இந்நூலாசிரியர் அரங்கன் என்று பாயிரத்தா லறியப்படுகிறது. இடையிடையே பாக்கள் இல்லை. 1 முதல் 13 பாக்கள் இல்லை. அபூர்த்தி. அச்சாகவில்லை. பதிகம், விசுவசன்மியம், மரபு விளக்கம், நாச்சியார் திருக்கல்யாணம், நாச்சியார் தவநிலை, மகமாயி சிறப்பிருப்பு, அடைக்கலம் பெற்ற சிறப்பு, போர்புரி சிறப்பு என 8 சருக்கங்கள் 375 செய்யுட் களுடன் அபூர்த்தியாகவுளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
விசுவ புராண சாரம்

ஒருமருப் பிரண்டு கேள்வி மூன்றுகண் ணால்வா யைந்து
கரதலத் தாறு தூங்குங் கடுவிடக் கட்செ விப்பூ
ணெழுபிறப் பேத மாற்றி யெண்படு தொண்டிற் றீற்றித்
தருதிறற் கரிமு கத்தோன் றாளிணை சென்னி வைப்பாம்.
(1 to 13 பாக்கள் இல்லை)

(14) மணங்கமழ் தெரியற் பாடல் வகுத்தினி துரைத்தோன் வஞ்சக்
கணங்கிடு பழியைச் சான்றோர்க் கன்பினுல் கழுவு நாட்டுக்
குணங்கெழு விரிநீர்ப் பாலிக் கோடையர் பெருமான் கொற்றத்
தணங்கருள் பிரியா நீதி யணிதிகழ் அரங்க னென்பான்.

முடிவு :

சரக்கடி மையிற்சிலர் சடக்கென நடந்த
கரக்குவள வெற்பொடு களத்தினிது புக்கார்
இரக்கமில் நடப்பதி யிருக்கையில் நெருக்கா
வுரக்கவொரு வர்க்கொருவ ருற்றதை யுரைத்தார். 375

கவித்தலத்தைச் சார்ந்த இராமானுஜபுரம் சிவப்பிரகாச பிள்ளையின் பிரதியைப் பார்த்து எழுதியது, 14-3-02 என்ற பென்சில் குறிப்பு இறுதியில் உள்ளது.

Viswa Purana Saram

Size: 21×33. Pages: 51. Lines: 31 on a page. Condition : good.

Note : The Ms. contains eight sargams and 375 verses with certain portions missing; written by Arangan.

264. வியாக்கிரபுரப் புராணம் (நூல் எண் 693)

அளவு : 21×33, வரிகள் : 26,
பக்கங்கள் : 132. நிலை : பழமை.

குறிப்பு : பாண்டி நாட்டில் வைகையாற்றிற்கண்மையில் விளங்கும் உத்தரகோசமங்கை என்ற தலத்தையே வியாக்கிர புரம் என்பர். இதனைப் பத்ரிகாவனம், மங்களபுரம், பிரமபுரம் என்று பல பெயரால் கூறுவர். இத்தகைய வியாக்கிரபுரத்தின் மகிமைகளை விளக்கும் நூல் வியாக்கிரபுரப் புராணம். இந் நூலாசிரியர் வைத்தியநாத முனிவர் என்பார். நூல் அபூர்த்தி. 18 சருக்கங்கள் 685 விருத்தங்களே உள. இறுதியில் சருக்க அட்டவணை உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
வியாக்கிரபுரப் புராணம்

வளங்கெழு வியாக்கிர புரத்து மாக்கதை
விளங்குவண் டமிழினால் விரித்துப் பாடநீள்
குளங்கெழு நேத்திரக் கோட்டு மாமுகன்
றளங்கெழு தாமரைச் சரணங் காப்பதே.

சீர்மேவு மலரயனுந் திருமாலுஞ் சேவடியு முடியுந் தேட
நீர்மேவு மன்பருள நிறைந்துநிரு மலமாகி நீங்கா தோங்கும்
தேர்மேவு மணிவீதி திகழ்தில்லை யம்பலத்தே திருக்கூத்
தாடும்
ஏர்மேவு பேரொளியாஞ் சிதம்பரத்தை எந்நாளும் இதயஞ்
சேர்ப்பாம்.

முடிவு :

தோத்திரங்கள் பலகூறித் தொழுதெழுந்து நின்றளவில்
வார்த்தையினு லவர்கேட்பார் மன்னுமேற் பொருள்க
ளுண்டோ
தீர்த்தைய மிக்தேது விக்தேது செப்புகென
நாத்தழும்பு படத்துதிப்ப வரிய..................

Vyagrapura Puranam

Size: 21×33. Pages: 132. Lines: 26 on a page. Condition: old.

Note: The Ms. contains 18 sargas and 685 stanzas written by one Vaidyanatha Munivar. The sthalam Vyagrapuram is the same as Uttara-kosamangai.

265. வீரசிங்காதன புராணம் (நூல் எண் 699)

அளவு : 21×17. வரிகள் : 30.
பக்கங்கள் 25. நிலை : பழமை.

குறிப்பு : சிவஞானம் நிலவும் சிங்காதனம் எனப் பொருள் பட்டு வீர சிங்காதனம் எனப் பெயர் பெற்றது. அகளங்கச் சோழச் சருக்கம்மட்டும் உள்ளது. அச்சானது. இது வீரசைவ நூல்.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்
வீரசிங்காதன புராணம்
காப்பு

தழைபெ ரும்புகழ் தன்னடி யுன்னிடில்
விழைத ரும்பொரு ளியாவும் விளைத்திடு
மழைம தர்த்தகண் மாதுமை நல்கிய
புழைநெ டுங்கரப் போதக வேழமே.

அகளங்கச் சோழச் சருக்கம்

கும்பமுனி வரன்கொணர்ந்த குண்டிகையிற் பிறந்தேகி
யிம்பர்நிலந் தனைவிளக்கு மெழில்கொளுங்கா விரியிருபா
லம்புவியை யரசாளு மரசர்கோ னடாற்செல்விக்
கும்பர்புனை மணிமகுட மொத்திலங்கு புயமலையான்.

முடிவு :

ஆரமார் புயவக ளங்கன் காதையை
வீரமார் சிங்கனும் வினவச் சொல்லிய

பாரமார் சோமசே கரர்தம் பண்பினை
வாரமா யடியனேன் வழுத்த லுற்றனன். 147

அகளங்கச் சோழச் சருக்கம்
முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

Veerasingadana Puranam

Size: 21×17. Pages: 25. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. is incomplete and contains Akalanka Chola sargam only.

266. ஷடத்யாயீ ஸ்ரீகாளஹஸ்தி (நூல் எண் 204)

அளவு : 21×33. வரிகள் : 12.
பக்கங்கள் : 65. நிலை: நல்ல நிலை.

இது வடமொழி நூல். கிரந்த லிபியில் உள்ளது.

Shadadhyayi (Sri Kalahasti)

Size: 21×33. Pages: 65. Lines: 12 on a page. Condition: good.

Note : The Ms. is in Sanskrit written in Grantha characters.

267. அதிபத்த நாயனார் புராணம் (நூல் எண் 31)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 5. நிலை : இலமாக உளது.

குறிப்பு : அதிபத்த நாயனார் வரலாற்றை 32 விருத்தங்களில் கூறுவது இந்நூல். இந்நூல் பெரிய புராணத்தினின்றும் வேறுபட்டது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை.

தொடக்கம்:

கணபதி துணை
அதிபத்த நாயனார் புராணம்

அரிய வித்தலங் தனில்அதி பத்தரா மன்பர்
புரியு நற்சரி தத்தைஇப் புராணத்தில் புகறற்
குரிய வன்றொண்ட ரோதும்மெய்த் திருத்தொண்டத்
தொகையும்
வருமந் தாதியும் புராணமும் மிகுந்ததொன் மரபால். (க)

முடிவு :

தலைமை பற்றிய அதிபத்தர் புரிசரி தத்தைச்
சொலவென் ளுன்முடி வாகுமோ வத்தவர் துணைத்தாள்
நிலைமை யாகவென் கருத்தினி னினைவுறல் கருதிச்
சிலவ றைந்தனன் அவர்செயல் அறிவனச் சிவனே. (௩௨)

அதிபத்த நாயனார் புராணம் முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

Athipatha Nayanar Puranam

Size: 21×33. Pages: 5. Lines: 30 on a page. Condition: injured.

Note : The Ms. contains the story of Athipatha Nayanar in 32 verses. This is different from the story found in Periya Puranam. Author's name not known.

268. அரிசமய தீபம் (நூல் எண் 42)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 151. நிலை : பழமை.

குறிப்பு : இந்நூல் திருமாலடியார் பெருமைகளையும், குருபரம்பரையையும் பாடுகிறது. இதன் ஆசிரியர் கிழையூர்ச் சடகோபதாசர். இது 10 சருக்கங்களையும்,1018 விருத்தங்களையும் கொண்டுள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
ஸ்ரீ ராமஜெயம்
அரிசமய தீபம்

என்றும் திருமாற்கே யாளாவே னெம்பெருமா
னென்று மெனக்கெம் பிரானுவா-னென்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமு
மறவாது வாழ்த்துகவென் வாய்.

முடிவு :

திருமா லடிதாழ் பட்டர்பிரான்
றிருக்கா தையுந்தார் திருமாற்குக்
கருமா வளகந் தனிற்சூடிக்
கொடுத்தாள் கதையுங் கட்டுரைத்தாம்
குருமா தவனு லெட்டெழுத்துட்
கொண்டோன் கூடார் குலங்குலையப்

பெருமா ளிற்றுப் பரகாலன்
றிருக்கா தையினிப் புகல்கின்றோம். 118

கோதைச் சருக்க முற்றும்.
ஆகச் சருக்கம் 10க்கு விருத்தம் 1018.

Arisamaya Deepam

Size: 21×33. Pages: 151. Lines: 30 on a page.
Condition: old.

Note: The Ms. contains 10 sargams and 1018 verses written by one Kizhaiyur Satagopadasar describing the Guruparamparai and the greatness of Vaishnava saints.

269. ஆராத்திய புராணம் - பகுதி I (நூல் எண் 55)

அளவு : 21×33. வரிகள் : 38.
பக்கங்கள் : 92. நிலை : சிறிது சிதிலம்.

குறிப்பு : வீரசைவ அன்பர்களாகிய ஆராத்தியர் வரலாற்றைக் கூறும் நூல். இந்நூல், தெலுங்கில் பால்குருகிச் சோமீசுரர் என்பவர் இயற்றிய ஆதி ஆராத்திய சரிதம் என்பதன் மொழிபெயர்ப்பாகும். இந்த நூல் 1740 செய்யுட்கள் கொண்டது. இந்த முதற்பகுதியில் 834 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்

அசபை யீரெழுத் தஞ்செழுத் தாறெழுத்
திசையு மைம்பத்தொ ரெண்ணெழுத் தெய்தவுந்
தசையு டற்கினிச் சாரெழுத் தேகவும்
வசவ மூவக் கரமும் வழுத்துவாம்.

முடிவு :

சித்த(த்)தூறிச் சிவனென்று பெண்ணிடம்
வைத்த தென்னென்று மாறுசொல் புத்தரே
நித்த னத்த னிமலன்பெண் ணிச்சையால்
அத்த மீந்தனன் அன்றதைக் கேளன்மின்.

Arathiya Puranam (Part I)

Size: 21×33. Pages: 92. Lines: 38 on a page.
Condition: slightly injured.

Note: The Ms. contains 834 verses being the first part. This is a translation from the Telugu work Adi Aradhya Charitam. The work contains the biographies of Veera saiva saints.

270. ஆராத்திய புராணம்-பகுதி II (நூல் எண் 56)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 96. நிலை : பழமை.

குறிப்பு: நூல் எண் 55இன் தொடர்ச்சி. இதில் செய்யுள் 835 முதல் 1680 வரை 825 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

திருவாதுச் சருக்கம் (தொடர்ச்சி)
அன்று யாகத் தரனிந்தை தக்கனுற்
சென்று கெட்டதென் றேகத்தை யம்பிகை
யின்று வேவிப்ப னென்றுயோ காங்கியாற்
பொன்று வித்திடும் போதப் புனிதனும்.

முடிவு :

அப்படையை மறைத்தவிட மறிந்து கண்டங்
கதிச்செல்வ மனைத்தினையும் அகன்று தாங்க
ஒப்புடைய திரிபுராந் தகேச மென்னு
முயர்குமர கிரியைவல முவப்பால் வந்து
செப்பரிய பரனருளைச் சேர்ந்தா ரென்றுற்
றிரிபுராந் தகமகிமை தெரிக்கொ ணாதா
லிப்புவியென் னக்கோவி லிடத்து வாழு
மேவிமுய லேகரிய தன்ற னிருமை பார்க்கில். கரு

Arathiya Puranam–Part II

Size : 21 ×33. Pages: 96. Lines: 36 on a page. Condition: old.

Note : Continuation of the previous one containing verses 835 to 1680.

271. ஆராத்திய புராணம்-பகுதி III (நூல் எண் 58)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 8. நிலை : பழமை.

குறிப்பு : இந்நூல் மேற்குறித்த 56ஆம் எண்ணுள்ள நூலின் தொடர்ச்சி. இதில் செய்யுள் 1681 முதல் 1740 வரை 59 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

தீதாகா தருள்கந்தா வதீத திரஞ்
சேர்திரிபு ராந்தகாகரே சுரஞ்சோ மேசம்

கேதாரே சுரங் கடகேசம் பாவநாசங்
கெவுரீசங்கம் லேச முத்த ரேச
மோதாத முத்தீச முரைக்குமு வையுடனே
யுயர்ந்த மல்லி கார்ச்சுனம்பின் கன்னிகா சித்த
நாதலிங்கம் பன்னிரண்டு நாடிவைக்குந் தெற்காய்
நல்சித்த வடேசுரத்தை நன்றுய்ப் பார்ப்பாய்.

முடிவு :

புயலின் மாரியும் பொருந்திய வளங்களும் பொலிக
வுயரும் மன்னவன் செல்வமு முலகமு மோங்கச்
சயம தாகிய சுருதியும் சைவமும் தழைக்க
மயலி லஞ்செழுத் தோசையுந் தருமமு மல்க.

ஆகத் திருவிருத்தம் 1740 முடிந்தது. பிரமாதி வருஷம் மாசி மாதம் 11௳ திங்கட்கிழமை அஷ்டமி ரோகிணி நட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் திருத்தணிகை யிடையர்மடச் சரவண ஐயர் குமாரன் சுப்பிரமணியன் அய்யம்பேட்டை சோணாசல ஐயர் குமாரன் நாகலிங்க ஐயருக்கு எழுதிய ஆராத்திரிய புராணம் முடிந்தது.

முற்றும். சிவமயம்.
சிவப்பிரகாசன் றிருவடி வாழ்க.

Arathiya Puranam—Part III

Size: 21×33. Pages: 8. Lines: 36 on a page. Condition: old.

Note: Continuation of the previous one containing verses 1681 to 1740.

272 இராமலிங்க சுவாமிகள் சரிதம் (நூல் எண் 30a)

அளவு : 21×17. வரிகள் : 24.
பக்கங்கள் : 111. நிலை : நன்றாகவுளது; பூர்த்தி.

குறிப்பு : பண்டிதை அசாலாம்பிகையம்மையார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றை 409 விருத்தங்களால் பாடியது இது. 1934ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற நூலைப் பார்த்து 1941ஆம் ஆண்டில் எழுதிய காகிதப்பிரதி இது. முகப்புப் பக்கம், முகவுரை, நூல் ஆகிய யாவும் இதில் உள்ளன. இந்த நூலில் பாயிரம் முதல் திருக்காப்பிடுமுன் செப்பிய அருள் மொழிவரை 13 படலங்கள் உள்ளன.

தொடக்கம் :

வள்ளல் இராமலிங்க வானவனூர் சீரடிகள்
உள்ளங் குளிர உவந்தேத்தி—விள்ளும்
திருக்காதை யானைமுகத் தேவின் கருணைப்
பெருக்கால் ஒளிரும் பிறங்கி.

முடிவு :

முடிவிலா ஒருவன் மாட்சி
மொழிவது முடியா தென்னும்
முடிவினை அறியா ரில்லை
மூதக விடத்தே பின்னும்
கடிதடைத் தருட்பே ராட்சி
கடமையி லாற்ற வேண்டி
அடையுநற் காலம் நோக்கி
அடியவர் இருந்திட் டாரால்.
ஆக விருத்தம் 409.

Ramalinga Swamigal Charitam

Size: 21×17. Pages: 111. Lines: 25 on a page. Condition: good.

Note : The Ms. is a copy of the printed book. Author : Pandithai Asalambikai Ammal. Describes in 409 verses the biography of Ramalinga Swamigal.

273. கவரை வடுகர் காராளருக்குதவியான வரலாறு (நூல் எண் 105)

அளவு : 21×33. வரிகள் : 31.
பக்கங்கள் : 31 (1—31). நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காராளர் என்ற இனத்தாருக்குக் கவரை என்ற குலத்தைச் சார்ந்த வடுகர் உதவி புரிந்த செய்திகள் உரைநடையாகக் கூறப்படுகின்றன. இப்பிரதியில் 135a 'கோத்திரத்து வகையறு ஏடு' என்ற தலைப்பில் தொண்டை நாட்டைச் சார்ந்த 25 கோட்டங்களைப்பற்றிய செய்திகளும், கம்பர் பாடிய ஏரெழுபதின் காலம்பற்றிய பாடல்களும் உள்ளன. கம்பர் பாடிய ஏரெழுபது என்ற நூலும் உளது.

தொடக்கம் :

உ

கவரை வடுகர் காராளருக்கு உதவியான வரலாறு

தரணிராசர் நாளையில் கவரையுங்கம்மாளனு மிருபேரையும் வேளாளர் மிருகணங்களாகவும் கம்மாளர் பயிரிட வேண்டிய

தற்கு மற்ற எல்லா முயற்சிக்குதவியானார்கள். அப்படி நடந்து வருகிற காலத்தில் விக்கிரமாதித்த ராசா நாளையில் சோழ ராச்சியத்துக் கதிபதியாகிய அதிவீர துரந்தர சோழனாளையில் கம்மாளரைந்து தொழிற்காரனும் காஞ்சிபுரத்தில் ஒரு மடமுண்டு செய்து விசுவப் பிராமணனெனப் பேர் வைத்துக் கொண்டு பிராமணாளுடைய செய்கையை நடப்பித்தார்.

முடிவு : .... சோழிய இரண்டாவது பிள்ளையாகிய சோழிய வேளாளரும் மூன்றாவது பிள்ளையாகிய காரைக் காத்தாரும் ஒரே மாதிரியாயத்தில் கொஞ்ச வியாப்புமாய் நடத்தி வருவார்கள்.

Kavarai Vadugar Varalaru

Size: 21×33· Pages : 31. Lines: 31 on a page. Condition : good.

Note : The Ms. contains details (in prose) of help rendered by Vadugar to Karalar.

274. கானாட்டு வரலாறு (நூல் எண் 157)

அளவு : 21×17. வரிகள் : 18
பக்கங்கள் : 59. நிலை : பழமை.

குறிப்பு : கானாடு என்பது பாண்டி நாட்டில் ஒரு பகுதி. இந்நாட்டில் அடங்கிய ஊர்கள் அவற்றின் எல்லை முதலியவற்றைக் கூறும். கானாடு காத்தான் முதலிய செட்டிநாட்டு ஊர்கள் அடங்கிய பகுதி இது. செப்பேட்டின் பிரதி இது.

தொடக்கம் : 2, முதலாவது ஏடு.
விருதராச பயங்கர வளநாடு ளஅ(திருமெய்யத்தைச் சூழ்ந்தது)

கானாட்டுச் சருக்கம் எல்லை. கு.காடு ஆள சுமச.
நத்தம் நாடு சுமச.

முடிவு : (இருபதாவது ஏட்டின் பின்புறம்) கார்கொண்ட மேனியனே எம்பெருமான் ஆப்பர்நல்லூர் நேர்கிளக்கு பாக்குறிச்சி கல்லன் செங்கை. திருவலங்குளம் மேட்டு பெட்டையுடன் நாட்டுகல். கரந்தி மேடு-தார்கொண்ட செம்பொன் கிரிகானாடு. உக்காநதி-மானூர் பெருங்கநல்லூர். தெக்கு சாரதியாரம் பொன்னங்குடி, கடம்பாணி திறம்பாநல்லூர் வடக்கு-சீர்கொண்ட தனிக்கிரியா நேர். மேக்கு. திறமான பரவைநகர் வெள்ளாறு. திடமான நேர் கிளக்கு வல்லக்கோட்டை ஊர் கொண்டகல்லர்

குளம் வேணியாறு பொற்பனையூர் நாகமங். ......

Kanattu Varalaru

Size: 21×17. Pages: 59. Lines: 18 on a page. Condition : old.

Note : This is a copy of the copper plate describing the places in Kanadu which is a part of several places like Kanadukathan etc., in Chettinad.

275. குரு பரம்பரை (நூல் எண் 168)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 511. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் ஆழ்வார்கள் சரித்திரம், ஆசார்ய சரித்திரம், எம்பெருமானுர் வரலாறு ஆகியன கூறப்பெற்றுள்ளன. இப்பிரதியில் 2980 செய்யுட்கள் உள்ளன. கடைசிப் பக்கத்தில்,

உ

'இது பரங்கிப்பேட்டை விலக்ஷண கவி இலக்குமணப் பிள்ளையவர்கள் குமாரர் ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் பிரதியைப் பார்த்து எழுதியது' என்ற குறிப்பு உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

அஞ்சு பொருளு மளித்தென்னை
யாண்டா ளுத்தா னழகப்பன்
நெஞ்சி லிருக்க வேறொன்றை
நினைத லுறுமோ நீணிலத்திற்
றஞ்ச லின்றி யாரியரைத்
துதித்துப் போது போக்கதுவே
தஞ்ச முத்திக் கெனவுரைத்தா
னதனு லிதனைச் சாற்றுதுமே.

அவையடக்கம் :

எழுத்தறியேன் சொல்லறியேன் பொருளறியே
னிலக்கணச்சொற்
பழுத்தவர்பின் சென்றவர்கள்
பணியறியேன் மணிவணனை
வழுத்தறியேன் பாகவதர் மலரடியும்
வணங்கறியேன்

முழுத்தகவிப் புலவர்கள்போன்
மொழிவதற்கே யொருப்பட்டேன்.

முடிவு :

மருவா நின்ற வனைவர்களு
மாசி லாத செழுஞ்சோதிக்
கருமா முகிலுங் கமலையுங்கண்
டுகந்து கண்கள் களிகூர
விருமா நிலத்தோ ருயிர்காத்த
எதிரா யகவென் றெடுத்தேத்தித்
திருமா மணிமண் டபஞ்சேர்ந்தான்
சென்றுற் குடையா மெனுஞ்சீமான்.

எம்பெருமானுர் பிரபந்த முற்றும்.
ஆழ்வார் திருவடிகளே சரணம், சதாவாசாரியன்
திருவடிகளே சரணம்.
ஆக, கவி 2980. குருபரம்பரை முற்றும்.

Guruparamparai

Size: 21×33. Pages : 511. Lines: 30 on a page. Condition: good.

Note : The Ms. contains 2980 verses giving the biographies of Alwars, Acharyas etc.

276. கோத்திர வகையரு ஏடு (நூல் எண் 135a)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 40 (31—70). நிலை : பழமை.

குறிப்பு : தொண்டை நாட்டைச் சார்ந்த 25 கோட்டங்களைப் பற்றிய செய்திகள் இப்பிரதியில் கூறப்பெற்றுள்ளன. இடையில் இக்கோட்டங்களைப்பற்றிய சில தனிப் பாடல்கள் உள்ளன. இறுதியில் 25 கோட்டங்களின் பெயரை வரிசையாகக் கூறி அதன் பின்னர் ஒவ்வொரு கோட்டத்தைச் சார்ந்த நாடுகள் குறிக்கப்பெற்றுள்ளன. இறுதியில் சில தனிப்பாடல்களும் கம்பர் ஏரெழுபது பாடி யரங்கேற்றிய காலம்பற்றிய பாடல்களும் தனியே வரையப் பெற்றுள்ளன.

தொடக்கம் :

உ
கோத்திரத்து வகையரு ஏடு
1. புழற் கோட்டம்

புழற்கோட்டம் நேமங்கிளார், அன்னபரிபாலகர், அங்கராயர் ஆக ஈ. ஞாயிறு நாடு, ஞாயிறு கிழார் 1, மழவராயர் 2, செம்பியத் திரையர் 3, தொண்டமான் 4.

முடிவு : அப்பால் கவுன்மெண்டு வாறட்டு எலவிட்டு துரையவர்கள் சகாத்தம் 1771ல் சவுமிய வருஷத்துக்கு 1026ஞ ஆடி மீ வரை பரிசோதனையில் கோட்டம் 25, நாடு 79, நத்தம் 563 மிருந்தது. மற்ற நத்தங்களெடுபட்டு அதற்கடுக்க புது நத்தங்களாகியும் அதற்குப் போலெவ வேறுயிருக்கிறது. கோத்திரம் 12,000க்கு இப்போது பார்த்துக் கொஞ்சம் பரிசோதித்ததில் 1682க்குப் பேரெழுதியிருக்கிறது.

Gothira Vagaiyara Edu

Size: 21×33. Pages: 40. Lines: 36 on a page. Condition: old.

Note : The Ms. contains details about 25 kottams in Thondai Nadu with certain poems.

277. சங்கீத வித்துவான்கள் சரித்திரம் (நூல் எண் 201)

அளவு : 21×17. வரிகள் : 11.
பக்கங்கள் : 384. நிலை : பழமை.

குறிப்பு : வாய்ப்பாட்டு, பிடில், வீணை, காலக்ஷேபம் முதலிய பல துறையில் ஈடுபட்ட 384 சங்கீத வித்துவான்களுடைய வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டதே இப்பிரதி. இப்பிரதி முழுமையும் அகர வரிசையில் தனித் தாள்களாக உள்ளன. இவை முற்றும் ஐயரவர்கள் தொகுத்தவை.

தொடக்கம் : அண்டமீ சிவராம பாகவதர்: இவர் வியாகரண சாஸ்திரத்துடன் வாக்ஜாலத்துடன் நல்ல மேளக்கட்டுடன் கதை செய்யும் கியாதியுடையவர். ஆனால் அந்தகர். இவருடைய காலம் சுமார் 80 வருடங்கட்கு முன்பு.

முடிவு : ஸல்லகாலி கிருஷ்ண ஐயர். இவர் வீணை வாசிப்பதில் அபார யோக்கியதையுடையவர். லக்ஷண சம்பிர தாயம் தெரிந்தவர். ஏக காலத்தில் ஒருதாள பத்தமான ஒரு பல்லவியை வாசித்துக்கொண்டு அதே தாளம் அதே பல்லவியை அதே காலத்தில் வேறு ராகத்தில் வாயால் பாடிக்கொண்டு வருவதில் மிகுந்த திரமுடையவர். இவருடைய காலம் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு.

Sangeetha Vidwangal Charitram

Size: 21×17. Pages: 384. Lines: 11 on a page. Condition: old.

Note: The Ms. contains short notes on 384 musicians (Vocal, instrumental Bhagavathars). compiled in alphabetical order by Dr. Iyer.

278. சங்கீத வித்துவான்களின் சரித்திரம் (நூல் எண் 202)

அளவு : 21×33. *வரிகள் :* 18.
பக்கங்கள் : 109. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : *இந்தப் பிரதியில் 391 சங்கீத வித்துவான்களுடைய பெயர்களும், வரலாறுபற்றிச் சிறு குறிப்புகளும் குறிக்கப் பெற்றுள்ளன.*

தொடக்கம் : *புரந்தர விடலர் என்பவர் சுமார் 400 ஆண்டுகட்கு முன் பெல்லாரி ஜில்லா ஹொஸபேட்டைத் தாலூகா பம்பா தீரத்தில் ஹேமகூட ஸிம்மாஸனாதிபதியான ராஜா கிருஷ்ணராஜ தேவர் ஸமூக வித்துவானாக இருந்தவர். இவர் பரமபாகவத சிரோமணி. பால சிக்ஷைக்கு யோக்கியமான ஸரளி வரிசை, அலங்கார ராக கீதம் முதலானவைகளைச் செய்தவர். சங்கீத கர்த்தாவிற்குச் சமமானவர். 1000க் கணக்கான கீர்த்தனைகளைச் செய்தவர். இவர் நாரதாம்சமென்று சொல்லும் மகிமை யுடையவர்.*

முடிவு : *பெங்களூர் வீணை கோபாலாசாரியர் :- ராகம், பல்லவி முதலானவை சம்பிரதாயமாய் வாசிக்கும் வித்துவான். தஞ்சாவூர் ஜில்லா ஆவுடையார்கோவில் விகடம் ராமு ஐயர் என்பவர், ஸர்வரஞ்சகமாய் விகடம் செய்வதில் ரொம்பக் கியாதிபதியுள்ளவர். ஆசாரசீலர். இவர் காலம் 55 ஞ.*

Sangeetha Vidwangal Charitram

Size: 21×33. Pages: 109. Lines: 18 on a page. Condition: good.

Note : The Ms. contains short details about 391 musicians.

279. தொண்டைமண்டலத்து 24 கோட்ட வரலாறு

(நூல் எண் 468)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 34. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தொண்டைமண்டலம் என்பது சென்னை, காஞ்சி, வேலூர் முதலிய பகுதிகளைக் கொண்டதாகும். அதை 24 கோட்டங்களாகப் பிரித்திருந்தனர். அதன் வரலாறே இந்நூல்.

உ
கணபதி துணை

தொடக்கம் : இருபத்துநாலு கோட்டமும், எழுபத்தொன்பது வளநாட்டவர்கள் உண்டாக்கின, பெரிய நாட்டு மடத்திலே எழுந்தருளி இருக்கிற பெரிய நாட்டுக்கு நாயகப் பிள்ளையார் இளைய நயினார் அப்பதம்பிரானார் மூவர்கள் மூன்று பேருடைய திருவுளம் உண்டாவதாகவும்.

முடிவு : ஆகக் கோட்டமிருபத்துநாலு மெழுபத்தொன்பது வளநாட்டவர்கள் அனைவர்களும், சொற்படிக்கு இந்தப் பெரிய நாட்டு மடதன்மத்துக்குத் தாம்பிரசாதனப் பட்டையம் எழுதின நன்மைக்கு ஏகாம்பரீசுவரன் திருக்கோவில் கணக்குத் திருவேகம்ப வேளார் கச்சிவடுகப் பிள்ளை கையெழுத்து. இருபத்துநாலு கோட்டமு மெழுபத்தொன்பது வள நாட்டவர்கள் அனைவர்களும்.

ஞானப் பிரகாசன் திருவடி வாழ்க.

Thondaimandalathu Kotta Varalaru

Size: 21×33. Pages: 34. Lines: 35 on a page. Condition: good.

Note : The Ms. contains description of 24 kottams or sub-divisions in Thondaimandalam which comprises of Madras, Kancheepuram, Vellore etc.

280. புலவர் வரலாறுகள் (நூல் எண் 101a)

அளவு : 21 × 33. வரிகள் : 35.
பக்கங்கள் : 67. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பல புலவர்களின் வரலாற்றுச் சுருக்கம். அங்கங்கே ஐயரவர்கள் திரட்டித் தொகுத்தவை இப்பிரதியில் உள்ளன. சர்க்கரைப் புலவர், தேவிபட்டணம் முத்துசாமிப் பிள்ளை, கம்பர், சினக்கர் பரம்பரை, மிதிலைப்பட்டிக் கவிராயர்கள் முதலியவர்களின் வரலாற்றுச் சுருக்கம் உள்ளன.

தொடக்கம்: சர்க்கரைப் புலவர் பட்டயம்
அசலுக்குச் சரியான நகல்
விகாரி ஞு சித்திரை மீ 28ஆம் தேதி
சிவமயம்

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1663 இதன்மேற்செல்லா நின்ற கரநாம சம்வற்சரத்தில் தெக்ஷணாயனத்தில் வருஷருதுவில் கார்த்திகை மாசத்தில்............

முடிவு :
மிதிலைப்பட்டிப் பாண்டிக் கவிராயர்

தானமா மென்னவே சந்திரா தித்தவரை
மானமாய்க் காப்பவனே மன்னனும்–நானிலத்திற்
சிற்றம் பலந்தனக்குச் சிந்தைநகர் வெங்களய்ய
னுற்ற மடப்பிறஞ்செய் யூர்.

போற்றினவற் றன்மானம் போற்றினான் போற்றுமல்
மாற்றினவன் றன்மான மாற்றினு-ஞற்றிசையிற்
சிற்றம் பலந்தனக்குச் சிந்தைநகர் வெங்களய்ய
னுற்ற மடப்பிறஞ்செய் யூர்.

இம்மூன்றும் இவர் வீட்டின் கீழ்ப் புறத்துள்ள கல்லில் எழுதப்பட்டுள்ளன.

எழுதியது A. Paramasivam Pillai

Pulavargal Varalaru

Size: 21×33. Pages: 67. Lines: 35 on a page. Condition: good.

Note : The Ms. contains biographical accounts compiled by Dr. Iyer on poets.

281. பூந்துறை நாட்டார் எழுதிக் கொடுத்த மேலோலை (நூல் எண் 609)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 7. நிலை : பழமை.

குறிப்பு : பூந்துறை நாடு என்பது கொங்கு நாட்டைச் சார்ந்ததாகும். அந்நாட்டார் எழுதிக் கொடுத்த சாஸனம் போன்ற மேலோலை இது.

தொடக்கம் : பூந்துறை நாட்டார் கொடுத்த மேலோலை
சுவஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுர
அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவா......

கண்டன கண்டனுடு கொண்டு கொண்ட
நாடு குடாதான் மூவரிராய கண்டன்
கட்டாரிச் சாளுவமி சுரகண்டன் துட்ட
நிக்கிரக சிட்டபரிபாலன் எம்மண்டலமும்
யீளமும் யிலங்காபுரியும் திறைகொண்ட...

முடிவு : இந்த மேலோலை தலத்துச் சம்பிறுதி திருவாளிப் பிள்ளையன் கையெழுத்து. பெரியோர்கள் பொறுத்தருளவும் அளப்பிச்சான் முதலி பிறப்பணன் சின்னையன் பட்டாலி பொட்டன் தித்தான் சாக்கண்ணன் செங்கொடன்.

Poonthurainattar ezhuthi kodutha melolai

Size: 21×33. Pages: 7. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. contains a copy of the document given by the residents of Poonthurai in Kongu Nadu.

282. பெரியபுராணச் சுருக்கம் (நூல் எண் 611)

அளவு : 21 × 33. வரிகள் ; 30.
பக்கங்கள் : 10. நிலை: பழமையானது.

குறிப்பு : சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தின் சுருக்கமாக அமைந்தது இந்நூல். திருஞானசம்பந்தர் முதலிய அடியார்களுடைய திருநாமங்கள் முறையே 36 செய்யுட்களில் அமைக்கப்பெற்றுள்ளன. சிவநாம அகவல், பிராசாதம் முதலிய நூல்களும் இப்பிரதியில் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்
பெரிய புராணச் சுருக்கம்

ஒன்றாக நாலுபத முண்டேனு மென்கவிக்கு
நன்றாக முன்னே நடக்குமே-குன்றளித்தாள்
கந்தர்முதற் றந்தகயக் கன்றுகுணக் குன்றுதனித்
தந்தரெனக் கெந்தையிணைத் தாள்.

முடிவு :

மூவர்தமிழ்க் கடன்மூழ்கி யிறைவ நூலின்
முறைதெரிந்த முத்தமிழா கரன்சீ ரென்று

நாவில்வழுத் திடுமழகோ டிருந்தாள் வள்ளி
 னயந்தவர்க்கு நல்குதிரு ஞானவானே.

பெரிய புராணச் சுருக்க முடிந்தது.

இவை எழுதினவர் வேதாரண்ணியம் முறுந்தெரு செ. அ. கணபதி பட்டாரகர் குமாரர் செல்லையா பட்டாரகர்.

Periya Purana Churukkam

Size : 21×33. Pages: 10. Lines: 30 on a page. Condition: old.

Note ; The Ms. contains 36 verses about Thirugnana Sambandar and others.

283. வேம்பற்றூர் முதலியார் பாத தோத்திரம்

(நூல் எண் 211)

அளவு : 21×33. *வரிகள்* : 25.
பக்கங்கள் : 8 (6 — 13). *நிலை: நல்ல நிலை.*

குறிப்பு : வேம்பற்றூரைச் சார்ந்த சங்கரநாராயணர் என்ற சைவநெறிக் குருவின்மீது பாடிய பாடல்கள். இதில் அம்மானை, தாலாட்டு, ஊஞ்சல் முதலிய வகைகள் உள்ளன. இதில் சிதம்பர அகவலும் உளது. அச்சான விவரம் அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

உ
தெற்கு மடம்
வேம்பற்றூர் முதலியார் அய்யா அவர்கள் பாத தோத்திரம்

முகம்பார்க்கிற் பசிதீரும்
 மொழிகேட்கிற் செவிகுளிரு முகம னன்றே
சகம்பார்த்துத் தெளிந்தோருந்
 தமிழ்ப்புலவோர் வடமொழியோர் தாமும் சொல்வார்
அகம்பார்த்துத் தெளியவெண்ணில்
 அவனடிக்கே யடிமைசெய்வீர் அவன்யா ரென்னில்
இகம்பார்க்கு நிம்பபுர சங்கரநா ராயணதே சிகனு மன்னே.

முடிவு :

தங்கமன முத்தம்மாள் தன்னைப் பெற்றாள்
 தையலென்னு முத்தம்மாள் தவசு செய்தே
யிங்குன்னைப் பொன்னம்மை யென்று பெற்றே
 யிசையுடைத்தன் மப்பெருமாட் கீந்தாள் கண்டாய்.

சிங்கவே றணையவிந்தப் பெருமா ளோடுஞ்
சிறப்புடனே வெகுகாலந் திருந்த வாழ்வாய்
கொங்கைமலைப் பொன்னம்மே யாடீ ரூசல்
குலப்பெருமா ளையனுட னாடீ ரூசல். (2)

Vembathur Mudaliar Pada Thothiram

Size: 21×33. Pages: 8. Lines: 25 on a page. Condition: good.

Note : The Ms. contains Ammanai, Unjal, Thalattu etc., about Sankara Narayanan of Vembathur.

பிரபந்தங்கள்

284. கம்பர் பாடிய நாயனுர் அகவல் (நூல் எண் 113)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

எண் 112இல் உள்ள குறிப்புக்களே இப்பிரதியில் உள்ளன. காணியாளர் அகவலும் இதில் உள்ளது.

Kambar's Nayanar Akaval

Size: 21×17. Pages: 24. Lines: 16 on a page. Condition: good.

Note : This Ms. is the same as the previous item.

285. சாக்கியர் பாடிய சிதம்பர அகவல் (நூல் எண் 211)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 6. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தில்லையம்பலமாகிய சிதம்பரத்தைப்பற்றியும் அங்குக் கோயில்கொண்டு நடனம் புரியும் அம்பலத்தீசர் மேலும் பாடப்பெற்றதாகும். சாக்கியார் என்பார் இந்நூலாசிரியர். பிற விவரங்கள் அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

சீரணி கமலத் தாரணி வாழ்க
வாரணன் முதலோர் நாரணன் போற்றத்
தில்லையின் மீதே திருநடஞ் செய்தாய்
வல்லவ நாதா வன்னியுள் வடிவே
சிவனே சிவனே புவனே சுரனே.

முடிவு :
செந்தமிழ் செலுத்திய தியாகமிசை சேரியி
லத்தர் சங்க மறையவர் தான் மகிழ்ந்து
போற்று நரசிங்க நாதா நமச்சிவாயமே.

Sakkiyar's Chidambara Akaval

Size: 21×33. Pages: 6. Lines: 36 on a page. Condition: good.

Note : The Ms. contains poems about Chidambaram and Ambalatheesar.

286. காணியாளர் அகவல் (நூல் எண் 145)

அளவு : 21 × 17. வரிகள் : 30.
பக்கங்கள் : 32. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காணியாளர் என்பார் சோழன் மரபில் வந்த பராந்தகன் முதலிய வேந்தன் காலத்து வந்தவர்கள். இவர்கள் தொழில், மரபு, செயல்கள், பரம்பரை முதலியனபற்றிப் பாடப் பெற்ற நூல். இந்நூலைக் கம்பர் இயற்றியதாகக் கூறுவர். அச்சானதாகத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் 64 கோத்திரங்களின் விவரமும், சாரமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய அகவலும் உள்ளன.

தொடக்கம் :
கடல்வயி றெழுகுங் காவிரி நாட்டில்
சுடர்மணி மௌலிச் சோழன் மரபில்
நள்ளி முதலாய்க் கிள்ளி வரையில்
உள்ளநா லாயிரத் தொருநூற் றைம்பதில்
அன்பதாந் தலைமுறை யரசனாய் வந்த......

முடிவு :
சேர்வை யுள்ள (திருமகள் மருவு) சிகேந்திர நாயனாரொடும்
பாடினாற் புகழ்பெறும் பரமணி பராக்கிரமர்
நாவி லறுபத்து (சைய) நாலு கோத்திரர்களும்
வாழி வாழி மண்டலஞ் செழிக்க
வாழி காலம் உகந்துவா ழியவே,

Kaniyalar Akaval

Size : 21×17. Pages: 32. Lines: 30 on a page. Condition: good.

Note : The Ms. contains 64 Gotrams of Kaniyalars.

287. சிவநாம அகவல் (நூல் எண் 611a)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 20. நிலை : பழமை.

குறிப்பு : சிவநாம அகவல்

பாடல் பெற்ற திருப்பதிகளில் கோயில் கொண்டிருக்கும் இறைவன், இறைவி திருநாமங்கள், தீர்த்தம்பற்றிய செய்திகள் அகவற் பாவால் கூறப்பட்டுள்ளன. 600 வரிகள் கொண்டது.

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்
சிவநாம அகவல்–வடகரை

புகழ்பெறு சிதம்பரம் புனித சபாபதி
திகழ்சிவ காமி சிவகங்கை தீர்த்தம்.

முடிவு :

இத்தலத் திருநூற் றெழுபத்து நாலு
மெய்த்தலம் புகல விளையகன் றிடுமே
கனபுலி யூர்முதல் கயிலையி ருக
வினவிநா யடியேன் விளையகன் றேனே.

சிவநாம அகவல் முற்றும்.

Sivanama Akaval

Size: 21 × 33. Pages: 20. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. contains 600 lines about Thevara Sthalams, Theerthams and Names of the respective deities.

288. கம்பர் பாடிய நாயனூர் அகவல் (நூல் எண் 112)

அளவு : 21 × 33. வரிகள் : 19.
பக்கங்கள் : 51. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஒரு குறிப்பிட்ட நாயனூர் என்ற பரம்பரை வரலாறு, ஒழுக்கம், கோத்திரம் முதலியவற்றைக் கூறுவதே இப்பிரதி. காணியாளர் பரம்பரை என்றும் கூறுவர். காணியாளர் அகவலும் இதுவும் ஒன்றே. பிற விவரங்கள் அறியக் கூடவில்லை.

தொடக்கம் :

திருமகள் உறையுஞ் செந்தா மரையோன்
விரிதிரு மார்போ னழகினின் மிகுந்த
கடல்வயி ற்றெழுகுங் காவிரி நாட்டில்
சுடர்மணி மௌலிச் சோழன் மரபில்
நள்ளி முதலாக் கிள்ளி வரையில்
உள்ளநா லாயிரத் தொருநூற் றைம்பதில்
அன்பதாம் தலைமுறை அரசனாய் வந்த
வன்பராந் தகனெனும் மன்னவன் நாளில்....

முடிவு :

காலிங்க ராயர் கனக ராயர்
நாலிங் குவங்தொளிர் நரசிங்க தேவர்
திருநல்லூ ருடையார் செம்பங் குடையார்
பருவார் சடையார் விசயபா லுடையார்
வில்வ திரையார் விசய ராயர்.

Kambar's Nayanar Akaval

Size: 21×33. Pages: 51. Lines: 19 on a page. Condition: good.

Note: The Ms. contains the history and Gotrams of Kaniyalars.

289. சிவக்ஷேத்திர விளக்கம் (நூல் எண் 234)

அளவு : 21×33. *வரிகள் :* 30.
பக்கங்கள் : 87. *நிலை : நலமாக உளது.*

குறிப்பு : இப்பிரதியில் எண் 611a என்ற பிரதியில் குறிப்பிடப்பெற்ற சிவநாம அகவல் என்ற நூலில் அவ்வத்தலங்களைக் கூறும் அடிகளைக் குறித்து அதனதன்கீழ் அத்தலத்திற்குரிய தேவாரங்களுள் ஒன்று குறிப்பிடப் பெற்றுளது.

தொடக்கம்:

உ
கணபதி துணை
சிவக்ஷேத்ர விளக்கம்
கோயில்

புகழ்பெறு சிதம்பரம் புனிதர் சபாபதி
திகழ்சிவ காமி சிவகங்கை தீர்த்தம்
திருமூலட் டானந் திருமூல நாதர்

பரை யுமையம்மை பரமா னந்தம்
கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
பற்று நின்றுரைப் பற்று பாவமே. (1)

முடிவு :

ஸ்ரீ கயிலாயம்

வளர் கயிலாய மலை பரமேசுரர்
இளமைசேர் பார்வதி எழில்சர வணையே.
வாள்வரி கோள்புலி கிளர் துரி தரனின் மிசைநாளு மகிழ்வார்
....
....
.... கயிலாய மலையே (5)
அருள் வடதிசையினி லந்து சிவாலயம்
பரிவொடு பணிய பழவினை யறுமே.
இத்தலத் திருநூற்றெழுபத்து நாலு
மெய்த்தலம் புகல விநாயகன் றிடுமே
கனபுலி யூர்முதல் கயிலை யீருக
வினவிநா யடியேன் விநாயகன் றேனே.

ஆக 274 சிவக்ஷேத்திர விளக்கம் முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

Siva Kshethira Vilakkam.

Size: 21×33. Pages: 87. Lines: 30 on a page.
Condition: injured.

Note : This Ms. contains the history of the deities of Siva sthalams.

290. அருணையந்தாதி (நூல் எண் 439b)

அளவு : 21×17. வரிகள் : 14.
பக்கங்கள் : 32. நிலை : சிலமானது.

குறிப்பு : இப்பிரதியில் திருவண்ணாமலையில் எழுந்தருளி யுள்ள இறைவனைப் புகழ்ந்து சைவ எல்லப்ப நாவல ரியற்றிய அந்தாதியில் 95 பாடல்கள் உள்ளன. 96ஆம் பாடல் இல்லை. 97 முதல் 100 வரைத் திருப்புகலூரந்தாதிப் பாடல்களும் புகலூரந்தாதி நூலாசிரியர்பற்றிய பாடலும் உள்ளன. இவை களுக்குப் பிறகு திருவெண்காட்டந்தாதியில் மூன்று பாடல் களும் உள்ளன. இதன் பிறகு பதிற்றுப்பத்து 114 பக்கம் உள்ளது. இப்பிரதியில் தில்லை, மயிலை அந்தாதி முதலிய நூல்களும் உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

காப்பு

செந்தாதி மஞ்செறி சோணு சலத்தரைச் செந்தமிழி
னந்தா தியமனைச் செற்றூர்க்குக் கோசல நாடுவிட்டுத்
தந்தாதி யால்வனம் புக்காரும் வேதச் சதுமுகரு
மந்தாதி கண்டிலர் யானேவந் தாதி யறைகுவனே.

நூல் :

பூமன் றலைமை யளிகூ முருணையிற் புங்கவனூர்
மாமன் றலைமை யடுந்தலை யாக வரங்கொடுத்தார்
காமன் றலைமை யறவழ லாக்கிய கண்ணர்விண்ணோர்
தாமன் றலைமையக் கந்திர நஞ்சந் தரித்தனரே.

முடிவு :

குறித்திட்டு மோதக் கரங்காட்டு நெல்லைக் குவித்திரண்டாய்
பிறித்திட்ட மீதொன்று தீண்டனங் கேபிர மன்சிரத்தைத்
தறித்திட்ட சோண கிரிநாதர் சேர்வருன் சட்டுவத்தேன்
மறித்திட்ட கூழ்நன்று கேளாய் கெவுளி வலஞ்செய்ததே. 95

Arunai Andadi

Size: 21×17. Pages: 32. Lines: 14 on a page. Condition: injured.

Note : The Ms. contains the first 95 verses of Arunai Andadi composed by Saiva Ellappa Navalar. Arunai is Tiruvannamalai. Certain verses from Tiruppugalur Andadi, Tiruvenkattu Andadi etc., are also included in this Ms. Printed.

291. கும்பேசர் வெண்பா அந்தாதி (நூல் எண் 92b)

அளவு : 21×33. *வரிகள்* : 16.
பக்கங்கள் : 26. *நிலை* : *நல்ல நிலை.*

குறிப்பு : *இந்நூல் குடந்தையில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய கும்பேசரைப்பற்றி வெண்பாவில் அந்தாதித் தொடையாகப் பாடப்பெற்றது. சில பாடல்கள் இப்பிரதியில் மூலநூற் சிதைவால் குறையாகவுள்ளன. இந்நூலாசிரியர் ஐயரவர்கள் எனத் தோற்றுகின்றது. நூலில் ஆசிரியர்பற்றிய குறிப்பு ஏதும் காணப்பெறவில்லை. அச்சாகவில்லை. இப் பிரதியில்* 92 *மாசிலாமணியீசர் அந்தாதி,* 92a *பழனியமக அந்தாதி ஆகிய நூல்கள் உள்ளன.*

தொடக்கம் :

உ

திருச்சிற்றம்பலம்

நின்புகழை யாய்ந்து நினைநினைந்து நின்றருளில்
என்புருக வீழ்த்திறைஞ்சி யேத்துகின்றேன்–துன்பு
துடையாய் திருக்குடந்தைச் சோதீ யழற்கை
யுடையாய் இஃ தென்றோ வுரை. (க)

முடிவு :

பயமகல வானோர்க்குப் பாற்கடனஞ் சுண்டே
சயமுடைய தென்குடந்தைத் தானு-கயவர்கள் செய்
வஞ்சமே தீரும் வகையருள்வா னன்னனை
நெஞ்சமே யுன்னியுய்வாய் நின்று. (க00)

வெண்பாவந்தாதி முற்றும்.

Kubesar Venba Andadi

Size: 21×33. Pages: 26. Lines: 16 on a page. Condition: good.

Note: The Ms. contains the Andadi composed in praise of Lord Kumbeswarar of Kumbakonam (Kudandai). The Ms. also contains Masilamani Easar Andadi and Palani Yamaka Andadi. Author not known.

292. கணபதி அந்தாதி (நூல் எண் 438a)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 25. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் விநாயகக் கடவுள்மீது பார்க்கவ புராண மென்னும் விநாயக புராணத்தின் சுருக்கமாகக் கலித்துறை 100 பாடல்களால் பாடப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை, நூல் நிலையத்துள்ள 334 எண் ஏட்டுச் சுவடியி லிருந்து பிரதி செய்யப்பெற்றது என்ற குறிப்புக் காணப் படுகிறது. இந்நூலில் பல அரிய கருத்துக்கள் காணக் கிடைக் கின்றன. இப்பிரதியில் தில்லையுலா, வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

சிவமயம்

கணபதி யந்தாதி

முதலாவது லீலா காண்டம்

வக்கிரதுண்டவிநாயகர் திருவவதாரக் கட்டளைக் கலித்துறை.

உலகு நடத்தற் கயன்மா லுருத்திர னுன்னருளா
லிலகிய தன்னவ ரோராம வேதவ மெய்துதலும்
நலமிகு வக்கிர துண்ட விநாயக நாமத்தராய்ச்
சொலுமிவர் மூவர்முன் றோன்றும் பிரணவச் சுந்தரமே. (க)

முடிவு:

நன்றிய நின்மான் மியந்தனைப் பார்க்கவ நன்முனிவன்
வென்றிய சோமகாந் தன்குட்ட நோயற மெய்மருந்தாய்
துன்றிய வன்மல ருளத்தெமை... சுந்தரமே
யொன்றிய வைங்கர வாழி மிருந்த தலகினிலே. (கoo)

Ganapati Andadi

Size: 21×33. Pages: 25. Lines: 28 on a page. Condition: good.

Note : This is copied from the cadjan leaf Ms. No. 334 of the Library. It contains 100 verses in kalithurai and is an abridgement of Bhargava Puranam. Tillai Ula and Vayalur Patitruppaththandadi are also included in this Ms. Author not known.

293. சிவகிரி ஒலியல் அந்தாதி (நூல் எண் 663c)

அளவு: 21×17. வரிகள் : 34.
பக்கங்கள் : 7. நிலை : பழமை.

குறிப்பு : ஒலியல் அந்தாதி என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. இது 30 பாடல்களில் வெண்பா, கலித்துறை, அகவல் என்ற யாப்பில் அந்தாதித்துப் பாடப்பாடுவதாகும். சிவகிரி முருகன்மீது இம்முறையில் பாடப்பெற்றதே சிவகிரி ஒலியல் அந்தாதி என்ற இப்பிரபந்தமாகும். சிவகிரி என்பது கொங்கு நாட்டிலுள்ள முருகன் திருத்தலம். இந்நூல் 20 பாடல்களுடன் முழுமை பெறுமல் காணப்படுகிறது. இப்பிரதியில் 666-முருகேசப்பதிகம், 663a-தெண்டபாணிப் பதிகம், 663b-பழனிபுரி இரட்டை மணிமாலை ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

சிவாசலத் தெண்டாயுதக் கடவுள் துணை
சிவகிரி ஒலியலந்தாதி

காப்பு

ஒலியலந் தாதி யுரைப்பதற் கினிய
வலியமும் மதத்து வாரணன் காப்பு.

வெண்பா

பூமேவு செல்வம் பொலிந்த சிவகிரிவாழ்
தூமேவு தேவைத் தொழுவோர்க்குத்—தாமே
வருகு மனந்தன் வழுத்தற் கரிதாந்
திரிகுவல யம்புகழுஞ் சீர். (க)

அகவல்

சீர்புனை தவளச் செழுமதி யிதழித்
தார்புனை யக்குத் தருக்கிளர் கூவிளங்
கங்கைவெள் ளெருக்குக் கதிர்விரி தூர்வை

....

....

மடலவி ழிணையடி மலர்மற வாவென்
கலிதீர்த் தென்றும் காப்பதுன் பரமே. (உ)

கலித்துறை

பராபர னேமலர்ச் சேவடித் தொண்டுநான் பண்ணுதற்கே
புராதன ஜன்மத்தி லெத்தனை பூஜை புரிந்திருப்பேன்
தராதர மெல்லாந் தெரிந்தவ னீயருட் சாதியையா
வராகவெற் புச்சூழ் சிவாசல மேவிய வாரணனே.

முடிவு :

கோடியை யுடுத்துக் கொம்பர்கள் பிடித்துச்
சென்றுமா மருதத் திருப்பதி புகுந்து
வென்றிசே ரிந்திரன் றந்த வுலுப்பையர்
மரம்பை வருக்கைய மல்க மாதனே.

Sivagiri Oliyal Andadi

Size: 21×17. Pages 7. Lines: 34 on a page. Condition: old.

Note : The Ms. contains 20 verses only out of the original 30, in andadi form in venba agaval and kalithurai. This is in praise of Lord Muruga of Sivagiri in Kongunadu. Author not known.

294. திரிகூடத் திரிபந்தாதி (நூல் எண் 193a)

அளவு : 21 × 33. வரிகள் : 22.
பக்கங்கள் : 10. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திரிகூடாசலம் என்னும் திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடப்பெற்ற திரிபந்தாதியாகும். நூலாசிரியர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர். திருக்குற்றாலப் புராணம் முதலிய பல நூல்களை இயற்றியவர் அக்கவிஞர். இதில் 52 செய்யுட்கள் உள. இதில் கடைசிப் பாடலுக்கு முதற் பாடல் எழுதாமல் விடப்பட்டுள்ளது. இப்பிரதியில் 193- கோகுல சதகம் என்ற நூலும் உள்ளது. அபூர்த்தி.

தொடக்கம் :

உ

ஆரணத் தானனத் தானுழி பொற்கையி லங்குமொரு
காரணத் தானனத் தான்கா ணொணிட் களங்கபரி
பூரணத் தானனத் தான்றிரி கூடம் புரந்தமத
வாரணத் தானனத் தான்மலர்த் தாள்கள் வணங்குதுமே.

முடிவு :

அரவைப் பயோதரங் காநடித் திட்டழித் தானுறங்கும்
பரவைப் பயோதரங் காமேவு நன்னகர் பன்னகர்பூ
தரவைப் பயோதரங் காணூர்க்கு வைப்பன்று தன்றுணைநீத்
திரவைப் பயோதரங் காணுங் கடத்துவ தெவ்வண்ணமே.

Tirikuta Tiribu Andadi

Size: 21×33. Pages: 10. Lines: 22 on a page. Condition: good.

Note : The Ms. contains the Tiribu Andadi by Tirikuta Rasappa Kavirayar in praise of Lord Siva at Tirukutralam. Contains 52 verses with the last but one omitted. The Ms. also contains Gokula satakam.

295. திருக்குற்றால யமக அந்தாதி (நூல் எண் 324)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 15. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : இது திருக்குற்றாலநாதர்மேல் யமகமாகப் பாடியுள்ள நூலாகும். இந்நூலாசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர்.

இதில் பாயிரம் 4 பாடல்களும், நூல் 100 பாடல்களும் உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருக்குற்றால யமக வந்தாதி
காப்பு

புயல்காட்டும் பொன்மதிற் குற்றாலத் தண்ணலைப்
போற்றுதமிழ்
இயல்காட்டும் பாடலந் தாதிக்கு மேற்பொருள் யாவுந்தந்து
செயல்காட்டுந் தென்னிலஞ் சிக்கும ரேசன்முற்
செல்வன்செய்கள்
கயல்காட்டு மேலக ரத்தூரிற் செண்பகக் கற்பகமே. (க)

முடிவு.

இலம்பக வாச விடந்தோறுஞ் சென்றிர வாமற்கொன்றை
இலம்பக வார்சடை யெந்தைகுற் றாலத்தி லெய்தியத்தம்
இலம்பக வாவென் றிரப்பார் தனதி னிரப்பமெய்யின்
இலம்பக வாசவென் போல்வாழ்வ ராள்வ ரெழுபுவியே.

Tirukkutrala Yamaka Andadi

Size: 21×33. Pages: 15. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contains Yamaka Andadi on Tirukutralanathar by Tirikuta Rasappa Kavirayar and contains 100 verses. Printed.

296. திருக்குற்றால யமக அந்தாதி (நூல் எண் 325)

அளவு : 21 × 17. வரிகள் : 16.
பக்கங்கள் : 26. நிலை : நல்ல நிலை.

நூல் எண் 324இல் உள்ளபடியே.

Tirukutrala Yamaka Andadi

Size: 21×17. Pages: 26. Lines: 16 on a page. Condition: good.

Note : Same as the previous one.

297. திருக்குற்ருல யமக அந்தாதி (நூல் எண் 326)

அளவு : 21 × 17. வரிகள் : 24.
பக்கங்கள் : 19. நிலை : நல்ல நிலை.

இப்பிரதியும் நூல் எண் 324இல் உள்ள குறிப்பின்படியே உள்ளது. இப்பிரதியில் திருக்குற்ருல வெண்பா என்ற நூலும் உள்ளது.

Tirukutrala Yamaka Andadi

Size: 21×17. Pages: 19. Lines: 24 on a page. Condition: good.

Note: Same as the previous ones but also contains another work Tirukutrala Venba.

298. திருநூற்றந்தாதி (நூல் எண் 540a)

அளவு : 21 × 17. வரிகள் ; 23.
பக்கங்கள் ; 80. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி சமண சமயத்தைச் சார்ந்த அவிரோதியாழ்வார், அருகதேவர்மீது பாடிய அந்தாதியாகும். அச்சானது. முதல் 23 பக்கங்களில் நேமிநாதமும், இறுதியில் 26 பக்கங்கள் திருமயிலைத் திரிபந்தாதியும் உள்ளன.

தொடக்கம் :

அவிரோதநாதர் அருளிச் செய்த
திருநூற்றந்தாதி
நேமீசுரர் துதி

மறமே முனிந்து மயிலா புரிநின்று மன்னுயிர்கட்
கறமே பொழியு மருட்கொண்ட லேயத ரஞ்சிவந்த
நிறமே கரியவொண் மாணிக்க மேநெடு நாளொழித்துப்
புறமே திரிந்த பிழையடி யேனைப் பொறுத்தருளே.

ஒழித்து—கழித்து. புறம்—விஷயம். மயிலாபுரி யென்பது மரூஉ வழக்கு.

முடிவு :

சிந்தா குலமில்லைத் தீவினை யோஞ்செய்ய தாமரையான்
வந்தா தரிக்கு மடநெஞ்ச மேமற வாதிருக்கக்

கொந்தா ரலங்கற் குடையொரு மூன்றுடை யான்குணங்கள்
அந்தாதி யாக வவிரோதி யோதிய வாகமமே. (102)

ஆகமம் மறவாதிருக்க வெனக் கூட்டுக.

திருநூற்றந்தாதி முற்றியது.

Tirunutrandadi

Size: 21×17. Pages: 80. Lines: 23 on a page. Condition: good.

Note: This is a Jain work composed by Avirodhi Azhwar in praise of Arugadevar; printed. The Ms. contains also Neminatham and Tirumayilai Tiribu Andadi.

299. திருப்புகலூர் அந்தாதி (நூல் எண் 369)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 53. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதி நெற்குன்றவாணர் இயற்றிய திருப்புகலூர் அந்தாதியாகும். உரையுடன் காணப்படுகிறது. அச்சானது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருப்புகலூரந்தாதி

உரைசெய் மறைக்குந் தலைதெரி யாவொரு கொம்பனென்றே
பரசு மவர்க்குப் பெருசிழ லாக்கும் பழனமெல்லாந்
திரைசெய் கடற்றுறைச் சங்க முலாவுந் திருப்புகலூ
ரரசி னிடத்து மகிழ்வஞ்சி யீன்றதோ ரத்திநின்றே.

முடிவு :

பொற்குன் றனைய முலைபுமை பங்கற்குப் புண்ணியற்குச்
சிற்குன் றனைய திருப்புக லூரற்குச் செந்தமிழால்
நெற்குன்ற வாண னுரைத்தவந் தாதியை நீணிலத்திற்
கற்கின்ற தன்றிக் கவிபாட யாவர்க்குங் கற்பல்லவே.

அழகிய திருமணவாளக்கூத்தப்பிரானார்
திருப்பாதங்களே சரணம்.
புகலூரந்தாதி முற்றும்.

திருவண்டுதுறையிலிருந்து சிதம்பர முதலியாரிடத்தில் வாங்கிப் பைங்கா நாட்டிலெழுதினதாம், கூ௦அஎ(1087) ஆம் ஞூ மீன மீ" கூஉ ரோகிணி நாளில் முற்றினது.

திருச்சிற்றம்பலம்.

Tiruppugalur Andadi

Size: 21×33. Pages: 53. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. contains Tiruppugalur Andadi by Nerkunra Vanar with a commentary; prlnted.

300. திருப்பெருந்துறை அந்தாதி (நூல் எண் 542)

அளவு : 21×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 18. நிலை : பழமை.

குறிப்பு : பாண்டிநாட்டுத் திருப்பதியாகிய திருப்பெருந் துறை இறைவன்மீது யமக அந்தாதியாகப் பாடப் பெற்ற பிரபந்தமே இது. இப்பிரதியில் 97 கலித்துறைகள் உள்ளன. இடையிடையே சீர்கள் சிதைந்துள்ளன. இதன் ஆசிரியர் மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் என ஐயரவர்கள் குறித் துள்ள குறிப்பால் அறிய வருகின்றது.

தொடக்கம் :

உ
சிவமயம்

மின்னார் மருங்கின் சிவயோக மான்பங்கர் மீதில்மலர்ப்
பொன்னார் பெருந்துறை யந்தாதி சொல்லப் புகழடியேன்
றன்னேய் தரையும் படியளி சேருந் தடங்குளத்தின்
மன்னேடை யாம்பலம் போருகப் பாத மலர்துணையே. (1)

முடிவு :

காரரி யங்க மலத்தண்ணல் தேவர் கயிடவசங்
காரரி யங்கவர் தும்புரு நாரதர் கானநெருங்
காரரி யங்கம் புனையுந் துறைசைக் கருத்தனென்னிற்
காரரி யங்க நடுக்கமுன் வாரலன் காண்மதியே. (97)

Tirupperundurai Andadi

Size: 21×33. Pages: 18. Lines: 24 on a page. Condition: old.

Note: The Ms. contains the Andadi in Yamakam sung in praise of the presiding deity of Tirupperundurai by Mithilaip-patti Chitrambala Kavirayar.

301. திருமயிலை யமகவந்தாதி (உரையுடன்)

(நூல் எண் 389)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 116. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதி திருமயிலைக் கபாலீசுவரர்மீது அந்தாதியாகப் பாடப்பெற்றது. இறுதியில் 3 கலித்துறைகள் இந்நூலைப் பற்றி உள்ளன. இந்நூலாசிரியர் தாண்டவராய கவிராயர். இந்நூலை ஐயரவர்கள் 1936–இல் பதிப்பித்துள்ளனர். மறு பதிப்பும் 1976–இல் நூல்நிலைய வெளியீடாக வந்துள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருமயிலை யமகவந்தாதி யுரை
காப்பு

கூத்தா டுவர்க்க வளந்தோன் பணியரன் கோகிலங்கள்
கூத்தா டுசோலை மயிலையந் தாதியைக் கூறவுரு
கூத்தா டுனிப்புகழ் வார்க்கருள் கற்பகங் கொண்டல் வண்ணக்
கூத்தா டுமைங்கரன் காப்பாகு மேன்மை கொடுத்திடுமே.

முடிவு :

நற்படி மேற்சந்தி ராதித்தர் நிற்கின்ற நாளுமகிழ்ந்
தற்படி யேங்கற்க நிற்க மயிலையந் தாதிதனைப்
பொற்படி வத்திருப் பூம்பாவை வேலன் புகலெனுங்கா
தற்படி யோதினன் றாண்டவ ராய தமிழ்ச்சிங்கமே.

இது எழுதியது மயிலை அண்ணுசாமி உபாத்தி.
திருச்சிற்றம்பலம்.

Tirumayilai Yamaka Andadi (with Commentary)

Size: 21×33. Pages: 116. Lines 26 on a page. Condition: old.

Note: The Ms. contains Yamaka Andadi composed by Thandavaraya Kavirayar in praise of Lord Kapaleeswarar of Mylapore.

This was edited and published in 1936 by Dr. Iyer and a second edition has been brought out by the Library in 1976.

302. திருமேனியார்கோவில் திரிபந்தாதி

(நூல் எண் 394)

அளவு : 21×17. *வரிகள் :* 16.
பக்கங்கள் : 26. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : *இப்பிரதி திருமேனியார்கோவில் இறைவன்மீது திரிபந்தாதியாகப் பாடப்பெற்றது. இந்நூலாசிரியர் திருக் கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனக்கவிராயர் கொடுவூர் பூ. அ. சிதம்பரநாத முதலியார் என்ற குறிப்பு முதற் பக்கத்தில் காணப்படுகின்றது. அச்சான விவரம் தெரியவில்லை.*

தொடக்கம் :

உ
ணபதி துணை
திருமேனியார் கோயிலந்தாதி
காப்பு

திருமேனி யார்திரி பந்தாதி யென்னுஞ் செழுஞ்சுவைசேர்
மருமேவு சொன்மல ராரந் தொடுத்து மதிபுனையு
மொருமேரு வில்லிக்குள் ளன்போடு சூட்ட வுறுதுணையாய்
வருமேக தந்தப் பெருமான் கமல மலரடியே.

முடிவு :

வாட்டம் புலியும் பணியுந் தவிர்ந்தின்ப வாழ்வுபெற
வாட்டம் புரியுந் திருமேனி யார்தனி யற்புதனை
நாட்டம் புனல்வர விற்கொண்டு சாடு நரன்மகிழத்
திட்டம்பு நல்கும் பெருமானை யெண்ணு துஞ் சீர்பெறவே.

Thirumeniyarkovil Tiribu Andadi

Size: 21×17. Pages: 26. Lines: 16 on a page. Condition: good.

Note: The Ms. contains Tiribu Andadi in praise of the deity at Tirumeniarkovil by Koduvur Chidambaranatha Mudaliar, Pulavar of Dharmapuram Mutt.

303. திருவரங்கத் தந்தாதியுரை (நூல் எண் 395)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 76. நிலை : கிலமாக உள்ளது.

குறிப்பு : இந்நூல் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள ரங்கநாதர் மகிமைகளைப்பற்றிக் கூறுவது. இப்பிரதியில் இந்நூற்கு உரையும் உளது. இந்நூல் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரால் இயற்றப்பெற்றது. 100 பாக்கள் உள. நூலின் இறுதியில், 'இந்தவுரை யெழுதினேன்நம்மாழ்வார் திருநகரித் திருக்குருகைப் பெருமாள் கவிராயன் வேங்கடத்துறைவான்' எனக் காணப் படுகிறது. அச்சானது.

தொடக்கம் :

உ

இராமஜயம்

அரங்கரந்தாதியுரை பாடம்

ஓராழி வெய்யவன் சூழுல கேழுவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கிற்
சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே. (க)

ஒற்றை வண்டித் தேரையுடைய சூரியன் சுற்றப்பட்ட உலகமேழும் விசுவாசமாகித் தோத்திரம் பண்ணுகின்ற சீரங்கத்தையுடைய பெருமாள், கறுத்த கடல்போலு நிறத்தையுடையவனந்தாதியாகிய பிரபந்தத்தைக் காப்பாரைச் சொல்லுமிடத்து சிறப்புப் பொருந்தின மோதிரத்தையுடைய அழகிய கையிலே தங்கப் பிரம்பு கொண்ட சேனைமுதலியாரும் முனையுடைய சக்கரமும் சங்கும் சிறந்த தடியும் வாளும் வில்லும் என்றவாறு.

முடிவு :

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப்ப வைத்த செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமென் றார்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே.

(எ-து) நீங்கா அலைபோலும் ஜென்ம வியாதியைத் தள்ளி யென்னை நித்திய சூரியருடனே உயர்ந்த அன்புடையார் செய்ய அவையில் கைங்கரியங்களை விடாதபடி வைத்தன. கருமமானது ஓர்ந்திடத்தர். அவ்விடத்திலே அபயமென ஆர்ப்பரிக்கும் அலையையுடைய காவேரிசூழ்ந்த கரையுடைய சீரங்கத்துள்ளா

னுடைய சிலம்பு பொருந்தின செவ்விய திருவடிகள் என்றவாறு. அரங்கன் திருவடி என்னைப் பணிக்க வைத்தன என முடிக்க. திருவடியடைந்தேன்; பரமபதத்திற்குரியனானேன் என்பது குறிப்பு. ஈண்டு அடைதல் - நினைத்தல். பிறவிப்பெருங்கடல் நீந்துவர் இறைவனடி சேர்ந்தாரென்றார் பிறரும். தெளிவுபற்றிப் பரமபதம் பெறுவேனென்னாது பெற்றேனென்பதாகப் பணி காப்ப வைத்த வென்றார்......

நன்னூலார் வழக்குப்பற்றி மொழி முதலாக்கினது போல வாம் அல்லதூஉம் இச்செய்யுட் செய்தார் வரகவி ஆதலின் ஆரிடப்போலி யென அமைப்பதூஉமாம். (100)

இந்த வுரையெழுதினேன் நம்மாழ்வார் திருநகரித் திருக் குருகைப் பெருமாள் கவிராயன் வேங்கடத்துறைவான். அரங் கரந்தாதி முடிந்தது. சருவதாரி வருஷம் புரட்டாசி மாதம் 29உ சோமவார நாள் எழுதி முடிந்தது. நம்மாழ்வார் திருவடி களே சரணம்.

அரங்கரந்தாதியுரை பாட முற்றும்.

Tiruvarankathu Andadi (with notes)

Size: 21×33. Pages: 76. Lines: 25 on a page. Condition: injured.

Note: The Ms. contains 100 andadi verses. The author is Pillaipperumal Aiyangar. The notes are written by Venkata-thuraivan; printed.

304. திருவுசாத்தானத் திரிபந்தாதி (நூல் எண் 424)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 18. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : உசாத்தானம் தஞ்சை மாவட்டம் முத்துப் பேட்டை என்னும் நகருக்கு 2 கல் தொலைவில் உள்ள தலம். இத்தலத் திறைவன்பேரில் திரிபந்தாதியாகப் பாடப்பெற்ற பிரபந்தம் இது. பூர்த்தியாகவுள்ளது, சிற்சில பாடல்களுக் கெதிரில் அந்த அந்தப் பாடலைப்பற்றிய குறிப்பும் உள்ளது. இறுதியில் இந்த நூலுக்குச் சம்பந்தமில்லாத 3 கலித்துறைகள் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவுசாத்தானத் திரிபந்தாதி

காப்பு

செந்தா தியல் கொன்றை சூடு முசாவைச் சிவபரன்மே
லந்தாதி நூறு திரிபாகப் பாட வரிவையுறக்
கந்தா தியானப் படியீது மென்றுரற் காற்கரியாய்
முந்தாதி சூத வனப்பிள்ளை பாத முயங்குவனே.

முடிவு :

தேமாயு மாவைகு சோலையு சாவைச் சிவபரமுன்
கோமாயு மாவை விலைபகர்ந் தாயுனைக் கூடுநெஞ்சி
னேமாயு மாவை பிதாவுங் குரவனு நீயெனல்வம்
போமாயு மாவை யடர்போநெற் கீசனின் பூங்கழலே. (100)

முற்றும்

Tiruvusathana Tiribu Andadi

Size: 21×33. Pages: 18. Lines: 26 on a page. Condition: good.

Note: The Ms. contains the Tiribu Andadi sung in praise of the deity of Usathanam which is a sthalam near Muthuppettai in Thanjavur district. Author not known.

305. திருவேகம்பரந்தாதி (நூல் எண் 429)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 16. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காஞ்சியம்பதியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரே சுவரர்மீது பாடப்பட்ட அந்தாதியாகும். இது யமகமாக உள்ளது. இந்நூல் சிவஞான சுவாமிகளால் இயற்றப்பட்ட தினும் வேறாகும். சுவடிகளின் விளக்கம் தொகுதி 2, பக்கம் 240, சுவடி எண் 688 என்ற ஏட்டுச் சுவடியிலும் இந்த அந்தாதி காணப்படுகிறது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருவேகம்பரந்தாதி
காப்பு

கம்பரந் தாதி யையுமலர் தூயெதிர் கண்டுறைய
நம்பரந் தாதி யிலாரொரு மாவடிக் கண்ணர்வந்தி

கம்பரத் தாதி கழகச் சியவென் றன்பர் கைதொழுமெய்க்
கம்பரந் தாதிக் கருள்வி கடசக் கரப்பிள்ளையே.

முடிவு :

காம ரமனி மலரையண் டர்க்கருள் காட்சியினுங்
காம ரமனி விரித்த தெனவுங் கவின்றகச்சி
காம ரமனி கொள்வெண்கம் பாவருள் கஞ்சமென்று
காம ரமனி முழக்குமின் முளக லார்சங்கமே. (100)

இது, காஞ்சிபுரம் காலாண்டர் தெருவில் இருக்கும் ஸ்ரீ குமாரசாமி தேசிகர் சீட்டுப் பிரதியைப் பார்த்து எழுதப் பெற்றது. 9-10-27.

Tiruvekambar Andadi

Size: 21×33. Pages: 16. Lines: 30 on a page. Condition: good.

Note: The Ms. is in Andadi in Yamakam sung in praise of Lord Ekambareswarar of Kancheepuram. This work is different from the one written by Sivagnana Swamigal. The corresponding cadjan leaf Ms. is available in the Library. Author not known.

306. தில்லைத் திரிபந்தாதி (நூல் எண் 437)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தில்லை வளாகத்தில் எழுந்தருளியுள்ள இராமபிரான்மீது பாடப்பெற்ற நூலாகும் இது. இதன் ஆசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. தில்லை இராமன் என்று பாடலில் வருகிறது. 53 கலித்துறைகள் உள்ளன. இடையே 32ஆம் பாடலுக்குப் பின்வரும் 33ஆம் பாடல் அந்தாதியாக இல்லை. கலித்துறைகள் ஒரு பக்கத்தில் எழுதப்பெற்று அதனெதிர்ப் பக்கத்தில் அந்த அந்தப் பாடலுக்குரிய குறிப்புக்கள் உள்ளன.

தொடக்கம் :

உ

ஸ்ரீ ராமஜெயம்

தில்லைத் திரிபந்தாதி

காப்பு

வல்லையி ராமனந் தாதியி னுற்பிறழ் மன்னுரையாற்
புல்லையி ராமனந் தாதிழி கானகம் போனபிரான்
தில்லையி ராமனந் தாதிக்கோர் கோட்டும்பல் செந்தமிழ்நற்
சொல்லையி ராமனந் தாதினி தேநல்குந் தோன்றி நின்றே.

முடிவு :

மனையுந் தனையருஞ் செப்பமு மேமனத் துட்களுல
வினையுந் தனையருஞ் செப்படி யோமுத்தி மேவுவது
நினையுந் தனையருஞ் செப்பிடு சாலத்தி னேர்வருவோன்
றனையுந் தனையருஞ் செப்பவொண் ணுன்றில்லை சார்தல்
விட்டே.

Tillai Tiribu Andadi

Size: 21×17. Pages: 24. Lines: 20 on a page. Condition: good.

Note: The Ms. contains the Andadi sung in praise of Sri Rama at Tillaivalagam in 53 kalithurais. Author not known. Nots are written against each kalithurai.

307. தில்லையந்தாதி (நூல் எண் 439)

அளவு : 21×17. வரிகள் : 24.
பக்கங்கள் : 13. நிலை : மிகச் சிதிலம்.

குறிப்பு : தில்லையிறைவன்மீது யமக அந்தாதியாகப் பாடப் பெற்ற நூல் இது. இதில் 77 பாக்களே யுள. ஆனுல் இறுதியில் முற்றும் எனக் காணப்படுகின்றது. பிரதி மிகவும் சிதிலமாக இருப்பதால் சரியாகக் கணக்கிட இயலாமலிருக்கிறது. இந்நூல் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்க ளியற்றிய அந்தாதியினின்றும் வேறுபட்டது. இப்பிரதியில் 439a-மயிலை யந்தாதியும், 439b-அருணையந்தாதியும், திருவெண்காட்டந்தாதி யில் மூன்று பாடல்கள் மட்டும் உள்ளன.

தொடக்கம் :

தில்லையந்தாதி

காப்பு

கந்தன் றமையனற் றந்தஞ் செறிந்த கரத்தன்வந்த
நந்தன் றெழுந்தில்லை யந்தாதி கூற நமக்குவரந்
தந்தன்பு கூருவ னையமின் றேயிது தந்தைபுகழ்
மைந்தன் வளர்ப்பதல் லான்மற் றியாவர் வளர்ப்பவரே.

முடிவு :

அமரரை மால்தொழும் அம்பல வாணர் அவிர்புலித்தோல்
அமரரை மாசுணத் தாலணி வாரரண் மூன்றெரிய
அமரரை மாத்திரைக் கேவிளைத் தாரரு ளாரவரென்
அமரரை மாத்திய கண்போ லெழுந்ததின் றம்புலியே.

முற்றும்.

ஹரி : ஓம்

Tillai Andadi

Size: 21×17. Pages: 13. Lines: 24 on a page. Condition: much injured.

Note: The Ms. contains only 77 verses of the Yamaka Andadi sung in praise of the Lord in Chidambaram. This is different from the one composed by Mahavidwan Meenakshisundaram Pillai. Author not known.

308. துறைசை வெண்பா அந்தாதி (நூல் எண் 442)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 12. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : துறைசை என்பது திருவாவடுதுறையைக் குறிக்கும். இத்தலத்திறைவர் கோமுத்தீசர். அவ்விறைவர்மேல் வெண்பாவால் அந்தாதியாக அமைந்த நூல். இது அபூர்த்தியாகவுளது.

தொடக்கம் :

உ

ஆப்பணிந்து போற்றுமெங்கைக் காந்துறைசை யந்தாதி
காப்பணிந்து நூறுங் கழறென்றென்—றுப்பணிருந்
தைந்தருவந் தீவதுபோ லைந்துகரக் குஞ்சரமா
மைந்தருவந் தீவார் வரம்.

முடிவு :

வந்தர மாதருடன் வானவர்கள் போற்றுமருட்
சுந்தர மாதுறைசைத் தூயோனே—பெந்தித்
துருவம் பலவாய்த் துழல்வேனை யாண்டுன்
றிருவம் பலவாய்த் திரு. (100)

துறைசை யந்தாதி முற்றிற்று.

Thurasai Venba Andadi

Size: 21×33. Pages: 12. Lines: 36 on a page. Condition: injured.

Note: The Ms. contains the Andadi on Lord Gomuthisvarar of Tiruvavaduthurai; incomplete. Author not known.

309. திருநீர்மலைச் சிலேடை வெண்பா (நூல் எண் 359)

அளவு : 21×17. வரிகள் : 7.
பக்கங்கள் : 101. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருநீர்மலை என்பது தொண்டை நாட்டில் பல்லாவரத்திற்கண்மையில் உள்ள விஷ்ணு ஸ்தலம். 108 திருப்பதிகளில் ஒன்று.

இப்பிரதி இத்தலத்துத் திருமால்மீது பாடப்பெற்றது; சிலேடையாக உள்ள நூல். 100 பாக்கள் உள. இரண்டு காப்புச் செய்யுட்களும் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம் :

உ

மன்னு திருநீர் மலைரங்க நாயகர்மேற்
பன்னுதமிழ்ப் பாமாலை பாடுதற்கு—மின்னுதுதிக்
கையுடையான் செல்வக் கணபதியா மன்பர்துதிக்
கையுடையான் றுள்மலர் காப்பு. (க)

ஸ்ரீ ராம ஜெயம்

நூல்

சீர்பெறுபொன் மாமதிலும் திங்கள்தவழ் கோபுரமும்
நேர்பெறுவை குந்தநிகர் நீர்மலையே—யேர்பரவை
கட்டியிலங் கைப்பிடித்தான் காழ்மிகுவெஞ் சூரர்குலம்
வெட்டியிலங் கைப்பிடித்தான் வெற்பு. (1)

முடிவு :

உத்தமஞ்சே ராழ்வார்க்கும் ஓதுமறை யோர்பிறர்க்கும்
நித்தம் பதமருளும் நீர்மலையே—வொத்தமறை
வீட்டினன் உள்ளுகந்து மெய்வருந்து மன்பர்வினை
வீட்டினன் வாழ்ந்தருள்வான் வீடு. (௧00)

Tiruneermalai Sledai Venba

Size: 21×17. Pages: 101. Lines: 7 on a page. Condition: good.

Note: The Ms. contains 100 venbas on the presiding deity Neervannan of Tiruneermalai, near Pallavaram. Author not known.

310. திருநீர்மலை ரங்கநாயகர் மாலை (நூல் எண் 360)

அளவு : 21×17. *வரிகள்* : 4.
பக்கங்கள் : 53. *நிலை* : *நல்ல நிலை*.

குறிப்பு : *இது திருநீர்மலை ரங்கநாயகர் பேரில் பாடப் பெற்ற மாலை என்னும் வகையைச் சார்ந்த நூலாகும். 53 கலித்துறைகளே உள்ளன. ஆசிரியர் பெயரும் அச்சான விவரமும் தெரியவில்லை.*

தொடக்கம் :

ஸ்ரீ ராம ஜெயம்
திருநீர்மலை ரங்கநாயகர் மாலை
காப்பு

காமத்த யானை முகத்தா னொருகைக் கனியனைற
பூமத்தஞ் சூடிய செல்வ விநாயகன் பொற்பதமே
யாமத்த னெங்கள் திருநீர் மலைய னனந்தத்திரு
நாமத் தளிரங்க நாயக மாலை நவிலுதற்கே. (1)

முடிவு :

ஒருமலை யேந்தி நிரைபுரந் தோனன்பர் உள்ளமதில்
பொருமலை நீக்கிநல் மைந்தரெண் செல்வம் புகழ்தருஞ்சீர்
பெருமலை யாகுந் திருநீர் மலைரங்கர் பேரருளால்
திருமலை பூபன் திருமலை போலச் சிறந்திடவே. (53)

Tiruneermalai Ranganayakar Malai

Size: 21×17. Pages: 53. Lines: 4 on a page. Condition: good.

Note: The Ms. contains 53 verses on Lord Ranganatha of Tiruneermalai. No information about the author or publication is available.

311. திருநீர்மலை வெண்பா (நூல் எண் 361)

அளவு : 21×17. வரிகள் : 4.
பக்கங்கள் : 102. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 359இன் பிரதியே இது. ஆனால் இப் பிரதியில் நூல் எண் 359இல் உள்ள 88ஆம் பாடல் இல்லை. இறுதியில் வாழ்த்துப் பாடல் ஒன்று உள்ளது. இந்நூலில் 102 பாடல்கள் காணப்படுகின்றன.

தொடக்கம் :

ஸ்ரீ ராம ஜெயம்
திருநீர்மலை வெண்பா
காப்பு

மன்னு திருநீர் மலைரங்க நாயகர்மேற்
பன்னுதமிழ்ப் பாமாலை பாடுதற்கு-மின்னுதுதிக்
கையுடையான் செல்வக் கணபதியா மன்பர்துதிக்
கையுடையான் ருள்மலரே காப்பு. (1)

முடிவு :

தாரணிகோப் பாப்பார் தருமறை வேள்விவிழா
கார்மழைபைங் கூழ்கவிஞர் காவலர்கள்—காராளர்
சீர்கருணர் பொன்னரங்கன் சேவடிமெய் யன்பர்திரு
நீர்மலையும் வாழி நிதம்.

Tiruneermalai Venba

Size: 21×17. Pages: 102. Lines: 4 on a page. Condition: good.

Note : This is a copy of No. 359. Contains 102 verses with the omission of the 88th verse and addition of Vazhthu padal.

312. திருநீர்மலை வெண்பா (நூல் எண் 362)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 14. நிலை : மிகக் கிலமாக உளது.

நூல் எண் 361ஐப் போன்றது.

Tiruneermalai Venba

Size: 21×33. Pages: 14. Lines: 28 on a page. Condition: much injured.

Note : Same as the previous one.

313. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி (நூல் எண் 200a)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 23. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளைப்பற்றி 108 கலித்துறையில் அந்தாதியாகப் பாடப்பெற்றது. இறுதியில் ஆக்கியோன் பெயரைக் குறிப்பிடுங் கலித்துறை உள்ளது. அதனால் இந்நூல் திருநின்றவூர் திருமலை யத்தங்கி தாதாரியார் தொண்டன் எழுதியது என்று அறிய வருகின்றது. இப்பிரதியில் முதல் நான்கு பக்கங்களில் சங்கீதம்பற்றிய குறிப்புக்களும் உள. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றியதினின்றும் வேறுபட்டது.

தொடக்கம் :

ஹரி : ஓம்
நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி
பேறுபெற் றோர்புட் கரணி விமானம் பிராட்டிதிசை
வீறுயர் கோலந் திருமால் திருப்பதி மிக்கதொரு
நூறுட னெட்டு முறையே யிசைக்க நுவல்பொருன
லாறுடை யான்குரு கூருடை யான்பொன் னடியரணே.

முடிவு :

வருமலை யத்தங் கிரிநேர் சனன மரணமெனும்
பொருமலை யத்தங் கிரகமில் சேயேனும் புன்மையச்சார்
செருமலை யத்தங் கிருடீர்த் தருளுந் திருநின்றவூர்த்
திருமலை யத்தங்கி தாதாரி யர்தொண்டன் செப்பியதே. (109)

Nutrettu Tirupati Andadi

Size: 21×33. Pages: 23. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. contains 108 verses in kalithurai in Andadi form describing the 108 sacred Vishnu sthalams. This is different from the one written by Pillaipperumal Iyengar The author's name is given as Tirumalai Athangi Thathariyar Thondan.

314. நெல்லை யமக வந்தாதி (நூல் எண் 537)

அளவு : 21×33. வரிகள் : 31.
பக்கங்கள் : 16. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி நெல்லையப்பர்மீது பாடப்பெற்ற யமக அந்தாதியாகும். 99 பாக்கள் உள. சில பாடல்கள் இடையிடையே பூர்த்தியாக இல்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
கணபதி துணை
நெல்லையந்தாதி

கற்பகத் தான வடிவொரு பாகர் கழுழெருமால்
கற்பகத் தானண் ணு நெல்லையந் தாதியைக் காத்தருள்வாய்
கற்பகத் தானங் குடியேற் றியகந்தன் கற்றவர்க்காய்க்
கற்பகத் தானருள் கூர்ந்தோன்முன் வந்த கடகளிறே.

முடிவு :

கயிலாய மானவெள் ளிக்குன்ற வீடுங் கனகவில்லாய்க்
கயிலாய மாசெம்பொன் மேருவு நெல்லையுங் கண்டுற்றிருக்
கயிலாய மாத ரிலங்தொறுஞ் சென்றுகங் காளரன்ன
கயிலாய மாந்தரை .... (99)

Nellai Yamaka Andadi

Size: 21×33. Pages: 16. Lines: 31 on a page. Condition: good.

Note : The Ms. contains 99 verses (some of them being incomplete) sung in praise of Lord Nellaiappar of Tirunelveli. Author not known.

315. பழனி யமக அந்தாதி (நூல் எண் 92a)

அளவு : 21×33. வரிகள் : 21.
பக்கங்கள் : 95. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் பழனியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது யமகமாகக் கலித்துறை யாப்பில் அமைந்த 99 பாடல்கள் உள்ளன. காப்பு இரண்டு செய்யுட்களும் உள்ளன. நூல் நிலையச் சுவடிகளின் விளக்கம் 2 ஆம் தொகுதி பக்கம் 287 இல் உள்ள விளக்கத்திலிருந்து இதன் ஆசிரியர் பாலசுப்ரமணியன் என்று தெரிகிறது. இந்நூலுடன் 92-மாசிலாமணீசர் அந்தாதி,

92b- கும்பேசர் வெண்பா அந்தாதி என்ற இரண்டு நூல்களும் காணப்படுகின்றன.

தொடக்கம் :

பழனி யமக அந்தாதி
ஸ்ரீ கணபதியே நம:
வேலும் மயிலுந் துணை
பழனியந்தாதி

காப்பு

இதத்தாரை ஞானச் சிறுவாசல் வீடுகண் டேறியநற்
பதத்தார் தொழுந்தென் பழனியந் தாதியைப் பாடுதற்குச்
சிதத்தானை யோரைங் கரத்தானை மேகத் திரள்பொழிமும்
மதத்தானை யானை முகத்தானை நாளும் வணங்குவனே.

முடிவு :

காவலப் பூதரன் சேயருள் சேயன் கதிரவனுக்
காவலப் பூதரஞ் சூழும் பழனிக் கடவுளன்...ம
காவலப் பூதர மாமுகன் சோதரன் காலருளின் (99)
காவலப் பூதரஞ் சேர்மன மேமெய்க் கனம்பெறவே.

Pazhani Yamaka Andadi

Size: 21×33. Pages: 95. Lines: 21 on a page. Condition: good.

Note : The Ms. contains 99 verses in kalithurai sung in praise of Lord Muruga of Pazhani. The author is one Balasubramanian as could be inferred from the cadjan leaf Ms. No. 287 available in the Library.

316. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் அந்தாதி (நூல் எண் 618)

அளவு : 21 × 33. வரிகள் : 16.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒப்பற்ற கவிஞர். இந்நூல் அவர்பேரில் அன்னாருடைய மாணாக்கர் வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்கள் இயற்றிய அந்தாதி என்னும் பிரபந்த மாகும். 92 கட்டளைக் கலித்துறையும் பாயிரம் 2 கலித்துறையும் உள்ளன. இப்பிரதியில் திருச்செந்தின்மாலை, பெரியநாயகி இரட்டை மணிமாலை, பரத சாஸ்திரம் ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

தியாகராஜ செட்டியார் செய்த மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் அந்தாதி. திருச்சியில் இருந்தபொழுது இயற்றியது.

கணபதி துணை

சீர்கொண்ட வான்புகழ் மீனாட்சி சுந்தர தேசிகன்றட்
கேர்கொண்ட பைந்தமி ழந்தாதி யென்னு மியலலங்கல்
நார்கொண் டிசைத்துப் புனைய வுதவு நறையிதழித்
தார்கொண்ட செவ்வந்தி யாம்பல்பொற் றாமரைத்
தாண்மலரே.

முடிவு :

வரமா தவர்புகழ் மீனாட்சி சுந்தர வள்ளலருள்
தரமா பணியவர்க் கேபுரி யாதென் தலையதனில்
இரமா னுறுகுழ லார்க்கேவல் செய்யென் றெழுதிவிட்ட
பிரமா தவனினக் கியான்செய்த தென்னை பெரும்பழியே. (92)

Meenakshisundaram Pillai Andadi

Size: 21×33. Pages: 24. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 92 verses in Andadi composed by Vidvan Thyagaraja Chettiar in praise of his master Mahavidwan Meenakshisundaram Pillai.

317. மதுரை யமக அந்தாதி (நூல் எண் 632)

அளவு : 21 × 33. வரிகள் : 16.
பக்கங்கள் : 26. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது மதுரை இறைவன்மீது யமகமாக 101 கலித் துறையில் அந்தாதியாகப் பாடப்பெற்ற நூல். பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயரால் இயற்றப்பெற்றது. அச்சானது. பூர்த்தி.

தொடக்கம் :

உ

பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயரவர்கள் செய்த மதுரை யமக அந்தாதி.

ஆனன மைந்தன் புயமும் பதமுமெட் டானெடுமால்
ஆனன மைந்தன் புறநான் மதுரையந் தாதிசொல்ல

ஆனன மைந்தனென் றம்பிகை சிந்தைசெய் யெந்தைதந்தை
ஆனன மைந்தனஞ் சித்திவி நாயக னுள்வதுண்டே.

முடிவு :

இமையவ ராகி யிடத்தாய்தென் கூடலெந் தாயிமைப்போது
இமையவ ராகி விதையத்தி லேயென் றிரந்திருகண்
இமையவ ராகிறு திப்பே ரெழிலையெல் லாம்பொதிந்தால்
இமையவ ராகி யிருப்போம் வளரு மிருந்திருவே. (101)

முற்றும்
மீனாட்சி சகாயம்.

Madurai Yamaka Andadi

Size: 21 × 33. Pages: 26. Lines: 16 on a page. Condition: good.

Note: The Ms. contains 101 verses in praise of Lord Chokkanatha of Madurai written by Palapattadai Chokkanatha Kavirayar. Printed.

318. மயிலைத் திரிபந்தாதி (நூல் எண் 540b)

அளவு : 21 × 17.
பக்கங்கள் : 25.
வரிகள் : 18.
நிலை : பழமை.

குறிப்பு : சோழ நாட்டிலுள்ள மாயூரம் என்று வழங்கப் பெறும் தலமே கௌரி மாயூரம் என்றும், மயிலை என்றும் வழங் கப்பெறும். இத்தலத்திறைவன்மீது கலித்துறையால் அமைந்த திரிபந்தாதி இப்பிரதி. இதன் ஆசிரியர் இராமையர். இது உ. வே. சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்
கௌரி மாயூரம் என்று வழங்குகின்ற
திருமயிலைத் திரிபந்தாதி

காப்பு

உருகும் பசும்பொற் சடையார் மயிலை யுறைவள்ளன்மேற்
பெருகும் பயன்பெறு மந்தாதி பாடப் பிதாமகன்பால்
வருகும்ப மாமுனி பூசைகொண் டுள்ள மகிழொரு கோட்
டிருகும்ப மும்மத நால்வாய்க் களபத்தை யேத்துதுமே,

முடிவு :

மேக முகந்தண்ட வோங்கிமென் பாளை விரித்தமுகார்
மாக முகந்தண் டலைசூழ் மயிலைவள் ளற்பணிவோர்
நாக முகந்தண்ட கோளமெட் டும்புகழ் நண்ணி யெண்ணில்
போக முகந்தண்டர் கோனென வாழ்வரிப் பூதலத்தே. (௧௦௦)

மயிலைத் திரிபந்தாதி முற்றியது.

Mayilai Tiribu Andadi

Size: 21×17. Pages: 25. Lines: 18 on a page. Condition: old.

Note : The Ms. contains Andadi on the deity at Mayuram which is also called Mayilai. Author Rama Iyer; edited and published by Dr. Iyer.

319. மயிலையந்தாதி (நூல் எண் 439a)

அளவு : 21 × 17. வரிகள் : 28.
பக்கங்கள் : 19 நிலை : பழமை.

குறிப்பு: திருமயிலாப்பூரைப்பற்றிப் பாடப் பெற்ற அந்தாதி நூல். 389-ஆம் எண்ணுள்ள நூலில் விவரம் காண்க. இதில் கடைசிப் பாடல் மிகையாகக் காணப்பெறுகின்றது. பூர்த்தி.

இந்தப் பாடல் இந்தப் பிரதியினிறுதியில் மிகையாக உள்ளது.

தனந்தந்த மாவி னிசைகாட்டுங் காவிரித் தண் மயிலை
தனந்தந்த மாகிரி முத்துமை பாகர் சரண் பரவு
தனந்தந்த மாப்பிரி தந்திந்த வையகந் தாங்குஞ் சிங்கா
தனந்தந்த மாதவன் போற்றுமெய்ச் சீருந் தருந்திரமே. (101)

முற்றும். ஹரி: ஓம்.

Mayilai Andadi

Size: 21×17. Pages: 19. Lines: 28 on a page. Condition: old.

Note : This is same as script No. 389.

320. மருதூரந்தாதி (உரையுடன்) (நூல் எண் 637)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 68. நிலை : பழமை.

குறிப்பு : மருதூர் என்பது பாண்டிய நாட்டில் உள்ள நயினார் கோயில் என்னும் தலம். இந்நூல் அவ்வூர் இறைவன் விஷயமாகக் கலித்துறையில் யமகமாகப் பாடப்பெற்ற அந்தாதி என்னும் பிரபந்தமாகும். இது உரையுடன் உள்ளது. தலைமலை கண்ட தேவர் இந்நூல் ஆசிரியர். அச்சானது. பூர்த்தி.

தொடக்கம் :

உ

கணபதி துணை

மருதூரந்தாதி யுரை

காப்பு

ஒருகொம் பிருபத மும்மத நால்வாயொ ரைந்துகரம்
பெருகுஞ் செவிசிறு குங்கண் புகர்முகம் பெற்றதந்தி
முருகன் றமைய னுமைமைந்த னைந்து முகன்மகன்மான்
மருகன் றுணைநம் மருதூரந் தாதி வருவிக்கவே. (௧)

முடிவு :

மாவின லங்கக லச்செற்ற மாறங்கு வாமபங்கர்
மாவி னலங்கனி நீர்செந் நெற் பாய்மருதூ ரமலை
மாவி னலங்கவ ளைத்தவர் பாதம் வணங்கினர்க்கு
மாவி னலங்கலங் கற்றேளில் வாழ மலர்த்திருவே.

(என்பது) மாவினலங்ககலச் செற்ற மால்-யானையினுடைய துயரமானது அந்தவாவியிடத்திலே விட்டு நீங்க முதலையைச் சங்கரித்த திருமாலானவன், தங்கு - உறையப்படாநின்ற, வாமபங்கா - இடப் பாகத்தையுடையவா, மாவினலங்கனி நீர் செந்நெல் பாய் மருதூரா-மாவினல்ல அழகிய சாறுனது செந் நெல்லுக்குப் பாயப்படாநின்ற மருதூரை யுடையவா, மலைமாவினலங்க வளைத்தவா-மகமேருவைப் பெரிய வில்லாய் வளைத்த மகாதேவா, பாதம் வணங்கினர்க்கு-அவருடைய சீர்பாதத்தை வணங்கின பேர்களுக்கு, மாவினலங்க லங்கற் றேளில் வாழும் மலர்த்திருவே-வண்டுகளுறைவிடமான மாலை பொருந்திய அழகிய மலைபோன்ற தோளிலே வாழுந் தாமரை மலரில் வாழு மிலக்குமி யென்றவாறு.

மருதூரந்தாதி யுரை முற்றும்.

குமரன் றுணை. மங்கலமுடையாபிள்ளைக்கு

குமரன் றுணை-திருச்சிற்றம்பலம் 102 பாடல்

Marudur Andadi (with notes)

Size: 21×33. Pages: 68. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. contains the Andadi in kalithurai sung in praise of the deity of Marudur known as Nainarkoil. Author Thalaimalaikanda Devar. Printed.

321. மாசிலாமணி ஈசர் அந்தாதி (நூல் எண் 92)

அளவு : 21 × 33. வரிகள் : 18.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள இறைவராகிய ஸ்ரீ மாசிலாமணியீசர் பேரில் பாடிய அந்தாதி நூல். 100 கலித்துறைகள் உள. இப்பிரதியில் பழனித் திரிபந்தாதி, கும்பேசர் வெண்பா அந்தாதி ஆகிய நூல்களும் உள்ளன. 642 எண்ணுள்ள நூலின் பிரதி.

தொடக்கம் :

உ

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் கையெழுத்திலுள்ள பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

வாழுந் துறைசை வளர்மாசி லாமணி வள்ளன்மலத்
தாழும் படியடி யாரையொட் டாவரு ளாகரனைச்
சூழும் படியுண் விடையா யெனத்துதி சொல்லுந்துயர்
போழும் படிநுங் கலையினி தாள்வனற் புத்தியிதே. (க)

முடிவு :

செய்யா யருளடி யேனுக் கெனிலயன் திண்சிரங்கொய்
கையா கழலணி காலா நிகரில் கயிலைமலை
ஐயா துறைசை அமலா வொருபொரு ளாகவெனை
வெய்யார் மதித்தலைச் செய்யார் திருவருள் வாழியவே. (க00)

முற்றும்.

Masilamani Eesar Andadi

Size: 21×33. Pages: 24. Lines: 18 on a page. Condition: good.

Note: This is an Andadi sung in praise of Sri Masilamani Eesar, the deity of Thiruvavaduthurai, containing 100 verses in kalithurai. This is a copy of the next item.

322. மாசிலாமணி தேசிகர் அந்தாதி (நூல் எண் 642)

அளவு : 21 × 17. வரிகள் : 18.
பக்கங்கள் : நிலை : சிலமாக உளது.

பிரதி மிகச் சிலமாக இருப்பதால் பக்கங்கள் கணக்கிட முடியவில்லை. இது நூல் எண் 92ன் படியே.

Masilamani Desikar Andadi

Size: 21×17. Pages: — Lines: 18 on a page. Condition: injured.

Note: This is the original for the previous item and is in a bad condition.

323. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அந்தாதி (நூல் எண் 654)

அளவு : 21 × 17. வரிகள் : 10.
பக்கங்கள் : 30. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இப்பிரதி 19ஆம் நூற்றுண்டில் தோன்றிக் கவிச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் மீது பாடப்பெற்ற அந்தாதியாகும். ஆசிரியர் தியாகராச செட்டியார் அவர்கள். 92 பாடல்களே யுள.

பாடல்கள் எண் 618இல் உள்ளபடியே.

Meenakshisundaram Pillai Andadi

Size: 21×17. Pages: 30. Lines: 10 on a page. Condition: injured.

Note: The Ms. contains only 92 verses of the Andadi on Mahavidwan Meenakshisundaram Pillai composed by his disciple Vidwan Thyagaraja Chettiar.

324. வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி (நூல் எண் 685)

அளவு : 21 × 33. வரிகள் : 37.
பக்கங்கள் : 17. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : வயலூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடியுள்ள பதிற்றுப்பத்தந்தாதி. ஆசிரியர் சுந்தரம்

பிள்ளையவர்கள். "ஆறுமுக நயினர் ஏடு பார்த்து எழுதியது" என்று தொடக்கத்தில் காணப்பெறுகின்றது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், அட்டாவதானம் சுப்பராய செட்டியார் முதலியவர்கள் சிறப்புப் பாயிரங்கள் உள்ளன. இந்நூல் காப்பும், நூலும் முறை மாறி எழுதப் பெற்றிருக்கின்றன. இறுதியில் கந்தர் அகவல் என்னும் தலைப்பில் 132 அடியுடன் குறையாக ஒரு நூல் உள்ளது.

தொடக்கம் :

உ

சிவமயம்

வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. திரிசிரபுரம் ஆறுமுக நயினர் அனுப்பிய ஏடு பார்த்தெழுதியது.

சிறப்புப் பாயிரம்

மகாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய கவி.

தந்தையென வரையகப்பெண் டழுவிநெடுங்
கொக்கிறுத்துச் சயிலங் கைக்கொண்
டந்தமுறு தலையாறு கொண்டுவய லூர்மருவி
யடியார்க் கின்பம்
சந்ததமுந் தருங்குமர வேளுக்கோ ரந்தாதி
சாத்தி னுைல்
கந்தமிகு தமிழுணர்ந்த சுந்தரநா வலனென்னுங்
கருணையோனே.

காப்பு

மணியார் வசனத் திழிதேறல்
மடைவாய்ப் பெருகி யூற்றெடுக்கும்
அணியார் வயலூர்ப் பதிற்றுப்பத்
தந்தா தித்தார் அரும்புனத்துக்
கணியா கியமுத் துக்குமரக்
கடவுட் சரண மிசைசூட்டத்
திணியார் ஒருகோட் டைங்கரத்துத்
தேவ னடியைப் பணிவாமால்.

நூல் :

பூவார் மறையோன் புனற்றுயில்வோன்
போற்று நுதற்கண் ணவற்கருள்செய்
தேவா வென்ன அஞ்சலிக்குந்
திறங்கொண் டறியா நாயேற்குக்

காவார் வயலூர்க் கரசேபூங்
கடப்பந் தொடையை யணிந்தவனே
தூவார் அயிலா நினைப்போற்றுந்
தொழிலின் றருள்வ துன்செயலே.

முடிவு :

கங்கையின் மைந்தா வேதக் கமலன்றன் சிரசிற் குட்டும்
அங்கையா பொதிகை வேந்தற் கடிகளாய் வந்தாய் வீங்குங்
கொங்கைய ரிருவர் இன்பக் கொழுநனே என்னை யாள்வாய்
பொங்கர்சூழ் வயலூ ரானே போற்றிபூ வார்க ழற்கே.

சரவணபவன் துணை
முற்றும்.

ஏட்டிலுள்ளபடியே எழுதப்பட்டன. சீர்திருத்தப்படவில்லை.

Vayalur Pathitruppathandadi

Size: 21×33. Pages: 17. Lines: 37 on a page. Condition: injured.

Note : The Ms. contains an Andadi on Lord Muruga of Vayalur in Trichy district by Sundaram Pillai.

325. வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி (நூல் எண் 438)

அளவு : 21×33. வரிகள் : 33.
பக்கங்கள் : 29. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வயலூர் முருகன் பேரில் இயற்றப்பட்ட இப்பிரதி 685இல் உள்ளபடியே. இதனுடன் தில்லையுலா, கணபதி யந்தாதி ஆகிய நூல்களும் உள. 685ஆம் எண்ணுள்ள நூலின் பிரதி.

Vayalur Patitruppattandadi

Size: 21×33. Pages: 29. Lines: 33 on a page. Condition: good.

Note : Same as the previous one.

326. திருத்தணிகை யாற்றுப்படை (நூல் எண் 354)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 20. நிலை : மிகக் கிலமாக உளது.

குறிப்பு : இந்நூல் திருத்தணிகை முருகப் பெருமான்மேல் கச்சியப்ப சுவாமிகளருளிய ஆற்றுப்படையாகும். அச்சானது.

தொடக்கம் :

சிவமயம்

ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் அருளிச்செய்த திருத்தணிகை யாற்றுப்படை.

காப்பு

சீரார் தொடைபுனைந்த செம்பாவை முன்புபோ
லேரார் தணிகை யிளவற்கு—நேராகக்
கூட்டுமால் வேற்றுருவங் கொள்ளாமை யெப்பொருளுங்
காட்டுமா லைங்கைக் களிறு.

நூல்

பொன்னகத் திருவிற் பன்னக நெடுநாண்
மாயப் பகழித் தாயக் குரிசின்
முரணமை யிருகாற் றிரண்மறைப் புரவி
யலர்மறை வாழ்க்கை வலவத் தேரும்
வழங்குதற் கமையா வண்மையி னிசைக்கும்.

முடிவு :

சாறுநா ளல்லது வேறுநா ளறியா
துலகமுழு தோம்பு சிறப்பின்
நிலைபெறு தணிகை மலைகிழ வோனே.

கச்சியப்ப சுவாமிகள் அருளிச் செய்த 'திருத்தணிகை யாற்றுப்படை' முற்றுப்பெற்றது.

Tiruttanikai Atruppadai

Size: 21×17. Pages: 20. Lines: 16 on a page. Condition: much injured.

Note : The Ms. contains an Atruppadai on Tiruttanikai Murugan by Kachiappa Swamigal; printed.

327. கடம்பர்கோவில் உலா (நூல் எண் 108)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 24. நிலை : இலமாக உளது.

குறிப்பு : கடம்பர்கோவில் என்பது சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள தலம். இது தேவாரம் பெற்றது. இறைவன் கடம்பவன நாதர். அம்பிகை பால குசாம்பிகை. கடம்பமரம் தல விருட்சம். கடம்பவனநாதர்மீது பாடப்பெற்ற உலா இது. இப்பிரதி குறையாக வுள்ளது. இலமாக வுள்ளது.

முதல் பக்கம் காப்புச் சிதைந்துள்ளது. 372 கண்ணிகளுக்குப் பிறகு நூல் இல்லை. இந்நூல் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் பதிப்பிக்கப் பெற்று மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக 1932இல் வெளிவந்துள்ளது.

தொடக்கம் :

நெஞ்சத் திருப்பதமே காப்பு
அவையடக்கம்

நன்னிலஞ்சே ருக்கிடினு நன்குமகிழ் வார்முனியார்
செந்நெல்விளை வெய்துஞ் சிறப்புடையோர்-இந்நிலத்தில்
என்சொலிக மார்புலவோ ரீசனுலா வென்று கொள்வார்
புன்சொலெனுர் கொள்வார் பொருள்.

நூல்
இறைவன் பெருமை

1. சீர்கொண்ட சத்தி சிவமா யருள்புரியும்
பார்கொண்ட சோதிப் பசுபதியாய்—ஏர்கொண்ட

2. அண்டமா யண்டத்தி னப்பாலா யிப்பாலாய்ப்
பிண்டமாய்ப் பல்லுயிரின் பேதமாய்ப்—பண்டை

3. அருவா யுருவா யருவுருவ மென்றும்
மருவாய் மலரின் வடிவாய்ப்—பெருவாழ்வாய்

4. எல்லா வுயிர்களுக்கு மின்பம் புணர்த்தி வைக்கும்
வல்லான் கருணை மகாதேவன்.

முடிவு :

370. பூதமும் பூதப் புணர்ப்பும் புகன்றசதுர்
வேதமும் வேத விதிவிலக்கும்—போதனுற்
றுனே யமைத்த சராசரமு முற்பவத்தி
லான நிலைபெயரா வாணையான்—மோன
முனிக் கணங்கள் சூழ்கருணை மூர்த்திநால் வேதத்
தனிப்பொருளெல் லார்க்குந் தலைவன்—
குனிப்புடையோன்.

Kadambarkovil Ula

Size: 21×33. Pages: 24. Lines: 32 on a page. Condition: injured.

Note : The Ms. contains 372 kannis sung in praise of Kadambavananathar, the deity of Kadambarkovil, a Sthala

on the south bank of the Cauveri in Tiruchirapalli district. The book has been edited and published by Dr. U. V. Swaminatha Iyer, in the Madurai Tamil Sangam in 1932.

328. கீழ்வேளூர் உலா (நூல் எண் 158)

அளவு : 21×33. வரிகள் : 39.
பக்கங்கள் : 23. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : கீழ்வேளூர் என்பது சோழ நாட்டில் உள்ள தலம். அவ்வூரில் எழுந்தருளிய இறைவன்மேல் பாடிய உலா இது. ஆசிரியர் கவி: வீரராகவ முதலியார். நூல் முழுவதுமில்லை. மடந்தைப் பருவம் வரை 389 கண்ணிகளே உள்ளன. இடையிடையே சில கண்ணிகள் இல்லை.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருக்கீழ்வேளூருலா, கவி வீரராகவ முதலியாரியற்றியது.
காப்பு
நேரிசை வெண்பா

ஏருலா முக்க ணிலந்தைவன நாதருக்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்யவே—நேரலரை
எய்விலா ழிக்கன்றே யேந்தினோன் மான்மருகன்
கைவிலா ழிக்கன்றே காப்பு.

முடிவு :

வாழிய மைக்கண் ணவளும்போய்—வேழ
முரித்தாரே சிந்தி னொருமுதுகுத் தண்டந்
தரித்தாரே கேடில்லா தாரே—நிருத்தத்தி
னுத்தமரே நீர்மின் னுலவுஞ் சடையரே
யத்தரே மெய்யடிமைக் காவாரே—யித்தெருவிற்
கூறும் பழிக்கஞ்சீர் கூடற் பழிக்கஞ்சிப்...

Kizhvelur Ula

Size: 21×33. Pages: 23. Lines: 39 on a page. Condition: injured.

Note : The Ms. contains only 389 kannis or couplets in praise of the deity of Kizhvelur by Kavi Viraraghava Mudaliar. Some kannis are missing here and there.

329. கீழ்வேளூர் உலா (நூல் எண் 159)

அளவு : 21×17. வரிகள் : 17.
பக்கங்கள் : 52. நிலை : பழமை.

குறிப்பு: எண் 158இன்படி. இந்தப் பிரதியில் 158இல் உள்ள பகுதிக்குமேல் 29 கண்ணிகள் வரை உள்ளன. அரிவைப் பருவத்தில் 21 கண்ணிகள் வரை இருக்கின்றன. மொத்தம் 418 கண்ணிகள் உள்ளன. இறுதியில் கீழ்வேளூரைப்பற்றித் தேவிபட்டணம் வித்வான் முத்துசாமிப்பிள்ளை, நாகப்பட்டினம் கிருஷ்ண உபாத்தியாயர் இயற்றிய 2 வெண்பாக்கள் உள. இதன் பிறகு 4 பக்கங்களில் 'கீழ்வேளூர்த் தாய்மகளேசல்' என்ற சிறுநூலும் உள்ளது.

தொடக்கம் : 158 எண்ணின் படியே.

முடிவு :

கும்பன் மலையம் குழைத்தநா ணீயிருந்தால்
அம்பொன் னசலமெல்லா மல்லவோ—நம்பொரு

....

அக்ஷயலிங்கந் துணை

மங்கைப் பருவத்தில் மன்றிரங்குங் கூத்தர் என்ற கண்ணிக்கும் வாமத்திலந்தைவனம் என்ற கண்ணிக்கும் இடையில் 'பரிக்கும்' என்ற தனிச் சீரும், இன்னே பெருமான் என்ற கண்ணிக்கு், கருத்த கடுக்கை என்ற கண்ணிக்கும் இடையில் 'தாராய்' என்ற தனிச்சீரும், 'மடந்தைப் பருவத்தில், நோக்கார் மற்றென்றும்' என்ற கண்ணிக்கும் 'தோழியை யொட்டியவர்' என்ற கண்ணிக்கும் இடையில் 'சரி' என்ற தனிச்சீரும்... இவற்றிற்குமேல் பாடத்தில் கண்ணிகள் இல்லாததனால் எழுத இயலவில்லை.

Kizhvelur Ula

Size: 21×33. Pages: 52. Lines: 17 on a page. Condition: old.

Note: Continuation of the previous item; contains 29 kannis; also contains two venbas on Kizhvelur composed by Devipattanam Muthuswami Pillai and Nagappattinam Krishna Upadhyayar; also contains Kizhvelur Thai Magal Esal.

330. குலசை உலா (நூல் எண் 170)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள்: 28. நிலை ; சிலமாக உளது.

குறிப்பு : குலசேகரப்பட்டணம் என்பதே குலசை. இது பாண்டிய நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூருக்குத் தெற்கே உள்ளது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள கச்சி கொண்ட பாண்டீசர்மேல் பாடப்பெற்றது. அச்சானது. நூல் நிலையத்தால் 1972இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
குலசையுலா

காருலாந் தென்குலசைக் கச்சிகொண்ட வீசுரர்மேற்
சீருலாப் பாடத் திறனல்கும்—மேருக்
குவடு சுவடுபடக் கொம்பா லெழுதுங்
கவடுபடாக் கைக்கற்ப கம். (க)

சீர்பூத்த தாமரைபோற் செங்க ணெடுமாலும்
தார்பூத்த மார்பிற் சதுமுகனும்—ஏர்பூத்த
பூப்பொலிந்த சேவடியும் பொன்முடியுங் காண்பரிய
தீப்பிழம்பாய் நின்ற திருவுருவன்—கூப்புமிரு.

முடிவு :

வலயஞ்சூழ் வீரை வளநாட்டிற் செல்வக்
குலசா புரியுறையுங் கோமான்—அலகில்
கருவிடைமேற் செல்லாமற் காட்சியளித் தியார்க்கும்
ஒருவிடைமேற் போந்தா னுலா.

குலசை யுலா முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

இதற்குக் கல்யாணபுரம் என்று ஒரு பெயருமுண்டு. முன்பு திருவாவடுதுறையிலிருந்து உடுமலைப்பேட்டை சென்றிருந்த திருச்சிற்றம்பல ஓதுவாரிடமிருந்து குன்றக்குடி அப்பாப் பிள்ளையவர்கள் பெற்றுத் தந்த ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதியது இப்பிரதி.

Kulasai Ula

Size: 21×33. Pages: 28. Lines: 25 on a page. Condition: injured.

Note: The Ms. contains an Ula on Kachikonda Pandeesar of Kulasekarapattanam (Kulasai), which is near Tiruchendur in Tirunelveli district. This has been published by the Library in 1972.

331. சங்கர ராசேந்திரன் உலா (நூல் எண் 158)

அளவு : 21 × 33. வரிகள் : 38.
பங்கங்கள் : 22. நிலை : பழமை.

குறிப்பு : சங்கம சோழனுடைய மகனாகிய சங்கர சோழன் மீது பாடப்பெற்ற உலா இது. மூன்றாங் குலோத்துங்கனுடைய சகோதரன் இச்சோழன் என்று தெரிகிறது. இதில் சோழ பரம்பரையின் வரலாறு முன்பு கூறப்பட்டுள்ளது. ஏழு பருவப் பெண்கள் சங்கர சோழனைக் கண்டு காமுறுவதாக அமைந்தது இப்பிரபந்தம். தெரிவைப் பருவத்தின் இடையே சில கண்ணிகள் இல்லை. இப்போது உள்ள கண்ணிகள் 389. இதன் முற்பகுதி முன்பு செந்தமிழில் வெளியாகியிருக்கிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
சங்கர ராசேந்திர னுலா
விநாயகர் காப்பு
வெண்பா

சங்கமன் றந்த தமிழ்ச்சங் கரசோழ
துங்கமன் மீதுலாச் சூட்டவே—யங்கே
முரக்கிளவி நாயகனு மன்னையாந் தேனு
கரக்கிளவி நாயகனுங் காப்பு.

நூல்
கலிவெண்பா

நீர்பூத்த வண்ணத்து நேமி திருமகன்கை
யேர்பூத்த வையக மீரேழுந்—தார்பூத்த
தண்டு கவரத் தனதுகுடைக் கீழுடையக்
கண்டு மனுவரம்பு கண்டோனு—மண்டலமும்

முடிவு :

பருவத் தெழுவகைமைப் பாவையரெல் லோருந்
தெருவத் திணைய நினைப்பப்—பரணிக்
கவியாற் செயங்கொண்டான் கட்டுரைப்பக் கொண்டான்
குவியாக் கரத்தரசு கொண்டான்—கவிகை

நிலாக் கொண்டான் கூத்த னிகழ்த்த வொருமூன்
றுலாக் கொண்டான் போந்தா னுலா. 29-1-85

முற்றும்

Sankara Rajendran Ula

Size: 21×33. Pages: 52. Lines: 38 on a page. Condition: old.

Note : This is a work in the form of Ula in praise of Sankara Chola, the younger brother of Kulottunga III. It gives out the various exploits of the kings of the Chola dynasty. Some couplets in the portion belonging to Terivai are missing The first portion of the work was published in Sentamil. Author not known.

332. சங்கர ராசேந்திர சோழன் உலா (நூல் எண் 198)

அளவு : 21 × 33. வரிகள் : 24
பக்கங்கள் : 33. நிலை : நல்ல நிலை.

மேலுள்ள எண் 158 உள்ள பிரதியின் படியே இது.

Sankara Rajendra Cholan Ula

Size : 21×33. Pages: 33. Lines: 24 on a page. Condition: good.

Note: This is a copy of the previous Ms, bearing No. 158.

333. சிவகுரு உலா (நூல் எண் 231)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 27. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இப்பிரபந்தம் காழிக் கண்ணுடைய வள்ளல் என்பார்மேல் சிவகுரு என்றமைத்து உலாவாகப் பாடியது. ஆசிரியர் பெயர் விளங்கவில்லை. இப்பிரதியில் 365 கண்ணிகள் உள்ளன. தெரிவைப் பருவத்துடன் அபூர்த்தியாக உள்ளது. இடையே பல கண்ணிகள் சிதைந்துள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
சிவகுரு உலா

கார்மேக மென்னக் கடலிற் கிடந்தோனு
மேர்மேவு பூவி லிருந்தோனும்—பார்மீது

சேட்படு காலமெலாந் தேடியுஞ் சென்னியுடன்
தாட்கமலந் தோன்றாத தற்பரனைக்—கோட்கள்பல
வீட வருளுமையாள் மெய்ஞ்ஞானப் பாலுண்டு
தோடுடைய னென்றுதொடுத் தெடுத்து.

முடிவு :

துதித்தா ளுரை (......)த் தோற்றம்
மதித்தா ளறிவு மயங்கி—விதித்தபணி பொலிவை
செய்யிற் செயல் மறந்து (......) திரிவிதமு
நையப்பட காத னண்ணிளுள்—வெய்யவே
ளையம்பு மையா யிரகோடி யாய்விளைய
வெய்யுந்தி............

Sivaguru Ula

Size: 21 × 33. Pages: 27. Lines: 28 on a page. Condition: injured.

Note: There are only 365 kannis in this Ula; incomplete; some kannis are missing. Author not known.

334. சிவகுரு உலா (நூல் எண் 232)

அளவு : 21 × 33. *வரிகள் :* 21.
பக்கங்கள் : 42. *நிலை :* *நல்ல நிலை.*

நூல் எண் 231இன் படியே.

Sivaguru Ula

Size: 21 × 33. Pages: 42. Lines: 21 on a page. Condition: good.

Note : Same as the previous item.

335. சிவந்தெழுந்த பல்லவராயன் உலா (நூல் எண் 723)

அளவு: 21 × 33. *வரிகள் :* 14.
பக்கங்கள் : 89. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : *புதுக்கோட்டைப் பகுதியைச் சார்ந்த மலையில் இருந்த சிவந்தெழுந்த பல்லவராயன் என்ற குறுநில மன்னன் பேரில் மலைச் சிற்றம்பலக் கவிராயர் பாடிய* **உலா:** *இவ்வுலா* 17*ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றது.* 621 *கண்ணிகள்*

கொண்டது. இவ்வுலாவில் சிவந்தெழுந்த பல்லவராயன் பரம்பரை பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் உள்ளன. இறுதியில் ஒரு கண்ணி இல்லை. அச்சாகவில்லை. நூல் நிலையச் சுவடி 1127இன் பிரதி.

தொடக்கம் :

உ

ஹரி: ஓம்

மல்லைச் சிவந்தெழுந்த பல்லவராயன் பேரில் உலா

வெண்பா

தென்னன் வளவன் சிவந்தெழுந்த பல்லவனு
மன்னன் வழுதியுலா வண்டமிழ்க்கு—முன்னிறக
ஒத்தகுணைப் பத்திமனத் துத்தமர்சித் தத்துருகத்
தத்துமதத் தத்திமுகத் தான்.

நூல்

முகில் வண்ணன் கண்வளரு முண்டகப்பொற் கூம்பு
நகில்வண்ணத் தாமரையாள் நண்பன்—றுகில்வண்ணப்
பூங்கமலத் துந்தியினில் பூத்தமறைப் புத்தேளு
மாங்கவன்றன் மைந்தனெனு மத்திரியும்—ஓங்குமவன்...

முடிவு :

கற்று ருரைக்கும் கவியனைத்தும் கற்றுரைக்கப்
பெற்றுன்மற் றெல்லாமியாம் பெற்றிலமே......
....
....
நற்றமிழைச் செய்த கவிஞன் வாழி
சீர்வாழி பேர்வாழி சிவந்தெழுதன்பன் வாழி, வாழி.

Sivandezhunda Pallavarayan Ula

Size: 21×33. Pages: 89. Lines: 14 on a page. Condition: good.

Note : This work is on one Sivandezhunda Pallavarayan of Mallai near Pudukkottai. The author's name is Mallai Chitrambalakkavirayar. It contains 621 kannis.

336. சீகாழி உலா (நூல் எண் 139)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : சீகாழிப் பதியில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான்மீது பாடப்பெற்ற நூல். ஆசிரியர் பெயர் அறியக்கூட வில்லை. இப்பிரதியில் கன்ருப்பூர்ப் புராணம், இனியது நாற்பது ஆகிய நூல்களும் உள. இது தட்டெழுத்துப் பிரதி. கண்ணிகளுடன் 434 பூர்த்தியாக உள்ளது.

தொடக்கம்:

உ

சீகாழி யுலா

காப்பு

ஆழியொலி போலும்வே தாதியொலி காட்டுகின்ற
காழியுலாப் பாடுதற்குக் காக்குமால்—சூழுமொழி
யந்திநிறத் தைந்துகரத் தன்சிவபுத் ரன்கரடத்
தந்திமுகத் தன்பதுமத் தாள்.

நூல்

சீர்பூத்த பொன்னங் கிரிப் பெருமானும்
பார்பூத்த நான்முகத்துப் பண்ணவனு—மேர்பூத்த
வேற்றுருவங் கொண்டுமண் ணும் விண் ணும் புகுந்தோட
மாற்றுருவங் கொண்டவொரு மாசிலான்—ஞேற்றுமுயி...

முடிவு :

வந்தான் பரமீசன் வந்தான் பரமகுரு
வந்தானென் றெல்லாரும் வாழ்த்தெடுப்ப—நந்தாம
லூறுங் கருணைபொழிந் தோங்குமணித் தேர்கடவி
யேறுந் திருநிலையி லெய்துவான்—பேறுமுப்
பாருடையா னென்றேழ் பதுபதிகஞ் சேர்காழி
யூருடையான் போந்தான் உலா.

பேரிளம் பெண் முற்றும்.

நேரிசை வெண்பா

நந்துலவு தென்மதுரை நக்கீரன் வன்சொல்லும்
வந்தியறி யாதுரைத்த வன்சொல்லும்—சுந்தரன்சொல்
வன்சொற் றனையு மகிழ்வடுக ரேயடியேன்
புன்சொற் றனையும் பொறும்.

24-11-1900

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

Typed by பெ. ராவை. 23-8-55

Sikazhi Ula

Size: 21×33. Pages: 24. Lines: 30 on a page. Condition: good.

Note : This is a typed Ms. containing 434 kannis of the Ula sung in praise of the deity at Sikazhi. Author not known.

337. சீகாழி உலா (நூல் எண் 248)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 31. நிலை : பழமை.

குறிப்பு : எண் 139 இன் பிரதியாகும்.

Sikazhi Ula

Size: 21×33. Pages: 31. Lines: 30 on a page. Condition: old.

Note: This is the original of the previous item.

338. சேயூர் உலா (நூல் எண் 262)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 40. நிலை : மிகச் சிலமாக உள்ளது.

குறிப்பு : செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்துக்குச் சமீபமுள்ள சேயூர் முருகன்மீது பாடப்பெற்ற உலா. சேறைக் கவிராசப் பிள்ளை இயற்றியது; காப்பும், 505 கண்ணிகளும் கொண்டது. இறுதியில் 2 வெண்பாக்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
சேயூருலா காப்பு

கம்புல வுஞ்செய்கைக் கந்தனுலாச் செய்கின்றேன்
கொம்புலா வுந்துதிக்கைக் குன்றமே—செம்பொன்
னிலகு நிலத்தி லெழுது பாரதம்போ
னுலகி லெழுதவெ ணும்.

Seyur Ula

Size : 21 ×33. Pages: 40. Lines: 30 on a page, Condition: much injured.

Note : This is an Ula composed by Serai Kaviraja Pillai containing 505 kannis on Lord Muruga of Seyur (now Cheyyur) which is near Madurantakam in Chingleput district.

339. சேயூர் உலா (நூல் எண் 719)

அளவு : 21 × 33. வரிகள் : 16.
பக்கங்கள் : 64. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 262இன் பிரதியே இது.

முடிவு :
சொற்றவரெண் செய்யூர்க் குமாரர் கமலத்தைக்
கற்றவ ரெல்லாங் களிக்கவே—வெற்றிக்
கருணேசன் சேறைக் கவிராச ராச
னொருநாளிற் சொன்ன வுலா.

செய்யூருலா முற்றும்.

க-பிரதி 1876 ஆம் ௵ மே மீ தாது வருஷம் வைகாசி மீ 30 உ யோடு சேயூர் சொ. வேதாசல முதலியாரால் எழுதி நிறை வேறிற்று.

உ-பிரதி தாது ௵ மார்கழி மீ 10௳ சனிவாரம் சேயூர் மார்த்தாண்டார் கந்தசாமி முதலியாரிட சுதன் வன்மீக முதலியார் எழுதி முடிந்தது.

முருகன் றுணை. திருச்சிற்றம்பலம்.

Seyur Ula

Size: 21 × 33. Pages: 64. Lines: 16 on a page. Condition: good.

Note : Same as the previous one.

340. தருமை யுலா (நூல் எண் 264a)

அளவு ; 21 × 33. வரிகள் ; 24.
பக்கங்கள் : 50. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தருமபுரம் மெய்ஞ்ஞான சம்பந்த தேசிகர் பேரில், தருமபுரம் திருவம்பலத் தம்பிரான் பாடிய உலா இது. இதனுள் சேவல் விருத்தம் என்னும் நூலும் உள்ளது. அச்சான விவரம் அறியக் கூடவில்லை, மொத்தம் 584 கண்ணிகள் உள. இறுதியில் காப்பும் ஒரு வெண்பாவும் உள்ளன. நூல் நிலையச் சுவடி 429இன் பிரதியாகும் இது. பூர்த்தி.

தொடக்கம் :

உ

சிவமயம்

சிவஞான தேசிகன் திருவடி வாழ்க

தருமபுரம் திருவம்பலத் தம்பிரானியற்றிய தருமையுலா

நேரிசை வெண்பா

தண்ணளிகூர் மெய்ஞ்ஞான சம்பந்தே சன்தருமை
யண்ணலுலாப் போற்றுகவென் றுதரிப்பன்—பண்ணவரை
வானவி நாயகனை மாலயனை யாளுசிவ
ஞானதேசி கன்றிருவடி வாழ்க.

நூல்

பாராதி நாதம் பலவும் பரிணமிக்குஞ்
சீராதி காரணத்தின் செவ்விக்கண்—பேராத
ஆதிலய போக வதிகார மாயனுவின்
கோதிலய மாமாறுட் கொண்டருளி.

முடிவு :

.... தெவவேள்கை
ஏமாரி யுண்மூழ்க வேத்துமயி லாடவர்கள்
பூமாரி யின்மூழ்கிப் போற்றிசைப்பக்—காமாரி
தாருகந்த கொன்றையந்தார்ச் சம்பந்தே சன்றருமை
யூருகந்தான் போந்தா னுலா.

மங்கையர்கள் மாலாக மைந்தர் சிவமாகப்
புங்கவர்கள் போதராய்ப் போற்றிசைப்பப்—பங்கிற்
சிவமயிலான் ஞானசம்பந் தேசன் றருமை
உவமையிலி போந்தா னுலா.

Dharumai Ula

Size: 21×33. Pages: 50. Lines: 24 on a page. Condition: good.

Note : This is a copy of the cadjan leaf Ms. No. 429 in the Library. This is an Ula sung in praise of Meygnana Sambanda Desikar by one Thiruvambalathambiran of Dharmapura Adhinam in Thanjavur district. Contains 584 kannis.

341. தருமை யுலா (நூல் எண் 719b)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 60. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 264a-இன் பிரதியே இது.

Dharumai Ula

Size: 21×33. Pages: 60. Lines: 20 on a page. Condition: good.

Note : Same as the previous one.

342. தருமை யுலா (நூல் எண் 281)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 45. நிலை : சிதிலம்.

குறிப்பு : நூல் எண் 264a இன் படியே.

Dharumai Ula

Size: 21×33. Pages: 45. Lines: 27 on a page. Condition: injured.

Note : Same as the previous one.

343. திருக்கயிலாய ஞான உலா (நூல் எண் 309)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 18. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 11ஆம் திருமுறையில் உள்ள நூல்களில் ஒன்று; ஆதியுலா என்றும் வழங்கும். சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பெற்றது இது. அச்சானது.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

சேரமான் பெருமாணாயனார் அருளிச் செய்த திருக்கைலாய ஞானவுலா.

திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறவழலாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
றுறவாதே யாக்கை துறந்தான்—முறைமையா...

முடிவு :

பெண்ணீர்மை காமின் பெருந்தோ ளிணை காமின்
உண்ணீர்மை மேகலையு முள்படுமின்—றெண்ணீர்மைக்
காரேறு கொன்றையந்தார்க் காபாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா.

திருச்சிற்றம்பலம்.

Tirukkayilaya Gnana Ula

Size: 21×33. Pages : 18. Lines: 22 on a page. Condition: good.

Note: This Ms. contains Tirukkayilaya Gnana Ula by Seraman Perumal Nayanar and is one of the works included in the eleventh Thirumurai; printed.

344. திருக்கழுக்குன்றத்து உலா (நூல் எண் 314)

அளவு : 21 × 33. *வரிகள்* : 25.
பக்கங்கள்: 70. *நிலை : மிகக் கிலமாக உளது.*

குறிப்பு : *செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த திருக்கழுக்குன்றத்து இறைவனைப்பற்றிப் பாடப்பெற்ற உலா இது. இந்நூல் ஆசிரியர் அந்தகக்கவி வீரராகவ முதலியார். ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.*

தொடக்கம் :

எழுத இயலாத வண்ணம் சிதைந்துள்ளது.

முடிவு :

.. மருதத்தான்
சோலையான் சோற்றுத் துறையா னரத்துறையான்
கோலையான் றண்டலையான் கோளிலியான்—தோணியான்
கச்சியான் காசியான் காளத்தி யான்கழுக்குன்
றச்சியான் போந்தா னுலா.

திருக்கழுக்குன்றத்து வேதகிரீசர் திருவுலா முற்றும்.

சொக்கர் துணை.

சார்வரி ஞு புரட்டாதி மீ 18உ எழுதி முடிந்தது 9-10-1900. *திருநெல்வேலி மேலை ரதவீதி அம்பலவாண கவிராயர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டது. ஷை பிரதி பிழையும் சிதிலமுமாக*

இருந்தது. 18—1—1901 இல் துறைசைப் பிரதி ஒன்றோடும் ஒத்திடப்பட்டது. இந்தப் பிரதியாலேதான் நூல் பூர்த்தியாயிற்று.

Tirukkazhukkunrathu Ula

Size: 21×17. Pages: 70. Lines: 25 on a page. Condition: much injured.

Note : The Ms. contains Tirukkazhukkunra Ula composed by Andhakakkavi Viraraghava Mudaliar. This has been edited and published by Dr. U. V. Swaminatha Iyer in 1936.

345. திருக்குற்றாலநாதருலா (நூல் எண் 322)

அளவு : 21×33. வரிகள் : 44.
பக்கங்கள் : 29. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய குற்றாலநாதர்மேல் பாடப்பெற்ற உலா. இந்நூலாசிரியர் திரிகூடராசப்பக் கவிராயர். நூல் நிலையத்தாரால் 1955 இல் வெளியிடப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

காப்பு

தேர்கொண்ட குற்றாலத் தேவாதி தேவனிசைத்
தார்கொண் டுலாமாலை சாற்றமே [illegible]ர்கொண்டு
செண்பகவி னாயகருந் தென்னிலஞ்சி வேலருமென்
நண்பகவி னாயகரா னார்.

முடிவு :

.... மெய்யடியார்
பத்திவளர்ந் தேறப் பரம்பொருண்மெய்ஞ் ஞானமெனும்
முத்திப் பயிர்கள் முளைத்தேறச்—சித்துடையான்
பாருடையா னண்டப் பரப்புடையான் குற்றாலத்
தூருடையான் போந்தா னுலா.

Tirukkutralanathar Ula

Size: 21×33. Pages: 29. Lines: 44 on a page. Condition: good.

Note : This contains an Ula on Tirukkutralanathar, by Tirikuta Rasappa Kavirayar: printed. Published by the Library in 1955.

346. திருச்செந்தியுலா (நூல் எண் 343)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 28. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஆறு படைவீடுகளுள் ஒன்றாகிய திருச்செந்தூர் முருகன்மேல் பாடிய உலா. இப்பிரதியில் முதல் இரண்டு பக்கங்களில் கண்ணிகள் இல்லை. பின்னர்த் தொடர்ந்து 359 கண்ணிகள் இறுதி வரை உள்ளன. அச்சான விவரம் அறியக் கூடவில்லை. அபூர்த்தி.

தொடக்கம் :

வன்புலத்திற் சேரா மதியைக் கொடுத்தருளுந்
தென்புலத்தர் வைத்த செழுந்தீர்த்தம்—என்புருகு
மாலாற் பிறரில் மருவும் பழிதீர்க்கு
மேலா முனிவர் வியன்றீர்த்த-மேலானது

முடிவு :

.... மெல்லமெல்ல
மெய்க்கு ளடங்க விரித்தணியு மாலையொன் றுங்
கைக்குணி செண்டுங் கனிந்தளித்து—மெய்க்கடப்பந்
தாராளன் மூன்று தமிழாள ளுந்திருச்செந்
தூராளன் போந்தா னுலா.

திருச்செந்தூர் உலா முற்றும்.

திருச்செந்தூர்க் குழந்தை வடிவேலராகிய ஆறுமுகத் தெய்வம் மஹாலிங்கத்தை இரட்சிக்க வேண்டியது.

Tiruchendi Ula

Size: 21×33. Pages: 28. Lines: 24 on a page. Condition: good.

Note : The Ms. contains an Ula on Lord Muruga of Tiruchendur. It has 359 kannis. Certain kannis are missing in the first two pages.

347. திருச்செந்தூர் உலா (நூல் எண் 719)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 37. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி நூல் எண் 343இன் பிரதியே யாகும்.

Tiruchendur Ula

Size: 21×33. Pages: 37. Lines: 20 on a page. Condition: good.

Note: Same as the previous one.

348. திருச்செந்தூர் உலா (மூலம்) (நூல் எண் 346)

அளவு : 21×33. வரிகள் : 18.
பக்கங்கள் : 37. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதி நூல் எண் 343-இன் பிரதியாகும்.

Tiruchendur Ula

Size: 21×33. Pages: 37. Lines: 18 on a page. Condition: old.

Note: Same as the previous one.

349. திருச்செந்தூர் உலா மடல் (நூல் எண் 247)

அளவு : 12×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 26. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருச்செந்தூரில் குடி கொண்டுள்ள முருகப் பெருமான்மேல் பாடப்பெற்ற உலா மடல். ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இதன் பின்னால் 49 பக்கங்கள் இதே நூலின் மூலப்பிரதி சேர்த்துப் பைண்டு செய்யப்பெற்றுளது. 300 கண்ணிகளுடன் அபூர்த்தியாக உள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருச்செந்தூருலா மடல்

எத்திசையும் போற்று மெமதுசெந்தூர் வேலோன்மேற்
பத்திசைசெய் உலாமடல் பாடவே—வித்தகனர்
சொன்னமத வாரணத்தைச் சொன்னவரை மேற்றீட்டுங்
கன்னமத வாரணமே காப்பு.

நூல்

செங்கமல மாது திருமருகன் றன்னடியார்
பங்கமலந் தீர்க்கும் பரஞ்சோதி—எங்கள்
குமரவிடங் கப்பெருமாள் கும்பிடுவார் கன்மச்
சமரவிடங் கட்டழிக்கத்தக்கான்.

முடிவு :

கேளுமெனைப் போலடிமை கிட்டாது வீணிலே
நாளு மிளமையும்போ ளுல்வருமோ—ஆளுமென்றன்
வார்த்தைதட்ட வேண்டாஞ்செவ் வாயிதழுண் டாலன்றிப்
பார்த்தவற்குக் காமப் பசிபோமோ.

Tiruchendur Ula Madal

Size: 21×33. Pages: 26. Lines : 24 on a page. Condition: good.

Note: This is sung in praise of Lord Muruga of Tiruchendur; con 300 kannis; incomplete. Author not known.

350. திருப்புத்தூர் உலா (நூல் எண் 372)

அளவு : 24 × 31. வரிகள் : 20.
பக்கங்கள் : 54. நிலை : பழமை :

பாண்டி நாட்டில் உள்ள தேவாரம் பெற்ற தலமாகிய திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்கும் திருத்தளிநாதரைப் பற்றிய உலாப் பிரபந்தம் இது. 403 கண்ணிகள் அடங்கியது. 403 என்று எண்ணிடப்பட்டிருப்பினும் இறுதியில் 404 கண்ணிகள் இருப்பதாகக் குறிப்பு இருக்கிறது. இதன்பின் இந் நூலுக்குரிய குறிப்புகளை ஐயரவர்கள் தம் கையாலேயே எழுதி யிருக்கிறார்கள்.

ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம் :

கணபதி துணை
திருப்புத்தூருலா
காப்பு

தேங்கமழுங் கொன்றைத் திருத்தளிநா தேசர்மேல்
ஓங்குதிருப் புத்தூ ருலாவிற்கே—பாங்காம்
திருத்தலத்தன் காணுத் திருத்தலத்தன் கண்ட
ஒருத்தலத்தன் காப்பா முவந்து.

நூல்
பூசித்தோர்

நீர்கொண்ட மேக நிறத்தானும் பார்மகளும்
சீர்கொண்ட வம்பிகையுஞ் செந்திருவும்—ஏர்கொண்ட (1)

மேன்முகமா மைங்கர னும் வேலவனு மாரணஞ்சேர்
நான்முகங்கொள் வேதாவும் நற்பிருகும்—வான்
முழுதாள் (2)

முடிவு :

402. நன்கொன்றை மாலையவர் நார்மலை யாய்விரும்ப
நன்கொன்றை மாலைசில நல்கியே—பொன் கொன்றைத்
403. தார்நாத னீள்சிற் சபைநாதன் றென்றிருப்புத்
தூர்நாதன் போந்தா னுலா.

திருப்புத்தூருலா முற்றும்.
திருச்சிற்றம்பலம்
சoச கண்ணிகள்

Tirupputhur Ula.

Size: 24×31. Pages: 54. Lines: 20 on a page. Condition: old.

Note : The Ms. contains an Ula on Tiruttalinathar, the presiding deity of the temple at Tirupputhur, Madurai district; contains 493 kannis. Notes by Dr. Iyer. Author unknown.

351. திருவாரூர் உலா (நூல் எண் 702a)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 44. நிலை : நிலமாக உளது.

குறிப்பு : இப்பிரதியில் திருவாரூர்த் தியாகராசப் பெருமானைப்பற்றிய உலா உள்ளது. அந்தகக் கவி வீரராகவ முதலியார் அவர்கள் இந்நூலாசிரியர். ஐயரவர்களால் 1905–இல் மதுரைச் சங்கம் செந்தமிழ்ப் பிரசுரமாகப் பதிப்பிக்க பெற்றுள்ளது.

தொடக்கம் :

நூல்

நீர்பூத்த தாமரையி னிற்குந்தே வாதியா
வேர்பூத்த வொன்பா னெனும்பேருய்ச்—சீர்பூத்த
வேதாந்த மேதெளிந்த சைவ விழுப்பொருளாய்
நாதாந்த மேயாய் நடிக்கின்றோன்...
நிகண்டு—20

முடிவு :

தெள்ளுதமி ழாரூர்த் தியாகேசர் மெய்யன்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினனு—ளுள்ளக்
குவிவீர ராகவன்சொற் கூடிற் புலவீர்
கவிவீர ராகவன்சொற் கண்டு.

திருச்சிற்றம்பலம்
திருவாரூருலா முற்றியது
திருச்சிற்றம்பலம்.

Tiruvarur Ula

Size : 21×33. Pages: 44. Lines: 28 on a page. Condition: injured.

Note : This Ms. contains an Ula sung in praise of Lord Thyagaraja by Andhakakkavi Viraraghava Mudaliar. This has been edited by Dr. U. V. Swaminatha Iyer in 1905 and published by Madurai Tamil Sangam.

352. திருவிலஞ்சி முருகனுலா (நூல் எண் 419)

அளவு : 21×33. வரிகள் : 41.
பக்கங்கள் : 24. நிலை : பழமை.

குறிப்பு : இலஞ்சி என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குற்றாலத்திற்கு அண்மையில் உள்ள தலம். முருகன் குடிகொண்ட தலங்களுள் ஒன்று. முருகப் பெருமானைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றது இந்நூல். பண்டாரக் கவிராயர் என்பார் இந்நூலாசிரியர். டாக்டர் உ. வே, சாமிநாதையரால் 1935-இல் பதிப்பிக்கப்பெற்றது. இப்பிரதியில் நூல் முற்றுமுளது.

தொடக்கம் :

உ

திருவிலஞ்சியுலா

காப்பு

ஏர்கொண்ட தென்னிலஞ்சி யீசன் குருபரன்மேற்
சீர்கொண் டுலாமாலை சேர்க்கவே—நார்தருமால்
ஐந்துகர நால்வாய்மூன் றுனவிழி யோரிருதாள்
எந்தை யொருமருப்ப னே.

நூல்

சீர்கொண்ட மாலுந் திசைமுகனுந் தேவர்களும்
கார்கொண்ட கந்தரனைக் கைகுவித்தே—ஏர்கொண்ட

நாடெங்கே யெங்கடிரு நங்கைமா ரெங்கேயெம்
வீடெங்கே யென்று மெலிவுரைப்ப.

முடிவு :

முத்திதருங் குற்றால முற்றுமே வாழிவெற்றிச்
சத்தியணி வேன்முருகர் தாம்வாழி—எத்திசையும்
சீர்வாழி பத்தர் செயம்வாழி தென்னிலஞ்சி
ஊர்வாழி வாழி யுலா.

திருவிலஞ்சி முருகன் உலா முற்றிற்று.

Tiruvilanji Murugan Ula

Size : 21×33. Pages: 24. Lines: 41 on a page. Condition: old.

Note : The Ms. contains an Ula on Lord Muruga of Tiruvilanji near Courtallam in Tirunelveli district. The author is Pandara Kavirayar. This was edited and published by Dr. U.V. Swaminatha Iyer in 1935.

353. திருவேங்கடநாதருலா (நூல் எண் 432)

அளவு : 21×33. வரிகள் : 45.
பக்கங்கள் : 17. நிலை : சிதிலம்.

குறிப்பு : திருவேங்கட மலையில் குடிகொண்டுள்ள இறைவனாகிய திருவேங்கடநாதர்பேரில் பாடப்பெற்றது. அச்சானது. இந்நூலை இயற்றியவர் பெயர் விளங்கவில்லை.

தொடக்கம் :

உ

திருவேங்கடநாதருலா

கோடிலா வேங்கடத்திற் கொண்டலெனக் கொண்டார்க்குத்
தேடியுலா வொன்றடியேன் செப்புதலே—நாடி
யொலியூட்டு மண்டமெலா முண்டவயி றுண்ணப்
பொலியூட்டுக் காட்டுவார் போல்.

முடிவு :

....சோதி
இடபமலை யஞ்சனவெற் பென்னு மலையான்
வடமலையான் புட்கோ மலையான்—புடவிதனில்
ஏழுபுவனத் தோடு மேழுபருவத் தோடு

மேழுசயி லத்தோடு மேத்தவே—வாழு
மலையக நின்றபிரான் வானளந்தா னப்ப
னுலகறியப் போந்தா னுலா:

திருப்பதி உலா நிறைந்து முடிந்தது.
முற்றும்.

Thiruvenkatanathar Ula

Size: 21×33. Pages:17. Lines: 45 on a page. Condition: injured.

Note : This is an Ula on Lord Venkatanatha of Tirupathi. Author not known.

354. திருவேங்கட உலா (நூல் எண் 438)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 39. நிலை: பழமை.

குறிப்பு : 432-ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றதே. இப்பிரதியில் காப்பு வெண்பா ஒன்று உள்ளது. நூல் அபூர்த்தியாகவுள்ளது.

Thiruvenkata Ula

Size: 21×33. Pages : 39. Lines: 30 on a page. Condition: old.

Note: This is an incomplete work; similar to the previous one.

355 தில்லை உலா (நூல் எண் 438)

அளவு : 21×33, வரிகள் : 20.
பக்கங்கள் : 34. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி தில்லை எம்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல். இதில் இரண்டு பிரதிகள் உள்ளன. 248 கண்ணிகள் உள. அரிவைப் பருவம் 13 கண்ணியுடன் அபூர்த்தியாகவுளது. அச்சானதாக அறியக் கூடவில்லை. இப் பிரதியில் 438a கணபதி அந்தாதி, 438b வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய நூல்களும் உள.

தொடக்கம் :

உ
கணபதி துணை
தில்லையுலா

சீர்கொண்ட செல்வச் சிவகாம சுந்தரிபைந்
தார்கொண்ட கொன்றைநறுந் தாழ்குழலாள்—ஏர்கொண்ட
வேத மொருநா(ன்கும்) விண்முதலைந் தும்படைத்த
பேதை யறம்வளர்க்கும் பேராட்டி.

முடிவு :

அணியார் கலனு மணிவளையும் பட்டும்
அணியாத பாதமுனக் காமோ—மணிமிடற்றோன்

தில்லைப் பதிசூழ்ந்த தெண்டிரைநீர் வாருதியில்
மெல்லத்திரை......க்கும் வார.

Thillai Ula

Size: 21×33. Pages: 34. Lines: 20 on a page. Condition: good.

Note: The Ms. contains 248 kannis sung in praise of Lord Nataraja of Chidambaram; incomplete. Author not known.

356. தேவையுலா (நூல் எண் 465)

அளவு : 21×17. வரிகள் ; 25.
பக்கங்கள் : 28. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதி இராமேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப்பெற்ற உலா ஆகும் (தேவை-தேவநகரம் என்னும் இராமேசுவரம்). ஆசிரியர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர். ஸ்ரீமத் டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களால் 1904-இல் இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

தொடக்கம் :

தேவையுலா
காப்பு

ஆதியுலாக் கொண்ட வமலனிரா மேசன்மேற்
சோதியுலாத் தேவையுலாச் சொல்லவே—காதலாம்
தந்தத்தொந் திந்தந்தித் தாவென்று டுஞ்சிவன்சேய்
தந்தத்தொந் தித்தந்தி தாள்.

முடிவு:

..............................மாறற்ற
அம்புயத்தாள் போல்வா ளருளுமழுகுங்கண்டு
செம்புயத்தாள் மாலை சிறிதளித்து—நம்பெருமான்
பாரிறைவ னும்பர் பதியிறைவன் றென்றேவை
யூரிறைவன் போந்தா னுலா.

வாழி

சேது நகர்வாழி தீர்த்தங்கள் வாழிகந்த
மாதனம் வாழிபர மன்வாழி—காதலித்தாய்
வாழி சிவசமயம் வாழிதலத் தார்வாழி
வாழிமனு வேந்தன் வளம்.

தேவையுலா முற்றிற்று.

Thevai Ula

Size: 21×17. Pages: 28. Lines: 25 on a page. Condition: old.

Note: The Ms. contains an Ula sung by Palapattadai Chokkanatha Pulavar in praise of the deity at Rameswaram. Thevai is Rameswaram. Edited and printed by Dr. U.V. Swaminatha Iyer in 1904.

357. திருக்காளத்திநாதருலா (நூல் எண் 317)

அளவு: 21×17. வரிகள்: 25.
பக்கங்கள்: நிலை: மிகச் சிலமாக உளது.

குறிப்பு: இந்நூல் திருக்காளத்தியில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான்மீது சேறைக் கவிராசப்பிள்ளை இயற்றியது. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் 1904-இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பிரதி எழுத முடியாதபடி மிகவும் சிலமாக உள்ளது. எனவே பக்கங்கள் விவரம் எழுத முடியவில்லை.

Thirukalathinathar Ula

Size: 21×17. Pages: .... Lines: 25 on a page. Condition: much injured.

Note: The Ms. contains an Ula on the presiding deity at Kalathi sung by Serai Kaviraja Pillai. This was edited and published by Dr. U. V. Swaminatha Iyer in 1904.

358. நக்கீரருலா (நூல் எண் 494)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள்: 8. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது உலாவன்று. ஆனால் யமகத்தில் 106 கண்ணிகள் கொண்டு கலிவெண்பாவாக அமைந்துள்ளது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம் :

மந்தர மலையைச் சுற்று மனிதரா லசைக்கொ ணாது
சுந்தர மாரு தத்தைச் சுரும்புக ளணுகொ ணாது
செந்தழ லதனை யீதான் சினத்துடன் மொய்க்கொண் ணாது
கந்தனைப் போற்று வார்மேற் காலனு மணுகொண் ணாதே,

முடிவு :

சென்மவினைகாமம் செங்கதிர்முன் னேடுதுகள்
சென்மவினை கன்மத் திரட்சிபோம்—சென்மவினை
இல்லைப் பவங்க ளிடரணுகா தென்னாளு
மில்லைமிக வாழ்வா ரிசைந்து.

நக்கீரருலா முற்றிற்று.

Nakkirar Ula

Size: 21×33. Pages: 8. Lines: 28 on a page. Condition: good.

Note: The Ms. contains 106 kannis in yamakam kalivenba. No information is available regarding author.

359. நக்கீரருலா (நூல் எண் 495)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 8. நிலை : மிகச் சிலமாக உளது.

குறிப்பு : நூல் எண் 494-இலுள்ள பிரதியைப் போன்றதே. இப்பிரதி எடுத்துப் பார்க்க இயலாதவண்ணம் பொடிப் பொடியாகவுள்ளது.

Nakkirar Ula

Size: 21×33. Pages: 8. Lines; 25 on a page. Condition: much injured.

Note: Similar to the previous one. The Ms. is in a very damaged condition.

360. நக்கீரருலா (நூல் எண் 496)

அளவு : 21 × 17. வரிகள் : 20.
பக்கங்கள் : 14. நிலை : நல்ல நிலை.

494-ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது. இதில் 496b கமலை பராசக்தி மாலை என்ற நூலும் உள்ளது.

Nakkirar Ula

Size: 21×17. Pages: 14. Lines: 20 on a page. Condition: good.

Note: Same as the previous one.

361. நம்பியுலா (நூல் எண் 498)

அளவு : 21 × 17. வரிகள் : 20.
பக்கங்கள் : 19. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருக்குறுங்குடி அழகிய நம்பி உலா என்னும் பிரபந்தம். உலாவிற்குரிய ஏழு பருவங்களும் உள. 184 கண்ணிகள் உள. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. அமரர் எஸ். வையாபுரிப் பிள்ளை 1932இல் பதிப்பித்துள்ளார்.

தொடக்கம் :

பூமாது சேர்குறுங்கைப் பொன்மேனி நம்பியெங்கள்
மாமால் பவனியுலா மாலைக்கு—நாமேவு
பூவற் கருடனே பொன்னுலகத் தார்பரவுங்
காவற் கருடனே காப்பு.

முடிவு :

.... நின்றுகிளி
பேசுகின்ற தென்னவரும் பேரிளம்பெண்
ஆசைகொண்டு போற்ற வருள்செய்தே-தேசமகிழ்
நம்பிகுறுங் காபுரியி னுத விநோதநம்பி
யும்பர்தொழப் போந்தா னுலா.

Nambi Ula

Size: 21×17. Pages: 19. Lines: 20 on a page. Condition: good.

Note: The Ms. contains 184 kannis. This is also called Tirukurungai Azhagianambi Ula. This was edited and published by Sri S. Vaiyapuri Pillai in 1932.

362. மஹாராஜா பாப்பையா பிள்ளை உலா மடல்
(நூல் எண் 154c)

அளவு : 21 × 33. வரிகள் : 31.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : அம்பாசமுத்திரம் மகாராஜா பாப்பையா பிள்ளை என்பவர்மேல் பாடப்பெற்ற உலா மடல் என்னும் பிரபந்தம். இப்பிரதி 312 கண்ணிகளுடன் அபூர்த்தியாகவுள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை. இப்பிரதியில் காழிக்கலம்பகம், திருக்கருகாவூர்ப் புராணம் என்ற நூல்களும் உள்ளன.

வாணி நமோஸ்து

தொடக்கம் :

மகாராச பாப்பையா பிள்ளை உலா மடல்

வேக மாநெறி சேரும் வினைகளுந்
தாக போகம் விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியி னுல்வரு துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுவாம்.

முடிவு :

..................................நேராக
வார்மட றன்னில்அவா வன்கண்மை நீக்கியெழி
லார்மட மான்வடிவெல் லாமெழுகு—வீரசடை
பின்னியிசை வாயிலங்கப் பேரெழும் பிச்சம்ப...

Maharaja Papiah Pillai Ula Madal

Size: 21×33. Pages: 24. Lines: 31 on a page. Condition: good.

Note: The Ms. contains 312 kannis; incomplete. This is an Ula Madal sung on Ambasamudram Maharaja Pappaiya Pillai. Author not known.

363. முப்பந்தொட்டி உலா
(நூல் எண் 662)

அளவு : 21×33. வரிகள்: 24.
பக்கங்கள் : 61. நிலை : பழமை.

குறிப்பு : முப்பந்தொட்டி என்பது ஆர்க்காட்டிற்கு அண்மையில் உள்ள தலம். சோமநாதேசுரர் என்பது இறைவன் திருப்

பெயர். இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பிரதியில் நூல் முற்றும் உள்ளது. அச்சானது. அமரர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களால் 1934-இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

முப்பங்கொட்டி உலா.

முப்பங்கொட்டி ஆர்க்காடு என்றதுகளின் கைபிதுகள் துடங்கிய முப்பங்கொட்டி சோமனாத உலா.

"முப்பங்கொட்டிவுலா."

சொல்லு முப்பங் கொட்டிவரு சோமநா தீசுரன்மே
னல்ல வுலாவை நவிலுதற்கு—வெல்லுந்
திருத்தன் மருகன் செயங்கள்செல் வப்பிள்ளை
யொருத்தன் முகனமக்கே யுண்டு.

முடிவு :

....நேற்றரிய
மின்று ரிவரெழுவர் மேலு மயலாகப்
பொன்று ரிதழியந்தார் பூணுவார்—என்றுளும்
திங்களென் பாய்பூசை செய்முப் பதப்புரத்திர்
பொங்கிநிதி மின்வரும் பொற்சடையார் எங்கும்
நிறைந்தபிரான் னன்பரிடம் நீங்காமல் என்றும்
முறைந்தபிரான் வந்தா னுலா.

முற்றும்.

Muppanthotti Ula

Size: 21×33. Pages: 61. Lines: 24 on a page. Condition: old.

Note: The Ms. contains the complete work. Muppanthotti is near Arcot. This Ula is in praise of Somanathesvarar, the presiding deity of Muppanthotti.

364. வரராசை யுலா (சங்கரலிங்க உலா)

(நூல் எண் 546c)

அளவு : 21 × 33. வரிகள் : 40.
பக்கங்கள் : 16. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வரராசை என்பது சங்கரநயினார் கோயிலைக் குறிக்கும். ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. அவ்வூர் இறைவன்மீது பாடப்பெற்ற 312 கண்ணிகள் கொண்ட உலா இது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களால் பதிப்பிக்கப்

பெற்றுள்ளது. இதனுடன் பட்டீச்சரஸ்வாமி வண்ணம், வாளெழுபது, திருவேரகப் புராணம் ஆகிய நூல்களும் உள.

தொடக்கம் :

உ
சிவமயம்

வரராசை சுவாமி சங்கரலிங்கம் பேரில் உலா
பார்தந்த பூங்கமலப் பண்ணவனும் வென்றிதரு
போர்தந்த நேமிப் புரவலனும்—ஏர்தந்த
நந்தா வளம்பெறுபொன் ஞூடு புரந்தளிக்கும்
தந்தா வளப்பூந் தருவரசும்.

முடிவு :

—நின்னிதழித்

தாரேனுந் தாராத் தகைமையென்கொ லென்னவிவ்வா
ரேரேழ் பருவத் தொளிவளையார்—நேர்போதக்
கண்ணுதலான் புன்னைநறுங் காவுடையா னோர்பாகத்
தொண்ணுதலான் போந்தா னுலா.

Vararasai Ula

Size: 21×33. Pages: 16. Lines: 40 on a page. Condition: good.

Note : Vararasai denotes Sankaranainarkoil. The Ms. contains 312 kannis. This is in praise of the deity in Sankaranainarkoil. This has been edited and published by Dr. U. V. Swaminatha Iyer in 1933.

365. கல்லாட உரை (நூல் எண் 125)

அளவு : 21 × 33. *வரிகள் :* 34.
பக்கங்கள் : 55. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : *கல்லாடம் என்பது தமிழில் ஓர் அகப்பொருள் இலக்கியமாகும். இதன்கண் பாயிரமுதல் 22 பாடல்களுக்கு உரை உண்டு. இது வரகனேரி, சவரிமுத்துப்பிள்ளை என்ற குறிப்புடன் உள்ளது. எண் 257 ஏட்டுச் சுவடியின் பிரதியாகும். அபூர்த்தி. அச்சானது.*

தொடக்கம் :

'திங்கண் முடி பொறுத்த முடிப்பையின் எனவே' என்பது கடவுள் வாழ்த்து.

திங்கள் முகத்த என்றது, பிறைமுடியின்கட் டரித்த பொன்மலையினின்றும் விழாநின்ற அருவியானது கரிய மணியைக் கொழிக்கப்பட்ட தோற்றத்தைப் போல இரண்டு கவுளும் சிந்தப் பட்ட மதமாகிய நதிப் பெருக்கில் வண்டினம் புரளப்படுதற் கிடமாய் விளங்காநின்ற புகரினையுடைய முகத்தினையுடையான் எனத் திங்கள் முடி பொறுத்த என்னும் உவமையடையைப் பொருட்குங் கொள்க.

முடிவு: நான்கு வேதமும் தொனிக்கும் வாய் பிளவாது உள்ளக் கருத்தினை வெளியிற் காட்டி அறிவிக்கும். கண்ணிமை யாடாது சிதறிய தழல் போலும் மணி சூழப்பட்ட முடியினை யணிந்த தலை யசையாது வயிறெக்கி யழுதாற் போலும்.

Kallada Urai

Size: 21×33. Pages: 55. Lines: 34 on a page. Condition: good.

Note: Kalladam is an Ahapporul literature in Tamil. This is a copy of the cadjan leaf Ms. No. 257; contains commentary f or 22 poems beginning from Payiram; printed.

366. கல்லாடம் (நூல் எண் 127)

அளவு : 20×16. வரிகள் : 25.
பக்கங்கள் : 177. நிலை : நிலமாக உளது.

குறிப்பு : இதனைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்டது எண் 125. இதில் 37 பாடல்களுக்கு உரை உளது.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்.

கல்லாடவுரை

திங்கண்முடி பொறுத்த முடிப்பையின் றெனவே எ-து. கடவுள் வாழ்த்து. திங்கள் முகத்த என்றது பிறையை முடியின் கட் டரித்த பொன்மலையினின்றும் விழாநின்ற வருவியானது கரிய மணியைக் கொழிக்கப்பட்ட தோற்றத்தைப்போல விரண்டு கவுளுஞ் சிந்தப்பட்ட மதமாகிய நதிப்பெருக்கில் வண்டினம் புரளப்படுதற் கிடமாய்.

முடிவு ;

மதுரைக் கிறைவனு வனிருதாளிற் பற்று விட்டதனுல் வந்த கழலினை...யயும் பொய்யினர்க்குப் பெருமை யில்லாததுபோல

வென்க. பெருமையுமில வென்றது பெருமையு மிலனுயினு மென்க. பெருமை - பழியும் பாவமுமஞ்சுதல்.

Kalladam

Size: 20×16. Pages: 177. Lines 25 on a page. Condition: injured.

Note: This is the original for the previous item; contains notes for 37 verses.

367. கல்லாடம் (மூலம்) **(நூல் எண் 131)**

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 103. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கல்லாடனூர் இயற்றிய கல்லாடம் 100 பாடல்களும் இப்பிரதியில் உள்ளன; அச்சான நூல்.

தொடக்கம் :

கல்லாடம்
பாயிரம்
விநாயகர் வணக்கம்
கடவுள் வாழ்த்து

1. திங்கண்முடி பொறுத்த பொன்மலை யருவி
கருமணி கொழித்த தோற்றம் போல
விருகவுள் கவிழ்த்த மதநதி யுவட்டின்
வண்டினம் புரளும் வயங்குபுகர் முகத்த
....
40. தெருளுற வைய முடிப்பையின் றெனவே.

முடிவு : ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி.

வெறிக்குறுங் கதுப்பின் வெள்ளெயிற் றெயிற்றியர்
செம்மணி சுழற்றித் தேனிலக் கெறிதரப்
....
25. கொடுவழி இவ்வர வென்றும்
விடுவது நெடும்புக முடுவே லோயே. (100)

Kalladam

Size: 21×33. Pages: 103. Lines: 32 on a page. Condition: good.

Note: Contains 100 verses of Kalladam composed by Kalladanar; printed.

368. கல்லாடம் (நூல் எண் 128)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 303. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : நக்கீரர் இயற்றிய கல்லாடம் என்னும் நூலுக்கு உரிய உரைமட்டும் உள்ளது. முதலிற் செய்யுள் முதற்குறிப் பகராதி உளது.

தொடக்கம் :

உ
வெற்றி வேலுற்ற துணை
கல்லாட மூல பாடத்துக்குரை
செவ்வி திகழ்தருணச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய்க் குறத்தேனை நவ்வி
விழியானை யைப்புணரும்வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று.

முடிவு : தோழி யியற்பழித்தல்.
திக்கி னிலங்குதிண் டோளிறை தில்லைச்சிற் றம்பலத்து
கொக்கி னிறகத ணிந்துநின் முடிதென் கூடலன்ன
வக்கினன் கையிவ ணைய வயல்வயின் நல்குதலாற்
றக்கின் றிருந்திலன் நின்றசெவ் வேலன் தனிவள்ளலே.

தலைமகனைத் தகவிலன் எனச் சிலைநுதற் பாங்கி தீங்கு செப்பியது.

உரைப்பாட முற்றியது.

இந்தப் புஸ்தகம் கும்பகோணம் டபீர் நடுத்தெரு சாம்ப சிவய்யருல் மன்மத வருஷம் அர்ப்பிசிமீ 1ல் ஆரம்பித்துக் கார்த்திகை மீ 21உ நிறைவேறியது.

Kalladam

Size: 21×33. Pages: 303. Lines: 22 on a page. Condition: injured.

Note: Contains an alphabetical index for the poems and notes for Kalladam.

369. திருக்கலம்பக உரை (நூல் எண் 312)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 129. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது. உதீசித் தேவர் என்பவர் இந்நூலாசிரியர். இப்பிரதியில் இந்நூலுக்குப்

பதவுரையும், பொழிப்புரையும், விசேஷவுரையும் உள்ளன. இறுதியில் இந்நூலின் நூற்பயன் ஆசிரிய விருத்தமாக உள்ளது. அச்சாகியுள்ளது.

கணபதி துணை

திருக்கலம்பகவுரை பாடம்

காப்பு

வெண்பா

பதினறுவர் பொன்வண்ணர் பச்சை யிருவர்
மதிவண்ணர் மற்ருே ரிருவர்—கதியடைந்த
செம்மைநிறத் தோரிருவர் சேர்ந்த முகிலிருவ
ரெம்மைக்குந் தெய்வ மெமக்கு.

பதப்பொருள் : பொன்வண்ணர் - பொன்னிறமுடையவர்கள்; பதினறுவர் - பதினறு தீர்த்தங்கரரும்; பச்சை - பசுமை நிறமுடையவர்கள்; இருவர் - இரண்டு தீர்த்தங்கரரும்; மதி - சந்திரன் போன்ற; வண்ணர் - நிறமுடையவர்கள்; ஓரிருவர்- இரண்டு தீர்த்தங்கரரும்; கதி - பஞ்ச மாகதியை; அடைந்த - சேர்ந்த; செம்மை நிறத்தோர் - சிவந்த வண்ணமுடையவர்கள், இருவர் – இரண்டு தீர்த்தங்கரரும்; சேர்ந்த - நீர்பொருந்திய; முகில் - மேக நிறைமுடையவர்கள், இருவர் - இரண்டு தீர்த்தங் கரரும்; எம்மைக்கும்-இம்மை மறுமை யம்மை என்னும் எப்பிறப்பினுக்கும், தெய்வம் - சுவாமி, எமக்கு - எங்கட்கு என்றவாறு.

முடிவு : இதனுல் எக்காலத்திலும் சுவாமி யொருவரே யென்றும் அவரே தத்துவத் தலைவரென்று மவர் தாண்மலரை யாவருந் தரிக்கத்தக்கதென்றும் கூறப்பட்டன. ஆடும் பூ - எழு வாய்;அலராம் - பயனிலை. உதீசித் தேவரருளிச் செய்த திருக் கலம்பகம் முடிந்தது.

Tirukkalambakam Urai

Size: 21×33. Pages: 129. Lines: 28 on a page. Condition: good.

Note: **The Ms. contains Tirukkalambakam, a Jaina work written by Udeechi Thevar. Detailed commentary with summary and extra points are written. Printed.**

370. காழிக் கலம்பகம் (நூல் எண் 153)

அளவு : 21×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 35. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : காழி என்பது சீகாழி. ஞானசம்பந்தர் தோன்றிய இத்தலத்து இறைவன்மீது பாடப்பெற்றது இந்நூல். ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. கடைசிப் பாடல் அபூர்த்தியாக உள்ளது.

தொடக்கம் :

உ

கணபதி துணை

காழிக் கலம்பகம்

விநாயகர் காப்பு

துன்னும் புகழ்க்காழித் தோணிப் பிரானூர்மேற்
பன்னு கலம்பகத்தைப் பாடவே—மின்னிமையத்
தொண்ணுதலா ராண்டகயங் குற்றசீர் காட்டுகயங்
கண்ணுதலா ராண்டகயங் காப்பு.

நூல்

சீர்மருவு சுருதிபல திரண்டொன்று யெழுந்தனபோ
லேர்மருவு கைலைமிசை யேகாந்த சமையத்தே
ஞானநே யம்பொருந்து நால்வரொடு மொருவராய்
மோனநிலை நின்றளவின் மூவர்தமி லொருவரென
முனிவரையங் நெறிநிறுத்தி முன்னவரு முன்னவனைப்
பனிவரையிற் கலியாணம் பண்ணவரு மெல்லைக்கண்.

முடிவு :

அகவல்

பொன்மலி பெருநறைச் சின்மலர் வகுளமுந்
தேமலி வண்டுமிழ் பூமலர்க் கடம்பு
மரகதத் தகட்டுட் டிரண்டுகிரி கடுப்பப்
பாசிலைச் செங்கா யாசில் காமரமுங்
கோல வளையார் கொங்கைமுத் தணிபுரை
பாளைக் குரும்பைக் கேளித் தெங்குங்
கரிய வண்ணத் தொருவன்...
....

Kazhikkalambakam

Size: 21×33. Pages: 35. Lines: 24 on a page.
Condition: injured.

Note: This is a kalambakam sung in praise of the presiding deity at Sirkazhi (Thanjavur district). The last stanza is incomplete. No information about the author.

371. காழிக் கலம்பகம் (நூல் எண் 154a)

அளவு : 21×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 34. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மேல் குறிப்பிட்ட 153-ஆம் எண்ணின் பிரதியே இது.

Kazhikkalambakam

Size: 21×33. Pages: 34. Lines: 24 on a page. Condition: good.

Note: This is a copy of the previous item.

372. மதுரைக் கலம்பகம் (நூல் எண் 702b)

அளவு : 21×17. வரிகள் : 24.
பக்கங்கள் : 30. நிலை : கிலமாக உள்ளது.

குறிப்பு : மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள்மேல் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடிய நூல். அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
மதுரைக் கலம்பகம்
விநாயகக் கடவுள் துதி : கலித்துறை

புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறுதொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்மலர்தூய்
வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேறடியே.

முடிவு :

நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழிய பெருமநின் றகவே
வாழியெம் மனனு மணிநா வும்மே.

Maduraikkalambakam

Size: 21×17. Pages: 30. Lines: 24 on a page. Condition: injured.

Note: The Ms. contains Maduraikkalambakam sung in praise of Lord Sundareswarar of Madurai by Saint Kumaraguru-para Swamigal. Printed.

373. அண்ணுமலைக் கோவை (நூல் எண் 29)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 16. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இது திருவண்ணுமலைத் தலத்தில் எழுந் தருளியுள்ள இறைவனைப்பற்றிப் பாடப்பெற்ற கோவை. இப்பிரதியில் 78 கலித்துறைகளே உள்ளன. 56ஆம் பாடல் முதல் 70 ஆம் பாடல் வரை எழுதப்பெருமல் எண்ணிட்டு இடம் விடப் பெற்றுளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
அண்ணுமலைக் கோவை

அண்ணு மலையாற் கணிவருக்கக் கோவைதமிழ்ப்
பண்ணுக நானூறு பாடவே — விண்ணுடர்
கண்டா தரிக்குமைந்து கையிரு ருனை திறை
கொண்டான் றுணையா குவன்.

முடிவு :

மினிரும் பகழி சிறிதேனு மானையை வீட்டுதல்போற்
றளிரும் பொருமிதழ் மானுர்கண் ணுவி தடிந்தத...ண
குளிரும் பிறைச்சடை யண்ணு மலையர் குவட்டில்மின்னே
யொளிரும் பிறைக்கல்ல வோவிந்து காந்த முருகுவதே. (78)

Annamalaikkovai

Size: 21×33. Pages: 16. Lines: 30 on a page. Condition: injured.

Note: This contains the kovai prabandham sung in praise of the Lord at Tiruvannamalai. There are 78 kalithurais with the stanzas 56 to 70 omitted. Author not mentioned.

374. திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் பேரில் வருக்கக் கோவை (நூல் எண் 58)

அளவு : 21 × 33. வரிகள் : 38.
பக்கங்கள் : 16. நிலை : பழமை.

குறிப்பு : இது திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் மீது பாடப்பெற்ற நூல். கோவை இலக்கணத்திற்கேற்ப, காட்சி, ஐயம் முதலிய துறைகளோடு அமைந்துள்ளது. இக்கோவை அகரம்முதல் துவங்கி வெள வரையிலுள்ள எழுத்தமைத்த வருக்கக் கோவை ஆகும். இதில் 102 கலித் துறைகள் உள்ளன. இப்பிரதியில் திருக்கரந்தைக் கோவை என்னும் நூலும் உளது. ஆசிரியர் அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

உ
திருக்கரந்தை

ஆதிவராகப் பெருமாள்பேரில் வருக்கக் கோவை அ முதல் வெள வரையிலும்.

திருக்கோவை யாதி வராகர்நங் கோவைச் சிறந்தவைந்து
தருக்கோவை வாழ்வித்த சக்கரக் கோவை தமிழ்மணக்கு
மருக்கோவை யாங்கரந் தைக்கோவை சாற்றும்
வருக்கந்தந்திர்
உருக்கோவைப் புள்ளர சைப்பணிந் தேதுணிந் தோதுவனே.

முடிவு :

வாழி வாழ்த்து
கார்வாழி கார்வண்ண ராதி வராகர் கருணைமல்கப்
பார்வாழி யெம்பெரு மானுடன் போந்த பழையமறை
யோர்வாழி தென்கரந் தைப்பதி வாழிகும் போதயன்றன்
சீர்வாழி மன்னர்செங் கோல்வாழி வாழியென்
செந்தமிழே. (102)
வருக்கக் கோவை முற்றிற்று.

Tirukkarandai Adivarahapperumal Varukkak-kovai.

Size: 21×33. Pages: 16. Lines: 38 on a page. Condition: old.

Note: The Ms. contains 102 kalithurais sung in praise of Adivarahapperumal of Tirukkarandai. No information about the author. The text is in alphabetical order beginning with 'அ' and ending with 'வெள'.

375. கச்சிரெங்கக் கோவை (நூல் எண் 105)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 124. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : உடையார்பாளையம் ஜமீன்தார் கச்சிரங்கேந்திரன் பேரில் அகப்பொருள் இலக்கணம் அமையப் பாடப்பெற்ற நூல்; 414 பாடல்கள் உள்ளது. பல பாக்கள் சிதறியுள்ளன. திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஸ்ரீ கந்தசாமிக் கவிராயர் இதன் ஆசிரியர்.

தொடக்கம் :

கச்சிரெங்கக் கோவை
நாளின் றினிது புலவீர்வந் தீரென்று நாடும்பொருள்
கேளின் றினிதருள் கச்சிரெங் கேந்திரன் கேழ்வரையில்
வேளின் றியற்றுஞ் சமர்க்களத் தேயென் விடாய்தணிய
வாளின்றிச் செவ்விள நீராற் பயனென்கொல் வாணுதலே.

முடிவு

......................................நாய்கடற் றென்கரையார்
பூமகள் வாழ்கச்சி ரங்க மகீபன் பொருப்பிற்கைதை
யாமணங் கேபிரிந் தாரோவெ ன ெ........ (414)

Kachirangakkovai

Size: 21×17. Pages: 124. Lines: 18 on a page. Condition: good.

Note: The Ms. contains the kovai sung in praise of Kachi Rangendran, a chieftain of Udayarpalayam in Ahapporul thurai by Tiruvavaduthurai Adhina Vidwan Kandaswami Kavirayar. Of the 414 poems many are not clear, having faded away.

376. கப்பற்கோவை (நூல் எண் 111)

அளவு : 21 × 33. வரிகள் :
பக்கங்கள் : நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : இப்பிரதி மிகவும் சிலமாக உள்ளதால், அளவு. பக்கம், வரி, தொடக்கம், இறுதி முதலிய செய்திகள் எழுத இயலவில்லை. நூல் நிலையத்தில் அச்சானது. அச்சிட்டது.

Kapparkkovai

Size: 21×33. Pages: .... Lines: ... on a page. Condition: injured.

Note: Details could not be given as the Ms. is in a bad condition; published by the Library.

377. கலைசைக் கோவை (நூல் எண் 134)

அளவு : 21×33. வரிகள் : 39.
பக்கங்கள் : 66. நிலை : பழமை.

குறிப்பு : கலைசை என்பது தொட்டிக்கலை என்னும் தொண்டை நாட்டுத் தலமாகும். சென்னை ஆவடி ஸ்டேஷன் சமீபமுள்ளது. தொட்டிக்கலை இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரால் கோவையாகப் பாடப்பெற்றது. மதுரைச்சங்கம் செந்தமிழ்ப் பிரசுரம் 61 ஆக டாக்டர் ஐயரவர்கள் 1935இல் பதிப்பித்துள்ளார்கள்.

தொடக்கம் :

உ
பரமபதி துணை
திருக்கலைசைக் கோவை
காப்பு

உருக்கோவை யங்கொள் கலைசைத் தியாகரை
யோர்ந்துரைக்குந்
திருக்கோவை யான்முழு துந்துறை செய்யத் திகழ்தருமான்
மருக்கோவை வாயுமை மைந்தன் கலைசையுள் வாரிசனைந்
தருக்கோவை யாழியன் சூழ்செங் கழுநீர்த் தனிக்கயமே.

முடிவு :

மருவண மாலையைம் பாலிசெம் பாலிகை மட்டருந்திப்
பருவரல் வீட முயங்கினம் யாம்பர மன்கலைசை
யொருவன் சிதம்பர வீசன்எல் லாவுயிர்க் குஞ்சுரக்கும்
திருவருள் போற்சொரி திங்கள்மும் மாரி செழுங்
கொண்டலே. (457)

திருச்சிற்றம்பலம்
திருக்கலைசைக் கோவை.

Kalaisaikkovai

Size: 21×33. Pages: 66. Lines: 39 on a page. Condition: old.

Note: The Ms. contains Kalaisaikkovai written by Thottikkalai Subramania Munivar. Thottikkalai is a village near Avadi, Madras. The work has been edited and published by Dr. Iyer in 1935 as Sentamil publication series No. 61.

378. கழுகுமலைக் கோவை (நூல் எண் 138)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 88. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கழுகுமலை முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட கோவை. இந்நூலில், 520 பாடல்கள் உள. முதலில் 14 பாடல்களும் இடையிடையே சில பாடல்களும் இல்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சான விவரம் தெரியவில்லை.

முதல் : பாட்டு 15

ஆறு முகமும் பனிரண்டு தோளுமஞ் சாயன்மஞ்ஞை
யேறு மெழிலுங்கண் டேகழு காசல மென்னமின்ன
வூறு மளவிற்சந் தாசலங் காட்டிச்செந் தூரனென்னுந்
தேறு மெழிலுங்கைகள் வேலுங் காட்டிலஞ்
செய்தவமே. (15)

முடிவு : வருந்திய தலைவியைத் தோழியாற்றுவித்தல்.

இருதனமே யின்பமாக்கட லோடுன் னிடத்திருந்து
மொருதன மேபின்னு நோக்கிச்சென் றூர்கொடி யூன்றித்
தொண்டர்க்
கருதன மேநல்கும் வேள்கழு காசலக் காலனங்கண்
விருதன மேயஞ்சி யஞ்சியிங் கியானைய மெய்யன்பரே.

Kazhugumalaikkovai

Size: 21×33. Pages: 88. Lines: 32 on a page. Condition: good.

Note : This contains 520 verses on Kazhugumalai Murugan. No information about author.

379. காசிக்கோவை (நூல் எண் 141)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 98. நிலை : சிதிலம்.

குறிப்பு : ஸ்ரீ காசி விசுவேசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற கோவை. இப்பிரதியில் பாயிரப் பாடல் மூன்றும் 490 கலித்துறையும் உள்ளன. ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை.

தொடக்கம் :

உ

சிவமயம்

காசிக் கோவை
கோவைக் கருத்தர் பொசிப்பிடக் காப்பதி கோலின்மணிக்
கோவைக் கருத்த ரெனுஞ்சாட்சி விநாயகர் கூந்தல
மையனைய
கோவைக் கருத்தர் வடகாசி நாதரைக் கூறுகின்ற
கோவைக் கருத்தர்சொல் லாயவர் வாக்குக் கொடுப்
பவரே. (க)

நூல் :

உ
காட்சி
சீர்கொண்ட வேணி விசுவேசர் காசிச் சிலம்பினில்மால்
வேர்கொண்ட நீலஞ்செவ் வாம்பல் கருமுகில் வெண்மதியம்
வார்கொண்ட பொன்னிழைக் கோங்கைந்து வண்ண
மருவிவந்தே
கார்கொண்ட காவி லொருபசுந் தோகைஎங் கண்ணுற்றதே.

முடிவு :
திறம்போல் படாத விசுவேசர் காசிச் சிலம்பினள
புரம்போ லொலித்தன கம்போற் கருத்தினட் போல்
மின்னிமான்
கரம்போற் பொழிந்தும் மாரி மதிதொறுங் கார்முகில்கா
ளரம்போல் விழிச்சியி னன்பொத்து வாழ்க வகிலத்திலே.

Kasikkovai

Size: 21×33. Pages: 98. Lines: 25 on a page. Condition: injured.

Note: The Ms. contains 490 kalithurais on Lord Kasi Visveswarar. No information about the author.

380. காத்தான்பிள்ளை மூப்பனார் கோவை

(நூல் எண் 146)

அளவு : 21×33. *வரிகள் :* 38.
பக்கங்கள் : 70. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : சேறை நகரைச் சார்ந்த வணிகராகிய காத்தான் பிள்ளை மூப்பனார்பேரில் பாடப்பெற்ற இந்நூலில் 9 பாடல்கள் இடையிடையே விடப்பட்டுள்ளன. இதில் 427 கலித்துறைகள் உள்ளன. இந்நூலாசிரியர் கோளிப் புலவர்.

தொடக்கம் :

உ
காத்தாபிள்ளை மூப்பனார் பேரில் கோவை

காப்பு

மாவா ரணம்புகல் காத்தவன் சேறை வணிகனுக்குத்
தாவாத வைந்திணைக் கோவைசொல் வான்றண்
ணளிபுரக்குந்
தேவா திபர்க்கு மெவர்க்கும்வெண் டுவலஞ் சேயொளிச்செம்
பூவார ணத்துவ சர்க்குமுன் னுய புகர்முகமே.

முடிவு :

சீர்வாழி முத்தமிழ் காத்தவன் வாழிதென் சேறையென்னு
மூர்வாழி யன்னவன் சந்ததி வாழி யுவந்தவிளை
யோர்வாழி சீர்காத்தார் வாழிய வாழி இரவிமதி
பார்வாழி நான்மறை வாழிசொல் வாழிபல் ஊழியுமே.(427)

நன்றாக சுப்பிரமணிய சுவாமி முன்னிற்க. குருபாதந் துணை.
திருவேங்கடநாதன் ஏடும் எழுத்தும் கோவை முற்றும்.

Kathan Pillai Mooppanar Kovai

Size: 21×33. Pages: 70. Lines: 38 on a page. Condition: good.

Note: The Ms. contains 427 kalithurais on a merch and patron Kathan Pillai. Certain portions are missing. Author: Kolippulavar.

381. திருக்கோவையார்-கொளுவுரை (நூல் எண் 340)

அளவு : 21 × 17. வரிகள் : 16.
பக்கங்கள் : 75. நிலை : பழமை.

குறிப்பு : ஸ்ரீ மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையாரில் உள்ள செய்யுளுக்குரிய கொளுக்களில் 336க்கு உரை இப்பிரதியில் உள்ளது.

தொடக்கம் :

திருக்கோவையார்

மதிவாணுதல் – மதியென்பது பிறை. வாளென்பது ஒளி; நுதலென்பது நெற்றி. பிறையை யொத்தொளி சிறந்த நெற்றியினையுடைய. வளர்வஞ்சியை – இளையவஞ்சிக் கொப்பானை. கதிர்வேலவன் - ஒளி சிறந்த வேலினையடையவன். கண்ணுற்றது - கண்டது.

முடிவு :

ருருசு. நாயகன் பிரிய வருத்தமுற்ற மனத்துடனே நிலம் பெயர்ந்திட்டுத் தேனையொத்த வார்த்தையுடையாள் சொன்னது:

Tirukkovaiyar – Kolu urai

Size: 21×17. Pages: 75. Lines: 16 on a page. Condition: old.

Note: The Ms. contains notes for 336 kolus of Tirukkovaiyar sung by St. Manikkavachakar.

382. திருக்கழுக்குன்றக் கோவை (நூல் எண் 315)

அளவு : 21 × 33. *வரிகள் :* 26.
பக்கங்கள் : 99. *நிலை :* இலமாக உள்ளது.

குறிப்பு : தொண்டை நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள வேதபுரீசர்மீது பாடப்பெற்ற நூலாகும். இப்பிரதியில் 455 செய்யுட்கள் உள்ளன. இதன் ஆசிரியர் இராமநாதபுரம் சோமசுந்தரக் கவிராயர். இந்நூல் ஸ்ரீமத் ஐயர் அவர்கள் குமாரர் ஸ்ரீகலியாண சுந்தரையரால் 1943-இல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

தொடக்கம் :

சிவமயம்

இராமநாதபுரம் சோமசுந்தரக் கவிராயரவர்கள் பாடிய திருக்கழுக்குன்றக் கோவை.

காப்பு

சீருறு திங்க ளணிகழுக் குன்றொளிர் செஞ்சடையோன்
வாருறு பூண்முலை மங்கை மணாளன் மலரடிக்காந்
தாருறு கோவை புனையவென் னாவிற் றழைத்தருளுங்
காருறு மும்மத நால்வாயோ ரைங்கரக் கற்பகமே.

முடிவு :

தலைவன் வந்துழி மகிழ்ச்சி

பொங்கிப் பரந்த சுகானந்த வெள்ளப் புதுப்புனல்வாய்த்
தங்கிச் சிறந்து குளித்துக் களித்துத் தழைத்தனளோர்
பங்கிற் றிகழ்ந்த பரையார் கழுக்குன்றிற் பார்த்திபநீ
யிங்கித் திருந்திள வேனிலிற் றேர்மிசை யெய்தக்கண்டே,

திருக்கழுக்குன்றக் கோவை முற்றும்,
வேலு மயிலுந் துணை.
திருச்சிற்றம்பலம்.

Tirukkazhukkunrak kovai

Size: 21×33. Pages: 99. Lines: 26 on a page. Condition: injured.

Note: The Ms. contains Tirukkazhukkunrakkovai written by Somasundara Kavirayar of Ramanathapuram; contains 455 verses. The book was published by Sri S. Kalyanasundaram Iyer, son of Dr. U. V. Swaminatha Iyer in 1943.

383. குலோத்துங்கன் கோவை (நூல் எண் 134a)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள் : 86. நிலை : பழமை.

குறிப்பு : இந்நூல் சோழநாட்டு வேந்தனாகிய 3ஆம் குலோத்துங்கனைத் தலைவனாகக் கொண்டு பாடிய அகப்பொருட் கோவை; 511கலித்துறைகள் கொண்டது. இப்பிரதியில் கலைசைக்கோவை, நன்னகர் வெண்பா என்ற நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

குலோத்துங்கக் கோவை

உளமலி காதல் களவியல் கைக்கிளை. சூ. காட்சியைந்து துணிவு குறிப்பறிதல் மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை புணர்ப்பதும் பிரிப்பதுமாகிய பால்களுட் புணர்க்கும் பாலும் பொருவிறந் தொத்த கறைவேற் காளையுங் கன்னியுங் காண்ப விறையோ னுயரினுங் குறைவன் றென்மனார்.

காட்சி

பொன்பூத்த தாமரை செங்குமிழ் நீலம்பொற் கோங்கரும்பு
மின்பூத்த காந்தளும் பூத்தன வேவெகுண் டோருக்கெல்லாங்
கொன்பூத்த வேற்கைக் குமார குலோத்துங்கன்
கோழிவெற்பில்
இன்பூத்த கற்பகக் காநடு வேயோ ரிளங்கொடிக்கே.

முடிவு:

தலைவிக்குணர்த்தல்

விரியுங் குழன்முடி செஞ்சாந் தணிமணி மேகலையுஞ்
சரியு மணியுந் தரியணாங் கேதரை மேற்றரி யார்சிரத்தை
யரியும் படைக்கைக் குலோத்துங்கசோழ னளகைவெற்பில்
பிரியும் பொருள்முற்றி மீண்டார்நி னன்பர்பொலங்கொடியே.

பொருள்வயிற் பிரிவு முற்றும்
குலோத்துங்கன் கோவை முற்றும்.

Kulothungan Kovai

Size: 21×33. Pages: 86. Lines: 40 on a page. Condition: old.

Note: The Ms. contains 511 kalithurais sung in praise of Kulothungan III, the Chola king.

384. குலோத்துங்கன் கோவை (நூல் எண் 171)

அளவு : 21×17. *வரிகள் :* 25.
பக்கங்கள் : 125. *நிலை :* பழமை.

குறிப்பு : 134a என்ற எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Kulothungan Kovai

Size: 21×17. Pages: 125. Lines: 25 on a page. Condition: old.

Note : Same as the previous one.

385. சங்கரமூர்த்தி கோவை (நூல் எண் 155)

அளவு : 21×33. *வரிகள் :* 29.
பக்கங்கள் : 23. *நிலை :* நிலமாக உள்ளது.

குறிப்பு : சங்கரமூர்த்தி என்பவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற நூல். இதில் 92 கலித்துறைகள் உள்ளன. இப்பிரதியில் காளமேகம் பாடிய சித்திரமடல், சமுத்திர விலாசம் என்ற நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

சங்கரமூர்த்தி கோவை
(காட்சி)

மின்பூத்த தாமரை காவிசெவ் வாம்பல் விரிந்தரும்பு
பொன்பூத்த கோங்கம் பொலிந்தொரு பூங்கொடி பூவுலகில்
முன்பூத்த கங்கைக் குலதிபன் சங்கர மூர்த்திநல்லூர்த்
தென்பூத்த சந்த வரைக்காவி னூடு திகழ்கின்றதே.

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

கோதறி வார்குலக் கன்னியென் றுயைக் குவளைக்கண்ணுற்
றூதறி வாயென்ற னக்குனைக் காட்டித் துயர்துடைத்த
மூதறி வாளங் குடநாடன் சங்கர மூர்த்திநல்லூர்
மாதறி வாளென்ற தெண்ணுங்கொல் லோமதி
வானுற்றதே.

Sankaramurthi Kovai

Size: 21×33. Pages: 23. Lines: 29 on a page. Condition: injured.

Note : The Ms. contains 92 kalithurais sung in honour of Sankaramurthi.

386. சங்கர மூர்த்தி கோவை (நூல் எண் 197)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 13. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 155இன் பிரதி இது.

Sankaramurthi Kovai

Size: 21×33. Pages: 13. Lines: 32 on a page. Condition: good.

Note : Copy of the previous item.

387. சசிவர்ணன் கோவை (நூல் எண் 203)

அளவு : 21×17. வரிகள் : 24.
பக்கங்கள் : 70. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : குளந்தைச் சசிவர்ணதேவர் என்பவர்மீது பாடப் பெற்ற நூல். குளந்தை என்பது சிவகங்கை. வண்டோச்சி மருங்கணைதல் என்னும் ஒரே துறையை அமைத்துப் பாடியது. மொத்தப் பாக்கள் 400.

தொடக்கம் :

நீர்கொண்ட மேக நிறங்கொண்ட மாலென நீதிகொண்டு
பார்கொண்ட கீர்த்திச் சசிவர்ண ராசன் பயில்குளந்தைச்
சீர்கொண்ட வண்டினங் காணடு நீதி தெரிந்திருந்து
மேர்கொண்ட மின்மலர்க் கூ ‑ தலின் மேவி யிருக்கைநன்றே.

முடிவு :

திருவாழி போன்று கவிக் கருள் வோன்முச் செகம்பரவ
மருவாழி யேந்திய மால்சசி வர்ணன் வளர்குளந்தைப்
பொருவாழி யன்ன விழியாள் குழலிற் பொருதளிகாள்
உருவாழி வாழியென் றேமிக வாழ்த்துமின் றெல்கிடைக்கே.
வண்டோச்சி மருங்கணைதலொருதுறைக்கோவை முற்றிற்று.
காளிமுத்துக் கவிராயராலியற்றியதாகக் கேள்வியுமுண்டு.

Sasivaranan Kovai

Size: 21×17. Pages: 70. Lines: 24 on a page. Condition: good.

Note : The Ms.c ontains 400 verses sung in honour of Sasivarna Thevar, chieftain of Sivaganga in Ramanathapuram district. Author: probably Kalimuthu Kavirayar.

388. சிரகிரிக் கோவை (நூல் எண் 220)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 85. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திரிசிராப்பள்ளியாகிய சிரகிரியில் எழுந்தருளியுள்ள இறைவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. இந்நூல் ஐயரவர்களால் செந்தமிழ்ப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டது. இப்பிரதியின் முதல் பக்கத்தில், 'பின் உள்ளவை சாலிவாடீசுவர ஓதுவா மூர்த்திகள் வீட்டு ஏட்டுப் பிரதியில் இருந்தன' என்று ஒரு வெண்பாவும் சில விவரங்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
சிரகிரிக் கோவை
காப்பு

சீர்பூத்த தார்மட்டு வார்குழல் பாகர் சிராமலைவாழ்
தார்பூத்த கொன்றை யணிதாயு மானவர் தந்திருத்தாட்
கேர்பூத்த கோவைத் தமிழ்மாலை பாட வெனக்கருளுங்
கார்பூத்த மும்மதச் செவ்வந்தி யானை கருத்துவந்தே.

முடிவு:

வாழி மறையவர் வானவர் ஆனினம் வாழிசைவர்
வாழி மதிதொறு மும்மாரி பெய்தருள் வான்முகில்கள்
வாழி மனுநெறி மன்னவர் நாவலர் வையமெல்லாம்
வாழி சிராமலை யெம்மா னுடன்மட்டு வார்குழலே. (457)

சார்வரிஞு தைமீ 15உ சிரகிரிக் கோவை எழுதி நிறைந்தன.

திருவாவடுதுறைப் பிரதியின் முடிவில் பின்னுள்ளவாறு எழுதப்பட்டிருந்தது: 'காலயுக்திஞு மாசிமீ 2உ சனி வாரமும் ரேவதி நக்ஷத்திரமும் திரிதியையும் கூடின சுபதினத்தில் சிரகிரிக் கோவை எழுதி நிறைந்தது. தெட்சிண கைலாஸபதி

ஸ்ரீ மாதுருபூதேசுவர சுவாமி பாதாரவிந்தமே துணை. குமர குருபரன் துணை.'

Siragirikkovai

Size: 21×33. Pages: 85. Lines: 28 on a page. Condition: good.

Note : The Ms. contains Siragirikkovai which has been edited and published by Dr. Iyer under Sentamil series. Siragiri is Tiruchirapalli. The kovai is in praise of the Lord there.

389. திருச்சிற்றம்பலக் கோவையார் (மணக்குடவர் உரை) (நூல் எண் 342)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 217. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையார் மூலமும் உரையும் உள்ள பிரதி இது. மணக்குடவருரை எனப் பென்சிலினால் எழுதப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்

திருவளர் தாமரை :
மதிவாணுதல் :

திருவளர் தாமரை: திரு - அழகு; வளர்தல் - மிகுதல். தாமரை: ஆகுபெயர். அழகு மிகுந்த தாமரைப் பூவையும். சீர்வளர் காவிகள்; சீர்-சிறப்பு. வளர்தல்-மிகுதல்; காவி - நீலோற்பலப் பூ; சிறப்பு மிகுந்த நீலப் பூக்களையும்...

முடிவு :

துணைவன் பிரியத்...

சுருட்டு செஞ்சடை வெண்சுடர் அம்பல வன்மலையத்து. நெறித்துச் சிவந்த திருச்சபையிலே, வெள்ளிய......

Tiruchitrambalakkovaiyar (Manakkudavar Urai)

Size: 21×17. Pages: 217. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contains commentary on Tirukkovaiyar sung by St. Manikkavachakar. There is a remark in pencil in the Ms: "Manakkudavar urai."

390. திருப்போரூர்க் கோவை (நூல் எண் 381)

அளவு : 21×17. வரிகள் : 14.
பக்கங்கள் : 170. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி திருப்போரூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மேல் பாடப்பெற்ற பிரபந்தமாகும். இந்நூல் சேதுபதியின் மந்திரி சோமசுந்தரம் பிள்ளையவர்களால் பாடப்பெற்றது. இப்பிரதியில் 455 பாடல்கள் உள்ளன. திருக்கழுக்குன்றக் கோவை ஆசிரியரும் இவரே. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

சீருறு போரூர்க் குமர னுரமெனுந் திண்கிரிமே
லேருறு கோவைத் தமிழ்மாலை சாத்த விலகுமதங்
காருறு மாரியிற் பெய்யுங் கரடக் கடாக்களிற்றி
னீருறு தாமரைத் தாடுணை யாக நிலைப்பிக்குமே.

முடிவு :

இருள்கொண்ட சிந்தையர் காணரும் போரூர்
இலங்கு செவ்வே
ளருள்கொண்டு சென்றறத் தாற்றினி விட்டு மளப்பரிய
பொருள்கொண்டு மன்னவ னீபோதல் கண்டுநம்
பொன்மகிழ்வாற்
றெருள்கொண்ட நல்லற மேன்மேல் வளர்தரச்
சிந்தித்ததே. (6)

பொருள்வயிற் பிரிவு முற்றும்.

ஆகச் செய்யுள் 455. காரூர் கண்ணருள் போரூர் முருகனை யோரூர் நகையினர் சீரூர் முதல்வரே.

Tirupporurkkovai

Size: 21×17. Pages: 170. Lines: 14 on a page. Condition: good.

Note : The Ms. contains kovai prabandham by Somasundaram Pillai, Minister to Sethupathi of Ramanathapuram; contains 455 verses in praise of Lord Muruga of Tirupporur in Chingleput district.

391. திருவாரூர் ஒருதுறைக் கோவை (நூல் எண் 405)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 59. நிலை : நல்ல நிலைமை.

குறிப்பு : திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமான்மீது வெறிவிலக்கல் என்னும் ஒரே துறையில் பாடப் பெற்றது. கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் இந்நூலின் ஆசிரியர். இப்பிரதியில் 398 பாக்கள் உள. 5-ஆம் பாடல் முதலிரண்டு அடிகள் இல்லை; 391-ஆம் பாடல் முற்றும் இல்லை.

தொடக்கம் :

உ

திருச்சிற்றம்பலம்

கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் செய்த திருவாரூர் வெறி விலக்க லொருதுறைக் கோவை.

திருவருள் போற்றிரு வாரூர்த் தியாகசிங் தாமணிமே
லொருதுறைக் கோவை யுரைக்கத் தருமன புத்தியெனப்
பெருகுங் கமலா லயத்திற் பரவைப் பிராட்டிக்கன்பர்க்
கருளும்பொன் மாற்றுரை யானை முகத்த னடியிணையே. (1)

முடிவு :

வாழ்கசெல் வத்திரு வாரூர் மனுமுறை மாமறையோர்
வாழ்க தியாக விநோதர்கொள் பூசை வளங்கள்பயிர்
வாழ்கவைஞ் ஞாறுகொத் தாந்திருக் கூட்டங்கள் வாழ்க வென்றும்
வாழ்கமெய் வாய்மை யழியாத வித்துறை வாழ்கவென்றே.

Tiruvarur Oruthuraikkovai

Size: 21×33. Pages: 59. Lines: 30 on a page. Condition: good.

Note : The Ms. contains Oruthuraikkovai on Lord Tyagaraja of Tiruvarur by Kizhvelur Guruswami Desikar; contains 398 verses.

392. திருவாரூர் ஒருதுறைக் கோவை (நூல் எண் 406)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 56. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : நூல் எண் 405-ஐப் போன்றதே. இப்பிரதி மிகவும் சிலமாக எழுத இயலாதவாறு காணப்படுகிறது.

Tiruvarur Oruthuraikkovai

Size: 21×33. Pages: 56. Lines: 30 on a page. Condition: injured.

Note : Same as the previous one.

393. திருவாரூர்க் கோவை (நூல் எண் 407)

(உ. வே. சா. அவர்கள் குறிப்புகளுடன்)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 237. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: திருவாரூர்த் தியாகேசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது இந்நூல். நாவலர் எல்லப்ப நயினார் அவர்களால் பாடப் பெற்றது; ஐயரவர்களால் 1937இல் பதிப்பிக்கப் பெற்றது. இந்நூலின் முதல் பக்கத்தில், 'சிவமயம். திருச்சிற்றம்பலம். திருவாரூர்க் கோவை. இஃது நாவலர் எல்லப்ப நாயினார் பாடியது. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் புத்தகம். நாராயணசாமி ஐயர் எழுதியது' என்றும், 2-ஆம் பக்கத்தில் 3 சிறப்புப்பாயிரச் செய்யுட்களும், வேழம் விடுதல் என்ற தலைப்பில் ஒரு பாடலும் காணப்படு கின்றன.

தொடக்கம் .

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
காப்பு
வெண்பா

வீறுதியா கப்பெருமாள் வீதிவிடங் கப்பெருமாள்
கூறுமகி மைப்பெருமாள் கோவைக்குப் — பேறுடனே
வாக்குதவு மைந்துகர வாரணமும் வானவரைக்
காக்குமயில் வாகனனுங் காப்பு.

முடிவு :

சேலேய் வயற்றிரு வாரூரர் செம்பொற் றியாகர்தண்டைக்
காலே யெனப்பொற் சிலம்பிடை யார்த்துக் கரியகண்டம்
போலே விளங்கிச் சடைபோல மின்னியப் பொற்சடையின்
மேலே யிருக்கு நதிபோல வாழ்கவிம் மேகங்களே. (500)

விளம்பி ஞு } திருவாரூர்க்கோவை முற்றிற்று
ஆடி மீ 14உ } தியாகருஜ சகாயம்.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கையெழுத்து.
காப்பு, சிறப்புப் பாயிரம்-2.
ஆகச் செய்யுள்-502.

107ஆவது பக்கத்தில் 189-ஆவது செய்யுள் தப்பாக எழுதியிருப்பதால் அந்த ஒரு செய்யுள் ஒழிக்க நிலுவைச் செய்யுள் 502.

Tiruvarurkkovai

Size: 21×33. Pages: 237. Lines: 32 on a page. Condition: good.

Note: The Ms. contains the kovai prabandham on Lord Tyagaraja, the presiding deity of Tiruvarur.

394. கீழ்வேளூர், குருசாமி தேசிகர் செய்த திருவாரூர் வெறிவிலக்கல் ஒருதுறைக் கோவை

(நூல் எண் 717)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 133. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : *இப்பிரதி நூல் எண் 405-இன் பிரதியாகும்.*

Tiruvarur Verivilakkal Oruthuraikkovai

Size; 21×33. Pages: 133. Lines: 20 on a page. Condition: good.

Note: This Ms. is the same as the previous one.

395. திருவாரூர்க் கோவை (நூல் எண் 408)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 172. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : *நூல் எண் 407-இன்படியே.*

Tiruvarurkkovai

Size: 21×33. Pages: 172. Lines: 30 on a page. Condition: injured.

Note: Same as the previous one.

396. திருவாரூர் மும்மணிக் கோவையுரை
(நூல் எண் 411)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள்: 19. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : திருவாரூர்த் தியாகேசப் பெருமான்மீது பாடப் பெற்ற மும்முணிக்கோவையின் முதல் 26 பாடல்களுக்கு உரை மட்டும் இப்பிரதியில் உள்ளது. இக் கோவை பதினோராந் திருமுறையில் உள்ளது. சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப் பெற்றது. அச்சானது.

தொடக்கம் : விரிகடல்...

விரிகடல் பருகியளறுபட்டாலன்ன - விரிந்த நீரினையுடைய கடல் குறைபடுத்து அளறுபட்டாற்போல, கருநிற மேகங்கள் முகடேறி - கரிய நிறத்தினையுடைய மேகம் மலையினுச்சியேறி. நுண்டுளி பொழிய - நுண்ணியதாகிய துளியைப் பொழிய.

முடிவு :

ஊரெலாம், உலகெலாம், பாரெலாமென்பன ஒருமையிற் பன்மை வந்த வழுவமைதி. மாந்துறை, மறைக்காடு சோணாட்டுத் திருப்பதிகங்கள். இதுவுந் தலைவி கூற்று.

திருவாரூர் மும்மணிக்கோவை, இது திருத்தொண்டத் தொகையுட் கூறப்படு முண்மைத் தொண்டருட் கழறிற்றறிவா ரெனப்படும் சேரமான் பெருமாள் வன்றொண்டரோடு வீதி விடங்கப் பெருமானைக் கண்டு திருவடி தொழுதவர் முன்னர் நம் பெருமான்மேற் பாடியது. இது புலவர் பாடும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறனுளொன்று. இதனை "அகவல் வெண்பா வகையெண் கலித்துறை தொகை முப்பது பெறச் சொற்றொடர் நிலையிற் கூறுதன் மும்மணிக் கோவையாகும்" என்னும் இலக்கண விளக்கப் பாட்டியற் சூத்திரத்தானு முணர்க.

Tiruvarur Mummanikkovai (Urai)

Size: 21×33. Pages: 19. Lines: 40 on a page. Condition: injured.

Note : The Ms. contains notes for the first 26 verses of Tiruvarur Mummanik kovai, sung by Cheraman Perumal Nayanar at Tiruvarur. It is includedin the 11th Tirumurai.

397. திருவொற்றியூர்க் கோவை (நூல் எண் 426)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 60. நிலை : மிகச் சிலமாக உளது.

குறிப்பு : திருவொற்றியூர் இறைவன்மீது பாடப்பெற்ற நூலாகும். 460 பாக்கள் உள. பிரதி சிதிலமாக உள்ளது.

தொடக்கம்:

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திருவொற்றியூர்க் கோவை
காப்பு

பூங்கதிர் கான்ற மருப்பும்வன் மூடிகப் போர்விலங்கும்
பாங்கெழு மன்னமும் பன்றியும் போலப் பவளவெற்பி
னோங்கிய வெந்தைபிரா........ கையுள்ளே
தாங்குபு சாற்றுந் தமிழ்க்கோவைக் கின்சொ றருகிற்குமே.

நூல்
முதலாவது
கைக்கிளை-காட்சி

நீர்கொண்ட தாமரை வேங்கையம் போது நிரந்தவில்வத்
தேர்கொண்ட காய்குமிழ் செய்தன்முன் பூத்தெழி லீன்ற
கொன்றைத்
தார்கொண்டவேணித் தியாகப் பிரானொற்றித் தண்சிலம்பின்
கார்கொண்ட காவகத் தோர்வல்லி யொல்கிக் கவின்றதுவே.

முடிவு :

வந்துழி மகிழ்ச்சி

மீதர வாபர ணந்தரித் தாதி வியனகர்வாய்க்
காதர மோட வரும்பெரு மான்கடைக் கண்ணருளா
மாதர வானிதி யாவும் பெருமணி மார்பகத்து
மாதர ளாவுந் தனந்தோ ளொன்ரு வென்னும்.

திருச்சிற்றம்பலம்
திருவொற்றியூர்க் கோவை முற்றிற்று.

12-3-1901. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் எழுதியது. காப்பு உள்பட.

Tiruvottriyurkkovai

Size: 21×33. Pages: 60. Lines: 28 on a page. Condition: much injured.

Note : The Ms. contains 460 verses sung in praise of the presiding deity at Tiruvotriyur, which is 6 miles north of Madras. Author not mentioned.

398. நெல்லை வருக்கைக் கோவை (நூல் எண் 538)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 14 நிலை : நல்ல நிலை.

குறிப்பு : *நெல்லையம்பதியாகிய திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள சிவபிரான்மீது உயிர்மெய் வருக்கத்தை முதலாகக் கொண்ட 100 பாக்களால் பாடப்பெற்ற கோவை என்னும் பிரபந்த நூல். ஆசிரியர் வேம்பத்தூராருள் ஒருவராகிய பெருமாளையர்.*

தொடக்கம் :

காப்பு
சிவமயம்

தேரோடும் வீதியெல்லாஞ் செங்கயலுஞ் சங்கினமு
நீரோ டுலாவிவரு நெல்லையே—காரோடு
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு.

முடிவு :

வெளவிய செவ்வி வடிவுடை யார்தம் மகிழ்ச்சியிற்பூ
வெளவிய சங்கமு மங்கல நாணு மணிக்குழையும்
வெளவிய கோலத்தர் நெல்வேலி நாதர் மனமகிழ
வெளவிய கோலமு நெல்லையும் வாழி மனஞ்சிறந்தே.

Nellai Varukkakkovai

Size: 21×33. Pages: 14. Lines: 33 on a page. Condition: good.

Note: The Ms. contains Nellai Varukkakkovai sung in praise of Lord Nellaiyappar of Tirunelveli by one Perumal Iyer of Vembathur.

399. நெல்லை வருக்கக் கோவை (நூல் எண் 466)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 19. நிலை : பழமை.

குறிப்பு : நூல் எண் 538-ஐப் போன்றதே இப்பிரதி.

Nellai Varukkakkovai

Size: 21×33. Pages: 19. Lines: 26 on a page. Condition: old.

Note : Same as the previous one.

400. பூவைக் கோவை (நூல் எண் 601)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 101. நிலை : பழமை.

குறிப்பு : பூவை என்பது சிறந்த தலம். கோட்டீசர் என்பது இறைவன் திருப்பெயர். முள்ளி நாட்டைச் சார்ந்தது என்று கோவைச் செய்யுட்களால் அறியப்படுகின்றது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. "பச்சைநதி பாயுமிடம்" என்று இடையே வருகின்றது. 469 பாக்கள் உள்ளன.

தொடக்கம் :

உ
பூவைக் கோவை
காப்பு வெண்பா

இருகொம் புடையா னியைந்த துணையென்று
மொருகொம் புடையா னுதவும்—விரிகொம்பின்
பூவைக்கோ வைச்செயல்போற் பூவைக்கோ வைத்துதிக்கும்
பூவைக்கோ வைக்குப் பொருள்.

நூல்-காட்சி

சீர்பெற்ற தாமரை பைங்காவி வெண்முல்லை சேயிலவ
மேர்பெற்ற காந்தளுங் கொண்டுவண் டார்பொன்
னிதழியம்பூந்
தார்பெற்ற செஞ்சடைக் கோட்டீசர் பூவைத் தமிழ்க்கிரிமேல்
வார்பெற்ற மின்கொடி யொன்றிவண் காவிடை
வந்துற்றதே

முடிவு : தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டு வந்து சொல்லல்.

விண்ணாடு தென்மலை மேற்குடி வாழிய மேகங்களே
பெண்ணா ரமுதைப் பிரியாது கூடவும் பெற்றனமாற்
பண்ணார்தென் பூவையங் கோட்டீசர்க் குற்ற பழவடியார்
கண்ணா யவர்மதியக் கையாய்ப்பெய் வாயினிக் காசினிக்கே.

பூவைக் கோவை முற்றும்.

Poovaikkovai

Size: 21×33. Pages: 101. Lines: 26 on a page. Condition: old.

Note : The Ms. contains kovai prabandham on Kotteesar of Poovai a sacred sthalam; contains 469 verses. Author not known.

401. மயூரகிரிக் கோவை (நூல் எண் 636)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 138. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : குன்றக்குடி என்னும் தலமே மயூரகிரி என்று வழங்குவதாகும். மயூரகிரி முருகன்மீது பாடப்பெற்றது இக் கோவை. இப்பிரதி மிகக் இலமாக உள்ளது. சர்க்கரைப் புலவர் குமாரர் சாந்துப் புலவரால் இயற்றப்பெற்றது. இந்நூல் அச்சானது.

தொடக்கம் :

உ

சிவமயம்

மயூரகிரிச் சுப்பிரமணிய சுவாமியவர்கள் பெயரில் கோவைப் பிரபந்தம்.

காப்பு

பூமான் மருவும் புயன்முருகன் விண்ணவர்கள்
கோமான் மயூரகிரிக் கோவைசொலத்—தாமுதவும்
பிந்தா வளமுகவன் பில்லார்க்குச் செய்யுமொரு
தந்தா வளமுகவன் தாள்.

காட்சி

பூமேவு பொற்பிடி சிங்கங் களிறம் புலிபசும்பூங்
காமேவு மான்கொண் டொருதோகை யன்னதின்
கண்ணுற்றதாற்
றேமேவு முல்லை மருதேந்த்ரன் போற்றுஞ்செவ் வேள்கமல
மாமே வியகுஞ் சராசனச் சோலை மயில்வரைக்கே.

முடிவு :

வாழி மயில்வரை வள்ளிதெய் வானை மயில்கண்மயில்
வாழி பொருமயில் வாழிகை மேற்கொடி வாழிபதம்
வாழி யருள்சண் முகம்பன் னிருசெங்கை வாழிசெவ்வேள்
வாழி தலத்தொடு தானிகர் வாழிய வாழியவே.

மயூரகிரிக் கோவை முடிந்தது.

காலயுக்தி வருடம் தைமீ 26உ சுக்கிரவார நாள் சர்க்கரைப் புலவரவர்கள் குமாரன் சாந்துப்புலவரவர்கள் மயூரகிரிக் கோவை பாடி யரங்கேற்றினது.

மயூரகிரியான் துணை.

Mayuragirikovai

Size: 21×33. Pages: 138. Lines: 32 on a page. Condition: injured.

Note : The Ms. contains kovai on Lord Subramanya of Mayuragiri which is Kunrakkudi in Ramnathapuram district. This has been written by Santhu Pulavar, son of Sarkkaraip-pulavar. Printed.

402. மிதிலைப்பட்டி ஆண்டவராயன் கோவை

(நூல் எண் 631)

அளவு : 21×33. *வரிகள்* : 23.
பக்கங்கள் : 114. *நிலை : இலமாக உள்ளது.*

குறிப்பு : *மிதிலைப்பட்டி என்பது இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த ஊர். இந்நூல் 503 பாடல்களைக் கொண்டது. இந்நூலாசிரியர் மல்லையூர்த் திருச்சிற்றம்பலக்கவிராயர். மிதிலைப் பட்டிக்கு அருகில் உள்ளது மல்லை. அச்சான விவரம் தெரியவில்லை.*

தொடக்கம் :

உ

சிவமயம்

மிதிலைப்பட்டி ஆண்டவராயன் கோவை

காட்சி

சீர்கொண்ட தாமரை செவ்வாம்பல் நீலம் சிறந்தவள்ளல்
தார்கொண்ட சைவலம் தாங்கியொன் னார்கள் தனத்தை வென்றே
பார்கொண்ட மல்லையி லாண்டவ ராயன் பனிவரைமேற்
கார்கொண்ட காவி லொருபூங் கொடியிரு கண்கண்டதே.

முடிவு:

தலைவிக்குணர்த்தல்
காளங் குயிலிசைக் கத்தென்ற லேறிக் கதித்தசக்ர
வாளம் புகழ்மல்லை யாண்டவ ராயன் மணிவரைமேல்
வேளம் பிணையெய்யும் வேனிலென் றேபொருள்
மேற்செலன்பர்
தாள நிகர்கொங்கை வந்தார் வருத்தந் தவிர்த்தருளே. (503)

Mithilaippatti Andavarayan Kovai

Size: 21×33. Pages: 114. Lines: 23 on a page. Condition: injured.

Note: This Ms. contains 503 verses written by Tiruchitrambalakkavirayar of Mallaiyur near Mithilaippatti in Ramanathapuram district.

403. மிதிலைப்பட்டி ஆண்டவராயன் கோவை (நூல் எண் 723a)

அளவு: 21×33. வரிகள்: 21.
பக்கங்கள்: 208. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இது நூல் எண் 651-இன் பிரதி.

Mithilaippatti Andavarayan Kovai

Size: 21×33. Pages: 208. Lines: 21 on a page. Condition: good.

Note: The Ms. is the same as the previous one.

404. விசயரகுநாதர் கோவை (நூல் எண் 697)

அளவு: 21×33. வரிகள்: 24.
பக்கங்கள்: 79. நிலை: இலமாக உள்ளது.

குறிப்பு: இந்நூல் இராமநாதபுரத்தில் இருந்த சேதுபதிகளுள் சிறந்து விளங்கிய விசயரகுநாத சேதுபதி என்பார்மேல் பாடப்பெற்ற ஐந்திணைக் கோவையாகும். அச்சானதாகத் தெரியவில்லை. இந்நூலில் 362 பாடல்கள் உள்ளன. இப்பிரதியில் இராமநாத சேதுபதி என்பவர்மீது இரண்டு நீண்ட பாடல்கள் உள்ளன. இவை எழுத முடியாத நிலையில் சிதிலப்பட்டுக் காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ

சிவமயம்

விசையரகுநாதன் ஐந்திணைக் கோவை

இணைக்கும்ப விம்ப முலையார்க்கு மாலுல கேழும்வெற்றி
பணைக்கும் விசைய ரகுநாத சேது பதிபுயமீ
தணைக்கும் திணைப்பைந் தமிழ்த்தேவைக் கோவைக்கோ
ராறுமுகந்
துணைக்குஞ் சரத்தைங் கரப்பிள்ளை யென்னுளுந்
துணைசெய்யுமே.

காட்சி

சீர்மன்னு பைங்கடல் வெண்மதி தண்சங்கந் திண்சிகர
னீர்மன் னிடுஞ்சுழி கோவைகொண் டேமனு நீதியினால்
பார்மன் விசைய ரகுநாத சேது பதிவரைமேல்
கார்மன்னு சோலை யகஞ்சேர் கொடிநின்ற காட்சிநின்றே.

முடிவு :

கண்டோர் இரக்கம்

வெற்றி விசைய ரகுநாத னீள்புகழ் வீரைநகர்
சுற்றி யெழும்வையை நாடனை யாய்சுதை பெற்றதா
னெற்றி யனலுங்கைத் தீயுஞ்செங்கை நெருப்புமொன்றாய்
பற்றி யழலுஞ் சுரஞ்செல்வோ யென்ன பாவமிதே. (362)

Vijayaraghunathar Kovai

Size: 21×33. Pages: 79. Lines: 24 on a page.
Condition: injured.

Note : The Ms. contains 362 verses sung in praise of Vijaya Raghunatha Sethupathi of Ramnad. Author not known.

405. விஜயரகுநாதர் கோவை (நூல் எண் 624b)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 60. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி நூல் எண் 697-இல் உள்ளபடி.

Vijayaraghunathar Kovai

Size: 21×33. Pages: 60. Lines : 28 on a page.
Condition: good.

Note : Same as the previous one.

406. வெங்கைக் கோவை உரைக்குறிப்பு(நூல் எண் 700)

அளவு : 21 × 17. வரிகள் : 28.
பக்கங்கள் : 134. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வெங்கனூர் என்னும் தலமே வெங்கை. ஆசிரியர் சிவப்பிரகாசர். இப்பிரதியில் வெங்கைக் கோவை முதல் 134 பாக்களுக்கு உரைமட்டும் உள்ளது.

தொடக்கம் :

காப்பு

காயா மலர்போலும் கரியநிறத்தையுடைய வெம்பிராட்டியும் மலையரசனுக்கு மகளாதலாற் பாவை போல்பவளும் வளர்க்கப் படுகின்ற கிள்ளையை முன்கையிலுடையவளுமாகிய உமாதேவி ....இப்பொருள் கொள்ளுங்கால் கொம்பென்பது கொம்ப ரென ஈற்றுப் போலியாய் வந்தது.

பாட்டு—க

பூவையுஞ் செழிய தித்திப்புள்ள கனியையும் அமிர்தமிருக் கிற இரண்டு இடங்களையுங் கொண்டு மீன்களையும் தன்னிடத்தே வைத்துக்கொண்டு இடபவாகனத்தைச் செலுத்துகின்ற வழகின ராகிய திருவெங்கை வாணரது மலையினிடத்தே மலர்களைச் சொரிகின்ற சோலையின் கண்ணே யெனக் கெதிர்ப்பட்டது ஆயதாகிய வொருமணி யென்றவாறு.

முடிவு :

பாட்டு 134

நெருங்குத லுண்டாகிய கச்சையுடைய முலைகளையுடைய வளே! பிராமணர்கள் சொல்லப்பெற்ற சொல்லாகிய 'பா'க்களைக் கொண்ட வெங்கை புரேசர் மலையிடத்தே பூங்கொத்துக் களிலுண்டாகிய தேனைக் கவர்கின்ற வண்டுகளிசை பாடப் பெற்ற இளங்கொடியாகிய பெண்ணுனவள் மலர்கள் பூத்த கொம்பாகிய கணவனைச் சேர்ந்தாடுகின்ற சோலையிடத்தே நாம் மலர் கொய்யப் போவோம் வாவென்றவாறு. இளங்கொடிப் பெண் கொம்பாகக் கொழுநனொடாடிய சோலை யெனவே நீயுந் தலைவனோடாடுதற்கதுவே யிடமென்று குறிப்பிக்கப்பட்ட தாயிற்று.

Vengaikkovai (Notes)

Size: 21×17. Pages: 134. Lines: 28 on a page. Condition: good.

Note : The Ms. contains only notes for the first 134 verses of Vengaikkovai by Sivaprakasar.

407. வெங்கைக் கோவையுரை (இரண்டு பிரதிகள்)

(நூல் எண் 701, 702)

அளவு : 21 × 17. வரிகள் : 15.
பக்கங்கள் : 78 + 25. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : இப்பிரதி நூல் எண் 700-இன் பிரதியாகும். உரை வைப்பு முறை மாறி இருக்கிறது. 702-ஆம் எண்ணுள்ள பிரதியின் இறுதியில் 1-134 பாடல்களுக்கு உரையின் பக்க அட்டவணை உள்ளது. பிரதி மிகவும் சிலமாக இருப்பதால் தொடக்கம். முடிவு எழுத இயலவில்லை.

Vengaikkovai (Notes)

Size: 21×33. Pages: 78+25. Lines: 15 on a page. Condition: injured.

Note: Same as the previous one. As the Ms. is in an injured condition details could not be given.

408. இராகவ சதகம்

(நூல் எண் 63)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 14. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இந்நூல் இராமபிரானைப்பற்றிய துதியாக 100 கட்டளைக் கலித்துறைகள் அமைந்தது. இடையே பல பாடல்கள் இல்லை. இராகவனே என ஒவ்வொரு பாடலும் முடிவடைகின்றது.

தொடக்கம் :

காப்பு

சீரார் இராகவற்குச் செந்தமிழி ுற்சதகந்
தாராக யான்றொடுத்துச் சாத்திடுவே—னேராக
வேதமுதற் பல்கலையின் மெய்ம்மையுணர் மாருதியின்
பாதமலர் போற்றிப் பணிந்து.

நூல் :

பூமேவு கற்பகப் பொன்னகர் ஆளும் புரந்தரனும்
தேமேவு பூவணை வாழ்பர மேட்டியும் தேவர்களும்
பாமேவு மெய்ப்புகழ் பாடித் தொழுமுன் பதாம்புயத்தி
லேமேவு மன்படி யேற்கருள் வாயெம் மிராகவனே.

முடிவு :

............புரமென் றுரைக்கு மயோத்தி புரத்தினெஞ்சர்
.........காதனத்தின் மலமாகுந் திமிரமதை
.........மெய்ஞ்ஞான மெனுந்தீப மோங்க வருளினொடு
.........ளையாள்வ தென்றே நீயெம் மிராகவனே.

இராகவ சதகமுற்றும்.

Raghava Satakam

Size: 21×33. Pages: 14. Lines: 28 on a page. Condition: injured.

Note : The Ms. contains 100 kattalaikkalithurais of the Satakam sung in praise of Lord Rama. Each poem ends with the word 'Raghavan.' Author not known.

409. கோகுல சதகம் (நூல் எண் 193)

அளவு: 21 × 33. வரிகள் : 21.
பக்கங்கள் : 43. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் கண்ணன் குடி கொண்டருளிய கோகுலத்தில் இருந்தவர்களின் பெருமையைச் சொல்லும் கட்டளைக் கலித்துறைகள் அடங்கியது. இறுதியில் சில தனிப் பாடல்கள் ஆயர்களைப்பற்றி உள்ளன. இப்பிரதியில் திரிகூடத் திரிபந்தாதி 52 கலித்துறைகள் (10 பக்கங்கள்) உள்ளன.

தொடக்கம்:

உ

கோகுல சதகம்

காப்பு

திருமேவும் பாடியில் வாழ்வோர்கண் மீதிற் சிறக்கவுமே
யுருமேவு கோகுல மேன்மைச் சதக முரைதமிழ்க்கு
மருமேவு முல்லை யணியும் பிரானண்ட வைப்பையெல்லாங்
கருமேவு முந்தியிற் காத்தன கண்ணன்பு காப்பதுவே.

முடிவு :

சங்கத்தை வென்றவர் மாங்கா யுதிரத் தமிழுரைத்தோர்
துங்கக் கயேந்திர மோட்சமு மாயிரஞ் சொல்லவல்லோர்
எங்கட் கிறைமகிழ் பாக வதமுமே மூாயிரமாய்க்
கொங்குற்ற வாணி கடாக்ஷமிற் செய்தவர் கோகுலரே. (100)

Gokula Satakam

Size: 21×33. Pages: 43. Lines: 21 on a page. Condition: good.

Note: The Ms. contains hundred verses describing Gokulam and the leelas of lord Krishna. Author not known.

410. செயங்கொண்டார் வழக்கம் (நூல் எண் 261)

அளவு: 21 × 33. வரிகள்: 23.
பக்கங்கள்: 160. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இதிகாச புராண வரலாற்றுக் கதைகளை மேற்கோளாகக் கொண்டு பழமொழி வாக்கியங்கள் ஈற்றில் அமைய இராமநாதபுரம் மாவட்டம் நேமநகரில் எழுந்தருளியுள்ள இறைவனுராகிய செயங்கொண்டாரை முன்னிலைப்படுத்தி நூறு விருத்தப் பாக்களால் செயங்கொண்டார் வழக்கம் என்னும் பெயரிலமைந்தது இந்நூல். இந்த நூலின் ஆசிரியர் முத்தப்பச் செட்டியாராவார். இப்பிரதியில் 78 பாடல்களும் உரையும் உள்ளன. அபூர்த்தி. அச்சானது.

தொடக்கம்:

உ

செயங்கொண்டார் வளக்கம் பாடுவான் முத்தப்ப செட்டியாரவர்க்குக் குன்றக்குடி அப்பாப்பிள்ளையவர்கள். கணபதியுஞ் சரசுபதியுங் குருவே துணை.

செயங்கொண்டார் வளக்கம்

பாயிரம்

சீர்பொருந்துந் தென்னிமையச் செயங்கொண்ட
சோளீசர் திருப்பே............
...பொருந்து..............பார்மாலை
தனிலுலகப் பழமைச் சொல்லை
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
புவியிலுள்ளோ ரிசைந்து கேழ்க்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
கணபதிதாள் காப்புத் தானே. (1)

முடிவு:

அந்தக் குறிகண்ட மாத்திரமே சன்னுசி ரூபமாக வந்த ஈசுபரருக்கு இருந்த ஆசனத்தின் பேரிலே இந்திரியங் கவிதமாகிவிட்டது. ஈசுப......... (78)

Jayamkondar Vazhakkam

Size: 21×33. Pages: 160. Lines: 23 on a page. Condition: good.

Note : The Ms. contains 78 stanzas about the god of Jayamkondar of Nemam.

411. சோழமண்டல சதகம் (நூல் எண் 266)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 32. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் சோழ மண்டலத்தின் பெருமையையும் அம்மண்டலத்தில் வாழ்ந்த பெருமக்களின் அருஞ் செயல்களையும் அறுசீர் விருத்தப் பாவால் சொல்வது. வரலாற்றுக் குறிப்புக்களை உடையது. இப்பிரதியில் 96 பாடல்கள் உள்ளன. இறுதியில் தனியே நூலைப்பற்றியும் அரங்கேற்றுதலைப்பற்றியும் 3 பாடல்கள் உள்ளன. ஆசிரியர் வேளூர் ஆத்மநாத தேசிகர் என்றும், காலம் கி.பி. 1650—1728க்கு இடைப்பட்ட காலமாக இருக்கலாம் என்றும் தெரிகின்றது. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
சோழமண்டல சதகம்
காப்பு

திருவளர் வேளாண் செல்வச் செழுங்குடி மிகுந்து நாளும்
வருவளந் தழைத்த சோழ மண்டல சதகம் பாட
தருகர மைந்து மைந்துந் தாழ்மத மூன்று மூன்று
முருவளர் முக்க ணைவா யோங்கலை யுன்னி வாழ்வாம்.

முடிவு :

கம்பனுங் கூத்தனும் புகழேந்தி யும்பண்டு
கவிராச ரிருந்த நாளில்
கவிராச னிவனென்று புகழ்பெற்ற குருராய
காளையா மெழுது மோலை

இம்பர்புகழ் சகலகுண சம்பன்னர் கொழுமீதி
யிற்புவி புரந்து வளர்வோர்
எண்ணரிய சோழமண் டலம்வாழும் வேளாளர்
யாவரும் மெதிர்ந்து காண்க

வம்பர்புகழ் சூதமா முனிசுந்தர மூர்த்தியு
மன்னியர் சங்கத்துளோா
ருயர்கம்பர் பொய்யா மொழிப்புலவ ரௌவையா
ருரைத்திடுங் கீர்த்தி முறையே
யம்புவியின் மிக்கதாஞ் சோழமண் டலசதக
மாயிர முகத்துரைத்தோ
மாயிரம் பொன்பரிசு வெகுமான வரிசைசெய்
தவேரு மிகவாழ்கவே

சோழ மண்டல சதகம் முற்றும்.

விளம்பி வருஷம் பங்குனி மாதம் 18-ந்தேதி பின்னத்தூர் — நாராயணசாமி ஐயர் கையெழுத்து.

Chozhamandala Satakam

Size: 21 × 33. Pages: 32. Lines: 30 on a page. Condition: good.

Note: The Ms. contains 96 verses of Cholamandala Satakam written by Velur Atmanatha Desikar of the 17th c entury. Printed.

412. சோழமண்டல சதகம் (இரண்டாம் பிரதி) ஐயர் திருத்தமும் குறிப்பும் (நூல் எண் 267)

அளவு : 21 × 33. வரிகள் : 30
பக்கங்கள் : 29. நிலை : சிலமாக உளது.

நூல் எண் 266-இல் கண்ட குறிப்புக்களே.
இப்பிரதியில் இரண்டு பிரதிகள் சிலமாக உள்ளன.
இவற்றின் பிரதியே நூல் எண் 266 ஆகும்.

Chozhamandala Satakam

Size: 21×33. Pages: 29. Lines: 33 on a page. Condition: injured.

Note: Same as the previous one, with Dr. Iyer's notes.

413. திருவேங்கடநாத சதகம் (நூல் எண் 431)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 19. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : திருவேங்கடநாதன் என்னும் வள்ளலைப் புகழ்ந்து பாடிய நூல் இது. இப்பிரதியில் எண்சீர் விருத்தத்தில் 102

பாக்கள் உள்ளன. 103ஆம் பாடல் முதற் சிருக்குமேல் இல்லை. அபூர்த்தி. அச்சில் உள்ள பிரதிக்கு வேறுபட்டது. அந்தாதித் தொடையில் அமைந்தது.

தொடக்கம் : காப்பு எழுத இயலவில்லை.

நூல் :

பொன்னாரும் படைத்திகிரி வலவனடி போற்றும்
பூரணனே நினதுமலர்ச் சேவடிகள் வாழ்த்தி
நின்னுமம் திகழ்சதக விசைத்தமிழ்அந்தாதி
நிகழ்த்துவான் விருப்புற்றே னீசனே யதனு
லென்னார்வம் நன்கினிது முடிந்தருள வேண்டு
மெனையுடையாய் தமிழ்த்திருவேங் கடநாத தேவ
சொன்னவ லோர்க்கரசே யெனதுளத்து னுறையுஞ்
சுந்தரனே யென்றென்று துணையேயென் திருவே.

முடிவு :

சொல்லருமெய்ப் புகழ்நிரின் சரணடையா ளமியான்
தோன்றுமந்நா ளே முடிமேற் பொறித்திடப்பெற் றேனின்
மல்லவிரும் புவியோர்நின் னுமமெடுத் தோதி
மற்றிவர்க்கிங் கிவன்பழைய தொண்டனெனப் பெற்றே
னல்லவுனைத் துணையாய்ப்பெற் றேனதனுற் குருகை
நகர்க்கரசே தமிழ்த்திருவேங் கடநாத தேவே
யெல்லையில்வல் வினைதொலைத்தெ னுளங்குடிகொண் டானே
யினியஞ்சேன் வெம்மறலிக் கெனக்கவ னஞ்சுவனே.

Tiruvenkatanatha Satakam

Size: 21×33. Pages: 19. Lines: 24 on a page. Condition: injured.

Note : The Ms. contains 102 verses in anthadi thodai sung in praise of one Thiruvenkatanathan, patron; incomplete; different from the one printed. Author not known.

414. தொண்டை மண்டல சதகம் (நூல் எண் 467)

குறிப்பு : பிரதி மிகச் சிலமாக, எழுத முடியாத நிலையில் உள்ளது. அச்சானது.

Thondaimandala Satakam

Note : Ms. very defective. Printed.

415. பாண்டி மண்டல சதகம் (நூல் எண் 585)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பாண்டி மண்டலச் சிறப்புக்களைக் கூறுவது: வரலாற்றுக் குறிப்புக்கள் மலிந்தது. இது கலித்துறை யாலானது. 99 கலித்துறைகளே இப்பிரதியில் உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

உ
கடவுள் துணை
பாண்டி மண்டல சதகம்
காப்பு
விநாயகக் கடவுள்
அறுசீரடி யாசிரியவிருத்தம்

திங்கண்மும் மாரி பெய்யத் தென்னவன் செங்கோ லோங்க
மங்கலம் பொலியும் பாண்டி மண்டல சதகம் வாழச்
சங்கமா மதுரை மூதூர்ச் சங்கரர் சடையின் மீதிற்
கங்கையாள் பெற்ற சித்திக் கணபதி காப்புத் தானே. (க)

முடிவு :

வளங்கொ ளரிய நைநாரத் தையாந் தொண்டை
மண்டலத்தை
விளங்கும் வடமலை தென்காரைக் காட்டை மிகவுயர்த்தார்
நளம்பெறு மையம் பெருமாள்தென் பாண்டிநன்
னாட்டினில்வந்
துளங்கொள வோங்கிய வேளாளர் தம்மை
யுயர்த்தினனே. (99)

முற்றிற்று.

Pandimandala Satakam

Size: 21×17. Pages: 24. Lines: 18 on a page. Condition: good.

Note : The Ms. contains 99 kalithurais describing Pandimandalam. Printed.

416. பாண்டி மண்டல சதகம் (நூல் எண் 586)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள்: 15. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : முதல் தொடங்கி முடிவு வரை எண் 585இன் படியே உள்ளது.

Pandimandala Satakam

Size: 21×33. Pages: 15. Lines: 32 on a page. Condition: good.

Note : Same as the previous one.

417. பாண்டி மண்டல சதகம் (நூல் எண் 587)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 27. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: குறிப்புக்கள் முதலியன நூல் எண் 585 இன்படியே உள்ளன. இப்பிரதியில் உள்ள 88, 100 ஆகிய இரண்டு பாடல்கள் முன்னிரண்டு பிரதியில் இல்லை. அச்சானது. முதற் பக்கத்தில்,

உ
சிவமயம்
கணபதி துணை
மதுரை ஐயம் பெருமாள் ஆசிரியர் இயற்றிய
பாண்டி மண்டல சதகம்
ஸ்ரீகாழிக் கண்ணுடைய வள்ளல் சந்தானத்து ஸ்ரீமுத்துச் சட்டைநாத வள்ளலவர்கள் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துத் தர
வைத்தீசுவரன்கோவில்
காராள சற்குணசபை ஆசிரியர்
ஸ்ரீ அ.பொ. இராமையாப்பிள்ளையவர்கள் விரும்பியவண்ணம் ஸ்ரீகாழி வித்துவ சிகாமணி ப. அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை அவர்களால்
சீர்காழி ஸ்ரீ அம்பாள் பிரசில்
அச்சிடப்பெற்றது
1932.

பிரதி ருளா] [காபிரைட்

என்ற குறிப்பும் இறுதியில் பச்சையம்மன் பதிகம் என்பதும் காணப்படுகின்றது.

முடிவு :

வக்கை நகராளு மாட்கொண்டா னைந்தா மறையெனவே
யெக்கணுஞ் சொல்பா ரதஞ்சனி யூர்வில்லி யேந்திசையோன்
தக்க தமிழிசை யாற்பாடச் செய்தேயித் தாரணியில்
மிக்க பரிசு கொடுத்ததும் பாண்டியன் மண்டலமே. (88)

அங்கமும் வாழச் சுரர்வேத மந்தணர் ஆப்பெருகச்
செங்கையிற் கோல்செலுத் தும்நல்ல தம்பி சிறக்கும்நல்ல
கங்கா குலபதி முன்னே யிசையாரும் காதைதன்னை
மங்களமாய்க்கேட் டவர்வாழி பாண்டியன் மண்டலமே. (100)

Pandimandala satakam

Size: 21×17. Pages: 27. Lines: 18 on a page. Condition: good.

Note : Same as the previous one but verses 88 and 100 copied in this Ms. are not found in the previous ones.

418. மாணிக்கமலை நாதர்பேரில் திருத்தொண்டர் சதகம் (நூல் எண் 643)

அளவு : 21×33. வரிகள் : 39.
பக்கங்கள் : 37. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மாணிக்கமலை என்பது வாட்போக்கி அல்லது இரத்தினகிரி. ஒவ்வொரு பாடலும் மாணிக்க மலைநாதனே என விளித்துத் திருத்தொண்டர் பெருமைகளைக் கூறுகின்றது.

திருப்பாண்டிக் கொடுமுடி மலைக்கொழுந்துக் கவிராயர் என்பவரால் பாடப்பெற்றது.

தொடக்கம் :

மாதிநொரு பாகர்திரு மாணிக்க மாமலையார்
மீதிலன்பர் பேறுகொண்ட மெய்ச்சதக—மோதவுமே
பண்ணிலகுங் கங்கையருட் பாலனென வாழ்மூன்று
கண்ணிலகு முன்னவன்ருள் காப்பு.

நாயனுர் தொகை விபரம்

வேதியர்கள் பதின்மூவர் சைவமறை யோர்நால்வர்
மிகுமருத்து வரில்ஒருவர்
வேந்தர்களி லறுவர்குறு நிலமன்ன ரைவர்புகழ்
விரவுதன வணிகரைவர்
நீதில்வே ளாளர்பதின் மூவர்குயவர் கள்வேடர்
திகழ்பாணர் கடைஞர்செக்கார்

செய்யவீ மூவர்வண் ணூர் பரதர்சா லியர்தனிற்
செப்புமோ ரொருவர்மிக்க
நீதிசெறி யிடையர்களி லிருவர்மர பறியார்
நிகழ்ந்தபதின் மூவரென்றும்
நீணில மதிற்றொண்டர் தாமெனுந் தொகையாக
நீடுமறு பத்துமூன்று
மாதவர் பணிந்திடப் பாதமலர் தந்துமுவன்
வந்தடிமை கொண்ட கைலை
வாசனே ராசலிங் கேசனே சிவதைநகர்
மாணிக்க மலைநாதனே.

முடிவு :

கருணைபெறு தொண்டைநா டுயர்கச்சி ஞானப்ர
காசதே சிகனைவாழ்த்துங்
கங்கா குலன்மயே சுரர்தனிற் கச்சிசொற்
கவிஞன் மலைக்கொழுந்தன்
தருணமிகு பன்னிரு நகர்க்குளனை வோருமே
தங்கள் தமிழ் வலஎன்றுதான்
தக்கமா ணிக்கமலை யீசர்மேல் நற்றொண்டர்
சதகஞ் சொலப் புகல்வதால்
பொருண்மயம் பெறுதிருத் தொண்டர்பணி சதகம்
புகன்ற சொல் மெய்ப்புகுந்தும்
பொற்புடன் கேட்போர் படிப்போர்க ளெழுதுவோர்
பூதலம் புகழ வாழ்வார்
.... சிவதையிற்றனிகர் சைவமறை
யோர்வாழி, பன்னிருந்தர் வாழி
மலையமை யருள்வாழி மாணிக்கமலை
வள்ளல் பூங்கழல் வாழியவே.

Manikkamalainatharperil Tiruthondar Satakam
Size: 21×33. Pages: 37. Lines: 39 on a page.
Condition: good.

Note : The Ms. contains a satakam relating to Manikkamalai, which is also known as Vatpoki or Ratnagiri. Author: Malaikkozhundu Kavirayar of Pandikkodumudi.

419. மிழலைச் சதகம் (நூல் எண் 652)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 6. நிலை : இலமாக உளது.

குறிப்பு : மிழலை என்பது பாண்டிநாட்டைச் சார்ந்த தலம்.
200 ஆண்டுகட்கு முன்பு சாந்துப் புலவர் மகன் சர்க்கரைப்

புலவர் பாடிய நூல் இது. மிழலை நகரைப்பற்றியும், அந்நகர்த் தலைவரைப்பற்றியும் பாடிய 100 பாக்கள் கொண்டது. இப் பிரதியில் 40 பாடல்களே உள. பிரதி மிகவும் சிலமாக உள்ளது. கடைசிப் பக்கத்தில் இந்நூலாசிரியரைப்பற்றிய விவரங்கள் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
மிழலைச் சதகம்

பிதிராத கங்கை குலஞ்சேர் மிழலைப் பெரும்பதிவா
ழதிரூப யோக ரவர்மேற் சதகமுண் டாக்குதற்கே
கதிரேறு மின்பக் குருந்தீசர் பாலெந்தக் காலமுறை
முதிராத செப்பிளங் கொங்கையோ கார்பிகைமுன்னிற்பளே.

முடிவு :

ஈரடிக் குந்தமிழ்ப் பாவால் விளங்கிய வீரிரண்டாஞ்
சீரடிக் கும்பொருள் கண்டோர் மிழலைச் செழும்பதியார்
போரடிக் கும்பொழு தப்போழ் திடபங்கள் போமடிக்கு
ளோரடிக் காயிரம் பொன்றுன் கொடுப்பினு மொப்பல்லவே.

Mizhalai Satakam

Size: 21×33. Pages: 6. Lines: 28 on a page. Condition: injured.

Note : The Satakam consists of 100 verses written by Sakkarai Pulavar, son of Santhu Pulavar. The Ms. contains only 40 verses describing Mizhalai of Pandya Nadu.

420. மிழலைச் சதகம் (நூல் எண் 653)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 8. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : எண் 652இன்படி.

Mizhalai Satakam

Size: 21×33. Pages: 8. Lines: 28 on a page. Condition: good.

Note : Same as the previous one.

தூது

421. அழகர் கிள்ளைவிடு தூது (நூல் எண் 48)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 24. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மதுரைக்கு அண்மையிலுள்ள திருமாலிருஞ் சோலைமலை சௌந்தரராஜப் பெருமாள்மீது கிளியைத் தூதாக விடுப்பதாக அமைந்தது. இது காப்பு வெண்பா ஒன்றையும், 239 கண்ணிகளையும் உடையது. இதன் ஆசிரியர் பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை. இந்நூல் அச்சானது. டாக்டர் ஐயரவர்களால் 1938 - ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ

திருமாலிருஞ்சோலை மலை
அழகர் கிள்ளைவிடு தூது

காப்பு

தெள்ளு தமிழழகர் சேபதிவாழ் வார்மீது
கிள்ளைவிடு தூது கிளத்தவே — பிள்ளைக்
குருகூரத் தானேசங் கூர்கமுகி லேறுங்
குருகூரத் தானேசங் கூர்.

முடிவு :

..............................—நீதி
யடுப்பவர் யாவர்க்கு மாடித் தியாகங்
கொடுப்பவ னில்லையென்று கூறுன் — றடுக்கும்
மருமாலை நீக்கு மழகன் புயத்து
மருமாலை நீவாங்கி வா.

அழகர் கிள்ளைவிடு தூது முற்றிற்று.

Thoothu

Azhagar Killaividu Thoothu

Size: 21×17. Pages: 24. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. contains 239 kannis of Azhagar Killai Vidu Thoothu sung in praise of Sundararaja Perumal of Thirumalirunjolai (Alagar Koil near Madurai). Author: Palaipattadai Chokkanatha Pillai. Edited and published by Dr. U. V. Swaminatha Iyer in 1938.

422. அழகர் கிள்ளைவிடு தூது (அட்டநாகபந்தப் பாடலிலக்கக் குறிப்பு) (நூல் எண் 49)

அளவு : 21 × 33. வரிகள் : 27.
பக்கங்கள் : 17. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 48ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றதே. 31 கண்ணிகள் அடங்கிய முதலிரண்டு பக்கங்கள் இல்லை. இப்பிரதியில் கடைசி 3 பக்கங்கள் அட்டநாகபந்தப் பாடலிலக்கக் குறிப்பு என்ற பகுதி காணப்படுகின்றது.

Azhagar Killaividu Thoothu

Size: 21×33. Pages: 17. Lines: 27 on a page. Condition: good.

Note : Same as the previous one. First two pages consisting 31 kannis wanting.

423. கச்சியப்பதேசிகர் நெஞ்சுவிடு தூது (நூல் எண் 104)

அளவு : 21× 17. வரிகள் : 21.
பக்கங்கள் : 54. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : கச்சியப்ப தேசிகர்பால் நெஞ்சினைத் தூது விடுப்பதாக அமைந்த நூல். பிரதி மிகவும் இலமாக உளது. காப்புச் செய்யுளும் 534 கண்ணிகளும் உள்ளன. ஆசிரியர், பெயர், அச்சானது முதலியனபற்றி அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

பக்கம் 3

....அன்பினுடன்
அத்தாற் சிவபுண் ணியமடைவித் தல்லிருளோ(டு)
ஒத்தமல பாக முறுவித்துச் — சத்திபதித்
தின்பதுன்ப மாகும் இருவினைஒப் புச்செய்து
பின்பு குருவடிவாய்ப் பேருருக் கொண்(டு) — இன்பாகப்
பேரருளை நல்கிப் பெருகுசிவ போகத்திற்
சாரவிளைப் பாற்றித் தரிப்பிப்போன் — நேரே...

முடிவு :

பேரின்ப வாருதியைப் பேணி மதிமறந்து
சோரும் வனிதையுறு துன்பமெலாஞ் — சீராகத்
தேரா யெனவுரைத்துத் தேனொழுகு முற்பலத்தார்த்
தாரா யெனப்பல்காற் ருழ்ந்திறைஞ்சி — யோரா

வருமறை லோதி யனைத்தினையு மீனும்
பிரணவம்போற் கேசரங்கள் பேத திரமாகும்
பொற்கொன்றை வாங்கிப் புரிநெஞ்சே கொண்டுவந்து
நற்பெருவாழ் வீங்கெனக்கு நல்கு.
கச்சியப்ப தேசிகன் நெஞ்சுவிடு தூது முற்றும். 25-1-02.

Kachiappadesikar Nenjuvidu Thoothu

Size: 21×17. Pages: 54. Lines: 21 on a page. Condition: injured.

Note : The Ms. contains 534 kannis in praise of Kachiappa Desikar. No information regarding author etc.

424. கவிராயர் பணவிடு தூது (நூல் எண் 136)

அளவு : 21×33, *வரிகள்* : 23.
பக்கங்கள் : 16. *நிலை* : இலமாக உள்ளது.

குறிப்பு : தாம் காதல் கொண்ட கணிகைபால் கவிராய ரொருவர் பணத்தைத் தூது விட்டதாக அமைந்த நூல். 186 கண்ணிகள் உடையது. இதனுள் ரசவாதத்தைப்பற்றிய செய்தி களும் பிறவும் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
கவிராயர் பணவிடு தூது

ஆடகமே செம்பொன்னே அத்தமே காஞ்சனமே
மாடையே காரமே மாநிதியே — ஈடிலா
வீகையே தேசிகமே யிழமே சொன்னமே
ஓகைதரு பீதகமே யொண்பொருளே.

முடிவு :

மதனும் ரதியுநெடு மாலுந் திருவும்
புதனும் வனமதியும் போலும் — இதழ்விரிந்த
பூவு மணமும் புலவோர் தெளிந்துரைத்த
பாவு மதனுட் பயனுமெனப் — பூவுலகில்
மின்னுளும் யானும் விரைவுடனே வாழ்ந்திருக்க
மன்னுநீ தூதுரைத்து வா.

கவிராயர் பணவிடு தூது முற்றிற்று.

Kavirayar Panavidu Thoothu

Size: 21×33. Pages: 16. Lines: 23 on a page. Condition: injured.

Note: The Ms. contains 186 kannis. The author sends money as a messenger to his benefactor.

425. கவிராயர் பணவிடு தூது (நூல் எண் 137)

அளவு : 21×33. வரிகள் : 34.
பக்கங்கள் : 12. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 136ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Kavirayar Panavidu Thoothu

Size: 21×33. Pages: 12. Lines: 34 on a page. Condition: good.

Note : Same as the previous one.

426. கவிராயர் பணவிடு தூது (நூல் எண் 671c)

அளவு : 21 × 33. வரிகள் : 22.
பக்கங்கள் : 17. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 136ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

இதனுடன் 671a யாப்பருங்கல விருத்தி, 671b கச்சி ஆனந்த ருத்திரேசர் துதி ஆகிய நூல்களும் உள்ளன.

Kavirayar Panavidu Thoothu

Size: 21×33. Pages: 17. Lines: 22 on a page. Condition: good.

Note : Same as the previous one.

427. கமலை ஞானப்பிரகாச சுவாமிபேரில் மாசிலாமணி தேசிகர் அருளிய நெஞ்சுவிடு தூது (நூல் எண் 535)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 16. நிலை : பழமை.

குறிப்பு : திருவாரூரில் எழுந்தருளியிருந்த ஞானப்பிரகாசர் மீது நெஞ்சினைத் தூதாக விடுப்பதுபோல் அமைத்துப் பாடியது

இந்நூல் மாசிலாமணி தேசிகர் அவர்களால் இயற்றப்பெற்றது. சிவப்பிரகாசர் இயற்றிய சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சு விடு தூது என்ற நூலைப் பெரும்பாலும் தழுவியுள்ளது. காப்புச் செய்யுளும் 231 கண்ணிகளும் உடையது.

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்
சிவமயம்

ஞானப்பிரகாச சுவாமிபேரில் மாசிலாமணி தேசிகர் அருளிய நெஞ்சுவிடு தூது.

கங்கைமதி கொன்றையணி கண்ணுதலோ னீன்றதனி
ஐங்கரனை நெஞ்சமே யன்புற்றுத்—துங்கக்
கமலையில்வாழ் ஞானப்ர காசகுரு நாத
நிமலன்பாற் றூதாக நேர்.

முடிவு :

பற்றி யடியேன் படுமிப் பெருந்துயர
முற்று மறிந்துசெல முன்னுநீ—யெற்றுதிரை
வேலை யுலகுபுகழ் மெய்ஞ்ஞானப் பிரகாசன்
மாலைமன மேவாங்கி வா.

முற்றிற்று.
ஞானப்பிரகாச தேசிகர் திருவடி வாழ்க.
ஞானசம்பந்த தேசிகர் திருவடி வாழ்க.

Kamalai Gnanaprakasa swami Nenjuvidu Thoothu

Size: 21×33. Pages: 16. Lines: 25 on a page. Condition: old.

Note : The Ms. contains 231 kannis in praise of Kamalai Gnanaprakasa Swamigal of Tiruvarur. Author: Masilamani Desikar of Dharmapura Adheenam.

428. கமலை ஞானப்பிரகாசர்மீது மாசிலாமணி தேசிக ரருளிய நெஞ்சுவிடு தூது (நூல் எண் 120)

அளவு : 21 × 17. வரிகள் : 25.
பக்கங்கள் : 16. நிலை : பழமை.

குறிப்பு : நூல் எண் 535இன்படியே. இப் பிரதியில் திருவாரூர்ப் பள்ளு என்ற பிரபந்தமும் உள்ளது.

Kamalai Gnanaprakasa swamigal Nenjuvidu Thoothu

Size: 21×17. Pages: 16. Lines: 25 on a page. Condition: old.

Note : Same as the previous one.

429. மாசிலாமணி தேசிகரருளிய ஞானப்பிரகாச சுவாமிகள் நெஞ்சுவிடு தூது (நூல் எண் 641)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 20. நிலை : பழமை.

இது நூல் எண் 535 போன்றது. இப்பிரதியில் பக்கம் 17 முதல் 20 வரை வயலூரிரட்டைமணிமாலை என்ற நூல் உள்ளது.

Gnanaprakasa swamigal Nenjuvidu Thoothu

Size: 21×33. Pages: 20. Lines: 30 on a page. Condition: old.

Note : Same as the previoue one.

430. (குழந்தையன்) மான்விடு தூது (நூல் எண் 174)

அளவு : 21 × 33. வரிகள் : 37.
பக்கங்கள் : 17. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி முதலிற் காப்புச் செய்யுளான வெண்பா ஒன்றையும் இறுதியில் வாழ்த்துச் செய்யுளொன்றையும் பெற்று 301 கண்ணிகளால் ஆகியது. இந்நூல் அழகிய சிற்றம்பலக் கவிராயர் மகன் குழந்தைக் கவிராயரால் சிவகங்கைச் சமஸ்தானத்துப் பிரதானியாகிய தாண்டவராயப் பிள்ளைமேல் பாடப் பெற்ற நூல். இவர் மிதிலைப்பட்டியைச் சார்ந்தவர். டாக்டர் ஐயரவர்களால் 1936-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
மிதிலைப்பட்டி
அழகிய சிற்றம்பலக் கவிராயர் குமாரன்
குழந்தையன் மான்விடு தூது

வெண்பா

சங்கநிதி தென்முல்லைத் தாண்டவ ராயசெய
துங்கனிசை மான்விடு தூதுக்குப்-பொங்கு
புவிஞ யகனன்பர் போற்றுங் கசமு
கவிஞ யகனிதங் காப்பு.

நூல்

(1) பூமேவு கோகனகப் போதி லரசிருக்கு
மாமேவு பைந்துளப மாதவனுந்—தேமேவு
(2) புண்டரிக வீட்டோனும் பொன் னுலகை யாள்வோனும்
அண்டருந் தானவரு மங்கையினூற்.......

முடிவு :

..............................—வல்லாள
போசன் கொலுப்பெருக்கிப் போசனமுந் தான்பண்ணி
வீசுமலர்ச் சப்பிரமஞ்ச மீதினிலே—நேச
மித சனங்கள் தற்சூழ வீற்றிருக்கும் வேளை
மதுமலர்த்தார் வாங்கிநீ வா.

குழந்தையன் மான்விடு தூது முற்றிற்று.

உத்தமர் வேதிய ரானினம் வாழி யுயர்ந்தசெங்கோல்
முத்தமிழ் வாழி கிளைவாழி வாழிதென் முல்லைநகர்
வித்தகன் தாண்டவ ராசேந்திரன் வாழி விளங்குமனை
நித்தியஞ் சோபனங் கல்யாணம் வாழி நிலைபெறவே.

திருச்சிற்றம்பலம்.

Maanvidu Thoothu

Size: 21×33. Pages: 17. Lines: 37 on a page. Condition: good.

Note : The Ms. contains 301 kannis of Maanvidu Thoothu written by Kuzhandai Kavirayar, son of Chitrambala Kavirayar. Published by Dr. U.V. Swaminatha Iyer in 1936.

431. (குழந்தையன்) மான்விடு தூது (நூல் எண் 174a)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 21. நிலை : சிதிலம்.

குறிப்பு : நூல் எண் 174 இதன் பிரதியாகும். இப்பிரதியும் நூல் எண் 174உம் சேர்ந்து ஒன்றுகப் பைண்டு செய்யப் பெற்றுள்ளன.

Maanvidu Thoothu

Size: 21×33. Pages: 21. Lines: 30 on a page. Condition: injured.

Note: Same as the previous one.

432. சொக்கநாதன் கவிராயர் பாடின முத்து விசய ரகுநாத பிள்ளை பணவிடு தூது

(நூல் எண் 658)

அளவு : 21 × 33. வரிகள் 35.
பக்கங்கள் : 21. நிலை : பழமை.

குறிப்பு : முத்துவிசய ரகுநாத பிள்ளை என்பவர் இராமநாதபுரத்தில் இருந்தவர். இவர் பேரில் பாடப்பெற்றது இந்நூல். 369 கண்ணிகள் கொண்டது. இந்நூலாசிரியர் சொக்கநாத கவிராயர் என்பவர். அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம் :

உ

கணபதி துணை

சொக்கநாதன் கவிராயர் பாடின முத்துவிசய ரகுநாத பிள்ளை பணவிடு தூது.

காப்பு

முன்னும் புகழ்விஞ்சை முத்துரகு நாதன்மேற்
சொன்ன பணவிடு தூதுக்கே—யுன்னும்
புரக்கும்பக் கம்பந்தம் போக்காது தாக்கைங்
கரக்கும்பக் கம்பக் களிறு.

நூல்

பூமாது தன்னுருவம் பொன்னுருவ மாக்குவித்து
மாமா தெனப்பேர் வழங்குவித்துத்—தேமாலை
கூர்க்குந் திருமார்பக் கொண்டலுக்குப் பண்டளித்துக்
காக்குந் தொழிலவர்க்குக் கற்பித்தாய்.

முடிவு :

கட்டி யுரைத்தாற்போற் கனிந்துரைப்ப தல்லாமற்
றட்டி யுரைக்கத் தகலபத்தோ—கட்டழகர்
பொன்னவா தேவா புகழ்வா ரவரகத்து
முன்னவா தூதுரைத்து வா.

பணவிடு தூது முற்றும்.
திருஞான முத்திரை தரித்த கைத்தாமரைச்
செண்பகச் சடகோபன் திருவடிகளே சரணம்.

Muthu Vijaya Raghunatha Pillai Panavidu Thoothu

Size: 21×33. Pages: 21. Lines: 35 on a page. Condition: old.

Note: The Ms. contains 369 kannis composed by Chokkanathan Kavirayar in praise of Muthu Vijaya Raghunatha Pillai of Ramnad.

433. தமிழ்விடு தூது (நூல் எண் 278)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 26. நிலை : பழமை.

குறிப்பு : மதுரைச் சோமசுந்தரக் கடவுள்பாற் காதல் கொண்ட ஒரு தலைவி விரகத்தால் துன்புற்றுத் தமிழை அவர் பால் தூது விடுப்பதாக இயற்றப்பெற்றது. இது 266 கண்ணிகளை யுடையது. இந்நூலாசிரியர் இன்னாரென அறியக்கூட வில்லை. டாக்டர் ஐயரவர்களால் 1930ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
தமிழ்விடு தூது
கலிவெண்பா

சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்
தேர்கொண்ட சங்கத் திருந்தோரும்—போர்கொண்
டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மின்னு—நசையுறவே
செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு
கையி லெடுத்த கணபதியும்....

முடிவு :

....—திருமதுரை
தானே சிவராச தானியென்று வீற்றிருந்தால்
தேனேநம் பாக்கியத்தின் சேதியே—யானமையால்
அந்தரலோ கத்தின்மே லானதிரு வாலவாய்ச்
சுந்தர மீனவன் சொற்படியே—வந்து

துறவாதே சேர்ந்து சுகானந்த நல்க
மறவாதே தூதுசொல்லி வா. (266)

திருச்சிற்றம்பலம்

தமிழ்விடு தூது முற்றிற்று. 4-5-900. பின்னத்தூர் நாராயணசாமி ஐயன் எழுதியது. பச்சமுத்து உபாத்தியாயர் லிகிதம் சீரணமாயிருந்து கர ஞூ மாசி மீ 9௳ புதவாரமும் சதுர்த்தசியும் (கூடிய) திருவோண நக்ஷத்திரத்தில் ஷியான் பேரன் சுந்தரேசன் லிகிதம் நிறைவேறிற்று.

Tamizhvidu Thoothu

Size: 21×33. Pages: 26. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. contains 266 kannis sung in praise of Lorp Somasundarar of Madurai. No information regarding the author. Published by Dr. Iyer in 1930.

434. நெல்விடு தூது (நூல் எண் 539)

அளவு : 21×33. வரிகள் : 16.
பக்கங்கள் : 65. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரபந்தம் 'குடியிருப்பு' என வழங்கும் 'தென் குடிகை' யூரினரும் அனந்த பத்மநாப பிள்ளையின் புதல்வருமாகிய வைத்தியநாத பிள்ளையென்ற வள்ளல்மீது நெல்லைத் தூதாக விடுத்துப் பாடப்பெற்றது. தொடக்கத்தில் காப்பாகக் காளமேகப் புலவர் பாடிய 'வெள்ளைக் கலையுடுத்து' என்ற வெண்பா இருக்கின்றது. இந்நூல் ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை அவர்களால் 1933-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. 453 கண்ணிகளைக் கொண்டுள்ளது.

தொடக்கம் : நெல்விடு தூது.
சீர்கொண்ட வெள்ளிச் சிகரமும் பொற்சிலம்பும்
வார்கொண்ட கந்தரஞ்சேர் மந்தரமும்—பேர்கொண்ட
வெவ்வேறாய் நின்றால் விடையேறு மெங்கோனுக்
கவ்வேறு சிந்தனையுண் டாமென்று.

முடிவு :
.....................................—சையல் பண்ணிப்
போனாரை நெஞ்சைவிட்டுப் போகாரை மின்னுருவ
மானாரைக் கள்ளிவிழி மானாரைத்—தேனாரை
மெல்லியா ரைச்சுரத மெல்லியா ரைக்காம
வல்லியா ரைக்கூட்டி வா.

முற்றும்.

Nelvidu Thoothu

Size: 21×33. Pages: 65. Lines: 16 on a page. Condition: good.

Note: The Ms. contains 453 kannis published by Prof. S. Vaiyapuri Pillai in 1933.

435. பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது

(நூல் எண் 549)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 9. நிலை : இலமாக உளது.

குறிப்பு : மதுரை மாவட்டத்தைச் சார்ந்த திண்டுக்கல் என்னும் தலத்தைப் பத்மகிரி என்பர். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானாகிய பத்மகிரிநாதர்பால் தென்றலைத் தூதாக விடுத்துப் பாடப் பெற்றது இது. இந்நூலாசிரியர் பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை. டாக்டர் ஐயரவர்கள் 1932ஆம் ஆண்டில் இதைப் பதிப்பித்துள்ளார்கள். இதிலுள்ள கண்ணிகள் 123.

தொடக்கம் ;

உ
கணபதி துணை

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை இயற்றிய பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது.

நன்றிதரு பத்மகிரி நாதர்மே னீதிசேர்
தென்றல் விடுதூது செப்பவே—வென்றிதரு
மன்னத்தா னத்தானு மன்னத்தான் மாமனுமாங்
கன்னத்தா னத்தானே காப்பு.

நூல்

கார்பூத்த மேனிக் கருணைப் பெருங்கடலும்
சீர்பூத்த வேதத் திருமலையும்—பார்பூத்த
வேறோரும் வானோரு மெல்லோரு மோர்நிறையாயத்
தானோர் நிறையாச் சமன்செய்ய.
சிகண்டு—24

முடிவு : பிந்தாது

சாளர வாசல் தவழ்ந்தோடிச் சந்தடியின்
ஆளரவஞ் சற்றே யடங்கியபின்—வாளரவந்
தாங்கு புயத்தான் றனக்கென் றுயர்சொல்லி
வாங்குகொன்றை மாலைகொண்டுவா.

திருச்சிற்றம்பலம்.
பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது முற்றும்.

Padmagirinathar Thenralvidu Thoothu

Size: 21×33. Pages: 9. Lines: 30 on a page. Condition: injured.

Note : The Ms. contains 123 kannis sung in praise of Padmagirinathar of Padmaigiri which is Dindigul. The poet employs the south wind as his messenger. Author: Palapattadai Chokkanatha Pillai. Published by Dr. Iyer in 1932.

436. புல்லிக்குமரேசர் பணவிடுதூது (நூல் எண் 600)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 27. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள புல்வயல் என்னும் ஊரில் அமைந்த குமரேசர் பேரில் பாடப் பெற்றது. இதிலுள்ள கண்ணிகள் 318. ஆசிரியர் பெயர், நூல் அச்சான விவரம் முதலியன தெரியவில்லை. இப்பிரதியின் கடைசியில் 3 விடுகதைப் பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

உ

பணவிடு தூது

குணநேயர் புல்லைக் குமரேசர் மீதிற்
பணவிடு தூது பகர—மணமருவு
மைமா முகத்தானை மாமுகத்தா னைமுகத்தான்
கைமா முகத்தானங் காப்பு.

நூல் : பணத்தின் சிறப்பு.

பூமேவு கண்ணனுக்குப் பொன்மடந்தை யாய்க்கலந்து
மாமே தினிகாக்க வைத்தருளிச்—சேமேல்

வருமிறைக்குப் பொற்சபையாய் வந்துதில்லைக் காட்டில்
திருநடன மேபுரியச் செய்தாய்.

முடிவு :

முன்மாலை யீந்த முகமாயக் காரனினித்
தன்மாலை யில்லையென்றான் தந்தருள்வான் - நன்மை
யருள்மூர்த்தி யானகும ரய்யன் புயத்தின்
மருமாலை நீவாங்கி வா.

பணவிடு தூது முற்றும்.

Pullaikkumaresar Panavidu Thoothu

Size: 21×33. Pages: 27. Lines: 24 on a page. Condition: good.

Note : The Ms. contains 318 kannis in praise of Lord Muruga of Pulvayal near Pudukkottai. Details regarding author not known. There are three riddle songs at the end.

437. **புல்லைக் குமரேசர் பணவிடு தூது** (நூல் எண் 601)

அளவு : 21×33.	*வரிகள் :* 25.
பக்கங்கள் : 24.	*நிலை :* பழமை.

குறிப்பு : *மேலே குறிப்பிட்ட நூல் எண் 600இன் பிரதியே இது. இது தட்டெழுத்துப் பிரதி. இதில் இரண்டு பிரதிகள் உள்ளன.*

Pullaikkumaresar Panavidu Thoothu

Size: 21×33. Pages: 24. Lines: 25 on a page. Condition: old.

Note: Same as the previous one. This is a typed copy.

438. **மூவரையன் விறலிவிடு தூது** (நூல் எண் 664)

அளவு : 21×33.	*வரிகள் :* 30.
பக்கங்கள் : 35.	*நிலை :* பழமை.

குறிப்பு : *இது வீரைத் திருவேங்கடநாதன் (மூவரையன்) மீது மிதிலைப்பட்டி மல்லைச் சிற்றம்பலக் கவிராயர் பாடியது.*

ஒரு காப்பும் 511 கண்ணிகளும் ஒரு வாழ்த்தும் உடையது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
கணபதி துணை

மல்லைச் சிற்றம்பலக் கவிராயர் பாடிய மூவரையன் விறலி விடு தூது.

தென்றலுலா வீரைத் திருவேங் கடநாதன்
றன்றும் விறலிவிடு தூதுக்கு—நன்றி
நடக்கும்பத் தியைத்துன்ப நயக்கும்பத் தியற்பொங்குந்
தடக்கும்பக் களித்தந்தித் தாள்.

நூல்

நீர்கொண்ட வேணி நிலாமாலைச் செய்யோனுங்
கார்கொண்ட மேனிக் கரியோனுஞ்—சீர்கொண்ட
நந்தாத கண்ட நவகண்ட கண்டவர
விந்தா சனத்திருக்கும் வேதாவும்.

முடிவு :
பார்வாழி முத்தமிழ்ப் பாவலர் வாழிபடைகுடிகூ
ழேர்வாழி நல்லமைச் செல்லோரும் வாழி யினித்திசையுஞ்
சீர்வாழி மூவரை யன்கிளை வாழி தினம்பொழியுங்
கார்வாழி வாழிதென் வீரையும் வைகையுங் கன்னியுமே.

சுரசுவதி முன்னிற்க வேண்டியது.

திருச்சிற்றம்பலம்.

Moovaraiyan Viralividu Thoothu

Size: 21×33. Pages: 35. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. contains 511 kannis composed by Mithilaippatti Mallai Chitrambala Kavirayar on Sri Virai Tiruvengadanathan (Moovaraiyan).

439. விசயரகுநாதப்பிள்ளை பணவிடு தூது

(நூல் எண் 659)

அளவு : 21 × 33. வரிகள் : 38.
பக்கங்கள் : 20. நிலை : நல்ல நிலை.

இது 658ஆம் எண்ணுள்ள நூலின் பிரதியைப் போன்றதே. தட்டச்சுச் செய்த பிரதி.

Vijayaraghunatha Pillai Panavidu Thoothu

Size: 21×33. Pages: 20. Lines: 38 on a page. Condition: good.

Note: Same as No. 658. This is a typed copy.

440. வேங்கடநாதன் வண்டுவிடு தூது (நூல் எண்703)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 22. நிலை : பழமை.

குறிப்பு : வேங்கட நரேந்திரன்பேரில் வண்டைத் தூது விடுத்து 317 கண்ணிகளிற் பாடப்பெற்ற பிரபந்தம் இது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
வேங்கடநாதன்வண்டுவிடு தூது

வின்மதனன் றன்திரு வேங்கடந ரேந்திரன்மேற்
சொன்னதமிழ் வண்டுவிடு தூதுக்கே — முன்னங்
கருடேசன் பாதங் கதித்தகதி மீறுங்
கருடேசன் றுண்மலரே காப்பு.

நூல்

நீர்கொண்ட வேலை நிலைகொண்ட பார்முழுதும்
பேர்கொண்ட கீர்த்திப் பின்படிகன் — சீர்கொண்ட
செங்கோ லரசன் செயவிசயன் பார்வேந்தர்
நங்கோ னெனத்துதிக்கு நாகரிகன் கொங்கேர்......

முடிவு :

வேளை யறிந்து விதமறிந்து சூழ்ந்திருக்கும்
ஆளை யறிந்தங் கடவறிந்து — தாள்வணங்கிக்
கண்டேநான் கொண்டமயற் காதலெல்லாஞ் சொல்லிமலர்
வுண்டேபூந் தார்வாங்கி வா.

வண்டுவிடுதூது முற்றிற்று.

Venkatanathan Vanduvidu Thoothu

Size: 21 × 33. Pages: 22. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. contains 317 kannis in praise of the chieftain Venkatanathan.

441. வேங்கடநாதன் வண்டுவிடு தூது (நூல் எண் 704)

அளவு : 21 × 33. *வரிகள் :* 35.
பக்கங்கள் : 18. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : *இது 703-ஆம் எண்ணுள்ள பிரதியின் பிரதியாகும்.*

Venkatanathan Vanduvidu Thoothu

Size: 21 × 33. Pages: 18. Lines: 35 on a page. Condition: good.

Note: Same as the previous one.

பரணி

442. இரணியன்வதைப் பரணி (நூல் எண் 61)

அளவு : 21 × 33. *வரிகள் :* 22.
பக்கங்கள் : 139. *நிலை :* பழமை.

குறிப்பு : இரணியன் வதையைப்பற்றிப் பாடியது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சானது.

தொடக்கம் :

உ

ஹரி : ஓம் நன்றாக.

தேனருமகிழ்த் தொடையலு மவுலியுந்
திருக்கிளர் குழைக்காதுங்
கானருமலர்த் திருமுகச் சோதியுங்
கயிரவத் துவர்வாயு
மோனமாகிய வடிவமு மார்வமு
முத்திரைத் திருக்கையு
ஞானதேசிகன் சரணதாமரையுமென்
னயனம்விட் டகலாவே.

முடிவு :

தோகை யசையநின் ருடினவே
தும்பை புனைந்துநின் ருடினவே
வாகையைச் சூடிநின் ருடினவே
வானவர் பாடிநின் ருடினவே. (694)

முற்றும்.

889 ஆ நந்தன வருஷம், கார்த்திகை மீ 5உ புதவாரமும் அமரபட்சத்துத் திறிதிகையும் திருவாதிரை நட்சத்திரமும் பெற்ற தினத்திலே திருநகரியிலிருக்கும் பெரிய திருவடி இரணியன் வதைப்பரணி எழுதி முகிப்பிச்சது.

பெரிய திருவடி திருமேனி கவிராய குருவே நம.

Parani

Iranian Vathai Parani

Size: 21×33. Pages: 139. Lines: 22 on a page. Condition: old.

Note: The Ms. contains 694 thazhisais of the Parani which describe the slaying of Hiranya by Lord Narasimha. Printed.

443. **இரணியன் வதைப் பரணி** (நூல் எண் 715)

அளவு : 21×33. வரிகள் : 16.
பக்கங்கள் : 139. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி நூல் எண் 61இன் பிரதியேயாகும்.

Iranian Vathai Parani

Size: 21×33. Pages: 139. Lines: 16 on a page. Condition : good.

Note: The Ms. is the same as the previous one.

444. **கலிங்கத்துப் பரணி** (நூல் எண் 132)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 44 (203 — 247). நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இப்பிரதியில் ஜயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி கடவுள் வாழ்த்து 15ஆம் தாழிசையி லிருந்து மூலம்மட்டும் உள்ளது. அச்சானது.

தொடக்கம்:

செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்
தெய்வமுதல் நாய ………
கையில் மலர் பாகமலர் மீதுமணு காத
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம். (15)

முடிவு :

யாவ ருங்களி சிறக்கவே யெழுலி
யெங்கு மென்றுள தாகவே
தேவ………களி சிறக்கவே வுயிர்கள்
செய்தவப்பயன் விளைக்கவே. (122)

வேத நன்னெறி பரக்கவே வபையன்
வென்ற வெங்கலி கரக்கவே
பூதலம் புகழ்பரக்க வேபுவி
நிலைக்க வேபுயல் சுரக்கவே.

ஆகக் குறள் தாழிசை 584.
கலிங்கத்துப் பரணி முற்றும்.

Kalingathu Parani

Size: 21×33. Pages: 44. Lines: 35 on a page. Condition: injured.

Note: The Ms. contains oniy the text from the 15th thazhisais of Kalingathu Parani written by Jayamkondar.

445. **கலிங்கத்துப் பரணி** (நூல் எண்133)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 31. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: 132ஆம் எண்ணில் கண்டபடி. இது 197 தாழிசைக ளோடு அபூர்த்தியாகவுள்ளது. தேவியைப் பாடியதும் பேய்களைப் பாடியதுமாகிய இரண்டு பகுதியும் தட்டச்சில்

உள்ளன. இப்பிரதியில் சிவப்பிரகாச விகாசம் என்ற நூலும் காணப்படுகிறது.

தொடக்கம் :

உ
கலிங்கத்துப் பரணி
I. கடவுள் வாழ்த்து
சிவபிரான்

புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்
செயல்வண்ண நிலை நிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தைசெய்வாம்.

முடிவு :

.... —வேட்டொருநாள்
பூமே லயனாகிப் புண்டரிகக் கண்ணனாத்
தாமே யிரண்டாநாட் சார்ந்தருளி மாமூன்றிற்
போத வுருத்திரராய்ப் போந்தருளி நாலாநாட்
சீதவயல் சூழ்கிளுவைச் சின்னணைஞ்சான் காதலனும்.

Kalingathu Parani

Size: 21×33. Pages: 31. Lines: 35 on a page. Condition: good.

Note: The Ms. contains only 197 thazhisais; incomplete; some portions have been typed.

446. தொட்டிக்கலைச் சிதம்பரேசர் பரணி

(நூல் எண் 466)

அளவு : 21 × 33.	வரிகள் : 24.
பக்கங்கள் : 3.	நிலை : பழமை.

குறிப்பு : தொட்டிக்கலை என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ள சிதம்பரேசர்மேல் பாடப்பெற்றது. 16 தாழிசைகளே உள்ளன. மூன்றாவது பக்கத்தில் கட்டியம் என்ற தலைப்பில் ஒரு பாடல் உள்ளது. நூல் பழமையாக, எழுத முடியாத நிலைமையில் உள்ளது. இப்பிரதியில் பழனிப் பஞ்சரத்னம், திருத்தணிகைத் திருவிருத்தம், சித்திரசபை விருத்தம், நெல்லை வருக்கக்கோவை ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
தொட்டிக்கலைச் சிதம்பரேசர் பரணி

பளப ளென்றகர வளைகள் சிந்தவுடல்
பசலை கொண்டுமரு ளிவளைநீர்
வளமி குங்கலைசை வளர்சி தம்பரநல்
வரத ரேகலவி புரிமினோ (1)

முடிவு :

திரம்பெறு சுகந்தரு சிதம்பர நடேசனே
தில்லையம் பலவாணனே பராக்.

Thottikkalai Chidambaresar Parani

Size; 21×33. Pages: 3. Lines: 24 on a page. Condition: old.

Note: The Ms. contains only 16 thazhisais of the parani; contains other miscellaneous works also.

பிள்ளைத் தமிழ்

447. கீழ்வேளூர் முருகன் பிள்ளைத் தமிழ்

(நூல் எண் 160)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 42. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : கீழ்வேளூர் என்பது தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்திற்கு அருகேயுள்ள தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது பாடப்பெற்ற நூல். ஆசிரியர் கவி வீரராகவர். இப்பிரதி 96 பாடலுடன் குறையாக உள்ளது. நூல் நிலையத்தில் உள்ள சுவடி எண் 478இல் "வதரிவன முருகன் பிள்ளைத்தமிழ்" என்ற பெயர் உள்ளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
கீழ்வேளூர் வாலசுப்பிரமணியசுவாமி பிள்ளைத் தமிழ்

காப்பு
பொன்னுலகு மின்னுலவு முகில்பொழியு மகிலமும்
பூங்கமல மலரோனுமென்

பூவைவண் ணத்துவண் ணத்தவனும் வச்சிரப்
புருகூத னுதியெவரும்
உன்னுபெரு வாழ்வுபெற விமையாச லத்துவளர்
உமைபாகன் முன்னமுதவும்
உயர்வார ணத்துமுக னருவார ணக்கடவு
ளுபயபத மலர்பணிகுவோம்.

முடிவு :

ஐயநுண் ணிடைகொம்பர் களபமுலையக்
கொம்பினலர்கன்னி காரமுகையா
மணிமுலைக் கண்களவ் வரும்புறு சுரும்பாகு
மழகுதரு ரோமரேகை
மையின்முகை நின்றுவரு தேன்றுரை நாபியதன்
வருதாரை மருவுசுழியாம்
வளரல்குன் மதுநிறையும் வாவியதில் விளையாடும்
வாஞ்சையுண் டென்றுதழையுந்
துய்யதண் டலையின்மலர் கொய்யுமட வார்கள்போற்
றுகில்பிடித் தீர்க்குமளவிற்
றோகையர்க ளாடவர்த மயனின்று நாணிமகிழ்
தூயநகை யாயநிலவாற்.

Pillai Tamizh

Kizhvelur Murugan Pillai Tamizh

Size: 21×33. Pages: 42. Lines: 30 on a page. Condition: injured.

Note: The Ms. is the Pillai Tamizh sung in praise of Lord Muruga, the presiding deity of Kizhvelur, a sacred place near Nagappattinam in Thanjavur district. It contains 96 verses. Author; Kavi Viraraghavar. In the corresponding cadjan leaf Ms. (No. 478) the title of the book is noted as "Vadari Vana Murugan Pillai Tamizh."

448. கீழ்வேளூர் முருகன் பிள்ளைத் தமிழ்

(நூல் எண் 161)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 42. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: நூல் எண் 160இன் மறு பிரதி. அபூர்த்தி.

Kizhvelur Murugan Pillai Tamizh

Size: 21×33. Pages: 42. Lines: 32 on a page. Condition: good.

Note: Copy of the previous one.

449. குழைக்காதர் பிள்ளைத் தமிழ் (நூல் எண் 177)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 43. நிலை : பழமை.

குறிப்பு : இந்நூல் தென்திருப்பேரையில் உள்ள மகரநெடுங் குழைக்காதர்மேல் பாடப்பெற்றது. இந்நூலாசிரியர் திருமேனிக் கவிராசர் என்று இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரதியில் காப்பு 14 செய்யுட்களும், மற்றைப் பருவங்கள் 10 செய்யுட்களுமாக 104 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
காப்பு
குழைக்காதர் பிள்ளைத் தமிழ்

பூமாது குடிகொண்டு வீற்றிருந் தரசுபுரி
பொற்புலவு பதுமாசனப்
பொழிகருணை யொடுபெருகு ஞானவெள்
ளைத்தலை புரட்டுதிரு முத்திரைக்கைக்
கோமானை எழுதரிய சதுர்மறையு மள்ளிக்
கொழித்துவண் டமிழ்ப்படுத்திக்
கூறுதிரு வாய்மொழியோர் நாலாயி ரஞ்செய்த
குருகைமுனி யைப்பரவுதுந்
தேமா நறுங்கனித் தேன்மதகி னூடுபாய்
திருவழுதி வளநாடனைத்
தென்திருப் பேரைநகர்க் காவலனை நூற்றெண்மர்
சிந்தைகுடி கொண்டிருக்கும்
மாமாலை வருணன்வந் தடிபரவு மாழிநீர்
வண்ணனைப் புயல்வண்ணனை
வானப்பி ரானைநங் குலநாதனைப்
புகழும் வண்டமிழ்ச் சொற்றழையவே. (150)

முடிவு :

மருவார் நறுமென் மலர்கொணர்ந்து
வழிபட் டிருசே வடிசொரிந்து
மயங்கும் புலன்களைந்தும் ஒன்றாய்

வருணன் செயும்பூ சனையுவந்த திருமா முகிலே
தமிழ்க்குருஞ் செல்வக் குழகர் பாட்டயர்ந்து
சிறைவண் டலம்பிக் கண்படுக்குஞ்
செழுந்தார்த் துளவப் புயமுகுந்தர்
அருநான் மறைநூற் றெண்மருமவந்
தங்கி கரித்து வடம்பிடிப்ப
அம்போ ருகப்பூந் திருவுமுன்னி
ரவனித் திருவும் மருங்கிருப்பக்
குருமா மணிப்பொன் மறுகினெடுங்
கொடிஞ்சித் தடந்தே ருருட்டுகவே
கொழிக்குந் தமிழ்த்தென் றிருப்பேரைக்
கோவே தடந்தே ருருட்டுகவே. (10)

சிறுதேர் முற்றும்.

ஆகப் பருவம் 10க்குப் பாடல் 104. தென்திருப்பேரைக் குழைக்காதர் பிள்ளைத்தமிழ் முற்றும். 11 ஞூ பங்குனி மீ 22 உ மக நக்ஷத்திரமும் புந்திவாரமும் கூடின சுபதினத்தில் பிள்ளைத் தமிழ் எழுதி முடிந்தது. ஞானதேசிகன் மகர நெடுங்குழைக் காதர் திருவடிகளே சரணம். திருமேனிக் கவிராசர் வாக்கு.

Kuzhaikkadar Pillai Tamizh

Size: 21 × 33. Pages: 43. Lines: 32 on a page. Condition: good.

Note: **The Ms. contains the Pillai Tamizh composed by Tirumeni Kavirayar on Lord Makaranedunkuzhaikkadar of Thentirupperai in Tirunelveli district. It contains 104 verses.**

450. குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ்

(நூல் எண் 169)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 64. நிலை : பழமை.

குறிப்பு : திருக்குறுங்குடி தென்பாண்டி நாட்டில் நாங்குநேரிக்கருகில் உள்ள வைணவத் திருப்பதி. ஆங்கு எழுந்தருளியுள்ள அழகியநம்பியின்பேரில் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ். ஆழ்வார்திருநகரி இரத்தினக் கவிராயரால் இயற்றப் பெற்றது. 100 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத் தமிழ்.

இது தீராத வினை தீர்த்தான் திருமேனி

இரத்தின கவிராயரவர்களால் அருளிச் செய்யப்பட்டது.

பூவான வெண்டா மரைப்பொகுட் டாதனப்
பொற்புந் திரண்டபடிகப்
புழைபடப் பணிபடுத் தியமணித் தாழ்வடப்
பூணுமெய்ச் சதுமறைநன் னூற்
பாவான பொத்தகமு ஞானமுத் திரையும்வட
பகிரதி துளும்புகரகப்
பான்மைசேர் செங்கையுந் தவளமே னியுமுடைப்
பனுவல்மா தைத்துதிப்பாந்
தேவாதி தேவனழ கியநம்பி பச்சைச்
செழுந்துளப மாலைமேவுந்
திண்புயக் கனசயில சுந்தரப் பிரபைதரு
தென்குறுங் கைக்குரிசில்சீர்
நாவாணர் போற்றவுஞ் சேவிக்க வாழ்விக்கு
நம்பியெதி ரொப்பிலாத
நம்பிக்கு யான்கூறு பிள்ளைத் தமிழ்ப்பாட
ளுளுநா ளுங்காக்கவே.

முடிவு :

பார்வாழி குருகைமகிழ் மாறன் வாழி
பன்னரிய வயிணவர்பல் லாண்டு வாழி
பேர்வாழி பேரருள்மா முனிவன் வாழி
பெரியமுது மறைவாழி யுழவர் வாழி
கார்வாழி தானசமை யங்கள் வாழி
கற்றோரும் வாழிதவத் தாரும் வாழி
சீர்வாழி தென்குறுங்கை நகரம் வாழி
சிறந்தநம்பி நீடூழி வாழி தானே.

அழகியநம்பி பிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

குழகனழகியநம்பி திருவடிகளே சரணம்.

காரி மாறப் பிரான் திருவடிகளே சரணம்.

இஃது பரங்கிப்பேட்டை ஸ்ரீமான் இயற்றமிழ்ப் பிரபந்த வித்வான் இலட்சுமணப் பிள்ளையவர்களுக்காக, கோய முத்தூரைச் சார்ந்த பிளைமேடு ஸ்ரீமான் மஹாவித்வான்

மூ. வேணுகோபாலசாமி நாயுடு அவர்களால் ஷியார் மாணாக்கன் அனுப்பப்பட்டி அ. கிருஷ்ணசாமி நாயுடுவால் எழுதி நிறைவேற்றப்பட்டது.

பிலவங்க ஞு 1907 ஞு
சித்திரை மீ ஏப்ரல் மீ
க-ந்தேதி 13-ந் தேதி

சனிக்கிழமை

ஆழ்வார் திருநகரி இரத்தின கவிராயர்
தீராத வினை தீர்த்தான் திருவடிகளே சரணம்.

திருமேனி

குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த பெரியோர் கடன்.

Kurungudi Azhagia Nambi Pillai Tamizh

Size: 21×33. Pages: 64. Lines; 30 on a page. Condition; old.

Note: The Ms. contains 100 verses composed by Ratnagiri Kavirayar of Alvartirunagari in praise of Sri Azhagia Nambi of Tirukkurungudi.

451. திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ்

(நூல் எண் 334)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள் : 33. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது நூல் எண் 169ஐப் போன்றது.

Tirukkurungudi Azhagia Nambi Pillai Tamizh

Size; 21×33. Pages: 33. Lines: 40 on a page. Condition; good.

Note : Same as the previous one.

452. சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழ்

(நூல் எண் 239)

அளவு ; 21×33: வரிகள் ; 25.
பக்கங்கள் : 12. நிலை ; இலமாக உளது.

குறிப்பு : சிவந்தெழுந்த பல்லவராயன் என்ற குறுநில மன்னன்மீது மல்லைச் சிற்றம்பலக் கவிராயர் பாடியது. இப்பிரதியில் காப்புப் பருவத்தில் 11 செய்யுட்களும், செங்கீரைப் பருவத்தில் 11 செய்யுட்களும் தாலப் பருவத்தில் 7 செய்யுட்களும் ஆக 29 செய்யுட்கள்மட்டும் உள்ளன. குறைப்பிரதி. அச்சாகவில்லை.

தொடக்கம் :

உ
சிவமயம்

மிதிலைப்பட்டி சிவந்தெழுந்த பல்லவராயர் பிள்ளைத்தமிழ்

சீர்பொருந்தி வளர்பெரிய நாயகித்தாய் பதமலரைத்
தெரிசித் தேத்தும்
பேர்பொருந்தி வளர்பெரிய நாயகப்பல் லவராசன்
பெற்ற பாலன்
தார்பொருந்தி வளர்ந்தசிவந் தெழுந்தபல்ல வன்பிள்ளைத்
தமிழைக் கூறக்
கார்பொருந்தி வளர்கரட கம்பகும்பக் களிற்றனென்றுங்
காப்ப தாமே.

முடிவு :

செச்சை யோனிறச் சேவகப் பிள்ளையுஞ் சேய்ஞலூர்
தனில்மேவுஞ்
சிறுவ னாகிய சோழியப் பிள்ளையுஞ் சேவக னெனத்
தோன்றுங்
கச்சை யானையி னிரண்டுபிள் ளையுங்கடவுள ரிமையோர்கள்
கடைந்த பாற்கடல் பெற்றிடும் பிள்ளையுங் கழுமல
மெனவோதுங்—
கொச்சை மேவிய கவுணியப் பிள்ளையுங் கொன்றையங்
குழலூதிக்
குருந்து சாய்த்திடு கோவலப் பிள்ளையும் கோசலை
கரத்தேந்தும்
பச்சை மாவெனும் பிள்ளையும் போல்வளர் பாலனே
தாலேலோ
பாரசங் கிலியெனுஞ் சிவந்தெழுந்தநம் பல்லவா
தாலேலோ. (29)

Sivanthezhuntha Pallavarayan Pillai Tamizh

Size: 21×33. Pages: 12. Lines: 25 on a page. Condition: injured.

Note: The Ms. contains 29 verses of Pillai Tamizh (incomplete) composed by Mallai Chitrambala Kavirayar on the chieftain Sivanthezhuntha Pallavarayan.

453. சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் (நூல் எண் 263)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 39. நிலை : கிலமாக உளது.

குறிப்பு : தொண்டை நாட்டைச் சார்ந்த சேயூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள முருகன்மேல் அந்தகக் கவி வீரராகவ முதலியாரால் பாடப்பெற்றது. இப்பிரதியில் 101 செய்யுட்கள் உள்ளன. கடைசி மூன்று பருவங்கள் சிறுபறை, சிற்றில், சிறுதேர்ப் பருவம் என உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
சேயூர்ப் பிள்ளைத் தமிழ்

பேருய கீரன்முற் பகருமுரு காறெனப்
பெருகாறு கண்டுமுலகிற்
பேரருண கிரிதிருப் புகழ்கண்டு நாளுறு
பெறுமனத் துறுமாசையால்
ஏருய வாகனக் கடவுடன் மைந்தனுக்
கெமது செய் கைக்கந்தனுக்
கிளமைவள மைப்பிள்ளை யங்கவிதை நூலெழுத
வென்கரத் தாமரைதொழும்

ஆருயி ரத்துமுக முடையது சடைக்கா
டமைத்தநா யகன்வருவிலாம்
அந்தமா மேருவிற்பந்தவே தங்குறித்
தறிவியா தன்கூறுநாள்
நூரு யிரத்தின்மே லிருபதை யாயிரங்
கவிதைநூ லகலமுழுதும்
நுதிமருப் பாலெழுது மொருவா ரணத்தினிரு
நூபுரத் தாமரையுமே.

முடிவு :

வாயே மலர்க்குமுத மாயே சிவப்பொழுகு
மறையே மணக்கு மிறையே
வாறுறு மக்கடவுண் மீறுறு முத்தமலை
வயன்மேல் விளைத்த பயிரே
போயே கதிக்கணுகு தூயார் பிறப்பிரவு
பொரவே யுதித்த கதிரே

போகாலை யத்தமரர் மாகால்வ ளைத்ததளை
புதிதேது மித்தவரமே
சாயேமெ னப்பொருத மாயாவி தத்தவுணர்
தமதா ருயிர்க்கு நமனே
தாராத ரப்புரவி வீராக ரக்குலிசர்
தருவாழ வைத்த குருவே
சேயெயெ னக்கினிய தாயேய ருத்திகொடு
சிறுதே ருருட்டி யருளே
சேயூர தத்துபரி மாயூர சத்திதர
சிறுதே ருருட்டி யருளே.

சேயூர்ப் பிள்ளைத்தமிழ் முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

Cheyur Murugan Pillai Tamizh

Size: 21×33. Pages: 39. Lines: 30 on a page. Condition: injured.

Note: The Ms. contains 101 verses of the Piliai Tamizh composed by Andhakakkavi Viraraghava Mudaliar on Lord Muruga, presiding deity of Cheyur near Madurantakam in Chingleput district.

454. திருஞானசம்பந்தர் பிள்ளைத் திருநாமம் (நூல் எண் 351)

அளவு : 21×33. வரிகள் : 16.
பக்கங்கள் : 45. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது ஸ்ரீ திருஞானசம்பந்தர்மேல் பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் நூல். திருவாவடுதுறை ஆதீனத்தில் 8ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகரால் இயற்றப் பெற்றதாகும். அச்சானது. காப்புப் பருவத்திலும் வருகைப் பருவத்திலும் தனித்தனியே 11 பாடல்களும், முத்தப் பருவத்திலும் சிற்றிற் பருவத்திலும் 9 பாடல்களும், சிறு தேர்ப் பருவத்தில் 7 பாடல்களும், ஏனைய பருவங்களில் 10 பாடல்களும் கொண்டு 97 பாடல்களால் அமைந்தது இந்நூல்.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருஞானசம்பந்தப் பிள்ளையார்பேரில் பிள்ளைத் திருநாமம்

துறக்கவொண் ணுவைவர் சூழலிற் சூழ்வார்
துறக்கவொண்ணு வீடு துறப்பேன்—மறைக்கதிர்வேல்
மாபுரத்தார் வேவ மலேவளைத்தார் மைந்தரெழு
கோபுரத்தார் நூபுரத்தாள் கொண்டு.

....

....

வாதாடும் பிள்ளையார் துணே. செங்கழுநீர் ஐங்கரன் றுணே.
விளம்பி:ளு கார்த்திகை 15 உ.

காப்பு

கார்மேவும் பொழில்சூழுங் கதிர்மாட வீதிக்
கழுமலத்தார் பெருவாழ்வைக் கவுணியனேக் கமலத்
தார்மேவும் திருப்புயத்துச் சைவசிகா மணியைச்
சம்பந்தப் பெருமானைத் தமிழ்க்களிற்றைப் புரக்க
பார்மேவு மறைவாழத் திருப்பொய்கைக் கரையிற்
பவளவாய் திறந்தழுத பசுங்குதலே கேட்டுச்
சீர்மேவுந் திருத்தோணி யழகோடு மிருந்தார்
சென்றமமு விடையுடனே நின்றதிரு நிலேயே.

முடிவு :

சிறுதேர்ப் பருவம்

பருவே ரகிற்குறடு தருசேற தப்பிமிகு
பனிநீ ருழக்குமிளேஞர்
பழியே துடக்குமின முலேகாண நிற்கிலிவை
படிறே முடிக்கைதவிரா
உருவே படைத்துலகு ளுறைகா முகர்க்குடலி
னுயிர்பேணி நிற்கநினேவே
தொழியீ ரெனப்புனேயு மணிநூ புரத்தொகுதி
யொழியா தரற்றவிதழா
மருவே கழிக்குவளே மலரே யெனப்பகழி
வடியே யெனப்பகருமா
வடுவே யெனக்கொடிய கடுவே யெனத்திரியும்
விழியால் வளேத்துமடவார்
செருவே துவக்கிவரு பிரமா புரத்ததிப
சிறுதே ருருட்டியருளே
திருவான வட்டிகிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டியருளே. (7)

Thirugnanasambandar Pillai Thirunamam

Size: 21×33. Pages: 45. Lines: 16 on a page.
Condition: good.

Note: The Ms. contains 97 verses of the Pillai Tamizh in praise of Saint Thirugnanasambandar. Author: Sri Masilamani Desikar, 8th Adheenakartar of Tiruvavaduthurai Mutt.

455. தில்லைச் சிவகாமசுந்தரி பிள்ளைத் தமிழ்

(நூல் எண் 436)

அளவு : 21×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 60. நிலை : பழமை.

குறிப்பு : தில்லையாகிய சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சிவகாமியம்மன்மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ். அச்சானது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் 12 பருவங்கள் உள்ளன. இதில் சிற்றிற் பருவமும், பந்து விளையாடற்பருவமும் புதியன. அம்மானைப் பருவத்தில், குதலை மொழி. பாவை விளையாடல், கழங்காடல், அம்மானையாடல் என்பன பாடப் பெற்றுள்ளன. இறுதியில் நீராடற் பருவம் 7-ஆம் பாடலுடன் அபூர்த்தியாக உள்ளது. 117 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

அம்பிகை துணை
சிவகாமசுந்தரி பிள்ளைத் தமிழ்

தெள்ளுதமிழ்த் தில்லைச் சிவகாம சுந்தரிமேற்
பிள்ளைத் தமிழ்கூறும் பேதையேற்—குள்ளுசடைக்
கங்கைபெற்றான் கங்கைபெற்றான் கற்பகநற் பேர்பெற்றான்
கங்கைபெற்றான் கங்கைபெற்றான் காப்பு.

காப்பு

சீர்பூத்த பராபரத்தி லுதித்தபரா சக்தி
சிவகாம சுந்தரியாய்ச் செகமனைத்தும் பூப்ப
பார்பூத்த விராட்புருட னிதயபுண்ட ரீகப்
பசும்பொகுட்டில் விளையாடும் பைங்தொடியைக் காத்துப்
பேர்பூத்த நான்குருவ நான்முக நடுவே
பேருருவ மருவமெனப் பெறுநவபே தத்தின்
தூர்பூத்த சத்திசதா சிவத்துச்சி பூத்த
துலங்குதிரு நடங்காட்டி விளங்குசபா பதியே.

முடிவு :

நெருப்பிற் பூத்தபொற் பூந்தொடை மாணிக்க
நீரிடை நிழற்றேன்ற
நீரிற் பூத்தபொற் பூவினைப் பாரென்று
நீரிடை யவியாமல்

விருப்பிற் செஞ்சுடர்க் கொழுந்துவிட் டெரிகின்ற
விளக்கினைப் பாரென்றும்
விழித்துக் கண்களைக் கெண்டைகள் மேய்கின்ற
வியப்பினைப் பாரென்றும்
மருப்ப தக்குயந் தாமரை யரும்பெனப்
பருமத்தைப் பாரென்றும்
பச்சை வெண்ணிறஞ் சிவப்பொடு பொன்னிறம்
பத்தியாய்ப் புனல்கண்டே
மருப்பு நன்னகைச் சிலதியர் விருப்புற
வாடுக புதுநீரே
யாட லஞ்சிவ காமசுந் தரியுமை
யாடுக புதுநீரே.

Thillai Sivakamasundari Pillai Tamizh

Size: 21×33. Pages: 60. Lines: 24 on a page. Condition: old.

Note: The Ms. contains 117 verses; incomplete. Twelve parvams are referred to: e.g. Panthu vilaiyadal parvam newly introduced.

456. மயிலாசலப் பிள்ளைத் தமிழ் (நூல் எண் 635)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 82. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திண்டிவனத்திற்கு அண்மையில் உள்ள மயிலம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானைப் பாடிய பிள்ளைத்தமிழ். இந்நூல் இலக்கண விளக்கம் வைத்திய நாத தேசிகர் அவர்களால் இயற்றப்பெற்றது. 100 பாடல்களுடன் பூர்த்தியாக உள்ளது. அச்சானது.

உ
மயிலாசலப் பிள்ளைத்தமிழ்-மயிலைப் பிள்ளைத் தமிழ்
வெண்பா–காப்பு

தொடக்கம் :

சீர்மயிலோன் மேற்பிள்ளைச் செந்தமிழைக் கூறுதற்குப்
பார்மயில்சூழ் வல்வினைகள் பாறவே — ஓர்மருப்பு
மேரான முக்கண்ணு மிந்துசடை மேற்றரித்த
காரானை மாமுகத்தோன் காப்பு.

நூல்

உள்ளங் களித்தெந்தை வார்சடைக் கானத்
துலாவித் துளைக்கைநீட்டி

யுயர்கற்ப கத்தழை முறித்துக் கவுட்சார
ஊறுவண் டோச்சிவேணி
வெள்ளந் திளைத்துப் படிந்தாடி வல்லபையின்
வியன்முலைக் கோடுழக்கும்
விகடகட தடகும்ப நடனகுஞ் சிதசரண
வேழத்தை யஞ்சலிப்பாம்
பள்ளம் புகும்புன லெனக்குற மடக்கொடிப்
பைந்தொடிப் பேதைநணியிற்
பாயாத வேங்கையாய் நீழல்செய் தவள்கனிப்
பவளவா யூறல்பருகக்
கள்ளங் கொளுங்கிழக் கோலமேற் கொண்டுநீ
காட்டுகென வேட்டுநிற்குங்
கந்தனைச் சந்தனச் சோலைசூழ் மயிலைக்
கடம்பனைக் காக்கவென்றே.

முடிவு :

அபய மெனுந்தே வரைமூ வரைவரை
யாசை புரப்பவரை
யந்தணர் மூத்தி முற்றத் தாக்கி
யமைத்தருள் பிறவாக்ய
வபையை யிலத்தையைத் தந்து நிரந்தரம்
வந்தனை செயுமன்பர்
மதுரித் தமுதம தொழுகப் புரகவி
வரகவி நாவலர்தஞ்
சபைபுகு தப்புரி தண்ணிழல் செய்து
தடங்கண் பொழிகருணை
தனையு மறியா துணையுங் குறியாத்
தமியேன் முடிமீது
முபைய பதத்துணை வைத்தருள் பால
னுருட்டுக சிறுதேரே
யுயர்மயி லைக்கிரி வந்தருள் கந்த
னுருட்டுக சிறுதேரே.

முற்றிற்று.

சரவணபவன் றுணை. வேலுமயிலுந் துணை. பரதேவி துணை.

Mayilachala Pillai Tamizh.

Size: 21×33. Pages: 82. Lines: 22 on a page. Condition: good.

Note: **The Ms. contains 100 verses sung by Ilakkana Vilakkam Vaidyanatha Desikar in praise of Lord Muruga of Mayilam, a holy place near Tindivanam in South Arcot district.**

457. திருவாஞ்சியம் மங்களநாயகி பிள்ளைத் தமிழ்
(நூல் எண் 402)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 46. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : சோழ நாட்டில் உள்ள ஸ்ரீவாஞ்சியம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகை மங்களநாயகிமீது பாடப்பெற்ற நூல். இந்நூலின் முதற்பக்கத்தில்,
திருவாஞ்சியம் மங்களநாயகி **பிள்ளைத் தமிழ்**

ஆக்கியோன் : முத்துமணியின் குமாரர் சிவராம (பிள்ளை?)

எடுத்தெழுதியது, பிரதி சுத்தம் செய்தது: பாரத்வாஜி அதம்பார் எஸ். ராமஸ்வாமி (1940ல்) (1946ல்).

திருத்திச் செப்பனிட்டது: ஸ்ரீ V. M. சுப்பிரமணிய அய்யர், தமிழ்ப் பண்டிதர், கிறிஸ்துவக் கல்லூரி ஹைஸ்கூல், சென்னை (1942-1945).

பொருட்குறிப்பகராதி : திரு V. S. செங்கல்வராய பிள்ளை M. A. Retd. P. A. to Inspector General of Registrars, 291, லிங்கச் செட்டித் தெரு, சென்னை-1.

என்று காணப்படுகிறது.

இப்பிரதியில் மூன்று காப்புச் செய்யுட்களும் நூல் 100 செய்யுட்களுமாக 103 செய்யுட்கள் காணப்படுகின்றன. இறுதியில் 7 பக்கங்களில் அநுபந்தமாகப் பொருட்குறிப்பகராதி, பாடல் முதற்குறிப்பகராதி ஆகியவை உள்ளன.

தொடக்கம் :

காப்புப் பருவம்

வள்ளைக் கமல வயல்வாஞ்சை வாழவந்தாள்
பிள்ளைத் தமிழ்க்குப் பெரிதுதவு — முள்ளமகிழ்
ஐந்துகரத் தூந்துமதத் தம்பதுமச் செங்கணருட்
டந்திமுகத் தெந்தைதுணைத் தாள்.

முடிவு :

அறுவைய தெனவடு புலியத ளுடையி
னரத்தர் மருந்தீசர்
ஆகமு மாயவர் பாகமு மாயவ
ளாடுக பொன்னூசல்
அருமறை முறையிட வடியவ ருளமல
ரம்புய செம்பதமேல்

அணிபரி புரமுத லணிகல கலவென
ஆடுக பொன்னூசல்
அறுமுக மதலையை யைங்கர முதல்வனை
யருளிய மாதாவே
அருள்மொழி இருவிழி மருவமர் குழலுமை
யாடுக பொன்னூசல்
அறிவினர் தொடையினர் தனமலி புகழினர்
அன்பின ரின்பமொடும்
அமர்தரு திருவாஞ் சியநகர் வாழ்பரை
ஆடுக பொன்னூசல். (103)

பொன்னூசற் பருவ முற்றிற்று.
திருவாஞ்சியம் மங்களநாயகி பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

Thiruvanjiam Mangala Nayaki Pillai Tamizh

Size: 21×33. Pages: 46. Lines: 32 on a page. Condition: good.

Note: The Ms. contains 103 verses sung in praise of Devi Mangala Nayaki at Srivanjiam in Thanjavur district. The author is noted as Sivaraman, son of Muthumanian. Index has also been prepared.

458. திருவாஞ்சியம் மங்களநாயகி பிள்ளைத் தமிழ்
(நூல் எண் 403)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 80. நிலை : இலமாக உளது.

குறிப்பு : இதினின்றும் பிரதி செய்யப்பெற்றதே எண் 404, எண் 402 ஆகியவை.

Thiruvanjiam Mangala Nayaki Pillai Tamizh

Size: 21×17. Pages: 80. Lines: 18 on a page. Condition: injured.

Note: This is the original for the previous item.

459. திருவாஞ்சியம் மங்களநாயகி பிள்ளைத் தமிழ்
(நூல் எண் 404)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள் : 72. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: 402 ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Thiruvanjiam Mangala Nayaki Pillai Tamizh

Size: 21×17. Pages: 72. Lines: 22 on a page. Condition: good.

Note: Copy of the previous item.

460. வில்லைப் பிள்ளைத் தமிழ் (நூல் எண் 694)

குறிப்பு : *வில்லை என்பது பாண்டிச்சேரிக்கு அண்மையில் உள்ள வில்லியனூர் என்னும் தலம். இது வில்லிநகர் முத்துக் குமரக் கடவுளைப்பற்றிய நூல். நூல் முற்றும் உள்ளது. இதன் ஆசிரியர் அருணாசல கவி என அச்சுப் புத்தகத்தில் காணப் படுகிறது. பிரதி மிகவும் இலமாக உளது. அச்சானது.*

தொடக்கம் :

உ
சிவமயம்
வில்லைப் பிள்ளைத்தமிழ்

பலம்புரி யோக நற்பலன் மெய்ப்பொருள்
நலம்புரி சிந்தையும் ஞான நாட்டமும்
அலம்புரி யார்தமக் களிக்கும் வில்லைவாழ்
வலம்புரி யான்பதம் வணங்கி வாழ்த்துவாம்.

வேலா சரணம் விசாகா சரணம் விளங்குதண்டைக்
காலா சரணம் கடம்பா சரணமென் கண்ணிறைந்த
கோலா சரணம் குமரா சரணம் குமரிபெற்ற
பாலா சரணம் சரணமென் னுளும் பதாம்புயமே.

வேலு மயிலுந் துணை.

முடிவு :

மாசற்ற காமீசர் குயிலம்மை வாழ்கநான்
மறையி னோ டாறங்கமு
மற்றும்பன் னூல்களும் வாழுவி ரேழுலகும்
வாழவே பலதேவரும்
நேசத்தை யுடையபெரி யோர்களுடன் அறமுமே
நிலைநின்(று)எந் நாளும்வாழ்க
நேரான செங்கோல் நடத்துமன் னவர்கள்மனு
நீதிவழு வாதுவாழ்க
ஆசற்ற வெண்ணீரு டஞ்செழுத் தும்பெருக
அவனிவிளை யோங்கு நின்சன்
னதிவேத விதியான் ஆதிவா ரப்பணிந்
தவர்நினை வளித் துவாழ்க
தேசுற்ற பலவுயிர் சிறந்துவாழக் களிகொள்
சிறுதேருருட்டி யருளே

தென்வில்லை தனில்முத்து வேலா யுதக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே.

முற்றும்.

வேலுமயிலுந் துணை.

ஆகப் பருவம் 10க்கு விருத்தம் 100.

Villai Pillai Tamizh

Size: 21×33. Pages: 81. Lines: 16 on a page. Condition: injured.

Note: This contains the Pillai Tamizh consisting of 100 verses sung by one Arunachala Kavi in praise of Lord Muthukumarar of Villainagar which is Villianur near Pondicherry in S. Arcot Dt.

461. திருவீழிமிழலை அழகிய மாமுலையம்மன் பிள்ளைத் தமிழ் (நூல் எண் 423)

அளவு : 21×33. வரிகள் : 18.
பக்கங்கள் : 50. நிலை : பழமை.

குறிப்பு : திருவீழிமிழலை என்பது சோழநாட்டில் நன்னிலத்திற்கு அருகே சுமார் எட்டுக் கல் தொலைவில் உள்ள பாடல்பெற்ற தலம். அங்கே குடிகொண்டுள்ள அழகிய மாமுலை அம்மன் பேரில் பாடப்பெற்ற நூல் இது. இப்பிரதியில் காப்பு ஒன்றும், 100 பாடல்களும், வாழ்த்து ஒன்றும் உள்ளன. நூலில் முத்தப் பருவத்தில் 2ஆம் பாடலும், 3ஆம் பாடலின் முதற்பகுதியும் இல்லை. இடையே சில பாடல்களில் சில சீர்கள், அசைகள் முதலியன விடப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை, ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. பூர்த்தி.

தொடக்கம் :

உ

அம்பிகை துணை

திருவீழி, அழகியமா முலையம்மன் பிள்ளைத்தமிழ்
விநாயகக் கடவுள் துதி

சீர்கொண்ட மும்மதம் பொழியுமிரு சிறுகவுட்
சிந்துரமு கத்துநிலவுந்
திகழ்கிம் புரிக்கோடு கற்றைவெண் ணிலவுபொழி
திங்களெழில் காட்டநின்றே

பார்கொண்ட நாவினுக் கரசர்திரு ஞானசம்
பந்தர்செந் தமிழினுக்குச்
படிக்காசு வைத்திடும் பிள்ளைபரி மளயுகள
பாதாம் புயம்பணிகுவாம்
நீர்கொண்ட வேணிப் பிரானுள மகிழ்ச்சிபெற
நிலவுமணி மாடகூட
நீடுகோ புரமோங்கி யளகா புரிக்குநேர்
நிகர்வீழி மிழலைவாழும்
வார்கொண்ட சுந்தரகு சாம்பிகை யெனுங்காமர்
வல்லிசெம் பவளவல்லி
மாணிக்க வல்லிகோ மளவல்லி கல்யாண
வல்லிசொற் றமிழ்தழையவே.

படிக்காசு விநாயகன் றுணை.
ஆங்கிரச ௵ ஆவணி ௴ 21உ

முடிவு :

கருணைபுரி நால்வேதம் வாழியா கமம்வாழி
கலைநிறை புராணம்வாழி
கங்கைமுத லானநதி வாழிமறை யவர்வாழி
கயிலையினம் வாழி வாழி
வருணநான் காச்சிரமம் வாழிவான் மழைவாழி
வானுலகம் வாழிதஞ்சை
மகராசன் வாழிசெங் கோல்வாழி யுயர்சோழ
வளநாடு வாழிவாழி
அருணிறை சிவாக்கிர யோகிகுரு பரன்பெருகும்
ஆதீனம் வாழிவாழி
அந்தணர்கள் வாழிமா நகர்வாழி மைந்தரு
ளனைவர்களும் வாழிவாழி
தரணிமுழு தும்பெற் றெடுத்துமெய் தளராது
தவழ்ந்தசிறு பெண்பிள்ளையாய்த்
தவழ்ந்தசுந் தரகுசாம் பிகைவாழி யவள்புகழ்த்
தமிழோங்கி மிகவாழியே.

திருவீழி அழகிய மாமுலையம்மன் பிள்ளைத் தமிழ்
முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

Thiruvizhimizhalai Azhagia Mamulaiamman Pillai Tamizh

Size: 21×33. Pages: 50. Lines: 18 on a page. Condition: old.

Note: The Ms. contains 100 verses (with certain omissions here and there) sung in praise of Azhagiya Mamulaiamman, consort of the presiding deity at Thiruvizhimizhalai.

462. திருவேங்கடநாதன் பிள்ளைத் தமிழ்

(நூல் எண் 350b)

அளவு : 21×33. வரிகள் : 34.
பக்கங்கள் : 30. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவேங்கடநாதன் என்ற வள்ளல்மேல் பாடப் பெற்ற பிள்ளைத்தமிழ். இப்பிரதியில் பருவத்துக்கு 7 பாடல்களாக 70 பாடல்கள் உள்ளன. இறுதியில் 6 பக்கங்களில் திருவேங்கடநாத பூபன்பேரில் 30 செய்யுட்கள் காணப்படுகின்றன. பூர்த்தி. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பிரதியில் திருச்செந்தூர் நான்மணிமாலை 2 பிரதிகள் இணைக்கப் பெற்றுள்ளன.

தொடக்கம் :

உ

திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்

சீர்பூத்த பொற்றகட் டாயிர மடற்கதவ
நிலையிட்ட தோட்டகட்டு
நெட்டிதழ்ச் சுடர்விளக் கிட்டவட் டக்கல
நிமலமணி மண்டபத்துச்
சீர்பூத்த திருமங்கை கொங்கைத் தழும்பெழுது
சிகரபுய பூதரத்துத்
திகிரிசங் கந்திகழு...மாலினுபய
சேவடி வணக்கமுறுவாங்
கார்பூத்த பைங்குவளை மீறுதட மேவுகுறு
காபுரி வந்தமகவான்
கற்பகத்தருசுப்பிர மணியபூ பாலனிரு
கண்மணி யெனச்சிறந்த
பேர்பூத்த கொடைவள்ளல் மீனாட்சி நாதவேள்
பின்புதித் தினியகீர்த்தி
பெற்றநர பதிதிருவேங் கடநாத பூபன்மகிழ்
பிள்ளைத் தமிழ்தழையவே

முடிவு :

பார்வாழி வழுதிவள நாடினிது வாழியலை
படாப்பொருளை வாழிமிக்க
பழையசெல் வக்குருகை நகர்வாழி முத்தமிழ்ப்
பாவாழி யாதிநாதன்
பேர்வாழி செண்பகச் சடகோபர் வாழிமறை
பேசுமந் தணர்கள்வாழி
பெருமைமிறை மீனாட்சி நாதமால் வாழிமணி
பெறுசாமி நாதன்வாழி
கார்வாழி யெங்கள்சுப் பிரமணியன் மணிவாசல்
கல்யாண வாசலாகிக்
கனசிவிகை பலவரிசை யெய்திஎக் காலமுங்
கண்ணேறி லாதுவாழி
சீர்வாழி யென்றுநால் வர்வாழி பாடவண்
சிறுதே ருருட்டியருளே
திருமருவு துரைதிருவேங் கடநாத பூபனே
சிறுதே ருருட்டியருளே. (எ)

சிறுதேர் முற்றும்.

Tiruvengadanathan Pillai Tamizh

Size: 21×33. Pages: 30. Lines: 34 on a page. Condition: injured.

Noet: The Ms. contains 70 verses sung in praise of the patron, Tiruvengadanathan. Author's name not known; printed.

மஞ்சரி

463. இன்பசய்யோக மஞ்சரி (நூல் எண் 85)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 19. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் ஐந்தாவது பக்கத்திலிருந்து உளது. அச்சானது. மிகக் கிலமாக எழுதமுடியாத நிலையில் உள்ளது. முற்றும் சிங்சார ரசம் பொருந்திய நூல். கலிவெண்பாவால் ஆயது. தொடக்கம் அழகர் கிள்ளை விடுதூதுப் பகுதியாக உள்ளது.

தொடக்கம் :

வித்தையடைந் தாயுனையோர் மெச்சுவார் முத்தமிழோர்
மாரதி பாரதியார்க் குன்னையுவ மானிப்பர்
ஆரதிக மார்தாழ் வறைந்திடாய், — யூரறிய

செய்யிற்கை யிட்டாலும் நீதான் பசுமையென்று
கையிட்டுச் சுத்தி கரிக்கலாம்... மெய்யின்.........

முடிவு : எழுத இயலாமல் உள்ளது.

Manjari

Inba Sayyoga Manjari

Size: 21×33. Pages: 19. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. is incomplete and composed in kalivenba dealing with Sringara rasa.

464. பெரியசாமித் தேவரவர்கள் பேரில் சந்திரகலா மஞ்சரி (நூல் எண் 366b)

அளவு : 21 × 33. வரிகள் : 36.
பக்கங்கள் : 18. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் வடகரை ஆதிக்கம் பெரியசாமித் துரையவர்கள் பேரில் இயற்றப்பெற்றது. சிருங்கார ரசம் பொருந்தியது. இது கலிவெண்பாவா லாகியது. 308 கண்ணிகளை உடையது. காப்பு 1ம், வெண்பா 1ம் உள்ளன. ஆசிரியர் கடிகைமுத்துப் புலவர். அச்சானது.

தொடக்கம் :

உ
வடகரைத் துரையவர்கள் மீதிற் சந்திரகலா மஞ்சரி
காப்பு

இந்திரன்போல் வாழ மெழிற்பெரிய சாமிக்கே
சந்த்ரகலா மஞ்சரியைச் சாற்றவே—யந்த
புரத்தேக தந்தத்தான் புங்கவன்விற் றீட்டுங்
கரத்தேக தந்தத்தான் காப்பு.

முடிவு :

வாழி பெரிய சுவாமி மகராஜன்
வாழிதுரை மக்கள்மரு மக்களெல்லாம்—வாழி
வடகரையா திக்கம் வளரவவன் செல்வம்
வடவரைபோல் வாழி மகிழ்ந்து.

சந்திரகலா மஞ்சரி முற்றும்.

Chandrakala Manjari

Size: 21×33. Pages: 18. Lines: 36 on a page. Condition: good.

Note: The Ms. contains 308 kannis about Vadakarai Periyaswami.

465. **வடகரைத் துரையவர்கள்மீதிற் சந்திரகலா மஞ்சரி (நூல் எண் 367a)**

அளவு : 21×33. *வரிகள் :* 24.
பக்கங்கள் : 28. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : 366ஆம் *எண்ணுள்ள பிரதியைப் போன்றது.*

Chandrakala Manjari

Size: 21×33. Pages: 28. Lines: 24 on a page. Condition; good.

Note: The Ms. same as the previous one.

மாலை

466. **அங்கயற்கண் நாயகி மாலை** (நூல் எண் 121)

அளவு : 21 × 33. *வரிகள் :* 15.
பக்கங்கள் : 130. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : *மதுரைக் கயற்கண்ணி அம்பிகைபேரில் மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் யாத்த நூல் இது. இப்பிரதியில் கயற்கண்ணி மாலை* 100 *கலித்துறையும் அங்கயற் கண்ணி மாலை* 57 *தரவுக் கொச்சகக் கலிப்பாவும்* 58*ஆம் பாடல் குறையாகவும் உள்ளன. மேலும் இப்பிரதியில் கடம்பவன வல்லி பதிகம், ஸ்ரீசுந்தரேசுவரர் துதி என்ற நூல்களும் உள்ளன. இறுதியில் பாடல் முதற்குறிப்பகராதி உள்ளது.* 1970*இல் நூல் நிலைய வெளியீடாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.*

தொடக்கம் :

உ
கயற்கண்ணி மாலை
காப்பு

செம்மைவள மல்கு திருக்கூட லங்கயற்கண்
அம்மை யடியிணையை யன்பினுடன் யான்பாடத்
தம்மை மறந்த தபோதனர்முன் வந்தருளும்
வெம்மைதவி ரருட்சித்தி வேழத்தைப் போற்றுவமே.

முடிவு :

செல்வக் கூட னகருறையுஞ்
சிவனைப் பணிந்து செழுஞ்சோதி
வில்வத் தளிரோ டிளமதியம்
வேய்ந்த வேணி விகிர்தனே
எல்வத் திரமைந் துடையாயெம்
மீசா வாச விதழியுள்ளாய்

மல்வக் கரையா வெனநிதமும்
வாழ்த்தி வணங்கு மடநெஞ்சே.

Malai

Angayarkkan Nayaki Malai

Size: 21×33. Pages: 130. Lines: 15 on a page. Condition: good.

Note: The Ms. contains 100 verses composed by Mahamahopadhyaya Dr. U.V. Swaminatha Iyer. The book has been printed by the Library.

467. **திருவாரூர் நான்மணி மாலை** (நூல் எண் 409)

அளவு : 21×33.	வரிகள் : 24.
பக்கங்கள் : 33.	நிலை : பழமை.

குறிப்பு : ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய திருவாரூர் நான்மணி மாலை என்னும் நூலுக்குரிய உரை இது. இவ்வுரை சுழிபுரம் சிவப்பிரகாசம் பிள்ளை சொல்ல, செ.வே. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்களால் 1908ஆம் ஆண்டில் எழுதப் பெற்றது.

தொடக்கம் : மோக்ஷத்தை யடையுமாறு முக்காலங்களினும் மத்தகத்தின்கண் வைத்துத் தியானிக்கும் தியானபரருக்கு அவர் மனேபீஷ்டம் கூடுமாறு முன்னின்றருளும் கைக்களிறாகிய விநாயகக் கடவுளது பாதங்கள் (எவர்களாலும்) சிந்திக்கப்படும் கமலேசராய தியாகராசப் பெருமான் நான்மணி மாலையாகிய இப்பிரபந்தம் கவிநல மடையச் செய்யும்.

முடிவு : மறைந்து ஒருவர்க்கு நாணமின்றி யாவருந் தம்மைப் பதியெனக் கருதி வணங்க அதனை விறுமாப்படைந்து தம்மைத் தாமே தேவரென்று மதித்திருக்கும் சிலர் (விண்டு முதலியோர்) செய்தவத்தினன்றி யமனுனவன் தள்ளற்கரிய (மார்க்கண்டராய) நின்னடியரோடு பகைத்து அதனால் தேவரீரோடும் பகைமையைப் பொருந்திய பாதகனுயிருப்பினும் தேவரீரது திருப்பாதங்களை நேரே பொருந்தத் தரிசித்து இறந்தானென்னும் கீர்த்தி பெற்றிருத்தலினால் இமையா முக்கண்களையுடைய எந்தையை யடைதற்கு அந்தமன் இயற்றிய முற்றவம் பெரிதென்றே கூறத் தக்கது.

Tiruvarur Nanmani Malai

Size: 21×33. Pages: 33. Lines: 24 on a page. Condition: old.

Note : The Ms. contains Tiruvarur Nanmani Malai written by Saint Kumaraguruparar. The notes have been written in 1908 by S.V. Jambulingam Pillai dictated by Shulipuram Sivaprakasam Pillai.

468. கமலைப் பராசக்தி மாலை (நூல் எண் 496a)

அளவு : 21 × 17. வரிகள் : 10.
பக்கங்கள் : 16. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கமலை என்னும் திருவாரூர் அம்பிகையாகிய பராசக்திமீது பாடப்பெற்ற மாலை. இந்நூல் கட்டளைக் கலித் துறையால் அமைந்தது. இப்பிரதியில் காப்பு நீங்க முப்பது பாடல்கள் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சானது. இப்பிரதியில் 496 - 'நக்கீரருலா' என்ற நூலும் உளது. இந்த உலாவிற்குப் பின்னர்க் கிரந்த எழுத்தில் அஷ்டோத்தரசத நாமாவளி ஒன்றும் காணப்படுகிறது.

தொடக்கம் :

உ
கமலாம்பாள் துணை
கமலைப் பராசக்தி மாலை
காப்பு

திருவும்வெண் டாமரைச் செல்வியு மாகிச் சிவனிடத்தின்
மருவு முமையாய் மகேச்வரி யாகி மனோன்மணியாய்த்
தருபரை யாயுன் சரணே சரணென்று சாருமன்பர்
பருகுஞ் சிவானந்த மேதென் கமலைப் பராசக்தியே.

முடிவு :

வேதமும் வாழிமெய் யாகமம் வாழி வியன்றரும
போதமும் வாழி புனிதரும் வாழி புவியும் விண்ணு
மேதமற் றோங்க விறைவரும் வாழி யியம்பியநாற்
பாதமும் வாழி கமலையில் வாழும் பராசத்தியே.

முற்றிற்று.
தியாகராஜர் துணை.

Kamalai Parasakthi Malai

Size: 21 × 17. Pages: 16. Lines: 10 on a page. Condition: good.

Note: The Ms. contains 33 verses in kattalai kalithurai sung in praise of Devi Kamalambikai of Tiruvarur.

469. திருக்கழுக்குன்ற மாலை (நூல் எண் 316)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 23. நிலை : பழமை.

குறிப்பு : திருக்கழுக்குன்றத்து இறைவன்மேல் பாடப் பெற்றது. காப்பும் 102 கலித்துறைகளும் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருக்கழுக்குன்ற மாலை

வேதம் பரவு முயர்பரஞ் சோதிவெற் பென்னவந்து
பூதம் பரவு மலையா ளுடைய பொருப்பினன்பா
லோதம் புயச்செங்கை யைந்துகண் மூன்றத்தி யோங்கவிரு
ப்பாதம் பணிந்து கழுக்குன்ற மாலை பகருவனே. (க)

சிவசுத்த கணபதி திருவடி சரணம்.

நூல் :

திருவாழ் மணிமறு மார்பனும் வேதனுந் தேவரும்போற்
றுருவாழ் பராபரஞ் சோதிய னூர்க்கிட மோங்குரகன்
மருவாழ் புவிக்குக் கலையான தேழினும் வாழுநன்னீர்
கருவாழி மேகங் குவடேறி வீசுங் கழுக்குன்றமே. (க)

முடிவு :

விண்கொண்ட பங்கயம் வேதமாவு...கண் ணு
மெண்கொண்ட முப்பத்து முக்கோடி தேவரு மிந்திரனு
மண்கொண்ட தொண்டரு மெல்லா வுயிரு மனமகிழக்
கண்கொண்ட...லாயந் தோற்றுங் கழுக்குன்றமே. (102)

சிவமயம். சிவசுத்த கணபதி திருவடி சரணம்.
சுப்பிரமணியர் துணை. வீரபத்திரன் துணை.
வேதகிரிநாதர் மிக்க துணை.

தைமீ 24உ புதவாரம் சவுத்தியங் கூடின தினத்தில் எழுதி நிறைந்தது.

அருணாசலம் படிக்கின்ற கழுக்குன்றமாலை யென்றறியவும்.
திருச்சிற்றம்பலம்.

Tirukkazhukkunra Malai

Size: 21×33. Pages: 23. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. contains 102 kalithurai verses in praise of the presiding deity of Tirukkazhukkunram in Chingleput Dt.

470. கார்மாலை வசந்தமாலை (நூல் எண் 149)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 9. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கார்காலம், வசந்தகாலம் ஆகியவற்றின் இயல்பு, வருணனை ஆகியவற்றை முறையே அடுக்கி, கார்காலம் என்ற பெண்ணும், வசந்த காலம் என்ற பெண்ணும் ஒருவரை ஒருவர் ஏசும் முறையில் அமைந்தது இந்நூல். இப்பிரதியில் 45 செய்யுட்கள் உள்ளன. அச்சான விவரம், ஆசிரியர் விவரம் முதலியன தெரியவில்லை.

தொடக்கம் :

உ
கடவுள் துணை
கார்மாலை வசந்தமாலை
காப்பு

தடவிகட தந்தச் சமரமுக சண்டக்
கடவிகட கம்பக் களிறே — வடசிகர
வெற்பகத்திற் பாரதத்தை வெங்கோட்டி னெழுதுங்
கற்பகமே நீயென்னைக் கா.

நூல்

அரிவையர்க் கொழுங்கடை யால வேல்விழி
பரிமளக் கருங்குழல் பவள வாயினு
ருருவினிற் றிருமக ளொக்குந் தன்மையா
ரிருவருக் குரியதோ ரேசல் பேசுவாம்.

முடிவு :

கங்கையும் பிறையுஞ் சூடிய காரணன்
மங்கைய ரிருவரும் வாருமென் றருள்செய்
துங்களில் நீங்களே யுறவு செய்யுமென்
றங்கவர் தங்களை யங்கை யமர்த்தினன்.

Karmalai Vasanta Malai

Size: 21×33. Pages: 9. Lines: 22 on a page. Condition: good.

Note: The Ms. contains 49 verses and deals with Karkalam and Vasantakalam personified as two maidens one accusing the other.

471. திருக்குருகை மாறன் வருக்க மணிமாலை

(நூல் எண் 320)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் ; 15. நிலை ; நல்ல நிலை.

குறிப்பு : திருக்குருகையில் எழுந்தருளியுள்ள நம்மாழ்வார் மேல் பாடப்பெற்றது. இந்நூலில் பாயிரச் செய்யுள் 2ம், உயிர் வருக்கத்தில் தொடங்கி 'வேண்டா' என்பதுவரை 92 கலித் துறையும் உள்ளன. இதற்குமேல் அபூர்த்தி. பாயிரச் செய்யுளால் இந்நூலாசிரியர் பற்பநாபன் என்பதும், நூல் 96 பாடல்கள் கொண்டது என்பதும் தெரிய வருகின்றன. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

திருக்குருகை மாறன் திருவடிக ளுக்கு
வருக்கமணி மாலை வழுத்த—முருக்கிதழ்சேர்
வெண்டா மரைக்கோயில் வீற்றிருக்கும் பாரதிதாள்
தண்டா மரையே சரண். (க)

தண் ணூ ரிலஞ்சியந் தாம்படி...ள சடகோபனுக்குப்
பண் ணூருஞ் சீர்ப்பற்ப நாபனும் பாடிய பைந்தமிழாங்
கண் ணூர் வருக்க மணிமாலை யைநல்ல காப்புமொரு
தொண் ணூறு மாறும் படிப்போர்க்குத் தெய்வந்
துணைசெய்யுமே (உ)

முடிவு :

வேண்டா விலக்குப சாரஞ்சொல் வார்புல
மெய்யென்றெண்ணிப்
பூண்டா தரிக்கு மெளியே னுனைச்சரண் போற்றறியேன்
தூண்டா விளக்கொளி போலே மடநங்கை தோன்றலென
நீண்டாய் புளிக்கு ளிருந்தாய் மறைப்பொரு
ளேமத்தனே. (92.)

Tirukkurugai Maran Varukka Manimalai

Size: 21×33. Pages: 15. Lines: 32 on a page. Condition: good.

Note: The Ms. contains 92 kalithurais on Nammalwar of Tirukkurugai, the modern Alwartirunagari; incomplete; author: Padmanabhan,

472 குழைக்காதர் பாமாலை (நூல் எண் 176)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 15. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : திருமாலுக்குரிய திருப்பதிகள் நூற்றெட்டுள் ஒன்றும் தென்பாண்டி நாட்டிலுள்ள நவதிருப்பதிகளில் ஒன்று மாகிய தென்திருப்பேரையில் எழுந்தருளியுள்ள மகரநெடுங் குழைக்காதர்மேல் நாராயண தீக்ஷிதர் என்னும் ஸ்ரீவைஷ்ணவப் பெரியார் இயற்றியது இப்பாமாலை. நாராயண தீக்ஷிதர் ஒரு முறை அரசிறையைச் செலுத்த முடியாத காரணமாகச் சிறைப் பட்டபோது குழைக்காதர்மேல் பாடப்பெற்றது. இதனை யறிந்த அந்நாட்டுத் தலைவன் வடமலையப்பப் பிள்ளையன் அவரைச் சிறை நீக்கியதன்றி அவர்க்கு அரசிறையையும் நீக்கியருளினன். இப்பிரதியில் நூறு கலித்துறைகள் உள்ளன. மிகவும் இலமான பிரதி. ஐயரவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
இராம ஜயம்
ஸ்ரீ குழைக்காதர் பாமாலை

அடியேங்க டுன்ப மகல்வதற் காவந்த நான்மறையின்
முடியே பரவுங் குழைக்காதர் மீது முதுதமிழாற்
படியேழு மோங்கிய பாமாலை யீரைம் பதுமளிப்பான்
கடியே றிலஞ்சித் தொடைஞான முத்திரைக் கைத்தலனே.

முடிவு :

பார்வாழி நூற்றெண் பதிவாழி மாறன் பனுவலியற்
சீர்வாழி நூற்றெண்மர் நீடுழி வாழியிச் செந்தமிழ்நூல்
ஏர்வாழி மன்ன ரினிதூழி வாழியெந் நாளுமழைக்
கார்வாழி பேரைக் குழைக்காதர் வாழியிக் காசினிக்கே.

முற்றும்.

Kuzhaikkadar Pamalai

Size: 21×17. Pages : 15. Lines : 16 on a page. Condition: injured.

Note: The Ms. contains verses composed by Narayana Dikshitar in praise of Lord Makaranedungkuzhaikkadar of Thentirupperal, one of the nine sacred places on the banks of the Tamraparni river. Edited and published by Dr. U.V. Swaminatha Iyer in 1939.

473. சிவபராக்கிரம மாலை (நூல் எண் 241)

அளவு: 21×33. *வரிகள்:* 37.
பக்கங்கள்: 7. *நிலை:* நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் சிவபெருமான் ஆற்றிய அரும்பெரும் வீரச் செயல்கள் முதலியவற்றை 110 கண்ணிகளில் கலிவெண் பாவில் அமைத்துப் பாடியது. அச்சானது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பிரதியில் 241a–சிவசைல புராணம் என்னும் நூலும் உளது.

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்
சிவபராக்கிரம மாலை
வெண்பா

பார்வதி பாகன் பரமன் பராக்கிரமந்
தேருங் கலிவெண்பாச் செப்பவே—மேரு
வினையகனே தந்தருளும் வேழமுகச் சித்தி
வினையகனே காக்க விரைந்து.

நூல்

திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுத முண்ண
விருப்பாகத் தேவரெல்லா மேவிப்—பொருப்பாகு
மந்தரமே மத்தாக வாசுகியே நாணுகச்
சந்திரனை யேயடையாய்த் தானமைத்து—வந்திமுக்கு
மாலயனு மிந்திரனும் வானவருந் தானவரும்
வேலைவிடங் கண்டு வெருண்டோடி—யோலமிட்டே.

முடிவு:

—சாற்றரிய
வாலவாய் தன்னி லமர்ந்துசெய்யு மாறுபத்து
நாலுவிளை யாட்டி னலம்போற்றி,—மூலமறை
போற்றுங் கயிலைமலை போற்றி மதுரைநகர்
போற்றிசிவன் செஞ்சரணப் போது.

சிவபராக்கிரம மாலை முற்றும்.

விகாரி வருடம் ஆனி மாதம் 24ஆம் தேதி சோமவாரத்தில் எழுதினது. குளந்தை விநாயகன் துணை. சகல குருநாயன் சகாயம்.

திருச்சிற்றம்பலம்.

Sivaparakrama Malai

Size: 21×33. Pages: 7. Lines: 37 on a page. Condition: good.

Note : The Ms. contains 110 kannis describing the superb heroic deeds of Lord Siva. Details regarding author etc. not available.

474. சிவானந்த மாலை (நூல் எண் 243)

அளவு: 21×33. வரிகள்: 24.
பக்கங்கள்: 74. நிலை: பழமை.

குறிப்பு: சிவ தத்துவத்தின் மகிமை, பெருமை முதலிய வற்றைக் கூறிச் சரியை முதல் ஞானம் ஈறாக நான்கு மார்க் கங்களை வகுத்துத் தத்துவ முறை, தத்துவ சுத்தி ஆகியவற்றை விரித்துப் பரமகுருவின் தரிசனம், சீடன் முறைமை, ஆன்ம தரிசனம் முதலியவற்றை விளக்கிச் சிவானந்தத்தின் பெருமையை விளக்குவதே இந்நூல். 409 வெண்பாக்களைக் கொண்டு அமைந்தது. அச்சானது. இறுதியில் 243a பிரசாத விதி என்ற நூலும் உள்ளது.

தொடக்கம்:

கணபதி துணை
வெற்றி வேலுற்ற துணை
சிவானந்த மாலை

பீடுதருங் காளத்தி பேணுங் கடகளிறே
தேடுமிடம் வாடுமிடம் செல்லுமிடம்—நீடுபெற்ற

வஞ்சந்தி யானேதுந் தோன்றுத முத்தியா
வஞ்சந்தி யானே யருள்.

பொய்நூல் பலபிதற்றிப் புத்தகப்பே யாகியருண்
மன்னூ லுணராத மாறுகே—ளிந்நூலின்
பேர்சிவா னந்தப் பெருங்கடலுட் பேரமுத
மார்சிவா னந்தமா லை.

முடிவு:

ஆண்ட வியல்லை நினைந்தே யதிலுருகி
வேண்டிமிக மெய்யன்பை மேன்மேலு—மீண்ட
வழிவறவே பூண்டமை வாரா ரமுதைநெஞ்சே
யொழிவறவே நீயுண் டிரு. 409

நெஞ்சுக் கமைவு முற்றும்
சிவானந்த மாலை முற்றிற்று
சிவமயம்
வெற்றி வேலுற்ற துணை.

Sivananda Malai

Size: 21×33. Pages: 74. Lines: 24 on a page. Condition: old.

Note : The Ms. contains 409 venbas describing the Sivagamas (doctrines of Saivism).

475. சிவானந்த மாலை **(நூல் எண் 244)**

அளவு: 15×10. வரிகள்: 20.
பக்கங்கள்: 110. நிலை: பழமை.

குறிப்பு: 243ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Sivananda Malai

Size: 15×10. Pages: 110. Lines: 20 on a page. Condition: old.

Note : Same as the previous one.

476. திருச்செங்குன்றூர் மாலை (நூல் எண் 39)

அளவு: 21×33. வரிகள்: 26.
பக்கங்கள்: 9. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: திருச்செங்கோட்டில் நறுமலர்ப் பூங்குழல்நாயகியுடன் எழுந்தருளியிருக்கும் கைலாயநாதர்மீது விருத்தப் பாக்களால் பாடப்பட்ட தோத்திர நூல் இது. அச்சானது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பிரதியில் காப்புச் செய்யுளுடன் 25 செய்யுட்கள் உள்ளன. ஆயினும் முதல் 22 பாடல்களுக்குப் பிறகு புள்ளியிட்டு இடம் விட்டு 29,30 என்று எண்ணிடப்பெற்றுளது.

தொடக்கம்:

உ

திருச்செங்குன்றூர் மாலை

அம்புவி புகழுந் தட்சிண கயிலைக்
காதிபன் உமையிட மகிழும்
சம்புவா மர்த்த நாரீச் சுவரர்மேல்
தண்டமிழ் மாலைசாத் துதற்கு
அம்புயன் தேவி தன்னையும் வாழ்த்தி
அறுமுகன் இணையடி பணிந்து
கம்பமும் மதவேள் ஆகிய நாரி
கணபதி சரணமுந் துதிப்பாம்.

முடிவு:

நீரின்மேற் குமிழி யாமெனுங் காயம்
நிலையிலெண் சாணுடம் பதனில்
பாரின்மேல் ஒருசாண் வளர்ப்பதே தொழிலாய்ப்
பரிதவித் துழல்கிறேன் கண்டாய்
சீரிய மலர்கொண் டருச்சனை புரிந்துன்
சேவடிக் கடிமையாய் விளங்க
ஓரணு வுமது கிருபைசெய் செங்குன்
றூரில்வாழ் கயிலைநா யகனே. (30)

Tiruchengunrur Malai

Size: 21×33. Pages: 9. Lines: 26 on a page.
Condition: good.

Note : The Ms. contains 25 verses (incomplete) sung in praise of Kailayanathar of Tiruchengunrur, the modern Tiruchengode in Salem District.

477. திருச்செந்தின் மாலை (நூல் எண் 344)

அளவு: 21 × 17. வரிகள்: 8.
பக்கங்கள்: 34. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள செந்திலாண்டவன்மேல் இயற்றியருளிய நூல் இது. இப்பிரதியில் காப்பு 1-ம், சமய குரவர் துதி 1-ம், ஆசிரியர் துதி 1-ம், நூல் 30-ம், வாழ்த்து 1-ம் ஆக 34 செய்யுட்கள் உள்ளன. இந்நூலாசிரியர் வித்துவான் தியாகராச செட்டியார். அச்சானது.

உ
செந்திலாண்டவன் துணை
வித்துவான் தியாகராச செட்டியாரவர்கள் இயற்றிய
திருச்செந்தின் மாலை

காப்பு
விநாயகர்

தேர்மருவும் பேர்வீதிச் செந்தில்வளர் சேவகன்மேல்
ஏர்மருவு மாலைசொல வின்சொறரும்–சீர்மலைமன்
மாதங்க வானனத்து மாமணிபோல் வைத்துவக்கும்
மாதங்க வானனத்து மன்.

நூல்

அணிகொள்செங் கமல மலர்த்தவி சுறையும்
அயனுறழ் தமிழ்முனிக் கருளும்
மணிகொள்வண் புயனின் மலர்ப்பதந் துதிக்கும்
வரமெனி யேற்கருள் புரிவாய்
பிணிகொள வழக்கு மவுண மகார்நின்
பேரரு டெரிந்திடுந் திறைபோற்
றிணிகொள்வெண் டரளந் திரைதருங் கடல்சேர்
செந்திலம் பதிவளர் குகனே.

முடிவு:

வாழ்த்து

குருவளர்நன் முகமாறு மருள்மொழிபன்
னிருவிழியுங் குலவு நீப
மருவளர்திண் புயமுமணி மார்புமெழின்
மலர்க்கரமு மயிலு வேலும்
செருவளர்கட் குறமான்றெய் வப்பிடிவாழ்
பாகமும்பொற் சிலம்பு கொஞ்சும்
திருவளர்செந் தூர்முருகன் றிருவடித்தா
மரையுமுளஞ் சேர்த்து வோமே.

Tiruchendil Malai

Size: 21×17. Pages: 34 Lines: 8 on a page. Condition: good.

Note : The Ms. contains 34 verses composed by Vidwan Thyagaraja Chettiar on Lord Subramanya of Tiruchendur. Printed.

478. திருச்செந்தின் மாலை (நூல் எண் 704)

அளவு: 21×33. வரிகள்: 16.
பக்கங்கள்: 31. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: திருச்செந்தில் முருகன்மேல் பாடப்பட்டது. இப் பிரதியுள் வேங்கடநாதன் வண்டுவிடு தூது, நவரத்தினப் பரீட்சை ஆகிய நூல்களும் உள. மற்றைய குறிப்புக்களும், முதலிறுதிப் பாக்களும் நூல் எண் 344ஆம் பிரதியைப் போன்றவை.

Tiruchendil Malai

Size: 21×33. Pages: 31. Lines: 16 on a page. Condition: good.

Note: **Same as the previous one.**

479. திருச்செந்தூர் நான்மணி மாலை (நூல் எண் 350)

அளவு : 21×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 25. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வெவ்வேறு வகையான நான்கு மணிகளைத் தொடுத்தமைத்த மாலை போல நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியவிருத்தம், ஆசிரியப்பா என்னும் இந்நான்கும் முறையே தொடர்ந்து அந்தாதியாக அமைய நாற்பது கவிகளால் முடிவது நான்மணிமாலை. திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுள் விஷயமாக மண்டில அந்தாதியாக அமைந்த நூல் இது. இந்நூலை இயற்றியவர் இலக்கணம் கச்சியப்ப முனிவர் என்று கையெழுத்துப் பிரதியில் வரையப்பெற்றுள்ளது. இப்பிரதியில் இந்நூலின் பிரதி ஒன்றும் (350a), 350b திருவேங்கடநாதன் பிள்ளைத் தமிழும் உள்ளன. அச்சானது. பூர்த்தி.

தொடக்கம் :

நந்துலவுஞ் செந்திலான் நான்மணிமா லைத்தொடைக்குப்
பந்தவனம் பாற்றவருட் பார்வைதொறும்—சிந்துமெரி
மேன்மேற் கிளைப்பச் செவிவிசிறி வீசிவரும்
கான்மே விருங்கடத்தான் காப்பு.

நூல்

புவியளிக்கும் புத்தேளும் பூங்கமலத் தேவும்
பவமழிக்க நின்றிருமுன் பன்னுள்—தவமியற்றும்
செந்திலா யென்னைநனி சேர்ந்தருள விவ்வரையும்
வந்திலா யென்னையினி வா.

முடிவு :

வாழிய வுவகையின் வளம்பெற விருக்கும்
சரவண பவனே சண்முகா முருகா
விசாகா கடம்பா வேலுடைக் கடவுள்
உரைத்தவிவ் வடியார் தரிசின மன்றி
அறிவுசற் றில்லாச் சிறியேன் றனக்கு
வரிசைவே றுளதோ மன்ற
புரிபுலால் யாக்கை பொறுத்தவிப் புவிக்கே.

Tiruchendur Nanmani Malai

Size: 21×33: Pages: 25. Lines 24 on a page. Condition: good.

Note : The Ms. contains 40 verses containing Nerisal venba, Kattalaikkalithurai, Asiriyaviruttam, Asiriyappa on Lord Muruga, of Tiruchendur. Author: Kachiappa Munivar.

480. திருச்செந்தூர் நான்மணி மாலை (நூல் எண் 350a)

அளவு : 21×33. வரிகள் : 38.
பக்கங்கள் : 16. நிலை : பழமை.

குறிப்பு : நூல் எண் 350 இதன் பிரதியேயாகும்.

Tiruchendur Nanmani Malai

Size: 21×33. Pages: 16. Lines: 38 on a page. Condition: old.

Note : Same as the previous one.

481. திருத்தணிகை மும்மணி மாலை (நூல் எண் 353)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 14. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: இது திருத்தணிகையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப்பற்றியது. இதனுடன் திருக்கடுவாய்க்கரைப் புத்தூர்ப் புராணம், கைந்நிலை ஆகிய நூல்களும் உள்ளன. அச்சான விவரம், ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

காப்பு

தாவி றிருத்தணிகைச் சண்முகற்கு மும்மணிக்
கோவைமா லைதனக்குக் கோடுறுக்கு—மேவி
யடன்மறைக்க வானை யதனுரிப் போர்வைக்
கடவு ணிகர்களிற்றின் காப்பு.

மாலைக் கனைதணிகை வள்ளலைச்சொன் மும்மணி
மாலைக் கனைகொள்கவுள் வார்ந்தொழுகி-மாலை
யுடன்மறைக் கத்தானவ் வும்பலுரிப் போர்வைக்
கடவு ணிகர்களிற்றின் காப்பு.

முடிவு :

பால்வளர் கருங்கட் பான்மொழிச் சிற்றிடை
மனைவியர் வலியக் கொடுவந்து நினையே
யின்புறப் புணர்வித் தன்புமீக் கூர்தலி
னூட லின்பொரு நாளுங்
கூடுத னினக்குக் குறித்திடி னரிதே.

Tiruttanigai Mummani Malai

Size: 21×33. Pages: 14. Lines: 25 on a page. Condition: good.

Note : The Ms. is a prabandham on Lord Muruga to Tiruttanigai. Details regarding author, etc. not available.

482. தருமசம்வர்த்தனி மாலை (நூல் எண் 280)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 4. நிலை : சிலமாக உளது.

குறிப்பு : இந்நூல் திருவையாற்றுத் தருமசம்வர்த்தனி மேல் சிவஞானன் என்பவர் 30 கட்டளைக் கலித்துறைச் செய்யுளமையப் பாடியது. அச்சான விவரம் தெரியவில்லை. பூர்த்தி.

தொடக்கம் :

உ

திருவையாற்றுத் தருமசம்வர்த்தனி மாலை

காப்பு

சிந்தைக் கரிய சிவனு ரிடத்தமர் தேவிதனை
வந்தித் தவருளம் வாழ்தர்ம வர்த்தனி மாலைதனை
யந்தி நிறம்பெற்ற வைங்கரத் தாயழ கேமிருந்த
கந்தற்கு மூத்த கணபதி யேநின்று காத்தருளே.

சீரார் கமலத் திருமுகத் தாய்சிறி யேனகமே
யூரா யுவந்தரு ளுத்தமி யேயுனை யேதுதிக்கப்
பேரா யிரங்கொண்ட பெண்ணணங் கேயருட்பேறமைப்பாய்
வாரார் தனமுடை மாதே தருமசம் வர்த்தனியே.

முடிவு :

அய்யாற் றினில்மகிழ் தர்மசம் வர்த்தனி யம்பிகைமேல்
மெய்யா மறிவு மிகுசிவ ஞானன் விளம்பு முப்பான்
செய்யா ளுறையுந் திருவாணி சேருவள் செப்பினர்பால்
பொய்யாத வின்பம் பொருந்தவைப் பாளெங்கள்
பூங்கொடியே.

தர்மசம்வர்த்தனி மாலை முற்றும்.

Dharmasamvarddhani Malai

Size: 21×33. Pages: 4. Lines: 28 on a page. Condition: injured.

Note: The Ms. contains 30 kattalaikkalithurais composed by one Sivagnanan on Devi Dharmasamvarddhani of Tiruvaiyaru, a sacred Siva Sthala in Tanjore District.

483. தர்ம சம்வர்த்தனி மாலை (நூல் எண் 357a)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 15. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில், தர்மசம்வர்த்தனி மாலை யன்றித் திருத்தெங்கூர்த் தலபுராணம் என்னும் நூலும் உளது. எஞ்சியன 280இன் படியே.

Dharmasamvarddhani Malai

Size: 21×33. Pages: 15. Lines: 30 on a page. Condition: good.

Note: Same as the previous one.

485. தருமபுரம் மவுன சிதம்பரநாத சுவாமிகள் பேரில் இரட்டைமணி மாலை (நூல் எண் 213)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 6. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தருமபுரம் மடத்தைச் சார்ந்த சிராமலைக் கட்டளை மவுனம் சிதம்பரநாத சுவாமிகள் என்பார்மேல் பாடப்பெற்றது. வெண்பாவும் கலித்துறையுமாக 20 பாடல்கள் அமைந்த நூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பிரதியில் (1) திருவாரூர் மும்மணிக் கோவை, (2) இரத்தினகர விலாசம் ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

சிராமலைக் கட்டளை
தருமபுரம் மவுனச் சிதம்பரநாத சுவாமிகள்
பெயரிலிரட்டைமணி மாலை

நாமே சிதம்பர நாதமுனி மேன்ஞான
மாமே விரட்டைமணி மாலைசொலப்—பூமேலா
னையா னனத்தா ளுதியாஞ் சோதியருள்
கையா னனத் தனேகாப்பு.

முடிவு :

கலித்துறை

நாம முரைசெயின் ஞானமு முத்தியு நன்னெறியாற்
காமரு டனெய்து மாதலின் மாதவர் கள்கவியாங்
தாம மணியுஞ் சிதம்பர நாத தயாநிதியை
சேம முடன்றெழு தேத்திப் பரவுமி னீர்மகிழ்ந்தே.

முற்றும்.

Irattaimani Malai on Dharmapuram Mouna Chidambaranatha Swamigal

Size: 21×33. Pages: 6. Lines: 28 on a page. Condition: good.

Note : The Ms. contains 20 verses on Chidambaranatha Swamigal of Mouna Swami Matam at Trichy belonging to Dharmapuram Adheenam.

485. திருவிளையாடற் பயகர மாலை (நூல் எண் 420)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 127. நிலை : சிதிலமாக உள்ளது.

குறிப்பு : ஆலவாய் இறைவன் இயற்றிய 64 திருவிளையாடல்களை 64 பாடல்களில் அமைத்து வீரபத்திரக் கம்பர் என்பவர் பாடியது. இப்பிரதி பயங்கர மாலை என்ற தலைப்புடன் உள்ளது. பயகரனே என்று பாடல்தோறும் முடிகின்றது. நூல் முழுவதற்கும் உரை உளது. டாக்டர் ஐயரவர்களால் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணப் பதிப்பில் இந்த நூல் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருவிளையாடற் பயகரமாலை
இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்

பூவிற் கவட விருத்தா சுரனைப் பொருதுகொன்று
மேவுற்ற பாவத்தை மண்பெண் புனன்மர மேனிறுத்திச்
சேவித் தொளிர்பொன் விமானமுஞ் சாத்திய தேவர்கள் கோன்
பாவத்தைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே.

முடிவு :

வேத முணர்த்திய திருவிளையாடல்

மரியாத மாமறை மாய்ந்திட முன்னுகம் வந்தவந்நாட்
டெரியாம லந்தண ரெல்லாந் திகைப்பத் தெளிந்திடவே
விரிவான வேதத்தை யெல்லாருங் கண்டு விளம்புகென்னப்
பரிவாய்ப் பகர்ந்தசொக் கேபர தேசி பயங்கரனே.

எ. து. ....

....

வேதத்தையும் அதிகரித்துப் பூலோகமெங்கும் வேத முண்டாக்கினுர்கள் எ.று.

திருவிளையாடற் பயகரமாலை முற்றும்.

இத் திருவிளையாடற் பயங்கரமாலை பிரமாதிச வருஷம் ஆவணி மாதம் ... உ நாராயணனென்றவனால் எழுதி நிறை வேற்றப்பெற்றது. திருச்சிற்றம்பலம்.

இந்த அறுபத்து நான்கு திருவிளையாடலைக் கற்பவர், கேட்பவர், கேட்க மனம் வைத்த பேர் இவர்களுக்கும் புத்திர வுற்பத்தி தரும். அவாள் எண்ணினது கொடுக்கும். சத்துரு செயமுண்டாம். சுத்த வீரமுண்டாம். நினைத்தது கைகூடும். வீரலட்சுமி, விசயலட்சுமி, பூலட்சுமியுமுண்டாம். மறுமைக்கு இந்திர லோகத்திலும், வைகுண்ட லோகத்திலும், கைலாசத் திலும் வாழ்ந்திருப்பார்கள்.

Tiruvilaiyadal Bhayahara Malai.

Size: 21×33. Pages: 127. Lines: 24 on a page. Condition: injured.

Note : The Ms. contains 64 verses describing the 64 Leelas of Lord Sundareswarar of Madurai. Author: Veerabhadra Kambar. Edited and published as an index to the edition of Tiruvalavayudayar Tiruvilaiyadal Puranam by Dr. U. V. Swaminatha Iyer.

486. திருவெண்ணெய்நல்லூர் மங்கைநாயகி மாலை

(நூல் எண் 425)

அளவு : 21×17. வரிகள் : 8.
பக்கங்கள் : 51. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவெண்ணெய்நல்லூர் என்பது நடு நாட்டில் உள்ள தலம். அங்கு எழுந்தருளியுள்ள மங்கைநாயகிபேரில் பாடப்பெற்ற நூல் இது. இந்நூலாசிரியர் இராசப்ப நாவலர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. அச்சானது. இப் பிரதியில் 2 காப்புச் செய்யுட்களும், நூல் 100 கலித்துறைகளும் உள்ளன.

தொடக்கம் :

ஓம்
அம்மை துணை
திருவெண்ணெய்நல்லூர் மங்கைநாயகி மாலை
காப்பு
நேரிசை வெண்பா

மற்புழன வெண்ணெய்நகர் மன்னுமங்கை நாயகிமேல்
சொற்பொருள்சூழ் பாமாலை சூட்டுதற்குப்—பற்பலவாம்
நிகண்டு—27

நல்லாவி நாயகனை நால்வா யொருமுக்கட்
பொல்லாவி நாயகனைப் போற்று.

முடிவு :

பூவிடை வாழுயன் போற்றற் கரிய புகழினைப்புன்
பாவிடை யேத்திய குற்றம் பொறுத்துப் படியளந்த
சேவிடை யீசனு நீயுமெப் போதுமென் சிந்தையினு
நாவினு நின்றருள் வெண்ணெய்நல் லூர்மங்கை
நாயகியே. (100)

திருவடிவேலன்.
9—6—1941

Tiruvennainallur Mangainayaki Malai

Size: 21×17. Pages: 51. Lines: 8 on a page. Condition: good.

Note : The Ms. contains 100 verses sung by Rasappa Navalar in praise of Devi Mangai Nayaki of Tiruvennainallur in South Arcot District. Printed.

487. திருநீர்மலை ரங்கநாயகர் மாலை (நூல் எண் 360)

அளவு : 21×17. வரிகள் : 4.
பக்கங்கள் : 53. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருநீர்மலையில் எழுந்தருளியுள்ள ரங்கநாயகப் பெருமாள்மேல் பாடப்பெற்றது. இப்பிரதியில் காப்பு உள்பட 53 பாக்கள் உள. ஐம்பது பாடல்களில் அமைந்தது இம்மாலை என்பது 52-ஆம் பாடலால் அறியப்படுகின்றது. ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை.

தொடக்கம் :

உ
ஸ்ரீ ராமஜயம்
திருநீர்மலை ரங்கநாயகர் மாலை

காப்பு

காமத்த யானை முகத்தா னொருகைக் கனியனைப்
பூமத்தஞ் சூடிய செல்வ விநாயகன்பொற்பதமே
யாமத்த னெங்கள் திருநீர் மலைய னந்தத்திரு
நாமத் தனிரங்க நாயக மாலை நவிலுதற்கே.

முடிவு :

திருநீர்மலை ரங்கநாயகர் மாலை முற்றும்
ஒருமலை யேந்தி நிரைபுரந் தோனன்பர் உள்ளமதில்
பொருமலை நீக்கிநல் மைந்தரெண் புகழ்தருஞ்சீர்ப்
பெருமலை யாகுந் திருநீர் மலைரங்கர் பேரருளால்
திருமலை பூபன் திருமலை போலச் சிறந்திடவே. (53)

Tiuneermalai Ranganayakar Malai

Size: 21×17. Pages: 53. Lines: 4 on page. Condition: good.

Note : The Ms. contains 53 verses on Ranganatha Perumal of Tiruneermalai, near Pallavaram, a suburb of Madras.

488. திருப்பழனியாண்டவர் பல்சந்தமாலை

(நூல் எண் 382)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 17. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பழனி மலையில் எழுந்தருளிய முருகப் பெருமானைப் பற்றிப் பாடிய நூல். இந்நூல் பழனியில் 1925ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23உ இயற்றியது எனக் குறிக்கப்பெற்றுள்ளது. இப்பிரதியில் பாயிரம் 3 கவியும், நூல் பல்வகைச் சந்த விருத்தங்களில் 100 கவிகளும், வாழ்த்து 1 கவியும் ஆக 104 கவிகள் உள்ளன. இறுதியில் இந்நூலாசிரியராகிய சுப்பிரமணிய ஐயர் அவ்வப்போது பாடிய 8 கீர்த்தனங்கள் உள்ளன.

தொடக்கம் :

உ

சிவகுருநாதன் துணை

திருப்பழனியாண்டவன் பல்சந்தமாலை

பழனியில் 1925ஆம் ஞூ மார்ச்சுமீ 23உ இயற்றியது

விநாயகர் காப்பு

நேரிசை வெண்பா

வில்சந்தத் தென்பழனி வேல்முருகே சக்கடவுள்
பல்சந்தப் பாமாலை பாடவே—சொல்சந்தம்
தங்கத்தான் மான்மருகன் சங்கரனார் மைந்தன்மா
தங்கத்தான் பொற்றுள் சரண்.

முடிவு :

வாழி விருத்தம்

வேதமுறை மகமல்க வேதியர்தந் நெறிவிளங்க
விரிநீர் வானம்
ஏதமறப் பொழிந்தவனி யிலகுமுயி ரெவற்றினுக்கு
மிடர்போய் வாழ்க
பூதலமா வரசர்கோற் புகழ்வாழ்க சுப்ரமணி
புகலும் பாடல்
ஓதுபவ ருங்கேட்போர் நீடுழி வாழ்கவென
வுரைத்து மாதோ.

———

கணபதி துணை
திருச்சிற்றம்பலம்
திருப்பழனியாண்டவர் பல்சந்தமாலை

இஃது

'கோயமுத்தூர் நகரவாசியும் கவீசுவர குலோத்பவருமான கவீசுவர நஞ்சண்டய்யரவர்கள் குமாரன் இஞ்சினீராபீசுகளில் மானேஜராயிருந்து இப்போது பென்ஷன் பெற்றுவரும் கவீசுவர சுப்பிரமணிய ஐயரால் இயற்றப் பெற்றது'

முகப்புப் பக்கத்தில் இவ்வாறு காணப் பெறுகின்றது.

Tiruppazhaniandavar Palsanda Malai

Size: 21×17. Pages: 17. Lines: 18 on a page. Condition: good.

Note : The Ms. contains 100 verses and eight kirtanas sung on 23rd March 1925 on Lord Pazhaniandavar.

489. பழனுபுரி இரட்டைமணிமாலை (நூல் எண் 663b)

அளவு : 21×17. வரிகள் : 24.
பக்கங்கள் : 4 (13 to 16) நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி பழனுபுரியில் எழுந்தருளியுள்ள இறைவனைப்பற்றி வெண்பா, கலித்துறைகள் கொண்ட நூல். அச்சானதாகத் தெரியவில்லை. இப்பிரதியில் 663-முருகேசர்ப் பதிகம், 653a-தெண்டபாணிப் பதிகம். 663c-சிவகிரி ஒலிய லந்தாதி என்ற நூல்கள் உள்ளன.

தொடக்கம் :

உ

பழனியாண்டவன் துணை

பழனுபுரி இரட்டை மணிமாலை

காப்பு

இரட்டை மணிமா லிகையினை யிசைப்ப
வருட்டனி முதலா மைங்கரன் காப்பு.

வெண்பா

சீராட்டி நின்னைத் திருவடிக்கா ளாக்கியன்பு
பாராட்டிக் காத்த பழம்பொருட்கு—நீராட்டிச்
சந்தனமும் பத்திரமுஞ் சாத்துவையே நெஞ்சகமே
சந்தனத்தை யேபெறுவை தான்.

கலித்துறை

இடந்தங் தனேகசெல் வங்களை யுந்தந்து மெத்தொழிற்குந்
திடந்தந்து நூறு வயதினை யுந்தந்துஞ் செந்தமிழ்ப்பொற்
றடந்தந்து மீறிநின் சேவடி தந்துபூந் தண்கடப்ப
வடந்தங் தருள்பழ னுபுரி மேவிய வானவனே.

Pazhanapuri Irattaimani Malai

Size: 21×17. Pages: 4. Lines: 24 on a page. Condition: good.

Note : The Ms. contalns Irattaimani Malai on the Lord at Pazhanapuri. It also contains other miscellaneous works.

490. பெரியநாயகி இரட்டைமணிமாலை

(நூல் எண் 618b)

அளவு : 21 × 33. வரிகள் : 20.
பக்கங்கள் : 6. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பெரியநாயகி அம்மைமீது டாக்டர் ஐயரவர்கள் பாடிய நூல். இப்பிரதியில் 618a-திருச்செந்தின்மாலை, 618-மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அந்தாதி, 618c-பரதசாஸ்திரம் ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பெரியநாயகி
இரட்டை மணிமாலை

காப்பு

அரட்டைமணி மாலை அகற்றுபெரி யம்மை
இரட்டைமணி மாலை இயம்பத்—தெருட்டும்
உரிவத் திரத்தன் உதவுமொரு கோட்டுக்
கரிவத் திரத்தன் கழல்.

முடிவு :

உன்று திருந்ததி னென்றுய் முடிந்த தொழிகவினிப்
பொன்னுர் குடந்தையிற் கீழ்க்கோட்டம் மேவிய புத்தமுதை
அன்று வருளெனப் பன்னுளும் போற்றி அகமகிழ்ந்து
தென்று தெனுவெனப் பாடிட வோர்வழி தேர்திநெஞ்சே.

Periyanayaki Irattaimani Malai.

Size: 21×33. Pages: 6. Lines: 20 on a page.
Condition: good.

Note: The Ms. contains the prabandham written by Dr. Iyer on Devi Periyanayaki of Kumbakonam.

491. மதன விஸ்தார மாலை

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 4. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் ஊற்றுமலை ஜமீன்தார்பேரில் பாடப்பட்டது. கலிவெண்பாவாலாயது. 43 கண்ணிகளுடன் அபூர்த்தியாக உள்ளது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. தாய் மகளேசல். விசயரகுநாதர் கோவை என்னும் நூல்களும், முனிமொழியிற்றிரட்டு என்ற 4 பாடல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

மதன விஸ்தார மாலை

பூமருவு வாழ்வு பொருந்துமரு தப்பனுக்கு
மாமதன விஸ்தார மாலைசொல்ல—நாமகிழத்
தாங்கயமற் றுந்தலைமுன் னுலுகரஞ் சத்திகொண்
காங்கயனும் பிள்ளையார் காப்பு.

முடிவு :

— துங்கமலர்
அம்பா லரம்பையருக் காசைகொண்டோர் வேள்விசெய்து
வெம்பாத புங்கவராய் மேவுவார்—தெம்பாக
எந்தவித நீங்கினைத்தா யென்றுலு மூவுலகு
மந்த விதநடக்கு மங்கசனை—வந்தவர்க்குத்

....

Madana Vistara Malai.

Size: 21×33. Pages: 4. Lines: 26 on a page. Condition: good.

Note : The Ms. contains 43 kannis (incomplete) in praise of the Zamindar of Uttrumalai.

492. மதுரைத் திருப்பணி மாலை (நூல் எண் 628)

அளவு: 21×33. வரிகள்: 30.
பக்கங்கள்: 47. நிலை: பழமை.

குறிப்பு: மதுரை மாநகரத்தின் ஆதி வரலாறு, பொற்றாமரைத் தடாகம், வாகன முதலிய சிவதர்மங்கள் இன்ன காலத்து, இன்னார் இன்னாரால் இவ்வாறு இயற்றப்பெற்றன என்று முறைப் படப் பாடப்பெற்றதொரு நூல். இந்நூலில் சுவாமியுடையார் தம்பிரானார் கபாலி உடையார் காலம் முதல் கும்பினியார் காலம் வரை மதுரையில் நடந்த திருப்பணிகளைத் தொகுத்துக் கூறியதன் பின்னர் மதுரைத் தல வரலாறும் உரைநடையிற் கூறப்பெற்றுள்ளது.

தொடக்கம்:

கணபதி துணை

சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானார் கபாலி உடைய நாயனார் திருக்கோவில் தானிகாள் ஆதி வரலாறு.

ஆதியில் புராண சித்தமாய குலசேகர பாண்டிய மகாராஜா நாளையில் கல்யாண நகரத்தில் பட்டாபிஷேகம் பண்ணுவித்துக் கொண்டு ராச்சிய பரிபாலனம் பண்ணி வருகிற நாளையில் காரணாந்திரமாய் நகரிக்கு வந்து தேவதானி சர்மமாணமா யிருக்கப்பட்ட இந்திர விமான வாசகராகிய மீனாட்சி சுந்தரேசுவராளையும் பொற்றாமரைத் தடாகத்தையும் கண்டு தரிசனம் பண்ணி அப்பால் பட்டணமும் உண்டுபண்ணுவித்துச்

சுவாமியைப் பூசை பண்ணுகிறதற்கு வடக்கேயிருந்து பிராமணனை வரவழைத்துச் சாஸ்திரப் பிரகாரம் பூசையும் நடப்பிவித்துச் சிறிது திருப்பணியும் நடப்பிவித்துச் சுந்தரலிங்கமே குலதெய்வ மென்பதாய் ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

முடிவு:

முன்தி வரணத்தில் நிருபரக் கிராமம், கட்டளைக் கிராமம், அர்ச்சனாபரக்கிராமம் இதுகளெல்லாம் அவாளவாள் தாவந்தமாய் ஒத்திப் போட்டபடிக்கு பீமராயரவர்கள் ஸ்தலத்தார் ரொம்ப வும் கையிளைத்துப் போய்விட்டார்களென்று அபிமானமாய் ஒத்திப்பட்டாவும் குத்தகைப் பட்டாக்களையெல்லாம் வர வழைத்து அரண்மனையிலே வாங்குவித்து வைத்தார்கள். அந்த விருத்தாந்தம் அப்படிக்கு இருந்தது. சிமையளிலும் மழை வரித்து சுகமாயிருந்தார்கள். மாசி மீ சிவராத்திரியும் மண்ட லோத்ஸவமும், பங்குனி மீ வசந்தத் திருநாளும் திருப்பரங் குன்றம் திருக்கல்யாண உத்ஸவமும் வெகு விமரிசையாய் நடந்தது.

Madurai Tiruppani Malai

Size: 21×33. Pages: 47. Lines: 30 on a page. Condition: old.

Note: The Ms. contains the poetical work describing the constructions and renovations done in the temple at Madurai and also an account of various charitable endowments created by different persons.

493. மதுரைத் திருப்பணி மாலை (நூல் எண் 629) (டாக்டர் ஐயரவர்களின் குறிப்புக்களுடன்)

அளவு: 21×17. வரிகள்: 16.
பக்கங்கள்: 51. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதியில் மதுரைத் திருப்பணி மாலை 125 பாடல்களும், ஐயரவர்கள் குறிப்புக்களும் உள்ளன.

தொடக்கம்:

உ
கணபதி துணை
திருப்பணி மாலை
தெய்வேந்திரன் செய்தது

எண்ணரிய தானசதுர் யுகந்தனக்கு முன்ன
மிந்தவுல கத்தடைந்து கடம்பவனத் தெய்தி,

புண்ணியத்தெண் ணீரம்பொற் றாமரையி லாடிப்
பொற்கமலங் கொய்துகடம் பாடவிநா யகனைத்
தண்ணளியா லருச்சனைசெய் தட்டகசந் தாங்குந்
தமனியவிந் திரமான மெனுங்கருப்பக் கிரகம்,
விண்ணுலகும் பணிந்தேத்த... வமைத்தான்
விருப்பொடுதெய் வேந்திரனும் விண்ணவர்நா யகனே.

முடிவு:

மஞ்சட் காப்பாயி

தட்டுப் புழுகு குளிர்மாலை சாமரந் தண்மஞ்சனம்
பட்டுத் துகில்மஞ்சட் காப்புடன் செய்துசம் பாக்கட்டளை
யெட்டுத் திசையும் புகழ்கயற் கண்ணிக்கு மீசுரற்கும்
மட்டுற்ற சொன்மஞ்சட் காப்பாயி யாவும் வகுத்தனனே.

Madurai Tiruppani Malai

Size: 21×17. Pages: 51. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 125 verses of Madurai Tiruppani Malai with notes by Dr. Iyer.

494. மதுரைத் திருப்பணிமாலை (டாக்டர் ஐயரவர்கள் குறிப்புக்களுடன்) (நூல் எண் 630)

அளவு: 21×17. வரிகள்: 15.
பக்கங்கள்: 53 (52 to 103) நிலை: நல்ல நிலை.

குறிப்பு: முன் கூறிய மதுரைத் திருப்பணி மாலையின் இரண்டாம் பகுதி. இப்பிரதியில் கிருஷ்ண வீரப்ப நாயக்கர் திருப்பணியிற்றொடங்கி 127 பாடல்கள் பொக்கிஷம் சொக்கநாத பிள்ளை திருப்பணி வரை உள்ளன.

தொடக்கம்:

கிருஷ்ண வீரப்ப நாயக்கர்

பொன்னுடை தாரமோர் பொற்படிக் கம்பொன்னின் றளிகை
பொன்னடைப் பஞ்செம்பொற் காளாஞ்சி நல்லபுகழ்
வெள்ளியா
விந்நில மெண்ணிரு சிங்காதனம் வெள்ளி யெட்டணை
மின்னிய சீர்வெள்ளியானைதந் தான்கிருஷ்ண வீரப்பனே.

முடிவு:

அள்ளிருட் கார்க்கிழ லங்கயற் கண்ணம்மைக் கானதிருப்
பள்ளி யறைக்குமுன் சன்னதி வாயிலின் பண்புபெறத்
தெள்ளிய வெண்கலத் தோரண தீபஞ் சிறக்கவுந்தன்
உள்ளன்பு கூர்ந்து எல்லாக் கினைசொக்க னுதவினனே

Madurai Tiruppani Malai

Size: 21×17. Pages : 53. Lines : 15 on a page. Condition : old.

Note : This is the second part of the previous one.

495. திருமயிலைக் கற்பகவல்லி மாலை (நூல் எண் 387)

அளவு: 21×33. வரிகள்: 36.
பக்கங்கள்: 71 நிலை: பழமை.

குறிப்பு: திருமயிலாப்பூர்க் கற்பகாம்பிகைபேரில் பாடப் பெற்றது; காப்புஉள்பட 105செய்யுட்களை உடையது. உரையுடன் கூடியது. 'கற்பகவல்லி நாயகியே' என்ற மகுடத்துடன் அமைந்தது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம்:

பொன்னகரும் பூமலரோன் கருமாலின்
பொற்புறு வைகுந்தமு நற்கயிலையு மீதென்ன
மன்னுதிரு மயிலை நகர்வாழ்வாய்......
கற்பகவல்லி மாலை தனைப்பாட
மின்னுமொளி திகழும் பரஞ்சிவ............
விரைமருவும் வெண்கமல மீதுறை.........பதியும்
பன்னுமறை யயன்றிரு மாலமரர் முனிவரரும்
பரவிய சிடர் கூத்தாடுங் கணபதி காப்பாமே.

முடிவு:

வாழிமா மயிலைக் கபாலீசர் வாழி,
வாழி கூத்தாடுமைங் கரனுர்
வாழிசிங் காரவேலரும் வள்ளியா மனையுமா மயிலையிலேறும்
வாழியாம் வீரபத்திரக் கடவுள் வாழி முத்தமிழரை மூவர்
வாழி மாணிக்க வாசகர் வாழி வாழி கற்பகவல்லி வாழி.

Tirumayilai Karpakavalli Malai

Size : 21×33. Pages : 71. Lines : 16 on a page. Condition : old.

Note ; The Ms. contains 105 verses with notes sung in praise of Devi Karpakavalli of Mylapore, Madras.

496. திருவானைக்காத் திருப்பணி மாலை (நூல் எண் 718a)

அளவு: 21 × 33. வரிகள்: 19.
பக்கங்கள்: 21. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருவானைக்கா என்ற தலத்தில், சோழன் செங்கணான்முதல் மாணிக்கவாசகன் வரை நாற்பத்துமூவர் செய்துவைத்த திருப்பணியை விளக்கி 56 பாடல்களில் கூறுவது இத்திருவானைக்காத் திருப்பணி மாலை. ஆசிரியர் பெயரும், இந்நூல் அச்சானதுபற்றிய விவரமும் அறியக்கூடவில்லை.

தொடக்கம்:

உ
சிவமயம்

திருவானைக்காத் திருப்பணி மாலை-பஞ்சப்பிரகாரங்கள்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானை தன் செய்யபொற் பாதமே.

3. தெண்டிரை சூழ் ஞானதலந் தனிற்சிலந்தி
வாயினூல் பந்தரிட்ட விடமதனிற்
செம்பொற் கோயிலுடன் திருச்சால
செண்டிகையு மண்டப கோபுரஞ் சிகரமதில்
மாளிகையுந் தந்திபுகா வாசலுடன்
மாடவீதி பதினெண்மடமு
மெண்டிசை கம்ப மண்டப மீதிற்சிவ லிங்கமு
மிடபக் கொடி முழுவதிரத்திரு விழாவிரோடு
மகபூசை யேற்றி வைத்தான்
வண்டிரையு மலர்ப் பொழில்சூழ்
தில்லை நடங் கொண்டுவளர் சுபதேவ னருள்
மைந்தனென வவதரித்தசெங்கணான் சோழன்
ருனே.

முடிவு:

56. கற்பாந்த காலத்தில் புவனமெல்லாங் கவிப்படித்தி
நீறணிந்து
வெப்பான திரச் செழுநீர்த்திரன் வடிவானவர்
செம்பு நாயகர்க்கு

ஒப்பான நீலோற் கருங்கற் சிங்காசன
மொன்றுவந்து செய்தான்
வைப்பார்........தருமாணிக்க வாசகன் சைவ மாதவனே.

ஐயரவர்கள் குறிப்பு:

(56) இச்செய்யுள் "சங்கணி குழைக்காதர்" என்னும் 44 ஆம் செய்யுளுக்கு முன்னே இருந்தது.

Tiruvanaikka Tiruppani Malai

Size: 21×33. Pages: 21. Lines: 19 on a page. Condition: good.

Note : The Ms. contains 56 verses about the Tiruppani of Tiruvanaikka temple from the period of Cholan Senkanan to Manikkavachakar.

497. திருவானைக்காத் திருப்பணி மாலை (நூல் எண் 416)

அளவு: 21×33. வரிகள்: 25.
பக்கங்கள்: 9. நிலை: மிகவும் சிலமாக உளது.

குறிப்பு: நூல் எண் 718a இந்நூலின் பிரதியாகும்.

Tiruvanaikka Tiruppani Malai

Size: 21×33. Pages: 9. Lines: 25 on a page. Condition: injured.

Note : The Ms. same as the previous one.

498. வகுளாபரண மாலை (நூல் எண் 676)

அளவு: 21×33. வரிகள்: 25.
பக்கங்கள்: 8. நிலை: சிதிலம்.

குறிப்பு: வைணவ ஆழ்வார்களிற் சிறந்தவராகிய நம்மாழ்வார்மீது துதியாக 16 விருத்தங்கள் கொண்டது இப்பிரதி. ஆசிரியர் பெயர், பிற விவரங்கள் அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

உ
ஸ்ரீ ராமஜயம்
அன்னை வயிற்றி லவதரித்த வந்நாண் முதலா யிதுவரையு
மலையிற் றுரும்பா யங்குமிங்கு மலைந்து திரிந்து தடுமாறிப்

பொன்னை விரும்பிக் கலைவிரும்பிப் பொசிப்பை விரும்பி
மெலிந்ததல்லாற்
பொருனை நதியில் முழுகியொரு பொழுதா கிலுமே
தொழுதேனோ
வுன்னை விரும்பி யொருகவிதை யுள்ளமுருக வுரைத்தேனோ
வுனது திருவாய் மொழிப்பொருளை யுரைப்போர்க் கடிமை
புகுந்தேனோ
வுன்ன மலர்ப்பங் கயப்பதமெவ் வாறு தருவாய் (மாறப்)
பெருமானே(எனவழைத்த)
வரிசைப் பெருமாள் குருகைநகர் வகுளாபரணப்
பெருமானே.

முடிவு :

எழுத இயலாத நிலையில் சிதிலமாகவுளது.

Vakulabarana Malai

Size: 21×33. Pages: 8. Lines: 25 on a page. Condition: injured.

Note : The Ms. contains 16 verses about Nammalvar.

499. வயலூர் இரட்டைமணிமாலை (நூல் எண் 647a)

அளவு : 21 × 33. வரிகள் : 36.
பக்கங்கள் : 30. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : வயலூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்றது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இடையே பாடல் 3-4 இல்லை. காப்பு 2 செய்யுட்களும், நூலில் 18 செய்யுட்களும் உள்ளன. இப்பிரதியில் மாசிலாமணி தேசிகர் நெஞ்சுவிடுதூதும் உள்ளது. குறைப் பிரதி.

தொடக்கம் :

சீராரும் தண்வயலூர் சேவற் கொடியுடையோன்
நாரார் இரட்டைமணி நன்மாலைக்—கோர்துணையா
மாதங்க வத்திரத்து மான்முதலோர் ஊரகற்று
மாதங்க வத்திரத்து மன்.

நூல்

கார்கொண்ட பூஞ்சோலை கண்ணுரைச் சூழ்ந்தோங்கி
ஏர்கொண்ட தண்வயலூர் எம்பெருமான்—சீர்கொண்ட
பூம்பதத்தைப் போற்றிப் புனைபதமல் லாமனமேல்
ஆம்பதமென் னெஞ்சே யறை.

முடிவு :

துய்ய மனத்தன் புறநற வார்ந்து துதைமணங்கால்
செய்ய மலர்கொடு தூவிநின் றேதுதி செய்யடியார்க்
கையன் மலர்த்தடஞ் சூழ்வய லூரின் அமர்தருவேற்
கையன் பொழியு மருள்போற் பொழிகுக கார்க்குலமே.

Vayalur Irattaimani Malai

Size : 21×33. Pages: 30. Lines: 36 on a page. Condition: injured.

Note : The Ms. contains 20 verses of **Irattaimani Malai** sung in praise of Lord Muruga of Vayalur in Trichy **District.**

விலாசம்

500. இரத்தினகர விலாசம் (நூல் எண் 213)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 13. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வடகரை ஆதிக்கம் பெரியசாமித் துரையவர்கள் பேரில் இயற்றப்பெற்றது. இந்நூல் சிருங்காரரசம் பொருந்தியது. இப்பிரதியில் 13 பாடல்களே உள்ளன. ஆசிரியர் திருமலைவேற் கவிராயர். அச்சானது.

தொடக்கம் :

(1)

ஹரி ஓம். நன்றாக.

இரத்தினகர விலாசம்

மண்டலா திபர்கொண் டாடு மன்னவன் பெரிய சுவாமி
கொண்டல்போற் கனக மாரி கொடுத்தருள் முகுந்தன்மீதே
யெண்டிசை புகழுங் கீர்த்தி யிரத்தின கரவி லாசத்
தண்டமிட் டொருகோட் டுச்சித் தந்தியைச் சிந்தை
செய்வாம்,

முடிவு :

புண்டரீகக் கண்டகமே
புகலு முடங்கற் கண்டகமே
போர்வே ளெடுத்தாள் கொக்கரையே
பொன்னூர் மாதக் கொக்கரையே.

Vilasam

Ratnakara Vilasam

Size: 21×33. Pages: 13. Lines: 24 on a page. Condition: good.

Note : This is a vilasam on Vadakarai Adhikkam Periyaswami Durai, consisting of 13 poems by Tirumalai Vel Kavirayar.

501. இரத்தினாகர விலாசம் (நூல் எண் 366b)

அளவு : 21×33. வரிகள் : 32.

பக்கங்கள் : 33. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 213இன் படியே. இப்பிரதியில் 101 பாடல்கள் உள்ளன. பூர்த்தி. அச்சானது.

தொடக்கம் :

மண்டலா திபர்கொண் டாடும் மன்னவன் பெரிய சாமி
கொண்டல்போல் கனக மாரி கொடுத்தருள் முகுந்தன் மீதே
யெண்டிசை புகழும் கீர்த்தி யிரத்தி னாகரவி லாசத்
தண்டமிழ்க் கொருகோட் டுச்சித் தந்தியைச் சிந்தை
செய்வாம்.

முடிவு :

வாழி திறல்செம்புலிப்பட்டம் வாழிகிழுவை வடகரையும்
வாழி துரைச் சின்னணைஞ் சேந்த்ரன் மைந்த பெரிய சுவாமி
யெங்கோன்
வாழிஅவன் கைக்கட்டாரி வாழி துணைச் சங்கரலிங்கம்
வாழி யிராமசாமி முகில் வாழி முத்துசாமி நிதிவாழி
திருமலைப்பெருமான்வாழி

வாழிபுகழ்ச் சங்கரமால் முத்திருளப்பன் பேரும்
வாழிமந்தி ரித்தலைவர் வாழிகிளை தன்மக்கள்
மருமக்கள் சேனைபரிவாரம் வாழி தரும
நீதி செங்கோல் வாழியிரத்தி னாகரமம்.

வடகரைப் பிர தானி பொன்னம்பலம்பிள்ளை பௌத்திரராகிய திருமலை வேலுப்பிள்ளை பாடிய இரத்தினாகர விலாச முற்றிற்று.

Ratnakara Vilasam

Size: 21×33. Pages: 33. Lines: 32 on a page. Condition: good.

Note : Copy of the previous one.

502. (வடகரை யாதிக்கன்) இரத்தினுகர விலாசம்
(நூல் எண் 367b)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 51. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 366-ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Ratnakara Vilasam

Size: 21×33. Pages: 51. Lines: 22 on a page. Condition: good.

Note : Same as the previous one.

503. சமுத்திர விலாசம் (மூலமும் உரையும்)
(நூல் எண் 155)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 24. நிலை : சிதிலம்.

குறிப்பு : சமுத்திர விலாசம் என்னும் இந்நூல் எட்டையபுரத்தில் வாழ்ந்த வேங்கடேசுர எட்டப்பனைச் சிறப்பித்துப் பாடியது. அகப்பொருட்சுவைபட அமைந்தது. பல இடங்களில் கடலைப்பற்றிய சிலேடைகள் அமைந்துள்ளன. ஆசிரியர் கடிகை முத்துப் புலவர். இப்பிரதியில் 20 செய்யுட்கள் உரையுடன் உள்ளன. அபூர்த்தி. அச்சானது.

தொடக்கம் :

காப்பு

விருத்தம்

விருதிடு சரண ராசன் வெங்கடே சுரவெட் டேந்த்ரன்
ஒருதிடப் புருடன் கீர்த்தி யுயர்சமுத் திரவி லாசங்
கருதிடத் தமிழாற் சொன்னேன் கயமுகத் தசுரன் வீழப்
பொருதிடர் களையத் தாக்கும் புகர்முகக் களிறு காப்பாம்.

முடிவு :

குரங்குக்கும் மாலுக்கும் சிலேடை

உரங்கொண்டிருக்கும் மாக்கனியை
யுந்திக் கமலத் துறவேதன்.

உரை: (குரங்குக்கு) உரம்கொண்டிருக்கும்-வேகமாகத் தாவிக் கொண்டிருக்கும்; மா கனியை-பெரிய பழங்களைப் பறித்து; கமலத்து உற - தாமரைத் தடாகத்துட் பொருந்த; உந்தி-எற்றி வீசி, தன் ஓங்கு கையினால் அளிக்கும்-தனது நீண்ட கையினால் எறியும்; மருளுடனே பொருந்தும்-மயக்கத்துடனே பொருந்தும்; வனம் தரிக்கும்-காட்டில் சஞ்சரிக்கும்.

(திருமாலுக்கு) மாக்கனியை-இலக்குமி தேவியாரை. உரம் கொண்டிருக்கும்-மார்பில் வைத்துக்கொண் டிருப்பவர்; வேதன்-பிரமதேவர்; உந்திக் கமலத்து உற-தமது திருவுந்தித் தாமரையில் பொருந்த; தன் ஓங்குகையினால்-தம் உயர்ச்சியால்; அளிக்கும்-உண்டாக்காநிற்பர் அருளுடனே.

Samudra Vilasam

Size: 21×33. Pages: 24. Lines: 35 on a page. Condition: injured.

Note : The Ms. contains 20 poems with notes and deals with a chieftain. Author: Kadigaimuthu Pulavar.

504. சமுத்திர விலாசம் (நூல் எண் 197)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங்கள் : 23. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 155ஆம் எண்ணைப் பிரதி செய்தது.

Samudra Vilasam

Size: 21×33. Pages: 23. Lines: 36 on a page. Condition: good.

Note : Copy of the previous one.

505. சமுத்திர விலாசம் (நூல் எண் 602)

அளவு : 21×33. வரிகள் : 24.
பக்கங்கள் : 30. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இதுவும் 155ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Samudra Vilasam

Size: 21×33. Pages: 30. Lines: 24 on a page. Condition: good.

Note : Copy of the previous one.

506. பூகோள விலாசம் (நூல் எண் 608)

அளவு : 21×33. *வரிகள் :* 23.
பக்கங்கள் ; 39. *நிலை : நல்ல நிலை.*

குறிப்பு : பூலோகத்தின் வரலாறுகளைக் கூறுவது. இது மருதூர் ஆபதுத்தாரணர் என்பவரால் இயற்றப்பெற்றது. அச்சானது.

தொடக்கம் :

வணக்கம்

அத்திமுகன் கழல்வணங்கி நாகலிங்கக்
கடவுடிரு வடிகள் போற்றி
யுத்தமியா மழகியநா யகிபாதந்
தொழுதேத்தி யுலகி லாறு
வத்திரன்றன் சரண்பணிந்து சற்குருவி
னிணைமலர்த்தாள் மனத்துள் வைத்து
வித்தகவா ணியினருளாற் பூகோள
விலாசமதை விளம்ப லுற்றும்.

முடிவு:

இன்னுன்கும் நிடசைகற்பமே நிருத்தஞ் சந்தசுஅஞ்
சொன்ன வியாகரணஞ் சோதிடமும்—மின்னேயிவ்
வங்கமோ ராறு மருங்கா மிகமுடனே
சிங்கார யோகசமுஞ் சிந்திதமும்-மங்காத
காரணம்பின் ஞமசிதங் காட்சியகு ணற்றீர்த்த
மாரண கருஞ் சகத்திர மங்குசமான—பார்பு கழுஞ்...

Bhoogola Vilasam

Size; 21×33. Pages: 39. Lines: 23 on a page. Condition: good.

Note : The Ms. contains verses composed by Apathuddhatanar describing the geographical details of the world.

வெண்பா முதலியன

507. அன்பர் போற்றிக் கலிவெண்பா (நூல் எண் 52)

அளவு : 21×33. வரிகள்: 2.
பக்கங்கள்: 13. நிலை: கிலமாக உள்ளது.

குறிப்பு: திருத்தொண்டத் தொகையில் வரும் அடியார்களைப் போற்றிக் கலிவெண்பாவால் பாடிய நூல். 186 கண்ணிகளைக் கொண்டது. இடையிடையே கண்ணிகள் சிதைந்துள்ளன. ஆசிரியர் தியாகராச தேசிகர். அச்சானது.

தொடக்கம்;

சீர்கொண்ட வெந்தையருள் செய்திருத்தொண் டத்
தொகைமுன்
னேர்கொண் டிடவைத் தியம்பவே—பேர்கொண்ட
எல்லைநால் வேதமுறை யேத்துஞ் சிவகணமாந்
தில்லைவாழ் அந்தணர்தம் சீர்போற்றி.

முடிவு:

— செயல்பெருகு
மந்நாட் பணிவிடைபூண் டம்பிகைபொற் றுள்விரவி
யெந்நாளும் வாழு மியல்போற்றித்—தென்றுறூர்
வாழ்திருக்கூட் டச்சதக மாலை வகுத்தோதிக்
காதலன்பர் போற்றிக் கலிவெண்பா—ஓதினன்
சீரார் சதாசிவ தேசிகன்செல் வன்கருணை
கூர்தியாக ராச குரு.

அன்பர் போற்றிக் கலிவெண்பா முற்றும்.

திருச்சிற்றம்பலம்

Venba etc.,

Anbar Potri Kalivenba

Size: 21×33 Pages: 13. Lines: 2 on a page. Condition: injured.

Note : The Ms. contains 186 kannis in Kalivenba on Nayanmars referred to in Thiruthondathogai.

508. இராமாயண வெண்பா (நூல் எண் 69)

அளவு: 21×33. வரிகள்: 27.
பக்கங்கள்: 52. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இராமனுடைய வரலாற்றை அமைத்து அந்தாதியாக வெண்பாவில் பாடப்பெற்ற நூல். இதில் பள்ளியடைப் படலம் வரை 306 வெண்பாக்கள் உள்ளன. இந்த நூல் பாயிரத்தில் இராமனுசன் சீர்வெண்பா வையாயிரம் என்ற பாடலால், ஆக்கியோன் பெயர் அறியப்படுகின்றது. வேறு விவரம் தெரியவில்லை. அபூர்த்தி.

தொடக்கம்:

உ
சிவமயம்
ஹரி: ஓம். நன்ருக.
இராமாயண வெண்பா அந்தாதிக்குக்
கடவுள் வாழ்த்து

திருவா ரயோத்தியர்கோன் சேயாகிச் சீதை [தம்]
மருவார்தோள் சேர்ந்து வனம்போய்க்-குரைகடலைத்
தாண்டி யரக்கன் றலைகடிந்து லோகமுய்ய
ஆண்ட அண்ணல் தாள் துதிசெய் வாம்.

மாவாதி சேடன்மண வாளமுனி வன்மரபின்
மேவுபட்சி ராசன்சேய் மேன்மகிழ்த்தார்த்—தேவருள்சேர்
வேதனிரா மாநுசன்சீர் வெண்பாவை யாயிரத்தி
ஞேதினனி ராமகதை யோர்ந்து. (14)

முடிவு:

எவ்வுலகுந் தன்வயிற்றி னேய்ந்தநா ராயணனை
யிவ்வுலகத் தேபானன் றென்றியம்பி-னவ்வவர்கள்
சேர்நரகுந் தேவரைநிந் திப்போர்தெய் வங்கள்பொய்யென்
ருர்பவமுஞ் சேர்வனென்ரு ஞெங்கு. (33)

Ramayana Venba

Size: 21×33. Pages: 52. Lines: 27 on a page. Condition: good.

Note: The Ms. contains 306 venbas composed by one **Ramanujan upto Palliyadaippadalam.**

509. சிவகாமியம்மை கலிவெண்பா (நூல் எண் 230)

அளவு: 21×33. வரிகள்: 35.
பக்கங்கள்: 7. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இந்நூல் தில்லைச் சிவகாமி அம்மையின் பெருமையை விரித்துக் கலிவெண்பாவால் இயற்றியது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் காப்பு முதலிய 5 செய்யுட்களும், 96 கண்ணிகளும் உள்ளன.

தொடக்கம்:

சீர்குலவுந் தில்லைச் சிவகாம சுந்தரிதன்
பேர்கலிவெண் பாவாகப் பேசுதற்கிவ்—வார்கலிசூழ்
பொற்பொதுவி னூடும் புனிதபர னின்றவருட்
கற்பகநற் குஞ்சரமே காப்பு.

நூல்

சீர்புனையுஞ் செம்பதுமத் தேவுஞ் செழுந்துளபத்
தார்புனையுஞ் செங்கைத் தனுமாலு—மோர்புனைந்த
துங்கச் சிலைமதனைத் தூளி படச்சினந்த
கங்கைச் சடாமவுலிக் கண்ணுதலும்—பொங்குதிற.

முடிவு:

—மெல்லவே
நானன்றி நீயன்றி நாடும் பொருள்வேறாய்த்
தானன்றி நீங்காத் தமோமயமே—யேனைவினை
பந்த மறுக்கும் பரமசுகா தீதமே
தந்தருணின் றுளே சரண்.

Sivakami Ammai Kalivenba

Size: 22×33. Pages: 7. Lines: 35 on a page. Condition: good.

Note: The Ms. contains 96 verses on Devi Sivakami Ammai of Thillai (Chidambaram).

510. சிவகாமியம்மை கலிவெண்பா (நூல் எண் 564a)

அளவு: 21×33. வரிகள்: 35.
பக்கங்கள்: 7. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: நூல் எண் 230 இன் பிரதியே இது. இதில் 564-பரதம் என்ற நூலும் உள்ளது.

Sivakami Ammai Kalivenba

Size: 21×33. Pages: 7. Lines: 35 on a page. Condition: good.

Note : Copy of the previous one.

511. சிவசிவ வெண்பா (நூல் எண் 233)

அளவு: 21×33. வரிகள்: 30.
பக்கங்கள்: 75. நிலை: நிலமாக உள்ளது.

குறிப்பு: சிவசிவ வெண்பா என்னும் இவ்வெண்பா நூல் சிவசிவ என்னும் விளிகொடுத்து இயற்றப்பட்டுள்ளது. இந்நூலின் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் ஒவ்வொரு திருக்குறளை அமைத்திருக்கிறார் ஆசிரியர். இந் நூலாசிரியர் சிதம்பரம் பச்சைக் கந்தையர் மடத்துச் சென்னமல்லையர். இப் பிரதியில் காப்பு 3ம், நூல் 98ம் ஆக 101 வெண்பாக்கள் உள்ளன. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அபூர்த்தி.

தொடக்கம்:

உ
சிவமயம்
சிவசிவ வெண்பா

தெள்ளுலக நீதி சிவசிவா வென்றுதிரு
வள்ளுவர்வெண் பாவால் வழுத்துறவெற் - குள்ளதுணை
கந்தனிவீ ராருன கைமே வியகருணைத்
தந்திமுகன் செம்பதுமத் தாள். (1)

நூல்

விற்பிரம்பான் மன்னர்செயன் மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா—பொற்பின்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (4)

முடிவு:

பெருமை

நல்லூழி நான்குமனு நாரியுட னண்ணிவரி
செல்வமக வானன் சிவசிவா—ஒல்லும்
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல். (101)

Siva Siva Venba

Size: 21×33. Pages: 75. Lines: 30 on a page. Condition: injured.

Note : The Ms. contains 101 venbas composed by Chennamallayar of Chidambaram Pachhaikandaiyar madam, each verse having a Tirukkural in the later half. Edited and published by Dr. Iyer.

512. சினேந்திர வெண்பா (நூல் எண் 43)

அளவு: 21 × 17.

குறிப்பு: *இப்பிரதி மிகச் சிலமாக எழுத முடியாத நிலையில் உள்ளது.*

Sinendra venba

Size: 21×17.

Note : The Ms. is in an injured condition and not capable of being copied.

513. தினகர வெண்பா (நூல் எண் 441)

அளவு: 21 × 33. *வரிகள்:* 18.
பக்கங்கள்: 57. *நிலை:* *மிகச் சிதிலம்.*

குறிப்பு: *தொண்டை நாட்டில் கோலூரில் வாழ்ந்த தினகரர் என்பவரை முன்னிலையாக வைத்து, குறள் அதிகாரத்திற்கு ஒவ்வொன்றாக அமைத்துப் பாடப்பெற்றது. பிரதி மிகச் சிலமாக உளது. முன் பாதியில் வெண்பா வமைத்துப் பின் பாதியில் குறளைச் சேர்த்துப் பாடப்பெற்றது. 77ஆம் பாடலிலிருந்து வெண்பா முன்னிரண்டடிகளும் பின் அவ்வெண்பாவிற்குரிய குறளின் தலைப்புமட்டும் எழுதப் பெற்றுள்ளன. இந்நூல் 133 வெண்பாக்களைக் கொண்டது. அச்சானது.*

தொடக்கம்:

உ
கணபதி துணை
தினகர வெண்பா
காப்பு

முன்பாதி தன்னில் முதுதமிழின் சீர்புனைந்தே
யன்பாற் றினகரன்பே ராதரித்துப்—பின்பாதி

வள்ளுவர்வெண் பாக்குறளை வைப்பதற்குக் குற்றமெலாந்
தள்ளுவரே யானைமுகர் தாம்.

உத்தமநூல் கற்று முமாபதிக்கன் பில்லாத
சித்தருனக் கொவ்வார் தினகரா—எத்தனையுங்
கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழாஅ ரெனின்.

முடிவு:

ஊடலுவகை

வெம்மனத்தி லூடல் விளைத்துடனே கூடிமதன்
செம்மனம்போல் வாழி தினகரா—தம்மனத்தால் ஊடுதல்...

வி. சுந்தரேச ஐயர் எழுதியது. திருத்தணிகைச் சீர்கருணர் மடம் கந்த பண்டிதர் எழுதினது. 48 பாட்டு வரையில் திருநெல்வேலி அம்பலவாண கவிராயரவர்கள் பிரதியோடு ஒப்பிடப்பட்டது. (22-7-05)

Dinakara Venba

Size: 21×33. Pages: 57. Lines: 18 on a page. Condition: much injured.

Note : The Ms. contains 133 venbas, addressing Dinakarar of Kovur in Thondai Nadu. The second part of each venba contains a Kural. One verse from each chapter of the Kural has been included and hence 133 venbas from 133 chapters of Tirukkural.

514. சிராமலை வெண்பா (நூல் எண் 221)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 18. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : திரிசிராப்பள்ளியின் பெருமைகளை வெண்பாவாக அமைத்துப் பாடியது. 51ஆம் பாடலிலிருந்து சிலேடை நயம் பொருந்திக் காணப்படுகிறது. இப்பிரதியில் கடவுள் வாழ்த்து முதலிய துதிகவிகள் 5ம், நூல் 100 வெண்பாக்களும் உள்ளன. முதல் நான்கு பக்கங்களில் இந்நூலுக்குரிய சிறப்புப் பாயிரப் பாடல்கள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் சுப்பராயன் எனச் சிறப்புப் பாயிரத்தால் அறிய வருகின்றது.

தொடக்கம் :

சிவமயம்

திரிசிராமலை வெண்பா

செவ்வந்தி விநாயகர் துதி

தேமாலை வானவர்கள் செய்யுஞ் சிராமலைவெண்
பாமாலை பன்னப் பணிகுவாம் - காமாரி
தந்தருணத் தந்திகமுந் தானமழைச் செவ்வந்தி
அந்தருணத் தந்தி யடி.

நூல்

நீர்கொண்ட நேமி நிலத்தடியார் நெஞ்சம்போல்
சீர்கொண் டிலங்குஞ் சிராமலையே-ஏர்கொண்ட
மையகன லம்பகத்தார் மாலரார் வாழ்த்தரியார்
வெய்யகன லம்பகத்தார் வெற்பு.

முடிவு :

துய்ய தினைப் பைம்புனத்தும் தொல்குறவ ரில்லகத்துஞ்
செய்யவளம் பல்குஞ் சிராமலையே—வெய்யமயற்
பாதகம லஞ்சிவந்தார் பாசனத்தார் மன்றுடி
பாதகம லஞ்சிவந்தார் பற்று.

Siramalai Venba

Size: 21×17. Pages: 18 Lines: 20 on a page. Condition: injured.

Note : The Ms. contains 100 venbas describing the importance of Trichy. The author appears to be one Subbarayan.

515. சிராமலை வெண்பா (நூல் எண் 221a)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள் : 24. நிலை : பழமை.

குறிப்பு : எண் 221இன் பிரதியாகும் இப்பிரதி.

Siramalai Venba

Size: 21×17. Pages: 24. Lines: 22 on a page. Condition: old.

Note : The Ms. same as the previous one.

516. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா

(நூல் எண் 321)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 14. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : குற்றாலத்தின் பெருமையையும், திருக்குற்றால நாதரின் திருவருட் சிறப்பையும் போற்றிச் சிலேடை வெண்பாவாக அமைந்தது இந்நூல். மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரென்னும் புலவர் திலகரால் இயற்றப் பெற்றது. டாக்டர் ஐயரவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. காப்பு முதலியவை 5 பாடல்களும், நூல் 96 பாக்களும் உள்ளன. அபூர்த்தி.

தொடக்கம் :

உ
கணபதி துணை
திருக்குற்றாலச் சிலேடை வெண்பா
விநாயகர் காப்பு

சொன்னத்தா லத்துதிக்கைத் தும்பிமுகத் தாற்றுதிக்கை
கன்னத்தா லத்துதிக்கை காட்டுமே—முன்னயனைப்
பொற்றால மாமாலைப் போலிருந்த ராலிருந்தார்
குற்றால மாமாலைக் கு.

முடிவு :

பாடியபூ வண்டினமும் பாவரங்கிற் கார்மயிலும்
கோடியரா கத்திறஞ்செய் குற்றாலம்—நீடியகை
வாகருணைத் தானத்தன் வாய்மூர் மறைக்காடு
கோகருணைத் தானத்தன் குன்று.

Tirukkutrala Sledai Venba

Size: 21×33. Pages: 14. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contains 96 verses composed by Trikuta Rasappa Kavirayar, describing the greatness of Tirukutralanathar of Tirukkutralam. Edited and published by Dr. Iyer.

517. நன்னகர் வெண்பா

(நூல் எண் 134b)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 30. நிலை : பழமை.

குறிப்பு : நன்னகர் என்னும் திருக்குற்றால நகர்பற்றி வெண்பாவால் பாடப் பெற்ற நூல். ஆசிரியர் திரிகூட ராசப்ப

கவிராயர். இப்பிரதியில் 1 காப்புச் செய்யுளும், 110 வெண்பாக்களும் உள்ளன. இந்நூலுடன் இப்பிரதியில் 134-கலைசைக் கோவை, 134a – குலோத்துங்கன் கோவை என்ற நூல்கள் உள்ளன.

தொடக்கம் :

இன்னகர் வெண்பாரா தென்னையுமாட் கொண்டபிரான்
நன்னகர் வெண்பாநா னுட்கொண்டென்—முன்னமுத
மாந்தகும்ப மாமுனியுண் டாழ்கடலைத் தானுமுண்ணப்
போந்தகும்ப மாமுனியைப் போல்... (க)

பூவாய வாவிகளும் போந்தார் திருமுகமும்
நாவாய் கவிதைவரு நன்னகரே—காவிவிழிக்
காமக்கோட் டத்தியார் காத்த இராவணமா
நாமக்கோட் டத்தியார் நாடு.

முடிவு :

மட்டார் கமல வயலுமிடை மாமறுகு
நட்டார் குரவை பொங்கு நன்னகரே
யத்திரமன் றுடலா ரஞ்சப்பாத்தி ரத்திலெய்தச்
சித்திர மன்றுடலார் சேர்வு. (110)

நன்னகர் வெண்பா முற்றும்.

Nannagar Venba

Size: 21×33. Pages: 30. Lines: 32 on a page. Condition: old.

Note : The Ms. contains 110 venbas composed by **Trikuta Rasappa** Kavirayar describing Tirukkutralam otherwise called **Nannagar**.

518. நன்னகர் வெண்பா (நூல் எண் 510)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 17. நிலை : கிலம்.

குறிப்பு : 134ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Nannagar Venba

Size: 21×33. Pages: 17. Lines: 32 on a page. Condition: injured.

Note : Same as the previous one.

519. நீர்வை வெண்பா (நூல் எண் 529)

அளவு : 21×33. வரிகள்: 28.
பக்கங்கள் : 17. நிலை : மிகச் சிலமாக உளது.

குறிப்பு: திருநீர்மலை என்னும் தலத்தைப்பற்றிப் பாடியது. பன்னிரண்டடிகள் மடக்காய் வந்துள்ளன. பிரதி மிகச் சிலமாக எழுத முடியாத நிலையில் உள்ளது.

Neervai Venba

Size: 21×33. Pages: 17. Lines: 28 on a page. Condition: much injured.

Note : The Ms. contains venbas on Neervai (Tiruneer Malai).

520. பழமலை வெண்பா (நூல் எண் 574)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 27. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பழமலை என்பது திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலமாகும். அங்கே எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாடப்பெற்ற வெண்பா நூல். இப்பிரதியில் குரு தோத்திரம் 1, காப்பு 3, அவையடக்கம் 1, நூல் 100 என்று செய்யுட்கள் உள்ளன. ஆசிரியர் சிவப்பிரகாசர் மாணுக்கர் என்பது குரு தோத்திரத்தால் அறியப் பெறுகின்றது.

தொடக்கம் :

குரு தோத்திரம்

ஞானகுரு நாதனென்னை நாடியடி மைகொள்ளு
மானகுரு நாதன் மகிழ்நாத—ஞன
சிவப்பிரகா சையன் றிருவடிக்குச் சொன்னேன்
கவிப்பிரகா சம்விளங்கக் காண்.

திருச்சிற்றம்பலம். பழமலை வெண்பா

காப்பு

பாரோர் புகழும் பழமலைவெண் பாவெனவே
யாராய்ந்தே நாயே னறைதற்குச்—சீராய
பேராரு மாழத்துப் பிள்ளை யிருபதமென்
ஞரா தனைக்குரிய வாம்.

முடிவு :

காரோங்கித் திங்கள் கவின்மூன் மழைபொழிந்து
பாரோங்க வோங்கும் பழமலையே—சீரோங்கும்
நாதனார் நாரணனார் நான்முகனார் காண்பரிய
பாதனார் நாரணனார் பற்று.

வேறு பாடம் :

நாதனா னாரணனா னான்முகனார் காண்பரிய
பாதனா னாரணனார் பற்று.

Pazhamalai Venba

Size: 21×17. Pages: 27. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 100 venbas composed by a student of Sivaprakasar on the presiding deity of Pazhamalai (Vriddhachalam).

521. முதுமொழிமேல் வைப்பு (நூல் எண் 661)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 35. நிலை : பழமை.

குறிப்பு : முதுமொழியாகிய திருக்குறளின்மேல் உதாரணங்களும் விளக்கங்களும் அமைத்துக் கூறப்பெற்றமையின் இந்நூல் 'முதுமொழிமேல் வைப்பு' என்னும் பெயருடையதாயிற்று. இந்நூலை ஆக்கியோர் தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த ஆசிரியர் கமலை வெள்ளியம்பலவாண முனிவராவர். இந்நூலில் காப்பு உள்பட 197 செய்யுட்கள் உள்ளன. அதாவது காப்பு 1, அறத்துப்பால் 63, பொருட்பால் 96, காமத்துப்பால் 27, வீட்டின்பப்பால் 10 என்று அமைந்துள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
முதுமொழிமேல் வைப்பு
அறத்துப் பால்

சதுமுகனுங் காணாத் தலைவன்புகழ் சொல்லு
முதுமொழிமேல் வைப்பு மொழிய—மதுரத்
தவளமத வாரணமே தாயெனங்கின் றேத்தும்
கவளமத வாரணமே காப்பு.

பாயிரம் கடவுள் வாழ்த்து

எங்கு முளனிறைவ னென்றிரண்டோ யேத்துதமிழ்ச்
சிங்க நடந்தவழி சித்தாந்தம்—என்ற
தகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

முடிவு :

அடைந்தோன் தன்மை

சிதம்பரஞ்சிந் தித்தார் சிவலோக மன்றி
விதந்தறியா ரொன்றும் விரும்பி—பயந்தவிர
எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா லறியா ரற.

Mudumozhimel Vaippu

Size: 21×33. Pages: 35. Lines: 28 on a page. Condition: old.

Note : The Ms. contains 197 verses composed by Kamalai Velliambalavanamunivar, the preceptor of the founder oi Dharmapuram mutt. The second part of each verse contains a Kural. Published by Kasi mutt, Tiruppanandal.

522. வடமலை வெண்பா (நூல் எண் 682)

அளவு : 21×33. வரிகள் : 18.
பக்கங்கள் : 32. நிலை : பழமை.

குறிப்பு : காவை வடமலையப்பப் பிள்ளையை முன்னிலைப் படுத்தித் திருக்குறளிலுள்ள ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒரு குறளை ஈற்றடியாக வைத்து, அதற்கேற்ற முன்னடிகள் அமைத்துப் பொருட்பால் முடிய 108 அதிகாரங்களுக்கு 108 வெண்பாவாகப் பாடிய நூல் வடமலை வெண்பா. இந்நூல் அச்சானது. பாகை அழகப்பன் என்ற புலவரால் பாடப் பெற்றது. இப்பிரதியில் 108 வெண்பாக்களும், இறுதியில் வாழ்த்துப் பாடல் ஒன்றும், அதன் பின்னர் வடமலையப்பன் பேரில் 2 கீர்த்தனைகளும் உள்ளன.

தொடக்கம் :

பூமகளை யெல்லாம் புவனத்தோ டும்படைத்தோன்
மாமகள்கோன் காவை வடமலையே—யாமே
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

முடிவு :

(கயமை)

திண்மையி ராவணனூர் தேர்தெரிந்த பின்சிவனூர்
வண்மை புகழ்ந்தான் வடமலையே—நண்ணியே
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். (108)

தறமுணர்ந்தே மென்றவரே பயின்றுரைத்த வெண்பாத்
திறமுணர்ந்து பாராய் தெளிந்து.

பாகை அழகப்பன் செய்த வடமலை வெண்பா முற்றிற்று.

ஒழிபியல் முற்றும்.

பொருட்பால் முற்றுப் பெற்றது.

வாழி

விடமலை யப்பண் டெதிர்த்தமால் போல
மேதினி புரந்துநன் மின்னூர்
குடமலை யப்பந் தாடுநெல் வேலிக்
கோவடி சூடிநாற் கோட்டுக்
கடமலை யப்பண் ணவன்முகில் காத்த
காரணர் திலகனுங் காவை
வடமலை யப்ப பிள்ளையன் பேரில்
வகுத்தவிந் நூலென்றும் வாழி.

வடமலை வெண்பா முற்றிற்று.

1900ஸு சார்வரிஸு சித்திரைமீ 26உ நெல்லை அம்பலவாண கவிராயரவர்கள் வீட்டு ஏட்டுப் பிரதியோடு ஒத்திடப்பட்டது வே.ச். உடனி ... ...

Vadamalai Venba

Size: 21×33. Pages: 32. Lines: 18 on a page. Condition: old.

Note : The Ms. contains 108 venbas composed by **Pagal Azhagappa** Pulavar, addressing Vadamalayappa Pillai, each Venba containing a Kural in the later half.

8. இசை, நாட்டியம், மருத்துவம் முதலியன

523. அகத்திய சூத்திரம் (நூல் எண் 2)

அளவு : 21×23. வரிகள் : 28.
பக்கங்கள் : 21. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: இந்தப் புத்தகத்தில் அகத்திய சூத்திரம், சுகாதீத விளக்கம், இசை மரபு, அரங்க லக்ஷணம், ஒற்றைக் கை,முகசாலி, விநாயக நிலை, நாமகள் நிலை, நாமகள் கரணம், வெகுச்சாகை என்னும் அங்கம், உமை நிலை, உமை கரணம் ஆகிய பதின்மூன்று நூல்களும், நூற்பகுதிகளும் உள. அவற்றில் முதலில் உள்ள அகத்திய சூத்திரம் 21 பக்கங்களில் உள்ளது. தாளங்களின் வகையைப்பற்றி வெண்பா, நூற்பா ஆகிய பாக்களால் இலக்கணம் வகுக்கும் நூல் இது. 21ஆவது பக்கத்தில் தாள சமுத்திரம் என்னும் நூலில் முதல் ஆறு வெண்பாக்கள் உள. ஒவ்வொரு சூத்திரத்திற்குப் பின்னும் அவ்வத் தாளத்திற்குரிய குறியீடுகள் உள்ளன.

தொடக்கம்: சச்சபுட முதல் பேத தர்ப்பண மீருக வருந் தாள நூற்றெட்டு. அதில் சதுரச்சிரமென்றும் திரியச்சிரமென்றும் மிச்சிரமென்றும் எக்கண்டமென்றும் நாலுவிதமாயிருக்கும்.

முடிவு:

முந்தப் பெரியோர் மொழிந்தமுது நூல்கண்டு
விந்தநூல் யானுரைத்தா லேதொக்கும்—சிந்தித்து
வாகுபெறு மன்னநடை வண்மை தனைக்கண்டு
காக நடக்குங் கருத்து.

Music, Dance, Medicine etc.,

Agatbiya Sutram

Size: 21×33. Pages: 21. Lines: 28 on a page. Condition: good.

Note: The Ms. contalns poems in venba about various thalams. Author not known.

524. **அபிநய தர்ப்பணம்** (நூல் எண் 34)

அளவு: 21×23. வரிகள்: 30.
பக்கங்கள்: 24. நிலை: பழமை.

குறிப்பு: இந்நூல் மகாபாரத சூடாமணி என்னும் நூலின் சுருக்கமாகவும், பரத நாட்டியத்தில் அபிநயங்களைமட்டும் கூறுவதாகவும் அமைந்துள்ளது. இப்பிரதியில் 130 செய்யுட்கள் உள்ளன. நூல்நிலையத்தால் வெளியிடப்பெற்றுளது. "...குருகூர்

நம்மாழ்வார் பாதபங் கயம்பணிந்து...மேதகு தமிழாற் செய்தான் வீரராகவையன்றனே' என்ற பாயிரப்பாடற் பகுதியால் வீர ராகவையன் என்பது தெரியவருகிறது.

தொடக்கம் :

ஆதிநா தரைப்பண் பாடு வகுளக் குருகூர் நம்மாழ்வார்
பாதபங் கயம்ப ணிந்து பரதசாத் திரத் தின் முன்னோர்
ஓதிய வடமொ ழிச்சொ லுரையபி நயநன் னூலை
மேதகுந் தமிழாற் செய்தான் வீரரா கவையன் றனே.

முடிவு :

சிங்காரம் வீர மென்றும் சிறக்குநீள் கருணை யென்றும்
அங்குயர் அற்பு தம் தான் ஆகிய பயம்தா னென்றும்
புங்கவா பீபச்சம் பொருந்திய ரௌத்ர மென்றும்
இங்கித நவர சங்கள் இயம்பினர் பரதத் தோரே. (129)

Abhinaya Darppanam

Size: 21×33. Pages: 24. Lines: 30 on a page. Condition: old.

Note : Contains an abridged version of Mahabharata Choodamani describing dance poses in about 130 verses. Published by the Library under serial No. 16 in 1957.

525. **அரங்க லக்ஷணம்** (நூல் எண் 2c)

அளவு ; 21×33. *வரிகள் :* 28.
பக்கங்கள் : 52–54. *நிலை :* *நல்ல நிலை.*

குறிப்பு : இந்த நூல் அரங்கத்தை அமைக்கும் முறை, அரங்கத் தலைவன் இலக்கணம், மாதவர் முதலியோர் இருக்கும் இடம், ரேகை என்னும் அங்கம் ஆகியவற்றைப் பதினொரு பாடல் களால் சொல்வது. விருத்தம், அகவல் ஆகிய யாப்புக்களால் அமைந்தது.

தொடக்கம் :

நன்றாய்க் கீழ்மேல் அறுபத்து நாலு முழநீளமிட
மொன்றாய் முப்பத் திரண்டுமுழ முதலாய்க் குடபால்
வாசல் தன்னி
குன்றாய் வடக்குத் தெற்குமற்றக் குணபால் வயிர
மணிவாசல்
கன்று யயனூல் விதியியற்றிக் கனகச் செழுஞ்சா
லரந்திறந்தே.

முடிவு :

ரேகை என்னும் அங்கம் விளம்பிடிற்
சிரமொடு நாசிகை திகழ்விழி யிரண்டோ
டுரமுறு புயங்க ளொள்ளிய கடிதடம்
பாத மிரண்டின் பறட்டிடை யாக
நீதிகொள் ளயனூல் நேரே விழும்படி
அங்கந் தானு மசைவுற நிற்ற
லிங்கிது தாண்டவம் ராச்சியம் நாட்டியம்
நிர்த்தம் நலம்பெறத் தோன்றிடும் பொழுது
முன்னொன் றுமென் றுதொகுத்துரைத் தனனே.

Aranga Lakshanam

Size: 21×33. Pages: 52-54. Lines: 28 on a page. Condition: good.

Note : The Ms. contains 11 verses describing the **Arangam (Stage)** and connected matters. Author not known.

526. இசை மரபு **(நூல் எண் 3b)**

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கம் : 22 (31–52) நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இசையைப்பற்றிய கருத்துக்களைச் சொல்லும் இலக்கண நூல். வெண்பா, விருத்தம், நூற்பா ஆகியவை அறுபது அமைந்த நூல். உரையுடன் கூடியது; இசையின் பிறப்பிடம், பூதங்களின் வகை, இசை பிறக்கும் முறை, ஆளத்தியின் இலக்கணம், ஐந்து திறம், கலங்கள், இசையுடன் பிறக்கும் ஆறு பண்கள் பெயர்பெறும் வகை, பண் இசை என்ற பெயர்க்காரணம், எட்டுவகைப் புணர்ப்பு, அரங்கத்தில் பாடப் பெறாதவர், அரங்கத்தில் பாடப் பெறுபவர், உத்தம ஓசை, பாடுவான்தொழில் கிரியை, பாடுவான் செயற் கிரியை, தேசான சுத்தக்கிரியை, மிடற்றுக்கு ஆம் மருந்துகள், மிடற்றுக்கு ஆகாதன, பஞ்சமரபு, அரங்கத்து இசை, உணர்ந்தோர் வைப்பு, ஐந்து கருவி முதலியன சொல்லப் படுகின்றன.

தொடக்கம் :

மண்ணுடனீர்நெருப்பு கால்வான மென்றிவைதா
மெண்ணிய பூதங்க ளென்றறிக—நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றூர்க்கு விண்கொடுத்த
தென்னர்கோ மானே தெரிந்து.

என்னெனின் இசைக்குப் பிறப்பிடம் காயமாயிற்று. காயத்துக்கு முதலாகிய பூதங்களை யுணர்த்துத லுதலிற்று.

முடிவு :

பேசின பிரமன் றானும் பெருத்ததோர் கண்டை யாகும்
சோதியே நாத மாகும் துளையது சத்த தேவி
ஆதியே முருகன் முள்ளா மாய்ந்ததோர் சார்ங்க தேவர்
சாதியே மேலா மனசு தயங்குமிக் திரனே யாகும்.

Isai Marabu

Size: 21×33. Pages: 22. Lines: 20 on a page. Condition: good.

Note : Describes various details about Isai, Pan etc., Author not known.

527. இசைமரபில் சில பகுதிகளும் தாளசமுத்திரத்தில் சில பகுதிகளும் (நூல் எண் 60)

அளவு : 21×33. *வரிகள் :* 25.
பக்கங்கள் : 33. *நிலை :* சிலமாக உளது.

குறிப்பு : *இப்பிரதியில் இசையைப்பற்றிய செய்திகளும், தாளசமுத்திரத்திற் சில பகுதிக் குறிப்புக்களும் உள. பிரதி மிகவும் சிலமாக, எழுத முடியாத நிலையில் உள்ளது. இறுதியில் 4 பக்கங்கள் இந்நூற் செய்யுளகராதி உளது.*

தொடக்கம் :

உ
சிவமயம்
சங்கீதம்

றக்க உதையத்திலம்பட மாமாத ..றக்க
இதழெட்டடுக்கி நிறக்குமதில் ஊசிமுனை
தேறித் தாலோரிதழில்...
மாசில் கணமாய் வரும். (1)

முடிவு : *மாலை இராகம்: கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி,யாமா ராகம், ஆகிரி. விடிய விராகம்: இந்தோளம், இராமகலி, தேசாட்சரி, நாட்டை பூபாளம், உச்சியிராகம்: சாரங்கம், தோசட்சரி, அன்றியும் ஆகிரி, இந்தோளம், இராமகலி. சாரங்கம், பூபாளம் நீக்கி மற்றவை.*

Isai Marabu-certain parts

Size: 21×33. Pages: 33. Lines: 25 on a page. Condition: injured.

Note: Contains certain details relating to Isai, Thalam etc. Not in a condition to be copied. Author not known.

528. இருசொல்லலங்காரம் (நூல் எண் 72)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 11. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இரண்டு வேறு கேள்விகள் கேட்டு இரண்டுக்கும் அமையும்படி இருபொருள் படும் சிலேடையாக விடை உள்ள நூல். இதில் அகராதி வரிசையில் 115 அலங்கார வினு விடைகள் உள்ளன. இது நீலகண்ட வாத்தியார் எழுதினது என்ற குறிப்பிருக்கிறது. அவர் காஞ்சிபுரத்தில் இருந்தவர் என்று ஐயரவர்கள் குறித்திருக்கிறார்கள்.

தொடக்கம் :

காப்பு

திருவளர் விநாயகன் சேவடி வணங்கி
இருசொல் லலங்கார மினிதுரைப் பேனே.

1. அசுரர்குல மழிவதேன்
அரிவையர்கள் துணிகள் கிழிவதேன் —வேலையிட்டு

2. அச்சு வண்டி ஓடுவதேன்
மச்சானுற வாடுவதேன் —அக்காளையிட்டு

முடிவு :

114. வெள்ளாட்டி காலைப் பிடிப்பதேன்
வெள்ளம் புரளாதிருப்பதேன்—அக்கரையிட்டு

115. வெற்றிலை சுமப்பதேன்
வேந்தர் சண்டை செய்வதேன்—கோட்டையிட்டு

எழுதியது : ரா. விசுவநாதன். 7-7-62 ஒப்பிட்டுப் பார்த்தது.

Irusolalankaram

Size: 21×17. Pages. 11. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms.contains 115 questions and answers writtne by Neelakanta Vadhiyar of Kanchipuram.

529. ஒற்றைக்கை (நூல் எண் உ௰)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 9 (55 to 63) நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பதாகைமுதல் வலம்புரிவரையில் உள்ள முப்பத்துமூன்று ஒற்றைக்கை அபிநயங்களைப்பற்றிய இலக்கண நூல். 12 அகவற் பாக்களைக் கொண்டது. இதன் பின்னர், சதிமிதித்து, சாரி புரியும் வகையைச் சொல்லும் ஆறு விருத் தங்களும் உள்ளன.

தொடக்கம் :

ஒற்றைக் கையே யுரைக்கிற் பதாகை
மத்திரி பதாகை வன்கத் தரிகை
சொற்பிறை யராளஞ் சுகதுண்ட முட்டி
நல்ல சிகரம் நாடு கபித்த
மகர முகமே காண்டகு சூசி
தொடும்பத்ம கோசஞ் சொல்லா வின்றலை
மான்றலை யுடனே மன்னுகாங் கூலம்
தொண்டலா பல்லவம் சொல்லிய சதுரம்.

இறுதி :

நிலைபெறுதா ளக்கிண்ணங் கிட்டலென
பிறபதந்தா னிகழும் வேலை
மலைவுறுகத் திரிசேர்த்தி கக்கரம்பின்
னடந்திடமுன் வல்லோர் சொன்ன
இலக்க பாதரஞ்சி தம்பார்சுவ
தாடிதம் மண் டலமோ டென்று
அலைவுறுகட் டுப்புரியங் கொண்டு
பின்னருத்த மாயப்பி ரிந்தார்.

Ottraikkai

Size: 21×33. Pages: 9. Lines: 28 on a page. Condition: good.

Note : This contains 12 verses in agaval and deals with different abhinayas (poses) of the hand. Author not known.

530. கனம் கிருஷ்ணையர் கீர்த்தனங்கள் (நூல் எண் 140)

அளவு : 21×17. வரிகள் : 12.
பக்கங்கள் : 117. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 19ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த சங்கீத வித்துவான் கனம் கிருஷ்ணையர் உடையார்பாளையம் சம்ஸ்தான

வித்துவானாக இருந்தவர். இசையில் 'கனம்' என்ற பகுதியைச் சிறப்பாகப் பாடியதால் 'கனம்' கிருஷ்ணையர் என்ற பெயர் பெற்றார். அக்காலத்து இவர் பாடிய பாக்கள் சிறப்புற்றுத் திகழ்ந்தன. இப்பிரதியில் கனம் கிருஷ்ணையர் இயற்றிய கீர்த்தனைகள் 53 உள்ளன (58 என்ற எண்ணில் தொடங்கி 111 வரை). இடையிற் சில பாடல்கள் சண்பகமன்னார் எனக் குறிக்கப்பெற்றுள்ளன. எண் 205-கீர்த்தனைப் புத்தகம் என்ற பிரதியில் ஒன்றிலிருந்து ஐம்பத்தேழு கீர்த்தனைகள் உள்ளன.

தொடக்கம் :

தரு: 58; கல்லியாணி ராகம். ஆதி தாளம்.

(பல்லவி)

வல்லமையே உன் வல்லமையை
சொல்ல எவர்க்கும் தரமா—
எல்லாம் உன்செயலே—வேறில்லை
பூபதிராஜ புரந்தனில் வாழும்
செல்வமா காளி அம்மையே
தேவி பரஞ்சோதி. (வல்லமை)

முடிவு : மங்களம்

சுருட்டி ராகம் ஆதி தாளம்

(பல்லவி)

சந்தத மங்களம் சத்கோபால
முகுந்த ராஜர்க்கு மங்களம்.

சண்பக மன்னார் மங்களம் தேவர் பணிந்து மகிழும்
புரியில் வந்தருளும்
மரகதவல்லி மணாளருக்கு— (சந்ததம்)

....

கஞ்சநால் வேதருக்கு, காணபக்க திதருக்கு
பஞ்சவர்முன் தூதருக்கு, பாலகவிநாதருக்கு
சந்ததமங்களம்

Ghanam Krishniyer - Kirttanas

Size: 21×17. Pages: 117. Lines: 12 on a page. Condition: good.

Note: The Ms. contains 53 kirttanas of Ghanam Krishniyer, a court musician of Udayarpalayam Zamin.

531. சங்கீதம் (நூல் எண் 286)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 26 (201 to 226). நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் ஐயரவர்கள் தொகுத்த ஸ்தல விஷயம், சரித்திர விஷயங்கள், பல கதம்பம் என்ற தொகுப்புக்கள் உள்ளன. இப்பகுதியில் பாபநாச முதலியார் கீர்த்தனம் 1ம், தேவாரப் பண்களுக்குரிய ராகப் பெயர்களும், பல சங்கீத வித்துவான்கள்பற்றிய சிறு குறிப்புக்களும், இறுதியில் 2 கீர்த்தனைகளும் உள்ளன.

தொடக்கம் :

பாபநாச முதலியார் கீர்த்தனம்

(பல்லவி)

குதிரை கொள்ள வந்தமதி மந்திரிசபை
அடிமை கொண்டவரோ — தேவரீர்

(அநுபல்லவி)

மதுரைமன்னன் பொன்னை அபகரித்திட வெண்ணி
வாத்தியார் போல்வந்து தேற்றிமந் திரம்பண்ணி
(குதிரை)

(சரணம்)

கண்ணைக் காட்டிக் கிட்ட வரவழைத்து வைத்துக்
காதைக் காட்டச் சொல்லி முணுமுணென்று வேதப்
பண்ணைக் காட்டச் சுற்றி இருபது முப்பது
பக்த கோடிகளைக் காட்டி.

முடிவு :

பழைய கீர்த்தனை

(பல்லவி)

ஆனேன் கண்டராச ஸாகரத் திலழுந்தித்
தானே மகிழ்ந்ததிலே தரித்துடனே ஜகத்தைக் காணேன்

(அநுபல்லவி)

ஆகம புராணங்களை யரைத்துக் குடித்தாலும்,
லோகமெல்லாம் சஞ்சரிக்க யோகமிருந்தாலும்
ஏகமாமகண்ட விர்த்தி ஞானமற்றுப் போனால்
ஏழுகோடி மந்திரங்கள் செபித்தாலும் பலத்தைக் காணேன்

(சரணம்)

1. தொண்டையெல்லாம் வறண்டு கத்தி மண்டை யிடியிடிக்க
ரெண்டுதடு முலர்ந்து இருதாளும் வலியெடுக்கக்

கண்டதெல்லாம் சந்ததமும் கத்தி நரம்பிசிக்க
உண்டோ விதினாலே யுபாதியின் பலத்தைக் காணேன்

4. சாடிவிழுந் தோடுகிற மனதை வசமாக்கி
நாடியே வஸ்துவதில் நாமரூப நீக்கி
மேடுபள்ள மற்றிருக்கும் வெளிகண்ட பின்பு
விட்டிலுள்ள சம்சாரந் தனைத்தவிர வேறே காணேன்.

Sangeetam

Size: 21×33. Pages: 26. Lines: 28 on a page. Condition: good.

Note : The Ms. contains miscellaneous collections of Dr. Iyer about sthalas, places of historical importance, details about kirttanas, ragas, pans etc.

532. சங்கீதம்-கீர்த்தனங்கள் (நூல் எண் 199)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 89. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் சண்பகமன்னார், அரியலூர்ச் சடகோப ஐயங்கார், கனம் கிருஷ்ணையர், சுப்பராமையர் முதலிய பலர் பாடிய கீர்த்தனங்கள் உள்ளன. மொத்தம் 43 கீர்த்தனங்கள் உள்ளன. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

நாட்டை ராகம் ஆதி தாளம்

(பல்லவி)

ஸாரிஸா-ஸநிப மாரி கமகபம; கமகரி ஸாஸா
மக மப நிஸா
நாமகள் கொலுவிருக்கும் விந்தையை
நாவினால் தெரிந்துரை.

முடிவு :

கமாசு ராகம் ஆதி தாளம்

(பல்லவி)

ஏதோ ஒருவகையால் வருகுதடி என்னசெய்
வேனிதற் கன்னமே என்றனுக் கேதோ
போதமலர்ச் சதுர்வேதனும் கண்டறியாத
பெரும்புலியூர் தனிலே திருமாது

மரகதவல்லி மணாளன் மதன கோபாலன்
வரும் பவனி கண்டு—ஏதோ

....

....

தரிஸரி தஸரிதபம—கம—நிதநிஸ
ரிகமகரி ஸநிஸ—ரிகமகரி—ஸாரி கரிஸ
நிஸரிஸரி தாநி தபம—ஏதோ

Sangeetam-Kirttanas

Size: 21×33. Pages: 89. Lines: 20 on a page. Condition: good.

Note : Contains 43 songs composed by musicians like Sanbagamannar, Subbaramiyer, Satakopa Iyengar etc.

533. சங்கீதம்-கீர்த்தனங்கள் (நூல் எண் 200)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 4. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூலில் 3 கீர்த்தனங்கள் உள்ளன. இப்பிரதி எண் 199இன் தொடர்ச்சியாகும். நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்னும் நூலும் உளது.

தொடக்கம் :

கமாசு ராகம் ஆதி தாளம்

(பல்லவி)

அனுதினமுனையே மனதினிலெனக்க வருள்
ஐயனே—மெய்யனே செந்துய்ய
மலர்க்கையனே—அனு

முடிவு : மங்களம்

சுருட்டி ராகம் ஆதி தாளம்

பல்லவி

சந்ததம் மங்களம்—ஸத்கோபால முகுந்தற்கு
மங்களம்

மங்களந் தேவர் பணிந்து—மகிழும்
வ்யாக்ரபுரியில் வந்தருளும் மரகத
வள்ளி மணாளருக்குச்—சந்ததம்

பங்கசவிலோசனர்க்கு பாசவிமோசனர்க்கு,
துங்க சேஷாஸனர்க்கு த்வாரகா நிவாஸனர்க்குச் — சந்ததம்

வேத பரிபாலருக்கு வேணுகான லோலருக்கு
மாதிலகபாலருக்கு மதன கோபாலருக்குச்—சந்ததம்
கஞ்சன் நால்வேதருக்குக் காணபக்கதீதருக்குச்
பஞ்சவர்முன் தூதருக்கு பாலகவி நாதருக்குச் —சந்ததம்

Sangeetam-Kirttanas

Size: 21×33. Pages: 4. Lines: 25 on a page. Condition: good.

Note : Continuation of the previous one. Contains three Kirttanas.

534. சண்பகமன்னூர் முதலியோர் பாடிய கீர்த்தனங்கள் (நூல் எண் 205)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 61. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் அரியலூர்ச் சண்பகமன்னூர் என்பார் இயற்றிய கீர்த்தனைகளும், மற்றும் சில இசைப் புலவர்கள் பாடல்களும் உள்ளன. இப்பிரதியில் 1 முதல் 57 கீர்த்தனை வரை உள்ளன. இப்பிரதியின் தொடர்ச்சியே எண் 140 பிரதி.

தொடக்கம் :

உ
ஹரி : ஓம்
கீர்த்தன புஸ்தகம்

தரு: நாட்டை ராகம் ஆதி தாளம்

(பல்லவி)

நாமகள் கொலுவிருக்கும் விந்தையை நாவினால்
தெரிந்துரைக்கக் கூடுமோ
பூமகளை மணிமார்பில் தரித்திடும்
புலவர் போற்றி மகிழும் மாயன்
மாமறை புகழும் உந்திக் கமலந்தனி
லுதித்திடும் போதுன்
மாமன் மகிழ்விளங்கு மென்றன்.

முடிவு :

ஆதி தாளம் கல்லியாணி ராகம்

மஞ்சார் பொழில் சூழும் வாஞ்சிநகர் தன்னில்
வாசமாய் எந்நாளும் வீற்றிருக்க

பஞ்சன்னர் எங்கள் வஞ்சலிங்கர் டங்கில் வாழ்ந்திடும்
மங்களாம்பிகே உமையே.

....

மஞ்சார் பொழில் சூழும் வாஞ்சி நகர் தன்னில்
வாசமாய் எந்நாளும் வீற்றிருக்க
பஞ்சன்னர் எங்கள் வஞ்சகலிங்கர் பங்கில் வாழ்ந்திடும்
மங்களாம்பிகை உமையே கிருபை பண்ணம்மா.

Kirttanas sung by Sanbagamannar and others

Size: 21×17. Pages: 61. Lines: 20 on a page. Condition: good.

Note : Contains 57 songs composed by Sanbagamannar and others. This is continued in Ms. No. 140.

535. சுத்தானந்தப் பிரகாசம் (நூல் எண் 565)

அளவு : 21×33. *வரிகள் :* 28.
பக்கங்கள் : 124. *நிலை :* பழமை.

குறிப்பு : *இப்பிரதி வடமொழியுந் தமிழுங் கலந்தது. நூல் எண் 253 இதன் பிரதியாகும்.*

Suddhananda Prakasam

Size: 21×33. Pages: 124. Lines: 28 on a page. Condition: old.

Note The Ms. is the same as the previous one.

536. திட்டக்குடி அசலாம்பிகையம்மன் பதிகமும் தோத்திரப் பாக்களும் (நூல் எண் 28)

அளவு : 21×33. *வரிகள் :* 24.
பக்கங்கள் : 34. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : *திட்டக்குடி என்பது நடுநாட்டுத் தலம். அத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் அசலாம்பிகை அம்மன்பேரில் எழுதப் பெற்றது. இதைப் பாடியவர் பாலசுந்தரம் என்று தெரியவருகிறது. இப்பிரதியில் அம்பிகையின்பேரில் ஒரு பதிகமும், சில தனித் தோத்திரப் பாக்களும் உள்ளன. அச்சானது.*

தொடக்கம் :

உ

கடவுள் துணை

திட்டக்குடி

அசலாம்பிகையம்மன் பதிகமும் தனித் தோத்திரப் பாக்களும்

விநாயக வணக்கம்

வெண்பா

வேங்கைவன மென்று விளம்புவ திட்டக்குடி
யாங்கு விளங்கு மசனும்பாள்—பூங்கழற்கே
நந்தா வளமுறவிந் நற்பதிகந் துக்கருளும்
தந்தா வளமுகவன் ருள்.

சீதமதி முகவல்லி விசயகுங் குமவல்லி
திரிபுரா னந்தவல்லி
சிங்கவா கனவல்லி மங்கைமோ கனவல்லி
தேவியபி ராமவல்லி
ஆதிசுந் தரவல்லி நீதிநெஞ் சுகவல்லி
யழகுதிகழ் ரூபவல்லி
ஆனந்தவல்லி சர்வேச்வரி கிருபாவல்லி
யருள்பரவு கருணைவல்லி
வாதுமயி டன்சிரசின் மீதுநட மிடும்வல்லி
வளர்வாலை யாளவல்லி
பாலசுந் தரதாச வடியனுக் கருள்புரியும்
வல்லியபி ஷேகவல்லி
வேதநிதி தேடும் வதிட்டகுடி யீசர்வல
மேவுசுப லலிதவல்லி
மீன்குலவு விழிதுல்லி தேன்குலவி வருசொல்லி
வேங்கைவன வளர்வல்லியே. (10)

முடிவு : பந்தாட்டு

வெள்ளை நிலவு பொழியமுத விதுவைப் பழித்த நுதலினுள்
வேண்டு பவருக் கிரங்கிழுனை வினையைக் கெடுத்த
முதலினுள்
கள்ள மனத்தை யுடையவர்கள் காணற் கரிய கழலினுள்
கறுத்த மேகக் குலத்தைவென்று காட்டுங் கனத்த
குழலினுள்
தெள்ள முதுவிக் கிகழுமாறு தித்தித் திருக்கு மொழியினுள்
சிறைவண் டம்பு பிணைமீனைச் செருக்கித் திகழும்
விழியினுள்

வள்ளல் வைத்ய நாதருள்ள மகிழ்ச்சி விளக்க நாடினன்
வதிட்ட குடிக்காங்க திட்டமுற வரிப்பங் கெடுத்தங்
காடினன்.

இக்கு—கரும்பு.

முற்றும்.

Stotras-Miscellaneous

Tittagudi Achalambikaiamman Stotra

Size: 21×33. Pages: 34. Lines: 24 on a page. Condition: good.

Note : The Ms. contains a pathikam (ten verses) on Devi Achalambikai, goddess in the temple at Tittagudi in South Arcot district. There are also certain stotras which have been already printed. Author is one Balasundaram.

537. கச்சி ஆனந்தருத்ரேசர் துதி (நூல் எண் 671c)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 4. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காஞ்சிபுரத்தில் ஒரு கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானாகிய ஆனந்தருத்திரேசர்மீது 10 விருத்தங்களாலாகிய துதியாகும். இப்பிரதியில் 671-யாப்பருங்கல விருத்தி, 671a-யாப்பருங்கல மூலம், 671b-கவிராயர் பணவிடு தூது ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
கச்சி ஆனந்தருத்ரேசர் துதி
அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கடியிதழிப் பொலஞ்சடையும் விழிமூன்றும்
கறைமிடறுங் கரங்க ணான்கும்
வடிமழுமான் சுரத்தொடையும் புரிநூலு
மணிச்சிலம்பு வயங்கிச் சீர்க்கும்
படியரிய மலர்ப்பதமும் அனைத்துருவு
மடியருளம் பதித்து மைதீ
ரடியருளத் திறைகொள்ளு மானந்த
ருத்திரனை யகத்துள் வைப்பாம்.

முடிவு :

மங்கைக் கிடநல் கிறைவா சரணம்
    மறையோர் பணியும் பனவா சரணந்
துங்கச் சுரர்நா டரியாய் சரணம்
    துறவோர் கடொழுந் துறவோய் சரணம்
கங்கைக் கதிவே ணியனே சரணங்
    கச்சிப் பதிவா ழமலா சரணம்
அங்கைத் தழலேந் தழகா சரண
    மானந் தவுருத் திரனே சரணம்
பங்கயன் சிரமரி பரனடி சரணம். (10)

Kachi Anandarudresar Thuthi

Size: 21×33. Pages: 4. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. contains prayer songs in ten viruttams on Lord Anandarudresar of Kancheepnram. Author not known.

538. **ஐயப்பன் தோத்திரம்** (நூல் எண் 164b)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 11. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஐயப்பனைப்பற்றிய 11 விருத்தங்களைக் கொண்ட தோத்திரம் இது. இதில் 164-கும்பேசுவரஸ்வாமி குறவஞ்சி, 164b-இராசகோபால் பிள்ளைபேரில் வண்ணம், 164a-தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்திரம் முதலியவையும் உள.

தொடக்கம் :

உ
கடவுள் துணை
ஐயப்பன் தோத்திரம்

நீதி யறியேன் நெறியறியேன்
    நினது பஞ்சாட் சரத்தைநிதம்
ஓதி யறியேன் சிறியேனை
    யுவந்தே காப்ப தெந்நாளோ
சோதிப் பொருளே சுடரொளியே
    தரியா தீதத் துட்பொருளே
ஆதி முதலே அரியரனே
    ஐயப் பாஎன்னை யாள்வாயே.

முடிவு :

நித்த முன்றன் பாதமதை
நினைவில் கனவில் மறவாமல்
பத்தும் பதிகம் யான்பாடப்
பவிசு பாக்கியந் தந்தருள்வாய்
முத்தே பவள மரகதமே
மூலா தார முதற்பொருளே
அத்தம் புலிக்கோ டினில்வளரும்
ஐயப் பாஎன்னை யாள்வாயே.

Ayyappan Stotram

Size: 21×17. Pages: 11. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. contains 11 verses in praise of Lord Ayyappan. Author not known.

539. கமலை ஞானசம்பந்த குரு தோத்திரம் (நூல் எண் 139a)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 3. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : கமலை என்பது திருவாரூர். அங்கு விளங்கிய ஞானசம்பந்த குருவைப்பற்றிய தோத்திரம். 6 செய்யுட்களே உள்ளன. இவரைக் குரு ஞானசம்பந்தர் என்பர். இப்பிரதியில் கன்றுப்பூர்ப் புராணம், சீகாழியுலா, இனியது நாற்பது ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ

கமலை ஞானசம்பந்த குரு தோத்திரம்

வானத்தி லமுதுளது மதுரிக்கு மதுபருகில்
மரணமணு காதென்றுபூ
மண்டலத் தவரறியும் வாறுபோ லோலையில்
வரைந்துபதி பசுபாசமென்
றானத்தி லறிவதல தனுபவித் தறிதலுக்
கொருமைப் படாமலவமே
யுலகெலாங் குருவெனத் திரிவரவர் போதனைக்
குனையொத்த குருவரவரோ

....

முடிவு :

பிணியெனப் பிணிக்கும் பேய்கொளத் துளங்கும்
பிறவினை வஞ்சனைக் கனுக்கும்
பெரும்பசிக் கொசியு மிடும்பையி னெடுங்கும்

....

மதுரையுங் கமலை நகரியுந் தழைப்ப
வந்தசம் பந்ததே சிகனே.

Kamalai Gnanasambandha Guru Stotram

Size: 21×33. Pages: 3. Lines: 32 on a page. Condition: good.

Note : Devotional songs in praise of Kamalai Gnana Sambandha Guru.

540. காஞ்சிப் புராணக் கலித்துறை (நூல் எண் 144)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 33. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காஞ்சியைப்பற்றிப் பாடப்பட்ட புராணத்தின் சாரத்தைக் கூறும் 212 கலித்துறைகள் அமைந்த நூல். இப்பிரதியின் தலைப்பில், 'மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதியது. பிரதி மிகவும் பழையது. 8-11-14' என்று சிவப்பு மையினாற் குறிக்கப் பெற்றுளது. அதற்கெதிர்ப் பக்கத்தில் முதலில் எழுதியிருந்தது நாகலிங்க முதலியார்.

காஞ்சிப் புராணக் கலித்துறை காஞ்சிபுரம் பிள்ளைபாளையம் புதுப்பாளையத்துத் தெருவில் சம்பந்த தேசிகன் குமாரன் பிச்சை நாயக தேசிகன் தாரண ஸ்ரீ தைமீ 18உ மீனாட்சிசுந்த ரேசுவராப்பியா நம:

31—3—24 ஒப்பிடப்பட்டது. ஷை பிரதியோடு காஞ்சிபுரம் காலாண்டார் தெரு குமாரசாமி தேசிகர் பிரதியுடன் இஃது ஒப்பிடப்பெற்று முடிந்தது. 5—10—27.

இறுதியில் காஞ்சி ஏகாம்பரேசர்மீது இரட்டையர் அருளிய வண்ணமும் வேறு சில பாடல்களும் உள்ளன. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சானது.

தொடக்கம் :

காப்பு

நிலைவாச லொன்பதாய் நீள்கோ புரத்தின்
தலைவாசல் வாரணத்தின் றாளே—மலைமாது

வாஞ்சித் தரனுரை மாவடிக்கீழ்ப் பூசித்த
காஞ்சிப் புராணத்தின் காப்பு.

முடிவு :

காஞ்சிப் புராணத்தைக் கற்பவர் கேட்பவர் கட்டுரைக்க
வாஞ்சிப் பவர்கள்மற் றெல்லாரு மிம்மைக்கு மாமலர்மேல்
பூஞ்சித் திரமயில் பார்வையுண் டாகிப் புவிபுரப்பர்
தாஞ்சிக் கெனப்பின்பு விண்ணோர் புரத்தினிற் சார்பவரே.

காஞ்சிப் புராண சாரக் கலித்துறை முற்றும்.

ஆவணிமீ 29உ வியாழக்கிழமை நாள் காலமே எழுதி நிறைந்தது. உ ஸ்ரீ ஏகாம்பர.

Kanchipurana Kalithurai

Size: 21×33. Pages: 33. Line: 30 on a page Condition: good.

Note : The Ms. contains 212 kalithurais being a condensation of Kanchipuranam copied from a cadjan leaf of Madurai Tamil Sangam.

541. குழைக்காதர் சந்தானப் பத்து (நூல் எண் 175)

அளவு : 21 × 33. வரிகள் : 24.
பக்கங்கள் : 3. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : வைணவத் திருப்பதிகள் 108இல் ஒன்றுகிய தென் திருப்பேரையில் எழுந்தருளியுள்ள குழைக்காதர்மேல் சந்தானம் வேண்டிப் பாடப்பெற்ற நூல். ஆசிரியர் ஸ்ரீ ராமபாவலரென்பவர். 13 பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

உ
ஸ்ரீ ராம ஜயம்
சந்தானப் பத்து

சந்தான மூர்த்தி மகரக் குழையர்தம் மேலடியேன்
சந்தானப் பத்துத் தமிழ்மாலை பாடத் தயவருள்வாய்
சந்தான மாகுந் தமிழ்ப்பேரை நங்கை தவத்துதித்த
சந்தான மாஞ்சட கோபா மகிழ்மலர்த் தாமத்தனே.

முடிவு :

சந்தானப் பத்துந் தமிழ்மாலை நூறுந் தரித்தவர்கள்
அந்தா ரணியில்நல் ஆண்பிள்ளை தான்பெற்(று)
அகமகிழ்ந்து

கொந்தார் துளமணி மால்குழைக் காதரைக் கும்பிட்டுடன்
மந்தாத வாழ்வும் பெறுவா ரவரிந்த மாநிலத்தே.

Kuzhaikadar Santana Pathu

Size: 21×33. Pages: 3. Lines: 24 on a page. Condition: injured.

Note : The Ms. contains 13 verses by Sri Rama Pavalar in praise of Lord Kuzhaikkadar, the deity at Thenthiruperai in Tirunelveli district, one of the Vishnu sthalas, for santanam (progeny).

542. சித்திரசபை விருத்தம் (நூல் எண் 466c)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 36. நிலை : மிகப் பழமை.

குறிப்பு : சித்திரசபை என்பது திருக்குற்ருலத்தில் அமைந்த சபையைக் குறிக்கும். இங்கு நடம் புரியும் பெருமான்மீது பாடப் பெற்ற பதிகமே இந்நூலாகும். இதன் ஆசிரியர் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர். பிரதி மிகப் பழமையாக உள்ளது. இப் பிரதியில் 466-தொட்டிக்கலைச் சிதம்பரேசர் பரணி, 466a-பழனிப் பஞ்சரத்னம், 466b-திருத்தணிகைத் திருவிருத்தம், 466d-நெல்லை வருக்கக் கோவை ஆகிய நூல்களும் உள்ளன. பிரதி மிகவும் பழமையாக இருப்பதால் தொடக்கம், முடிவு எழுத இயலாத நிலையில் உள்ளது.

Chitrasabhai Viruttam

Size: 21×33. Pages: 36. Lines: 27 on a page. Condition: old.

Note : The Ms. contains a pathikam on Lord Nataraja of Chitrasabhai at Tirukutralam in Tirunelveli district, composed by Thottikkalai Subramania Munivar.

543. சுந்தரேசுவரர் பதிகம் (நூல் எண் 121b)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 4. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : ஆலவாய் இறைவன் சுந்தரேசப் பெருமான்மீது டாக்டர் ஐயரவர்களால் பாடப்பெற்றது. அச்சானது.

தொடக்கம் :

பொற்று மரைப்பூந் தடமுமரி
பூசித் தரிய பேறுமிகப்
பெற்று னெனவான் றேரெடுத்துப்
பேசு மமலன் சினகரமும்
அற்றார்க் குதவு மங்கயற்க
ணம்மை திருக்கோ யிலுங்கண் டோர்
உற்றார் பாசப் பிணியறவே
யுடையா ரகில வுலகமுமே.

முடிவு :

செல்வக் கூட னகருறையுஞ்
சிவனைப் பணிந்து செழுஞ்சோதி
வில்வத் தளிரோ டிளமதியம்
வேய்ந்த வேணி விகிர்தனே
எல்வத் திரமைந் துடையாயெம்
மீசா வாச விதழியுள்ளாய்
மல்வக் கரையா வெனவிதமும்
வாழ்த்தி வணங்கு மடநெஞ்சே.

Sundareswar Padigam

Size: 21×33. Pages: 4. Lines: 25 on a page. Condition: good.

Note : The Ms. contains a padigam on Lord Sundareswarar of Madurai composed by Dr. Iyer. Printed.

544. சுப்பிரமணிய விருத்தம் (நூல் எண் 707)

அளவு : 21×33. வரிகள் : 16.
பக்கங்கள் : 17. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் முருகப் பெருமான்பேரில் சரவண பவானந்தனே என்ற மகுடத்துடன் பக்திச் சுவை மிகக் கொண்ட 12 விருத்தங்கள் உள்ளன. அச்சாகியுள்ளது. ஆசிரியர் அருணகிரி முதலியாரவர்கள்.

தொடக்கம் : *(சுப்பிரமணியர் விருத்தம்)*

மாமேவு நவரத்ன கேயூர மணிமகுட
மன்னிப் பொலிந்த முடியும்
வச்சிர நுதற்றிலக வெண்ணீறு மோராறு
வதனவிம் பத்தினமும்

பாமேவு பத்தர்க்கு மடைதிறந் தன்பொழுகு
பன்னிரு விழிக்கருணையும்
பகரரிய பழமறை பழுத்தொழுகு சிறுநகைப்
பவளஞ் சிறந்தவாயும்
காமேவு கரகமல பந்தியுஞ் சேவலுங்
கனகமயி லுங்கிண்கிணிக்
காலுமுந் நூலும்வடி வேலுமேன் மேலுமெக்
காலுந் துலங்கவருவாய்
தாமோ தரானந்த கோவிந்த வைகுந்த
சரசகோ பாலன் மருகா
சதுர்மறை களேதந்த பரமகுரு
வாய்வந்த சரவணப வானந்தனே.

முடிவு :

கண்ணேறு வாராது பிணியொன்று சேராது
கவலைப் படாதுநெஞ்சம்
கலியாது சலியாது நலியாது மெலியாது
கலியென்ற பேயடாது
விண்ணேறு மணுகாது கன்மவினை தொடராது
விஷமச் சுரம்வராது
வெய்யபூ தம்பில்லி வஞ்சனைகள் தொடரா
விஷம்பரவுஞ் செந்துமடரா
எண்ணேறு சனனங்கள் கிடையாது காலபயம்
எள்ளளவு மெயிராதிவ்
ஏழைக் கிரங்கியருள் தெய்வமுனை யல்லாமல்
இன்னமொரு தெய்வமுளதோ
தண்ணேறு கங்கைமலை மங்கையருள் தங்கமே
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவானந்தனே.

சுப்பிரமணிய விருத்தம் எழுதி முற்றும்.

அருணகிரிநாத முதலியாரவர்களால் பாடி நிறைவேற்றப் பட்டது.

Subramania Viruttam

Size: 21×33. Pages: 17. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 12 viruttams composed by Arunagiri Mudaliar on Lord Muruga, each verse ending with the words, "Saravanabhavanandane."

545. சேவல் விருத்தம் (நூல் எண் 264)

அளவு : 21 × 33. வரிகள் : 32.
பக்கங்கள் : 7. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் அருணகிரிநாதரால் முருகப் பெருமான் கொடியாகிய சேவலின் சிறப்பைப் பாடிய விருத்தங்கள் 11 பாடல்களும், காப்பு 1 பாடலும் உள்ளன. அச்சாகியுள்ளது. நூல் நிலையச் சுவடி எண் 914-இன் பிரதியாகும் இது.

தொடக்கம் :

உ
சேவல் விருத்தம்
காப்பு

கொந்தார் குழல்வரி வண்டோலி (யி)டுமயில்
கொண்டே ழிசைமருளக்
குதலை மொழிந்தன கவுரி சுதந்தரி
குமரன் இதம்பெறுபொற்
செந்தா மரைதடம் நந்தா வனமுள
செந்தூ ரெங்குழளான்
திலக மயில்வரு குமரன் வரிசைபெறு
சேவல் தனைப்பாட
வந்தே சமர்பொரு மிண்டாகியகய
மாமுக னைக்கோறி
மாவெயி றொன்றை ஒடித்துப் பாரதம்
மாமேரு வினில்எழுதிப்
பைந்தார் கொடுபல ராவணன் அன்பொடு
பணிசிவ லிங்கமதைப்
பார்மிசை வைத்த விநாயகன் முக்கட்
பரமன் துணையாமே.

முடிவு :

பூவிலயன் வாசவன் முராரிமுனி வோரமரர்
பூசனைசெய் வோர்மகிழவே
பூதரமும் எழுகடலும் ஆடவமு தூறவனு
போகபதி ஞாலுலகமாந்

தாவுபுகழ் மீறிட நிசாசரர்கள் மாளவரு
தானதவ நூல்தழையவே
தாள்வலிய தானபல ....
சிறகு குட்டிக்குரல் பயிலுமாங்
காவுகனி வாழைபுளி மாவொடுயர் தாழைகமு
காடவிகள் பரவு நடனக்
காரணமெய்ந் ஞானபரி பூரண விராசன......
மயில் வாகனன் அடற்...
சேவகனிராசத ...... சிகாமணி
சரோருக முகச்
சீதள குமாரகிரு பாகர மனோகரன்
சேவற் றிருத் துவசமே.

Seval Viruttam

Size: 21×33. Pages: 7. Lines: 32 on a page. Condition: good.

Note: This is copied from the cadjan leaf No. 914 in the Library and contains 12 verses composed by Arunagirinathar extolling the cock banner of Lord Muruga.

546. தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் (நூல் எண் 164)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 9 (234 to 243). நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஸ்வாமிகள் அருளியது. குருமூர்த்தியாகிய தக்ஷிணாமூர்த்தியைப்பற்றி 10 துதிப்பாடல்களைக் கொண்ட நூல். இப்பிரதியில் கும்பேசர் குறவஞ்சி நாடகம், ஐயப்பன் தோத்திரம் ஆகிய நூல்களும் உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

உ
தக்ஷிணாமூர்த்தி தோத்திரம்

பூங்கமல நயனமும் பொழிகருணை வதனமும்
டன்முறுவ னிலவெற்பும்
பொலிசடா டவியுமதி லுறைநிலா மதியுமொளி
புனைகுழை யிலங்குகாதுந்
தேங்குபர மானந்த சின்மயா காசமாஞ்
சித்தியருண் முத்திரைமேற்
சிவானுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான போதகமுமோர்

வேங்கையத ளுடையுநற் சரற்கால மதிகோடி
வெள்ளமென நிறைவடிவமும்
மேலான தெய்வநா மன்றிவே றில்லையிது
மெய்யென் றெடுத்தகனலும்
ஓங்குவட வாலடியி லுறைகின்ற தெய்வமே
யுனையன்றி வேறுகினையேன்
ஒன்றாகி யானந்த வொளியாகி யென்னுயிர்க்
குயிரான பரமசிவமே.

முடிவு:

அண்டர்தொழு மிந்த்ராதி வாழ்வையும் விரும்பிடேன்
அட்டசித் தியும்விரும்பேன்
அகிலகலை ஞானமும் விரும்பிடே னுலகுபுகழ்
அரியகீர்த் தியும்விரும்பேன்
பண்டைமல மெல்லா மொழிந்துநின் னருள்பெற்ற
பழையவடி யார்களடியார்
பாததா மரைகளென் றலையின்மேல் வைத்தருட்
பார்வையா லிருளகற்றித்
தொண்டுசெய் கின்றபர மானந்த வெள்ளந்
துளைந்துவிளை யாடியுலகந்
தோன்றும விறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டுவந்தேன்
ஒன்றறுகு கொன்றையணி யண்டநா யககயிலை
யுறைகின்ற பரதெய்வமே.
ஒன்றாகி யானந்த வொளியாகி யென்னுயிர்க்
குயிரான பரதெய்வமே.

முற்றும்.

Dakshinamurthi Stotram

Size: 21×17. Pages: 9. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 10 prayer songs on Lord Dakshinamurthi composed by Sivagnana Desika Swamigal. Printed.

547. ஞான தண்டாயுதபாணி பதிகம் (நூல் எண் 708)

அளவு 21×17. வரிகள்: 18.
பக்கங்கள் 12. நிலை: பழமை.

குறிப்பு விழுப்புரம் தாலூகா, கல்லாலம்பூண்டி என்று வழங்கும் கல்யாணம் ஒட்டக்கூத்தர் மடாலயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஞான தண்டாயுதபாணியின்மேல் திருவெண்ணெய்நல்லூர் வடிவேல் முதலியார் அவர்களால் இயற்றப் பெற்றது-1945.

தொடக்கம் :

பொன்பொலியும் கல்யாணப் பூம்பொதியில் வாழ்முருகன்
தன்மீதி னிற்பதிகம் சாற்றவே—முன்னவனும்
சித்தி விநாயகன்றன் சீரடியே யிந்நூற்குப்
பத்திதரு காப்பாம் பரிந்து.

முடிவு:

மழைக் கென்றும் குறைவின்றி மும்மாரி வாழியவும்
வயலெல்லாம் விளைவுதரவும்
மக்களெல் லோருமே பக்தியுடை யோராய்நின்
மலர்ப்பதம் போற்றிசெயவும்
உழைக்கின்ற பேரெலா மொருகுறைவு மின்றியே
உணவுண்டு மகிழ்ச்சியுறவும்
ஓதிடும் பஞ்சமே யின்றிவிலை வாசிகள்
உலகில்மலி வாகிவிடவும்
இழைக்கின்ற பணியெலாம் நின்பணிய தாகவே
இருக்கவெல் லாருமுலகில்
இன்பத்துள் மூழ்கியே மகிழ்ச்சியுடன் வாழ்த்துமே
இருக்கவும் வரந்தருவாய்
தழைக்கின்ற கல்யாண புரமெனும் தலத்தினில்
தமிழ்க்கூத்தர் மடாலயத்துள்
தானெழுந் தருளியே யன்பர்கட் கருள்ஞான
தண்டபா ணிக்கடவுளே. (10)

முற்றுப் பெற்றது. சுபம்.

Gnanadandayudhapani Padigam

Size: 21×33. Pages: 12. Lines: 18 on a page. Condition: old.

Note: The Ms. contains a padigam composed by Vadivel Mudaliar of Tiruvennainallur on Gnanadandayudha pani at Ottakkuthar Mutt in Kallalampundi near Villupuram.

548. தாயுமானவர் துதிகள் (நூல் எண் 297)

அளவு: 21×33. வரிகள்: 32.
பக்கங்கள்: 9. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: வேதாரண்யத்தில் தோன்றித் துறவியாகி அருட்கவிகள் பாடிய தாயுமான சுவாமிகளின்மீது பாடப் பெற்ற துதிப் பாடல்கள் இந்நூலில் உள்ளன. தாயுமானவர் சோதியிற் கலந்த சமயத்தில் அவருடைய மாணாக்கர்கள் இயற்றிய செய்யுட்களும் உள்ளன. இப்பிரதியில் 3 பிரதிகள் உள்ளன.

தொடக்கம்:

வெள்ள மருவும் விரிசடையான் வேதவனத்தான் விமலேசன்
உள்ள மருவத் திருமூல ருறவின் மருவு மொருமவுன
வள்ள லாகுங் கருணைவெள்ள வாரி மடுத்தே மறைசைநகர்ப்
பிள்ளை யவர்க ளருண்முகிலாய்ப் பெய்த கருணைத்
தமிழ்மழையே.

முடிவு:

மனக்கவலை தீர்த்தென் மயக்கவிகற் பங்களெல்லாம்
உனக்கலவென் றெவ்வொன்றுய் வேறுக்கி யொன்றுமற
நினைக்கவரி தானவின்ப நிட்டையிதென் றேயுரைத்தான்
தனக்குவமை யில்லா னெனக்குமருட் டியவனே.

Thayumanavar Thuthigal

Size: 21×33. Pages: 9. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contalns verses composed by the students of Sri Thayumanaswami on their Guru.

549. திருச்செந்தூர்ச் சந்த விருத்தம் (நூல் எண் 348)

அளவு: 21×33. வரிகள்: 25.
பக்கங்கள்: 40. நிலை: மிகவும் சிலமானது.

குறிப்பு: திருச்செந்தூர் இறைவனாகிய முருகப் பெருமானைப் பற்றிப் பாடிய இந்நூல் சந்த விருத்தங்களால் ஆனது.

தொடக்கம்:

உ
கடவுள் துணை
திருச்செந்தூர்ச் சந்தவிருத்தம்

செந்தினகர் வாழுந் திருக்கைவேற் கந்தர்மேற்
சந்த விருத்தமதைச் சாற்றவே—சிந்தை
கமலமதி யார்சடையான் கான்முளைபொற்பாத
கமலமதி யார்சடையான் காப்பு.

முடிவு: மிகச் சிலமாக இருப்பதால் பிரதி செய்ய இயலவில்லை.

Tiruchendur Chanda Viruttam

Size: 21×33. Pages: 40. Lines: 25 on a page. Condition: much injured.

Note: The Ms. contains some verses in Chandam on Lord Muruga of Tiruchendur.

550. திருச்செந்தூர்ச் சந்த விருத்தம் (நூல் எண் 349)

அளவு: 21×33. வரிகள்: 32.
பக்கங்கள்: 44. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதி 348ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது. இப்பிரதியில் 349a-திருக்கொள்ளம்பூதூர்ப் புராணமும் உள்ளது.

தொடக்கம்: 348-இன் படியே.

முடிவு:

விரவுபாச முங்கடந்து துரியவாச முங்கடந்து
வினவுநேச முங்கடந்து வெளியூடே
விளையுநாத முங்கடந்து பொறிபு லாதி யுங்கடந்து
மிகுமறைதி யுங்கடந்து..................
பரவுசேவை யுங்கடந்து சமைய மாறை யுங்கடந்து
பகலி ராவை யுங்கடந்து புவிமீதே
பழுதுநேம முங்கடந்து களவுகாம முங்கடந்த
பழையவீடு தென்றுசென்று பெறுவேனோ
குரவுபூளை கொன்றைதும்பை யரவமாமை யம்புகொம்பு
குளிர்நிலாமி லைந்ததந்தை குரவோனே.

Tiruchendur Chanda Viruttam

Size: 21×33. Pages: 44 Lines: 32 on a page. Condition: good.

Note : Same as the previous one.

551. திருத்தணிகைத் திருவிருத்தம் (நூல் எண் 466)

அளவு: 21×33. வரிகள்: 30.
பக்கங்கள்: 4. நிலை: பழமை.

குறிப்பு: திருத்தணிகை முருகப் பெருமான்மீது பாடப் பெற்ற நூல். தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் என்பவர் ஆசிரியர். இந்நூல் ஐயரவர்களால் அச்சிடப் பெற்றுள்ளது.

தொடக்கம்:

ஓங்கார வுருவுசின் மயவிமல வொளியாகி
யுலகமழு வதுநிறைந்த
வுண்மைப் பராபர நிராமய நிராலம்ப
வும்பர்கள் சிகாரத்னமே
யாங்கார நீங்காத தீங்காண வத்தின்வரு
மலகிலாப் பிறவிதோறு
மடியேன்செய் கொடுவினை யளக்கருவ ரம்பினை
யளந்திடினு மளவுபடுமோ
வாங்காம லவ்வினை வருத்தலா லுன்றிருமுன்
வந்தபய மபயமென்றேன்
மயிலேறி வந்துதிரு மந்திர சடாக்கர
மருந்தரு டிருந்துமடியார்
தாங்காண முன்னின்ற சண்முகத் தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகல பண் டிதராசனே.

முடிவு:

நலமருவு மதுரைத் தமிழ்ச்சங்க மேற்புலவர்
நடுவிற் றிருந்தமுதல்வா
நக்கீரர் சொன்னமுரு காற்றுப் படைத்தமிழ்
நல்லருண கிரிநாதர்சொற்
புலமையுறு சித்திரச் சந்தப்ரவாகமும்
புனிதச் செவிக்குளார்த்த
புகமுாள குறுமுனிக் காரணத் துட்பொருள்
புலப்படுத் தியகுரவனே

கொலைகளவு முதலான பாதக மெனக்குவெகு
  கோடிக ளிருந்திடினுமுன்
 கூர்மந் திரப்படையி னல்வீட்டி யெனதுளங்
  குடிகொண் டிருந்தருளுவாய்
சலனமறு சருவபரி பூரண தயாநிதே
  சரவணோற் பவகுமரனே
 தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
  சகலபண் டிதராசனே.

Tiruttanigai Tiruviruttam

Size: 21×33. Pages: 4. Lines: 30 on a page. Condition: good.

Note : The Ms. contains Tiruviruttam on Lord Muruga of Tiruttanigai by Thottikkalai Subramania Munivar. Published by Dr. Iyer.

552. தண்டபாணி பதிகம் (நூல் எண் 663a)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள் : 5. (7-12) நிலை : பழமை.

குறிப்பு : பழனியில் குடிகொண்டுள்ள தண்டபாணிப் பெருமானைப்பற்றிப் பாடிய பத்துப் பாடல்கள். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பூர்த்தி.

தொடக்கம் :

வேலுமயிலும் துணை
தெண்டபாணி பதிகம்

காப்பு

அருள னமீ தாசிரி யஞ்சொல
விருணையினிரு மென்பதங் காப்பு.

இரட்டையடி யாசிரிய விருத்தம்

பூமேவு மிரவிநீ யரவிந்த மலரியான்
  பூர்ணமதி நீகுமுதநான்
 புயலுநீ மயிலியான் புத்ரனுன் அன்னைநீ
  புலவனுன் பிரபுநீயே,
காமேவு தருவுநீ யுணைமேவு வல்லியான்
  கருணைமுகி நீசாலிநான்
 கடவுணீ யடிமைநா னல்லவோ நின்னுளங்
  கனியாத தெனியாயமே

தூமேவு தேமற் படர்ந்திறுகி யிளகிச்
சுகந்தகள பம்புனைந்த
சொர்ணப் பிரகாசமுலை வள்ளிமண வாளா
சுகாரம்ப வனசதாளா
தேமேவு கருணைபுரி மாமேவு விபவஞ்
சிறந்ததென் பழனிமலைவாழ்
சிவகுருப ராகால பவபயஹ ராபால
தெண்டாயு தக்கடவுளே.

முடிவு :
குடகமொடு குமரிவட குவடுகுண கடல்மருவு
குவலயப் புரவலரெலாங்
கொண்டாடு கின்றவரி வண்டாடு மதுப்பூங்
கோதைநிரை புயபாரமாங்
தடகிரிகள் பன்னிரண் டிடமதனி லென்பதிக
தண்டமி ழணிந்தருளுவாய்
சாமிசிவ காமிகுற மாமியபி ராமியிரு
சலசகர விரலாழியே
வடவைபொரு சுடர்விழிக் கடகரியி னுடலைமுன்
வாட்டித் தொலைத்தவீர
வாகுமுத னவவீர தீரசே னைசமுக
வந்தித சபாவேழமே
திடசரித விருடியர்க டவசுபுரி யடவிகள்
சிறந்ததென் பழனிமலைவாழ்
சிவகுரு பராகால பவபயஹ ராபால
தெண்டாயுதக் கடவுளே. (10)

தெண்டபாணி பதிகம் முற்றிற்று.

Dandapani Padigam

Size: 21×17. Pages: 5. Lines: 22 on a page. Condition: old.

Note: The Ms. contains ten songs on Lord Dandapani of Pazhani. Author not known.

553. தோத்திர சிகாமணி (நூல் எண் 493)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 7. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் அம்பிகையின்மீது பாடிய தோத்திரம். 123 கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவாக உள்ளது. இந்நூலாசிரியர் கொற்றவன்குடியார் என்பார்.

தொடக்கம் :

உ
கணபதி துணை

பூங்கமல யோனிமுதற் புத்தே ளிறைவருக்கு
மாங்கவர்தஞ் செய்கை யனைத்தினுக்கு—மோங்கிவளர்
வித்தாய்ப் பரையாய் விரிந்தபரை யாய்ச்சடசிர்க்
கொத்தாய் மனோன்மணியாய்க் கூறைந்தாய்த்
தத்துவங்கள்.

முடிவு :

செம்மேனி யுந்தனமுஞ் சிற்றிடையும் வான்முகமு
மம்மேயு ணைசர ணும்புயமும்—புன்மையே
னுள்ளத் தியானத் தொழியா திருத்தியருள்
வெள்ளத்தை நீந்தி விளையாடும்—பிள்ளையாய்ப்
பேயேனை யாண்ட பிரம பரம்பொருளே
தாயேநின் றாளே சரணம்.

திருச்சிற்றம்பலம்.
கொற்றவன்குடியா ரருளிச்செய்த
தோத்திர சிகாமணி முற்றும்.

Stotra Sikhamani

Size: 21 × 33. Pages: 7. Lines: 35 on a page. Condition: good.

Note : The Ms. contains 123 kannis on Devi composed by Kottravan Kudiyar.

554. **தோத்திரங்கள்** (நூல் எண் 492)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 207. நிலை : பழமை.

குறிப்பு : பல திறப்பட்ட தோத்திரப் பாக்கள் அடங்கியது. திருவிலப்பாடி தக்ஷிணாமூர்த்தி தோத்திரம், திருநாகைத் தக்ஷிணா மூர்த்தி தோத்திரம், சிதம்பரம் சபாநாயகர் தோத்திரம், திருவாரூர்த் தியாகராசர் தோத்திரம்முதல் சரஸ்வதி அந்தாதி வரை 23 நூல்கள் இப்பிரதியில் உள்ளன. முதல் பக்கத்தில் நூல்களின் அட்டவணை உள்ளது.

தொடக்கம் :

உ
திருநீலப்பாடி
தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

மூந்தையுறு தவந்தனற் காட்டநான் காண்டலு முன்னின்ற
காட்சியிலதால்
மொழியுனது பாதமது மொன்றுய பாவகமு முள்ளாது
புல்லியிடவே
சிந்தையுறு மவ்வளவி லென்னைக் கரந்துலகுந் திகழா
தொழித்தலறமோ
திருநீல நகரில்வாழ் தெட்சிணா மூர்த்தியே சிற்பரா
நந்தகுருவே.

முடிவு :

சரசுவதி யந்தாதி
பெருந்திரு வுஞ்செய்ய மங்கையு மாகியென் பேதைநெஞ்சி
விருந்தரு ளுஞ்செஞ்சொல் வஞ்சியைப் போற்றியெல்
லாக்கலையும்
பொருந்திய ஞானந் தரும்பகை யாவும் பொருந்திவரும்
திருந்திய செல்வந் தருமிக்க பேர்தருஞ் சீர்தருமே.
சரஸ்வதி யந்தாதி முற்றிற்று.

Stotrangal

Size: 21×33. Pages: 207. Lines: 26 on a page. Condition: old.

Note : The Ms. contains miscellaneous prayer songs, 23 in number.

555. பச்சையம்மன் பதிகம் (நூல் எண் 587)

அளவு : 21×33. வரிகள் ; 20.
பக்கங்கள் : 34. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருக்கோவிலூர்த் தாலூக்கா அறையணி நல்லூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாகிய பச்சையம்மன்மீது பாடப்பெற்ற பதிகம். 18 ஆசிரிய விருத்தங்கள் உள்ளன. இந்நூலாசிரியர் பாலநாகப்பன் என்ற குறிப்பு உள்ளது. இப்பிரதியில் பாண்டி மண்டல சதகம் என்னும் நூலும் உளது.

தொடக்கம் :

உ
சிவமயம்: அம்பாள் துணை
திருக்கோவலூர்த் தாலூக்கா அறையணி
நல்லூர் ஸ்ரீ பச்சையம்மன் பதிகம்
இருபத்தெட்டுச் சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

கணபதி துதி
கார்மேனி யொருகொம் பிருபாத மூன்றுகண்
கன்னங் கபோல கரடம்
கரம்நாலு கையைந்து சால்வயிறு விநாயகன்
கறைமிடற் றண்ணல் கையில்
கட்டிமாம் பழம்வாங்க இவ்வுலகம் நீயெனக்
கருதிவலம் வந்து பெற்ருேன்
கனகமயில் மீதேறிக் கந்தன்மிகு வேகமாய்க்
கடலேழு வரையெட் டையும்
ஏர்மேவி ஒருநொடியில் எதிர்வந்து மாங்கனி
எனக்கென்னத் தும்பிக் கையி
லிருப்பதைக் கண்டுகோ பங்கொண்டு வேலின
லிருக்க குடலஞ்ச ....
எண்ணமல் நீயிருப் பதுகண்டு மண்ணுதல்
ஏந்திழுத் தங்கொடுத்து
எல்லார்க்கும் முன்னவன் பிழைபொறுத் தனனென்று
இசைந்தவிக் னவிநாயகா.

முடிவு :

அழகுவள ரபிராமி குகனையருள் சிவகாமி
அ...குற மகளின் மாமி
அரியச்சு தன்தங்கை அரன்வைத்த சடைக்கங்கை
அருள்பச்சை மலைமங்கையே.

Pachaiamman Padigam

Size: 21×33. Pages: 34. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. contains 18 verses on Devi Pachaiamman at Araiyaninallur, Tirukkollur taluk, in South Arcot District. Author : Balanagappan.

556. பஞ்சரத்தினத் திருப்புகழ் (நூல் எண் 707a)

அளவு: 21×17. வரிகள்: 18.
பக்கங்கள்: 24. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: திருப்புகழ் போன்ற ஐந்து பாடல்களைக் கொண்டது. இவை போலித் திருப்புகழ் போலும்!

இப்பிரதியில் ஜீவேசுவர பிரம ஐக்கிய சரித்திரம், சுப்பிரமணிய விருத்தம், ஆனை ஐயா சங்கீதம் ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம்:

உ

ஹரி: ஓம்

சண்முகன் துணை

மலடி வயிற்று மகன்போலே யொரு
புதையலெடுத்த தனம்போலே யொரு
வயிரமடித்த களம்போலே யிள-முலைமாதர்
வலிய வணைத்த சுகம் போலே கதி
ரொளிவிடுரத்ன வடம்போலே பரி
மளமிகு புட்பவனம் போலே சுர-நதிபோலே

முடிவு:

நறையிற் ருதுறு பூக்கொத்திலே கனி
கிழியத் தேனுமிழ் காய்க் கொத்திலே
நடனக் கால்படு தோப்புக்குளேபயில்
வளமைச் சோழ நன்னாட்டுக்குளேசிவ
நகரிற்சீர் பெறு மோக்ஷத்தையேதரு முருகோனே.

பஞ்சரத்தினத் திருப்புகழ் முற்றும்.

Pancharatna Tiruppugazh

Size: 21×17. Pages: 24. Lines: 18 on a page. Condition: good.

Note: The Ms. contains five verses in the meter of Tiruppugazh. Author not known.

557. பழனிப் பஞ்சரத்தினம் (நூல் எண் 466a)

அளவு: 21×33 வரிகள்: 30.
பக்கங்கள்: 36. நிலை: பழமை.

குறிப்பு: பழனி மலையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்றுள்ள ஐந்து பாடல்கள். பிரதி மிகப் பழமையாகவும், எழுத முடியாத நிலையிலும் உளது.

Pazhani Pancharatnam

Size: 21×33. Pages: 36. Lines: 30 on a page. Condition: old.

Note : The Ms. contains 5 verses on Lord Muruga of Pazhani. Author not known.

558. மத்யஸ்தநாதேசுவரர் பதிகம் (நூல் எண் 623)

அளவு: 21×17. வரிகள்: 17.
பக்கங்கள்: 12. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூர்த் தாலூகா திருப்பாலைப் பந்தல், கனகாம்பிகா சமேத ஸ்ரீமத்தியஸ்தநாதேசுவரர்மீது வெண்ணெய்நல்லூர், திரு வடிவேல் முதலியார் அவர்களால் பாடப்பெற்றது.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருப்பாலைப் பந்தல் ஸ்ரீ கனகாம்பிகா சமேத
ஸ்ரீ மத்தியஸ்தநாதேசுரர் பதிகம்
காப்பு
நேரிசை வெண்பா

திருப்பாலைப் பந்தல் சிவபெருமான் மீது
விருப்போடு செய்யுள் விளம்ப—மருப்புடைய
யானை முகன்றன் இணையடிகள் காப்பாகத்
தானே யிருந்துதவுந் தான்.

உ
நூல்
பதினன்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

திங்களுங் கங்கையுங் கொன்றையங் கண்ணியுந்
திகழ்கின்ற முடியினழகும்

தினகரன் இமகரன் தீபதியும் ஒளிவிடுந்
திரிநேத்தி ரக்கருணையுந்
தங்குகடு கண்டமும் தாவுமான் மழுவுடன்
தருமபய வரதகரமும்
தருமமெண் ணுன்கையுந் தான்வளர்த் திடுமம்மை
தங்கிய விடப்பாகமும்
துங்கமுப் புரிநூலும் வெண்ணீறு துதைமார்பும்
தும்பியுரி போர்வையழகும்
தூயவீ டருள்பதமும் நாயினேன் தெரிசிக்கத்
தோன்றியே காட்சியருள்வாய்
திங்கணுதல் கனகாம்பி காமகிழ் பாகனே
திருப்பாலைப் பந்தல்வாழுஞ்
சித்திதரு பாதனே மத்யஸ்த நாதனே
திருவருளு மாதேவனே.

முடிவு :

புகழுடன் கல்வியும் வீரமும் வெற்றியும்
புத்திரர் துணிவுபொன்னும்
புதிதாகுந் தானியம் நல்லூழும் ஞானமும்
போகமுடன் அழகுபெருமை
பகரிளமை நோயின்மை பல்லாண்டு வாழ்ந்திடும்
பதினாறு பேறு முற்றே
பாரினில் அனைவோரும் மகிழ்வுடன் வாழவே
பரமனே கருணைபுரிவாய்
சகவாழ்வு வெறுத்துநின் பதவாழ்வு வேண்டியே
சதாநிஷ்டை புரியுமுனிவர்
சாயுச்ய நிலையடையத் தண்ணருள் சுரந்திடும்
சச்சிதா னந்தபரமே
திகழ்கின்ற கனகாம்பி காமகிழ் பாகனே
திருப்பாலைப் பந்தல் வாழுஞ்
சித்தியருள் பாதனே மத்யஸ்த நாதனே
திருவருளு மாதேவனே. (10)

முற்றுப்பெற்றது.

மத்யஸ்தநாதர் துணை. 16—2—1951.

Madhyasthanatheswarar Padigam

Size: 21×17. Pages: 12 Lines: 17 on a page. Condition: good.

Note: The Ms. contains a padigam composed by Vadivel Mudaliar of Tiruvennainallur, on Lord Madhyasthanatheswarar of Tiruppalaippandal, in Tirukkoilur taluk of S. Aroct district.

559. மணித் தசகம் (நூல் எண் 620)

அளவு: 21 × 17. வரிகள்: 15.
பக்கங்கள்: 15. நிலை: நல்ல நிலை.

குறிப்பு ! தசகம் என்பது பத்துப் பாடல். காளிப்பட்டி என்னும் காளிமாநகரத்திலெழுந்தருளிய கந்தசுவாமிபேரில் ஸ்கூல் மாஸ்டர் இராமச்சந்திர ரவுத் அவர்களால் இயற்றப் பெற்றது. இப்பிரதியில் முதல் 6 பக்கங்களில் இந்நூலைப் பற்றிப் பலர் பாடிய சிறப்புப் பாயிரங்களும் அதன் பின்னர் நூலும் உள்ளன. இறுதியில் இந்நூல் தொகுத்தற்குக் காரணம் என ஒரு பாடல் உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

உ
சிவமயம்
வேலும் மயிலும் துணை
காளிபட்டி என்னும் காளிமாநகரத்திலெழுந்தருளிய
கந்தசுவாமி பேரில் மணித் தசகம்.

புதுக்கோட்டை சம்ஸ்தானம் மகா-ா-ா ஸ்ரீ மருதநாயகம் பிள்ளையவர்கள் மாணாக்கராகிய சா.ஆ. சாமிநாதன் செட்டியாரவர்களியற்றிய எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சாற்றுக்கவி

பாரினி லுயர்ந்தும் பயோதரஞ் சொரிந்தும்
பலவளம் பெருகிடச் சிறந்து
நேரிணை யில்லா நிகழுறுஞ் சேரன்
நீதிசேர் மண்டல மதனிற்
சீருறுங் காளி நகரெனுந் தலத்தில்
திருவருட் கொண்டெழுஞ் சோதி
பேருறு மந்தா கினியினற் றனயன்
பீடுயர் கந்தவே டனக்கே.

முடிவு : இந்நூற்றொகுத்தற்குக் காரணம்.
கற்பகச் சோலை சூழுங் காளிமா நகரில் வாழுங்
பொற்புயக் கந்த நாதன் புகழ்மணித் தசகந் தன்னை
சொற்பனத் தினிற்செய் யென்று சொல்லினு ரிலம்மை மேவுங்
கற்பனை யிராம சந்திரக் கவிவலோன் புனைந்தான் மன்றோ.

Mani Dasakam

Size: 21×17. Pages: 15. Lines: 15 on a page. Condition: good.

Note : The Ms. contains 10 songs composed by Ramachandra Rowth on Lord Kandaswami (Muruga) of Kalipatti. Printed.

560. மயிலாசலத் திருப்புகழ் (நூல் எண் 634)

அளவு : 21×33. வரிகள் : 17.
பக்கங்கள் : 13. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மயிலாசலம் என்பது திண்டிவனத்திற்கு அண்மையில் உள்ள மயிலம் என்னும் தலம். அங்கே எழுந்தருளியுள்ள முருகப் பெருமான்மீது திருநெல்வேலி முருகதாசர் இயற்றியது. 11 சந்தப் பாடல்களைக் கொண்டது. சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்றும் காப்புச் செய்யுள் ஒன்றும் உள்ளன. சிறப்புப் பாயிரப் பாடலால் இதன் ஆசிரியர் நெல்வேலிப்பதி முருகதாசர் என்று தெரிகிறது. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் என்ற பெயருடையவரே இதைப் பாடியிருப்பார் என்று தோன்றுகிறது.

தொடக்கம்:

அதிகவள முற்றமயி லாசலக்கந் தன்மேற்
பதிகத் திருப்புகழைப் பாடத்—துதிபுரிந்து
தாடொழலைக் கண்டுவரந் தந்தவனைக் கேண்மினல்லீர்
நீடொருகோட் டானைமுக னே.

முடிவு :

அழிவு றுமலனு தினம்வள ரிணையறு பெரியோனும்
அடிமை யாமவர்த மடிமையு மொருவனெ னுயர்தோழ
மொழியொணு மொழியை மொழிகுர வனுமிகு மிளையோனு
முருகதா சனெனு மொருபெய ரணையுற வருள்வோனும்
விழிமுவா றுடைய வறுமுகன் மறமக ளொடு வானின்
விபுதர்கோ னுதவு மகளணை யொருபதி னிருதோளான்
ஒழிவிலா தவிரு வினையையு மொடுவிடு குமரேச
னொளிரும்வே லும்மயி லதுமுனன் மயிலமு
ளெழில்வேளே (11)

மயிலாசலத் திருப்புகழ் முற்றும்.

Mayilachala Tiruppugazh

Size: 21×33. Pages: 13. Lines: 17 on a page. Condition: good.

Note: The Ms. contains eleven verses in chandam composed by Tirunelveli Murugadasar on Lord Muruga of Mayilam in South Arcot district.

561. முருகேசப் பதிகம் (நூல் எண் 663)

அளவு: 21×17. வரிகள்: 30.
பக்கங்கள்: 6. நிலை: பழமை.

குறிப்பு: இந்நூல் முருகப் பெருமான்மீது பாடப்பெற்ற பதிகம். இப்பிரதியில் காப்புச் செய்யுள் அவையடக்கத்துடன் 12 பாடல்கள் உள்ளன. மேலும் தண்டபாணிப் பதிகம், பழனுபுரி இரட்டை மணிமாலை, சிவகிரி ஒலியலந்தாதி ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம்:

வேலுமயிலுந் துணை
முருகேசப் பதிகம்
காப்பு

வாலமதி சூடிநக மாமகுட மீதிலகு
கோலவடி வேலவர்ச கோதரனை—சீலமிகு
சுப்ரமணி யக்கணப திச்சுமுக னைப்பரவி
யொப்பறு தமிழ்ப்புகலு வோம்.

முடிவு:

கடமுனி வனுக்கக மகிழ்ந்துமறை முடிவையுங்
கற்பித்த தற்சொருபா
காரண மிலங்குபரி பூரண விலாசநய
காருண்ய மவுனகுருவே
வடவன லெனச்சிறி யடர்பகடு மீதேறி
வருமறலி யெனையண்டிடா
வகையுன தெழிற்சிலம் பொலிசரோ ருகபாத
வாழ்வையென் ளுளுதவுவாய்
படலைதவ ழீராறு திடகனக வாகா
படிரகுங் குமசுதேகா
பலகலைகள் புகழ்பேச வளர்பழனி மலைவாச
பவரஹித முருகேசனே. (10)

முருகேசப் பதிகம் முற்றிற்று.

Murugesa Padigam

Size: 21×17. Pages: 6. Lines: 30 on a page. Condition : old.

Note : The Ms. contains a padigam on Lord Muruga. Author not known.

562. அர்த்தநாரீச்சுரர் குறவஞ்சி (நூல் எண் 39)

அளவு: 21 × 33. வரிகள்: 35.
பக்கங்கள்: 30. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலமாகிய திருச்செங்கோட்டு இறைவர் அர்த்தநாரீசுவரர்மீது பாடப்பெற்ற குறவஞ்சி நாடகமே இது. தட்டச்சுச் செய்யப்பெற்றுளது. நூல் நிலையச் சுவடிகள் எண் 324, 845 ஆகியவற்றிலிருந்து பிரதி செய்யப்பெற்றது. அச்சாகவில்லை. இப்பிரதியில் திருச்செங்குன்றூர் மாலை என்னும் நூலும் உளது.

உ

தொடக்கம் :

அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி

திருவருள் செழிக்கும் நாகச் சிகரியில் உகந்தெந் நாளு
மருமறைப் பொருளாய் நிற்கும் அர்த்தநா ரீச்சு ரர்மேற்
பொருள்குற வஞ்சி நாட்யம் புகன்றிட இமயச் செல்வி
கருணைபெற் றுகந்த நாரி கணபதி காப்புத் தானே.

முடிவு:

தேசுலாவிய கொங்கு தேசருக்கு
திவ்யமாம் பணிகிரி வாசருக்கு
வாசவ அசுரர் கமலாசனர் போற்றும்
நடராசர் எனுமர்த்த நாரீசருக்குச் சோபனமே.

ஹரி: ஓம்

யுவ வருஷம் தை மாதம் 21ஆம் தேதி அர்த்தநாரீசுவர சுவாமியார் பேரில் குறவஞ்சி நாட்டியம். செங்கோடன் கையெழுத்து. குருபாதந் துணை. திருச்சிற்றம்பலம்.

டைப் செய்தது கோ. திருநாவுக்கரசு. 14-8-57

Ardhanariswarar Kuravanji

Size: 21×33. Pages: 30. Lines: 35 on a page. Condition: good.

Note: This is a typed copy of the kuravanji copied from the corresponding cadjan leaf Ms. in the Library.

563. அர்த்தநாரீச்சுரர் குறவஞ்சி (நூல் எண் 38)

அளவு: 21×33. வரிகள்: 35.
பக்கங்கள்: 52. நிலை: ஜலமாக உளது.

குறிப்பு: 39ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Ardhanariswarar Kuravanji

Size: 21×33. Pages: 52. Lines: 35 on a page. Condition: injured.

Note: Same as the previous one.

564. அர்த்தநாரீச்சுரர் குறவஞ்சி (நூல் எண் 40)

அளவு: 21×33. வரிகள்: 25.
பக்கங்கள்: 139. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: 39ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Ardhanariswarar Kuravanji

Size: 21×33. Pages: 139. Lines: 25 on a page. Condition: good.

Note: Same as the previous one.

565. கும்பேசர் குறவஞ்சி (நூல் எண் 163)

அளவு: 21×33. வரிகள்: 30.
பக்கங்கள்: 58. நிலை: ஜலமாக உளது.

குறிப்பு: கும்பேசர் குறவஞ்சி நாடகமென்னும் இந்நூல், கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கும்பேசர்மீது குடந்தைப் பாபநாச முதலியாரால் இயற்றப்பெற்றது. வெண்பா, அகவல், விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை முதலிய செய்யுட்களை விரவு வித்துக் கீர்த்தன ரூபமாக அமைந்துள்ளது. நூல் நிலைய வெளியீடாக 1944இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம் : 24-5-97

உ
சிவமயம்
கும்பேசுவர சுவாமி பேரில்
குறவஞ்சி நாடகம்

பொன்கொண்ட மணிமார்ப னீன்ற வேதன்
புரந்தரன்வா னவர்முனிவர் போற்றும் பாதர்
மின்கொண்ட நுண்ணிடைமங் கைச்சி பாகர்
விமலர்குட மூக்கமுதர் மீதில் வாசம்
தன்கொண்ட காட்சியென மதுரங் கொண்டு
சதுர்கொண்ட குறவஞ்சித் தமிழைப் பாட
முன்கொண்ட துதிக்கைப்பே ரார வார
மும்மதவா ரணமுகவன் முன்னிற் பானே.

முடிவு:

கலித்துறை

நம்மலைக் குந்துயர் தீர்த்தாண் டிடுகும்ப நாயகர்மே
லெம்மலைப் புந்தவிர்த் தின்பப் பணிகள் இயற்றவல்லேன்
செம்மலைக் குப்பின் வருஞ்செம் மலையப்பஞ் சேரியன்மன்
விம்மலைத் தீர்க்கும் நடராச பூப விதரணனே.

Kumbesar Kuravanji

Size: 21×33. Pages: 58. Lines: 30 on a page. Condition: injured.

Note : This is a kuravanji on Lord Kumbesar of Kumbakonam composed by Papanasa Mudaliar. Published by the Library in 1944.

566. கும்பேசுவரசு-சுாமிபேரில் குறவஞ்சி நாடகம்

(நூல் எண் 164)

அளவு : 21×17. *வரிகள் :* 16.
பக்கங்கள் : 76. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 163இன் படியே. இப்பிரதியில் ஐயப்பன் தோத்திரம், இராசகோபால பிள்ளைபேரில் வண்ணம், தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்திரம் ஆகிய நூல்கள் உள்ளன.

Kumbeswaraswamiperil Kuravanji Natakam

Size: 21×17. Pages: 76. Lines: 16 on a page. Condition: good.

Note : Similar to the previous one.

567. குமாரலிங்கக் குறவஞ்சி (நூல் எண் 165)

அளவு : 21×33. வரிகள் : 33.
பக்கங்கள் : 34. நிலை : பழமை.

குறிப்பு : இது குமாரலிங்கன் என்னும் பாண்டி நாட்டு வள்ளல்மேற் பாடப்பட்ட குறவஞ்சியாகும். இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. நூல் நிலையச் சுவடி எண் 354இன் பிரதியாகும். ஆசிரியர்பற்றிய விவரம் தெரியவில்லை. அச்சாகவில்லை.

தொடக்கம் :

உ
குமாரலிங்கக் குறவஞ்சி

பொன்னணி மார்ப ஞான புகழேறு தாது லிங்க
மன்னவன் மகிழ்ந்து பெற்ற மால்குமார லிங்க போச
தென்னவன் மீதி லன்பாய்ச் செய்குற வஞ்சி பாட
கன்னியா மூமையாள் தந்த கணபதி காப்புத் தானே.

முடிவு :

விருத்தம்

ஆனிரை வாழி மேன்மே லந்தணர் வாழி யென்று
மானிலம் வாழி மன்னர் மனுநெறி வாழி வாழி
தீனரட் சகனு மெங்கள் சில்லைவார் குலத்தில் வந்த
மானவேற் குமார லிங்க மனுபதி வாழி தானே.

குறவஞ்சி முற்றும் 26-11-44

Kumaralinga Kuravanji

Size: 21×33. Pages: 34. Lines: 33 on a page. Condition : old.

Note : This is a copy of the cadjan leaf Ms. No. 354 in the Library. Not printed. This is a kuravanji on a patron, Kumaralingan of Pandya Nadu. Author not known.

568. குளுவ நாடகம் (நூல் எண் 724)

அளவு : 21×33. வரிகள் : 14.
பக்கங்கள் : 46. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பிரபந்தங்களுள் ஒன்றாகிய குளுவ நாடகம். குறவஞ்சி நாடகத்தில் குறி சொல்லச் சென்ற குறவன் பின்னர்க் குறத்தியைக் கண்டு மகிழ்ந்ததாகக் கூறப்படும் பிரபந்தமாகும். மிதிலைப்பட்டிச் சின்ன பூபன் என்ற பிரபுவைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றது. இந்தக் குளுவ நாடகம் இதுவரை

வெளிவந்ததாகவோ, வேறு குளுவ நாடகம் இருப்பதாகவோ அறியக்கூடவில்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் நிலைய ஏட்டுச் சுவடி எண் 777இன் பிரதி.

தொடக்கம் :

உ

குளுவ நாடகம்

(மிதிலைப்பட்டி)

சிவமயம்

கன்னினி உன்னித மாகவே மன்னவன் சொன்னதுக்கு
மெத்தவே முழங்கும்.
மிதிலைப்பட்டி வயித்தியலிங்கம்
குளுவ நாடகம்.
மேலேடு வேலுண்டு வினையில்லை.

சங்கரிதி சுரபி சிந்தாமணி யொப்பானதான
கறன்ன சுபபன்னகப்பூங்........
துங்கனெனுங் குளந்தை வயித்தியலிங்கேந்திர
துரந்தரிகன் தனைப் பயின்ற சுப கெம்பீரப்
பங்கயவில் மதனனெனுஞ் சின்னேந்திர
பாக்கிய பதிமேல் குளுவன் பனுவல்கூற
மங்கையெனு மாவுடையாள் பங்கில் மேவி
வளருதிருக் கோளலிங்க மலர்காப்பாமே.

முடிவு :

பதிவாளி யளகிய சித்தம் பலேந்திர
பாக்கிய பதிமகிள் மிதுலைப்பதியும் வாளி
மதிவாளி சின்னன் மார்கண்டயோகன்
மைந்தர் பதிறும் பெற்றுவாளிதானே.

முற்றிற்று முற்றும்

குளந்தை வடிவேலன் துணையாக ரட்சிக்க வேணும்.

Kuluva Natakam

Size: 21×33. Pages: 46. Lines: 14 on a page.
Condition: good.

Note : This is a copy of the cadjan leaf ms. 777.

569. சிக்கல் நவநீதசுவாமிபேரில் குறவஞ்சி

(நூல் எண் 217)

அளவு: 21 × 17. வரிகள்: 17.
பக்கங்கள்: 121. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: சிக்கல் என்பது சோழ நாட்டில் உள்ள தேவாரம் பெற்ற தலம். இது அவ்வூரில் எழுந்தருளியுள்ள நவநீதசுவாமி பேரில் பாடப்பெற்ற குறவஞ்சி என்னும் நூலாகும். சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் இந்நூலாசிரியர். தருவை நிகர் சொக்கலிங்கம் பிள்ளை பாடிய சந்தக் குறவஞ்சி என்பதால், இஃது அறியப்படுகின்றது.

முதல் 4 பக்கங்களில் நூலைப்பற்றிய சிறப்புப் பாயிரங்கள் உள்ளன.

தொடக்கம் :

உ
காப்பு

சீர்மா கரியின் செழுமா முகவா
தேர்மா மகுடம் திகழும் பகவா
காரா குவிளை கழல்பா வியவா
பாரார் சிகரைப் பதிமே வியவா

எழுத்து நிறைத்த மதக்களிறே
எக்கா லெவர்க்கு நாயகமே
வழுத்து மடியார் தம்வினையை
வலக்கை மழுவாற் றரிப்பவனே
பழுத்த கருணைப் பகவனருட்
பழைய மகவே பாந்தளக
டழுத்தி யசைத்த வைங்கரனே
அணியார் சிகரை யமர்ந்தவனே.

முடிவு:

உன்மன தறியாமல்
உரைத்தது பொறுத்தருள் சிங்கி
உபசாரம் போதும்
உன்னுறவு நல்லுறவு சிங்கா
எந்தன் மயல்தீர யிரங்கி
என்னை யணைவாய் சிங்கி
இரதியும் மதனும் போலவே
எந்நாளும் வாழ்ந்திருப்போம்-சிங்கா

இனிமேல் மங்களம் சுபமஸ்து. பரிதாவி ஞூ தைமீ 22உ புதவாரம் எழுதிமுகிந்தது. இவை திருவாரூர் ஸ்கூல்மாஸ்டர் சொக்கலிங்கம் பிள்ளையால் செய்யலாச்சுது.

முகிந்தது முற்றும்.

Sikkal Navaneethaswamiperil Kuravanji

Size: 21×17. Pages: 121. Lines : 17 on a page. Condition: good.

Note: This is a kuravanji on Navaneethaswami of Sikkal in Thanjavur district. Author is one Chokkalingam Pillai of Tiruvarur.

570. தியாகேசர் குறவஞ்சி (நூல் எண் 300)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 31. நிலை : பழமை.

குறிப்பு : சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றும், பிறக்க முக்தி தருவதுமாகிய திருவாரூரிற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ தியாகேசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பெற்றது இக்குறவஞ்சி. ஏனைய குறவஞ்சியிற் காணப்படும் சிற்சில உறுப்புக்கள் இதில் காணப் படவில்லை. அச்சானது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை.

தொடக்கம்:

சீர்பெருகு நடுதறியுந் தேவியுமை வாழி
திருமாலும் லெட்சுமியும் தினந்தினமும் வாழி
கார்வாழி நதிவாழி கற்றவர்கள் வாழி
கனதனங்கள் வளர்ந்திருக்கும் அரசர்களும் வாழி
பேர்பெரிய மான்வாழி பதிகமிக வாழி
ஏர்சிறந்த வேளாள ரெந்நாளும் வாழி
செட்டிபல பட்டடையுஞ் செந்தமிழோர் வாழி
இந்திரன்போல் வாழ்ந்திருக்கும் யாவர்களும் வாழி.

காப்பு

திங்கள்சேர் சடைய ராரூர்த்
தியாகாதி ராசர் மீதில்
துங்கவங் கார மோகத்
துறைக்குற வஞ்சி பாடப்

பங்கயத் திருமால் வேதன்
    பண்ணவர் முனிவர் போற்றும்
மங்களந் தருவா தாவி
    வாரணங் காப்புத் தானே.

முடிவு :

செந்திரு மாயன் வாழி தெய்வ முசுகுந்த மன்னன்
    தினமும் வாழி
சுந்தரர் முத்தமிழ் வாழி கவிஞோர் வாழி
தொண்டரறு பதின்மூவர் சுகித்துவாழி
சந்ததமும் தென்கமலைப் பதியும் வாழி
தவம்தான பரிகலமும் தழைத்து வாழி
மந்திர வேதியர் வாழி..................

Tyagesar Kuravanji

Size: 21×33. Pages: 31. Lines: 32 on a page. Condition: old.

Note: This is a kuravanji on Tyagesar of Tiruvarur; printed. Author not known.

571. தியாகேசர் குறவஞ்சி (நூல் எண் 299)

அளவு : 21 × 33. வரிகள் : 28.
பக்கங்கள் : 29. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : நூல் எண் 300-ஆம் பிரதியைப் போன்றது.

Tyagesar Kuravanji

Size; 21×33. Pages: 29. Lines: 28 on a page. Condition: injured.

Note: Similar to the previous one.

572. நவநீதஸ்வாமிபேரில் குறவஞ்சி (நூல் எண் 502)

அளவு : 21 × 33. வரிகள் : 27.
பக்கங்கள் : 38. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : 217-ஆம் எண்ணுள்ள பிரதியின் மூலமாகும்.

Navaneethaswamiperil Kuravanji

Size: 21×33. Pages: 38. Lines: 27 on a page. Condition: injured.

Note: Similar to script Ms. No. 217.

573. மண்ணிப்படிக்கரை நீலகண்டர்பேரில் குறவஞ்சி நாடகம் (நூல் எண் 619)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 82. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : மண்ணிப்படிக்கரை என்பது சோழ நாட்டில் வைதீச்சுரன் கோயிலுக்கு 8 கல் தொலைவில் திருப்புன்கூர் வழியாகச் செல்லக்கூடிய சிவத்தலம். இலுப்பைப்பட்டு என்று வழங்கும். இத் தலத்தைப்பற்றிய புராணம் உள்ளது. இது சிவபெருமான்விஷயமாகப் பாடப்பெற்ற குறவஞ்சி நாடகமாகும். இந்நூலாசிரியர் சாமிநாதையர் என்று 18ஆம் பக்கத்தில் ஒரு பாடல் இருக்கின்றது. இறுதியில் 2 பக்கங்களில் நூலின் முதற் பகுதி மீட்டும் எழுதப் பெற்றுள்ளது. இது நூல் நிலையச் சுவடி எண் 252இன் பிரதியாகும். அச்சாகவில்லை. பூர்த்தியான நூல்.

தொடக்கம் :

திருமண்ணிப் படிக்கரை ஸ்ரீநீலகண்டர்பேரில்
குறவஞ்சி நாடகம்

சீர்கொண்ட புவியில்மண்ணிப் படிக்கரையில்
நிதம்விளங்குஞ் செல்வர் கொன்றைத்
தார்கொண்ட மதிவேணி விமலர் திரு
நீலகண்டர் தம்மே லன்பாய்
வார்கொண்ட கும்பமுலைக் குறவஞ்சி
நாடகத்தை மகிழ்ந்து கூறக்
கார்கொண்ட சிந்துரமா முகனிருத்த
கணபதிதாள் காப்ப தாமே.

முடிவு :

வாழி

தலமுயரும் படிக்கரை நாயக ரருளால் வயித்திய னுதன்
குலவுபுகழ் தொழுந்தூரே யாகோனு கோத்திரம் வாழி
புலமுயரும் படிக்கரை மீன்றுறை யழகப்பமால்
ஆறுமுகன் சுப்பிரமணிய னென்றும்
நலமுயரு மயிலேறு பெருமான்.

வேலாயுத மண்ணிப்படிக்கரைத் திருநீலகண்டர்பேரில்
குறவஞ்சி.

Mannippadikkarai Neelakantarperil Kuravanji Natakam

Size: 21×33. Pages: 82. Lines: 22 on a page. Condition: good.

Note: This is a copy of the cadjan leaf Ms. No. 252 in the Library. The author appears to be one Swaminatha Iyer. The Kuravanji is on Lord Siva in Mannippadikkarai, which is near Tiruppungur in Tanjore district.

574. சுரகுரு நாடகம் (நூல் எண் 258)

அளவு: 17×21. வரிகள்: 16.
பக்கங்கள்: 81. நிலை: பழமை.

குறிப்பு: இந்நாடகம் பாடல்களும், வசனமும் விரவிக் காணப்படுகிறது. இந்நூலின் முதல் பக்கத்தில் 'திருக்கழுக் குன்றம் ஸ்ரீ திருபுரசுந்தரி சமேத ஸ்ரீ வேதாத்திரீசுவர சுவாமி யார் ஸ்தல புராணமாகிய சுரகுரு நாடகம்' என்று காணப் படுகிறது. இந்நூல் தரு, விருத்தம், அகவல், வசனம் முதலியன விரவி நாடகமாக அமைந்துள்ளது. ஆசிரியர் பெயர் தெரிய வில்லை.

தொடக்கம்:

உ
ஸ்ரீ வேதாத்ரி சகாயம்

திருக்கழுக்குன்றம் ஸ்ரீ திருபுரசுந்தரி சமேத ஸ்ரீ வேதாத் திரீசுவர சுவாமியார் ஸ்தலபுராணமாகிய சுரகுரு நாடகம்.

இது எழுதியது ஷை யூர் ஆராசூர் சேதுராமய்யர் ஸ்வஹஸ்த லிகிதம் விய ஸு ஆவணி மீ 29உ சுரகுரு நாடகம் எழுத ஆரம் பித்தது.

உ
முதல் நாள் நாடகம் ஆரம்பம்
கணபதி துணை
இராகம்: சங்கராபரணம்

சுராதியர் எந்நாளும் துதிசெய்கழுக் குன்றம்
புராண விலாசத்தைப் பொன்னி—விராவும்
துறைவன் சுரகுருதன் தூய்க்கதையாற் சொல்வேன்
இறைஐங் கரன்துணைகொண் டே.

கட்டியக்காரன் (விருத்தம்)
இராகம்: மோஹனம்

தாக்கிடும் பிரம்பும் வெள்ளித்
தண்டமும் கையில் கொண்டு
தேக்குஜல் லடமுங் கட்டிச்
சிறந்தவ ரெவரு மெச்சி

தூக்குமா புகழை வாய்ந்த
    சுரகுரு ராஜன் வாசல்
காக்குநற் சிங்கக் குட்டிக்
    கட்டியன் வருகின் றானே.

முடிவு :

(வசனம்)

ஓ மந்திரிமார்களே சோழ வம்சத்திலே எங்கள் முன்னோரான வீதி விடங்கப் பெருமான் தான் ரதம் விட்டுக் கொண்டு போனபோது அந்தத் தேர்க்காலில் ஒரு பசுவின் கன்று இறந்து விட்டது. அதற்காகத்தான் தேர்க் காலிலே கொலையாவதற்கு உறுதியாயிருக்கிறேன் மந்திரிமார்களே.

Siva Guru Natakam

Size : 17×21. Pages : 81. Lines : 16 on a page. Condition: old.

Note : The Ms. contains 'Tharu', 'Virutham', 'Ahaval' and 'Vachanam' about Vedapureeswarar of Tirukkalukkunram.

பள்ளு

575. திருவாரூர்ப் பள்ளு (நூல் எண் 120)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 18. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவாரூர்த் தியாகேசப் பெருமான்மீது பாடப் பெற்ற பள்ளு என்னும் பிரபந்தம். இப்பிரதியில் 63 பாடல்கள் உள்ளன. இதன் ஆசிரியர் கமலை ஞானப்பிரகாசர் ஆவர்.

உ

கமலை ஞானப்பிரகாச ரியற்றிய திருவாரூர்ப் பள்ளு.
ஒத்திட்ட பிரதி 9. 15—8—901. மூலத்துடன் ஒப்பிட்டா யிற்று. 19—6—48.

காப்பு

தொடக்கம் :

சீர்பெறவே யாரூர்த்தியா கேசருக்குச் செந்தமிழாற்
பார்புகழும் பள்ளேசல் பாடவே—வார்மருவும்
கொங்கையுமை யாள்பவனுங் குஞ்சரனும் வேலவனும்
கங்கை சரஸ்வதியும் காப்பு.

நிகண்டு—32

முடிவு :

மாயக்கள்ளி குள்ளியின் சிரங்கப்பள்ளி
  வந்தவன்றே பள்ளன்மிகச் சிந்தை வேறானான்
காயப்போட்ட வயலுக்குத் தண்ணீரும் பாய்ச்சான்
  கட்டிச் சுடுதுகளப்பேறு இட்டதுந் தாரான்
பாயிற் கிடைபோலக் களவாகிக் கிடப்பான்
  படிபோட்டா லவளுக்கே பாய்ச்சி யளப்பான்
தாயத்தாரை வெல்லுவது பாயத்தா லாண்டே
  தாறுமாறு யென்கொடுமை சாற்றினே னாண்டே. (66)

Pallu

Tiruvarur Pallu

Size: 21×33. Pages: 18. Lines: 27 on a page. Condition: good.

Note: The Ms. contains 66 verses composed by Kamalai Gnanaprakasar on Tyagesar of Tiruvarur.

576. திருவாரூர்ப் பள்ளு (நூல் எண் 410)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 15. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : இப்பிரதியில் 7ஆவது பாடலிலிருந்து உள்ளது. பிரதி மிகச் சிலமாக உள்ளது. 120ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Tiruvarur Pallu

Size: 21×33. Pages: 15. Lines: 23 on a page. Condition: injured.

Note: Similar to the previous item.

577. முக்கூடற் பள்ளு (நூல் எண் 656)

அளவு: 21×33. வரிகள்: 30.
பக்கங்கள்: 27. நிலை: சிலமாக உள்ளது.

குறிப்பு : முக்கூடல் என்னும் பதியிலுள்ள பெருமாள்மீது பாடப்பெற்ற பள்ளு நாடகம். இப் பிரதியில் 136 செய்யுட்கள் உள்ளன. ஆசிரியர் என்னயினாப் புலவர். அச்சானது; பூர்த்தி.

தொடக்கம்:

பூமேவு நீலவெற்பில் பொன்னிறமும் ஒன்றாநற்பு
மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே
பாமேவு சொல்புறப்பாம் பாவல ரென்றெழுத்தும்
நாமேவும் பத்தர்பத்து நாவலரும் காப்பாமே.

முடிவு:

கலிப்பா

வாழி யருள்வாழி செங்கமல மேவுமனை
வாழி நெடுஞ்சூரி முகமென்றும் சொன்ன திருப்பொன்
வாழி அணியருளா ளகர்திருத் தாள்வாழி
வாழிய முக்கூடல் வையிணை வரும் வாழியே. (136)

முக்கூடற் பள்ளு முற்றும்.

Mukkudar Pallu

Size: 21×33. Pages: 27. Lines: 30 on a page. Condition: injured.

Note : This is a pallu on the presiding deity of Mukkudal in Tirunelveli district and contains 136 verses. Author: Ennayinappulavar: printed.

578. வடகரைத் துரையவர்கள்பேரில் பள்ளு

(நூல் எண் 680)

அளவு: 21×33. *வரிகள்:* 25.
பக்கங்கள்: 70. *நிலை:* நல்ல நிலை.

குறிப்பு: வடகரை என்பது பாண்டி நாட்டிலுள்ள சொக்கம் பட்டியாகும். இந்நூல் அங்கு ஆட்சி செய்த வடகரைப் பெரிய சாமித் துரையவர்கள்பேரில் பாடிய பள்ளு என்னும் பிரபந்தம். அச்சானது.

ஹரி: ஓம்

தொடக்கம்:

மருமலி தவளத் தாமன் மன்னவன் பெரிய சாமி
தருமமைக் காத்தான் சீர்த்தி தழைத்தெமைப் புரக்க வேண்டி
யிருநிலத் தெவரும் கொண்ட / காட்ட விசைந்தபள் ளேசல்சொல்லத்
திருமலைக் குமரன் செம்பொன் திருவடி துணைக்கொண் டேனே.

முடிவு :

பரந்திடும் அருவி பொன்னும் பருமணிக் குவையும் சாய்த்து
நிரந்திடும் திரிகூடத்து நிமலனுர் கமலப் பாதம்
வரந்தரப் பெரிய சுவாமி மைந்தர்ப்பெற் றினிது வாழப்
பரந்திடும் பண்ணை வாழப் புவியெல்லாம் வாழி தானே.

962ஆம் வருஷம் சித்திரை மாதம் குருவாரம் அவிட்ட நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் எழுதி முகிந்தது.

Vadagarai Duraiyavargalperil Pallu

Size: 21×33. Pages: 70. Lines: 25 on a page. Condition: good.

Note: The Ms. contains a pallu on Periyaswami Durai, a Zamindar of Vadagarai in Tirunelveli district. Printed.

நொண்டி, ஏசல்

579. திருக்குடந்தைச் சாரங்கபாணி நொண்டி நாடகம் (நூல் எண் 318)

அளவு: 21 × 33. வரிகள்: 38.
பக்கங்கள்: 30. நிலை: நலமாக உள்ளது.

குறிப்பு: கும்பகோணத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுகிய சாரங்கபாணிப் பெருமாள்மேல் இயற்றப்பெற்ற நாடகம். இதன் ஆசிரியர் அரியிலூர்ச் சண்பகமன்னுர். அச்சாகவில்லை.

தொடக்கம் :

8—3—28

உ

திருக்குடந்தைச் சாரங்கபாணி நொண்டி நாடகம்

அண்டரா லறிய லாகா வரு...தன்னை யாரும்
கண்டிடத் தமிழாற் செய்த காரண பதிமா தங்கன்
புண்டரீ கப்பொற் பாதம் போற்றியான் சென்னி வைத்தேன்
மண்டலந் தனிற்சார்ங் கேசர் தமிழென்றும் வாழ்கவென்றே.

முடிவு :

திருவளர் உலகம் வாழி திருக்குடந் தையுமே வாழி
பெருகுகா வேரி வாழி பெரியவர் வாழி வாழி
யருள்தரு மமுதர் வாழி யட்டலக் குமிகள் வாழி
சரசநற் கவிசொல் பால சரஸ்வதி வாழி தானே.

சாரங்கபாணி நொண்டி யெழுதி முற்றிற்று.

பிங்கள ௵ வைகாசி மாதம் பகல் 3 மணிக்கு எழுதி முகிந்தது.

Nondi Natakam

Tirukkudandai Sarangapani Nondi Natakam

Size: 21×33. Pages: 30. Lines: 38 on a page. Condition: injured.

Note : This is a Nondi Natakam composed by Ariyilur Sanbagamannar on Lord Sarangapani of Kumbakonam.

580. திருக்குடந்தைச் சாரங்கபாணி நொண்டி நாடகம் (நூல் எண் 319)

அளவு : 16×46. வரிகள் : 25.
பக்கங்கள் : 10. நிலை : கிலமாக உள்ளது.

குறிப்பு : 318 ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது. மிகக் கிலமாக உள்ளது.

Tirukkudandai Sarangapani Nondi Natakam

Size: 16×46. Pages: 10. Lines: 25 on a page. Condition: injured.

Note : Same as the previous item. 85474

581. சாரங்கபாணி நொண்டிச் சிந்து (நூல் எண் 216)

அளவு : 21×17. வரிகள் : 25.
பக்கங்கள் : 32. நிலை : கிலமாக உள்ளது.

குறிப்பு : குடந்தைச் சாரங்கபாணி ஸ்வாமிமீது இயற்றப்பட்ட நொண்டிச் சிந்து என்னும் நாடகம். இந்நூல் அரியிலூர்ச் செண்பகமன்னர் என்பவரால் இயற்றப்பெற்றது. இப் பிரதி எழுத முடியாத நிலையில் மிகக் கிலமாக உள்ளது.

Sarangapani Nondichchindu

Size: 21×17. Pages: 32. Lines: 25 on a page. Condition: injured.

Note: Not in a fit condition to be copied. Author: Sanbagamannar of Ariyilur.

582. தாய் மகளேசல் (நூல் எண் 624a)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 3. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: இந்நூல் குறுங்குடி அழகியநம்பி விஷயமானது. மகளின் நிலைமை கண்டு தாய் ஏசல்போல் பாடியது. மதன விஸ்தார மாலை, விசயரகுநாதர் கோவை ஆகிய நூல்கள் இப் பிரதியில் உள்ளன. ஆசிரியர் பெயர், அச்சான விவரம் ஆகியன தெரியவில்லை.

தொடக்கம் :

தாய்மகளேசல்

தாய்மகளை யேசல் தன்னைத் தாரணியில் தான்புகல
வேண்டி நல்ல
ஆயுதமிழ்க் கருள்புரியு மழகுநம்பி மேலசுகை யாகி மெல்ல
தாய்மகளைத் தானழைத்துச் சங்கைகுறித் தேயவளுந்
தானே கிள்ளை
வாய்திறந்து தாய்கேட்க மகள்பசலை யாய்ப்பேசும்
வகைகேள்.

முடிவு ;

ஆலது போலத்தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
வசி(யு)ங்கள் அனு
கூலமென மூங்கில்போலக் கூட்டதாய் வாழ்ந்திருங்கோ
மகளே நல்ல
பாலன் பதினாறும் பெற்றுப் பாக்கியத்தை அனுபவித்துக்
கொண்டு தினம்
சீலமுடன் தனமெல்லா மறஞ்செய் துயர்ந்து வாழியதே
வாழி மாமனுர் தான்வாழி.

தென்குறுகை திருமலை நம்பிராயருடன் வாழியதே
முடிந்தது. முற்றும்.

966 ஹு சித்திரை மாதம் 29தேதி சுக்கிரவாரத்தில் பூச நட்சத்திரத்தில் பற்பனேறி அடுத்த தென்கரை மறக்குடிச் சங்கரநாராயணத் தென்விருசடியிபத்தே வாத்தியாரேசல் பாட்டுக்கு எழுதினது.

நன்ருக முக்கூடலப்பர் சகாயம்.

Thai Magal Esal

Size: 21×33. Pages: 3. Lines: 30 on a page. Condition: good.

Note : This is a work on Alagianambi of Tirukurungudi in Tirunelveli district. This is in the form of a mother chiding her daughter who is lovesick. Author not known.

583. இராமாயணச் சிந்து (நூல் எண் 68a)

அளவு : 21 × 17. வரிகள் : 15
பக்கங்கள் : 15. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இராமாயணத்தைச் 'சிந்து' என்னும் சந்த வண்ணத்தால் ஒரே கீர்த்தனத்தில் சுமார் 200 வரிகளில் சண்பக மன்னரால் பாடப்பெற்றது, இந்தப் பிரதியில் உள்ளது. இதில் முதலில் இராமாயண வண்ணம் முதலிய பகுதிகளும் உள்ளன. அச்சாகவில்லை.

தொடக்கம் :

ஹரி: ஓம்
இராமாயணச் சிந்து
சௌராஷ்டிர ராகம்
ஆதிதாளம்
(பல்லவி)

உனதருண் மகிமையை
யாதென்றே...........சொல்வேன்
உதவாவழி...........புல...வேன்

அனுபல்லவி

அனுதின மமரர்கள் அரனொடு......வேதா
அகமகிழ்ந் தலரருச் சனைபுரி......பாதா
தனதரி யினில்வளர் சரசவி......நோதா
தனிவில சலைதரு சனகித......னுதா
உனதருள்.

முடிவு:

தன்னேடரியில் மேவினின்னருளா—தாரம்
மேவு செண்பகமன்—னுரம்
பாவணிந் தானுன்சிங்—காரம்
மேவுலிலை பாரா—வாரம்
(உனதருள் மகிமையை)

Chindu - Vannam

Ramayana Chindu

Size: 21×17. Pages: 15. Lines: 15 on page. Condition: good.

Note: The Ms. contains a single poem in chindu vannam in about 200 lines describing the Ramayana. Author: Sanbagamannar.

584. இராமாயண வண்ணம் (நூல் எண் 68)

அளவு: 21×17. வரிகள்: 15.
பக்கங்கள்: 174. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதி இராமனுடைய அவதாரம்முதல் பட்டாபிஷேகம் வரை சந்தம் பொருந்திய வண்ணப் பாக்களால் பாடி யமைக்கப்பெற்றது. ஆசிரியர் சண்பகமன்னர். இப் பிரதியில் இராமாயணச் சிந்து, பலச்ருதி சந்த விளக்கம் ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம்:

ஹரி: ஓம்
இராமாயண வண்ணம்
மாலரன் துதிப்பா

விருத்தம்
பாலனந்த சயனத்தோன் பங்கயனைக்
களித்தருள்வோன் பரவை யுற்ற
ஆலமிசைந்(து)அண்டருக்கா யரியதல
வண்கொடையோ னரிவைக் கோலம்
பாலுடைத்தே யணைக்கப்பெற் றோன்பாயல் முன்னி
னொளியானந்தன் பரமன் மாலாஞ்
சீலவிரு வோர்களுமெக் காலுமிதைக்
காத்திடுவார் திண்மை யாமே.

முடிவு:

மணிச் சிகரத்திடை வைத்திட
மெய்ப்புவி மகளும் மகிழ மகுடமருவி
மகியானரிகய மியான முடைபணி
பூகைகுடை களிமாட மியல்புறு
சோடச தாளமுகத்துடனே
புவிவானவரே கொளவளித்துங்சா
சரர்வீய அமராடி யுலகர்க்கருள்
வார்புக ழோதிய னுவலர் வியப்பறவே
....
செண்பக மன்னர் புகழ்ந்து பணிதாளிரகு ராமனே!
ஆக. கலை-64

Ramayana Vannam

Size: 21×17. Pages: 174. Lines: 15 on a page. Condition: good.

Note: This contains poems in vannam describing the Ramayana story from Rama's Avatar to Pattabhishekham. Author: Sanbagamannar.

585. திருப்பதி வண்ணவிருத்தம் (நூல் எண் 366)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 43. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வைணவத் தலங்களாகிய 108 திருப்பதிகளைப் பற்றிய வண்ண விருத்தங்கள் அமைந்த நூல். இந்நூலில் ஸ்ரீரங்கம் முதலாகத் திருவைகுந்தம் ஈருக 108 திருப்பதிகளுக்கும் 122 வண்ணங்களும், பாயிரம் 7 வண்ணங்களும் ஆக 129 வண்ணங்கள் உள்ளன. 366a- வடகரைத் துரையவர்கள் சந்திரகலா மஞ்சரி, 366b- வடகரை ரத்னகர விலாசம் என்ற நூல்களும் இப்பிரதியில் உள்ளன.

தொடக்கம் :

உ

திருப்பதி வண்ண விருத்தம்

காப்பு

பொருப்பினிற் பொலிவுண்ணு புயத்தரா
வணைக்குள்மெய்த் துயில்பண்ணு மெனத்தனர்
புனக்கடக் கரிசொன்ன விரைத்துழாய் நெடுமால்
திருப்பதிக் கொருவண்ண விருத்தமே
விழுப்புறச் சொல்மன்னி வழுத்துவோர்
சிறப்புடைத் தமிழென்னி தயத்துநீ—யருள்வாய்
மருப்புளிப் படர்துன்னு நிழற்றுளே
யிருக்குமெய்ப் பொருளெண்ணு மனத்தவா
மகிழ்த்தொடைக் கழகென்னவுதித்துவாழ் குருகூரா
விருப்புறக் கதியெம்மை யளித்தவா
செகத்தினிற் புகழ்செம்மை செழித்தவா
விசைக்களிச் சிறையன்ன நடத்துமோர் பெருமானே.

முடிவு :

திருவைகுந்தம்

கொடியிடை மங்கை மார்க்குளாகிய
கலவிவிரும்பி யாற்றெருணுமயல்
குடிகொளுரு நெஞ்சை மீட்டுவேறினி நினையாதே
அடியிணை நின்றுகாட்டி மாய்வுறு
பிறவி யிடும்பை வீட்டி நீடிய
வகமகி முன்பு பூட்டியேயெனை யருள்வாயே
படிமுழுதுண்ட பார்த்திபா வொரு திருமகள்
கொங்கை சேர்த்தவாகரி படுதுயர்
கண்டு தீர்த்தவா வெமை யுடையானே
கடிகமழ் கொன்றை பூத்தவேணியன் மலரயனும்
பா வாய்த்த மாமறை கருது வைகுந்தை
வீட்டில் மேவிய பெருமானே. (16)

திருப்பதி வண்ண விருத்த முற்றும்.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

Tirupati Vanna Viruttam

Size : 21×33. Pages: 43. Lines: 32 on a page. Condition: good.

Note : This contains 129 vannams describing the 108 Vaishnavaite Tirupatis. Author not known.

586. திருப்பதி வண்ண விருத்தம் (நூல் எண் 367)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 66. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 366-ஆம் எண்ணுள்ள பிரதியின் படியே இப் பிரதி.

Tirupati Vanna Viruttam

Size: 21×33. Pages: 66. Lines: 22 on a page. Condition: good.

Note : Copy of the previous item.

587. பட்டீசுவர சுவாமிபேரில் வண்ணம் (நூல் எண் 546)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 5. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது பட்டீசுவரசுவாமி பேரில் பாடப்பெற்ற வண்ணம். தட்டச்சு செய்த பிரதி. இப்பிரதியில் 546a-வாளெழுபது, 546b-திருவேரகப் புராணம், 546c-வரராசை யுலா ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் ;

ஹரி : ஓம்
நன்றாக.
உ
பட்டீசுரசுவாமி வண்ணம்

காந்தஞ் செறிகதிர்ப் பணிக்குஞ் சும்பிறைக்
கோடெட்டெருக்குத் தண்ணறுகுடன் கடுக்கைப்
பொன் கக்குந்தழிற் பற்பமதுமணச் சுருப்புக்கும்
பொற் சரந்தொடுங் கொடுஞ் சடாகர
சங்கரன்பரன் தபோதனர் செம்பென்னப்
பக்கத்திற் கொண்டாடப் பாதத்திற் கரப்புற்பங்
கொத்திட்டருசிக்கச்
சக்கிறந்திரியப் பணிநெளியப் பூங்கச் சரற்றினக்காந்தத்
தொடக்குலா முக்கணுள் பத்திரையோடெதிர்
பொருதி நடனமிடுங் கண்ணுதலான்.

முடிவு :

கொங்கின் கடிமலர்த் தடத்தின் சந்தனச்
சேறிட்டொழுக்கிக் கண்மனது மிங்கிரக்கச்
சிந்திக்கும்படிக்குக் கைமடலு முண்டெனக்குத்
தசைப் பிறமஞ்சமுங் குலுங்குமாலை
களுந் துலங்கவுஞ் சையோக ரசந்தனைச்
சற்றுச் செக்கன்பேரில் சோகத்தைத் தணித்திட்டுச்
சொய்க்குட்டுலைச் சிற்றிற் பற்றுந்
தயவுக் கடுமையெனப் பாங்குற்றே
மெச்சிச் செந்திப்பால் ஒற்றைப்படா நற்பொடே கெட்டியாய்
மலரணையிலினிய ணையும் பெண்ணரசே
விட்டுவிடில் மடலூர் வண்ணமே.

(க)

முருகன் துணை. தட்டச்சுச் செய்தது 13-8-55.

Vannam on Patteeswarar

Size: 21×33. Pages: 5. Lines: 26 on a page. Condition: good.

Note : This is a typed copy containing a vannam on Lord Patteeswarar of Patteeswaram, a Siva sthala near Kumbakonam

588. வண்ணங்கள் (நூல் எண் 683)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள் : 63. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : விநாயகர், முருகன், அம்பிகை முதலிய தெய்வங்கள்மீது 15 வண்ணங்களும் ரகுநாதத் தொண்டைமான்மீது வண்ணமும் உள்ளன. யாவும் சிருங்கார ரசம் மிக்குப் பொருந்திய பாடல்கள்.

தொடக்கம்:

உ
கணபதி துணை

தமிழ்ப் பாசையோவலது குயிற்பாசையோ
வடுகு கலப்பானதோ, வலது துலுக்
காணமோ மனதிலடவெக்கமோ,
மவுனமென் பேசுவீர் இருபாக்களவு
காணுமுலை பார்க்கிலென் மூடுவது
மாப்பிள்ளை முன்னே, மனது கூச்சம்
வருமோ, பெரிய தனக்காரர்
தானுமது புதைப்பார்களோ
வொருவா தனக்கியும் வேளைகன
தனக்கார ராயவரில் வேற்று
மடவார் முலைகளுற் றிசையேஎன
மதன வேட்பிணையே யாமலு
மோராட் பிணையினுர் சொலுவர்
இனிப்பாகுமோ கல்வி கசப்பாகுமோ
எனவுமலைப் பாகுமோ மனதினினைப்
பார்களோ வொருகை பார்த்து
விடுமேனி தொரு நாட்பழகினுல்
மிகுதராற் பரியமாமுடல் சுவாத்தியமு
மாமருவி லுமக்கேது சேதமதிலெனக்
கேது லாபமிது தனக்கேது லோபம்
வருவிணக் கேது காணுமடல்
வெற்றிவேள் கலகமெளி தாகுமோ.

முடிவு :

நயன மிமைத்து மூடி நாசியி னுனிப்பிதுங்கி விரலைநெரித்து
வாயிலூதி யொருமிப் படங்கநயமுன்
சிணுங்கி லீலைபகருமங் தரங்கமோடி
விளையநொந்து நொந்து நொந்து
பாதி இழை மருங்குழையுமே பலபட

உச்சி மீதிலே சடசடசடென்று
விழுபதினெட்டு மேளதாடன
மொலிப்ப முங்கும மளங்குளம்பினோடு
யிருதனம் பிதுங்க மார்புநெரிந்து
நெரிந்துதைந்து போத உதைய
மிஞ்சிதகா வேந்தியலைத்தது
காமகோசர முடைத்தெழுந்து
நெடுகவிரித்த காலிலோடி
யணையிற் பரந்து நறுமணங் கமழ்ந்த
வாசம் அமளியெங்கு மண்டி
விசநனையு முந்திகொண்டு
மூடுகவி யின்பமினிது காண
விதிதோன்றி லனுபோகம் வாய்க்குமே.

வண்ண முற்றும்.

Vannams

Size: 21×33. Pages: 63. Lines: 40 on a page. Condition: good.

Note ; This contains about 15 vannams on various gods and one vannam on Raghunatha Tondaiman.

589. வண்ணம், தோத்திரம், பதிகம் முதலியன

(நூல் எண் 684)

அளவு : 21×33. *வரிகள்* : 15.

பக்கங்கள் : ... *நிலை* : *சிலமாக உள்ளது.*

குறிப்பு : *இப்பிரதி எழுத முடியாத நிலையில் சிதைந்து மிகச் சிலமாக உள்ளது.*

Vannam, stotram, padigam etc.

Size: 21×33. Pages: .... Lines: 15 on a page. Condition: injured.

Note : Condition bad; not in a fit condition to be copied.

9. தனிப் பாடல்

590. ஐயரவர்களின் பாடல்கள் (நூல் எண் 103)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள் : 20. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : டாக்டர் ஐயரவர்கள் தாமே எழுதிய தனிப் பாடல்கள் பல இப்பிரதியில் உள்ளன. மேக சந்தேசத்திலுள்ள ஒரு சுலோகத்தின் மொழிபெயர்ப்பு, ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் பேரில் பாடியவை இதில் உள்ளன. நூல் நிலையத்தில் தமிழ்ப்பா மஞ்சரி என்ற பெயரோடு இவை தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளன.

உ
சிவமயம்
(13-10-06)

தொடக்கம் :

எண்ணிய காரியங்கள் எல்லாம் இனிதியற்ற
அண்ணிய மாந்தர் அகமகிழப்—பண்ணி
அறிவடையச் செய்திட்டே யைங்கரனே நீயோர்ப்
பிறிவடையச் செய்தி பெயர்த்து.

முடிவு :

பிள்ளையவர்கள் சரித்திரம் எழுதும்பொழுது பாடியது (16-5-32)

கணபதி துணை

எல்லாக் கலைக்கு மிறைவா வியற்சங்க
நல்லார்க் கரசேநன் றூற்கவிசெய்—வல்லார்க்
கரையனை றுசா னரிய சரிதம்
வரைய வருள்வாய் வரம்.

Stray Poems

Poems composed by Dr. Iyer

Size: 21×17. Pages: 20. Lines: 22 on a page. Condition: good.

Note : The Ms. contains various poems composed by Dr. Iyer. Printed and published by the Library under the title 'Tamizhppa Manjari'.

591. சீட்டுக்கவி முதலியன (நூல் எண் 598a)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 19 (47-65) நிலை : பழமை.

குறிப்பு : இதில் சவ்வாதுப் புலவர் முதலிய பல புலவர்கள் பல வள்ளல்களுக்கு எழுதியனுப்பிய சீட்டுக்கவிகளும் பிற தனிப் பாடல்களும் உள்ளன. முதல் 46 பக்கங்கள் இல்லை. 112-ஆம் பாடல்முதல் 161 பாடல்வரை உள்ளன.

தொடக்கம் :

மென்றோர் பிரபந்தமொன் பதுகோடி
பொன்பெற்றதேல் முற்று முணர்வுற்ற
தெனவெங்கணருள் பெரியவுடையான்
மகிபனே.

சவ்வாதுப் புலவர் சீட்டுக்கவி

கற்கண் டினித்ததேன் பாலொடு பழங்கலந்
தனிற் செவிக்கினிக்கும்
கவிமதுர சித்ரவித் தாரம் பிரபந்தம்
கணத்திலே சொரியுமேகம்
தற்கமிட் டெதிராடு கவிராசர் நாவைச்
சதச்சித்தி மாய்நறுக்கித்
தரிக்கும்பிர சண்டமுந் தண்டசர பங்கன்
சவாதுசர பத்திறேலை
நற்குணகல் யாணகுண நவரத்ன மகுடேச(மெய்)
ஞானவா னந்தமோன
நவரசப் பாதுரிய குருதேசி கன்ராம
நாதமுனி யினிதுகாண்க
பொற்கொடிகட் டிப்புகழ் கொண்டகொண் டல்நீ
புலமைத் தரம்தெரிந்தாய்
புன்கவி விடுத்தெமது நன்கவித் திருமாலை
புனையுனது புகழ்வளரவே. (112)

முடிவு :

ஈயெச்சி லிதழ்படைத்தாள் ராகுவெச்சி லைத்திலகம்
இட்டுக் கொண்டாள்
தியெச்சில் மிடற்கடைந்தாள் சிற்றெறும்பி னெச்சிறனைத்
திருநீ றிட்டாள்
வேயெச்சில் விழிதுயின்றாள் வெய்யரவி னெச்சிறனை
மெய்மே லிட்டாள்
பேயெச்சில் போற்கிடந்தாள் பெண்ணாங்காட் டெச்சிலிடை
பெற்றிட் டாளே.

Seettukkavi

Size: 21×33. Pages: 19. Lines: 26 on a page. Condition: old.

Note : The Ms. contains miscellaneous poems composed by Javvadu Pulavar and other poets on various patrons; contains poems 112-161 only; the first 46 pages are missing.

592. சில தனிப் பாடல்கள் (நூல் எண் 655)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 259. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் சில முக்கியமான கடிதங்களும், சில தனிப் பாடல்களும் சில புராணங்களைப்பற்றிய செய்திகளும் உள்ளன.

தொடக்கம் : ஓம்க்காரனும் இக் கடிதம் துறைசை இராயசம் பொன்னுசாமிச் செட்டியார் தந்தை திரவியம் செட்டியாரால் எழுதப்பட்டது. மகாகனம் பொருந்திய மகா ராஜஸ்ரீ கல்விக் கடலாகிய அய்யரவர்களுக்கு அடியேன் திரவி யன் விஞ்ஞாபனம், இவ்விடத்தில் க்ஷேமம்.

....

....

முகூர்த்தம் சிறப்பிக்கச் செய்வதை எதிர்பார்க்கிறேன்.

முடிவு :

தஞ்சை மாநகர்ப் புராணம்

பக்கம் : 21. நாற்பத்தெண்ணாயிர முனிவர்.
23. சமிவன க்ஷேத்திர மான்மியம்.
24. அசுரர் நால்வர்.

க. தஞ்சகாசுரன்—தஞ்சாவூர்.
உ. தாருகாசுரன்—தாருகன்பட்டு.
ங. வலாசுரன்—வல்லம்.
ச. வச்சிராசுரன்—வச்சிர தீர்த்தம்.

வச்சிராநதத்தில் கங்கையுண்டாயிற்று.

Some stray poems

Size: 21×33. Pages: 259. Lines: 30 on a page. Condition: good

Note : The Ms. contains miscellaneous letters and information about some puranams.

593. தமிழ்ப் பண்டிதர் வடிவேல் முதலியார் பாடிய பாட்டுக்கள் (நூல் எண் 709)

அளவு : 21 × 17. வரிகள் : 18.
பக்கங்கள் : 57. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : *இப் பிரதி திரு வடிவேல் முதலியார் என்ற தமிழ்ப் பண்டிதர் அவ்வப்போது பாடிய தனிப் பாடல்களைக் கொண்டது. இவர் இந் நூலகத்தில் சிலகாலம் பணி செய்தவர்.*

தொடக்கம் :

இயற்பாமேல் விழைவுகொண்டே முதன்மூ வர்க்கும்
இடைகழியி விடமீந்தே நெருக்கி விட்டாய்
செயற்பால கவிவல்ல மங்கை மன்னர்
தேனெழுந்து பாடலையுஞ் செவியி லேற்றாய்.

முடிவு :

மயற்பால்வீழ் மாவலிபால் தான மேற்றே
மண்ணுடனே விண்ணினையும் வாழச் செய்தாய்
உயற்பால தாமடியார்க் கருள்செய் தாள்வாய்
உயர்கோவல் வாழுமூல களந்த கோவே.

Poems of Vadivel Mudaliar, Tamil Pandit

Size: 21×17. Pages: 57. Lines: 18 on a page. Condition: good.

Note : The Ms. contains various poems composed by Vadivel Mudaliar. He worked in this Library as an assistant for some time.

594. தமிழ் நாவலர் சரித்திரம் (நூல் எண் 275)

அளவு : 21 × 33. வரிகள் : 33.
பக்கங்கள் : 53. நிலை : இலமாக உளது.

குறிப்பு : *சங்க காலம்முதல் பல புலவர்கள் பாடிய பாடல்களைத் தொகுத்தமைத்ததே இந்நூல். இதில் 267 பாடல்கள் காணப்படுகின்றன. அச்சானது.*

தொடக்கம் :

உ
கணபதி துணை
தமிழ் நாவலர் சரிதை

காப்பு
வெண்பா

மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபா
யிருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தென் னுள்ள
முருகவிட்டு நின்ற வொளி. (க)

முடிவு :

மனந்தான் றளர்ந்தார்க்கும் வாயுமுண்டோ கச்சி
யநந்தா புதனு ளகல்வோஞ்—சினந்து
வடித்தெடுத்த வேற்கண் மணியிரண்டு கொண்ட
கடித்தடுத்தா லாரேகு வார்.

தமிழ் நாவலர் சரிதை எழுதி முடிந்தது. திருஞானமுத்திரை தரித்த சண்பக மாறன் திருவடிகளே சரணம்.

தமிழ்நா வலர்தஞ் சரிதமிஃ தான்றே
ரமிழ்தாய பாக்களோ டாய்ந்தாய்ந்—துமிழ் பிரசஞ்
செய்யார் பொழிற்பின்னை நாராய ணன்செய்ய
கையால் வரைபுத்த கம்.

விளம்பி ஞு கார்த்திகை மீ 12 உ
நாராயணசாமி ஐயர், பின்னத்தூர்.

Tamizh Navalar Charitram

Size: 21×33. Pages: 53. Lines: 33 on a page. Condition: injured.

Note : The Ms. contains 267 poems composed by several scholars from Sangam age onwards.

595. **தமிழ் நாவலர் சரித்திரம்** (நூல் எண் 276)

அளவு : 21×17. வரிகள் : 24.
பக்கங்கள் : 77. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : தமிழ்ச் சான்றோர்களாகிய புலவர் பாடல்களைத் தொகுத்து அமைத்தது இந்நூல். பிரதி சிலமாக உள்ளது. 267 பாடல்கள் காணப்படுகின்றன. அச்சானது. இப்பிரதி நூல் எண் 275இன் படியே.

Tamizh Navalar Charitram.

Size: 21×17. Pages: 77. Lines: 24 on a page. Condition: injured.

Note : Same as the previous one.

596. தனிச் செய்யுள் திரட்டு (நூல் எண் 287)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 149. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி தனிச் செய்யுள் திரட்டு என்ற நூலின் பிரதி போலும். இப்பிரதியின் முகப்புப் பக்கத்தில்,

உ
"சிவமயம்
திருச்சிற்றம்பலம்
தனிச் செய்யுட் டிரட்டு

இஃது புராணிகர் காளத்தி இ. சிதம்பரசாமி பாண்டியர் அவர்களுடையது. 1908–ஸு அக்டோபர் மீ 18 உ சோமவாரம் வாங்கியது. சௌமிய அற்பிசி மீ 22" என்று குறிப்பிடப் பெற்றுளது. இப்பிரதியில் இலக்கியம், இலக்கணங்கள், புராணங்கள் ஆகியவற்றிலிருந்து தொகுத்த பலவகைப்பட்ட 465 பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

மாவாய்மைச் சம்பந்தர் வாக்கரசர் வன்றொண்டர் வாத வூரர்
பூவாயின் றேறலெனு நான்மறையாந் திருக்கடைக்காப் புச்சீர்சால்
தேவாரந் திருப்பாட்டுத் திருவா சகமுறையாற் செப்பு கின்ற
நாவாயே நாவாயாம் பவக்கடலைக் கடந்து முத்தி நகர்சேர் தற்கே.

முடிவு :

தண்ணீர்ப் பந்தர் வைத்த திருவிளையாடல்

தாதவிழ் கழுநீ ரேலஞ் சந்தன *முசிரங் கோட்டம்
கேதகை யிலவங் கஞ்சண் பகமதி மதுரங் கேடில்
பாதிரி முதற்கற் பூர மளவிய பரிம ளஞ்சேர்
சீதள வமுதை நல்கத் தெளிந்தது குடித்த சேனை.

*உசிரம்—விலாமிச்சம் வேர்.

Thani Cheyyul Thirattu

Size: 21×17. Pages: 149. Lines: 16 on a page. Condition: good.

Note : Thc Ms. contains 465 poems collected from literature, grammatical works, and puranams.

597. தனிப் பாடல்கள் (நூல் எண் 288)

அளவு : 21 × 33. வரிகள் 30.
பக்கங்கள் : 43. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : பல அரிய பாக்களைத் திரட்டியமைத்த இந்நூல் மிகச் சிலமாக உள்ளது. இப்பிரதியில் 144 பாடல்கள் உள்ளன. பல பாடல்கள் குறைப்பாடல்களாகவே காணப்படுகின்றன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
2-வது தனிப்பாடற் றிரட்டு

சும்மா விருக்கவைத்த சூத்திரத்தைப் பாராமல்
விம்மாகக் கத்துவதும் வேணிகனும்—தம்மறிவில்
நீட்டிக் கிடத்திவைத்த நிட்டைகளும் ஞானிக்குக்
காட்டும் பரியாசங் காண். (க)

முடிவு :

பாடல்—144

வழுத்தளவு பொன்கொடுக்குமாசன் மாண
..........க்குப் பூத்த
முழுத்தளவு போலுநகை முத்தலைமேல் நங்கையே
மொழியக் கேளாய்
.........வாயளவு கைகூப்பா மையல் வெள்ளங்
கண்டு கண்டிங்
கெழுத்தளவென் றிருந்த.........கைக் கிழுக்கநீர்க்
கிடுக்கு மிதயந்தானே.

Thani Padalgal

Size: 21×33. Pages: 43. Lines: 30 on a page. Condition: injured.

Note : The Ms. contains 144 stray poems some of which are incomplete.

598. தனிப் பாடல்கள் (நூல் எண் 289)

அளவு : 21 × 33. வரிகள் : 26.
பக்கங்கள் : 49. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பல புலவர்களால் அவ்வப்போது பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பு. இப்பிரதியில் 170 பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

தனிப்பாடல்கள்

வாலிபம் பெருநிலக் கிழமை மாண்பொருள்
மேலறி விலாமையி னென்று மேவினும்
சீலமும் குடிமையுஞ் சிதையு மாலிவை
நாலுமுள் ளவர்செய னவிறற் பாலதோ.

முடிவு :

இலக்கண விலக்கியத் தெதிரிட்ட பேர்வாயை
யிருகாது பரியங்தமோ
டெயிர்வா ளெடுத்துக் கிழி(ளி)த்துநா வைப்பறித்
தெறியும்பிர சண்டவாக்கி
அலக்கணுற்ற வர்தமக்கன்புட னியன்றமரி
யாதியருள் கனக மேரு
அக்கணியு மதுரைவளர் முக்கணனைப்
பரவு சொக்கநா தன்கணிதைத்தான்
....
பிலக்கணக்காகச் செலுத்துவது...

Thani Padalgal

Size: 21×33. Pages: 49. Lines: 26 on a page. Condition: good.

Note : The Ms. contains 170 poems composed by various persons.

599. தனிப் பாடல்கள் (நூல் எண் 290)

அளவு : 21 × 33. வரிகள் : 30.
பக்கங்கள் : 86. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பல சான்றோர்களால் அவ்வப்போது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு. நூல்நிலைய ஏட்டுச் சுவடி எண் 140, 365–இன் பிரதி இது.

தொடக்கம் :

அத்திக் குதையன் திருமலை வேலப்ப னன்புசொல்லத்
தித்திக்கு தைமனக் கருத்தென்ன மோமதி சென்றுகுணக்
குத்திக் குதையன் கதிகாட்டு மோவிரு கொங்கையின்மேல்
தத்திக் குதையம்பிட் டேறுது காமன் சரங்கள்வந்தே.

முடிவு :

சொர்ணமழை யிரவலர்க்கே பொழிந்த வேந்தர்
சூழ்ந்துவரக் கவிமாரி சொரியு மேகங்கற்
றன்னையுங் கொடை பயினற்று மல்லவாழ்
சர்க்கரைச் சிற்றம்பலக் கவிதா சரபம் யாண்டும்
பொன்னணங் கோரிரண்டு கடகக்கை மீதும்
பூண்டவெள்ளிவளைகள் சத்தம் பொலியக் கிருஷ்ணன்
என்னவே பட்சம் பொருந்தல் கயிலைமேவு
மிறைபொருட்கும் பதவுரை யொன்றிசைக் கின்றனே.

1959 ஜூலை மீ 31 உ இது எழுதிப் பூர்த்தி பெற்றது. திரு வடிவேல் முதலியார், தமிழ்ப் பண்டிதர். சுவடி நெ. 365.

Thani Padalgal.

Size: 21×33. Pages: 86. Lines: 30 on a page. Condition: good.

Note: The Ms. contains a copy of the cadjan leaf Ms. Nos. 140 and 365.

600. தனிப் பாடல்கள் (தொடர் எண் 291)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : ... நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : இப்பிரதியில் உலகுடைய நாயனார் கழிநெடில், திருவேகம்ப ரானந்தக் களிப்பு, சிவபுரம் பிள்ளையவர்கள் பாடல், அம்பலவாண தேசிக ரானந்தக் களிப்பு, திருமாளிகைத் தேவர் துதி ஆகிய நூல்களிலிருந்து பாடல்கள் உள்ளன. இவற்றின் இறுதியில் மாபுராணத்திேனார் பகுதியாகிய சீவகன் சரித்திரம் என்ற பகுதி மணிப்பிரவாள நடையில் உள்ளது.

தொடக்கம் :

உ
உலகுடை நயினார் கழிநெடில்

மலமெனும் தடத்திற் கருமசே தகத்தின்
மாயையாங் கிழங்கிலங் குரித்து
மன்னுமுவெட்டாங் தத்துவ நாள
மலரிதழ் வித்தையேழ் வித்தை

நலமிகு மீசன் சதாசிவ மிரண்டு
நண்ணுகே சரங்களாஞ் சத்தி
நற்பொருட் டாகு நாதமே விந்து
நயந்தகண் ணுமென விரவி
இலகுமென் னுடலப் பதுமபீ டிகைமீ
யிருந்தரு ளாசன மெனுமு
லெனதுபுக் கிலதர் வெண்ணினேன் றெளிய
வியலருட் பார்வைதந் தனையே
அலகிலா வுயிர்கண் மலநடைச் சிலையா
யருணடைக் குண்மையாய் நின்ற
வாவடு துறைசை யம்பல வாணு
யடியவர்க் கருளுமா நிதியே.

முடிவு:

திருமாளிகைத் தேவர்

கருணைபொழி திருமுகமுஞ் சற்குருபொற் பதமலரே
காணுங் கண்ணும்
திருமருவு தடமார்பு மத்துவித மூணர்த்துசின்முத்
திரைச்செங் கையும்
மருமலர்ச்சே வடியிணையும் மனத்தெழுதி
வைத்திறைஞ்சி வாழுந் தொண்டர்க்
கருள்புரிய வருதிருமா ளிகைத் தேவசி
காமணியே யன்பர் வாழ்வே.

Thani Padalgal.

Size: 21×17. Pages: .... Lines: 20 on a page. Condition: injured.

Note: The Ms. contains a collection of stray verses by many poets.

601. தனிப் பாடல்கள் (நூல் எண் 292)

அளவு: 21×17. வரிகள்: 12.
பக்கங்கள்: 74. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதியில் பலவகைத் தனிப் பாடல்கள் பிரதி செய்யப்பெற்றுள்ளன. நடுவெழுத்தலங்காரம், சித்திரக் கவிகள் முதலியன உள்ளன. சுவடிகள் 386, 667, 152, 153, 140 என்பவற்றின் பிரதியாகும் இது.

தொடக்கம் :

நடுவெழுத்தலங்காரம்

அந்தமாம் புவியிலொரு மரத்தின் பேரும்
அலைகடலில் வாழுமொரு சீவன் பேரும்
விந்தைநெறிப் பட்டணப்பேர் வெம்கா லப்பேர்
விளங்குமொரு பிள்ளைப்பேர் மெல்லி யாள்பேர்
சந்ததமு மிவ்வகைதன் னுறுங் கூட்டித்
தமிழினுல் நடுவெழுத்தா ராய்ந்து பார்க்கில்
சுந்தரஞ்சேர் வைகுந்தந் தன்னில் வாழுந்
தூயிரங்க நாதரென்று செப்ப லாமே.

அரசு	மேனுன்
சங்கு	சுதன்
நகர்	கன்னி

முடிவு :

எதிரிட்ட தெவ்வர் எதிரிட்டுத் தெண்டனிட் டுப்பணியச்
சதிரிட்ட தென்முல்லைத் தாண்டவ ராயன்தனது செம்பொற்
கதிரிட்ட மேழிக் கொடியைக்கண் டாற்கலிங் கத்தார்வந்து
நதிரிட்டுக் கும்பிட்டு நிற்பார்க ளேஎந்த நாளைக்குமே.

Thani Padalgal

Size: 21×17. Pages: 74. Lines: 21 on a page. Condition: good.

Note : The Ms. contains poems like Nadu-ezhuthu-alankaram, Chitrakavi etc. It is a copy from the cadjan leaf Ms. Nos. 386, 667, 152, 153, 140.

602. தனிப் பாடல்கள் (நூல் எண் 293)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 18. நிலை : நிலமாக உள்ளது.

குறிப்பு : அச்சானவையும், அச்சாகாதனவுமாகிய பல சான்றோர்கள் பாடிய பாக்களைத் தொகுத்து அமைத்தது. 137 செய்யுட்கள் உள்ளன.

தொடக்கம் :

வையைத் துறைமன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாமற்—றையனுக்கு
வேண்டுவன கொண்டு வெடிகைப்பதி னெட்டானு
ளீண்டு வருக விசைந்து.

முடிவு :

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாணுளேசே வித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை
முண்டராய்த் திரிந்தபோ தெதிர்த்தநீர்க ளெத்தனை
மூளவுஞ்சி வாலயங்கள் சூழவந்ததெத்தனை
அண்டர்கோ னிருப்பிடத் தறிந்துணர்ந்த ஞானிகள்
கண்டகோயில் தெய்வமென் றுகையெடுப்ப தில்லையே.

Thani Padalgal.

Size: 21×33. Pages: 18. Lines: 30 on a page Condition: injured.

Note: The Ms. contains 137 stray verses sung by many poets.

603. தனிப் பாடல்கள் (நூல் எண் 204)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 34. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் டாக்டர் ஐயர் அவர்கள் பாடல்களும், வேறு பல புலவர்கள் பாடிய பாடல்களும் உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

வேம்பத்தூரார் புகழ்ச்சி

திருமருவு பஞ்சலட் சணவேலை பொங்கிச் செழிக்குமிகு
நிதிகொழிக்குந்
தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
சிறந்தசெவ் வைச்சூடுவார்
சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்
துலங்கும்வா சிட்டந்தனைச் சொல்லினுர் வாழவந் தான்மா
தவப்பட்டர் சொன்னதிரு விளையாடலும்
பொருதுகவி குஞ்சர மழகர்பிள் ளைத்தமிழ்
புகன்றன ரிலக்கணமதைப் பொன்களித் துறையாக
வீரசோ ழியர்சொனுர் புகழ்மௌளந் தரியலகரி
பெருமைமிகு கவிராஜ பண்டிதர் புகன்றனர் ப்ரதாபமிகு
திருநெல்வேலிப்
பெருமாளை யன்சொனுன் எல்லையின் கோவைப்
பிரபந்தவகை புகழ் பெருகவே,

முடிவு :

பல்லாரு மிவர்இனிமே வியற்றுஎன
    வற்புறுத்திப் பகர்கின் றாரால்
வல்லாரா கிய தமிழ்நா வலர்சரி தந்
    தொகுத்தன்மிக வருத்த மேனும்
நல்லாய்நின் னுதவிசிறி திருப்பினிது
    கவலையின்றி நடக்குமன்றோ
எல்லாவற் றையுங்குருவா ரத்திடைவந்
    துன்றிருமுன் இயம்பு வேனால். — வே. சாமிநாதன்

Thani Padalgal.

Size: 21×17. Pages: 34. Lines: 20 on a page. Condition: old.

Note : The Ms. contains poems composed by Dr. Iyer and other poets; printed.

604. தனிப் பாடல்கள் (நூல் எண் 295)

அளவு : 21×33. வரிகள் : 23.
பக்கங்கள் : 75. நிலை : பழமை.

குறிப்பு : இதில் பல புலவர்கள் அவ்வப்போது பாடிய தனிப் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

தொடக்கம் :

மாலை மாற்று

நேய ராலை மருதின ராயசீ
காயனைமணி யாலிக நேயமா
மாயனே கலியாணி மனையகா
சீயரான திருமலை ராயனே.

முடிவு :

புகார்மன்னன் பொன்னித் திருநாடன் சோழன்
றகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடுகி வருக கடற்கோவ லூர்க்கு
வெடிகை பதினெட்டா நாள்.

Thani Padalgal.

Size: 21×33. Pages: 75. Lines: 23 on a page. Condition: old.

Note : The Ms. contains various poems by various poets.

605. திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் வீட்டுத் தனிச் செய்யுள் (நூல் எண் 365)

அளவு: 21×17. வரிகள்: 13.
பக்கங்கள்: 60. நிலை: பழமை.

குறிப்பு: *திருநெல்வேலியைச் சார்ந்த அம்பலவாணக் கவிராயர் என்பார் வீட்டில் பல புலவர்கள் இயற்றி எழுதி வைத்திருந்த தனிச் செய்யுட்கள். இப்பிரதியில் முதல் ஏடு இல்லை. 5 ஆம் செய்யுளுடன் இருக்கின்றது. 222 என்ற எண்ணுடன் பூர்த்தியாகின்றது.*

தொடக்கம்:

....

வண்ட ரண்ட மணலிடு மாளிகை
மண்ட பத்தின் மாடந் தரித்தயா
மண்ட பமதின் மாதவம் யாவதே (5)

கோட ரங்குல வுற்றிட வான்மெருடும்
கோட ரங்குல வுற்றிடு தண்டலை
கோட ரங்குலங் கோலஞ்செய் பொன்வரை
கோட ரங்குல வுற்றிறை கொண்டவே. (6)

முடிவு:

காலையில் ஐந்து வயதாமென் தாய்க்குக் கடும்பகலாம்
வேலையில் ஏழு வயதாகும் மீன விலோசனிக்கு
மாலையி லேஒன் பதுவய தாம்மன் னுலகுபதி
னாலையும் ஈன்றவட் கிப்படி யேமற்றை நாளைக்குமே. (222)

Tirunelveli Ambalavana Kavirayar Veettu Thani Cheyyutkal.

Size: 21×17. Pages: 60. Lines: 12 on a page. Condition: old.

Note: The Ms. contains poems composed by several poets; found in Ambalavana Kavirayar's house in Tirunelveli.

606. நெல்லையப்பக் கவிராயர் வீட்டுப் பலபாடற்றிரட்டு (நூல் எண் 536)

அளவு: 21×33. வரிகள்: 26.
பக்கங்கள்: 120. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: *திருநெல்வேலி நெல்லையப்பக் கவிராயர் வீட்டுப் பல பாடல்களைக் கொண்டது இப்பிரதி.*

தொடக்கம் :

வெள்ளிபுதன் திங்கள்சனி வேண்டும் விருந்திடலாங்
கள்ள வியாழங் கசப்பிக்கு—மெள்ளவே
தீராப் பகைவிளைக்குஞ் செங்கதிரோன் செவ்வாயில்
வாராப் பழியும் வரும்.

முடிவு :

பத்தார் நூறு படுத்த வேலையுண்
மத்தார் உற்றன வாசு கித்தொகை
மொய்த்தார் வன்றலை முன்பு கடிந்தெனக்
கைத்தார் மால்வரைக் காட்சி மிக்கவே.

Nellaiyappa Kavirayar Veetu Palapadal Thirattu

Size: 21×33. Pages: 120. Lines: 26 on a page. Condition: good.

Note : The Ms. is a collection of various poems copied and kept in Nellaiyappa Kavirayar's house.

607. பலர்செய் கவிகள் (நூல் எண் 571)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 117. நிலை : பழமை.

குறிப்பு : வேம்பத்தூரார் முதலிய பல கவிஞர்கள் இயற்றிய கவிகளைக் கொண்டது இது. இப்பிரதியில் வேம்பத்தூரார் ஏடு பார்த்து 279 பாடல்களும், பழமொழி பல வெண்பா வென்ற தலைப்பில் பலர் பாடிய வெண்பாக்களும் தொடர்ந்து பல தனிப்பாடல்களும் உள்ளன.

தொடக்கம் :

குடைச்சிவந் தான்முல்லைப் பல்லவ ராயன் குளிர்வரைசிற்
றிடைச்சிவந் தாளென்ன கொண்டுவந் தாளெளி யேனுயிரை
யடைச்சிவந் தாள்தனச் செப்புக்குள் ளேயது வன்றியிலே
விடைச்சிவந் தான்அறி வான்கண்க ளாற்பட்ட வில்லங்கமே.

முடிவு:

ஆலயங்க டாஞ்சிதைக்கு மற்றனவில் லாதபொரும்
வேலசுரர் தம்மைவிடுத் தேன்மலைந்தான்—சீலமற்ற
பஞ்சாயத் தார்களிலோர் பாவியையுங் காணேன்கொல்
அஞ்சா விரணியனந் நாள்.

முனசிரியர்......தாதாள மூ.. :டுடைந்தலேந்தே
.... (28)
தேவா லயப்பொருளேத் தேடியுண்டு தீநரகின்
மூ.................... முன்னுங்கால்—ஓவாத
நன்றுணவென் றேதெரிந்து நானிலத்தே கொடிய
பன்றிமயங் கிற்றுவென்பாய்.

Palarsey Kavigal (Collection of stray poems)

Size: 21×33. Pages: 117: Lines: 30 on a paga. Condition: old.

Note : The Ms. contains various poems composed by Vembathurar and other poets.

608. பலர் திரிபு யமகப் பாடல்கள் (நூல் எண் 572)

அளவு ; 21×33. வரிகள் : 34.
பக்கங்கள் : 6. நிலே : நல்ல நிலே.

குறிப்பு : பல புலவர்கள் பாடிய திரிபு, யமகப் பாடல்களேக் கொண்டது இப்பிரதி. இப்பிரதியில் 29 பாடல்கள் உள்ளன. கடைசி இரு பாடல்கள் ஸ்ரீமத் ஐயரவர்கள்பேரில் உள்ளன. இறுதியில் மனு சாத்திரம், தன்ம சாத்திரம் என இரு தலேப்பில் 7 பாடல்கள் உள்ளன.

தொடக்கம் :

வட்டமுள்ள தட்டவரையே சேருங் குறிப்பறியச்
சமைந்திருக்கு மரையுமுண்டு
ணடுதருகாது செல்லுமிளுங்
கண்பார்வையுண்டு நடுக்கம் பெற்றேருங்கும்
வுடுவதின் பேர்பெறுமே சொல்லப்
பாசணடுங் தொனிகாட்டும் பாரிலாரு
யிலவைப் பாரிரவிலே
மூவிரண்ட கலப்பாயிதென்பார் வின்ளுவாயே.

முடிவு :

முக்குல மேத்து முதற்குல மாகி மொழியுநான்
மறைப்படி முத்தி
மிக்குல விடச்செய் வேங்கட சுப்ப விப்பிர
குலசிரோ மணிசேய்
எக்குவ லயத்துஞ் சீர்த்திசால் சாமி நாதசற்
குருவிலக் கணநூல்

புக்கவென் னுள்ளத் திற்புகட் டின னோர்
புட்கருள் புரிந்தவொப் பாமே.

Palar Tiribu Yamaga Padalgal.

Size: 21×33. Pages: 6. Lines: 34 on a page. Condition; good.

Note : The Ms. contains 29 verses composed in Tirubu and Yamagam by various poets. The last two are on Dr. Iyer.

609. பழைய தனிப் பாடல்கள் (நூல் எண் 579)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 349. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதியில் பாடினோர் பெயரகராதி, பழைய தனிப் பாடல்களின் அகராதி, பழைய தனிப் பாடல்கள் வே.ச.மீது இயற்றப்பெற்ற பாடல்கள், ஐயரவர்கள் பாடல்கள், ஐயரவர்கள் பாடல்களின் அகராதி ஆகியவை உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
பழைய தனிப் பாடல்கள்
அம்பிகை துதி

ஆரணிமா மாரி யமலை சிவகாமி
காரணிமா காளிமகா காமினி—பூரணனும்
தன்னரன் மேனி சமான குமாரியுகா
அன்னை தருக அருள்.

முடிவு :

தெருண்மணக்கு முளத்துறைசுப் பிரமணிய
தேசிகனைத் தெரிசித் தன்பாற்
பொருண்மணக்குஞ் சொற்பணியும் பொற்பணியும்
கற்பணியும் புரிந்தன் னுன்றண்
ணருண்மணக்கும் படிபெற்று னிராமலிங்க
முனிவரனீ தமைதி யன்றே
மருண்மணக்கும் பவமொழிக்குங் குமரகுரு
பரமுனிவன் மரபி னோர்க்கே.

Pazhaiya Thani Padalgal

Size: 21×33. Pages: 349. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contains various poems and also those composed by Dr. Iyer and on Dr. Iyer.

610. பழைய தனிப் பாடல்கள் (நூல் எண் 578)

அளவு : 21 × 33. வரிகள் : 40.
பக்கங்கள் : 101. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பல புலவர்கள் அவ்வப்பொழுது பாடிய தனிப் பாடல்களைத் தொகுத்தமைத்த நூல். இதில் பாடினோர் பெயரகராதி, பழைய தனிப் பாடல்களகராதி, சோமசுந்தர தேசிகர் பாடிய திருவேரகமாலை ஆகியவை உள்ளன.

தொடக்கம் :

அம்பிகை துதி

ஆரணிமா மாரி யமலை சிவகாமி
காரணிமா காளிமகா காமினி—பூரணனும்
தன்னரன் மேனி சமான குமாரியுகா
அன்னை தருக அருள்.

முடிவு :

திருவேரக மாலை

ஆடைத் தயிரமு தம்மல்ல காவடி யாடிமண
வாடைப் புகையொடு வந்தடி யாருண் மணிமுடியிற்
கோடைப் புயலெனக் கொட்டிய மானந்தங்
கொண்டுநிற்கச்
சாடைக்கண் பார்த்துவக் குந்திரு வேரகச்
சண்முகனே. (29)

முற்றும்

வேலு மயிலுந் துணை.

மாயவரம் 3—3—23 சோமசுந்தர தேசிகன்.

Pazhaiya Thani Padalgal.

Size: 21×33. Pages: 101. Lines: 40 on a page. Condition: good.

Note : The Ms. contains poems composed by several poets.

611. பாபநாசப் பிரபந்தத் திரட்டு (நூல் எண் 589)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 82. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் உலகம்மை பேரில் பாடப்பெற்ற சந்தம், வண்ணம், பிள்ளைத் தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி, இன்னிசைக் கலிப்பா முதலிய பிரபந்தங்களைக் கொண்டதே பாபநாசப் பிரபந்தத் திரட்டு என்னும் இப்பிரதியாகும். அச்சிலுள்ளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
உலகம்மன் பேரிற் சந்தம்

வாழ்ந்ததென்ன விசாலத் தலங்களை யாண்ட தென்ன
பிரதாபமிகுந்
திறுமாந்ததென்ன விருதாவில் மதங்கொடு தலைகீழாய்
வீழ்ந்ததென்னவய் யோபிறங்கவர் மாண்டதென்ன
போய்வாழ்வதை யிங்கினி வேண்டியென்ன பிரயோசன
நின்பத மடைவேனே
சூழ்ந்து பன்னிருகாத மணங்கமழ் தேன்கள்விம்ம
யிருல்கள் கிழிந்திடை தூங்குதென்மலை யாசலநின்
றடியவர் போலத்
தாழ்ந்து சந்நிதி யூடு புகுந்தலை மோந்து
தண்மலர் மாரி பொழிந்திடு தாம்பிரவரணி மகாநதி நின்ற
வென்னுலகாளே.

முடிவு :

ஏழிசைய வண்டிரங்க வெண்டிசைய வேண்டுகிலார்
சூழிதழி ண்டுந் துணைத்தா ளளித்தாள்வர்
யாழி நெடுநீரொருகையர் போசனத்தர் தொழ
ஊழிதொறும் வாழி யுலகுடைய மாதாவே. (101)

உலகம்மை இன்னிசைக் கலிப்பா முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்

விக்கிரமசிங்கபுரம், அ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ஏடு.

விசுவாவசு ௵ மாசிமீ 29உ சோம வாரத்தன்று உலகம்மை இன்னிசைக் கலிப்பா. கும்பகோணம் அ. கிருஷ்ணசாமி நாயக்கனுல் எழுதி முடிந்தது.

மா. 12 பாடல் 44

Papanasa Prabandha Thirattu.

Size: 21×33. Pages: 82. Lines: 28 on a page. Condition: good.

Note : The Ms. contains chandam, vannam etc., on Ulagammai of Papanasam in Tirunelveli district. The author is Namasivaya Kavignar. Printed.

612. புறத்திரட்டு (நூல் எண் 603)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 219. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் புறப்பொருள்பற்றிய பல பாக்களைப் பல நூல்களிலிருந்து திரட்டிப் பல அதிகாரங்களாகப் பகுத்து அமைக்கப்பெற்றது. இதில் கடவுள் வாழ்த்துமுதல் பல பொருள் என்பதுவரை 107 அதிகாரங்கள் உள்ளன. அச்சிட்டது.

தொடக்கம் :

உ
நீதித் திரட்டு
கடவுள் வாழ்த்து

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
ணெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம். (நான்மணிக் கடிகை - க)

முடிவு :

நிரை கோடல்
வெண்பா மாலை

மண்டு மெரியுண் மரந்தடிந் திட்டற்றால்
கொண்ட கொடுஞ்சிலையான் கோறெரியக் கண்டே
யடையார் முனையலற வையிலைவேற் காளை
விடையாயங் கொள்கென்றான் வேந்து.

Purathirattu

Size: 21×33. Pages: 219. Lines: 26 on a page. Condition: good.

Note : The Ms. contains Purathirattu dealing with purapporul in 107 chapters beginning with Kadavul vazhthu. This is a collection of poems taken from various literary works.

613. புறத்திரட்டு - அறத்துப்பால், பொருட்பால்
(நூல் எண் 604)

அளவு : 27×20. வரிகள் : 27.
பக்கங்கள் : 281. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் புறப்பகுதிபற்றிக் கூறப்படும் பல நூல்களின் பாடல்களைத் திரட்டிக் கூறுவது. அவற்றுள் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய பகுதிகள் கொண்டது இப்பிரதி. முதல் 88–பக்கங்களில் இப்புறத்திரட்டிற்குரிய அகராதி எழுதப்பெற்றுள்ளது. 121 அதிகாரங்களும், 1393 கவிகளும் உள்ளன. அச்சானது.

தொடக்கம் :

புறத்திரட்டு
கடவுள் வாழ்த்து

எண்ணிய எண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே.

முடிவு :

அளிய தாமே சிறுவெள் ளாம்ப
லிளையே மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மரிந்தெனப் பொழுதுமறுத்
தின்று வைக லுண்ணு
மல்லிப் படூஉம் புல்லா யினவே. (கரு)

பொருட்பால் முற்றும்
ஆகப் பாலிரண்டுக்கும் அதிகாரம்
கஉக–க்குக் கவி கஙசுஙு.

Purathirattu (Arathuppal and Porutpal)

Size: 27×20. Pages: 281. Lines: 27 on a page. Condition: good.

Note : The Ms. contains an index relating to arathuppal and porutpal of Purathirattu in 121 chapters and 1393 poems. Printed.

614. புறத்திரட்டு (ஒரு பகுதி) (நூல் எண் 605)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 32. நிலை : மிகச் சிதிலம்.

குறிப்பு : புறத்திரட்டில் பாரதம், சிந்தாமணி, சிறுபஞ்சமூலம் முதலிய நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்ட சில பாடல்கள் உள்ளன. பிரதி சிதிலமாக உளது.

தொடக்கம் :

'தேவர்க்குங் கைகூடாத் திண்ணன்பி ஞர்க்கேயு
.........சேயு நோன்மையில்.

பாரதம்

4. *இறைப்ப நுமக்கடுத்த வெவ்வநோ யாவும்*
பிறர்க்கும்அஃ தாமென்று கொண்மி—னுறக்கருதி
யெவ்வா றுமக்குறுதி யெண்ணு திர்நீர் எல்லார்க்கும்
அவ்வாறே யெண்ணல் அறம்.

முடிவு :

பழமொழி-தீநட்பு

7. *இடையீ டுடையா ரிவரவரோ டென்றுந்*
தலையாயா ராய்ந்ததாங் காணர்—கடையாயார்
முன்னின்று கூறுங் குதலை தெரிதலாற்
பின்னின்ஞ பேதையார் நட்பு.

Purathirattu (A part)

Size: 21×33. Pages: 32. Lines: 26 on a page. Condition: much injured.

Note : The Ms. contains verses from Bharatam, Chintamani, Sirupanchamulam and other works.

615. மாம்பழக் கவிச்சிங்க நாவலர் தனிப் பாடல்கள் (நூல் எண் 645)

அளவு : 21×33. *வரிகள் :* 26.
பக்கங்கள் : 76. *நிலை :* இலமாக உள்ளது.

குறிப்பு : *பழனியில் வாழ்ந்த மாம்பழக் கவிராயர் அவ்வவ் வமயங்களிற் கூறிய தனிப் பாடற்றிரட்டு. இப்பிரதியில் 256 செய்யுட்களும், சில கீர்த்தனங்களும் உள்ளன.*

தொடக்கம் :

உ
கடவுள் துணை

மஹாவித்வ குலசிரோன்மணியாகிய ம-ா-ா-ஸ்ரீ கனம் பொருந்திய மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் அவ்வவ் வமயங்களிற் கூறிய தனிப் பாடல்கள்.

உ
நேரிசை வெண்பா

அம்புயமென் ருதுசகி யாதுனது தாள்சகிமா
ரம்புரிகர் பார்வைசகி யாதுமெய்யவ்-வம்புயங்கை
தாங்கலம்மெய் மால்வலூரஞ் சார்தலரி தென்னிலேன்வாய்
வீங்குரையாற் றுங்கொறிரு வே.

முடிவு :

உ
இ. ராகமாலிகை
இராகம்: பிலஹரி
விரும்பிலஹரி யாளுள் உன்மீதிலிங்கொரு மாளுள்

....

இராகம்: தன்யாசி

பாடகம தாணி யணியாள் விளைமதுராச பாய்
வகையன முசித பானமு நிதமொளுது பாணியில்
வளைதொடி சரிகள், பாரிட விடையிலுள பாசிழை
துகில் பாலினில் விடுபான்மை தவிரு பாயவித்த
பாவரமொடுச பாசெனவணை பாவு
குயில்சொல் பாணிலுருகி (விரும்பி)

Mambazhakkavisinga Navalar Thani Paadalgal

Size: 21×33. Pages: 76. Lines: 26 on a page. Condition: injured.

Note: The Ms. contains 256 poems and some songs composed by Mambazhakkavirayar of Palani.

616. விஜயானந்த ரங்கபகதூர்மீது பாடல்கள்

(நூல் எண் 698)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : ... நிலை: சிலமாக உள்ளது.

குறிப்பு : இப்பிரதி மிகச் சிலமாக இருப்பதோடு தெலுங்கும் கலந்து, எழுத முடியாத நிலையில் உள்ளது.

Vijayananda-Ranga-Bahadurmeedu Padalgal.

Size: 21×33. Pages: ... Lines: 25 on a page. Condition: injured.

617. உ. வே. சாமிநாதையர் பாடல்கள்

(நூல் எண் 642)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 40. நிலை : பழமை.

குறிப்பு ; இப்பிரதியில் டாக்டர் ஐயரவர்கள் பாடல்களும், திருவாவடுதுறை மாசிலாமணி தேசிகர்மீது ஓர் அந்தாதியும் உள்ளன.

உ
திருச்சிற்றம்பலம்

தொடக்கம் :

வாழுந் துறைசை வளர்மாசிலாமணி வள்ளன்மலத்
தாழும் படியடி யாரையொட் டாவரு ளாகரனைச்
சூழும் படியுண் விடையாயெனத்துதி சொல்லுந்துயர்
போழும் படிநுங் களையினி தாள்வன்நற் புத்தியிதே.

முடிவு :

வலந்திகழும் கல்விமனை யம்மனையின் பக்கவிதை
வளச்சொல் செல்வம்
நலந்திகழ விவைதழுவி யவையையலங் கரிசெல்வ
நானி லத்தே
புலந்திகழச் சிலர்க்குண்டென் றுரைபனுவற்
பொருளிவற்கே பொருந்திற் றென்றே
குலந்திகழ வடமொழியாங் குரைகடலின் கரைகண்ட
கோதி லாளன் (2)

Dr. U. V. Swaminatha Iyer Thani Paadalgal

Size: 21×33. Pages: 40. Lines: 20 on a page. Condition: old.

Note : The Ms. contains some songs composed by Dr. Iyer.

618. இராமேவரப் பிரபந்தத் திரட்டு (நூல் எண் 70)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 108. நிலை : சிதிலம்.

குறிப்பு : இப்பிரதியில் இராமேசுவரம்பற்றிய பிரபந்தங்களும் வேறு சில பிரபந்தங்களும் உள்ளன. அவை வருமாறு :

1. மலைவளர் காதலியம்மன்பேரில் கலித்துறைப் பதிகம் 10
2. மலைவளர் காதலியம்மன்பேரில் சந்த விருத்தம் 10
3. பருவதவர்த்தனியம்மன்பேரில் ஆசிரிய விருத்தம் 10
4. பருவத வர்த்தனி யம்மன்பேரில் ஆசிரியம் 10

5.	சண்முகநாமத் திரிவு	51
6.	சண்முகக் கடவுளார் திருநீற்றுப் பத்து	10
7.	சண்முகக் கடவுளார்பேரில் அடைக்கலப் பத்து	12
8.	அனுமார் கலித்துறைப் பதிகம்	11
9.	இலக்குமி தோத்திரம்	10
10.	தேவை வெண்பா	100
11.	திருச்செந்தூர்ச் சந்த வெண்பா	100
12.	ஷை ஷை வெண்பாவந்தாதி	100
13.	ஷை ஷை கலித்துறையந்தாதி	100
14.	தெய்வயானையம்மன் பேரில் ஆசிரிய விருத்தம்	11
15.	வள்ளியம்மன் ,, ,, ,,	11
16.	துவாதசாந்தத் திரிபு	13
17.	மதுரைச் சொக்கலிங்கர் தெரிசனைப் பத்து	10
18.	இராமநாத சுவாமி பேரில் வெண்பா	4
		583

18 பிரபந்தங்களும் 583 பாடல்களும், இறுதியில் வாகனக் கவி ஒன்றும் உள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்

மலைவளர் காதலியம்மன்பேரில் கலித்துறைப் பதிகம்

மணிகொண்ட சொன்னக் கிரீடமுஞ் சோதி மதிமுகமும்
பணிகொண்ட கண்டமும் செங்கையுங் கொங்கையும் பட்டுடையு
மணிகொண்ட பாதமு நான்றொழ முன்வந் தருள்புரிவாய்
கணிகொண்ட தேவைப் பதிவாழ் மலைவளர் காதலியே.

முடிவு :

வாகனகவி

கிள்ளைமொழி மலைவளர்கா தலிதனத்தை ராமீசர் கெஞ்சிக் கொஞ்சிக்
கிள்ளையிலே யானந்தங் கொண்டதனை நினைந்தன்றோ கிழத்தி பச்சைக்
கிள்ளையின்மேற் கொண்டுவந்தாள் என்றந்தச் சூழ்ச்சி யுன்னிக் கிழவ ரூரும்
கிள்ளையின்மேற் கொண்டுவந்தார் அம்மையினு மையர் மெத்தக் கெட்டி தானே.

இப்புத்தகம் இராமநாதபுரத்திலிருந்து பாண்டித்துரை யவர்களாற் பெற்ற ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதியது. ஷெ ஏட்டுப்பிரதி ஏவிளம்பி ௵ மார்கழி ௴ 18உ எழுதியது. 23-12-01. வே. ச.

Rameswara Prabandha Thirattu

Size: 21×33. Pages: 108. Lines: 28 on a page. Condition: good.

Note : **The Ms. contains 18 different Prabandhas.**

619. காத்தான் பிள்ளை மூப்பனார் பிரபந்தங்கள்

(நூல் எண் 147-a)

அளவு : 21×33. **வரிகள் :** 31.
பக்கங்கள் : 39. **நிலை :** நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 147-இன் தொடர்ச்சியாகச் செந்தி காத்தான் பிள்ளை மூப்பனார்மீது பாடப்பெற்ற பிரபந்தங்களைக் கொண்டது. இப்பிரதியில் முதுமொழி முப்பது (40 பாடல்களும்), மதங்கி விடு தூது, பாங்கி விடு தூது என்ற நூல்களும் காணப்படுகின்றன. மதங்கி விடு தூது ஆசிரியர் மதுரகவிராயர் என்றும், பாங்கி விடு தூது ஆசிரியர் திருவேங்கடத்தப்பன் கவிராயர் என்றும் இப்பிரதியில் எழுதப்பெற்றுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
முதுமொழி முப்பதும், மதங்கி விடு தூதும்

கற்றவர்கள் வாழ்த்து செந்தி காத்தானை யேத்தி,
....................முப்பதுக்கும், வெற்றி
யமலனருள புதல்வனை ந......................
கமல மிரண்டுமொன்றுங் காப்பு.

முடிவு :

வெண்பா

வாழி புகழ்ச்சேறை வணிகர் குலதிலகன்
வாழி யவன்கிளைகள் வாழியே—வாழிபுகழ்
வாழியவன் பெற்றெடுத்த மைந்தன் கொடைவாழி
வாழிசெந்தி காத்தான் வளம்.

நன்றாக. சுப்பிரமணியக் கடவுளே துணை.
பாங்கி விடு தூது முற்றும்.

திருவேங்கடத்தப்பன் கவிராயர் பாடல்
வேலுக்கபயம். வெற்றிவேல் துணை.

Kathan Pillai Moopanar Prabandhangal

Size: 21×33. Pages: 39. Lines: 31 on a page. Condition: good.

Note : The Ms. contains certain prabandhams on Sendhi Kathan Pillai Moopanar. It contains Mudumozhímuppadu, Mathangi vidu thoothu, Paangi vidu thoothu etc. Certain portions are defective.

620. காத்தான் பிள்ளை மூப்பனார் பிரபந்தங்கள்

(நூல் எண் 147)

அளவு : 21×33. வரிகள் : 36.
பக்கங் : 70. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : செந்தி காத்தான் பிள்ளை மூப்பனார் என்பது காத்தான் பிள்ளை என்றுமாயிற்று. இவர் வணிகர். இவரைப்பற்றிய காத்தான் பிள்ளை மூப்பனார் கொச்சகம், காத்தான் பிள்ளை வருக்கக் கோவை, மும்மணிமாலை, நட்சத்திரமாலை, நான்மணிமாலை ஆகிய நூல்கள் உள்ளன. பாடல்கள் இடையிடையே சிதைந்துள்ளன. கொச்சகத்தின் ஆசிரியர் சங்கரநாராயணன் கவிராயர் என்றும், வருக்கைக் கோவை ஆசிரியர் மார்த்தாண்டக் குட்டிக் கவிராயர் என்றும், மும்மணிமாலை ஆசிரியர் மதுர கவிராயர் என்றும் குறிப்பிடப் பெற்றுளது. மற்றை நட்சத்திர மாலை, நான்மணிமாலை, ஆசிரியர் யாவர் எனத் தெரியவில்லை.

தொடக்கம் :

உ

காத்தான் பிள்ளை மூப்பனார் பேரில் கொச்சகம்
காப்பு

கன்னுவ தாரனியற் காத்தான் வணிகேசன்
பொன்னூர் கலிப்பாப் புரக்குமால்—நன்னலஞ்சேர்
வார்முகத்த கோட்டு வலவைப் பிடிதணவாப்
போர்முகத்து நால்வாய்ப் பொருப்பு. (2)

முடிவு :

கலித்துறை

வாழிதென் சேரைப் பதிசெந்தி வாழி வணிகர்கிளை
வாழிய வாழிய காத்தான் வணிகன் வளர்மருமான்

வாழிய செந்தமிழ்ப் பாமாலை வாழிய மன்னுலகம்
வாழிய வாழிய நீடுழி வாழிய மாநிலத்தே.

Kathan Pillai Moopanar Prabandhangal

Size: 21×33. Pages: 70. Lines: 36 on a page. Condition: good.

Note : The Ms. contains many poems on Kathan Pillai Moopanar.

10. பலவகைப் பிரபந்தங்கள்

621. காளமேகப் புலவர் பாடிய சித்திரமடல்

(நூல் எண் 155)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 13. நிலை : நிலமாக உளது.

குறிப்பு : *அகத்துறை இலக்கண மரபில் மடலூர்தல் என்ற துறையில் பாடப்பெற்றது, இப்பிரபந்தம். இந்நூல் காளமேகப் புலவர் இயற்றியது. இப்பிரதி 180 கண்ணிகளைக் கொண்டு கலிவெண்பாவால் ஆகியது. அச்சானது.*

தொடக்கம் :

உ
கணபதி துணை
காளமேகம் பாடிய சித்திரமடல்
காப்பு

சீரார் பரவைத்தெய் வங்கள்பெரு மான்மீதிற்
பாராய்ந்து சித்திரமடல் பாடவே—மோராயக்
கொம்ப னுமையாள் குமர னுடன்பிறந்த
கம்பமத யானைமுகன் காப்பு.

நூல்

வையம் படைத்தருள்வோன் மாபா ரதியுடனே
மெய்யம் புயத்தவிசின் வீற்றிருந்தோன்—ஐயம்பு
பூத்தெரித்த தம்பியெனும் போர்வேளைச் சங்கரனுர்
பார்த்தெரித்த பண்டைப் பழிவாங்க—வேத்தரிய...

முடிவு :

பின்னுமுன்னு நாகம் பிடித்துக் கடித்திடினும்
அந்நிலையிற் சற்று மசையாம—லென்னே
தியங்காமற் றூங்காமற் செல்வி நலியாமன்
மயங்காம லூர்வேன் மடல்.

சுபகிருத்து ஞு கார்த்திகை மீ 16உ எட்டில் எழுதியது.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயன் எழுதியது. சோபகிருது ஞு கார்த்திகை மாதம் 20.

Minor Works

Kalamega Pulavar Paadiya Chitramadal

Size: 21×33. Pages: 13. Lines: 25 on a page. Condition: injured.

Note : The Ms. contains 180 kannis in Kali venba composed by Kalamega Pulavar. Printed.

622. காளமேகம் பாடிய சித்திரமடல் (நூல் எண் 197)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 16. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 155ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது. இதில் சங்கரமூர்த்தி கோவை என்னும் நூலும் உளது.

Kalamega Pulavar Paadiya Chitramadal

Size: 21×33. Pages: 16. Lines: 25 on a page. Condition: good.

Note : Similar to the previous item.

623. காளமேகம் பாடிய சித்திரமடல் (நூல் எண் 602)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 15. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இப்பிரதி 155-ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது. முதல் இரண்டு கண்ணிகள் இல்லை.

Kalamega Pulavar Paadiya Chitramadal

Size: 21×33. Pages: 15. Lines: 30 on a page. Condition: good.

Note : Same as the previous item without the first two kannis.

624. நாரசிங்கராயர் வளமடல் (நூல் எண் 465)

அளவு : 21×17. வரிகள் : 30.
பக்கங்கள் : 30 (29—59.) நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : நரசிங்கராயன் என்னும் வள்ளலைப்பற்றிப் பாடிய வளமடல் என்னும் பிரபந்தம். இவ்வள்ளல் கன்னிகாபுரி என்ற நகரில் இருந்ததாகத் தெரிய வருகிறது. இதனுடன் தேவையுலா என்ற நூலும் உளது.

தொடக்கம் :

உ
நரசிங்கராயர் வளமடல்
காப்பு

தேசம் புகழ்நார சிங்கமால் மேற்றமிழின்
வாசம் பெருகும் வளமடற்கு—நேசந்
திருப்புவி நாயகனைச் சித்திரத்துண் டாக்குங்
கருப்பு விநாயகனே காப்பு.

முடிவு :

கன்னி மறைவாழி (வாழி) கன்னிகா புரிவாழி
தென்னர சிங்க செயதுங்கன்—நன்னிலத்திற்
செந்தமிழ் கோவைநர சிங்கமால் மேலுரைக்கு
மிந்த வளமடல்வா ழி.

வளமடல் முற்றுப் பெற்றது.
சுப்பிரமணியக் கடவுள் துணை.

சுப்பிரமணிய சற்குரு தேசிக சுவாமிகள் திருவடிகளே சரணம்.

Narasingarayar Valamadal

Size: 21×17. Pages: 30. Lines: 30 on a page. Condition: injured.

Note : This is a prabandham on the patron Narasinga Rayar. Author not known.

625. நரசிங்கராயர் வளமடல் (நூல் எண் 518)

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 3. நிலை : பழமை.

குறிப்புக்கள் 465-இன் படியே. இப்பிரதி முற்றுமில்லை. அபூர்த்தியாக உள்ளது.

தொடக்கம் : 465-இன் படியே.

முடிவு :

இரணிய கெற்பனிருந் தெண்ணூ மற் செய்த
வரணிய செய்தி சொன்னு லன் றுரைத்த வாயுஞ்
சுருதிபோற் கேட்டோர் துளேச்செவியுங்கூடக்
கிருத சவுசஞ் ....

Narasingarayar Valamadal

Size : 21×33. Pages: 3. Lines: 22 on a page. Condition: old.

Note : Similar to the previous one; incomplete.

626. வாளெழுபது (நூல் எண் 546a)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 53. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வாள் வீரம் முதலியவற்றை அமைத்துப் பாடிய எழுபது பாடல்கள் கொண்டது. ஐந்து கோட்டை வளநாட்டார் வீரத்தைச் சிறப்பித்துப் பாடிய நூலாகும். இப்பிரதியில் பாயிரம் 4 பாடல்களும், நூல் 66 பாடல்களும் உள்ளன. "கொற்றப் பெருமையும், மங்கலச் செயலும் பிடித்த வாளும், போராரும் புயவலியு மனுவிலத்தன்ம புத்திரன் வாளெழுபதினிற் புகலச் செய்தானே" என்பதனுல் இதன் ஆசிரியர் தன்ம புத்திரன் என்பது தெரிய வருகின்றது. அச்சான விவரம் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் பட்டீசுவரசுவாமி வண்ணம், திருவேரகப் புராணம், வரராசையுலா ஆகிய நூல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
வாளெழுபது-பாயிரம்
இன்னிசை

வாசிவே முங்கடந்த வாள்வீர ரெல்லோருந்
தூசிவே முங்கடந்த குட்டியர சாளுகினும்
பேசுகோல் கைக்கொள் பெருமையினுற் பாவோடும்
வீசுகோ லல்லோநம் வேந்தற்குச் செங்கோலே.

முடிவு :

ஏட்டினில் வரைந்தெழுதி னவர்வாழி நாவின்
இசையின் கொடு சொல்வோர் கள்வாழி;

இன்னமுஞ் சொல்லுமென் றின்பமுற்றே யருகிருந்
துரைசெய்வோர்கள் வாழி;
தேசபாசைகள் பதினெண் நூல்களாகம்முடன்
திருசிறக வாழி;
காதிற் கேட்டவர்கள் வாழி; மனுநாலு
சாதியும் பெருகுகிளைகள் கிளைபோல வாழி:
கேள்விதரு குருபரஞ்சோதி சிவசமயமும்
கீர்த்தி பெறவாழி, பாரில் நாட்டவர்கள் வாழி;
இளுவா புரிசைவாழி; இருநாலு கிளைநாம
நூலிறு டொறுமணங்கள் செய்து
சுமங்கிலிகள் பூண்மங்கல நாணூழிநாள் வாழியே.

வாளெழுபது முற்றும்.

1059 ஸு மாசி மீ 28உ ஆதித்த வாரமும் ஆயில்யமும் கூடிய சுபதினத்தில் சிம்மலக்னத்தில் எழுதி முடிந்தது. வி.ப.சி. சுவடி சொ.வி.ச.த.சு.ப. வரைந்தது. சற்குரு தேசிகன் றிருவடி வாழ்க. சடாக்ஷர தேசிகர் துணை.

Valezhupadu

Size: 21×33. Pages: 53. Lines: 32 on a page. Condition: good.

Note : This contains 70 verses composed by one **Dharmaputran** describing the heroic deeds of **Aindu Kottai Valanaattaar.**

627. வாளெழுபது (நூல் எண் 690)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 28. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதி 546ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Valezhupadu

Size: 21×33. Pages: 28. Lines: 32 on a page. Condition: old.

Note : Same as the previous one.

கலைகள்

628. நவரத்தின பரீக்ஷை (நூல் எண் 704b)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 21. நிலை : சிதிலம்.

குறிப்பு : அகத்தியசுவாமி இயற்றிய நவரத்தின பரீக்ஷை என்பர். வலாசுரன் என்ற அரக்கன் இறைவனிடத்துத் தான் யுத்தம் செய்கிறபோது, மரணம் வந்தால் சரீர முழுவதும் நவ ரத்தினமாக வேண்டும் என்று வரங்கேட்டதும், அதன் முடிவும், நவரத்தினங்களின் தன்மையும் உரைநடையாக இப்பிரதியில் அமைந்துள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
அகத்தியசுவாமி நவரத்தினப் பரீட்சை

முன்னொரு காலத்திலே வலாசுரன் பரமசிவனைப் பூஜை செய்தான். அப்போது சுவாமி பிரசன்னமாக எழுந்தருளி, உனக்கு வேண்டிய வரங்கேளென்று திருவுள்ளம் பற்ற, வலாசுரன் தான் யுத்தம் செய்கிறபோது தனக்குச் சமானமில்லாம லிருக்கவும், பூமியிலே பிறவாமலிருக்கவும், மரணம் வந்தால் சரீர முழுவதும் ஒன்பது நவரத்தினமாகப் போகவும் வரங் கேட்டான். அந்தப் படிக்கு வரங்கொடுத்தார்.

முடிவு :

ஆணிக் கோவை:—
பணவிடை ரு. பணவிடை ரசிதம்
மாற்று—து. யஅ. பணவிடை ந.
பணவிடை மாற்று. துவ. ௰எ. பண
விடை. க. பணவிடை மாற்று. துரு.
ருஎ. பணவிடை. ரு. பணவிடை
ரசிதம் மாற்று. துரு. மாற்று. ௰அ.
ஆணி. ௫௰—உ. யசு.

Navaratna Parikshai

Size: 21×33. Pages: 21. Lines: 35 on a page.
Condition: injured.

Note : The Ms. which is written in prose by Agathiya swami describes details about navaratnams and their qualities.

629. சாமுத்திரிகா லட்சணம் (நூல் எண் 214)

அளவு : 21×17. வரிகள் : 15.
பக்கங்கள் : 90. நிலை : பழமை.

குறிப்பு : ஆண்-பெண் ஆகியோருடைய அங்க அடையாளங்களையும், அவற்றின் பலன்களையும் கூறுவது இந்நூல். இப்பிரதியில் 90 பக்கங்கள் உரைநடையில், பென்சிலால் எழுதப் பெற்றுள்ளன.

ஹரி ஓம்
நன்றாக. குரு வாழ்க
குருவே துணை

தொடக்கம் :

பூதலத்தில் பெண்களில் பதிவிறுதையாக இருக்குறவர்களே விவாகம் பண்ண வேண்டும் என்று அகத்திய மாமுனி சுப்பிரமணியரைக் கேட்க...........

முடிவு :

வாடி முல்லை மல்லைகெடா மூலத்தில் மூலமாம்,
முழிகேந்தி சித்திரையாம், கோலத்துமாம்,
பூவுபெண் பூசமாம், அஷ்த்தமே சேரலாகும்,
அனுசமே யிலையாகும், யிதுமங்கையற்கு.

ஒப்ப மயக்கம் திதம்.
உத்தமி தலைச்சன் பிள்ளை லட்சணம் முற்றின.

Samudrika Lakshanam

Size: 21×17. Pages: 90. Lines: 15 on a page. Condition: old.

Note: The Ms. contains an interpretation of the various features in males and females and their effects. 90 pages in prose are written in pencil.

630. சுத்தானந்தப் பிரகாசம் (நூல் எண் 253)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 382. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் கிரந்தத்தில் உள்ளது. இது வெளிவந்த விவரம் தெரியவில்லை. ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தில்

வந்துள்ள இசைபற்றிய விவரங்கள் இந்த நூலால் விளக்கம் பெற்றதாக முகவுரையில் குறித்துள்ளனர். தமிழும் வட மொழியும் கலந்த நூல்.

Suddhananda Prakasam

Size: 21×17. Pages: 382. Lines : 18 on a page. Condition: good.

Note : The Ms. which is in Grantha characters (Tamil and Sanskrit combined) contains details about music; does not appear to have been printed. Dr. Iyer refers to it in his introduction to the Silappadhikaram and states that it has enlightened him on the musical points occuring in that work.

631. நடனுதி வாத்யரஞ்சனம் (நூல் எண் 497)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 70. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இது நடனம், தாளம் வகைகளைப்பற்றிய நூலாகும். இப்பிரதி நல்ல முறையில் முகவுரை நூல் தாளக் குறிப்புகளுடன் தட்டச்சுச் செய்யப்பெற்றுளது.

தொடக்கம் :

உ
கணபதி துணை
சிவமயம்
நடனுதி வாத்தியரஞ்சனம்
முகவுரை

ஸ்ரீமத் அகண்டாகார சச்சிதானந்த சுத்த சொரூப பரபிரம்ம மாகிய பரமசிவம் அக்கினிக் குஷ்ணம் போலக் குணகுணி நயத்தால் தனக்கந்நியமாய்த் தானேயாய் விளங்கிநின்ற தனது சத்தியைப் பிரபஞ்ச காரிய நிமித்தம் ஸ்தூல சூட்சும பாவத்தால் முன்னிலைப்படுத்திச் சங்கற்பித்த அவசரம் பாவம்.

முடிவு :

இந்நடன சங்கீதத்துக்குரிய பாவார்த்தத்தை அப்பியசிக் கின்ற பாவலரும் மற்ற யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி தெலுங்கில் உள்ள சுமதி சதகம், பாலிகாமணி சதகம், இரச மஞ்சரி, அவ்வந்நாயகிக்குரிய சில க்ஷேத்திரிய பதங்கள், ஜில்லா கூரி திவாகரய்யரவர்கள் பரதசார சங்கிரகம் இவற்றிற்குத் தமிழில் உரை செய்திருக்கின்றது. மகாபரத சூடாமணி சத்த சுலோகங்களுக்கும் தமிழில் உரை செய்திருக்கின்றது.

632. திருநீலகண்ட நாயனர் சரித்திரக் கீர்த்தனை
(நூல் எண் 363)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 35. நிலை : பழமை.

குறிப்பு : கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய திருநீலகண்ட நாயனர் சரித்திரக் கீர்த்தனைகளும், சில தனிக் கீர்த்தனைகளும், வடமொழி எழுத்தில் சில கீர்த்தனைகளும், சில ஆனை ஐயா கீர்த்தனைகளும் உள்ளன.

தொடக்கம் :

உ
ஓம்
திருநீலகண்ட நாயனர் சரித்திரம்
சவுனகாதியரைப் பார்த்துச் சூதர் சொல்லுகிறர்
பூரி கல்யாணி ராகம்-ரூபக தாளம்
திருநீலகண்டத் தருமைச் சேதி சொல்லுவேன் கேளுங்கள்.

அநுபல்லவி
பெருநீல கண்டர் பாதம் பிசகாமல் மனதை நாட்டும்.

சரணம்
இரவும் பகலும் இடைவிடாமல் உழலும் இந்தப் பவஸாகரம்
எளிதாகவும் கரையேறலாம் இகபரம் பெறலாம்
பரிவுடன் பதம் பாடலாம் செய்த பாவங்கள் தள்ளிப் போடலாம்
பரமானந்தக் கடலாடலாம்
பார்தன்னில் வெற்றிக்கொடி போடலாம்.

முடிவு :

பரமசிவனே யென்று பாடிக் கொள்ளுவதிங்கே
பாலகிருஷ்ணவென்று பணிந்துகொள் ளுவதங்கே
அருமறைப் பொருளுக் கெட்டாத வடிவமிங்கே
அனந்த மூர்த்தியென்று அன்புசெய்வது அங்கே

Tiruneelakanta Nayanar Charitra Kirthanai

Size: 21×33. Pages: 35. Lines: 28 on a page. Condition: old.

Note: This contains Tiruneelakanta Nayanar charitram composed by Gopalakrishna Bharatiyar, and some miscellaneous songs and some other songs written in Sanskrit.

633. தேவாரப் பண்கள் விவரம் (நூல் எண் 460)

அளவு: 21×17. வரிகள்: 35.
பக்கங்கள்: 100. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: நூல் எண் 547ஐப் போன்றது.

தொடக்கம்:

Thevara Panngal

Size: 21×17. Pages: 100. Lines: 35 on a page. Condition: good.

Note: Same as Ms. no. 547.

634. பண்களுக்கு நேரான சங்கீத ராகங்களும் பிற விஷயங்களும் (நூல் எண் 547)

அளவு: 21×33. வரிகள்: 26.
பக்கங்கள்: 42. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: தேவாரம் முதலிய பண்களுக்கு ஏற்ப ராகங்களை அமைத்து எழுதப்பட்டதே இப்பிரதி. முதல் இரண்டு பக்கங்களில் பண்களின் பெயர்களை எழுதியுள்ளார்கள். இறுதியில் திருமுறை கண்ட புராணம் (35 முதல் 44 வரை) 9 பாடல்கள். பண்களைப்பற்றிய விவரங்கள் வரும் பகுதி குறிக்கப் பெற்றுள்ளன.

தொடக்கம்:

உ
திருச்சிற்றம்பலம்

கீழ்வேளூர்ச் சொக்கலிங்க ஐயர் கைப் பிரதியைப் பார்த்து எழுதியது.

சிவமயம்
பண்களுக்கு நேரான சங்கீத ராகங்கள்

புறநீர்மை—1
காந்தாரம்—2

இந்தளம் —3
கௌசிகம்—4
தக்கேசி —5
சாதாரி —6

பக்கம்—3

பண்களுக்கு நேரான சங்கீத ராகங்கள்

பண்		இராகம்
1.	புறநீர்மை	—
2.	காந்தாரம், கொல்லி	நவரோஜி
3.	இந்தளம்	நாதநாமக்கிரியா
4.	சீகாமரம்	தோடி
5.	கௌசிகம்	பைரவி
6.	தக்கேசி(தக்க ராகம்)	காம்போதி
7.	சாதாரி, நட்ட ராகம்	பந்துவராளி

முடிவு:

உற்றவிசைக் குறிஞ்சிக்கோ ரிரண்டாக வகுத்தமைத்துப்
பற்றரிய செந்துருத்திக் கொன்றுக்கிக் கவுசிகப்பா
துற்றவிசை யிரண்டாக்கித் தூயவிசைப் பஞ்சமத்துக்
கற்றவிசை யொன்றுக்கி யரனருளால் விரித்தமைத்தார் (9)

Panns and their equivalent Ragas

Size: 21×33. Pages: 42. Lines: 26 on a page. Condition: good.

Note : This contains details about panns in Thevaram and their equvivalent Vagams of Carnatic music.

635. பரத சாஸ்திரம் (நூல் எண் 618e)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 10. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பரத சாஸ்திரம் என்பது பரதநாட்டிய நடன இலக்கணங்களைப்பற்றி முறையே வகுத்துக் கூறுவது. இப் பிரதியில் முதலில் 3 விருத்தங்களும் பிறகு 44 வெண்பாக்களும்

அவற்றின் உரையும், உரை பாவ விளக்கங்களும் அமைந்துள்ளன. இந்நூலுள் 618-ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பேரில் தியாகராஜ செட்டியாரவர்கள் இயற்றிய அந்தாதி, 618-a திருச்செந்தில் மாலை, 618b - பெரியநாயகி இரட்டை மணிமாலை ஆகியவை உள்ளன.

தொடக்கம் :

ஹரி : ஓம்

பண்ணியம் வைத்த விநாயகன் பாதம் பணிந்து நன்னுள்
புண்ணிய வோரை புகன்றவை கொண்டு புனையிழையைக்
கண்ணியை யாண்டினிற் றண்டியஞ் சேர்த்தல் கடவதுமன்
நண்ணுநற் பாடலொ டாட லரங்கேற்று நன்னெறியே.

முடிவு :

மேவியசொற் கீடாக மெய்விரித்தல் தான்விரித்தல்
தூவிய சொல்லைத் தொகுத்தெடுத்து—மேவு
குவிக்குங்கால் மெய்யைக் குவித்தல் குவித்தல்
நவக்குந் தொழிலொன்பான் நல்கு.

என்பது, சொல்லுக்கீடாக விரிப்பது விரித்தலாம். குவிக்க வேண்டும் சொல்லுக்குக் குவித்தல் குவித்தலாம் என்றவாறு எனச் சிங்களத்துக்கு வகுத்த கால் ஒன்பதும் கண்டுகொள்க.

அகமாற்கம்.

Bharata Sastram

Size: 21×33. Pages: 10. Lines: 35 on a page. Condition: good.

Note : The Ms. contains three viruthams and 44 venbas with notes relating to Bharata Sastra.

636. பரத சேனுபதீயம் (நூல் எண் 562)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 27. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூலில் பரதத்தைப்பற்றிய பல அரிய செய்திகள் காணப்படுகின்றன. 1944இல் நூல் நிலையத்தின் முதல் வெளியீடாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் 70 சூத்திரங்கள்

உள்ளன. "ஆதிவாயிலார் என்பார்க்குப் பிற்காலத்தவர் ஒருவர், பரதசேனுபதீயம் என்னும் பெயரை அமைத்து இதனை இயற்றி யிருக்க வேண்டும் என்று தோற்றுகிறது" என நூல் நிலைய வெளியீட்டுப் பரதசேனுபதியம் முகவுரையில் காணப்படு கின்றது.

தொடக்கம்:

உ
குமரன் றுணை
பரத சேனுபதீயம்

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

நூல்
பொதுப் பாயிரம்

யாதானுமொரு நூல், உரைக்குமிடத்து நூலின் தன்மை, நுவல்வோன் தன்மை, நுவலும் தன்மை, கொள்வோன் தன்மை, கோடற்றன்மை ஆகிய ஐந்து பொதுவும் பதினெரு சிறப்புமாகிய பாயிரம் உரைத்து உரைக்கற்பாற்று என்று ஆன்ருேர் நியமித் திருப்பதால் ஈண்டுப் பொதுப் பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. அற்றேல் இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்ருேவெனின், தான் எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு வழிபடுங் கடவுள் வணக்கமாகிய மங்கலம் உணர்த் தல் நுதலிற்று.

முடிவு:

அஃதாவது சூ-ம்:
"வியந்தம் பூரணஞ் சுகுமாரா லங்கிருதம்
சமஞ்சுர கதம்சில க்ஷணிக் ருஷ்டம்
மதுரம் பிரகடனம் பத்தும் புகரம்.

(இ-ள்.) இப்பத்தும் அழகா மென்றவாறு.—ப, ம், பதங்கள் முதலிய கீர்த்தனைகளைச் சுரத்தின் பிரகிருதி பிரத்யயத்திறைற் பாடுவதை வியக்தமென்றும், பதங்களைச் சம்பூர்ணமாகப் பாடுவ தைப் பூரணமென்றும், பதங்கள் முதலியவற்றைச் சாரீரதருமம் காதுக்கிதமாகப் பாடுவதைச் சுகுமாரமென்றும்.................... சாரீர தருமமில்லாதவர்களும் அக்ஷர சுத்தமாய்ச் செவிக் கின்பமாய்ப் பாடுவதை மதுரமென்றும் முன் சொன்ன பூரணமே பிரகடனமென்றும் கூறினர் எ - று. (701.)

Bharata Senapatiyam

Size: 21×33. Pages: 27. Lines: 35 on a page. Condition: good.

Note : The Ms. contains 70 sutras relating to Bharata Sastram. Published by the Library in 1944, Sl. No. 1. Author not known.

637. பரத சேனபதீயம் (நூல் எண் 563)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 64. நிலை : நல்ல நிலை.

562ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது.

Bharata Senapatiyam

Size: 21×17. Pages: 64. Lines: 20 on a page. Condition: good.

Note : Same as the previous one.

638. பரதம் (நூல் எண் 564)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள் : 39. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : இராக வகை, தாள வகை முதலியவற்றைக் கூறுவதோடு இப்பிரதியில் அபிநய நாடக இலக்கணங்களைப் பற்றிய செய்திகளும் உள்ளன. இப்பிரதியில் 564a - சிவகாமியம்மை கலிவெண்பா உளது.

தொடக்கம் :

பரதம்
இராகம் முப்பத்திரண்டுக்கு வகை

சரிகம பதநி—கன்னட கௌளம்.
பூபாளத்துக்கு—வேளகிரி, மலகிரி, பவுளி. ஆக. 4
பயிரவிக்கு மோகரஞ்சி. குறிஞ்சி, தேவகிரி. ,, 4
மஞ்சரிக்கு—தேசி, நளிதை, சங்கராபரணம். ,, 4
மாளவிக்கு—குண்டக்கிரிகை, குச்சரி,கௌளம். ,, 4

வங்காளத்துக்கு—கன்னடகெவுளு, தனுசி, காம்போதி... 4
நாட்டைக்கு—தேசாட்சி, ஆயிரி, நாராயணகெவுளம்.

முடிவு :

இயம்பிய நாலாஞ் சாமவேதத்தில் வந்தோ
ரிலகிய சூத்திர நிறமும் பஞ்சவண்ணச்
செயம் வங்காளமுடன்
பூரணமா மிராகம் பகருங் காம்போதி யெனப்பகரு
நாட்டைக்
கியம்பிடு சோமக்கிரி மாகு வியாளதேச மாக்கிரி

என்றது இருக்கு வேதத்தில் பூபாளமும், பைரவியுமுற்பத்தி யிந்தரெண்டும் புருடன், பிரமசாதி, நிறம் பதம் நிறம் தேவதை ருத்ரன். புட்பங் கொன்றை நட்செத்திரம் ரேவதி ராசி மிதுனம் லக்கனம் கற்கடகம் வாகனம் மகரம் ஸ்திரியள் வேளாகிரி மலகிரி பவுளி யென்றவாறு. பயிரவிக்கு திரியள மேகரஞ்சி குறிஞ்சி தேவக்கிரிகை யென்றவாறு.

Bharatam

Size: 21×33. Pages: 39. Lines: 40 on a page. Condition: good.

Note : Describes the various Ragas and Thalas, and also contains Abhinaya Nataka exposition, as also Sivakami Ammai kalivenba.

639. பரதாகம சித்தாந்தம் (நூல் எண் 566)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள் : 110. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பரத சாஸ்திரத்தைப்பற்றிய ஆகமமும், அவற்றின் சித்தாந்தங்களும்பற்றிக் கூறுவதாகும். இப்பிரதியில் பாயிரம் 45 சூத்திரங்களும் பின்னர் நூலும் உள்ளன. இறுதியில் வையாபுரிப் பிள்ளை, பரிசோதித்தது எனப் பாயிரம் 44 சூத்திரங்கள் உள்ளன. முதற் பக்கத்தில் அட்டவணை உள்ளது.

தொடக்கம் :

ஆதிமூல பரதாகம சித்தாந்தம்

சூலதரி கொன்றைமலர் சூடிக்ருபை யாலாதி
மூல பரத மொழியவே—நீலமயில்
அத்தருக்கு முன்னுதித்த ருட்சுகத்தை வைத்தசுத்த
கத்தரிர்த்த கணபதியே காப்பு.

முடிவு :

சய்யோக மேரு

இந்தச் சய்யோக மேருவுக்குக் கீழ்ப் பந்திச் சங்கையிலக்கம் எழுதவும், இரண்டாம் பந்திக்கு க, உ, ங, ச, ரு, சு இப்படி முகவறை முதல் ஒவ்வொன்று இலக்கம் அதிகமாக அறைதோறும் எழுதவும். மூன்றும் பந்தி முதலுள்ள மேல் பந்திக்கெல்லாம் முதலறைதோறும் இலக்கம் ஒன்று எழுதவும். மூன்றும் பந்தி முதலறையும், அதற்குக் கீழறை இலக்கமுங் கூட்டி மூன்றும் பந்தி இரண்டாம் அறைக்கு எழுதவும். அந்த மூன்றும் பந்தி இரண்டாம் அறையும் இதற்குக் கீழறை இலக்கமுங் கூட்டி மூன்றும் பந்தி மூன்றுமறை எழுத்து இந்தப்படி மேல்பந்திகள் அறைகள்தோறும் இலக்கங்கள் கூட்டி எழுதிக்கொள்ளவும். இதற்குப் பலன் சொல்லுகிற விபரம் கீழ்ப்பந்தி முதலறை இல்லம் பேதம் இத்தனை என்றுஞ் சொல்ல............

பரதம்,
சங்கீத ரத்னுகரம்,
சங்கீத சுதாநிதி
ஆதி பரதம்
நந்தி பரதம்
நாயகா நாயகி லட்சணம்.

A. பரமசிவம் பிள்ளை
23-3-60

Bharatagama Siddhantam

Size: 21×33. Pages: 110. Lines: 40 on a page. Condition: good.

Note : There are 45 sutrams in this work relating to agamas and siddhantas of Bharata Sastra. Author not known.

640. பலர் பாடிய கீர்த்தனங்கள் (நூல் எண் 537)

அளவு : 21×17. வரிகள் : 7.
பக்கங்கள் : 296. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் கனம் கிருஷ்ணையர், பிள்ளைப் பெருமாள் பண்டாரம், செண்பகமன்னூர் முதலிய பல இசைப் புலவர்கள் இயற்றிய கீர்த்தனங்கள் உள்ளன. இவை 296-ஸ்ரீமத் ஐயர் அவர்களால் தொகுக்கப்பெற்றவை. தனித் தாள்களில் பென்சிலால் எழுதப்பெற்றுளது. இதனுடன் தனியே தாள்களில் இப்பிரதியில் உள்ள கீர்த்தனை அட்டவணையும் ஆசிரியர் பெயரும் குறிக்கப்பெற்றுள்ளன.

தொடக்கம் :

பிள்ளைப் பெருமாள் பண்டாரம் பாடல்கள்
இராகம்: நாதநாமக்கிரியை—அடதாளம்
உள்ளமே நீமறவாதே—ஏழை
உள்ளமே நீமறவாதே—
(வெகு) கள்ளம் வல்லார் கழுக்குன்றையில் மேவிய
வெள்ளை மேனியாரை வேதகிரீசரை (உள்ள)

முடிவு :

அம்மா உன்பாதஞ் சரணம்—என்னம்மா
அம்மா உன்பாதஞ் சரணம்
அம்மா உன்பாதஞ் சரணம்மா
செம்மான்நிகர் பெம்மானிடத்தில் வள
ரம்மா மருவார் குழலம்மா

.... காவிரி

திகழ்ந்த தென்கரை
வளர்ந்த பொன்கோயி
லுகந்த சமனையி
லிருந்த முதல்வியே—அம்மா

Kirthanas by various composers

Size: 21×17. Pages: 296. Lines : 7 on a page. Condition: old.

Note : The Ms. contains 296 songs composed by Ghanam Krishniyer, Pillaiperumal Pandaram, Sanbagamannar and others, collected by Dr. Iyer and written on loose sheets in pencil.

641. பாவ ராக தாளம் (நூல் எண் 596)

அளவு : 21×17. *வரிகள் :* 15.
பக்கங்கள் : 250. *நிலை :* *நல்ல நிலை.*

குறிப்பு : *இது அபிநயத்துக்குரிய பாவ ராக தாளங்களின் அமைப்பின் இலக்கணத்தைப்பற்றி விவரித்துக் கூறும் நூல். இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. இப்பிரதி அபூர்த்தியாக உள்ளது. நூலக ஏட்டுச் சுவடி எண் 473-இன் பிரதியாகும்.*

தொடக்கம்: பரத விஷயம். அகத்தியப் பிரஸ்தாரத் தாளத்துக்குப் பிரஸ்தாரமாவது புலுதம், குரு, லகு, துருதம் புலுதமாவது மூன்று மாத்திரை. குரு, இரண்டு மாத்திரை. லகு ஒரு மாத்திரை. துருதம் அரை மாத்திரை. அரையாவது சத்தி கூறு புலுதம். குரு லகு துருதம். சத்தி சிவாத்மிகம். சத்தி சிவாத்மிகமாவது உமையொரு பாகம். உமையாவது இடது புறம். சிவமாவது வலது புறம். உமையிடத்திலே சிருஷ்டி தேஹாதிப் பிரபஞ்சம் உண்டாகிறுப்போல இடது புறத்திலே பிரஸ்தாரமுண்டாம்.

முடிவு :

மகரமாவது, பதாகக் கையைப் பெருவிரலால் விரித்து ஒன்றின் மேலொன்றாக வைக்க, அது மகரக் கையாம். அபிநயம்-சிம்மம், புலி யானை முதலை மகரம் இவைகளைக் காட்டுகிறதிலே, ராக்ஷஸனைக் காட்டுகிறதிலே, சஞ்சலத்திலும், தைரியத்திலும் காட்டுகிறதிலே, ஜலப்பிரவாஹம் காட்டுகிறதிலே மகரம் முற்றும். வருத்தமானமாவது ஹம்சபக்ஷத்தை ஸ்வஸ்திகமாகத் தனக்குப் புறங்கை எதிராகப் பிடிக்க அல்லது செல்...............

Bhava Raga Thalam

Size: 21×17. Pages: 250. Lines: 15 on a page. Condition: good.

Note : This paper Ms. is a copy of the cadjan leaf No. 473 in the Library and deals with the lakshanas for Bhava, Raga and Thala in Abhinayam. Author not known.

642. பாவ ராக தாளம் (நூல் எண் 595)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 65. நிலை: இலமாக உள்ளது.

குறிப்பு : பாவ ராக தாளம் முதலியவற்றைப்பற்றிய விளக்கம். பிரதி எழுத முடியாத நிலையில் மிகச் இலமாக உள்ளது.

Bhava Raga Thalam

Size: 21×33. Pages: 65. Lines: 25 on a page. Condition: injured.

Note : **Same as the previous one and contains details as referred to therein; not in a fit condition to be copied.**

643. மகாபரத சூடாமணி (நூல் எண் 613)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 137. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பரத சாஸ்திரத்தின் தத்துவங்கள், ராக, தாள, பாவங்கள் முதலியவற்றை விளக்கிக் கூறுவதே இந்த நூல். சார்ங்கதேவ மகாமுனிவர் என்பவர் இயற்றியிருக்கக் கூடும் என அச்சுப் புத்தகத்தாலறியப்படுகின்றது. இப்பிரதியில் அத்தியாயம் 4 சங்கீதாதி ராகமேள லக்ஷணம்வரை உளது. ஐந்து அத்தியாயங்கள் உள்ளதாகத் தெரிகின்றது. நூல்நிலையத்தால் 1955இல் இரண்டு பகுதிகளாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம்:

உ
திருச்சிற்றம்பலம்

மகாபரத சூடாமணி என்னும் பாவ ராக தாள சிங்காராதி அபிநயதர்ப்பண விலாசம்.

1-வது அத்தியாயம்
கணபதி தோத்திரம்
நேரிசை வெண்பா

ஆதிநா ஜீசன் அருளும் பரதநூல்
மேதினியி லன்புடன்யான் விள்ளவே-மோதமுடன்
மாங்கனியை வாங்க வரனைவல மாகவந்த
காங்கயன்முன் ஞேன்றுமிபங் காப்பு.

முடிவு :

அலங்கார விராககா னங்க டன்னில்
ஆகியவிந் நாற்பகுப்பின் சொரூப மோர்ந்து
இலகவே பாடுமவர் கேட்போர்க் கென்று
மினிதான தருமார்த்த காம மோக்ஷம்
பலுகுமென வுமைக்கீச னுரைத்த வாறே
பண்டுநா ரதன்சார்ங்க தேவ னுக்குச்
சொலுமிந்தப் படியறிந்த சோம நாதன்
தொல்லுலகோர்க் கறிவித்தான் றுலங்கத் தானே.

எ–து: இச்சுரகானம் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பலன். அதாவது, அலங்காரமாகிய இராக தாளங்களிலுண்டாகிய வாதி சம்வாதி விவாதி அனுவாதியென்னும் நாற்குப் பின் சொருபங்களையும் தெரிந்து பாடப் பெறுபவருங் கேட்கப் பெறுபவரும் தர்மார்த்த காம மோக்ஷம் பெறுவரெனப் பார்வதி

கையெழுத்துப் பிரதிகளின் விளக்கம்

தேவியாருக்குச் சிவபெருமானருளியபிரகாரம் முன் நாரதர் சார்ங்கதேவ முனிக்குச் சொல்ல அவர் ஐயமறத் தெரிந்து உலகத்தோ ரறியும்படி சொற்றனர் எ-று.

நாலாவது அத்தியாயம் க-வது
சங்கீத லக்ஷணம்
முற்றுப் பெற்றது

Mahabharata Chudamani

Size: 21×33. Pages: 137. Lines: 30 on a page. Condition: good.

Note: This is a Ms. copy based on which the two volumes of the printed book have been published by the Library in 1955. The work describes in detail all special features relating to Bharata Sastra. Author is Sarnga Deva.

644. மகாபரத சூடாமணி (நூல் எண் 614)

அளவு: 21×33. வரிகள்; 15.
பக்கங்கள்: 95. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: நூல் எண் 613இன் படியே. நூல் எண் 613இன் இரண்டாம் பகுதி தொடர்ச்சியாக வருகின்றது. 138லிருந்து 232 வரை பக்கங்கள் எண்ணிடப் பெற்றுள்ளன. இப்பிரதியில் அச்சான பகுதிக்குமேல் 40 பக்கங்கள் சங்கீத ரத்னாகரம் என்ற பகுதி உள்ளது. இறுதியில் பாடல் அகராதி 8 பக்கங்கள் உள்ளது.

தொடக்கம்:

உ
மகாபரத சூடாமணி
4-வது அத்தியாயம் 2-வது பிரகரணம்
புருஷ ராகங்கள்–8

புருஷரா கங்க ளாகும் பூபாளம் பயிர வி ஸ்ரீ
பருபல மஞ்ச ரீவ சந்தாமா ளவிபங் காளம்
நிரைகொளும் நாட்டை யென்று நேருமிவ் வெட்டை யோது
பெருமையாம் நூலி லன்னப் பேடெனத் துலங்கு மானே.

என்பது பூபாளம், பயிரவி, ஸ்ரீராகம், பலமஞ்சரி, வசந்தா, மாளவி, பங்காளம், நாட்டை இவைகளெட்டும் புருஷ ராகங்களாம் என்றவாறு.

முடிவு :

காக்குமேழ் சுரத்தைக் காலைநடு மாலையிலும்,
ஆக்கமுட னுரோக மவரோகம்......ஏற்க
வியம்பலாகு மற்ற வெக்காலுங் கூடா
தயவவற்றின் பேர் சரளியாம்.

இந்த ஏழு சுரத்தையும், பிராதக் காலத்திலும், மத்தியானத்திலும், சாயங்காலத்திலும் சாதகம் பண்ணவேண்டும். மற்றக் காலம் கூடாவாம். இதன் பேர் சரளியாம்.

இச்சுரம் பாடுவோர்க்குங் கேட்போர்க்கும் பலன்.

அலங்கார விராககானங் கடன்னிலாகிய விந்நாற் பகுப்பின் சுரூபமோர்ந்து இலகவே பாடுமவர் கேட்போர்க் கென்றும், இனிதான தர்மார்த்த காமமோக்ஷம் பலுகுமென வுமைக்கீசனுரைத்த வாறே பண்டு நாரதன் சார்ஙுதேவனுக்குச் சொலுமிந்தப்படி யறிந்த சோமநாதன் தொல்லுலகோர்க்கு அறிவித்தான் றுலங்கத் தானே.

காந்திமதியம்மை சகாயம்

இவை இராமநாதபுர ஸம்ஸ்தான வித்வான் சாந்தா நாய்க்கர் புத்தகம் பார்த்தெழுதப்பட்டது. ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம்.

2ஆவது மேளகர்த்தா ஜன்னியங்கள் சவுடாற்பட்டி கோபாலையர் புத்தகம் பார்த்து எழுதப்பட்டது. ஈசுர வருஷம் சித்திரை மாதம்.

Mahabharata Chudamani

Size: 21×33. Pages: 95. Lines: 20 on a page, Condition: good.

Note : This is a continuation of the previous item.

645. **மகாபரத சூடாமணி** (நூல் எண் 615)

அளவு : 21×17. வரிகள் : 18.
பக்கங்கள் : 161. நிலை : சிதிலம்.

குறிப்பு : இப்பிரதி நூல் எண் 613ஐப் போன்றதே.

Mahabharata Chudamani

Size: 21×17. Pages: 161. Lines : 18 on a page. Condition: injured.

Note : Same as the previous item.

646. முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள் (நூல் எண் 657)

அளவு : 21 x 17. வரிகள் : 22.
பக்கங்கள் : 30. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தமிழிசை பாடுதலில் சிறப்புற்றவர்களில் ஒருவர் முத்துத் தாண்டவர். இவர் பல ராகங்களில் பல கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார். இப்பிரதியில் 33 கீர்த்தனைகள் உள்ளன. அச்சிட்டது.

தொடக்கம் :

கல்யாணி ராகம்-ஏகதாளம்
பல்லவி

சேவிக்க வேண்டுமையா சிதம்பரஞ் சேவிக்க வேண்டுமையா
சேவிக்க வேண்டும் சிதம்பரமூர்த்தியின்
தேவாதி தேவன் திருச்சன்னதிகண்டு—சேவிக்க
வேண்டுமையா.
காரானை மாமுகத்தைந்து கரத்தானை
கற்பக ராயனை முக்குறுணியானை—சீரார்
புலியூர்ப்பதி மேலைவாசல் வாழ்தேவர்
சிறைமீட்டுஞ் சேவற்கொடி யானை—சேவிக்கவேண்டுமையா.

முடிவு :

சௌராஷ்டிர ராகம் - ஏகதாளம்

தில்லைத் தலம்போலச் சொல்லப்புவிமீதிற்
தெய்வத் தலங்களுண்டோ—நாளும்
சொல்லும் தொள்ளாயிரத் தொண்ணூற் றொன்பது
தூயகலை நிறை பாத்திரம்—எங்கும் போய்வரும்
ஒருகலை மாத்திரம் அகவாயிரமாஞ் சிவக்ஷேத்திரம்,
(தில்லைத் தலம் போல)

....

நெற்றியிற் பூதிப்பொடி தூள்கள் பட்டாலும்
நீங்காப் பிணியெல்லாம் நீங்கும் வந்து
சற்றே மிதித்தாலும் மெல்லவர்க்குஞ்
சிவதன்ம நினைவை யுண்டாக்கும்
பூர்வ ஜன்ம வினைகளைப் போக்கும்
மறுஜன்மமெடாமலே காக்கும் (தில்லை)

Muthu Thandavar Kirthanaigal

Size: 21×17. Pages: 30. Lines: 22 on a page. Condition: good.

Note : The Ms. contains 33 kirthanas of Muthu Thandavar, a well-known musician.

647. விநாயக நிலை முதலியன (நூல் எண் 12f)

அளவு : 21 × 33. வரிகள் : 25.
பக்கங்கள் : 9 + 6. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இதில் விநாயக நிலை, விநாயக கரணம், நாமகள் நிலை, நாமகள் கரணம், உமை நிலை, உமை கரணம் என்னும் பகுதிகள் அடங்கியுள்ளன. இந்நூலில் உள்ள பாடல்கள் 26. அகவல், வெண்பா ஆகியவற்றால் ஆகிய நூல். விநாயகர், நாமகள், உமாதேவி ஆகியவர்களைக் குறிக்கும் அபிநயங்களும், அவர்கட்குரிய கரணங்களும் இன்னவை என்று கூறும் நூல் இது. இதன்பின் ஆறு பக்கங்களில் செய்யுட்களின் அகராதி இருக்கிறது.

தொடக்கம் :

விநாயக நிலையே மேவு துதிக்கை
தனது தரத்தில் தக்க ளுற்கரமும்
தத்தொம் தொளில் தற்பர மாக
ஒத்த பதஞ்சம நிலையுறு வதுவே.

இறுதி :

நன்னிலங் குதியிடை நால்விர லாதல்
பன்னிரண் டங்குல மாதல் பகுந்து
புந்தி முதலா யொளிதிகழ் நெற்றி
வைத்த நன்னூல் மாணிலந் தனக்குஞ்
சுற்றும் வன்புறைக் கையன் றனக்கும்
தொற்று மளவெனத் தொகுத்துரைத் தனரே.

உமை நிலையுங் கரணமும் முற்றும்.

Vinayaka Nilai etc.

Size: 21×33. Pages: 15. Lines: 25 on a page. Condition: good.

Note : The Ms. contains 26 verses in ahaval, venba and relates to Vinayakar, Saraswathi, Umadevi, their actions, poses, expression, etc.,

648. முகசாலி (நூல் எண் 216)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள்: 7 : 63-69 நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நாட்டியத்திற்குரிய கரணங்களின் விளக்கம் 27 பாடல்களில் சொல்லப்படுகிறது. பலவகை விருத்தங்கள் கொண்ட நூல். அந்தாதியாக அமைந்துள்ளது. இதன்பின் 30 வகையான வாத்தியங்களின் பெயர் அமைந்த ஓர் அகவல் உளது.

தொடக்கம் :

அரங்கினில் வந்து தோன்றி யரசனுக் கிடது பாக
நிரந்தகோ லிரைந் தான நீளத்தி னளவி னின்று
பரந்தசங் கத்தா னத்திற் பதாகைத் தலங்க டுக்கித்
தரம்பெறு மங்கந் தன்னைச் சதுர்ச்சிர மாக்கி நின்றாள்.

முடிவு :

கடந்த காரிகை பிரமமண் டலத்தையுங் காட்டி
நடந்த வீட்டுடன் புடையநட் டணைநிலக் கிடையும்
படர்ந்த மெய்யினில் நீராரொட் டமிர்தபா வகமு
மடர்ந்த கோப்புடன் பாரமா யழகுடன் றீர்ந்தாள்.

முகசாலி முற்றும்
வாத்திய வகை

Mukhasali

Size: 21×33. Pages 7. Lines: 20 on a page. Condition: good.

Note : This contains 27 Viruthams in Anthadi and describes actions relating to Natyam. This also contains a description of 30 vadyams or instruments.

649. சில நாட்டு மருந்துகள் (நூல் எண் 270)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 5. நிலை : இலமாக உளது.

குறிப்பு : இப்பிரதியில் நாட்டு மருந்துகள், நாட்டு மருந்து முறையீடு, அஜீரண ரஸாயனம், சீமைக் கல்நாரி பஸ்மம், மல சுத்தி, உஷ்ண சமன கிருதம், பாம்புகடி மருந்து முதலியவற்றைப்பற்றிய செய்திகள் உள. இப்பிரதியில் தனிகைப் புராணக் குறிப்புக்களும் பெரிய புராண சூசனமும் உள்ளன.

தொடக்கம்:

அஜீரண ரஸாயனம் :

இஞ்சிரசம் பலம் 2, எலுமிச்சம்பழம் ரசம் பலம் 2/1, தேன் பலம் 8/1, வேம்பின் ஈர்க்கு பச்சை 10. வெள்ளைச் சர்க்கரை இரண்டு சிட்டிகை இவற்றை ஒன்று சேர்த்து 20 நிமிடம் வைத்துச் சாப்பிட்டு விடவும். மூன்று வேளை சாப்பிடவும். பத்தியமில்லை. வேம்பின் ஈர்க்கை மேல்தோல் போக்கி நறுக்கிச் சேர்த்துக்கொள்ளவும். இஞ்சியை அரைத்து ஜலம்விட்டுக் குழைத்துத் தெளிய வைத்துத் தெளிந்த ஜலத்தை எடுத்துக்கொள்ளவும்.

முடிவு :

எலிக்கடி மருந்து :

முற்றின முருங்கை மரத்தின் பட்டையைக் கொண்டுவந்து மைபோல் தண்ணீர் விடாமல் அரைத்து மூன்று கெச்சக்காய்ப் பிரமாணம் எடுத்துக்கொண்டு சம எடையாகப் பசுவெண்ணெய் சேர்த்து மூன்று வேளை காலையில் மாத்திரம் கொடுக்கவும். பசும்பாலும், சாதமும் சாப்பிடவும். அல்லது வெந்நீரும் சாதமும் சாப்பிடவும்.

Some Native Drugs

Size: 21×17. Pages: 5. Lines: 20 on a page. Condition: old.

Note : The Ms. contains details of various country drugs, their uses etc.

650. கூவ நூல் (நூல் எண் 188)

அளவு : 21×17. *வரிகள் :* 15.
பக்கங்கள் : 80. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு: கூவம் என்பது கிணறு. கிணறு வெட்டும் முறையைப்பற்றிக் கூறுவது இந்நூல். இதனுள் இறுதியில் 6 பக்கங்களில் சோதிடம் குறிக்கப்பெற்றுள்ளது. 250 பாடல்களுடன் அபூர்த்தியாகவுள்ளது. இப்பிரதியில் பல எழுத்துக்கள் அங்கங்கே சிலமாக உள்ளன. பிற விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

...லக்கினக்கு நன்மையாம் வன்னிபகர்ந்திடில்
த...கு நன்றல்ல மதிதரும் கன்னிவாள்வதா
மேற்கு...மானமென்றதனல் நிதிதரும்
வடக்கீரு...ம நன்மை நிகள்த்தியகு

கனத்தியற்கே...ங்கூவல் நூலதனை யுரைத்த
கணபதி பொற்பதங்......

முடிவு :

மகம்பிரமளவு மெண்ணி இதன் மேலறையிலே திரு வாதிரையை வைத்து வடக்கு நோக்கி நாலரை ஆயிலமளவு மெண்ணி இதன் மேலறையிலே மகத்தை நிறுத்தித் தெற்கு நோக்கி அஞ்சரை சித்திரை யளவு எண்ணி பின்...கீ...

(இதற்குமேல் விட்டுப் போய்விட்டது)
கூவநூல் முற்றும்.

Koova Nool

Size: 21×17. Pages: 80. Lines: 15 on a page. Condition: good.

Note : This describes the procedure for digging wells. Koovam means well.

651. மயமதம் (நூல் எண் 663)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 91. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: மயமதமென்பது ஆலய நிர்மாணம்பற்றியும், நிர்மாணம் செய்யும் ஸ்தபதிகள் சிற்பிகள், லக்ஷணம்பற்றியும் கூறுவதாகும். இப்பிரதி அத்தியாயம் II (வாஸ்துபிரகாரம்) துவங்கி, பிரஸ்தார கரணம்வரை அபூர்த்தியாக உள்ளது. பிற விவரம் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
கணபதி துணை
மயமதம்
அத்தியாயம் II (வாஸ்து பிரகாரம்)

தேவர்களும், மனுஷ்யர்களும் யாதொரு யாதோரிடத்தில் வசித்து நிற்கின்றார்களோ அவற்றினின்றும் பூமிமுகமா யிசைந்த மானவை வாஸ்துவென்று பேராக தந்திரஞர்களாலே சொல்லப் பட்டது. அதன் பேதத்தையும் சொல்லுவான் தொடங்கு கின்றேன்.

முடிவு :

தேவர்களுடையவும், பிராமணருடையவும், ராஜாக்க ளுடையவும் கிருகங்களில் மத்யத்தில் துவாரமமுகியது. வைசிய

ருடையவும், சூத்ரருடையவும் கிருகங்களில் நடுவு ஒழிஞ்சு துவாரம் விடுவான் அது ஸ்தம்பஸ்தானமாம். பிரதியின் மேலே வேதிகை ஒன்று அரை இரண்டு மூன்று தண்டாலே உயரமாவது. இரண்டு கம்பாதல் (ஆறு கம்பாதல்), நாலு கம்பாதல் கொள்ளுவது காலில் கூற்றில் ஒரு கூற்றுலே கனங்களைக் கொள்ளுவான்.

Maya Matham

Size: 21×33. Pages: 91. Lines: 32 on a page. Condition: good.

Note : The Ms. contains details relating to construction of temples, sculptures etc.

652. மனை உற்பவம் முதலியன **(நூல் எண் 639)**

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு: மனையின் உற்பவங்கள் முதலியவற்றை விளக்கிக் கூறுவது. இப்பிரதி மிகச் சிலமாக, எழுத முடியாத நிலையில் உள்ளது.

Manai Urbhavam etc.

Size: 21×17. Pages: .... Lines: 20 on a page. Condition: injured.

Note : The Ms. is not in a fit condition to be copied. It is a work on the construction of houses.

10. நீதி

653. அறநெறிச்சாரம் (மூலம்) **(நூல் எண் 51)**

அளவு 21×33. வரிகள் 16.
பக்கங்கள் 57. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : அறநெறிச்சாரம் மூலமும், சிறுபஞ்ச மூலமும் உரையும், ஏலாதி மூலமும் உரையும் இப்பிரதியில் உள்ளன. முதல் 57 பக்கங்களில் அறநெறிச் சாரம் உளது. 226 பாடல்கள் கொண்டது. இந்நூல் முனைப்பாடியார் இயற்றியது. அவ்வாசிரியர் ஜைனர் என்று காப்புச் செய்யுளால் தெரியவருகிறது. அச்சானது.

தொடக்கம் :

தாவின் றி யெப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை—நாவில்
துதித்திண் டறநெறிச் சாரத்தைத் தோன்ற
விரிப்பன் சுருக்காய் விரைந்து.

முடிவு :

முனைப்பாடி யானைச்சூர் முக்குடைச் செல்வன்
தனைப்பாடி வந்தோற்குத் தந்த பரிசில்
வினைப்பாடு கட்டழித்து வீட்டின்ப நல்கி
நினைப்பாடி வந்தோர்க்கு நீமி தென்றான்
நிறைவிளக் குப்போ லிருந்து.

Ethics

Aranerichcharam

Size: 21×33. Pages: 57. Lines: 16 on a page. Condition: good.

Note : The Ms. contains 226 verses composed by Munaippadiar, a Jain. Printed.

654. அறநெறிச் சாரம் (நூல் எண் 50)

குறிப்பு: இப்பிரதி மிகவும் லெமாய் எழுத்துக்கள் எல்லாம் மறைந்து எழுதமுடியாத நிலையில் உள்ளது. அச்சானது.

Aranerichcharam

Condition: much injured.

Note : The Ms. is not in a fitcondition to be copied.

655. நீதி நூல் (நூல் எண் 191)

அளவு : 21×17. வரிகள் : 16.
பக்கங்கள் : 36. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பலதிறப்பட்ட நீதிகளைக் கூறும் நூல். இப்பிரதியில் 159 திருவிருத்தங்கள் உள்ளன. ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை. அச்சானது.

தொடக்கம்:

கடவுள் துணை
நீதி நூல்
பாயிரம்

தனக்குத்தா னொருவன் போதஞ் சாற்றிடிற் குறைபி றர்க்கே
னனக்கவில் நீதி நூற் பத்துநான் கதிகா ரங்க

னினக்கவி யறுநூ ருய வினையநூ லயலார்க் கன்றென்
மனக்கியா னுணர்த்து கின்றேன் மற்றெனை முனிவார் யாரோ.

முடிவு:

எமக்குண விலங்கைப் புள்ளை யிறைசெய்தா
னெனக்கொன் றட்டுச்
சுமக்கரி தாக வுண்டு பாழ்ங்குழி தூர்க்கா நின்றீர்
தமக்குண நும்மை யீசன் சமைத்தன னெனப்புல் சீய
மமர்க்கரி யாதி யும்மை யடித்துணி னென்செய் வீரால்
ஆக. விடுபட்ட திருவிருத்தம் 166.

Neethi Nool

Size: 21×17. Pages: 36. Lines: 16 on a page. Condition: good.

Note: The Ms. contains 159 viruthams on ethics, composed by Vedanayagam Pillai. Printed.

656. விவாக விதி விளக்க வினு விடை (நூல் எண் 726)

அளவு : 21×17. வரிகள் : 20.
பக்கங்கள் : 84. நிலை : மிகச் சிதிலம்.

குறிப்பு : இப்பிரதியில் திருமணத்தைப் பற்றியும், அது எவ்வாறு செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் சொல்லப்பெற்றுள்ளன. விவாகம்பற்றித் தர்க்க வினு விடையாக அமைந்துள்ளது.

தொடக்கம்:

உ
சிவமயம்
விவாக விதி விளக்க வினு விடை
விநாயகர் துதி வெண்பா

பூத்தானப் பொன்மாயன் புத்திரருக் குத்தியோக
மாத்தான தர்மங்கை வண்மெய்யுறக்—கோத்தானச்
சீரார் விவாகவிதி செப்புதற்கை யானனருட்
காரார் துதிக்கையான் காப்பு.

முடிவு :

மன்மத வருஷம் தை மீ இருபதாந் தேதி சனிக்கிழமை மூன்று மணிக்கு, பேரம்பாலு செட்டி வீதியில் எழுபத்து நான்காவது வீட்டு கரு - விலக்கமுள்ள வீட்டில் - இவ்விவாஹ விளக்க வினுவிடை எழுதி முடிந்தது.

இப்படிக்கு
அகத்திஸ்வரம் கா. இ. சிதம்பரம்சுவாமி நாடார்
அடியபாதர் துணை.

Vivaha Vidhi Vilakka Vina Vidai

Size: 21 × 17. Pages: 84. Lines: 20 on a page.
Condition: much injured.

Note : The Ms. contains questions and answers about marriage.

11. சமயம்

657. அநாதிப் பொருள் ஆறுக்கு வகை (நூல் எண் 32)

அளவு : 21 × 17. வரிகள் : 26.
பக்கங்கள் : 14. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு: இது சைவ நூல். கர்த்தா, ஆத்மா, பாசம், கன்மா சுத்தமாயை, அசுத்தமாயை ஆகிய இந்த ஆறு அநாதிப் பொருள்களின் வகையைக் குறித்து விளக்கும் நூல். உரைநடையில் அமைந்தது. இப் பிரதியில் 32-a ஞானசாதகப் பனுவல் என்ற நூலும் உள்ளது. ஆசிரியர் பெயரும், அச்சான விவரமும் அறியக்கூடவில்லை.

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்
அநாதிப் பொருளாறுக்கு வகை

கர்த்தா, ஆன்மா, பாசம், கன்மம், சுத்தமாயை, அசுத்த மாயை ஆக சு. அநாதிக்குப் பொருள் ஒரு காலத்தோரொருவராலே யுண்டாக்கப்படாமல் தானே யியல்பாயுள்ளது. ஆறு பொருளிலே ஆன்மா ஒரு பொருளாக இருப்பதை மூன்று வகையாகச் சொல்லுவானேன்? ஒரு மலத்தார், இரு மலத்தார், மூன்று மலத்தார் ஆக மூன்று வகையுமவர்கள் பெந்தப்பட்ட முறையைப்பற்றிச் சொன்னது.

முடிவு :

அபக்குவத்துக்கே மூலமலமென்பது பெயராகில் மூலமலத்தாற் சாரலு மாயை கருமத்தளவிற்றநுமுரு விறைவனென்றதிலாணவத்தையு மூலமலமென்பதேதென்னில் ஆணவ காமிய மாயையென்னுமிது முன்னைய பக்குவத்தினின்றும் பரிணமித்த முறைபற்றி யிதுவு மூலமலமென்றே பெயர் பெறும்.

திருச்சிற்றம்பலம்
முற்றும்.

Religion

Anadipporul Aarukku Vagai

Size: 21×17. Pages: 14. Lines: 26 on a page. Condition: injured.

Note : This is a work in prose and describes the karta, atma, pasam, karma, suddha mayai and asuddha mayai referred to in Saiva Siddhanta; no information about the author.

658. அபிடேக மாலை யுரை (நூல் எண் 33)

அளவு: 21×33. வரிகள்: 25.
பக்கங்கள்: 49. நிலை: பழமை.

குறிப்பு : இப் பிரதி அபிடேக மாலை என்னும் பெயருடைய வீரசைவ நூலும் உரையும் அடங்கியது. சிவப்பிரகாச சுவாமி கள் இயற்றியது இட்டலிங்க அபிடேக மாலை. அச்சானது.

அபிடேக மாலை 10 செய்யுட்களுக்கும் விரிவான உரை வரை யப்பெற்றுளது.

தொடக்கம் :

பந்தமறு மரர்மிருடர் பவருருத் திரர்களொரு
பதினொருவர் மிளிர்பீடமேற்
படியிலை யைவகைப் படுமீசர் தாரிதம்
பத்திலெண் வித்தையிறைவர்
சந்தமுறு சோமுகத் தைங்கலைகள் சத்திசா
தாக்கியம் மூர்த்திவதனந்
தட்டற்ற வட்டத்தி லொட்டற்ற சிற்சத்தி
தானுற்ற நாளத்திலே
நந்தலற வருகோளா கந்திகழ் சிதம்பர
நற்சிகையி னிற்குனிய
நட்டமற வமைகின்ற விட்டவடி வொடுமின்ற
ஞானமய மோனநடுவோ
டந்தமற முந்துபர மானந்த நீரந்த
வபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற் றமர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

முடிவு :

சைவனில் சிவசமவாதி பேதவாதி விசிட்டாத்துவவாதி முதலிய பல மதமுடையவரைப் போல வெமைக் கீழ்ப்படுத்தி

விடாமற்படிக்கு அருளினாலே நினை யடைதலுறு மரிய பாதமாகிய நின்றே டிரண்டறக் கலந்து வாழும்படி மோட்சத்தை யருளு மவன் அடியேனுக் கெளிதாகத் தந்தவனே யபிடேக மாடியருளே நானுஞ் செய்தருளு மென்றவாறு. அறிவுற்ற ஆடியருளே பூருவார்த்தம். (10)

அபிடேக மாலை யுரை முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

Abhidekamalai Urai

Size: 21×33. Pages: 49. Lines: 25 on a page. Condition: old.

Note: This is Ishtalinga Abhideka Malai written by Sivaprakasa Swamigal. Printed. There is a commentary for ten verses of the Malai.

659. அருங்கலச் செப்பு : சினேந்திர வெண்பா

(நூல் எண் 43)

அளவு : 21×17. வரிகள் : 17.
பக்கங்கள் : 40. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு : நூலின் மேலுள்ள குறிப்பிலிருந்து நூற்பெயர் அறியப்படுகின்றது. இது ஜைன மத நூலாகும். மிகக் சிலமாக இருப்பதால் இப்பிரதியில் பிற விவரங்கள் அறியக்கூடவில்லை.

Arungala Cheppu, Sinendra Venba

Size: 21×17. Pages: 40. Lines: 17 on a page. Condition: injured.

Note: This is a Jain work relating to morals. The condition of the manuscript is much injured and hence details cannot be furnished. Printed.

660. **சகச நிட்டை** (நூல் எண் 194)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 152. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூலில் சகச நிட்டை பற்றிய 17 குறள்கள் விளக்க உரையுடன் காணப்படுகின்றன. இக்குறள்களில், காரண காரிய தரிசனம், பதிதரிசனம், பதிமேலீடு, காரண மெலிவு, ஆனந்த தெரிசனத்தழுத்தல், ஆன்மாவின் போதவொழிவு

முதலியனவும், சகசம் அடைந்தோர் தன்மை, கண்டு வழிபடல் முதலினவும் விளக்கப்பட்டுள்ளன.

மெய்யுணர்வாம் சத்தியஞான விசயம், சைவ சிந்தாந்தக் கருத்துக்களுடன், சைவசித்தாந்த சாத்திர நூல்களிலிருந்தும், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ் முதலான நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி அதிகப் பக்கங்களில் விளக்கப் பட்டுள்ளது.

தொடக்கம் :

சகச நிட்டை

சகசமாவது: காரண காரியங்களை யறிந்து எல்லா நிலைகளினு மலைவற்றுத் தற்கலந்த பொருளுடனுயிருப்பதாத லக்காரண காரியங்களை யறியும் பரிசு மிந்தக் காரணங்களுக்கெல்லாந் தாரகமாயிருக்கப்பட்ட பதிநிலைமையு மப்பதியனைத்திலு மேலீடாய் நிற்கு முறைமையும் பதிமேலீட்டிலே காரணங் காணக் கழன்றுங் கழலாமற் கழலு முறைமையுங் காரணங் கழன்றுங் கழலாத விடத்திலே யானந்த தெரிசனத்திலே யழுந்து முறைமை யும் அழுந்து மிடத்தினவிடத்திலே யானந்த மேலீடாய் நிற்கு முறைமையும் மேலிட்ட விடத்திலே ஆன்மா போத வொழிவா கிற முறைமையு முல்லாச வைப்பிலே பெறுவான் பேறும் பெற்ற விடத்திலே மலங்கள் கழன்ற முறைமையு மலங்கழன்ற விடத் திலே வரைவறுத்தலும்.................பதினேழு பிரகாரமாகக் கூறுகின்றாராதலால்.

முடிவு :

மும்மலத்தின் கட்கு முடிச்சு மவிழ்த்தவனை
நின்மல னென் றேநினைநெஞ் சில்

என்பது குறள் என்னுதலிற்றோவெனின் மும்மலத்தையு மகற்றப்பட்ட குருலிங்க சங்கமத்தைக் கண்டு வழிபடுமா றுணர்த்துதனுதலிற்று.

சகச நிட்டை முற்றும்.

Sahaja Nittai

Size: 21×33. Pages: 152. Lines: 28 on a page. Condition: good.

This is a work relating to Saiva Siddhanta and contains 17 couplets relating to Sahaja Nittai. There are copious quotations from Saiva Siddhanta works, Thevaram, Thiruvachagam, etc.

661. சகலாகமக் கட்டளை (நூல் எண் 195)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 237. நிலை : சிலமாக உள்ளது.

குறிப்பு: இது சைவசித்தாந்த நூல். காப்பு, அளவை முதற் சூத்திரம், பதிநிலைமை முதலாக 117 விஷயங்கள் இந்நூலில் உள்ளன. உரைநடையும் எடுத்துக்காட்டுச் செய்யுட்களும் விரவியுள்ளன. இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. இறுதியில் சகலாகம சாரக் கட்டளை முகவுரை யதிகாரம் என்ற பகுதி உள்ளது. ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ ஆறெழுத்தானந்த சுவாமிகள்.

தொடக்கம் :

உ
சகலாகமக் கட்டளை
பாயிரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துப் போற்று கின்றேனே.
....

இந்த நூல் பரமேசுரன் வடவானிழலிற்கீழ்த் தெட்சிணா மூர்த்தமா யெழுந்தருளியிருந்து நந்திகேசுர நயினார்க்கு...ஞானம் போதிக்கும் பொருட்டுச் சிவஞானம் அருளிச் செய்தது.

முடிவு :

முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழி நூலாகும்.

அறம்பொரு ளின்பம் வீடுநூற் பயனே
இந்நூற் செய்ததென் றறிக.

குருமுன்னிற்க. குருவே நமக.

Sakalagamak kattalai

Size: 21×33. Pages: 237. Lines: 30 on a page. Condition: injured.

Note : This is written by Arezhuthu Ananda Swamigal and relates to Saiva Siddhanta doctrines about 117 in number.

662. சதாசிவ மூர்த்திக் கட்டளை (நூல் எண் 206)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 8. நிலை : பழமை.

குறிப்பு: முத்திநிலை அளிக்கவல்ல சதாசிவ மூர்த்தியின் கட்டளையாகும். இது சித்தாந்த நூல். இந்நூல் வாதுளாகமத்தின் கருத்தாகும். இப்பிரதியில் திரிபதார்த்தக் கட்டளை (1-10 பக்), பஞ்சாக்கரமாலை(1-10 பக்), இதற்குமேல் (21-44 பக்) முதல் 20 பக்கங்களின்றி ஒரு நூல் அபூர்த்தியாகவுள்ளது.

தொடக்கம் :

சிவனென்றும், சதாசிவனென்றும், மகேசுரனென்றும் மூவகைப்படும். இவற்றுள் சிவன்நிட்களம், சதாசிவம் சகளா சகளம், மகேசுரன் சகளம் இவைகள் பகுப்பு. சிவம் ஒன்று, சதாசிவம் ஐந்து, மகேசுரம் இருபத்தைந்து ஆக முப்பத்தொரு பேதம்.

முடிவு :

இப்படி இந்த நிலையை யிடைவிடாமற் றெரிசனம் பண்ணி யிருக்கிறது ஞானபூசை. இதுதானே அந்தரியாகம். இதுவே பகுரியாகம் என்று கொண்டு பிரிவில்லாதது வானபடியினாலே ஞானபூசையென்று சொன்னது. அந்தரியாகமும் பகுரியாகமும் பிரித்துப் பூசிக்கிறது கிரியா பூசை. இப்படி இடைவிடாமல் இருதயத்திலே பூசிக்கிறவர்க்குச் சாயுச்சிய பதமுண்டு.

சதாசிவமூர்த்திக் கட்டளை முற்றும்.

வெண்பா

மாசி லுபசார மஞ்சனம் பூக்கந்த
நேசமிகு தூபமொளி நீரமுது—தூசடைக்கா
யாடி குடைகவரி யாலவட் டம்விசிறி
யாடலொடு வாச்யமீரெட் டாம்.

Sadasivamurthi Kattalai

Size: 21×33. Pages: 8. Lines: 30 on a page. Condition: old.

Note : This is a Siddhanta work following Vathulagamam. Author, not known.

663. சந்தானசாரியர் கலிவெண்பா (நூல் எண் 207)

அளவு: 21×17. வரிகள்: 15.
பக்கங்கள்: 6. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இந்நூல் சந்தானசாரியர்மீது பாடப்பெற்ற கலிவெண்பா. 13 கண்ணிகளுடன் குறையாகக் காணப்படுகின்றது. இதனுள் திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர்மீது மகாவித்துவான்மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய நோட்டு. தாண்டக வேந்தர்மீது கீர்த்தனை, வண்டுகடி மருந்து என்று ஒரு பாடல் ஆகியவை உள்ளன.

தொடக்கம்:

சைவசித்தாந்தத்துச் சந்தான சாரியர்கள்
தெய்வசித்தா னந்தலைமை சேர்ந்துள்ள—உய்வைச்செய்
போக்கும் வரவுமிலாப் பூரணனார் தம்மருளைத்
தேக்குந் திருநந்தி தேவரவர்—வாக்கியத்தார்
வத்தியலா யுஞ்சனற்கு மார ரவர்மொழிந்தார்
சத்திய ஞான தரிசனிகள்.

முடிவு:

பெண்ணு கடத்துப் பிறந்தருளும் பெம்மான்
றண்ணார் மறைஞான சம்பந்தர் நண்ணுமவர்
சீடர் திருத்தில்லைத் தெய்வ மறையோருட்
கூடினவர் கொற்றங் குடியுள்ளார்—நீடுபுகழ்
வள்ளல் உமாபதி சிவாசாரியரிவ...

Santanachariar

Size: 21×17. Pages 6. Lines: 15 on a page. Condition: good.

Note : This contains 13 kannis in Kali Venba on Santanacharias.

664. சமரஸ சங்கிரக சிந்தனை (நூல் எண் 209)

அளவு: 21×33. வரிகள்: 27.
பக்கங்கள்: 26. நிலை: பழமை.

குறிப்பு: சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரக் கருத்தையும் உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசத்தோடு சமரசமாதற் பொருட்டுப் பன்னிரண்டு வினாவாக வினவியதனோடு சரிக்கட்டிக் கொண்டு சிவப்பிரகாச வினாவெண்பாவென் றியற்றப்பெற்ற நூலே இது. உரையுடன் கூடியது. இப்பிரதியில் 7ஆம்

அதிகரணம் வரை எழுதப்பெற்று அதன்மேலுள்ள பகுதி சுமார் இரண்டு பக்கங்களில் குறையாக எழுதப்பெற்றுளது. அபூர்த்தி.

தொடக்கம் :

சிவமயம்

சமரச சங்கிரகஞ் சிந்தனை

திருவார் சிவஞான போதவினு வெண்பா
இருநூற் கருத்துமொன்று யியப்—பொருள்விளக்கு
மியானேதா னுய தகற்றி யறிவளித்துத்
தானேயா னுகவைத்த தாள்.

முடிவு : வேருகு மிவ்வாறு கூறுதற்குப் பிரமாண மென்னை யெனின், அவ்வேறும்போ துபோலது காலமான து ஆதித்தனேடு கூடி நாழிகை, மாசம், நாள், வருடமென்று பெயர்பெற்று மந்த ஞாயிருகாதமுறைமை போல் என்றவாறு. அந்தக்கரணத்துக்கு யார் முதன்மையாக நின்றறியி லெப்போது மறியாமற் சிலகாற் கூடியறிந்துஞ் சில காலஂதிலாமை யிருப்பதென்னில்...

Samarasa Sangraha Chinthamani

Size: 21×33. Pages: 26. Lines: 27 on a page. Condition: old.

Note: The Ms. contains 12 questions about Sivagnana Bodham by Umapathy.

665. சாதி நூல்-மூன்றும் காண்டம் (நூல் எண் 212)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 21. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : இந்நூல் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய சிவாகமங்கள் இருபத்தெட்டுள் ஒன்றுகும். வைகாசம், சூத சங்கிதை முதலிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு சாதிநூல் என்னும் பெயரால் ஞானப்பிரகாசரால் அருளிச் செய்யப் பெற்றது. அச்சானது. இப்பிரதியில் எழுத்துக்கள் முன் பக்கம், பின்பக்கம் கலந்திருப்பதால் இது படிக்க இயலாத நிலையில் உள்ளது. இறுதியில் அத்தியாய வட்டவணை எழுதப்பெற்று மொத்தப் பாடல் 104 என்ற குறிப்பும் உள்ளது.

Jathinool - Moonram Kandam

Size: 21×33. Pages: 21. Lines: 26 on a page. Condition: injured.

Note : This has been prepared by Gnanaprakasar based on Vaikasam and Suta Samhitai and deals with Sivagamas.

666. சாதி பேதம் (நூல் எண் 213)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 68. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 212 - எண்ணின் படியே. இப்பிரதியில் நூல் முற்றும் எழுதப்பெற்றுளது. 104 செய்யுட்கள் உள்ளன. இதனுடன் 213a - திருவாரூர் மும்மணிக் கோவையுரை, 213b - இரத்தினகர விலாசம், 213c - சிராமலைக் கட்டளைத் தருமபுரம் மவுனச் சிதம்பரநாத சுவாமிகள்பேரில் இரட்டை மணிமாலை என்ற நூல்கள் உள்ளன. 1875இல் அச்சானது.

தொடக்கம் :

சாதி பேதம்
காப்பு

ஆதிபே தத்தா லயனிடத்தி லுண்டான
சாதிபே தங்களெல்லாம் சாற்றவே—நீதித்
திடவா ரணங்க டினம்பரவு முக்கட்
கடவா ரணமுகனே காப்பு.

முடிவு:

வேதிய ராதி யாக விரிந்திடு மெண்பத் தொன்றுஞ்
சாதியு நூற்று நான்கு தமிழினுற் புனைந்து சாத்தி
நீதியுந் திக்கை பூண்போர் நிலைமையுந் தொகுத்தான் மேத
ஞதியங் கமலை வாழு ஞானப்ர காசன் றனே.

Jathibhedam

Size: 21×33. Pages: 68. Lines: 30 on a page. Condition: good.

Note : Same as the previous one; but 104 verses fully copied.

667. சிவஞான சித்தியார் (பரபக்கம் உரை) (நூல் எண் 237)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 536. நிலை : பழமை.

குறிப்பு : இது சிந்தாந்த சாத்திரங்கள் 14இல் ஒன்று. மெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதத்தை நன்கு தடை விடைகளால் விரித்துரைப்பது சிவஞான சித்தியாராகும். இதன் ஆசிரியர் அருணந்தி தேவர். இது பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டது.

இப்பிரதியில் பரபக்கம், சுபக்கம் உரையுடன் உள்ளன. பரபக்க உரை ஒற்றியூர்த் தத்துவப்பிரகாசர் இயற்றியது. சுபக்க உரை அச்சுப் பிரதியில் உள்ள உரைகளினின்றும் வேறுபட்டிருக்கின்றது. முதல் பக்கத்தில் சிவஞான சித்தியார் பரபக்கவுரை வரகனேரி சவரிமுத்தா பிள்ளை எனக் குறிப்பிடப் பெற்றுளது.

தொடக்கம் :

உ
திருச்சிற்றம்பலம்
சிவஞான சித்தியார் முதலாவது பரபட்சவுரை
பாயிரம்

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
நால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

முடிவு :

திருத்துறையூர்ச் சைவன் றிருந்து மறையும்
விரித்துரைக்கும் வேதியன் மெய்கண்டான்—கருத்தி
னருணந்தி தேவ னருண்மொழியை யாய்ந்தே
யிருணந்தம் பாற்கண்டி லேம். (2)

சிவஞான சித்தியார் உரை முற்றுப்பெற்றது.

Sivagnana Siddhiyar

Size: 21×33. Pages: 536. Lines: 20 on a page: Condition: old.

Note : This is one of the 14 Saiva Siddhanta Sastras by Arulnandi Devar. The Ms. contains parapakkam and supakkam with notes. Ottriyur Tatvaprakasar is the author of the notes on Parapakkam.

668. **சிவஞான தீபம்** (நூல் எண் 725)

அளவு: 22 × 28. வரிகள்: 15.
பக்கங்கள்: 56. நிலை: பழமை.

குறிப்பு : சிவஞானத்தைத் தீபமாக விளக்கும் நூல். ஆசிரியர் இரேவண சித்தர். பாயிரமுள்பட 174 செய்யுட்கள்

கொண்டது. இது பழமையாகவும் எழுத்துக்கள் சிதைந்தும் இருப்பதால் பிரதி செய்ய இயலாத நிலையில் உள்ளது. அச்சானது.

Sivagnana Deepam

Size: 22×28. Pages: 56. Lines: 25 on a page. Condition: old.

Note: The Ms. contains 174 verses composed by Revana Siddhar. Printed

669. சிவஞான பாடியம் (நூல் எண் 238)

அளவு: 21 × 33. *வரிகள்*: 35.
பக்கங்கள்: 377. *நிலை*: இலமாக உள்ளது.

குறிப்பு: *இது ஸ்ரீ மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்திற்குத் துறைசை மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்த விளக்கமாகிய மாபாடியம். இந்நூல் உரைநடையால் அமைந்தது. பூர்த்தி. அச்சானது.*

தொடக்கம்:

உ
திருச்சிற்றம்பலம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நூல்

சைவாகமங்களின் உளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத் தோதிய பொருளை ஆராயும் ஆராய்ச்சி இந்நூலின் கண் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சிக்குப் பயன் யாதோவெனவும், கேட்டற்குரியார் யாவரெனவும், இதனால் நுதலப்படும் பொருள் யாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியாய் இதற்குமுன் ஒருதலையான் உணர்தற்பாலது யாதெனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயர் யாதெனவும், இஃது யாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூல் யாதெனவும் இந்நூல் செய்தார் யாவரெனவுங் கேட்போர்க்குப் பலவாற்றான் ஆசங்கை நிகழுமன்றே. அவர்க்கு அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட்டு இந்நூன்முகத் துரைக்கப்படுவதாகிய சிறப்புப் பாயிரம்.

முடிவு :

எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் குரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்.

Sivagnana Padiyam

Size: 21×33. Pages: 377. Lines: 35 on a page. Condition: injured.

Note : This is in prose and is a commentary by Madhava Sivagnana Yogi for Sivagnana Bodham of Meikandar. Printed.

670. சிவப்பிரகாச விகாசம் (நூல் எண் 133)

அளவு: 21×33. *வரிகள்:* 37.
பக்கங்கள்: 48. *நிலை:* நல்ல நிலை.

குறிப்பு : சைவ சித்தாந்தக் கருத்தினை விளக்கித் துறை மங்கலம் சிவப்பிரகாசர் அருளிய நூல். இப்பிரதியில் 268 செய்யுட்கள் உள்ளன. பதிமரபு 59 செய்யுட்களில் இடையே 20ஆம் செய்யுள் இல்லை. பசுமரபில் 78 செய்யுட்களும், பாச மரபில் 133-செய்யுட்களும் (இடையே 85ஆம் செய்யுள் இல்லை) உள்ளன. இறுதியில் 'ஆகப் பாடல்' 435 என்று காணப் படுகிறது. அச்சிட்ட பிரதியில் பதிமரபில் 32ஆம் செய்யுள்முதல் 50ஆம் செய்யுள்வரை 19 செய்யுட்கள் இல்லை. இப்பிரதியில் அச் செய்யுட்கள் உள்ளன. சில செய்யுட்கள் இடையிடையே சிதைந்துள்ளன.

தொடக்கம் :

உ
சிவமயம்
சிவப்பிரகாச விகாசம்

எடாக் கரத்தி லெழிலங்குச மாகப்
படாக் கருத்தறப் பாகரைத் தாள்களாற்
றடாக் கழற்றித் தனையிடு மற்புதக்
கடாக் களிற்றைக் கருத்துள் வைப்பாம்.
பொன்புரை கடுக்கைமேனி புகன்றவா மக்கு ளத்தை
தன்பெயர் விகாசநாம சருக்கரை யாய்ச்ச மைத்தான்
குன்றவிற் குழகன் வாழுங் கூவநற் சரிதந் தன்னைத்
தென்றமிழ்க் கவிபு னைந்த சிவப்பிர காசன் றூனே.

முடிவு :

ஊகமொரு நான்கெலையாமஃ தெட்டாயின்
றொருமாறுங்குலமஃ தோரிருபத்தேழே,
வாகுமொரு தனுக்காக மென்னுநாமவத்தமது
நான்குதனு......

ஆகப் பாடல் 435

Sivagnana Vikasam

Size: 21×33. Pages: 49. Lines: 37 on a page. Condition: good.

Note : This contains 268 verses with some verses missing. Author: Thuraimangalam Sivaprakasar. Printed.

671. சிவப்பிரகாச விகாசம் (நூல் எண் 240)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 60. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : நூல் எண் 133ஐப் போன்றது இப்பிரதி.

Sivaprakasa Vikasam

Size: 21×33. Pages: 60. Lines: 30 on a page. Condition; injured.

Note : Same as the previous one.

672. சுவானுபூதி விளக்கம் (நூல் எண் 245)

அளவு : 21×33. வரிகள் : 26.
பக்கங்கள் : 6. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு : சீகாழிச் சிற்றம்பல நாடிகள் என்பவர் இயற்றியது. இப்பிரதியில் 54 கண்ணிகள் உள்ளன. 1954ஆம் ஆண்டில் துறைசை ஆதீனம் வெளியிட்டுள்ள சீகாழிச் சிற்றம்பல நாடிகள் கலித்துறை முதலியன என்ற நூலுள் அச்சாகியுள்ளது. ஞான அம்மானை, பஞ்சாக்கரக் குறள், கழிகாலத்திரங்கல், மாயப் பிரலாபம், நெஞ்சொடு மகிழ்தல், முத்திரை இலக்கணம் ஆகியவை உள்ளன. சில தனிப் பாடல்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
கணபதி துணை
சிவானுபூதி விளக்கம்

தேனிவரும் இன்பச் சிவானு பவமுரைக்க
ஆனை முகத்தான் அடிபணிந்து போற்றுவாம்.

நூல்

சீராருங் கங்கைநகர்த் தேசிகர்கோன் மெய்கண்டான்
வாராதே வந்துரைத்த வார்த்தைவளங் கூறுவாம்.

முடிவு :

வாழி திருநீறு வாழி திருவஞ்செழுத்து
வாழி சிவாலயங்கள் வாழி திரு வேடமுமே.

சிவானுபூதி விளக்கம் முற்றும்.

குருவே நம. திருச்சிற்றம்பலம்.

Sivanubhuti Vilakkam

Size: 21×33. Pages: 6. Lines: 26 on a page. Condition: injured.

Note : The Ms. contains 64 kannis of Sivanubhuti Vilakkam written by Sirkali Chitrambala Nadigal. Published by Tiruvavaduthurai Mutt.

673. சிற்றம்பல நாடிகள் வெண்பா (நூல் எண் 246)

அளவு : 21×33. *வரிகள் :* 23.
பக்கங்கள் : 3. *நிலை :* பழமை.

குறிப்பு : சீகாழிச் சிற்றம்பல நாடிகள்மீது அவர் மாணவரொருவர் பாடிய நூலாகும். இப்பிரதியில் தனிக் காகிதத் துண்டில் 7 பாக்கள் உள்ளன. அச்சானது. அச்சுப் பிரதிகளில் 65 வெண்பாக்கள் உள்ளன.

தொடக்கம் :

கரையிறந்த பேரறிவு கண்டதுவு நீங்கி
யுரையிறந்த வானந்த முண்டு—இறையிறந்த
வாருதிபோல் நில்லென்று வைத்தான்சிற் றம்பலவ
ஞருதவு வாரிவன்போ லாங்கு.

முடிவு :

இலக்கணச் சுப்பிர முனிவர் பாடியது

கடும்பிறவிப் பெருங்கடல்வீழ்ந் தின்றளவு
மொருசார்பு காணு தேங்கிக்
கிடந்திளைத்த வருத்தமெல்லாந் தீர்ந்திடநின்
சரணடைந்தேன் கெதிவே றில்லேன்

மடங்கரிய பெருங்கருணைத் திருநோக்கா
  லுண்மைநெறி வழங்கி யாள்வாய்
தடம்பழனத் துறைசையுளம் பலவாண தேசிகனே
  சாந்த வாழ்வே.

Chitrambala Nadigal Venba

Size: 21×33. Pages: 3. Lines: 23 on a page. Condition: old.

Note : This contains seven verses composed by one of the disciples of Sirkali Chitrambala Nadigal. Printed.

674. **சுகாதீத விளக்கம்** (நூல் எண் 2)

அளவு : 21×33. வரிகள் : 20.
பக்கங்கள் : 9. நிலை : நல்ல நிலை.

குறிப்பு: இது தத்துவங்களின் விளக்கத்தைச் சொல்லும் நூல். 42 அறுசீர்க் கழிநெடில் ஆசிரியத்தால் அமைந்தது.

தொடக்கம் :

பலபல கேள்வி யாலே பரசம யங்க டோறும்
நிலையிது வாமென் றெண்ணி நெஞ்சகந் தளரா வண்ணம்
நலமுறு பிறவி தீர்க்கு ஞானநா யகனைத் தேடிக்
குலமுறை பராவி யேத்துங் குருவினை வணக்கம் செய்வாம்.

முடிவு :

பார்முதல் விண்ணும் விந்து நாதமும் பரையு மொன்றாய்ச்
சேர்வுறு தலத்தி னின்று தெரிசிக்கிற் சித்த ருகும்
நீரனல் வாயு வான நின்றுறு சத்த மாகச்
சார்வுறு வித்தை யன்றித் தற்சிவந் தெளிய லாமோ.

சுகாதீத விளக்கம் முற்றும்.

Sukhathita Vilakkam

Size: 21×33. Pages: 9. Lines: 20 on a page. Condition: good.

675. **சுத்த சிவப்பிரகாசக் கட்டளை** (நூல் எண் 252)

அளவு : 21×17. வரிகள் : 25.
பக்கங்கள் : 29. நிலை : இலமாக உள்ளது.

குறிப்பு: இந்நூல் சைவசித்தாந்தக் கருவி நூல். இது ஆன்ம தத்துவம் முதலிய பலதிறப்பட்ட தத்துவங்களை வரையறுத்துக்

கூறுகிறது. இப்பிரதி இலமாகிப் பக்கங்கள் மாறியும் சிதைந்தும் உள்ளது. தொடக்கம் முடிவு எழுத இயலாமல் உள்ளது.

Suddha Sivaprakasa Kattalai

Size: 21×17. Pages: 29. Lines 25 on a page. Condition: injured.

Note: The Ms. contains Suddha Siva akasa Kattalai and describes various philosophical doctrines ke Atma Tattvam, etc.

676. சைனப் பதிகங்கள் நூல் எண் 265)

அளவு: 21×33. வரிகள்: 26.
பக்கங்கள்: 90. நிலை: இலமாக உள்ளது.

குறிப்பு: ஜைன சமயத் துதிப் பாக்களாக இப்பிரதியில் 28 பதிகங்கள் (279செய்யுட்கள்) உள்ளன. இறுதியில் பதிக அட்டவணை உள்ளது. ஆசிரியர் பெயர் விவரங்கள் தெரியவில்லை.

தொடக்கம் :

உ
கடவுள் துணை
முன்மாலைப் பத்து

விம்மாந்து வெந்நகரத் துள்விழும் போதஞ்சி
அம்மாவோ வென்றழுதா லாரொருவர் நோக்குவார்
எம்மான்றன் னிரடியு மல்லா விலேன் கண்டாய்
செம்மா மலர்ப்பிண்டித் தேவர் பெருமானே.

முடிவு :

வண்டா டசோகந் தழைத்தாய் நமஸ்தே
வரமன்றுங் கொண்ட வரதா நமஸ்தே
கண்டா னகலாத கண்ணுய் நமஸ்தே
கமலா சனத்தின் கருத்தே நமஸ்தே
உண்டாயு மிலையாயு முண்டில்லையாயு முணர்வாலும்
உணர்வின் பயனென்று மறியா
சிந்தா குலந்தீர வந்தாய் நமஸ்தே
திருத்திசை நாதா நமஸ்தே நமஸ்தே (10)

நமஸ்காரப் பத்து முற்றும்.
ஆக. செய்யுள்—279.

Jaina Pathigangal

Size: 21×33. Pages: 90. Lines: 26 on a page. Condition: old.

Note: The Ms. contains 28 pathigams (279 verses) of Jain stotras (prayer songs). Author: not known.

677. ஞானசாதகப் பனுவல் (நூல் எண் 32a)

அளவு : 21×17. வரிகள் : 26.
பக்கங்கள் : 12. நிலை : இலமாகவுள்ளது.

குறிப்பு : இந்நூல் ஞானசாதகம்பற்றி எடுத்துக்காட்டுக்களுடன் உரைநடையில் அமைந்துளது. ஆசிரியர் துறைசைச் சிவஞானயோகி என்பது இறுதியில் உள்ள பாடலால் அறிய வருகின்றது.

தொடக்கம் :

உ
ஞானசாதகப் பனுவல்

சீர்திகழ் செல்வத் திருவா வடுதுறை
பேர்பெற மன்னிய வின்பபூ ரணனை
சேதன நமச்சி வாயதே சிகனை
யேதினம் பரசுது மினிதுறற் பொருட்டே.

முன்னவர் மொழியத் தன்னையே யுதவி
இன்னவா றுருசொற் சொன்னவா சகனை
பரமசற் குருவாய் வருதிருச் சிற்றம்
பலவதே சிகனைப் பரசுதுந் தினமே.

முடிவு :

சிற்றுரையும் பேருரையும் சிவஞானபோதமெனும்
தெய்வ நூற்குக்
கற்றவர்கள் களிகூரக் கருணையினால் செய்தளித்தான்
கலைகள் தேர்ந்து
முற்றுணர்வு முதலியவற்றாற் சிவனே யென்றறிஞர்கள்
மொழிந்து போற்ற
நற்றுறைசைப் பதிமருவுஞ் சிவஞானயோகியெனு
நாமத்தோனே.

Gnana Sadhakap Panuval

Size: 21×17. Pages: 12. Lines: 26 on a page. Condition: injured.

Note : The author of this Ms. appears to be Sivagnana Yogi of Tiruvavaduthurai who has written in prose suitable quotations, and deals with the means of attaining salvation.

678. தத்துவ ரத்ஞகரம் (நூல் எண் 271)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 170. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பதி, பசு, பாச இலக்கணங்களைக் கூறுவது. இந்நூலில் 1043 செய்யுட்கள் உள்ளன. பிற விவரங்கள் அறியக் கூடவில்லை. இது நூல்நிலையச் சுவடி 46இன் பிரதி; அச்சானது.

உ

தொடக்கம் :

சிவமயம்
தத்துவரத்நாகரம்
கடவுள் வாழ்த்து

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

முடிவு :

ஒழிவில்லவே தாந்தந் தன்னால் உற்றசித் தாந்தந் தன்னு
லழிவிலாச் சித்தி முத்தி யானது கூட லாலே
யிழிவிலா விந்த நன்னூல் சுத்தசை வத்தி லேய்ந்த
வழியினோர் சித்தி முத்தி மறைமுறை வகுத்த தொன்றே.

தத்துவரத்நாகரம் எழுதி முடிவுற்றது.

விகாரி ஞ ஆடி மீ 12 (17-7-1959) வெள்ளிக்கிழமை துவாதசி அமிர்தயோகம்.

எழுதியது: வெண்ணெய்நல்லூர் திருவடிவேல் முதலியார், தமிழ்ப் பண்டிதர்.

Tattva Ratnakaram

Size: 21×33. Pages: 170. Lines: 32 on a page. Condition: good.

Note : This is a copy of the cadjan leaf Ms. No. 46 in the Library and contains 1043 verses and deals with pati, pasu, pasam etc. of Saiva Siddhanta. Printed.

679. தத்துவ ரத்நாகரம் (நூல் எண் 272)

அளவு ; 21×17. வரிகள் : 14.
பக்கங்கள் : 40. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : 271ஆம் எண்ணுள்ள பிரதியைப் போன்றது. இப்பிரதியில் 66 செய்யுட்களே உள்ளன. இதன் பின்னர் 272a பழைய இலக்கியங்களில் வரும் பெயரும் மேற்கோள்களும் உள்ளன.

Tattva Ratnakaram

Size: 21×17. Pages: 40. Lines: 14. on a page. Condition: good.

Note : Same as the previous one; contains only 66 verses.

680. தத்துவராயர் பெருந்திரட்டு (நூல் எண் 273)

அளவு : 21×33. வரிகள் 35.
பக்கங்கள் : 597. நிலை : கிலமாக உள்ளது.

குறிப்பு : சொரூபானந்த தத்துவராயர் என்பவர், ஞான சாத்திரங்கள் பலவற்றினின்றும் தொகுத்த நூல் இது. இந்நூல் 28 பணைகளாகவும், 280 அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2800 செய்யுட்கள் உள்ளன. இறுதியில் பணை அட்டவணை காணப்படுகின்றது. இந்நூல் 1912இல் அச்சிடப்பெற்றுள்ளது.

உ

தொடக்கம் :

கணபதி துணை
தத்துவராயரையன் சொன்ன பெருந்திரட்டு

தந்தை தாயுமெய்த் தகவுடை யுறவுஞ்
சாலு(ங்) கல்வியும் தகுமுயிர்த் துணையுஞ்
சிந்தை யாருநற் சீலமும் வலியுந் திருவு மின்பமுஞ்
சிதைவிலா வறிவு
முந்தை யாமுளத் துவகையு முயிரு மூல முந்தியு
மொழிவருஞ் சமைவு
மெந்தை யாகவந் தேழையே னையுமா ளிறைவனூர்கழ
லாகுமென் றனக்கே. (1)

முடிவு :

கல்லா நெஞ்சைக் கனிசெய்து செம்பொற் கழல்சூட்டி
நல்லா ரெல்லா மேமுற நாயேற் கருள்செய்து
சொல்லா நெஞ்சற் றொடர்வறு சற்கிற் சுகவெள்ள
மெல்லா ரும்பெற் றின்புற வேண்டு மிறையானே. (9)

மங்கலவர முற்றும்.
ஆகப் பணை 28க்கு அதிகாரம் 280க்குப் பாட்டு 2800.

தத்துவராயரையன் திருவுளம் பற்றின பெருந்திரட்டு முற்றும்.
அறிவானந்த குருவுகளுடைய பாதாரவிந்தந் துணை.

குரோதன வருஷங் கார்த்திகை மீ 23 உ இருகூரிலிருக்கும் சண்முகம் பிள்ளை மகள் அமராபதி எழுதின பெருந்திரட்டு.
தேவி சகாயம். சிவமயம். மாணிக்கவாசகர் துணை.

திருச்சிற்றம்பலம்.

பராபவ வருஷம் புரட்டாதி மீ 9 உ செவ்வாய்க்கிழமை யன்று தத்துவராயரையன் திருவுளம் பற்றின பெருந்திரட்டு. கும்பகோணம் அ. கிருஷ்ணசாமி நாயக்கனால் எழுதி நிறைவேறினது.

Tattuvarayar Perunthirattu

Size: 21×33. Pages: 597. Lines: 35 on a page. Condition: injured.

Note : This contains 2800 verses, and 280 chapters 28 divisions collected by Swarupananda Tattuvarayar from various philosophical works; printed in 1912.

681. தருக்க சங்கிரகம் (நூல் எண் 279)

அளவு : 21×33. வரிகள் : 40.
பக்கங்கள் : 101. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : தருக்கசங்கிரகம், பதார்த்தங்களை ஏழு வகைப் படுத்தி அவற்றில் ஒவ்வொன்றையும்பற்றி வாதித்து விளக்கும் நூல். இந்நூல் தருக்க சங்கிரக தீபிகை என்னும் விருத்தி உரையுடன் உள்ளது. இந்நூலாசிரியர் அருணசல முனிவர் என்று இறுதிப் பாடலால் தெரிகின்றது. அச்சானது.

தொடக்கம் :

உலகிறையை நெஞ்சு ளிருத்தியுய ராசான்
மலரடியை வந்தித்து வாழ்த்திச்—சொலுவாமா
னன்கிளையா போதமுற நற்றருக்க சங்கிரக
மென்னுமொரு நூற்றமிழா லிங்கு.

முடிவு :

தானே மோட்ச சாதனமாகலின் றதனுற் பதார்த்த ஞானத்தின் வீடு மேலாய்ப் பயனென் யாவு மழகியன. இங்ஙனம் தருக்க சங்கிரக விருத்தியாகிய தருக்கதீபிகை முற்றும்.

திருச்சிற்றம்பலம்

நையாயிக வைசேடிக மதநூனெறி ஞாலத்
தெய்யாது தமிழ்ப்பாலர்கள் ளெளிதின்பொடு முணர
வுய்யாவகை நூலும்மத னுரையும்முறை செய்தான்
ஐயாறடை யாமானத னருணுசல முனியே.

சிவமயம்
ஆகப் பாடல் கூ0ரு

Tarukka Sangraham

Size: 21×33. Pages: 101. Lines: 40 on a page. Condition: good.

Note : This is a philosophical work. Author: Arunachala Munivar. Printed.

682. தியாகவினோத வெண்பா (நூல் எண் 298)

அளவு : 21×17. வரிகள் : 10.
பக்கங்கள் : 16. நிலை : நிலமாக உள்ளது.

குறிப்பு : இது உபதேசக் கிரமங்களை விளக்குவதான 30 வெண்பாக்கள் கொண்டது. ஒவ்வொரு வெண்பாவிலும் தியாக வினோதா என வருதலால் இந்நூல் தியாகவினோத வெண்பா ஆயிற்று.

தொடக்கம் :

முத்திக் களிற்றுனை முக்கணுன் றென்னுரூர்ப்
பத்திக் களித்தானைப் பாடவருள்—சித்திக்க
நற்றுணை சிங் காசனத்தி யாகவினோ தாவருளைப்
பெற்றுருகிப் பேறுபெற லாம்.

முடிவு :

மாயாப் பதார்த்தருசி மாறத் திரோதைபோம்
ஓயும் கருமவொப்பே மாமாயை—மாயுமே
முன்னிலைபோங் கன்மவுரு வோடுமலம் போங்கமலை
தன்னுற் றியாகவினோ தா.

பஞ்ச மலசுத்தி பணியுறுதல் நேயத்தழுந்தல்
திருகுருவே நம :

Thyaga Vinoda Venba

Size: 21×17. Pages: 16. Lines: 10 on a page. Condition: injured.

Note : This contains 30 venbas each carrying the keyword **Thyaga Vinoda**, and relates to upadesakramam (imparting of instructions).

683. திரிபதார்த்தக் கட்டளை (நூல் எண் 206)

அளவு : 21×33. வரிகள் : 32.
பக்கங்கள் : 10. நிலை : பழமை.

குறிப்பு : பொறி புலன் பகுத்தறியும் திரிபதார்த்தக் கட்டளை என்னும் இந்நூல் உபஸ்தவிரிவு, ஏழுபாதி விரிவு, பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாச தத்துவத்தின் விரிவு என்ற பிரிவுகளைக் கொண்டது. இதனுள் சதாசிவக் கட்டளை, வாதுளாகமக் கட்டளை ஆகிய நூல்களும் உள்ளன.

உ
சிவமயம்
(பொறிபுலன் பகுத்தறியும்) திரிபதார்த்தக் கட்டளை

உபஸ்த விரிவு

தொடக்கம் :

உபஸ்தம் ஆனந்தத்தைச் செய்யுமென்றால், யௌவனமுடைய முறை தவறிய நாரிகள் அணுக விருந்தும், லீலா விநோத வஸ்திரபூஷண களப சுகந்தங்களை அணிந்து தனது சயனத்து இவள் ஆகுலமுற்று ஊனும் உறக்கமுமின்றி இருந்துழிக் காம நூலிற் கூறிய கொக்கோக லீலா விநோதஞ் செய்யும் யௌவனமுடைய மங்கை மடந்தையர்கள் ஆடவர்களை வலிதில் வற்புறுத்தியிழுக்கினும் அவர்கள் ஆனந்தத்தைச் செய்யாதது யாது?

முடிவு :

இந்த முறைகளெல்லாமுடைய ஆகாய தத்துவம் ஒன்று உண்டெனக் கருதுதல் ரூபகம் உண்டெனக் கருதின் தத்துவத்தை உடன்படக் காண்கை தரிசனம். கண்ட தத்துவத்தைக் கழன்று நிற்றல் சுத்தி - ஆகப் பஞ்சபூதம் தரிசனைப்படுதல் முற்றும்.

ஆகாயத்திற்குச் சத்த குணம் ஒன்றே. இந்தச் சத்தம் அன்ன ரூபமன்று, எதிரொலி வடிவாயிருக்கும்.

பொறிபுலன் பகுத்தறியும் திரிபதார்த்தக் கட்டளை முற்றிற்று.

Tripadartha Kattalai

Size: 21×33. Pages: 10. Lines: 32 on a page. Condition: old.

Note : This is a work dealing with the five senses of human beings and five bhutas.

684. திருமந்திரத் தெரிவு - பாட்டுக்கள் (தத்துவ ரத்நாகரம்) (நூல் எண் 384)

அளவு : 21×33. வரிகள் : 28.
பக்கங்கள் : 117. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருமூல நாயனார் இயற்றிய 10ஆம் திருமுறையாகிய திருமந்திரத்திலிருந்து திரட்டி எடுத்த பாக்கள் இந்நூலில் உள்ளன. இது தத்துவரத்நாகரம் என்றும் குறிக்கப் பெற்றுளது. இதில் 879 பாக்கள் உள்ளன. அச்சாகவில்லை.

தொடக்கம் :

உ
திருமந்திரத் தெரிவுப் பாட்டுக்கள்
திருமந்திரங்களிற் றிரட்டி யெடுத்த தெரிவுப்
பாட்டுக்கள். தத்துவரத்நாகரம்
திருமந்திரத் தெரிவு
கடவுள் வாழ்த்து

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

முடிவு :

விரவியமும் மலர் வருக்கோள் நமச்சி வாயம்
    விளங்குநம சிவாயசிவன் விளப்ப லாகுந்
திருமருவுஞ் சிவாயநம ஓம்ஆ ம(வ்)வுஞ்
    சிவாயநம வெனவிரண்டு மலத்தோர் செப்பும். (878)

ஒருமலவர் சிவாயவா சிவாய வென்று
    உரைப்பரஃது பகருபவர்க் கிவ்வாறு
பரவியமும் மலமகற்றுங் குருபோ தகர்க்குப்
    பரிந்துசிவ வெனவருளப் பகர லாமே. (879)

முற்றும்

காபி செய்தவர் மு. நாராயணசாமி 23-11-63

Tirumantira Therivu Pattugal

Size: 21×33. Pages: 117. Lines: 28 on a page. Condition: good.

Note : This is a selection from Tirumantiram of Tirumular containing 879 verses. The title mentions this work as Tattva Ratnakaram.

685. திருமந்திர மாலையும் குறிப்புரையும்

(நூல் எண் 385)

அளவு : 21×33. வரிகள் : 35.
பக்கங்கள் : 288. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரப் பாடல்களை அந்தாதியாகத் தொகுத்து அமைக்கப்பெற்ற நூல் இது. இப்பிரதியில் நூறு பாடல்களுக்கு ஓர் அந்தாதியாக முதற்றிருவந்தாதி தொடங்கிப் பதினாறாந் திருவந்தாதி வரை 1600 பாடல்களும் 17ஆம் திருவந்தாதியில் 55 பாடல்கள் வரையும் உள்ளன. இதில் பல பாடல்கள் திருமந்திரம் அச்சுப் பிரதிகளில் காணப்பெறவில்லை. சில பாடல்கள் இடையே சிதைவுற்றும் உள்ளன. இம்மாலையைத் தொகுத்த விவரமும் அச்சான விவரமும் தெரியவில்லை.

தொடக்கம் :

உ

கணபதி துணை

திருமந்திர மாலை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருமந்திர மாலை
முதற்றிருவந்தாதி

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னரு
ணின்றனன் மூன்றினு நான்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரிந்தன னேழும்பர்ச்
சென்றவன் றானிருந் தானுணர்ந் தெட்டே.

முடிவு:

வந்த மடமெழு மன்னுசன் மார்க்கத்து
முந்தி யுதிக்கின்ற மூலன்......முறை
தந்திர மொன்பது சார்வுமூ வாயிரஞ்
சுந்தர வாகமம் சொன்ன மொழிதானே.

தந்திரம் நவாகமம். அதனதிகாரமும் இதனிற் கூறப்பட்ட மூவாயிரமெனக் கொள்க. அவை யாகமப் பொருளா மென்றவாறு. (இதன் பிறகு உரை சிதைந்துள்ளது. வடமொழியுந் தமிழும் கலந்து சில வரிகள் உள்ளன.)

Tirumantiramalai (Notes)

Size: 21×33. Pages: 288. Lines: 35 on a page. Condition: good.

Note : This contains exhaustive notes for some verses of Tirumantiram. Incomplete. No information about the commentator.

686. திருமந்திர வுரை (நூல் எண் 386)

அளவு: 21×33. வரிகள்: 36.
பக்கங்கள்: 290. நிலை: பழமை.

குறிப்பு: திருமந்திரத்தின் சில பாடல்களுக்குரிய விரிவுரை இப்பிரதியில் உள்ளது. உரை ஆசிரியர், பிற விவரங்கள் அறியக் கூடவில்லை. இப்பிரதி அபூர்த்தியாக வுள்ளது.

தொடக்கம் :

உ
சிவமயம்
அண்டதெரிசனம், நாதாந்த தெரிசனம், எட்டெழுத்தாவது:
ஓம் ஹர ஔம் ஸ்ரீவாய நம

உ

பராபரமாம் பரமசிவஞ் சத்தி போற்றி
பரவரிய நாதவிந்து குடிலம் போற்றி
நிராதாரமாஞ் சதாசிவமா மயேசன் போற்றி
நிலையான ருத்திரன்மா லயனும் போற்றி
புராதரமாம் அருட்பாத மூலம் போற்றி
புகழ்பெரிய வாதாரஞ் சத்தி போற்றி
பராபரமாஞ் சிற்பரமும் போற்றி போற்றி
பரமகுரு பரநாதாந் தம்போற்றி போற்றி.

முடிவு :

நிற்கின்ற வாறே நிலைபெறு ளானடி
கற்கின்ற வாலே கழிந்தன பாவங்கள்
சொற்குன்ற லின்றித் தொழுமின் தொழுதபின்
மற்குன்றிலாத மணிவிளக் காமே.

(எ-து) வேதத்தி னிலைபாடு குன்றாத பரமகுருவின் ஸ்ரீ பாதத்தை என்றபடி. கற்கின்றவாறே கழிந்தன பாவங்கள் என்றது இவனுடைய ஸ்ரீபாதத்தைத் தோத்திரம் பண்ணக் கற்றவன்பிறலே என்றுயர் நீங்கிற் றென்றபடி. சொற்குன்ற லின்றித் தொழுமின்—ஆவலநங் கற்பித்து மிதிலே யிருத்தியும் அருக்கியங் கொடுத்தும் ஸ்ரீபாதம் விளக்கியுமிந்தச் சலத்தைப் பிரிதிபத்தி பண்ணியுந் திருமஞ்சனம் பண்ணுவித்தும் பரிவட்டம், யஞ்ஞோபவீதம், ஆபரணம், திருமேல்பூச்சு, திருமாலை இவை சாத்தியும் தூபதீபங் கொடுத்தும் அமுது செய்வித்தும் பிரதக்ஷிணம் பண்ணியும் நமஸ்கரித்தும் ஆக இவ்வகைப்பட்ட சோடசோபசாரங்களின் செலவு குன்றாமல் நடந்து என்றபடி. தொழுமின்-இவ்வாறு வந்து வணங்கினபின் பென்றபடி, மேற்குன்றிலாத...........

Tirumantira Urai

Size: 21 × 33. Pages: 290. Lines: 36 on a page.
Condition: old.

Note : Similar as the previous one.

687. திருவாசக வியாக்கியானம் (நூல் எண் 400)

அளவு : 21×33. வரிகள் : 27.
பக்கங்கள் : 909. நிலை : சிதிலம்.

குறிப்பு : மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்துக்கு, சீகாழித் தாண்டவராயர் செய்த உரை. இது திருவாசக அநுபூதி உரை என்னும் திருவாசக வியாக்கியானம் என 1954ஆம் ஆண்டு, இரண்டு பாகங்களாக நூலக வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. அச்சானது.

அபூர்த்தி.

தொடக்கம் :

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் வியாக்கியானம்
மூலம்
அருளிய எமது குரவராகிய குருசுவாமியடிகள்
திருவாரூர்த் திருப்பரவையம்மை பேரிற் றுதித்த
சிவானந்தப்பிள்ளைத் தமிழானதில் சிவப்பிரகாச
நூலிலுளதாகிய அனுபூதிக் கொத்துப்படிப்
பனிரெண்டு சூத்திரத்துக்கும் அனுபூதித் திருப்பாவான்.
பொதுவிலருளிய அன்பது பெரியவிருத்தங்களில் வணக்கம்.

முடிவு :

இவை, சுஈ-ம் கொத் தொன்றுக்கும் பெயர் வணக்கம். இரண்டாங் கொத்து-சித்தாந்தம். புறச—வளம்பயினூலின் வகுப்புடன் மகித்தது. [இறுதியில் முடிவில்லை குறை என்றும். துறைசை ஆதீனத்து ஏட்டுப் பிரதியில் முழுவது மிருக்கிறது என்றும் ஒருவர் கையெழுத்துடன் 26-2-1947 என்று பேனுவால் எழுதப்பட்டுள்ளது.

Tiruvachaka Vyakkiyanam

Size: 21×33. Pages. 909. Lines: 27 on a page. Condition: injured.

Note : This contains a commentary for Tiruvachakam, the famous collection of hymns on Lord Siva sung by Saint Manikka Vachakar.

688. திருவெழுகூற்றிருக்கை-உரை (நூல் எண் 459)

அளவு: 21×33. வரிகள்: 32.
பக்கங்கள்: 15. நிலை: பழமை.

குறிப்பு: எழுகூற்றிருக்கை என்பது ஒன்றுமுதல் ஏழுவரை உள்ள பொருள்களை அமைத்து இயற்றும் பாடல். இது திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ள திருவெழுகூற்றிருக்கையும், அதன் பழைய உரையும். இப்பிரதியில் 459a உருத்திராக்க உற்பத்தியும், 459b திருவாசகக் குறிப்புகளும், 459c திருவிசைப் பாக் குறிப்புக்களும் உள்ளன.

தொடக்கம் :

உ
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்
திருவெழு கூற்றிருக்கை உரை
சிவனுருவம் திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானுங் காரத்
தீரியல் பாயொரு வின்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்

முடிவு:

நினைய வல்லவனுத வினின்னை நினைய வல்லவரில்லை.

நீனிலத்தே-என்றது இந்த இயல்பை உடையை யாதலினுல் நின்னை எப்பொழுது நினைக்கவல்ல சிவபக்தர்கள் சகத்தில் மீண்டு செனிக்கவில்லை என்றவாறு.

நன்றுக. திருச்சிற்றம்பலம்.

Tiruvezhukutrirukkai (Notes)

Size: 21×33. Pages: 15. Lines: 32 on a page. Condition: good.

Note : This contains a commentary for Tiruvezhukutrikkai in Thevaram sung by Saint Tirugnana Sambandar.

689. பஞ்சாக்ஷர மாலை (நூல் எண் 544)

அளவு: 21×17. வரிகள்: 14.
பக்கங்கள்: 46. நிலை: நல்ல நிலை,

குறிப்பு: சிவபூசை, சிவ வழிபாடு, பஞ்சாக்ஷர ஜபம் செய்தல் இவற்றை விளக்கி 60 வெண்பாவாற் பாடப்பெற்றது. உரையுடன் உள்ளது. ஆசிரியர் பெயர் முதலிய விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

பஞ்சாக்ஷர மாலை

வாரம் பரிவுபெற வந்துதித்து முப்பொழுதா
நேரம் பணிந்து நினைந்துருகி-யேரம்ப
னஞ்சுமுகச் சிந்துரனுக் காளானுற்...
னஞ்சுமெழுத் தஞ்சுமர ணும்.

முடிவு:

காழிநகர் வாழி கவுணியர்கோன் றுள்வாழி
வாழியருள் கண்ணுடைய வள்ளல்தான்-ஏழிசையி
றெய்வத் தமிழ்ப்பாடல் வாழி திருநெறியாம்
சைவத் தவர்வாழி தான்.

தற்கோல மேல மிலவங்கஞ் சாதிக்காய் கற்பூரமென்றிவை கமழ் பஞ்சவாசமே முகவாச மென்றறிக.

சுப்பிரமணியக் கடவுள் துணை.

Panchakshara Malai

Size: 21×17. Pages: 46. Lines: 14 on a page. Condition: good.

Note : This contains 60 venbas relating to prayer on Lord Siva and the method of performing Panchakshara japam; also contains notes.

690. பண்டார சாஸ்திரம் (நூல் எண் 548)

அளவு: 21×33. வரிகள் : 30.
பக்கங்கள்: 251. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதியில் அம்பலவாணையர் தசகாரியம் முதல் ஞானபூசைத் திருவிருத்தம் ஈருக 22 சைவ நூல்கள் உள்ளன. மொத்தம் 1641 செய்யுட்கள். இறுதியில் நூல் அட்டவணை உள்ளது. அச்சானது.

தொடக்கம்:

உ
கணபதி துணை
அம்பலவாணையர் தசகாரியம்

தலையானே மாவித் தலையானே மின்பத்
தலையா வடுதுறைத் தந்த-தலையம்
பலவாணன் பாட்டிற் றசகாரி யத்தைப்
பலகால் வணங்குகையாற் பார்த்து.

முடிவு:

உடைஐயர் உயர்ஞான போக முற்றுச்
சாருமரு ணித்திரையு மூய்த்துணர்க ஞானச்
சரிதமிது மெய்கண்டான் சந்தா னத்தே.

ஞான போசன விதி முற்றும்.
ஆகச் செய்யுள் 1641.
சற்குரு பாதமே துணை
திருச்சிற்றம்பலம்.

Pandara Sastram

Size: 21×33. Pages: 251. Lines: 30. Condition good.

Note : This contains 22 works on Saiva Siddhanta from Dasakaryam to Jnana Pujai Tiruviruttam. Printed.

691. பதி பசு பாசப் பனுவல்-உரை (நூல் எண் 558)

அளவு: 21×33. வரிகள்: 26.
பக்கங்கள்: 183. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: மறைஞான சம்பந்தர் அருளிய பசுபதிபாசம் என்று சொல்லப்பட்ட மூன்று பொருள்களைப்பற்றிக் கூறும் சைவ சித்தாந்த நூல். குறள் வெண்பாவால் அமைந்தது. உரையுடன் கூடியது. பூர்த்தி. உரை அச்சான விவரம் அறியக்கூடவில்லை.

தொடக்கம்:

உ
சிவமயம்
பதிபசுபாசப் பனுவல் காண்டிகைப் பாயிரம்

கனக சபையிற் பனக முனிவனும்
போத மிகுந்த புலிக்கால் முனிவனு
மாதவ விரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரு
மருமா மறையா லடிபணிந் தேத்த.

முடிவு :

மன்னு புலியூர் மறைஞான மாமுனிவன்
றன்னுடைய பேர்படைத்த தன்மையோன்-இந்நிலத்தில்
வாய்ந்த பதிபசுபா சப்பனுவல் மாமதியா
லாய்ந்துரையை யீங்குரைத்தே னல்.

பதிபசு பாசப் பனுவல் முற்றும்.

925ஆம் ஸ்ல ஆனி மீ 27உ வெள்ளிக்கிழமை நாள் எழுதி முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

Pati Pasu Pasa Panuval Urai

Size: 21×33. Pages: 183. Lines: 20 on a page. Condition: good.

Note : This is a Saiva Siddhanta work by Saint Maraignana Sambandar in Kural Venba dealing with pati, pasu, pasam.

692. **பிராசாதம்** (நூல் எண் 611b)

அளவு : 21 × 33. வரிகள்; 30.
பக்கங்கள் : 4. நிலை : சிதிலம்.

குறிப்பு : சிவாகம விதிமுறையில் 16 கலைகளையும் தமிழிற் கூறுவது இந்நூல். 13 விருத்தங்களாலாயது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம்:

அருள்வளர் தில்லை மூதூ ரமுகிய மன்று ளாடல்
மருவிய பெருமா னீன்ற மழவிளங் களிறு காப்ப
விரவிய சிவாக மத்தின் விதிவழி கலையீ ரெட்டுந்
திருமலி தமிழி னாலே தெரிந்துரை செய்ய லுற்றும். (க)

முடிவு :

துளங்கியசின் மயவாடி தூயமதி கோடி
சோதியிவை தியானமென் வுன்மனைக்குஞ் சொல்வாம்
களங்கசம ஞங்கமலந் துவாதசாந்தத் தளவுங்
கருதுநிரா தாரமுமா முன்மனையுங் கடந்தே. (13)

பிராசாதம் முற்றிற்று.

Prasadam

Size : 21×33. Pages: 4. Lines: 30 on a page. Condition: injured.

Note : This contains 13 viruttams describing the sixteen kalais in Sivagama Vidhi

693. **வாதுளாகமக் கருத்து** (நூல் எண் 206a)

அளவு : 21 × 33. வரிகள் : 22.
பக்கங்கள் : 44. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : வாதுளாகமத்தின் கருத்தை உரைநடையில் சொல்லும் நூல் இது.

தொடக்கம் :

சிவனென்றும், சதாசிவனென்றும், மகேசனென்றும்மூவகைப் படும். இவற்றுள் சிவன் நிட்களம், சதாசிவம் சகளா சகளம், மகேசுவரன் சகளம்; இவை பகுப்பு, சிவம் ஒன்று; சதாசிவம் ஐந்து; மகேசுரன் இருபத்தைந்து ஆக முப்பத்தொரு பேதம்.

முடிவு : இனித் தெரிசனமாவது: ஆத்மா இந்திரியங் களுடனே கூடி விஷயங்களைப் புசியாமல் ஆத்மபோதஞ் சற்றுந் தெரியாமல், மறைக்குமிது வொழிந்து ஆன்மாவையுஞ் சிவனையுந் தோன்றாமல் மறைக்குமானால் ஆத்மா இந்திரியங்களுடனே கூடி விஷயங்களைப் புசிக்கும் காலத்து மறைப்பு நீங்குமோ நீங்காது காண்; ஆத்மா சீவியாமற் கிடந்த ஆத்மபோதஞ் சீவிப்பானேன் கன்ம பக்குவங் கூடாக ஆத்மாவை.

Vadhulagama Karuthu

Size: 21×33. Pages: 44. Lines: 22 on a page. Condition: good.

Note : This is a work on Saiva Siddhanta Agama.

694. ஜீவ சம்போதனை (நூல் எண் 706)

அளவு : 21 × 33. *வரிகள் :* 32.
பக்கங்கள் : 32. *நிலை :* நல்ல நிலை.

குறிப்பு : சமண சைன சமய நூல். சேணிகன் என்ற அரச னுக்குக் கணதரர் என்பார் கூறியது. இந்நூலாசிரியர் தேவேந் திர முனிவர். இப்பிரதியில் மூலம்மட்டும் உள்ளது. குறைப் பிரதி. அச்சானது.

தொடக்கம்: உ

ஜீவ சம்போதனை

சீர்நன்மை யுள்ளளவுஞ் சேர்தலுமே வீறழிவாய்த்
தானன்மை யில்லமுக்கே தானாகு—மேனன்மை
யொன்றலாப் பொல்லாங்கே யூவ முடலிதனை
கன்றி யுனக்குறுதி காண். (2)

முடிவு :

தேவேந் திரமுனிவன் சீவசம் போதனையைப்
பாவேந்தர் நற்றமிழாற் பாடினார்—மாவேந்தர்
சொல்லாற் பொருளாற் றெருக்குத்துரைப்பார் சிந்திப்பார்
புல்லார்கள் நாற்கதியிற் புக்கு. (72)

ஜீவ சம்போதனை இரண்டாம் பாகம் முற்றுப் பெற்றது;

Jiva Sambodhanai

Size: 21×33. Pages: 32. Lines: 32 on a page. Condition: good.

Note: This is a Jain work. Author Devendra Munivar, Incomplete.

695. ஜீவேசுவர ப்ரம்ம ஐக்கிய சரித்திரம்

(நூல் எண் 707)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள் : 21. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : இந்நூல் ஜீவ ப்ரம்ம ஐக்கியத்தை விளக்குவது. இதன் ஆசிரியர் அரியலூர்ச் சடகோப ஐயங்கார் என்பது துறைசை ஆதீன வித்துவான் கந்தசாமிக் கவிராயர் சாற்றுக் கவியால் உணரப்படுகின்றது. இப்பிரதியில் 7 தருக்களையும் 5 விருத்தங்களையும் கொண்டுள்ள இசைநூலும், பஞ்சரத்தினத் திருப்புகழும், சுப்பிரமணிய விருத்தமும், ஆனை ஐயா சங்கீதம் ஆகிய நூலும் உள்ளன.

தொடக்கம்:

உ

ஹரி : ஓம்

ஜீவேசுவரப்ரம்ம அயிக்கிய சரித்ரம்

(சாற்றுக்கவிகள்)

திருவாவடுதுறை மடத்தாதீன வித்வானுகிய தலைமை சான்ற கந்தசாமிக் கவிராயரவர்களால் பாடப்பட்டது.

நேரிசை வெண்பா

என்னை யறிய வெனக்கறிவித் தானறிவில்
தன்னிகரில் செஞ்சொற் சடகோபன்—பொன்னை ...
தாவேற்ற பல்கலனிற் றுணர்ந்து கோடல்போல்
ஜீவேச் சுரப்பிரமஞ் செப்பு.

முடிவு :

இப்பதிமூவர்களன்றி உச்சாகனும், ஈனந்தரும் பசிதாகனும் சோகனும் வேண்டி யெய்த இப்பதிமூவர்களன்றி உச்சாகனும், ஈனந்தரும் பசிதாகனும், சோகனும், வெப்பனும், கோபனும், மானனும், மீனனும் வேண்டியுடன்வரக் காண்டலரிதெனும்.

Jeeveswara Brahma Aikkya Charitram

Size: 21×17. Pages: 21. Llnes: 22 on a page. Condition: good.

Note : This is a poetical work by Ariyaiur Satagopa Iyengar on Jeeva Brahma aikyam.

12. அகராதி, பலவகைக் குறிப்புகள்

696. அகநானூறு அகராதி (நூல் எண் 13)

அக்கினி நக்ஷத்திரம் முதல் துகிற் கொடிவரை

அளவு : 21×33. வரிகள் : 22.
பக்கங்கள் : 218. நிலை : பழமை.

குறிப்பு : இப்பிரதியில் அகநானூற்றில் காணப்படும் அரும் பத அகராதியின் முதற் பகுதி (அக்கினி நக்ஷத்திரம்-துகிற் கொடி) உளது.

தொடக்கம்:

அக்கினி நக்ஷத்திரம்-89, அக்குரன், பதிற். 14, திவாகரம் அஃகியோன். (கு)

முடிவு:

துகள் : 15 : 79. துகில்—(ஆய்செய்கைப்பா) 293, துகிற் கொடி—111.

Index and Notes

Agananuru Arumpada Agaradi

Size: 21×33. Pages: 218. Lines: 22 on a page. Condition: old.

Note : This is an index to the words and subjects found in Agananuru. This is the first volume.

697. அகநானூறு-அரும்பத முதலியவற்றின் அகராதி (நூல் எண் 13)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 214 (219-433). நிலை : நல்ல நிலை.

குறிப்பு : அகநானூற்றில் காணப்பட்ட அரும்பதங்களும் ஆங்காங்கே பாடல்களின் எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பிரதி நூல் எண் 13இன் தொடர்ச்சி.

தொடக்கம்:

துச்சில்—203, 321. துஞ்ச—141. துஞ்சா துறைவி-298.

முடிவு :

வினைஞர்-84, வினை நன்றுதல்-33, வினைப்பயன், 248, வினைபொருளாக, 237.

Aganaňuru Arumpada Akaradi

Size: 21×33. Pages: 214. Lines: 25 on a page. Condition: good.

Note : Continuation of the previous one.

698. **அகநானூறு அரும்பத முதலியவற்றின் அகராதி**

(நூல் எண் 12)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 16. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண் 13இன் தொடர்ச்சியே இப்பிரதி. இது இறுதிப் பகுதி.

தொடக்கம் :

வினைபொருளாக, 237, வினைமருங்கு—103, வினைமுடித்தனன் வேந்தன்-44, வினைவயிற் பெயர்க்கும்-84.

முடிவு :

வையை-36, 296, வையைப் புதுப்புனல், 296–256, வையைத் துறை-36, வைவாலோதி–125, வெளவுநர், ஆறலை கள்வர்.

சுபமஸ்து
தெய்வமே துணை.

Agananuru Akaradi

Size: 21×33. Pages: 16. Lines: 25 on a page. Condition: good.

Note : This is the last part of the former index.

699. **இராமலிங்க சுவாமிகள் குறிப்புகள்**

(நூல் எண் 64)

அளவு : 21×17. வரிகள் : 25.
பக்கங்கள் : 68. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : திருவருட்பாப் பாடிய இராமலிங்க சுவாமிகளின் திருவார்த்தைக் குறிப்புகளே இதில் உள்ளன.

தொடக்கம்:

உ
சிவமயம்

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளை திருவார்த்தைக் குறிப்புகள்.

சிருட்டி வகை: அணுபட்சம்-பரமாணு பட்சம்-சம்பு பட்சம்-விபு பட்சம்-பிரகிருதி பட்சம் ஆக 5.

முடிவு:

முன்னை முதலான இலைக்கறி, சுரை, பூசனி, பரங்கி, பாக்கு, புடல், பாகல், கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை, கள், சாராயம், கஞ்சா, புலால், மாமிசம் முதலிய விலக்குகளை நீக்கி விதித்தவைகளை அனுசரித்தல் - சிறப்பு. மதுரை நகரம் கந்தசாமித் தம்பிரானால் பார்வையிடப்பட்டது. திருவாவடுதுறைக் களஞ்சியம்.

Ramalinga Swamigal (Notes)

Size: 21×17. Pages: 68. Lines: 20 on a page. Condition: good.

Note: The Ms. contains various expressions of Saint Ramalingar.

700. இராமேசுவரம் முதலிய தலங்களைப்பற்றிய குறிப்புகள் (நூல் எண் 71)

அளவு: 21×33. வரிகள்: 30.
பக்கங்கள்: 24 (124—141) நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதியில் இராமேசுவரத் தலமகிமை, சரித்திர புராண வரலாறு, கோயில் அமைப்பு, தீர்த்தங்கள், சீதை வரலாறு முதலியவற்றோடு தஞ்சை, திருவையாறு ஆலயங்களைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

உ
கணபதி துணை
ராமேசுவரம்

தொடக்கம்:

பல சுவையான குறிப்புகள்: இராமநாதசுவாமி கோயில் கீழ் வாசல் அனுமார் மண்டபம். இந்த மண்டபத்தின் கீழைக் கோடியில் வடபுறத்தில் அனுமார் ஆலயம் இருக்கின்றது.

இவர் சந்நிதி தெற்கு நோக்கியது. அனுமார் திருமேனி முற்றும் செந்நிறமாய் இருக்கின்றது. இதற்குக் காரணம், கோயில் திட்டத்தில் சனிக்கிழமைதோறும் சாத்தப்படும் ஈயச் செந்தூரமும், பிரார்த்தனைக்காரர்களால் சாத்தப்படும் ஈயச் செந்தூரத்தோடு விராய வெண்ணெயும் என்று தெரிகிறது. வெண்ணெய் இரு பங்கும் செந்தூரம் ஒரு பங்கும் சாத்துவது வழக்கமாம். ஒரு பிராகாரத்தோடு இருக்கிறது. அனுமாரால் நர்மதையிலிருந்து கொண்டுவரப்பட்ட இரண்டு லிங்கங்களுள் ஒன்று, அனுமார் கோயிலின் மேற்கு மடவளாகத்தில் உள்ள அறையில் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறது. பெயர் மாருதீசுவரர் (ஆத்மலிங்கம்).

முடிவு :

சுவாமி சந்நிதி முதற் பிராகாரத்தின் மேற்கே முறையே சங்கரநாராயணர், அர்த்தநாரீசுவரர், சந்திரசேகரர்; வடபுறத்தில் ஏகாதச ருத்ரலிங்கங்கள் உள்ளன.

கோடி தீர்த்தத்தை அடுத்துக் கிழக்கே விபீஷணரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் இருக்கிறது.

இராமேசுவர சம்பந்தமான குறிப்புகள் முடிந்தன.

Notes on Rameswaram and other Saiva Sthalas

Size: 21×33. Pages: 24. Lines: 30 on a page. Condition: good.

Note : Contains notes on Rameswaram temple etc.

701. ஐயரவர்கள் எழுதி வைத்த குறிப்புகள்

(நூல் எண் : 100)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 104. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : பல தலங்களின் பெயர்கள், வரலாறுகள், நாயன்மார்கள், மூர்த்திகளைப்பற்றிய பல குறிப்புகள் உள்ளன. 100a-பழைய திருவிளையாடலின் கதைச்சுருக்கத்தை ஐயரவர்கள் கைப்படவே சில பக்கங்கள் எழுதியிருக்கிறார்கள்.

தொடக்கம் :

உ

பல ஸ்தலங்கள்

திருவானைக்கா சுந்தரபாண்டியன் திருநீற்று மாளிகை, நல்லூர்ப் பஞ்சநதி சங்கமம், மணிமுத்தா நதி முதலியன.

திருவரத்துறை தீர்த்தபதீசுவரர். இங்கு வன்மீக சுவேதநதி சங்கமம். தருமநல்லூர்: தர்மஸம்வர்த்தனி; தர்மபுரீசுரர், தர்ம ராஜாகோயில்.

முடிவு :

ஐயாற்றுத் தரிசன முறை

விடிய 6 நாழிகைக்கு எழுந்து புஷ்ய தீர்த்தத்தில் நீராடிக் கோவில் வந்து தக்ஷிண கைலாயம் வந்து வணங்கிப் பிரதக்ஷிண மாக நந்தி சந்நிதானம் வந்து 5, 12 தரம் நமஸ்கரித்து, பஞ்சாக்ஷரம் ஜபம்செய்து ஐயாறப்பர்க்கு அர்ச்சனை செய்வித்தல். பிரசாதங்களை பத்னியுடன் உட்கொண்டு சிவனடியார்கட்கும் உண்பித்துச் செய்ய வேண்டும்.

Various notes collected by Dr. Iyer.

Size: 21×33. Pages: 104. Lines: 30 on a page. Condition: good.

Note : Contains notes on various Sthalams, Nayanmars etc.

702. ஐயரவர்கள் குறித்து வைத்த தலக் குறிப்புகள் (நூல் எண் 101)

அளவு : 21×33. வரிகள் : 30.
பக்கங்கள் : 109. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : நூல் எண்-100இன் படியே.

தொடக்கம் ;

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவாலய ரகசியப் பிரகாச மார்த்தாண்டன். கணபதி நான்கு திக்கினும் நோக்கி இருக்கும் ஸ்தலங்கள். இராமருடைய வீரகத்தியைப் போக்கும் பொருட்டு நட....டு வேதாரணியத்தில் மேற்கு முகமாயும், இராமேசுவரத்தில் தெற்கு முகமாயும்.

முடிவு :

மணற்பள்ளி ;— இது நாமக்கல் தாலுக்காவிலுள்ளது. காவிரிக் கரையில் உள்ளது. சிலாசாஸனத்தில் வீமேசுவரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. பழைய கோயில். இப்பொழுது பள்ளத்திலுள்ளது.

Various notes Collected by Dr. iyer

Size: 21×33. Pages: 109. Lines: 30 on a page: Condition: good.

Note : Same as the previous one.

703. ஐயரவர்கள் குறித்து வைத்த பலவகைக் குறிப்புகள் (நூல் எண் 102)

அளவு: 21×33. வரிகள்: 33.
பக்கங்கள்: 174. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: இப்பிரதியில் புலவர் வரலாற்றுக் குறிப்புகள், தேவாரக் குறிப்புகள், வரலாற்றுக் குறிப்புகள் முதலியன உள்ளன.

தொடக்கம்:

மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர்.

இவருடைய தந்தையார் பெயர் தில்லையாடியா பிள்ளை என்பது. இவருடைய மூதாதையரின் ஊர் தொண்டை நாட்டி லுள்ள மல்லை என்பது. ஷை தில்லையாடியா பிள்ளை என்பவர் பாலவனத்தம் ஜமீன்தாராகிய வணங்காமுடிப் பண்டாரத்தார் ஒருவருடன் அவ்வூருக்கு வந்து அந்த ஜமீன் ஸ்தானாதிபதி வேலையில் இருந்தார்.

முடிவு:

ஸ்ரீவாஞ்சியம் – உட்கார்ந்தது. ஆஸீனபைரவர். அங்கே அவருக்கு வேலையில்லாமையால் உட்கார்ந்த கோலம். பைரவருக்குப் போகாலயம், தனியே செண்டு. சூத சங்கிதை.

அரிச்சந்திரம் வைப்பு } 362

எழுதியது. A. Paramasivam Pillai

Various notes collected by Dr. Iyer

Size: 21×33. Pages: 174. Lines: 33 on a page. Condition: good.

Note: Contains notes collcted by Dr. Iyer on Pulavars and a number of Thevaram hymns, etc.

704. காவிரித் தென்கரைத் தலங்கள் (நூல் எண் 150)

அளவு: 21×33. வரிகள்: 10.
பக்கங்கள்: 127. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: சோழ நாட்டில் காவிரி நதிக்குத் தென்கரையில் உள்ள பாடல்பெற்ற தலங்களைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

தொடக்கம்:

உ
சிவமயம்

காவேரிக்குத் தென்கரையில் உள்ள ஸ்தலங்கள்

1 செ. வாட்போக்கி என்னும் இரத்தினகிரி.

வாட்போக்கியம்மானை.

க்ஷேத்திரக் கோவை } வாட்போக்கியும்

கோவை திருத்தாண்டகம் } கடம்பந் துறை

அடைவுத் திருத்தாண்டகம் } கடம்பந் துறை

முடிவு : திரு அகத்தியான்பள்ளி.

திருமறைக்காடு – அகத்தியான் பள்ளி
அமர்ந்தான் கண்டாய்

க்ஷேத்திரக் கோவை பண். இந்தளம் } அகத்தியான் பள்ளி.

திருக்கோடிக் குழகர்
நா. 406-1-குழகர்.

Cauvery Tenkarai Sthalangal

Size: 21×33. Pages: 127. Lines: 10 on a page. Condition: good.

Note : This Ms. contains descriptions of various sthalas on the South of Cauvery in Chola Nadu, prepared by Dr. Iyer.

705. காவிரியின் கரையில் தேவாரம் பெற்ற ஸ்தலங்களுன் வைப்பு ஸ்தலங்கள் (நூல் எண் 151)

அளவு : 21×33. வரிகள் : 25.
பக்கங்கள் : 185. நிலை : நல்ல நிலை.

குறிப்பு : காவிரியின் கரையில் அமைந்த தேவாரம் பெற்ற தலங்களையும் வைப்புத் தலங்களையும்பற்றிய குறிப்புகள்.

தொடக்கம் :

உ
கணபதி துணை. திருச்சிற்றம்பலம். கோயில்

306. அல்லல் அடியார்க் கறுப்பார் போலும்
அமரருலகம் தம்மடைந்தார்க் காட்சி போலும்
நல்லமும் நல்லூருமே யார்போலு
நன்னாறு நாளும் பிரியார் போலும்

முல்லை முகைநகையாள் பாகர் போலும்
முன்னமே தோன்றி முளைத்தார் போலுந்
தில்லை நடமாடுந் தேவர் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையும் செல்வர் தாமே.

முடிவு :

6683. நிறையனூர் நின்றியூர்
கொடுங் குன்றம் இடையாறு. சு.

7738. அகலா முதுகுன்றங்
கொடுங் குன்றமும். பொது. ஞா.

Vaippu Sthalangal on Cauvery bank

Size: 21×33. Pages: 185. Lines: 25 on a page. Condition: good.

Note : The Ms. contains notes by Dr. Iyer on Vaippu sthalas referred to in the Thevaram.

706. சங்கச் செய்யுளில் கூறப்படும் தலைவர்கள், பிற : அகராதி (நூல் எண் 487)

அளவு : 21×17. வரிகள் : 10
பக்கங்கள் : 128. நிலை : பழமை.

குறிப்பு : சங்க இலக்கியத்தில் வரும் தலைவர்கள் பெயரும் பிற விவரங்களும் பாடல் எண்ணுடன் குறிக்கப்பெற்றுள்ளன.

தொடக்கம்:

உ
கணபதி துணை
அக்குரன் - கர்ணன்
பதிற். 14.

அஃகுதை. அகுதை. அகநா. 76. 96, 12, 208. குறுந். 298. புறநா. 233, 347.

முடிவு :

ஆய் :

அகம். 151, 197, 252, 396. குறுந். 277. நற். 167, புறநா. 133, 345, 158, 129.

Personalities in Sangham Works etc. Index

Size: 21×17. Pages: 128. Lines: 10 on a page. Condition: old.

Note: The Ms. contains an alphabetical list of important persons referred to in Sangham works and other details,

707. சங்கத்தார் பெயர் அகராதி (நூல் எண் 196)

அளவு : 21×33. வரிகள்: 20.
பக்கங்கள்: 102. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பெயர்களையும், பிற புலவர்கள் பெயர்களையும் இலக்கிய எடுத்துக் காட்டுகளுடன் அகராதி வரிசைப்படுத்தி டாக்டர் ஐயரவர்கள் தொகுத்துள்ளார்கள். நூற் பெயர்க் குறிப்புகள் முதல், பக்கத்தில் உள்ளன.

தொடக்கம்:

நூற்பெயர்க் குறிப்புகள்

1. அ. அகநானூறு
2. இ.வி. இலக்கண விளக்கம்
3. இறை. இறையனார் அகப்பொருள்
4. ஐங். ஐங்குறு நூறு
5. சில. சிலப்பதிகாரம்

அக்காரக்கனி நச்சுமனார் (நச்சுமனார்) திருவள் 46.
அகத்தியனென்னும் மீன், பரி. பக். 35
அகம்பன் மாலாதனார். ந. 81.
அசரீரி, திருவள்...1

முடிவு :

பேராசிரியர்:

கோவையாருரை. இவர்கள் குறுந்தொகைக்கு உரை செய்திருக்கின்றனர். தொல். பொ. பக். 89. பொன்பற்றிக் காவலன் புத்தமித்திரனார். வீரசோ.

Name index relating to Sangam age.

Size: 21×33. Pages: 102. Lines: 20 on a page. Condition: good.

Note : The Ms. contains detailed information about poets of the Sangham age and others.

708. சரித்திர வழக்கம் (நூல் எண் 286)

அளவு: 21×33. வரிகள்: 23.
பக்கங்கள்: 9. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: தல விஷயங்கள், சரித்திர விஷயங்கள் சங்கீதம், சாசனம், பல கதம்பம் ஆகிய குறிப்புகள் உள்ளன.

தொடக்கம்: பக்கம் எண்-101.

எட்டையபுரம் :—

இங்கே தானியங்களை அளக்கும்போது எட்டாவது எண்ணிக்கை வருகையில் மகாராஜா என்று சொல்லி அடுத்ததை ஒன்பதென்று எண்ணுவார்கள்.

முடிவு :

மூன்றும் ராசராசன் சாஸனம் :

அகத்தியான் பள்ளி. அக்கினி தீர்த்தம். மேற்படி முனிவர் விக்கிரகம் உண்டு. கோயில் சாஸனத்தில்: குலசேகர பாண்டியன் கி.பி. 1268-1308இல் தனக்கிருந்த ஒரு வியாதியை மறைசையில் ஓர் உலா நடத்திப் போக்கிக்கொண்டான். குழகர் கோயில் சுவாமி: அமிர்த கடேசர். தீர்த்தம்: அமிர்த தீர்த்தம்.

Charitra Vazhakkam

Size: 21×33. Pages: 9. Lines : 23 on a page. Condition: good.

Note : This contains notes regarding sthalams, historical facts, music, inscriptions etc.

709. சில புராணக் குறிப்புகள், முக்கியமான கடிதங்கள், சில தனிப் பாடல்கள் (நூல் எண் 655)

அளவு: 21 × 33. வரிகள்: 35.
பக்கங்கள்: 77. நிலை: நல்ல நிலை.

குறிப்பு ; சில கடிதங்கள் (பக்கம் 11-164), தனிப் பாடல்கள் (பக். 201-220), புராணக் குறிப்புகள் (பக். 251-259) முதலியன உள்ளன.

தொடக்கம் : உ 4—11—76

திருவேட்டீசுவரன்பேட்டையில் பிள்ளையார் கோயில் தெருவில் பிரஸிடென்சி காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் மகா. ா. ா. ஸ்ரீ வே. சாமிநாதையரவர்களுக்கு,

க்ஷேமம், அநேக நமஸ்காரம்

பிள்ளைத் தமிழில் அம்புலிப் பருவத்துக்குப் பின் சிற்றில் சிறுபறை சிறுதேர் என்று அழகர் பிள்ளைத் தமிழில் இருந்ததாக ஞாபகம் இருக்கிறது. இலக்கண விளக்கச் சூத்திரத்தில் அம்புலிப் பருவத்திற்குப் பின் சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்றிருக்கிறது. அழகர் பிள்ளைத் தமிழ் கைவசம் இல்லை.

சிற்றிலை முன் வைத்துச் சிறுபறை சிறுதேரைப் பின் வைத்திருக்கிறேன். அழகர் பிள்ளைத் தமிழ் முறையை எழுதி அனுப்பப் பிரார்த்திக்கிறேன்.

Madras-5, Nov. 04 நமஸ்காரம்
4-45 a.m. சே. சுப்புராய பிள்ளை

முடிவு: பக்கம் 259. தஞ்சைமாநகர்ப் புராணம்.
பக்கம் 61. திபாரணியம்: அருந்ததி தவம் செய்த இடம்.

83. கரிகாற் சோழன் கருங்குட்டம் தீர்ந்தது.
91. சப்தரிஷி தீர்த்தம்-சீதளபுட்கரிணி யென்னும் பெயர்.

Notes on some Puranas, some important letters and story poems

Size: 21×33. Pages: 77. Lines: 35 on a page.
Condition: good.

Note : **Contains copies of some letters, poems and notes on some Puranas.**

710. சிலாசாஸனக் குறிப்புகள் (நூல் எண் 229)

அளவு: 21×33. வரிகள்: 40.
பக்கங்கள்: 8. நிலை: நல்ல நிலை.

குறிப்பு: சோழ வம்ச சிலாசாஸனங்கள், சோழ அரசர்களின் வம்சாவளிகள் ஆகியவை உள்ளன. 229a- பட்டீச்சரத் தலபுராண வசனம் என்ற நூலும் உள்ளது.

தொடக்கம்:

சோழ அரசர்களின் வம்சாவளி
(எபிக்ராபியா இண்டிகா 15ஆம் தொகுதி. ப. 46)
லீடன் கிராண்டுப் படி.
வைவஸ்வத மனு.
1

இக்ஷ்வாகு (சூர்யவம்ச ஸ்தாபகர்) முதல், ராஜேந்திர சோழன் வரை வம்சாவளி அமைந்துள்ளது.

முடிவு:

இவன் இருமுறை கலிங்கத்தின்மேல் படையெடுத்திருக்க வேண்டும்: ப. 95. இவனுக்கு 28 ஆவது ஆண்டில் ஜனநாத வளநாடாகிய மிலாடு,குறுக்கைக் கூற்றத்துத் திருநெல்வெண்ணெயில் உள்ள பொற்குடங் கொடுத்தருளிய தேவருக்குக் கொடுக்கப் பட்ட நிலத்தைப்பற்றிய சாஸனமொன்றுண்டு. இவனுக்கு

48-ஆவது ஆண்டில் கங்கைகொண்ட சோழவளநாட்டுக் கிளியூர் ராஜேந்திரச் சேதிராயர் (நாலூற்றுவன் மலையன்) நெய்வணைக் கோயிலில் நடராஜ பிம்பத்தைப் பிரதிஷ்டை செய்தான்.

Epigraphical Notes (Silasasana Kurippugal)

Size: 21×33. Pages: 8. Lines: 40 on a page. Condition: good.

Note : The Ms. contains points gathered from inscriptions relating to the Chola Kings.

711. சிவஞான போதச் சிற்றுரை (நூல் எண் 530)

அளவு : 21×17. வரிகள்: 25.
பக்கங்கள்: 4. நிலை: பழமை.

குறிப்பு : சிவஞானபோதம் என்னும் மெய்கண்ட சாத்திர நூலுக்குரிய சிற்றுரைக் குறிப்புக்களைக் கொண்டது இப்பிரதி. இதில் நீலகேசிக் குறிப்புகளும், தக்கயாகப் பரணி, கல்லாடக் குறிப்புகளும், கடம்பர் கோயில் கீர்த்தனம் ஒன்றும் உள்ளன. அபூர்த்தி.

தொடக்கம்:

நாற் பாதம்-சரியை, கிரியை, யோகம், ஞானம்.

மகாவாக்கியம் — பெரும்பெயர் : எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கியது.

முடிவு :

வியஞ்சகம்—தோற்றுவிப்பது.

சிவசமவாதி, சங்கிராந்தவாதி, உற்பத்திவாதி, ஆவேசவாதி, சமணர்.

Sivagnana Bodham-Chitrurai

Size: 21×17. Pages: 4. Lines: 25 on a page. Condition: old.

Note : Contains some brief notes on Sivagnana Bodham.

712. சிவனவர்கள் குறிப்புகள் (நூல் எண் 710)

அளவு: 21×33. வரிகள்: 35.
பக்கங்கள்: 37. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : ஐயாற்றுத் தரிசன முறை ஒரு பக்க அளவில் எழுதப்பெற்றுள்ளது. இதனையன்றி இப்பிரதியில் தேதியூர்ச்

சிவனவர்கள் கடிதம், தீர்த்தங்களின் விவரம், திருவான்மியூர் பற்றிய குறிப்புகள், தியாகராஜ அஷ்டோத்தரம் ஆகிய நூல்கள் உள்ளன, அச்சாகவில்லை.

தொடக்கம் :

விடிய 6 நாழிகைக்கு எழுந்து புஷ்ய தீர்த்தத்தில் நீராடிக் கோயில் வந்து தக்ஷிண கயிலாயம் வந்து வணங்கிப் பிரதக்ஷிண மாக நந்தி சந்நிதானம் வந்து 5, 12 தரம் நமஸ்கரித்துக் கோபுர வாயிலின் தென்புறம் உள்ளவும், தேவியோடு எழுந்தருளியுள்ள (கர்ணமுடி-நந்திபத்னி) நந்திப்பிரானைப் பத்னியைக் கொண்டு தரிசிப்பித்து, தானும் தரிசித்து, அபீஷ்டப் பிரார்த்தனம் செய்து பிரணதார்த்திஹரரைத் தரிசனம் செய்து ஜப்பேசுவரர் சந்நிதியில் (தக்ஷிணாமூர்த்தி) 25 தரம் ஜபிப்பித்துச் சூர்ய புஷ்கரணியில் ஸ்நானஞ் செய்து, விபூதி தரித்து ஈர உடையோடு திருப்பழனம் வடவீதி வழியாகக் கோயிலுள் ஸ்வாமி தரிசனம் செய்து திருச்சோற்றுத்துறை வலம் வந்து. திருவேதிகுடி, திருக்கண்டியூர், பூந்துருத்தி நெய்த்தானமாகிய தலங்களுக்குப் புருஷ பாரியைகள் நடுவில் யாரும் போகாதவண்ணம் சென்று, குங்குலிய நாயனாரை (ஆட்கொண்டாரை)த் தரிசித்துப் பஞ்சாக்ஷர ஜபம் செய்து ஐயாறப்பர்க்கு அர்ச்சனை செய்வித்துப் பிரசாதங்களைப் பத்னியுடன் உட்கொண்டு சிவனடியார்கட்கும் உண்பித்துச் செய்யவேண்டும்.

Notes by Thethiyur Sivan

Size: 21×33. Pages 37. Lines: 35 on a page. Condition: good.

Note : The Ms. contains a letter from Thethiyur Sivan detailing the procedure for worship in the Tiruvaiyaru temple.

713. தமிழ் வித்யார்த்தி விளக்கம் ! இலக்கணக் குறிப்பு (நூல் எண் 277)

அளவு : 21×17. வரிகள் : 22.
பக்கங்கள்: 34. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : மாணவர்களுக்குப் புரியும் நிலையில் எழுதப் பெற்ற இலக்கணக் குறிப்புகள் உள்ளன.

தொடக்கம் : வல்லினம் மிகுமிடங்கள் 24—11—34

அந்த, இந்த, உந்த என்கிற சுட்டுத் திரிபிற்குப் பின் க,ச,த, ப வரின் வலி மிகும்.

(உ-ம்) அந்தக் குடம், இந்தச் சந்தம், உந்தப் பொருள். எந்த என்கிற வினுத் திரிபிற்குப்பின் வலி மிகும்.

(உ-ம்) எந்தக் காலம், எந்தச் செயல், எந்தப் புகழ். தொறும், தோறும் என்பவைகள் பன்மையில் வருகிற ஏழாம் வேற்றுமை உருபுகள்.

Tamil Vidyarthi Vilakkam

Size: 21 × 17. Pages: 34. Lines: 22. Condition: good.

Note : Contains grammatical notes prepared for students.

714. தலக் குறிப்புகள் (பகுதி-1) (நூல் எண் 283)

அளவு: 21 × 17. வரிகள்: 16.
பக்கங்கள்: 281. நிலை: நல்ல நிலை.

குறிப்பு : முதல் 10 பக்கங்களில் தலங்களின் பெயர்கள் அகர வரிசையில் பக்க எண்ணுடன் உள்ளன. அத்தலங்கள் பற்றிப் பின்னக் குறிப்புகள் அகர வரிசையில் உள்ளன.

தொடக்கம் :

	பக்.
அகத்தியான்பள்ளி	11.
அச்சிறுபாக்கம்	13.
அண்ணல்வாயில்	14.
அத்திப்புலியூர்	15.

அகத்தியான்பள்ளி :

வேதாரண்யத்தின் தெற்கே மூன்று மைலிலுள்ளது. வேதாரண்யத்தில் ஈசுவரன் கல்யாணக் காட்சியைத் தரிசிக்க வந்த அகத்தியர் பர்ணசாலை கட்டிக்கொண்டு தங்கிய இடமாதலால் இப்பெயர் உண்டாயிற்று. கோயிலுக்கு வெளியிலுள்ள தீர்த்தத்திற்கு அக்னிதீர்த்தமென்று பெயர். அகத்தியர் விக்கிரகம் ஒன்று வெகு அழகாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

முடிவு :

